Q23.453
N08
223.908

Q23:453.25213
N08

223908

REGISTERED
24 FEB 1908
MADRAS.



ஓம்
த த் ச த்.

காசிராமேஸ்வர
# ம ஜி லி க் க தை.

இஃது.
ம-ா-ா-ஸ்ரீ, தமிழ்ப்புலவராகிய
க ரு ண க் க வி
வே-கன்னையநாயுடு அவர்களால்
இ ய ற் ற ப் ப ட் டு

FIRSTEDITION
*1000 COPIES.*

இவை
ம-ா-ா-ஸ்ரீ, வேலூர்,
குப்புசாமிமுதலியா ரவர்களது
அமெரிக்கன் டைமெண்ட் பிரஸில்
ப தி ப் பி க் க ப் ப ட் ட து.

1908.
Registered Copy Right.

merican Diamond, Press Choolai Madras.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
24 FEB 1903
MADRAS.

உ

சிவமயம்.

# பொருள் அட்டவணை.


| நெம்பர் | கதைகளுடைய விஷயங்கள். | பக்கம். |
|---|---|---|
| 1 | கதாசாரம் ... ... ... ... | 1 |
| 2 | தெய்வப்பலபிரபாவம் ... ... ... | 6 |
| ,, | ஸ்ரீசைலமகத்தியம் ... ... ... | 9 |
| 3 | அதிருஷ்டயோகம் ... ... ... | 9 |
| ,, | ஸ்ரீராமக்ஷேத்திரம் ... ... ... | 17 |
| 4 | கர்மானுஷ்டானம் ... ... ... ... | 18 |
| ,, | அமரகண்ட ஸ்தலமகிமை ... ... | 21 |
| 5 | பதிவிரதை மகத்துவம் ... ... ... | 22 |
| ,, | காசிக்ஷேத்திர மகத்தியம் ... ... | 30 |
| 6 | லலாடலிகிதம் ... ... ... ... | 22 |
| ,, | பிரயாக நதியின்மகிமை ... ... | 35 |
| 7 | ஈஸ்வரகருணாநிதி ... ... ... ... | 36 |
| ,, | கயாக்ஷேத்திரமகிமை ... ... ... | 39 |
| 8 | பகவான் அநுகூலம் ... ... ... | 41 |
| ,, | அயோத்தியா பிரபாவம் ... ... | 49 |
| 9 | ருணானுசம்பந்தம் ... ... ... ... | 50 |
| ,, | காளிகட்டமகிமை ... ... ... | 59 |
| 10 | சமயோசித ஞானம் ... ... ... | 60 |
| ,, | மதுரை க்ஷேத்திரமகிமை ... ... | 66 |
| 11 | வேஸ்ய மோகலக்ஷணம் ... ... ... | 67 |
| ,, | கோகுல க்ஷேத்திரமகிமை ... ... | 74 |
| 12 | தாசிகளின் சகவாசம் ... ... ... | 75 |
| ,, | பிருந்தாவனமகிமை ... ... ... | 81 |
| 13 | பகவான் கடாக்ஷம் ... ... ... | 83 |
| ,, | கோவர்த்தன மகிமை ... ... ... | 87 |
| 14 | ராஜ்யமதாந்த கர்வம் ... ... ... | 89 |
| ,, | சகவாசகுணம் ... ... ... ... | 93 |
| 15 | அஸ்தினபுரிமகிமை ... ... ... | 64 |
| ,, | பண்டரீபுரிமகிமை ... ... ... | 104 |

| நெம்பர் | கதைகளுடைய விஷயங்கள் | பக்கம் |
|---|---|---|
| 16 | வினைப்பயன்பலிதம் ... ... ... | 106 |
| ,, | நாசிகாபஞ்சவடி மகிமை ... ... | 114 |
| 17 | பூர்வார்ஜித பலப்ராப்தி ... ... ... | 117 |
| ,, | பம்பாக்ஷேத்திரமகிமை ... ... | 123 |
| 18 | மாதர்குண நடக்கை ... ... ... | 127 |
| ,, | மால்யாத்திரிமகிமை ... ... ... | 137 |
| 19 | யோசனையில்லாதகாரியம் ... ... ... | 139 |
| ,, | பூவாணிவனதேவதைக்குச் சொன்னகதை | 143 |
| ,, | அன்னபேடைச் சொன்னகதை ... ... | 149 |
| ,, | மந்திரி சோமசேகரவேந்தனுக்குச்சொன்ன கதை ... ... | 153 |
| ,, | வெங்கடாசலமகிமை ... ... ... | 159 |
| 20 | பதிவிருதாதத்வபிரதாபம் ... ... | 162 |
| ,, | வீக்ஷாரண்யமகிமை ... ... ... | 178 |
| 21 | தெய்வமாயம் ... ... ... ... | 179 |
| ,, | வேதாசலமகிமை ... ... ... ... | 184 |
| 22 | அருயத ... ... ... ... | 186 |
| ,, | சிதம்பரமகிமை ... ... ... ... | 193 |
| 23 | அஷ்டஸ்திரீகெதி ... ... ... | 195 |
| ,, | ஸ்ரீரங்கமகிமை ... ... ... ... | 199 |
| 24 | உத்தமகுணமாதின் லக்ஷணம் ... ... | 200 |
| ,, | இராமேஸ்வரமகிமை ... ... ... | 219 |
| 25 | பூர்வஜென்ம சுகிருதபலன் ... ... | 210 |
| 26 | பூர்வஜென்மபலிதம் ... ... ... | 214 |
| ,, | அருணாசலக்ஷேத்திரமகிமை ... ... | 216 |
| 27 | பூலோகவிந்தை ... ... ... ... | 226 |
| ,, | காஞ்சீபுரிமகிமை ... ... ... ... | 220 |
| 28 | இஷ்டசித்தி ... ... ... ... | 221 |
| ,, | காளஹஸ்திமகிமை ... ... ... ... | 222 |
| 29 | உபசம்மாரம் ... ... ... ... | 223 |


பொருள் அட்டவணை

முற்றிற்று.

OFFICE OF THE REGISTRAR ... REGISTERED 24 FEB 1908 MADRAS.

ஓம்,
தத்சத்

## காசி ராமேஸ்வர
# மஜிலிக்கதை.

### காப்பு-வெண்பா.

காசியிராமேஸ்வர யாத்திரைக் கதைகள்தன்னை
நேசமுடன்யான்சொல்ல நின்றிட்டேன்—மாசிலா
மங்கைபார்வதிநேசன் பொங்கமுட நின்றிட்ட
அங்கரவன் பொற்பாதம் சீர்.

இவ்விதமாக ஆரண்யவாசிகளாக வசிக்கப்பட்ட சௌனகாதி முனிவர்கள் கூடி சூதமகா முனிவரைக்கண்டு ஓ முனீந்திரா? உம்மால் இதுவரைக்கும் நாங்கள் கேட்ட கதைகளால் மனம்பூரித்து ஆனந்த கடலில் சூழ்ந்து சந்தோஷமேலிட்டு முத்தருமேனும் ஆனால் சுவாமி! எங்களுக்கு காசி இராமேஸ்வர யாத்திரைக் கதையின் பிரபாவமின்னதென விளங்காதப்படியால் அக்கதையின் ஞானரசம் அமிர்தம்போல ஊட்டுவீரென தங்கள் கிருபாகடாக்ஷத்தை கோருகிறோமெனக் கேட்டவுடன் சூதமுனீந்திரன் ஆனந்தமடைந்து அம்முனிவர்களைப் பார்த்து ஓ மஹாரிஷிகளே! நீங்கள் ஞாபகயுக்தியடைந்து இதைக்கேட்பீர் அது ஏதென்றால் காசிராமேஸ்வர யாத்திரை [மஜிலிக்கதை] இந்தப் பூலோகத்தில் தற்காலத்தில் நடந்துக் கொண்டிருக்கப்பட்டது அப்படி நிஜரூபமான கதைகள் நானிப்போது உங்களுக்கு அறிவிக்கிறேன் என்றுச் சொல்லத்தொடர்ந்தார்.

### கதாசாரம்.

கேட்டீரா முனிவர்களே இந்தக்கலியுக ஆரம்பத்தில் கலிவேந்தனுடைய புரோஹிதனானவன் சகலவித்தையில் சமர்த்தனாய் தர்மசீலனாய் தேவதத்துயென பெயருடைய வேதியனிருந்தான். அவன் தன் பந்து ஜனத்துடன் கூடி காசிக்ஷேத்திரமடைந்து பாபவிமோசனஞ்

செய்துக்கொண்டு வருவதாக யெண்ணமிட்டு அவ்வேந்தனிடம் உத்தி
ரவு பெற்று சகல பரிஜனத்துடன் நல்லசுபதினத்தில் காசியாத்திரை
செய்வதாய் பிரயாணமடைந்து சில்தூரம் சென்றபிறகு வழிதப்பிக்
கொல்லேட்டி சமீபத்திலிருக்கும் ஒரு கானகத்தில் அகப்பட்டு வழித்
தெரியாமல் அலைந்துக்கொண்டிருக்குஞ் சமயத்தில், தெய்வவசத்தால்
அந்தக்கானகத்தில் இராநின்றவேடர்கள் இவரைப்பார்த்து ஆதரணை
செய்து அந்த இராத்திரி அங்கு நிற்கும்படிச்சொல்ல அதற்குவேதி
யன் சம்மதமடைந்து நின்றார். அப்போ வேடர்கள் அவர்கள் சத்தியா
னுசாரம் காட்டிலிராநின்ற கிழங்கு, காய், தினுசுகள், தேன் முதலான
தும் அவருக்குக் கொடுத்து அவர்கள் சுற்றிலும் மிருகங்கள் வாரா
தப்படி ஈட்டிகளெடுத்துக்கொண்டு காவல் புரிந்திருந்தார். இப்படிருக்
கும்சமயத்தில் சூரியன் கிழக்குத்திசையில் உதயமானவுடன்எல்லோரு
மெழுந்து காலக்கடனை தீர்த்துக்கொண்டு பிரயாணமடைந்து புறப்
பட்டார். அச்சமயத்தில் தேவதத்தன் புதல்வியாகிய சகலபுவனமோகி
னியாய் நிர்க்கும் புவனம்பாளென்னும் பெண்பாவைமீது அக்கானகத்
திலிராநின்ற மூலஸ்தானேஸ்வர சுவாமி சோகித்து தாய் தந்தைக
ளைப்பார்த்து அய்யாநான் இங்குதானிருந்து காசிவிஸ்வநாதனை தவம்
செய்தனுக்கிரகம் பெருவேனே தவிர அந்தக் காசிக்ஷேத்திரத்துக்கு
யான் வரமாட்டேன் என்றுச்சொல்ல இதற்கு தாய்தந்தைகள் அநேக
நீதிகள் போதித்தும் கேட்காதப்படியால் துக்கமடைந்து அந்தவேட
ருக்கு புவனம்பாளை யொப்பவித்து விட்டு காசிக்ஷேத்திரத்துக்குப்
போனார்.

இப்படி சிலதுநாள் சென்றப்பிறகு புவனம்பாள் புஷ்பவதியா
னாள். இதையறிந்து வேடர் தங்கள் சத்தியானுசாரம் பழவர்க்கங்கள்
முதலானதும் கொண்டுவந்து கொடுத்ததும்தவிர, இவர்கள் காட்டில்
சந்தனமரங்கள் வெட்டி கிராமங்களில் விற்று வரும்படியான திரவ்யத்
துக்குச் சேலையும் சக்கரை முதலானதும் கொண்டுவந்து கொடுத்தார்.
இப்படியாக அந்தக் கானகத்தில் புவனம்பாளுக்கு எதும் மனக்குரோ
தமில்லாமலிருந்தாள். இதுபோல் புவனம்பாள் வேடர்கள் ஆதரணையி
லிருக்குஞ் சமயத்தில் மூலஸ்தானேஸ்வரனை தியானித்துக் கொண்டி
ருக்க அச்சமயத்தில், பகவான் மன்மதனைப்போல் அழகுசிறந்து பிரா
மண பிரமாச்சாரியாய் ரூபமெடுத்து அந்தவீட்டில் ஆருமில்லாச் சமய
மரிந்து புவனம்பாளிடம் வந்து அம்மாதைப்பார்த்து ஓ பெண்ணரசி!
நீ இந்தக் கானகத்தில் தனியாயிருக்கத் தகுமா என்று கூறச் சண்



டாளவேடரிட மிருக்க நீதியா, பசுவானது புலியிடத்திலிருக்கும்
கதைப்போல் இருக்கிறதென்று பலவிதமாய் துர்போதித்து தன்னை
புணரும்படி யெத்தனிக்க இதைக்கேட்ட புவனம்பாள் ஈஸ்வர
வடிவம்மாற்றி பிராமண பிரம்மாச்சாரியாய் வந்தவரைப் பார்த்துப்
பாராமல் வெட்கமிட்டு ஓ பிராமணோத்தமரே! நானிவ்விடத்தில் ஒண்
டியாயிருக்கிறேன் ஆனால் எனக்கு தாய் தந்தைமாரிருக்கிறார் அவர்க
ளிப்போ காசியிலிருக்கிறார் ஆகையால் அவருடைய உத்திரவு பெற்று
வந்தால் உம்மை இச்சிப்பேன் என்றுச்சொல்ல இதைக்கேட்ட பிரா
மணன் உனதிஷ்டம்போல் செய்கிறேனென்று ஒரு நிமிஷத்தில் காசிக்
குச் சென்று தேவதத்தனுடன் தன் வரலாற்றைச்சொல்லி அவனால்
உத்திரவுயடைந்து அவன்கையால் எழுதப்பட்ட லக்கினபத்திரிக்கை
யும் அவன்கை மோதிரமும் பெற்றுக்கொண்டுவந்து புவனம்பாளுக்கு
காட்டிய மாத்திரத்தில் அம்மாது சம்மதமடைந்து அந்தவிப்பிரவனை
மனம்புரிய இச்சித்த மாத்திரத்தில் அப்பகவான் அந்த நிமிஷத்தில்
சகல தேவகணங்களை வரவழைத்துமுந்தி ஸ்ரீபார்வதிதேவியை மனம்
புரிந்த விதமாக புவனம்பாளை மூலஸ்தானேஸ்வர சுவாமி விவாகஞ்
செய்துக்கொண்டார். இந்த விவாகமானது அதிசீக்கிரமாய் நடந்தது
ரவிதிங்களும் ஈஸ்வரன் ஆஞ்ஞைக்குள் பட்டவனாகையாலும் ஈஸ்வ
ரன் மாய்கையாலும் அந்த வேடருக்கு இந்தச்சவிஸ்தாரம் எதும்தெரி
யாமலிருந்தது இப்படி தினந்தோரும் மூலஸ்தானேஸ்வரர் பிராமண
ரூபத்துடன் வேடர்கள் இல்லாச்சமயம் பார்த்து அம்மாதிடம் வந்து
லீலாவினோதங்கள் புரிந்துக்கொண்டுப் போயிருந்தார்.

இப்படிச் சிலநாள் சென்ற பிறகு நிரந்தரமாய் புவனம்பாளுக்
குக் கர்ப்பச்சின்ன முண்டாயிற்றது. அப்போதந்தவேடர்கள் தாயா
னவள் புவனம்பாளைப்பார்த்து பயமடைந்து அய்யோ! எவ்வளவு
துரோகம் சம்பவித்தது. புன்யபுருடனாகிய விப்பிரவன் இந்தக் கெட்
டக்காரியத்தை கேட்டமாத்திரத்தில் பின்னம் விட்டுவிடுவானே, நம்
மை நம்பியல்லவோ இங்கு விட்டுசென்றார். இப்படி துஷ்டக்காரியம்
செய்வதற்கு இம்மாது சம்மதமடைந்தது ஆச்சரியகரமாயிருக்கிறது
ஆனாலும் இங்கு இருவர்தவிர மற்றவர் வரப்போகிறதில்லை: இவரே
இந்தபாபக் காரியத்துக்கு உட்பட்டிருப்பார். இதில் பெரியவன்
பாபியோ, அல்லது சிறியவன் பாபியோ, எனக்குத் தோன்ற
வில்லை. ஆனால் என் புதல்வர் சதாபுவனம்பாளை தங்கையென அழை
த்துக்கொண்டிருக்கிறார். அம்மாதோ இவர்களை அண்ணனென்று

அழைக்குருள் ஆகையால் அவர்மீதும் சந்தேகமிடுவதற்கு காரண
மில்லை. இதை விசாரிக்காமல்விட்டால் எனக்குப் பாதகமாகும். இந்
தப் பாவத்திற்கு நானே கர்மியானேனென்று துயரமிட்டுக்கொண்டு
பெரிய புதல்வனுகிய வீரசேகரனையும், இளய புதல்வனுகிய சூரசே
சரனையும்பார்த்து ஓ புதல்வரே! என்மொழியை வினயத்துடன் கேட்
பீர். அது என்னவென்றுல், நம்மை நம்பியல்லவா பிராமனேத்தமன்
தன் புதல்வியாகிய புவனும்பாளை இங்குவிட்டுப்போனுர். இப்போது
அம்மாது சர்பமடைந்திருக்கின்றுள். இது எவ்வளவு பாபக்காரிய
மோ அதை யோசித்துப்பாருங்கள்.

(ச்லோகம்.)

நகிம்சத் பர்வதாபாரம் நபாவம் சப்தசாகராஃ
சுவாமீ துரோஹமிதம்டாரம் பாரம்விஸ் வாசபாதகம்.

ஆகையாலிது விஸ்வாசதோஷமல்லவா இதுக்கானுல் பாவமான
துவேருண்டா, இந்தப்பாவத்தை உங்களிருவரில் ஆர்செய்தது சொல்
லென்றுகேட்க அதற்கு அவரிருவரும் தாயைப்பார்த்து அம்மா? நா
ங்களிந்ததோஷ மரியமாட்டோம். எங்கள்மீது இந்த அபனிந்தனை
சொல்லாதேயென்று பிரார்த்தித்தார். அப்போது தமயன்மீது சந்
தேகம் தம்பிக்கி, தம்பிமீது சந்தேகம் தமயனுக்கு, இப்படி சந்தேக
மிருவருமடைந்து ஒருவர்க்கொருவர் தூஷித்துக்கொள்வதர்க் காரம்
பித்தார். இதைக்கண்ட அவ்வேடர் தாயானவள் தன் பாலகரைப்
பார்த்து அடா புதல்வரே நீங்களிருவரும் போர்புரிவீர் உங்களில்
எவன் சாகுறுனே அவனே பாதகனென்று தெரிந்துக்கொள்ளுகிறே
னென்றுச்சொல்ல, அதுட்போல் வேடரிருவரும்தோஷயீனத்வமடை
ந்து தாயார்மொழிபோல் யுத்தஞ்செய்வதற்குச் சம்மதமடைந்தார்.
இப்படியாக இந்த வேடரிருவரும் யுத்தஞ்செய்ய ஆரம்பித்தசமயத்
தில், புவனும்பாள் நதிக்குச்சென்று ஸ்தானஞ்செய்து வருஞ்சமயத்
தில் மகாவீரப் பிரதாபத்துடன் யுத்தஞ்செய்வதைப்பார்த்து அண்ணை
ன்தம்பி சவிஸ்தாரம் தெரியாதிருக்க கொஞ்சநேரம் துக்கித்து அவர்
கள் தாயாரால் நடந்த சங்கதிகள்தெரிந்து புவனும்பாள்வியசனமடை
ந்து வேடர் தாயாரைப்பார்த்து அம்மா, நீ உனது புதல்வர்கள்மீது
கோபமிட்டதற்கு காரணபூதமாய் நானுகயிருக்க இது தெரியாதப்
படியால் நீ இப்படி நிந்திக்க ஆரம்பித்தாய். ஆனல் இத்தினம் நடுரா
த்திரிவேளையில் என் பதியைக்காட்டுகிறேன் அதுவரைக்குப் என்தம
யன்மார் யுத்தஞ்செய்யாமல் நிறுத்துமென்று பிரார்த்திக்க. இதைக்



கேட்ட அம்மாது தன் புதல்வரைப்பார்த்து இனியுத்தஞ்செய்யவேண்
டாம் நிறுத்துமென்று சொல்லி நிறுத்திவிட்டு அப்போது புவனும்பா
ளைப்பார்த்து சொல்லத்தொடர்ந்தாள்.

ஓ புவனும்பா! இப்போது நடுராத்திரியாச்சுது இனி உன்பதியை
காட்டுமென்றுகேட்க, அப்போது புவனும்பாள் மூலஸ்தானேஸ்வரனை
மனதில் தியானித்து ஓபகவானே! இந்தவேடர்கள் மனக்கிலேசத்தைத்
தீர்க்கும்படிபிரார்த்திக்க அச்சமயம் பகவான்சகலலக்ஷணத்தோடுவிப்
பிரவன் வேஷம்பூண்டு வேடர்கள் காணும்படி புவனும்பாளுடன் வசு
னித்துக் கொண்டிருந்து நிமிஷத்திர்க்கெல்லாம் மாயமாய் விட்டார்.
இதைக்கண்ட வேடர்கள் இம்மாது பிராமண ஸ்ரீயல்லவெனயெண்ணி
பாதத்தில் விழுந்து நமஸ்கரித்து, நாங்கள் சொன்னதெல்லாம் அப
சாரமென்று இதை பொருத்து ரக்ஷிக்கக் கோருகிறுமென்று தியா
னித்தார். அந்தச்சமயத்தில் ஆகாசவாணி வேடப்புதல்வரைப் பார்
த்து அப்பா வேடரே புவனும்பாள் விஷயமாய் மனதில் கெட்டயபிப்
பிராயத்தை நினைந்தீர் இதுவுமன்றி உங்கள் தாயார் சந்தேகித்து
உங்களைக்கேட்டது முதல் நீங்கள் ஒருவர்மீதொருவர் சந்தேகித்து
புவனும்பாளை சோரத்தவ மடைந்தாளென்று எண்ணமிட்டீர் ஆகை
யால், இந்தபாபம்தீர்ந்துவிட நீங்களிருவரும் காசிக்ஷேத்திரத்துக்குச்
சென்று, கெங்காஜலத்தில் ஸ்தானஞ்செய்து,இராமேஸ்வரத்தில் இரா
நின்ற இராமலிங்க சுவாமிக்கு அபிஷேகஞ் செய்துவருவீர். உமது
தாயானவள் வியர்தாப்ய மடைந்தப்படியால் அம்மாதை புவனும்பாள்
இடத்தில் விட்டுவிட்டு காசிராமேஸ்வரத்துக்குப் போய்வந்து உங்கள்
குலத்தில் சேர்ந்திருப்பீரென்றுச் சொல்லி மறைந்தாள். அதன்பிறகு
சிலநாளுக்குள் தேவதத்துயென்னும் பிராமணனும் பந்துஜனங்களும்
காசியிலிருந்து கொல்லேட்டி அருகிலிருக்கும் கானகத்தில் வந்து
பார்க்கையில் புவனும்பாள் மூலஸ்தானசுவாமியை பாணிக்கிரஹணம்
செய்துக்கொண்ட விஷயமெல்லாம் சவிஸ்தாரமாய் அறிந்து சந்தோ
ஷத்துடன் அவர்தேசம்போய்ச் சேர்ந்தார்.

அதன்பிறகு வீரசேகரனும், சூரசேகரனும், காசிக்குப்போவதர்க்
காய் புரப்பட அவர்களுக்கு சகாயமாய் பெரியவரில்லையென்று மனவி
யாகூலமடைந்து போயிக்கொண்டிருக்க அக்கானகத்திலோரிடத்தில்
ஒரு மகாத்மாவைக்கண்டார். அவருக்கு நமஸ்கரித்து, தனது விருத்
தாந்தத்தைச் சொல்லி காசிக்குப்போகும் மார்க்கத்தை கேட்க அந்த
பிரம்மானந்தயோகி வேடரைப் பார்த்து சொல்லத் தொடர்ந்தார். ஓ
வேடரே! நானும் காசிக்குப்போகுறேன் எனக்குத் துணையாக நீங்கள்

வருவதால் அதிக சந்தோஷமடைகிறேன் ஆனால் யான் அனேகதரம்
காசிக்குப் போயிருப்பதால் எனக்கு காசிக்குப் போகும்மார்க்கம்
செவ்வையாய் தெரியும், இதுவுமன்றி உங்களுக்கு நடை ஆயாசமில்
லாமல் நான் சிலக்கதைகள் சொல்லுகிறேன் ஆனால் இப்போது நான்
சொல்லும் கதையானது,முந்தி வியாசமகாரிஷியானவர், சூதமகாரிஷி
க்குச்சொன்னார். சூதமகாரிஷியானவர், சௌனகரிஷிகளுக்குச்சொன்
னார். யான் சௌனகரிஷிகளால் இந்தக்கதைதனை கேட்டேன், அந்த
மகாமுனிவர் சந்தோஷிக்கும்படியான இந்தக்கதைதனை சொல்லுகி
றேன் ஏகசித்தமடைந்து கேட்பீரென்று சொல்லத்தொடர்ந்தார்.

# முதல் மஜிலிக்கதை.

## தெய்வப்பலபிரபாவம்.

ஓ வேடரே! விசித்திரப்புரமென்றொருப் பட்டணமுண்டு அதை
சித்திரகேது யென்றொரு வேந்தன் அரசாண்டுவந்தான். அவ்வேந்த
னுக்கு அநேக நாளாய் புத்திரபாக்கிய மில்லாதபடியால் மனவியா
கூலமடைந்து பெரியோர் கிருபாகடாக்ஷத்தால் தளர்ந்தவயதில் ஒரு
புத்திரன் ஜனித்தான். அதனால் சந்தோஷசித்தனாய் அப்பாலகனுக்கு
ஜாதகலிகிதம் எழுதுவதற்காய் ஆஸ்தானபண்டிதரை வரச்சொல்லி
அவர் யனுமதியால் அப்பாலகனுக்கு [மணிகேது] யென்கிற பெயரு
மிட்டு ஜோதிஷனை வரவழைத்து ஜாதகமெழுத ஆரம்பித்தார். அந்த
ஜோதிஷன் அப்பாலகன் ஜனனக்கால நக்ஷத்திரயோகத்தை கணி
த்து இந்தப்பாலகன் யோகம் இராஜ்யத்துக்கு ஆணிகரம்வரும் மாதா
பிதா திரஷ்டமானப்படியால் சிந்தாக்கிராந்தனாய் வேந்தனைப்பார்த்து
ஓ மகாராஜோத்தமா! இந்தஜாதகத்தை செவ்வையாய் கணித்து எழு
தவேண்டும். ஆகையால் ஒருதினம் யெந்தனுக்கு விடைத்தருவீரானால்
நலமென்றுச் சொல்ல அதுப்போல் வேந்தனிடம் உத்திரவுபெற்றுக்
கொண்டு தனது வீட்டிற்கு வந்து மனக்கவலை யடைந்திருந்தான்.

அதன்பிறகு, அவ்வேந்தன் "பிரார்த்தனைக்காக கொண்டுவந்த
ஆட்டுக்குட்டியானது தோறணத்துக் கொண்டுவந்த இளமாயெலாயை
தின்று சந்தோஷிக்கும்படி" மூடத்வமடைந்த புத்திரன் ஜனித்தா
னென்று சந்தோஷத்தால் தனக்கு வரும்படியான விபத்துகளை யெண்
ணாமல் அப்பாலகனுக்கு ஜாதகலிகிதம் முதலாகியதும் எழுதி தக்கா



லத்தில் சாஸ்ரோக்தமாய் நடத்தி அப்புதல்வனை அநேகவித்தையில்
சமர்த்தனாய்ச்செய்து சந்தோஷமடைந்து அப்புத்திரனுக்கு அந்த
இராஜ்யம் பட்டங்கட்ட எண்ணமிட்டு சந்தோஷமாயிருக்க. அச்சமய
த்தில், நிரந்தரமாய் மருவேந்தர் அப்பட்டணம் புகுந்து யுத்தசன்னுத்
தராய்னின்றார். இவருடைய சதுரங்கபலசேனைகள் சூழ்ந்த தெப்படி
யென்றால், சமுத்திரத்தில் எவ்விதமாய் அலைகள்புரண்டு உபரியாய்
வருமோ அதுபோல் உப்பொங்கிவருக,. இதைக்கண்ட சித்திரகேது
தன் பரிவாரத்துடன் கூடி யுத்தசன்னுத்தராய் நின்று போர்புரிய, சத்
துருவேந்தன் பராக்கிரமத்துக்கும் அவர் விடப்பட்ட பாணத்திற்கும்
சகிக்கமுடியாமல் காலகதியடைந்தார். இப்படியிருக்க, தனது நாய
கன் மரணமடைந்ததுகேட்டு அவன் தேவியான ஞானம்பாள் சோக
சமுத்திரத்தில் மூழ்கினவளாய் "ஜாதாப்யமரணம் துருவம்" என்
னும் நீதிவாக்கியம் அனுசரித்து பிறந்தப்பிறகு இறப்பது நிஜமே,
ஆனால் யெனதுகையால் போர்செய்து இறப்பது நலமென்றெண்ணி
தன்புருடனுடைய வஸ்திராபரணங்களை தான்தரித்துபுருஷரூபம்பூண்
டு வேந்தன் இறந்தானென்கிற அனுமானம் எதிர் வேந்தனுக்கில்லாத
படிதான் முன்னின்று திகிலடைந்து ஈனதிசையடைந்த தன்சைன்யங்
களை அழைத்துக்கொண்டு எதிராய் நின்ற வேந்தன் சேனைகள் மீது
பாணவருஷம் பெய்யச்செய்து அநேகரைக்கொன்றும் அதிகரித்து
வரும்படியான பலாபலத்தைக்கண்டு தான் பெண்பாவையான போதி
லும் திகிலடையாமல் போர்செய்து பிறகு தானும் தன்புருடன் கெதி
யடைந்தாள். எஜமானன் இல்லாதப்படியால் புத்திமான்களாகிய குடி
ஜனங்கள் இராஜ்யத்தை விடக்கூடாதென்கிற பிரமைப்பிடித்து சத்து
ருக்கள் மீது போராட்டஞ் செய்ய அபலமடைந்து தேகபிமானத்
தால் கட்டுப்பட்டவனாய் பரவேந்தர் மர்மம் தெரிந்து, எல்லோரும்
ஒன்றாய்க்கூடி ஏகக்காலத்தில் அபரிமிதமான பாணங்களை வருஷம்
போல்பொழிய எதிரிசேனைகள் தைர்யமடைந்து அநேகமான பலவா
ன்களாக இருப்பதுமன்றி ஆனைக்கூட்டமும், ரதசமுதாயங்களும்,
குதிரைசேனைகளும், போர்செய்ய பூமிப்பாலாச்சுது, இப்படிருப்பதை
அறிந்து சித்திரகேது சேனைகள் வீரத்வமடைந்து எதிரிகள் மீது
பின் தொடர்ந்து வெகுதூரஞ் சென்று அலர்ந்து நிர்க்குஞ் சமயத்தில்
எதிரினுடைய சதுரங்க பலசேனைகள் திரும்பி வீரத்வமடைந்து
கட்கத்தை கைப்பிடித்து செடிகளை பிடுங்கி தள்ளுவதுப்போல் தைர்
யமடைந்தி கத்திகளை சுழட்டிக்கொண்டு வந்த சேனைகள்மீது எரி
ந்தார்.

(சுலோகம்.)

சதேஷு ஜாயதேசூர ஸஹஸ்ரேச பண்டித:
வக்தாதச ஸஹஸ்ரேஷு ஜாதாபவதி வானவா.

இதுபோலாக இரண்டு சேனைகளும் விகாதமாய் போர்புரிந்தது அதில் சித்திரகேதுனுடைய சேனைகள்மீது எதிரிசேனைகள் புகுந்து மிகுந்த பிராணத்தின் மீது நிராசையடைந்து கத்திகள் யெடுத்துக் கொண்டு சிரசும் கையும் கால்களை வெட்டி பூமியில்தள்ள இவ்வேந்தன் சேனைகள் தைரியம்விட்டு எல்லோரும் ஓடிப்போய் விட்டார். இப்படிருக்க அவ்வேந்தன் சேனைகள் அதமாய் விட்டதையறிந்து எதிரிகள் கோட்டைக்குள் சென்று ரதகஜதுரகபதாதிகளையும் ஆஸ்தானத்திலிருக்கும் திரவியத்தையும் கொள்ளையடித்துக்கொண்டு போகுஞ் சமயத்தில் அந்த ஆஸ்தானபுரோஹிதர் இதையறிந்து நமக்குத் தரித்திரம் வந்தபோதிலும் பெரிதல்ல வேந்தனுடைய வம்சம் கெடலாகாதென்று மனமிட்டான்.

(சுலோகம்.)

அஸ்வப்லுதம் வாசவகர்ஜநம்ச ஸ்ரீணாம்சசித்தம் புருஷஸ்யபாக்கியம்
அவர்ஷணம் சாப்யதிவர்ஷணம்ச தேவோனஜானாதி குதோமனுஷ்யம்.

என்னும்மொழியை அனுசரித்து குதிரை குறிப்பும் மேகம் கர்ஜிப்பதும் ஸ்ரீகளுடைய சித்தமும் புருஷனுக்கு பாக்கியம் வருங்காலமும் அதிவுருஷ்டி அனாவுருஷ்டிகளை ஈஸ்வரனாகிலும் அறிந்திட சாத்தியமல்ல மனிதனெவ்வளவு, எப்போது எதுவருமோ அதையார் அறிவார்கள் இந்த திரேகத்தை அந்த சித்திரகேதுனுடைய உப்பால் வளர்ந்த திரேகம் ஆனால் யான் பிராமணன் போர்புரிய வல்லவனல்ல, ஆனால் அந்த வேந்தனுடைய புதல்வனாகிய மணிகேது யென்பவனை எதிரிகளிடம் காட்டிக்கொடுப்பது விட ரக்ஷிப்பதே தர்மமாகும் அந்தப் புதல்வனுடைய லலாடலிகிதம் அறிந்தவனல்ல, பகவான் சித்தமெப்படிருக்கிறதோ ஆருக்கும் தெரியாது அப்பகவானுடைய கிருபாகடாக்ஷத்தால் அவன் ஒரு இராஜ்யமாளலாகாதா? ஆயுசுடன் இருந்தால் உப்பாகிலும் விற்று பிழைத்திருப்பானென்று எண்ணமிட்டு வேந்தன் அந்தப்புரத்தில் பகையாளிகள் அறிந்திடா மார்க்கமாய் பிரவேசித்து அங்கிருக்கும் ஐந்து வயதடங்கிய பாலகனை தனது வீட்டிற்கு அழைத்து வந்து அவனுக்கு விப்பிரவேஷம்பூட்டி காப்பாற்றினான். இப்படி ஒன்பது வருடம் சென்றப்பிறகு அப்பிராமணன் அப்பாலகனுடைய துர்பாக்கிய பலத்தாலோ அல்லது அவருக்கு விதிப்பயன் முடி-



வாகாமல் காலகதியடைந்தார். பிறகு அந்த வேந்தப்புதல்வனை ரக்ஷிப்பவரில்லாமல் போச்சுது, ஆனாலும் அப்பாலகன் தேசதேசமாய் திரிந்து கடைசியில் ஜயந்தநகரமென்னும் பட்டணமடைந்து அன்னாட்டிலிராநின்ற வித்தியபுங்கவருடன் கலந்து பிச்சையெடுத்து ஜீவித்திருக்க பதினொருவருஷம் பூர்த்தி யாச்சுது, அப்போது அப்பாலகன் உலகநடையை அறிந்தவனாய் "வித்யாவிஹீந: பசு:" என்னும் மொழியையறிந்து வித்தையில்லாதவன் மிருகத்துக்கு சமமானவனென்று யோசித்து அந்த நகரத்திலிருக்கப்பட்ட ஒருதர்ம பாடசாலையடைந்து வித்தை அப்பியாசித்துக் கொண்டிருந்தான். தந்தை பால்யத்தில் வித்தை கற்று தந்திருந்தால் சீக்கிரத்தில் சகலமான வித்தை கற்று சந்துஷ்டி அடைவான் என்றுச்சொன்னவுடன் சூர்யஸ்தான மயமாச்சுது ஸ்ரீசைலம்போய்ச் சேர்ந்தார். அந்த பிரம்மானந்தயோகி கதை நிறுத்தினார். இதற்குள் அந்தவேடன் யோகியோடு ஸ்தானபானம் தீர்த்துக்கொண்டு மல்லிகார்ஜுன சுவாமியை சேவையடைந்து வந்தப்பிறகு வேடர் இந்த க்ஷேத்திரமகிமை தெரிவிக்க வேண்டுமென்று கேட்க பிரம்மானந்தயோகி சொல்லத்தொடங்கினார்.

(சுலோகம்.)

ஸ்ரீசைலசிகரம் துருஷ்ட்வா புணர்ஜன்மம் நவித்யதே.

என்பதுபோல் இந்த ஸ்ரீசைல சிகரத்தை சேவையடைந்த மாத்திரத்தில் புனர்ஜன்மம் கிடையாது இங்கு பிரமராம்பா சகிதமாய் பரமசிவன் வசித்துக் கொண்டிருக்கிறார். ஆனால் இங்கு ஸ்ரீசக்கரம் ஸ்தாபிதமாயிருக்கிறது. இந்த க்ஷேத்திரத்தில் பதினொரு திவ்ய தீர்த்தமுண்டு அதிகமாய் புகழ்ந்து சொல்வதற்கென் தரமல்ல.

இப்படிச்சொல்லி பிறகு எல்லோரும் போஜனமருந்தி அங்கு நித்திரைசெய்து மறுநாள் காலையிலெழுந்து காலக்கட்டனை தீர்த்துக் கொண்டு புறப்பட்டார்.

# இரண்டாம் மஜிலிக்கதை.

## அதுருஷ்டயோகம்.

இப்படி பிரம்மானந்த யோகியோடு வேடர்கள் போய்க்கொண்டிருக்குஞ் சமயத்தில் ஐயா நேற்றிய தினம் சொல்லிய மிகுதிகதை

தன்னை பூர்த்திசெய்ய வேண்டுமென்று கேட்கவே அதற்கு பிரம்மான
ந்தயோகி அவர்களைப்பார்த்து சொல்லத் தொடங்கினர்.

கேட்டீரா வேடர்களே, அந்த ஜெயந்தநகரத்தை சுமசேகரனென்
கிற வேந்தன் இராஜசேன பீமசேனகளையும், சகல தந்திரமரிந்த மந்
திரிகளோடு பூரிதாதயான பல பராக்கிரமசாலியாகிய சேனபதியோ
டும் அதிகபிரிய சிநேகிதனுகிய வைஸ்யஸ்ரேஷ்டனுடன் கூடி தருமங்
களை அபலம் செய்யாமல் பரிபாலித்துக்கொண்டு நிரஞ்ஜனனென்னும்
பட்டபுதேவியுடன் சந்தோஷத்துட னிருந்தான். அந்தத்தேவி கர்பத்
தில் குணவதியென்கிற கன்னிகாரத்தினம் பிறந்தாள். அவ்வேந்தப்
பிரதாபனுக்கு புருஷசந்தானம் இல்லாதப்படியால் அந்தக் கன்னிகா
ரத்தினத்தை அதிக பிரியத்துடன் வளர்த்துக்கொண்டு அக்குழந்தை
க்கு அநேக வித்தைதன்னில் சிறந்தவளாய் செய்ய எண்ணமிட்டு ஒரு
வித்துவானை அழைத்து அவருக்கு சம்பளம் தந்து தன்னுடைய
அந்தப்புரத்தில் நிருத்திக்கொண்டான். அந்த உபாத்தியாயரிடத்தில்
தன்னுடைய புதல்விக்குத் தகுந்த வித்யாப்யாசஞ்செய்ய அப்புதல்வி
அவரால் சிலகாலத்திற்குள் அநேக வித்தைதன்னில் புகழடைந்து
வித்தை சிரோன்மணியென்கிற பெயர் பூண்டிருந்தாள். இராஜசேன
னென்னும் மந்திரி குமாரனுகிய சோமதத்தனும், பீமசேனனுன மந்
திரி புதல்வியாகிய இந்துமதியும், பூரிதாதயென்னும் சேனநாயகன்
புதல்வியாகிய பானுமதியும், தனபாலனுன வர்த்தகன் புதல்வி சங்கரி
யும், குணவதியுடன் சேர்ந்து வித்தை கற்றுக்கொண்டிருந்தார். இப்
படி கற்றிருந்து இந்த நாலுப்பெண்களும் பாலும் ஜலம் ஒன்ருனதுப்
போல் ஏகமனதாய் சிநேகமடைந்து ஓரே இடத்தில் போஜனங்க
ளும் நித்திரை செய்துக்கொண்டிருந்தார். அவரவருடைய சொந்த
வீட்டை அபேக்ஷயில்லாமல் தாய் தந்தை நிர்பந்தத்தால் மனைக்கு
போய்க்கொண்டு சந்தோஷ சமுத்திரத்தில் மூழ்கினவராய் இருந்
தார். இந்த நால்வரும் மந்திரி புதல்வனுகிய சோமதத்தனிடத்தில்
பிரியமா யிருக்க. இப்பாலகன் தினந்தோறும் இந்த மாதருக்கு
விநோதமாகிய கதைகளைச்சொல்லி இவர் மநோகமலத்தை சந்துஷ்டி
அடையும்படிச் செய்ய இம்மாதர்கள் இவனை இடைவிடாமல் ஐந்துப்
பேரும் ஓரேஸ்தலத்தில் விளையாடிக் கொண்டிருந்தார். இப்படி சில
காலம் சென்றபிறகு மந்திரிப் புதல்வனுக்கு பதினறுவயது பிரா
யமாச்சுது, இராஜபுதல்வி முதலான நால்வருக்கு பத்துவயது சமமாயி
ற்று, இம்மாதர்கள் நலம் பெருஞ்சமயம் சுமசேகரன் அறிந்து மந்தி



ரிப்புதல்வன் எவ்வர்னமடைந்தவன் நமது பாலகருக்கு ருதுகாலம்
சமீபமாச்சுது ஆகையால், இந்த மந்திரிக்குமாரனுக்கு பிரத்யேகமாய்
வித்தை புகட்டவேண்டும் தவிர இப்பால்யருடன் சமமாயிருப்பது உசி
தமல்லவென்று மனதில்நினைந்து உபாத்தியாயரையழைத்து சொல்லத்
தொடங்கினர்.

ஐயா! இனிமேல் உதயகால சமயத்தில் எனது அந்தப்புரமடை
ந்து புதல்விமாருக்கும், மத்தியானக்காலத்தில் மந்திரி மனையடைந்து
பாலகனுக்கு வித்தைகற்று தருமென்றுச்சொல்ல, இம்மொழிக்கு உபா
த்தியாயர் சம்மதமடைந்து வேந்தனிடம் உத்திரவுபெற்று பாடகசாலை
யடைந்து சோமதத்தனை யழைத்து அப்பா! நீ உனது வீட்டிற்குப்
போகுவாய் இனி பாடகசாலைக்கு வரவேண்டாம் நானே உனது வீட்
டிற்கு வந்து படிப்புச்சொல்லித் தருகுரேனென்றுச் சொல்ல. அந்த
நாலுமாதர்களும் சோகா கிராந்தமடைந்து இராஜஸ்தானம் சென்று
வேந்தனோடு சொல்லத்தொடங்கினர். ஓ இராஜகுலசேகரா! நாங்கள்
மந்திரி புதல்வனை விடநாடி அரைநிமிஷமாகிலும், புவிமீது ஜீவிக்கலா
காது என்று ஓரே பிடிவாதமாய் மொழியாடிக் கொண்டிருக்கும்
புதல்வரைப்பார்த்து, அவ்வேந்தன் தன் புதல்வியையெடுத்து துடை
மீதுவைத்து முகத்தைதுடைத்து உச்சிமுகந்து முத்தமிட்டு மற்றவரை
அமரும்படிச் செய்து சொல்லத்தொடர்ந்தார். கேட்டீரா, மக்களே!
உங்களுக்கு ருதுகாலம் சமீபித்தது, மந்திரி புதல்வனுக்கு எவ்வர்ன
காலம் சமீபித்தது, ஆகையால் இனிமீது நீங்கள் புருடசாவகாசஞ்
செய்வது இதரமானவற்கும் நமது குலத்தாருக்கும் ஏளனமாகும்,
இது சம்மதித்து நீங்கள் நால்வரும் ஏகஸ்தானத்தில் கூடி வித்தை
கற்றுணர்வீர் என்றுச்சொல்க, இம்மொழிக்கு அம்மாதர் சம்மதித்து
மனைக்குச்சென்ருர். அன்றுதினம்சூரியன் அஸ்தமானவுடன்மந்திரிபுத
ல்வன் எப்போதும்போல் நால்வருடன் கூடி சரச சல்லாபங்களாடிக்
கொண்டிருக்குஞ் சமயத்தில் இவரைப்பார்த்து, என்னை நீங்கள் நால்
பேரும் விவாகஞ்செய்துக்கொள்ளவேண்டுமென்றுச்சொல்ல, இம்மொ
ழிக்கு நால்வரும் அதுபோ லாகட்டுமென்றுச் சொன்னுர். இதைக்கே
ட்டு மந்திரிபுதல்வன் ஆனல், இந்த சங்கதி என் தந்தைக்குச்சொல்லி
பிரயத்தினம் செய்குறேன்; ஆனல் ஒருச்சமயம் தெய்வசங்கல்பம் தப்பி
உங்களுடைய தாய் தந்தைகள் இனி ஆருக்காகிலும் கொடுக்க சம்மத
மடைந்தால்பெரிதல்ல, இதுவுமன்றி எனக்கும் உங்களுக்கும் விவாகம்
நடக்காவிட்டாலும் சிந்தனையில்லை, நீங்கள் ருதுகால மறிந்தவுடனே

ஒருதினம் என்னுடன் கலந்து சரசசல்லாபங்களாடி மாரன் கொ்வத்
தையடக்குவீரு? என்று கேட்க, இதற்கு மாதர்கள் நேசனே உனதிஷ்
டம்போல் நடத்துகிறோமென்று அஸ்தத்தின் மீது அஸ்தமிட்டு பிர
மாண மொழிச்சொல்லி அவரவர் மனைக்குச்சென்றார். இப்படிருக்க
ஒருவருஷமாக நாலுபேர் மாதருக்கும் மந்திரிபுதல்வன் முகதரிசனம்
கிட்டாமல் போச்சுது, பிறகு இந்நால்வரும் வித்தைபயர்ச்சியை நிரு
த்திவிட்டு உபாத்தியாயருக்கு குருகாணிக்கை தந்து இராஜபுதல்வி
அந்தப்புர மடைந்தாள். மற்றமூவரும் அவரவர் மனைக்குச்சென்றார்.
ஆனாலும் அப்போதுக்கப்போது மூன்று மாதர்களும் வேந்தன் வீட்
டிற்குவந்து இராஜபுதல்வியைக்கண்டு மொழியாடிப் போய்க்கொண்
டிருந்தார்.

இப்படிருக்க, அந்த மந்திரிபுதல்வன் தனது அந்தப்புரமடை
ந்து அந்த நால்வருடைய ரூபரேகைவிலாசத்தை இடைவிடாமல் எண்
ணிக்கொண்டு மன்மதன் பாணத்திற்கு சகிக்கமுடியாமல் எக்காலமும்
அவர்மீது மோகமென்னும் வலையில் அகப்பட்டு தத்தளித்துக்கொண்
டிருக்க ஒருநாள், உதயத்தில் மந்திரி தன்புதல்வன் மதனவேதனையால்
தினந்தினம் நளிந்திருப்பதைக் கண்டு அடாப்புதல்வா? நீ இப்படி
துயர் படுவதற்கு காரண மேதென்றுகேட்க, இம்மொழிக்கேட்ட
சோமதத்தன் தந்தையைப் பார்த்து, ஓ தந்தையே நான் ஏதென்றுச்
சொல்லுவேன், புருஷனாய் ஜன்மித்தபிறகு சகல சவுக்கியங்கள் ஆதர
மேனும் அவன் எப்படி நிர்வகிப்பான் எனக்கு சகல சம்பத்துகள்
அடர்ந்திருந்தும் இந்த எவ்வர்னகாலத்தில் மாரனை ஓட்டச்செய்யும்
சமர்த்துடைய மாதுயில்லாதப்படியால் எனது தேகம் நளியக்காரண
மாச்சுது. இதுவுமன்றி எனதிளயபிராயத்தில் என்னுடன் வித்தைகற்
றுக் கொண்டிருந்த இராஜபுத்திரிகளோடு சேர்ந்த நாலுபேர் மாதர்
கள் என்னை மனம்புரிவதாய் வாக்குக்கொடுத்தவர் இதுவரைக்கும்
அவர் இதைக்குறித்து நினைக்காமலிருக்க, நான் அவர் மோகமென்
னும்வலையில் அகப்பட்டு தத்தளிக்குறேன் தவிர வேரொன்றும் கிடை
யாதெனச் சொல்ல, இதைக்கேட்ட மந்திரி தனக்குள்தான் யோசித்து
ஐயோ தெய்வமே! இப்பாலகன் இப்படிக்கொத்த பயித்தியமோகத்
தில் மூழ்கினான் இராஜபுத்திரி என்ன நம்மைபோலொத்த தரித்திர
திசையடைந்தவரை கைப்பிடிப்பாரு இதுவீண்மொழியென்று சிந்தனை
செய்து புத்திரனைப்பார்த்து அடாப்புதல்வா! உனக்கு அந்த இராஜபு



தல்வியேன்; அம்மாது உனதழகுக்கு ஈடல்ல, உனக்கு சமமாக மற்
றொரு தேசஞ்சென்று மந்திரிப்புதல்வியை விவாகஞ் செய்து வைக்கு
றேன், அவர்கள் மீது இருக்கப்பட்ட மோகத்தை வெருப்பாய் எனச்
சொல்ல, இதைக்கேட்ட சோமதத்தன், அவர்கள் மீதிருக்கும் மோக
த்தை வெருக்காமல் இருப்பதைக்கண்டு இவன் மொழிக்குச் சம்மத
மடைந்து வேந்தனுக்கறிவிக்க. இதைக்கேட்டவேந்தன், மந்திரியைப்
பார்த்து அப்பா நாமேபந்துத்வம் செய்துக்கொள்வது சரியல்ல, உன
க்குச் சரியான பந்துக்களுடன் விசாரித்து ஒருப்பெண்ணைக் கொண்டு
வந்து விவாகமுடிப்பாய். மந்திரி என சமாதானஞ்செய்து அனுப்ப,
இதைக்கேட்ட மந்திரி மனவியாகூலமடைந்து தன் மனைக்குச்சென்று
புதல்வனைப்பார்த்து, வேந்தன் சொன்னதைச்சொல்ல. இதைக்கேட்ட
சோமதத்தன், சோகாக்கிராந்தனாய் தனக்குள்தான் சமாதானஞ்செய்
துக்கொண்டு மற்ற மூவரையும் அழைத்து அவருடன் வேந்தன் புத
ல்வி சங்கதிச்சொல்லி, அவருக்கு ரோஷமுண்டாகும் பொருட்டு, பார்
த்தீரா சொன்னமொழி பிசக்கிநடக்கும் இராஜபுத்திரிகை இந்தபூலோ
கத்தில் கண்டீரு? என்றுச்சொல்ல, இதைக்கேட்டு அவர்கள் ஓசோம
தத்தா நாங்கள் அந்த இராஜபுதல்வி சங்கதி சொல்லமாட்டோம். எங்
கள் விஷயத்தில் தாய் தந்தைகளைக் கேட்டு நாங்கள் சொன்னமொழி
போல் பூர்த்தி செய்வோமெனச் சொல்ல. இதைக் கேட்ட மந்திரி
குமாரன் சோகத்தில் மூழ்கி அனுதினமும் அன்னபானாதிகளை வெரு
த்து துக்கமாயிருந்தான்.

இப்படிருக்க சிலநாள் சென்றப்பிறகு, நான்குபெண்களும் புஷ்ப
வதியானார். இதைக்கண்டு அவரவர் தாய் தந்தைகள் அந்தப் பெண்க
ளுக்கு விவாக பிரயத்தினஞ் செய்துக்கொண்டிருக்க, இந்த சங்கதிக்
கேட்ட நான்குமாதர்களும், ஓரிடத்தில்சேர்ந்து, நாம்பால்யத்தில் மந்
திரிப்புதல்வனுக்கு வாக்குதத்தம் செய்தோமே, இப்பொழுது நமது
தாய் தந்தைகள் விவாகமுடிப்பதற்கு எத்தனமிட்டார். விவாகமான
பிறகு, மந்திரிபுதல்வனோடு சுகாசுகமனுபவித்தால் அதிதுரோகிகளா
குவோம் தானஞ்செய்து ரௌரவாதி நரகம்யடைவோம், நாம் அவர்
கோரிக்கை தீர்க்காமல்போனால் நாம் நால்வருக்கும் பங்கமாகும்,
சொன்னமொழி தப்பி நடப்பது நீசச்சுவபாவம் அப்படி நீசச்சுவபாவ
த்தை நமதிளம்பருவத்தில் கைக்கொள்வது நலமல்ல ஆகையால், நாம்
சொன்னமொழிபோல் விவாகமாகா முந்தியே தீர்த்துக்கொண்டால்
நலமென்று அந்நால்வரும் யோசித்து அவரவர் மனைக்கருகிலிருக்

கும் இடங்களை நிச்சயித்து "நாங்கள் உனக்குச் சொன்னதுப்போல் இன்றையதினம் தீர்க்க கார்த்துக் கொண்டிருக்கிறோம்" ஆகையால், நீ முதல்ஜாமத்தில் தேவஸ்தானத்திற்குவருவாயாகில், அங்கு இராஜபுதல்வி வருவாள். இரண்டாம் ஜாமத்திற்கு தர்மத்தியயென்கிற இடத்திற்குவந்தால், மந்திரிபுதல்விவருவாள். மூன்றாம்ஜாமத்திற்கு புரபாஹய மண்டபத்திற்கு வந்தால், அங்கு சேனாதிபதி புதல்விவருவாள். நான்காம் ஜாமத்திற்குஸ்தானமண்டபத்திற்குவந்தால். தனபாலன் புதல்வி வருவாளென்று மந்திரி புதல்வனுக்கு கடிதமனுப்ப, இதைக்கண்டு சந்தோஷசித்தனாய் "இன்றைக்கு நமது நோம்பு பலித்தது இனிதன்யனானேன். இப்போது, இவ்வளவு மார்க்கம் கிட்டியது இனிவிவாகம் சொந்தமாய் கிட்டுமென்று தண்ணியில் நிழலைக்கண்ட நாயானது தனக்குள் தான் சந்தோஷிப்பதுப்போல்" சந்தோஷித்து அப்படியே வருகுறேனென்று பதில் கடிதமனுப்பிவிட்டான். இதைக்கண்ட நால்வரும் சந்தோஷமடைந்து "அனுகூலமாகுமிடம் மந்திரி குமாரனுக்கு காட்டி இருக்கிறோமல்லவா நாம் நமது எண்ணம் திர்த்துக்கொள்ளலாமென்று மொழி யாடிக்கொண்டு அவரவர் இல்லடத்திற்குச் சென்றார்.

இப்படிருக்க அந்த நகரத்தில் வித்தையபேக்ஷையால் பரதேசத்திலிருந்து வந்திருக்கும், விசித்திர புராதினனான சித்திரகேது புதல்வனாகிய மணிகேது என்னும் பால்யன், மத்தியான காலத்தில் பிச்சையெடுத்த சாதம் தின்று காலக்ஷேபணஞ்செய்து பாடகசாலைதனில் வித்தைக் கற்றுக்கொண்டு இஷ்டமான விடத்தில் சயனித்துக் கொண்டிருந்தான். தெய்வசங்கல்பத்தால் அந்தயிராத்திரி தேவஸ்தானத்திற்கு வந்து அங்கு வைத்திருக்கப்பட்ட மங்களதீபத்தின் வொளியில் படித்துக் கொண்டிருந்து, நித்திரை வருகவே அவ்விடத்தில் சயனித்துக் கொண்டான். இப்படிருக்க, முதல் ஜாமத்தில் இராஜ புதல்வியாகிய குணவதி அந்த தேவாலயத்திற்கு வந்து அங்கு படுத்துக்கொண்டிருந்த மணிகேதுவை மந்திரி புதல்வனாய் பாவித்து மோகமீறி அவரையெழுப்பி அவருடன் சரசக்கிரீடைகளாடிய பிறகு, மந்திரிபுதல்வனல்லவென தெரிந்து, அங்கு விழுந்திருக்கும் மணிகேதுனுடைய புத்தகத்தை எடுத்து நிலவு வெளிச்சத்தில் பார்த்து தன் கண்ணிலிட்டிருக்கப்பட்ட மையை சுண்டு விரலாலெடுத்து "நாபோக்தம் ஈஷியதேகாம்" என்று ஒரு பதமெழுதிவிட்டு தனது அந்தப்புரமடைந்து டந்தையைப் பற்றி நிந்தித்துக் கொண்டிருந்தாள்.



இங்கு இராஜசேனனென்னும் மந்திரி அத்தினத்தில் தனது புதல்வனை வேந்தன் காரியமாய் அத்தருணத்தில் அனுப்ப அந்தக்காரியத்தை நிரவேற்றிக்கொண்டு சோமதத்தன் வருக, கொஞ்சம் ஆலசியமாச்சுது. ஆனபோதிலும் காரியத்தை தீர்த்துக்கொண்டு தான்போய் வந்த சங்கதி யெல்லாவற்றையும் தந்தைக்குச் சொல்லிவிட்டு நிமிஷத்தில் போஜனம் செய்துக்கொண்டு தாம்பூலம் கைப்பிடித்து, கஸ்தூரி, புனுகு, ஜவ்வாது, முதலான வாசனைதிரவியங்களை மேலணிந்துக்கொண்டு சில வஸ்துவுகளை நேசருக்கு எடுத்துக்கொண்டு, முதல் ஜாமம் தப்பிப்போயிற்று. இரண்டாவது ஜாமத்தில் தேவஸ்தானம் வந்து அங்கு இருக்கும் மணிகேதனைப் பார்த்து, நீ யாரடா? இங்கு வருகக் காரணமேது என்று கேட்க. அதற்கு ஐயா? நானொரு ஏழை இங்கு யாரும் வரமாட்டாரென எண்ணமிட்டு சயனித்துக் கொண்டேன் என்றுச்சொல்ல இதைக்கேட்ட மந்திரி புதல்வன், நீ இங்கிருக்கலாகாது எங்காகிலும் போவென அதட்டிச்சொல்ல இவன் பயமடைந்து அங்கிருந்து புறப்பட்டு தர்மாத்யமென்னும் மடத்திற்குச்சென்று, சயனித்துக் கொண்டிருந்தான். இப்படிருக்க, இரண்டாம் ஜாமத்தில் பிரசேனனென்னும் மந்திரி புதல்வியாகிய இந்துமதி அங்குவந்து மணிகேதுனிடத்தில் சரசகிரீடைகளாடி பிறகு, இவர் மந்திரிபுதல்வனல்லவென தெரிந்து, இவர் பக்கத்திலிருக்கப்பட்ட புஸ்தகத்தையெடுத்து அதில் வேந்தன் புதல்வி எழுதியிருப்பதைப் படித்து தானும் தன் கண்ணிலிருக்கப்பட்ட மையை சுப்பலாலெடுத்து "கல்பகோடி சதைரபி" என்று மறுவொரு பதமெழிது விட்டு தான் சென்றாள்.

அதன் பிறகு, தேவஸ்தானத்தில் மந்திரி புதல்வன் கார்த்தும் இராஜகுமாரத்தி வாராததைப்பற்றி, ஐயோ? இந்த இராஜபுதல்வி மோசம் செய்தாளென்று மனக்கிலேசமடைந்து இரண்டாவது ஜாமத்தில் தர்மாத்யமென்னும் மண்டபத்திற்குச் சென்று அங்குசயனித்திருந்த மணிகேது என்பவனைப் பார்த்து நீ யாரென்று கேட்க, நாம் நிஜம் சொல்வோமாகில் அபாயம் சம்பவிக்குமென்று எண்ணமிட்டு நான் பாடகசாலையில் உபாத்தியாயர் என்றுச்சொல்ல, இதைக்கேட்ட மந்திரி புதல்வன், ஐயா, நீர் இங்கிருந்தால் நலமல்ல எங்காகிலும் போகுவீரென சொல்ல இம்மொழிக் கேட்ட மணிகேது தனக்குள் தான் "ஆ! ஆ! ஸ்திரீயினுடைய மோகமெப்பேர்ப்பட்டதோ தெரியாது. எப்படிக்கீர்த்தவராகிலும் ஸ்திரீமோகமென்னும் வலையிலகப்பட்டால் அவரை நத்தளிக்கச் செய்யாமல் விடாது. தன்னுடைய அந்தப்புரத்தி

லிருந்து இராஜகாரியத்தை நிர்வகிக்காதா இந்த மந்திரி புதல்வன்
தன்னுடைய அதிகாரமென்னமிடாமல் பயித்தியம் பிடித்து இந்த நடு
ராத்திரியில் ஒரு ஸ்திரீசுகத்தைக்கோரி நிராதரனாய் மன்மத வேதனை
யில் அகப்பட்டு வெளிப்பட்ட பக்ஷிபோல் ஒரு பெண்ணுக்காய் இப்
படி துயரப்படுகிறான். இப்படி துயரப்படும் பக்ஷியானது, ஒரு சமயத்
தில் வேடனுடைய வலையில் அகப்பட்டு பிராணம் விடாதா. அது
போல் இந்த மந்திரி புதல்வன் ஒரு சமயத்தில் எப்பவோ ஆபத்தையில்
அகப்படுவான்'' என மந்திரி புதல்வன் காரிய பங்கத்தையும் தன்னு
டைய பிராப்தத்தையும் நினைந்து தனக்குள் தான் சிரித்துக்கொண்டு
அவ்விடம் விட்டு மூன்று ஜாமம் வருஞ்சமயத்தில், புரபாவ்ஹ மண்ட
பம் சேர்ந்து நித்திரை செய்தான். இப்படிருக்க அந்த மூன்றும்ஜாம
த்தில், சேனபதி புதல்வியான பானுமதி அங்கு வந்து சயனித்துக்
கொண்டிருந்த மனிகேதனை மந்திரி புதல்வனாய் எண்ணியவனோடு சம்
போக சரசங்களாடி பிறகு அவர் மந்திரி புதல்வன் அல்லவென மதி
த்து அவர் பக்கத்தில் விழுந்திருக்கும் புஸ்தகத்தை யெடுத்து அதில்
எழுதியிருக்கும் சுலோகந்தை படித்து நிலவு வொளியால் நெத்திர
மை எடுத்து அதில் "அவஸ்ய மனுபோக்தவ்யம்'' என்று எழுதிவிட்டு
தன்னிருப்பிட மடைந்தாள்.

பிறகு தர்மாத்ய மண்டபத்தில் அந்த மந்திரிபுதல்வன் பீமசே
னன் புதல்வியாகிய இந்துமதியும் வரவில்லை யென்று மனக்கவலை
யடைந்து பயித்தியம் பிடித்தவனைப்போல் தனக்குள் தான் சித்தமெ
லிந்து அங்கிருந்து புறப்பட்டு புரப்யாமண்டபம் அடைந்தான். அங்கு
நித்திரை செய்துக்கொண்டிருந்த மணிகேதனைப்பார்த்து தட்டியெழு
ப்பி, நீயாரடா? இந்த இருண்டசமயத்தில் இங்கு ஒண்டியாய் இருப்ப
தேன் என்று கேட்க. அதற்கு மணிகேது யோசித்து ஐயா, நானின்
நகரத்திலிருக்கும் தலையாரி என்றுச் சொல்ல இதைக்கேட்டவுடன்
அடா துர்மார்க்கா? நகரத்தில் சோரப்பயம் அதிகரித்திருக்க அதை
கார்க்காமல் சோம்பேரியாய் இங்கு படுத்திருக்க காரியமேது என
கோபத்தோடுச் சொல்வதுமன்றி தனக்கு வேந்தன் புதல்வி முதலா
னவர் வராதப்படியாலும் தனது தாபம் தீர்க்காமல் போனப்படியா
லும் இதை யெல்லாம் எண்ணமிட்டவனாய் ஆரைப் பார்த்த போதி
லும் வெருப்பாக மொழியாடி அந்த மணிகேதனை தெரித்திவிட உட
னே தானெழுந்து ஸ்தான கட்டுச்சேர்ந்து நித்திரை செய்தான் அந்த
விடத்திற்குமோகக்கிராந்தமாய் வைசியபுத்திரியான சங்கரியென்னும்



மாது அதிவேகமாய் வந்து அங்கு சயனித்துக் கொண்டிருந்த மணி
கேதனை மந்திரி புதல்வனாய் பாவித்து அவனுடன் சரசகேளி விலாச
மாயிருக்க, சூரியன் உதயமானான் உடனே எழுந்துப்பார்க்க மந்திரி
புதல்வ னல்லவென்ன தெரிந்து இவனுடைய இருப்பிடமும் ஜீவனைக்
தாரத்தையும் கேட்டரிந்துக்கொண்டு, இராஜபுத்திரிகை மற்ற இருவ
ரும், எழுதிவைத்த சுலோக புத்தகத்தையெடுத்து அந்த சுலோகத்
தை வாசித்து அதில் "க்ருதம்கர்ம சுபாசுபம்'' என எழுதி, [எத்தனை
தினமானாலும் கர்மானுசாரமாய் நமக்கு சம்பிராப்தமான சுபா சுப
பலன் அனுபவிக்காமல் தீராதென்னு மர்த்தமாகும்.]

(சுலோகம்.)

ாாபோக்தம் க்ஷீபதேகர்ம கல்பகோடிசதைரபீ
அவஸ்ய மனுபோக்தவ்யம் க்ருதம்கர்ம சுபாசுபம்.

இதுபோல் சுலோகத்தை பூர்த்தியாய் எழுதிவிட்டு அந்த மணி
கேதனைப்பார்த்து அய்யா! நீங்கள் நிதமும் என்மனைக்கு வருவீரென
சொல்லி அவருக்கு அனுகூலமான மொழிகளைபோதித்து அங்கிருக்
கப்பட்ட தடாகத்தில் ஸ்தானஞ்செய்து தன் மனைக்குச்சென்றாள். இப்
படிச் சொன்னவுடனே பொழுதுபோகுஞ் சமயமாச்சுது. அப்போது
வேடர்கள் ஐயா! இந்த க்ஷேத்திரப்பிரபாவம் சொல்லவேண்டுமென்று
பிரம்மானந்த யோகியைக்கேட்க, அவர் சொல்லத் தொடங்கினர்.

சித்தமொன்றாய் நிருத்தி கேட்பீர், இந்த ஸ்தலத்தை காசிதென்
பாகமென்றுசொல்லுவார். இங்குமலைமீதிருக்கும் நாரசிங்கசுவாமியை
வராஹா சுவாமியை, சேவித்தவர்களுக்கு சகல சம்பத் அனுகூல
மாகும்.

இங்கு தூர்வாசன்வருக, அம்பரிஷி மகாவேந்தன் கவனிக்காதப்
படியால் தூர்வாசன்சாபமிட இந்தமகாராஜன் இங்குவொரு தடாகத்
தை யுண்டுப்பண்ணி அதில் தவஞ்செய்து சாபவிமுர்த்தனானன். இந்த
தீர்த்தத்தில் இப்போது மந்திரபுணர்ச்சன செய்பவர்களுக்குபலிதமா
கும். இதுவுமன்றி, இந்த தீர்த்தம் பாதாளலோகத்தில் போகவழியெ
ன்னும் பெயருடன் பிரகாசிக்கிறது. இதற்கு சமீபத்திலிருக்கும் நந்தி
கிராமத்தை அம்பரிஷி மகாவேந்தன் வசித்து இராஜ்பபாலனம் செய்
துக்கொண்டிருந்தான். இங்கிருக்கும் சிந்துராஜா பர்வதத்தில் த்ரே
தாயுகத்தில் தபங்கள்செய்த சூத்திரனை ஸ்ரீராமர் சம்மரித்து அவன்
யபிஷ்டப் பிரகாரமாய் அவனை லிங்கமாய் செய்ததார்தவிர ஸ்ரீராமர்

சீதாலக்ஷ்மண அனுமந்தனுடன் சேவைதந்து சகல ஜனங்களுடைய்
பாபத்தை தீர்க்குரு ரென்றுச்சொல்லி, எல்லோரும் சயனித்தார்.
மறுதினம் உதயத்திலெழுந்து நித்திய க்ருத்யங்களை தீர்த்துக்கொண்
டு பிரயாணமடைந்துப்போகையில், பிரமானந்தயோகியைவேடர்பார்த்
து சுவாமீ மிகுதி கதைதனைச் சொல்லென்றுகேட்க சொல்லத்தொடர்
ந்தார்.

# மூன்றும் மஜிலிக்கதை.

## கர்மானுஷ்டானம்.

அதன்பிறகு, மணிகேது சந்தோஷமடைந்து எப்போதும்போ
லாகவே பிச்சையெடுத்து சம்பாதித்த அன்னத்தை புசித்து பாடசா
லைபடைந்து அங்கு வித்யாப்பியாசம் கற்றுக்கொண்டிருந்தான். இப்
படிருக்க மறுதினம் வேந்தன் புதல்வியுடைய சேவைக்காரமற்றமூவ
ராகிய பெண்மணிகள்போக, இராத்திரிநடந்த சங்கதிகளைச்சொல்ல
அந்தவேந்தன் புதல்வி 'ருணானுபந்த ரூபேண பசுபத்னி சுதாலயா'
என்னும் மொழிபோல் நமக்கு ருணானுபந்தம் எங்கையோ அங்குதா
ன் தெய்வம் சேர்ந்தது. என்று இன்னமொரு உபாயஞ் சொல்லு
கிறேன் கேட்பீர். இப்போது அவருக்கு நூருவராகன் தருகுறேன்.
அதை அவருக்குக்கொடுப்பீர். இனி, பிச்சையெடுப்பதைவிட்டு சுக
முடன் இருக்கச்சொல்வீர், நமக்குச்சொல்லாமல் எங்கும் போகலா
காதென்று சொல்லும், என்றுசொல்லி சவுக்காரிபுதல்விவசம் கொஞ்
சம் திரவ்யங்கொடுக்க அதைப் பெற்றுக்கொண்டு தன் மனைக்குவந்து
மணிகேதனை ரகஸ்யமாக வரவழித்து அந்த தனம்கொடுத்து இது
முதல் பிச்சையெடுக்க போகலாகாது. தினராத்திரியில் என்மனைக்கு
வந்து போகுவீரென்றுச் சொல்லியனுப்ப, அவ்விதமாகவே சிலதினங்
கள் நடந்தார்.

இங்கு மந்திரிபுதல்வனாகிய சோமதத்தன் புரப்பாவ்யமண்டபத்தில்
சேனாபதியுடைய புதல்வி வராதிருப்பதைப்பற்றி சிந்தையடைந்து,
ஸ்நானமடத்திற்குச்செல்ல அங்கு வர்த்தகன்புதல்வி வாராதிருப்பதை
பற்றி சிந்தாக்கிராந்தனாய், "அன்ருதம் சாஹசம்மாயா மூர்கத்வம் சலசித்த
தாம், அசௌசம் நிர்தயத்வம்ச ஸ்த்ரீணாம்ஜன்மஸ்வ பாவஜா" என்பது
போல், ஸ்த்ரீகளை நம்பலாகாது, அவர்களை நம்பி நானிவ்வளவு அபல



மடைந்தேன். இராத்திரிகாலத்தில் அந்தப்புரத்தைவிட்டு நித்திரைக்
கெட்டு பேயாசை யடைந்துவந்ததற்காய் இத்தனை கஷ்டப்படலாகி
னேன் என துக்கித்து, இதற்குள் தன்மனதை தேற்றிக்கொண்டு
கோபமடைந்து ஆகட்டும், என்னை இவ்விதமாய் மோசஞ்செய்த அந்த
சண்டாளரை கூடாமல் போவேனேயென்று எண்ணமிட்டுக்கொண்டு
தன் அந்தப்புரமடைந்து சயனிக்கும் சமயத்தில், ஆ! ஆ!! தெய்வ
யத்தினமில்லாமல் போச்சுதேயென்று சொல்லிக்கொண்டிருந்தான்.

இப்படிருக்க வேந்தன் புதல்விக்கு விவாகசமயம் நேர்ந்ததென்று
வேந்தன் தன் மந்திரியையழைத்து புதல்விக்கு தகுந்தபுருடனைபாரெ
ன்றுச்சொல்ல இந்தசங்கதி வேந்தன் புதல்வியறிந்துதனதுதோழரான
மூன்று மாதரையும் வரவழைத்து அவருடன் சொல்லத்தொடர்ந்தாள்.
ஓ மாதர்களே! நான் சொல்வது நீங்கள் கவனிக்கவேண்டும்! எனக்கி
ப்போ விவாகஞ்செய்ய எத்தனிக்குறார், அதற்கு சம்மதமடைந்து
விவாகஞ் செய்துக்கொண்டால் இப்போது நாம் ஆசித்தது விரதமா
கும், நாம் இதுவரையில் சேர்ந்த புருஷனுக்கு கொடுத்து விவாகம்
முடிப்பீரென்றாள், அவர் சம்மதப்படமாட்டார், நடந்தவிஸ்தாரத்தை
அவருக்கு சொன்னோமானால் சோரத்வம் செய்தீரா, என்று தண்டிப்
பதை விட இனி என்னசெய்வாரோ இதற்கு ஏதுமுபாயம் தோன்ற
வில்லை, ஆனால் எனக்கொன்று தோனுகிறது. அதென்னவென்றால்:—
நாம் நால்வரும் அவரையே வரித்தால் தோஷமனுகாது, நமது தலை
யெழுத்து சரியாயிருந்தால் அவரே இராஜபுதல்வனாயிருக்கலாகாதா?
தலையில் எழுதினவிதிபோல் நடக்காமல் முடிவாகாது இதற்கு உங்
கள் மனம் கிலேசமடையலாகாது. நாம் ஜன்மாந்திரத்தில் செய்துக்
கொண்ட பலாபலன்களை அனுசரித்து இக்காலத்தில் லபித்த
சுகதுக்கத்தை இந்த ஜன்மத்தில் அனுபவிக்காமல் தீராது யென்று
வேந்தன் புதல்வி சொல்ல இதைக்கேட்ட மூவரும் குணவதியபிப்பிரா
யத்திற்கிசைந்து, நீ சொன்னதெல்லாம் சரிதான், ஆனால் தாய்தந்தை
மார் சம்மதிக்கமாட்டாரே? இதற்கு உபாயமென்னவென்று கேட்க
அந்த சாவுக்காரி புத்திரியான சங்கரியைப்பார்த்து அம்மா? அவரை
அழைத்துக்கொண்டு நாம் தேசாந்தரம் போவதேநலம் இதற்கு எப்
படி செய்வோமானால் அந்த பிராமணன் நித்தியம் உனது மனைக்கு
வந்துக் கொண்டிருக்கிறாரல்லாவா? நீயவருடன் நாங்கள் நால்வரும்
உன்னையே விவாகஞ் செய்துக்கொள்ள எண்ணமிட்டோம். அந்தக்கா
ரியமிங்கு நடக்காது தேசாந்தரமடைந்து தானாகும், ஆகையால்நாளை

யதினம் பௌர்னமிக்கு வனவுல்லாசம் பார்க்க நாங்கள் நதிதீரத்திலி
ருக்கும் வனத்திற்கு அருகில் போகிறோம் அங்கு பிரவாகம் கடக்க
வேண்டிவரும் படவுதன்னில் நாங்களைந்துபேர் மாதர்கள் அமர்ந்திரு
ப்போம். புருடர் படவுதள்ளலாகாது பெண்பாவைகளே தள்ளவேண்
டுமென்று சொல்லுகிறோம். அப்பொழுது படவுதள்ள பெண்களை
தேடி வேலைக்கார் வருவார் அந்தச் சமயத்தில் அவருக்கு பெண்வே
டம் தரித்து அங்கிருக்கச் சொல்லும் ஆனால் அவரிப்போதே தீக்ஷா
னுசாரியா யிருக்கிறார், இதுசமமென்று இதுபோல் செய்துக்கொண்டு
இருக்கும்படி சொல்லு அதின்பிறகு முந்தி சங்கதியெல்லாம் சொல்
லுகிறேன் என்ச்சொல்ல இதுபோல் சங்கரி இந்த மொழிகளெல்லாம்
அந்த மணிகேதனுக்குச் சொல்ல அவர் சந்தோஷ சித்தனாய் இருந்
தான். இப்படி சிலதினம் சென்ற பிறகு வேந்தன் புதல்வி சொல்லி
யனுப்ப அதுபோல் மணிகேது ஸ்திரீ வேடந்தரித்து அந்த நதியரு
கில் சென்று வேஷ்டி தோய்த்துக் கொண்டிருந்தான்.

இப்படி அந்த நாலு கன்னிகாமணிகள் வேண்டிய ஆபரணங்
கள் தரித்துக்கொண்டு நல்ல வஸ்திரங்களை உடுத்திக்கொண்டு இஷ்ட
தாசி ஜனத்துடன்கூடி கானகம்பார்க்க வேண்டியவரவர் தாய்தந்தை
மாரிடம் செல்வுயடைந்து நதிதீரத்திற்கு வந்தார் இந்த வேந்தன் புத
ல்வியை காப்பாற்றுவதற்காய் ஆஸ்தான சேகுவரை சிலதுபேரை யனு
ப்பினர் வேந்தன் புதல்வி தனக்கு பிரியசிநேகிதராகிய தாசிகளை நிறு
த்திக்கொண்டு மற்றுப்பேரை முந்தி அந்தக்கரைக்கு போகும்படி
திட்டஞ்செய்து அனுப்பினள். வேந்தன்புதல்வியும் மற்றநால்வரும்
நால்பேர் தோழிகளும் நின்றுவிட்டார். வேந்தன் புதல்வி
தனது சேகுவரை அழைத்து நாங்களெல்லோரும் பெண்பாவைகள்
எங்கள் படவு புருடர் நடத்தலாகாது ஆகையால் எங்கள்படவை தள்
ளுவதற்கு யாராகிலும் பெண்களிருந்தால் அழைத்து வரும்படி திட்
டஞ்செய்ய அதுபோல் காவலர் சமீபத்தில் நதிக்கரைதன்னில் வஸ்
திரம் தோய்த்துக் கொண்டிருந்த மாதரைக்கண்டு அம்மா? உங்களில்
ஆருக்காகிலும் படவுதள்ளத்தெரியுமா, என்றுகேட்டார். அப்போது
அங்கு ஸ்திரீவேஷந்தரித்து துணிகளை தோய்த்துக் கொண்டிருந்த
மணிகேதன் ஐயா நான் படவுதள்ளுவேன் என்றுச்சொல்ல அந்த
மொழியை வேந்தன் புதல்விகேட்டு காவுக்கார புதல்வியை பார்த்து
நமது பிரியன் இவர்தானையென கண் சைகைதன்னில் கேட்ட மாத்
திரத்தில் அம்மாது பதில் கண்சைகை செய்தாள் பிறகு அந்தக்காவ



லர் மணிகேதனைதமது எஜமானியாகிய வேந்தன்புதல்வியிடம் அழை
த்து வருக அம்மாது ஸ்திரீ ரூபமாயிருந் தவரைக்கண்டு அம்மா!
நீபடவை செவ்வையாய் தள்ளுவாயா வெகுஜாக்கிரதையோடு நடத்த
வேண்டும், இல்லாமல் நீ பிரவாகமத்தியில் நலமாயிருக்கும் விடத்தில்
எங்களை எரக்கிவிட உம்மால் சாத்தியப்படுமாயென்றுகேட்டு எங்களை
இந்த வெள்ளத்தில் விடப்போகிறாய் என்றுச்சொல்ல இம்மொழிகே
ட்ட மணிகேது யூகித்து,வேந்தப்புதல்வனா யிருப்பதால் இராஜபுதல்வி
சொன்ன மொழிகளில் அர்த்தபாவ்யம் அறிந்துக்கொண்டு படவை
நடத்த ஆரம்பித்தார். வேந்தன்புதல்வி மணிகேதன் படவு நடத்துஞ்
சமயத்தில் அவன் லக்ஷணத்தைப் பார்த்து இவர்வேந்தன் புதல்வனே
யன்றி ஒருக்காலும் பிராமணாகமாட்டாரென்று தனக்குள் தானே சந்
தோஷமேலிட்டு இருந்தாள். பிறகு மணிகேதன் படவை மெதுவாய்
நடந்துக் கொண்டிருந்து அதிவேகமாய் பிரவாகமத்தியில் படவை
கொண்டுப்போய் அப்போது வேந்தன்புதல்விமுகம்பார்க்க அப்பாலா
மணி கண்சைகை செய்தாள். அதைக்கண்டு மணிகேதன் படவுதள்
ளும் ஆயுதத்தை அந்த வெள்ளத்தில் போட்டுவிட்டு படவுதன்னில்
விசித்திரமாய் குதித்து இராஜபுத்திரியருகில் யமர்ந்தான். படவுவெள்
ளத்தில் அடித்துக்கொண்டு போகுதென்று சொல்லியவுடனே சாயங்
திரகாலமாகவே பிரம்மானந்தயோகி கதையை நிறுத்தி சமீபத்திலிரு
க்கும் நர்மதாநதிதீரத்தில் அமரகண்டகமென்னும் ஸ்தலத்தில் பிர
வேசித்து ஸ்தான சந்தியாநங்களை முடித்துக்கொண்டு போஜனமரி
ந்து சயனிக்கும் சமயத்தில் வேடர்கள் இந்த ஸ்தலமகிமை சொல்லெ
ன்று கேட்டார். யோகியும் சொல்லத்தொடர்ந்தார்.

துருவமகாவேந்தன் மகா விஷ்ணுவைநோக்கி யாகஞ்செய்யுங்
காலத்தில் அந்த யாகத்திற்கு பிரம்மருத்திராதி தேவதைகளும் வசி
ஷ்டாதி மகாரிஷிகளும் வந்தார். அப்போது ஜலமானது துர்லபமாய்
அகப்படாமல் இருப்பதால் பிரம்மா பரமசிவத்தைக்கோரி தவஞ்செ
ய்து நிற்க பரமசிவன் பிரத்தியக்ஷமாய் தேவரைக்கண்டு உங்களுக்கு
என்னவரம் வேண்டுமென்று கேட்க தேவதைகள் சொல்லத்தொடங்
கினர். சுவாமீ! இந்தஸ்தலத்தில் எங்கும் நதிகள் கிடையாது. ஆகை
யால் இங்குநதியை உற்பத்திச்செய்து அற்புதமாய் விளங்கும்படி நிய
மிக்கவேண்டுமென்றுச்சொல்ல சங்கரமூர்த்தி அதுபோல் தன்னுடைய
பாதி திரேகத்தை பிரவயிக்க செய்தார் ஆகையால் இது புருஷநதி
என்றுச் சொல்லப்படும். இந்த நர்மதைதன்னில் சிலைகளெல்லாம் லிங்க

மாய் சகலமான தேவதைகளால் பூஜிக்கப்படும், இதுவுமல்லாமல் மனிதர் எலும்புகளிதில் போட்டமாத்திரத்தில் சிலைகளாகும். இந்த அமரகண்டக ஸ்தலமே நர்மதாநதிக்கு யுத்பத்திஸ்தானமாகும் இதுமிகவும் பிரசித்தமாக யிருக்கிறதென்றுச் சொல்லக்கேட்டு சந்தோஷித்தார் பிறகு எல்லோரும் நித்திரையடைந்து மறுநாள் உதயமானவுடன் எழுந்து ஸ்தானபோஜனங்கள் தீர்த்துக்கொண்டு பிரயாணமாகும் சமயத்தில் வேடர்கள் பிரம்மானந்த யோகியைப்பார்த்து நடுயாற்றில் அடித்துக்கொண்டு போனவர் சங்கதி எப்படியோ அதைசொல்லுமென்று கேட்க பிரம்மானந்தயோகி சொல்லத்தொடங்கினர்.

---

# நான்காம் மஜிலிக்கதை.

## பதிவிரதைமகத்துவம்.

ஓ வேடரே! கேட்பீர் அந்தப்படவானது வெள்ளத்தில் அடித்துக்கொண்டு வெகுதூரம் சென்று மறைந்தது அதை மடக்குவதாய் நதிக்கரைதன்னிலிருந்த சகாயமாய் வந்த பரிஜனங்கள் யெவ்வளவு சாமார்த்தியம் செய்தாலும் கிட்டாதபடியால் இந்த சங்கதி வேந்தனுக்கு அறிக்கை செய்ய அவர் அதிக பிரயாசைப்பட்டு தேடிப்பார்த்தும் அகப்படாமல் போனதுப்பற்றி துக்கித்து அந்த மாதர்கள் தாய் தந்தைகள் அவரவர் குழந்தைகள் ஆற்றில் கலந்து போனாரென்று விசனமடைந்து அவரவர் வீடடைந்து சோகமாயிருந்துவிட்டார்.

இங்கு அந்த படவுதன்னிலிருந்தவர் வெகுதூரமடைந்து ஓர் கரையடைந்தார். மணிகேதன் கரைக்குவந்து உபாயமாய் அப்படவுதன்னிலிருப்பவரை எரக்கிக்கொண்டு சூரியன் அஸ்தமிக்கமுந்தி ஒரு கிராமமடைந்து போஜனம் தீர்த்துக்கொண்டு அந்த இராத்திரி அங்கு இருந்து மறுநாள் புறப்பட்டு வெகுதூரம் நடந்து யொருகிராமம்சேர்ந்து அங்கு பரோபகாரி யென்னும் பூசுரன் வீடடைந்தார் அந்தவேதியன் "பரோபகாரார்த்த மிதம்சரீரம்" என்னும் பழமொழி யனுசரித்து வெகுநாளாக பிறருக்கு உபகாரம் செய்யும் குணமடைந்தவனாய் இருப்பதால் அவருக்கு வசிக்க ஸ்தலம்கொடுத்து அதிக பிரியத்துடன் ஆதரிக்க அவர் சமுசாரத்திற்குவேண்டிய பதார்த்தங்களை விப்பிரவன்



மூலமாய் பெற்றுக்கொண்டு அவ்வேதியனை தன்வசம் செய்துக்கொண்டு சுகமாயிருந்தார். இப்படிருக்க ஒரு சமயத்தில் மணிகேதன் போஜனங்களை தீர்த்துக்கொண்டு நாலுமாதருடன் கூடி வினோதமாய் சரசசல்லாபங்கள் ஆடிக்கொண்டு தான் பிறந்ததுமுதல் இன்னாட்டிற்கு வந்தது வரைக்கும் சொல்லி உங்களுங்களுடைய சரித்திரத்தை நான் கேட்டு சந்தோஷமடைய வேண்டியது ஆகையால் தங்கள் சரித்திரம் சொல்லுங்களென்று கேட்க வேந்தன் புதல்வியான குணவதி அந்த நாலுமாதர்கள் பிறந்தது முதற்கொண்டு அவர் சவிஸ்தாரம் சொல்லி பிறகு நாங்கள் நால்வரும் மந்திரி புதல்வனோடு சின்ன வயதில் ஓர்விடத்தில் வித்யாப்யாசம் செய்துக்கொண்டு அந்த சிறுவயதில் முந்தி வருவது தெரியாமல் அவர் கேட்ட வினவுக்கு பிரமாணமூலமாக நிச்சயித்தோம், அந்த பிரமானம் தீர்வதற்காய் நாங்கள் நான்குபேரும் நாலுஸ்தலங்களை ஏற்படுத்தி அந்தந்த விடத்திற்கு அந்தந்த காலத்தில் எங்களை சந்திக்கும் பொருட்டு நியமித்துவருக்கு அறிக்கை செய்தோம், அவர் அவ்விடங்களில், வாராதிருக்க ஏதுயசந்தர்ப முண்டாச்சுதோ நாங்களறியோம் உமக்கும் யெங்களுக்கும் ருணானுபந்த மிருந்தபடியால் பகவான் உம்மை அந்தகாலத்திற்கு சரியாய் எங்களுக்கு லபிக்கச்செய்தார். உங்களுடைய சவிஸ்தாரம் கேட்ட மாத்திரத்தில் எங்களுக்கு ஆனந்தமடையலானோம் யென்று சொல்ல மணிகேதன் இம்மாதரைப் பார்த்து ஓ எனதுபிரியசகிமாரே நீங்கள் செய்துக்கொண்ட சத்தியம் தப்பினதற்காய் உங்களுக்கு தோஷம் லபிக்காதா? என்றுச்சொல்ல, குணவதி சொல்லத்தொடர்ந்தாள். கேட்டீரோ நாயகா அந்ததோஷம் எங்களையணுகாது எங்களுடைய சத்தியம் தீர்க்கவேண்டிப் பொருட்டே நாங்கள் போனோம். அவருக்கு அது லபிக்கிதாததைப்பற்றி நாங்கள் ஏதுசெய்வோம்? இந்தசந்தர்பத்துக்கு முந்தி நடந்த கதையொன்று சொல்லுகிறேன் கேட்பீர் என்று சொல்லத்தொடர்ந்தாள்.

### (குணவதி வேந்தனுக்கு துருஷ்டாந்தமான கதைசொல்வது.)

ஓ மனோநாயகா! கேட்பீர் தர்மசாரூபனான வேதியன் ஒருவன், வேதாத்ய சம்பன்னனாய் பகவன் பக்தனாய் அநேக சிஷியமார்களுக்கு வித்தை கற்பித்துக்கொண்டு காலம் கழித்துக் கொண்டிருந்தான். இப்படிருக்க அவனுக்கு தர்மதேவதையென்னும் பெண்புதல்வி ஜனித்தாள். அந்த பூசுரன் தனக்கு அநேக தினமாக சந்தான மில்லாமல் இருந்தபடியால் அந்தப் பெண்குழந்தைதனை வெகு உன்னிதமாக.

வளர்த்துக்கொண்டு தன் சிஷியருடன் தன் புதல்விக்கும் வித்தை கற்
பித்துக்கொண்டு சகல வித்யார்பிரவீணமாய் செய்தார். சுபுத்
தியென்னும் ஒரு சூத்திரபாலகனும், இந்த பாலிகாமணியும் எப்போ
தும் யோர்விடத்தில் அமர்ந்து படித்து யேகமனதாய் விளையாடிக்
கொண்டிருந்தார். இப்படிருக்க ஒருநாள் அந்த சூத்திரபாலகன் விப்
பிரவன் புதல்வியை பார்த்து ஓ மனமோகன உல்லாசமடைந்த தர்ம
தேவதா! நாம் இப்போது அதிக நேசமாயிருக்குறோம் உன்னைவிவாக
மாடவேண்டி யென்மனம் சம்பூர்ணமாய் எண்ணமிட்டிருக்கிறது ஆனு
லும் மதபேதமானதால் உமது தாய் தந்தையெனக்கு தந்து விவாகம்
செய்து வைக்கமாட்டார். அந்த விஷயத்தை நாம் ஆலோசனை செய்
தும் நிப்பிரயோஜனமாகும். உன்னை யாருக்காகிலும் கொடுத்து கலி
யாணம் செய்தபோதிலும் பெரிதல்ல நீ நன்மை யறிந்தபிறகு உன்னை
கர்பாதானஞ் செய்துக்கொடுப்பாரல்லவா? அந்தச்சமயத்தில் உன்பதி
யுடன் கலக்காதமுந்தி யென்னுடன் சேருவாயாக! என்று கேட்க
இந்த பெண்பாவை அறியாமல் அப்படியே ஆகட்டுமென்று பூமி ஆகா
சத்தையும் சாக்ஷியிட்டு சொன்னுள்.

இப்படி சிலநாள் சென்றபிறகு அந்த பெண்பாவை தாயான
வள் புதல்விக்கு நன்மை அறியுங்காலம் நேரிட்டதென்று அறிந்து பச
ங்களுடன் சேர்க்கவொட்டாமல் வைத்துக் கொண்டிருந்து அந்தபெ
ண்பாவைக்கு விவாகஞ்செய்து மருமகனை தமது வீட்டிலே வைத்துக்
கொண்டு போஷித்து வந்தார். இப்படிருக்க சிலதினத்திற்குள் அப்பு
தல்வி புஷ்பவதி ஆகிவிட்டாள். பதினாறும் தினத்தில் சாந்திமுகூர்த்
தம் செய்ய நிச்சயித்து சாஸ்திரானுசாரமாய் ஓமம் முதலானதும் நட
த்தி அந்த இராத்திரி பதி சதியை ஏகாந்தஸ்தலத்தில் சயனகிரஹத்
தில் விட்டு அவரவர் நித்திரை யடைந்தார். அந்தச்சமயத்தில் அப்பு
தல்வி பால்யத்தில் தான் செய்துக்கொடுத்த வாக்குதத்தத்தை நினைந்
துக்கொண்டு பிரதிக்ய பங்கதோஷம் நேர்ந்துதல்லவா! என்று விச
னமுண்டாகி சோகமுகத்துடன் நிற்க புருஷனுடன் சொல்ல பயமடை
ந்து மனவியாகூல மடைந்திருக்க இதைக்கண்டபதி, ஓ எனது ஆசை
நாயகி! இப்படி சுபதினத்தில் நீ விசனமடைய காரணமேது? என்னு
டன் நிஜத்தைச் சொல்லும். நானதற்கு யோசித்துச் சொல்லுகிறேனே
ன்று சமாதானம் செய்துகேழ்க்க அதற்கு அம்மாது "பிரியனே,
எனது விசன காரியத்தை சொல்லுகிறேன் கேட்பீர், நானீர் பால்யத்
தில் விவேக யீனத்வமடைந்து யான் செய்துக்கொடுத்த உறுதியை



பற்றி துயரம்படுகிறேன். என்றுச்சொல்ல இதைக்கேட்ட தன் நாய
கன் சதுர்வேத பண்டிதனுகையால் சொன்னமொழிதப்பி நடப்பது
நீதியல்ல நீ சிந்திக்கவேண்டாம். உனது ஜன்மாந்திர பாபகர்மத்தில்
இதுபோலெழுதிய பிரம்மன் விதியாகுமாகையால் உனக்கு அப்படிக்
கொத்த புத்திலபித்து வாக்குக்கொடுத்தாய். ஆனுலும்பெரிதல்ல. நீ
இப்போதே அந்தவர்த்தகன் இடம்சென்று உனது வாக்குதத்தத்தை
பூர்த்திசெய்துக்கொண்டு வாவென்று சொன்னவுடன் அம்மாது எழு
ந்து பழிகாணங்களைப் பிரதக்ஷணம்செய்து நிற்க. இம்மாதைக்கண்டு
அவர் "கார்யஹா நிர்பவது" என்று ஆசீர்வதிக்க இதைக்கேட்டு அம்
மாது சந்தோஷமடைந்து பதிவிர்தாதர்மமிருக்குமாகில் தெய்வம் நம்
மை கார்க்குமென்று எண்ணமிட்டுக்கொண்டு அந்த இராத்திரி சுமார்
பனிரெண்டுமணிநேரத்தில் புறப்பட்டு அந்தவர்த்தகன் மனைத்தேடி
வரும்மார்க்கத்தில் ஒரு திருடன் எதிரில்வந்துமடக்கி அம்மாது தரி
த்துக்கொண்டிருந்த பூஷணமெல்லாங்கொடுத்துப்போவென்றுகனைத்
துக்கேட்க அதற்கு அம்மாது ஐயா! நானிப்போது ஒரு காரியமாய்
போயிக்கொண்டிருக்கிறேன், என்னை இந்தசமயத்தில் மடக்கவேண்
டாம்.

. இப்போது நான்செய்தவாக்குதத்தங் தீர்த்துக்கொள்வதற்காய்
போயிக்கொண்டிருக்கிறேன். ஆகையால், அலங்காரமில்லாமல் போக
லாகாது அவர்மனது சந்துஷ்டியடையாது. இப்போதவர் மனோபீஷ
டத்தை தீர்த்துவிட்டு மறுபடிவருஞ் சமயத்தில் உனது இச்சைப்போ
ல் என் பூஷனங்கொடுக்கிறேன், இதற்கு சந்தேகிக்கவேண்டாமென்று
சொல்லி அந்தசோரனை சமாதானம் படுத்திவிட்டு முந்தி நடக்கலா
னுள். இம்மாது சித்தத்தை பரீக்ஷிக்கவேண்டுமென்று தெய்வமே அம்
மார்க்கமாய் வியாக்கிரரூபமெடுத்து இருந்ததோ? இல்லாமற் யேதோ
அறிந்திடலாகாது அச்சமயத்தில் மகாதீரத்துடன் அம்மாதைமடக்கி
தின்ன உத்தேசித்தது, இதைக்கண்ட விப்ரவன் புதல்வி பயமடையா
மல்தனது கையை நீட்டி அந்தப்புலியைத்தடுத்து ஓ! புலிவேந்தனே,
நான் எனது சின்னவயதில் சினேகிதனுகிய சூத்திரபுதல்வனுக்குக்
கொடுத்த சத்தியத்தை தீர்க்கபோகுறேன்; நீ இப்போது என்னை
மடக்கினுல் சத்திய பங்கதோஷம் உன்னையடையும். நான் சீக்கிரமாய்
சென்று அவர்கோரிக்கை தீர்த்துவிட்டு மறுபடிவருஞ் சமயத்தில்
உனக்காகாரமாகுறேனென்றுச்சொல்ல. இதைக்கேட்டபுலி, அம்மா
நீ சொன்னதெல்லாம் சரிதான் காலமகிமை அனுசரித்து புலிவாயில்

தப்பித்துக்கொண்டுபோனவர் மறுபடியும் புலிவாயிக் ககப்படுவாரா? இதென்னமொழி, நானுன்னை நம்பலாகாது. எனக்கு பசி அதிகமாச்சுது. இனி சகிக்கமாட்டே னென்றுச்சொல்ல, அந்தப் பாலிகாரத்தினம் நான் சொன்னமொழி பிசக்கி நடக்கேன். "ஜாதஸ்யமரணம் த்ருவம்" என்னுமொழி அநுசரித்து எப்போதாகிலும், மரணம்விடாது. இப்போது சாவதற்கு பயமடையமாட்டேன். என்மீதுனக்கு நம்பிக்கை இல்லாமற்போனால் நீ இப்போதே தின்பாய். சத்தியபங்கதோஷம் உன்னைச் சுற்றுமென்றுச்சொல்லி, அந்தப் புலிவாயில், தன் தலைதனை நுழைக்க இதைக்கண்ட அந்தப்புலி ஐயோ! ஜென்மாந்தரத்தில் நான்செய்த கர்மத்தாலல்லவா! இந்த ஜென்மத்தில் வியாக்கிரமாய் பிறந்தேன். இந்த ஜென்மத்தில் பாபகர்மம்செய்வேனாகில் இனி வரும் ஜென்மம் எதுவாய் பிறப்பேனோ தெரியாது. நீ சென்று உனது காரியத்தை தீர்த்துக்கொண்டு வந்த பிறகு, தெய்வ சங்கல்பம் போல் முடியுமென்று செலவுதருக இதைக்கேட்டமாது விடைப்பெற்று நடந்து அச்சுந்திரனிருக்கும் வீட்டிற்குபோகுஞ் சமயத்தில், அங்கு காவலிருந்த பால்ய னொருவன் எவ்வர்ன மடைந்திருப்பதால், அந்தச்சமயம் ஒண்டியாய் வருகப்பட்ட அம்மாதைப்பார்த்து மதனவேதனையடைந்து எதிரில்வந்து ஓ! மாதே, நீயார்? இந்த இராக்காலத்தில் ஒண்டியாய் இப்படிவரக் காரணமேது, என்றுச்சொல்லி பலத்காரமாய் பிடித்திழுக்க, அப்புருடனைப்பார்த்து, ஐயா! நீ சேவகனாயிருந்து பிரம்மகுலமாதை பிடிக்கத் தகாது. மதாங்காரனாய் கெடவேண்டாம். என்னைச் சேர்ந்தமாத்திரத்தில், அனேகதோஷங்கள் உன்னைத்தொடரும். ஆனாலுமென்னை சேரக்கோரினீர், இது உனது தரித்திரயிம்சை நான் முதற்சம்போகம் தருகிறதாய் ஒரு வர்த்தகனுக்கு வாக்குக் கொடுத்திருந்தேன், அதை முடிப்பதாய் இத்தருணத்தில் என் பதி உத்திரவு அடைந்துபோயிக்கொண் டிருக்கிறேன், என்னை மடக்கவேண்டாம்.

நான் திரும்பிவரும்போது உனதிஷ்டம் தீர்க்குறேன். இதற்கு நீ சந்தேகிக்கவேண்டாம். உண்மையாய் நம்புமென்று அந்த காமாந்தகாரனை தைர்யப்படுத்தி அந்த சூத்திரன் வீட்டின் வாயலண்டை வந்து ஓ குருஹதக்ஷகனே! கதைவை திரப்பீர் உனக்கு நான் பால்யத்தில் கொடுத்த சத்தியத்தை நிரவேற்றிக்கொண்டு எனக்கு விடை தந்து அனுப்பும். என்று கெட்டியாய் கூவிச்சொல்லி தன் ஸ்திரியுடன் ஆனந்தத்திலிருந்த வர்த்தகன் இந்த சப்தங்கேட்டு பயங்கிராந்தனாய் தலைவாயலில்வந்து மனைவியை விளக்கு எடுத்துக்கொண்டு வரும்படிச்



சொல்ல அம்மாது அதுபோல் கொண்டுவருக கதவை திறந்துபார்க்க பால்யத்தில்-தான் அம்மாதால் அடைந்த சத்தியத்தை மறந்தவனாய் அம்மா! இந்த இராக்காலத்தில் நீ ஒண்டியாய் வரக்காரணமேது? உனது முகம்பார்க்க ஏதோ ஒரு சங்கடம் லபித்ததா யிருக்கிறது. அதை என்னுடன் சொன்னால் அது எப்படிக்கொற்ற சங்கடமானாலும் தீர்க்கப்பட்டவன் என்றுச்சொல்ல இதைக்கேட்ட அம்மாது ஓ சூத்திர சிரேஷ்டனே! நாமிருவரும் பால்யத்தில் படிக்குஞ் சமயத்தில் நீ என்னாலடைந்த சத்தியம் தீர்க்க இன்றையதினம் எனக்கு நிஷேக முகூர்த்தம் ஆகையால் முதலில் உனது இச்சையை தீர்த்து விட்டு பிறகு பதியை சந்தோஷப்பட செய்வேன். நீர் ஆலஸ்யம் செய்யாமற் என்னுடன் சுகித்து செலவு தந்தனுப்புமென்றுச் சொல்ல இதைக்கேட்ட அந்த வர்த்தகன் அம்மா! பிரபஞ்சத்தில்புருஷன் அக்கினிசாக்ஷியாய் கலியாணஞ்செய்த சதியை தவிர மற்றவளை தாயென்று நினைக்க வேண்டும் நீயும் என்னை பெற்றதாயிக்காகிலும் மேலான தாயாகும். நீ பிரம்மகுலத்தில்பிறந்தமாது இதுவுமன்றி என் குருவுபுதல்வியானீர் உன்னுடன் போகிக்க எனக்கு பாபம் சம்பவிக்கும். ஆகையால் ரௌரவாதி நரகத்தை யடைந்து இருக்கமாட்டேன். இதுவுமன்றி நீயிந்த தினத்தில் எப்படி இங்குவந்தாய்! திருட்டுத்தனமாக வந்தாயா? இது எல்லாம் சவிஸ்தாரமாய் சொல்லென்று கேட்க அம்மாது சொல்லத் தொடங்கினாள்.

ஐயா! நான் திருட்டுத்தனமாக வந்தவளல்ல எனது பதியுடன் அந்தரங்கத்திலிருக்க அச்சமயத்தில் நான் எனது சின்னவயதுடைய சவிஸ்தாரம் சொல்ல அவர் இதைக்கேட்டு சத்தியம் தப்பினால் பாபம் சம்பவிக்கும், அதை தீர்த்து வரும்படி திட்டஞ்செய்ய அதுபோல் உன்னருகில் வருகலாகினேன் எனச்சொல்ல இதைக்கேட்ட அவர் மகா ஆச்சரியமடைந்து அந்தப்பதிக்கு பிரதக்ஷண பூர்வீகமாய் நமஸ்கரித்து அம்மாதை தனது அந்தப்புரத்துக்கு அழைத்துக்கொண்டு போய் ரத்தினகசித பீடத்தில் அமரும்படிச்செய்து கெந்த புஷ்பாக்ஷதைகளால் பூஜித்து தனதுபாரியாள் அஸ்தத்தால் குங்குமாதி மங்கள திரவியங்கள் கொடுக்கும்படி செய்து அந்த இராத்திரி அடுத்த வீதிக்குச்சென்று நித்திரித்துக் கொண்டிருந்த வர்த்தகரை எழுப்பி ஒரு கனகமயமான ரவிக்கையும் ரத்தினகசிதமான சேலையும்கொண்டுவந்து அந்த மாதுக்கு தனது சதி கையால் கொடுக்கச்செய்து அம்மா! நீ எனக்குத்தந்த வாக்குதத்தம் சென்றுவிட்டது வியபசாரம் செய்யப்ப

ட்டவர் சோரத்வம் செய்யார். சகலதானம் செய்வதுபோல் பதிதயை
தானம் செய்யப்பட்டவரை சேவையடைந்த மாத்திரத்தில் சகல்மான
கஷ்டங்கள் தொலைந்துபோகும் ஆகையால் கன்யாதானத்துக்காகி
லும் மேலானதானம் கிடையாது நீங்கள். சதிபுருஷரும் சத்தியமான
வர். நீ எனது மனைக்கு வந்தமாத்திரத்தில் உன் பாதம்படவே என்
வீட்டின் தரித்திரம் தொலைந்துப் போச்சுது. என் ஜன்மம்சாபல்யமா
ச்சுது நீ என்னைப்பெற்ற தாயார் போய்வரும்படி செலவுதருக அம்
மாது சந்தோஷமடைந்து அவரை அநேக விதமாய் ஆசீர்வதித்து
எனது பதிவிரதாதர்மம் பூர்த்தியாச்சுது நான் கொடுத்த வாக்குதத்
தம் தீர்ந்து விட்டது என்றுச் சொல்லிக்கொண்டு அவ்விடம் விட்டு
புறப்பட்டு வருஞ்சமயத்தில் தலையாரியைக்கண்டு அய்யா! இதோயான்
வந்துவிட்டேன் உனது இஷ்டப்படி தீர்த்துக்கொள்வீரென்று சொன்
னமாத்திரத்தில் அத்தலையாரி வைராக்கியம் பூண்டு அம்மா! நான்
உன் மகிமை அறியாமல் மூடத்வமடைந்து கஷ்டம் கொடுத்தேன்.
அதை பொருத்து ரக்ஷிக்கக்கோருகிறேன். நான் சூத்திரஜன்மத்தில்
பிறந்தவன். நீர் பிரம்மகுலத்தில் பிறந்தவர். உத்தமகுணமுடைய நீ
என் தாயார் உன்னுடன் சேர்ந்தால் என்குலம் நாசமாகிபோய் விடும்.
உனது உண்மைவாக்கே போதுமானது நான் சந்தோஷமடைந்தேன்.
என்தோஷம் நிவாரணமாகும்படி ஆசீர்வதித்து செல்லுவீர் யென்று
வந்தனஞ்செய்ய அந்த பதிவிருத சிரோண்மணி சந்தோஷமடைந்து
உனது பாபமென்னும் காடானது எனது பதிவிருத தத்வமென்னும்
அக்கினியால் சுட்டெரிந்து விட்டேன். இனி நீதன்யனாகுவாய் இந்த
வைராக்கியம் உன் குலத்தாருக்குண்டாகி புத்திரமித்திர களத்திராதி
யுடன் சந்தோஷத்துடன் இருப்பாயென்று ஆசீர்வதித்து அங்கிருந்து
புறப்பட்டு புலிவேந்தனிடம் வந்து ஓ புலிராஜனே இதோயான் உனக்
காகாரமாய் வந்திருக்கிறேன்.

சீக்கிரத்தில் என்னை பக்ஷித்து சந்தோஷமடையும்படி சொன்ன
மாத்திரத்தில் புலியானது, இம்மொழியைக்கேட்டு அம்மா, எனது
குலவிருத்தியானது மரப்பிலிருந்து ஜீவங்களைக் கொன்றுதின்பது
தர்மம் அப்படிருக்க குதர்மத்தைவிட்டு சரணகெதியென் றடைந்த
வரை பக்ஷிப்பது அதர்மம்மல்லவா, நீ சீக்கிரம் உன்மனைக்குச்சென்று
உன் புருடனுடன் கலந்து சகலபோக பாக்கியங்களை அனுபவித்து
சந்தோஷ மடைகுவாயென்று சொன்னமாத்திரத்தில், அம்மாது புற
ப்பட்டு சோரனிடம்வந்து ஐயா! இதோயெனது பூஷணங்களை



கைக்கொள்வீரென ஆபரணமெல்லாம் கழட்டி சோரனிடம் தருக.
இதைக்கண்ட சோரன் அம்மா! நீ சத்தியம் பிசகாதமாது. எட்டு
வயதுமுதல் இத்தொழில் செய்து ஜீவித்துவந்தேன். இதுவரைக்
கும் உன்னைப்போல் மாதரையும் புருஷரையும் நானெப்போதும் பார்த்
ததுகிடையாது. நீ உத்தமபெண்ணாகும் உன்னை மனவியாகூலம்
அடையச்செய்தபடியால், நான் வம்சநாசனமாகுவேன். மோசயெண்
ணமாய் அபகரிப்பது. திருடருடைய தர்மம் நீயே கொடுக்கப்பட்ட
தனத்தை அபகரிப்பது. திருடப்பட்ட தர்மமல்ல, நீ தானஞ்செய்வ
தாய் எண்ணமிட்டாலும் நான் விப்பிரவனுமல்ல. இந்த ஆபரணமெல்
லாம் நீ தரித்துக்கொண்டு என்னை ஆசீர்வதித்து போவீரெனச்சொல்
லி தான் சம்பாதித்த பூஷணங்களை அம்மாதுக்கு தந்து இதையெல்
லாம் அணிந்தப்பிறகு, அந்தத்திருடன் அந்த ரூபவிலாசத்தைப்பார்த்
து, பரமானந்தமடைந்து இத்தேவி ஸ்ரீதேவியோ வேந்தர்க்கரசியோ
வாணியோ, வடகைலை இராணியோயென வர்ணித்து சாஷ்டாங்க
நமஸ்காரஞ்செய்து அம்மா! என் குலதெய்வமே, நீ மனைக்குச்சென்று
வருவாயென்று விடைச்சொல்ல, இதைக்கேட்ட அம்மாது, எனது
பதிசெய்ததர்மமல்லவா, இப்படி சம்பதைலபித்தது. எனது கஷ்டமெ
ல்லாம் நஷ்டமாச்சுது. தெய்வமானது பதிவிருத பெண்களை அனேக
மான கஷ்டங்களை அடையச்செய்து, அவர்களுடைய சித்தத்தைச்
சோதித்து பிறகு, அவரை ஆதரிப்பது அப்படிக்கொத்த தெய்வமான
ஸ்ரீ பிரணவத்துக்கு வோர் நமஸ்காரமென்றுச்சொல்லி அவ்விடத்தில்
இளமாபதியைக் கண்டதுபோல், மயக்கி வந்தனஞ்செய்து ஒரு நிமி
ஷம்வரைக்கும் தியானித்து, பெண்களுக்கு சகலாபரணம், சிரேகயல
ங்காரம், பதிவிர்ததர்மம், அழகாகுமென்று எண்ணமிட்டு அங்கிருந்
து புறப்பட்டு தன்புருஷன் இருக்குமிடம்வந்து அப்புருஷனுக்கு வலப்
பிர தக்ஷணமாய்வந்து நமஸ்கரித்து நிற்க, புருஷன்கண்டு ஆசீர்வதி
த்து, இதைக்கண்ட அம்மாது, நாயகாயெனது ஜென்மம் சாபல்ய
மாச்சுது. இதோ உமது பாதசேவைகாண வந்துவிட்டேனென்றுச்
சொல்ல, அப்பிராமணன் பரமானந்தமடைந்து ஆலிங்கனஞ்செய்து
முத்தமிட்டு, அம்மாது கரம்பிடித்து, மஞ்சத்தின் மீது, அமரும்படிச்
செய்து, ஓ நாயகியென்றழைத்து, நீ சென்றுவந்த சமாசாரத்தைச்
சொல்லும் நான் கேட்கவேண்டுமென்றுச்சொல்ல, இதைக்கேட்ட
அம்மாது ஓ பிராணநாயகா! சொல்லுகிறேன் கேட்பீரென்று தான்
போய்வந்த சங்கதிச்சொல்ல, இதைக்கேட்டு, விப்பிரவன் சந்தோஷ
மடைந்து அந்த இராத்திரி தன் நாயகனுடன்கூடி சகல சம்போகங்
களை அனுபவித்து சுகமாயிருந்தார்.

இதுபோல் குணவதி தன்னுடைய பிராண நாயகனாகிய மணிமேகனுக்குச்சொல்லி நாங்கள் அந்த மந்திரிப் புதல்வனுக்குக்கொடுத்த நிர்ணயவாக்கு பிசகாமல் நடக்க இது அவருக்கு லபிக்காமல் போச்சுது. எங்களுக்கும் உனக்கும் ருணானுபந்தமிருந்து பிரம்மவிதிப்படி முடிந்ததால் தெய்வமே, இப்படி சந்திக்கச்செய்தார். பிரம்மன்விதியே பெரிதன்று வேறொன்றுங் கிடையாது. இதற்கு த்ருஷ்டாந்தமாய் புராணத்திலிருக்கும் ஓர் கதைச்சொல்லுகிறேன் என்றுச்சொல்ல ஆரம்பித்தான். இப்படிச் சொல்வதர்க்குள்ளாக, சாயந்திரகாலம் சமீபித்தது பிரம்மானந்தயோகி கதை நிருத்த, அங்கு சமீபத்திலிருக்கும் காசிக்ஷேத்திரம் போய்ச்சேர்ந்து, ஜெபதபங்களை முடித்துக்கொண்டு புசித்து சயனிக்கவே வேடர்கள் மஹா சந்தோஷத்துடன் தான் எந்த ஸ்தலத்திற்குவருக நிச்சயித்தாரோ அந்த ஸ்தலத்திற்குவந்து சேர்ந்ததைப்பற்றி மனம்பூரித்து பிரம்மானந்த யோகியைப்பார்த்து சுவாமி! எங்கள் மனம் பூர்த்தியாச்சுது. இந்த காசிக்ஷேத்திர மகத்தியம் எங்களுக்கு சொல்லவேண்டுமென்று கேட்க, பிரம்மானந்த யோகி சந்தோஷித்து ஓ வேடரே! நாம் இந்த ஸ்தலத்தில் சிலதினம் வாசஞ்செய்ய போகுறோம். ஆகையால் நாளையதினம் முதற்கொண்டு நித்தியமும் கொஞ்சக்கொஞ்சமாய் சொல்லுகிறேன். இப்போதெனக்கு ஆயாசமாயிருப்பதால் இந்த இராத்திரி சுகமாய் நித்திரை செய்யலாமென்றுசொல்ல வேடரும் அதுபோல் சம்மதமடைந்து சயனித்தார். மறுநாள் உதயத்திற்கெழுந்து கெங்காநதிக்குச்சென்று எல்லோரும் ஸ்தானஞ்செய்து விஸ்வநாத சுவாமியை பூசைசெய்து ஆனந்தமாய் உட்காந்திருக்க, பிரம்மானந்தயோகி வேடருக்கு காசிக்ஷேத்திர மகிமைசொல்ல ஆரம்பித்தார்,

ஓ வேடரே! மனம்பூர்த்தியாய் கேட்பீர்:—இந்த க்ஷேத்திரத்துக்கு வாரணாசியென்றும் அவிமுக்த க்ஷேத்திரமென்றும் ஆனந்தவனமென்றும் ருத்திரவாசனென்றும் மகா ருத்திரபூமியென்றும் திருகண்டகவி இராஜிதமென்றும் கௌரிமுகமென்று பெயர்களுண்டு இந்த பூலோகத்திலுண்டான சகலமான தீர்த்தத்திற்கானாலும் இங்கு இருக்கப்பட்ட பாகீரதி. ஞானவாபி, மணிகர்ணிக இது அதிக சிரேஷ்டமானது, இதுவுமன்றி, இங்கு சக்ரதீர்த்தம் விமலோதக தீர்த்தம், பிந்துதீர்த்தம், முதலான அநேக தீர்த்தங்களிருக்கிறது இந்தக்ஷேத்திரத்தில் பிரகாசிக்கும் தேவர்களிலும் தீர்த்தத்திலும் முக்கியமானது என்னவென்றால்,



(சுலோகம்.)

விஸ்வேசம் மாதவம் டும்டும் தண்டபாணிம்ச பைரவம்
வந்தேகாசீம் குஹாம் கங்காபவாணி மணிகர்ணிகாம்:

விஸ்வநாதமூர்த்தி, மாதவமூர்த்தி, டும்டிகணபதி தண்டபாணீஸ்வரன், பைரவஸ்வாமி, குஹ, பவாணிதேவி கெங்கமணி கர்ணிக, என்பது.

இதுவுமன்றி இந்த ஸ்தலத்தில் முந்தி சக்ரதீர்த்தத்தில் பிறகு மணிகர்ணிகையில் அதன்பிறகு கெங்கையில் ஸ்தானஞ்செய்து மேல் சொன்ன தேவர்களுடைய சன்னிதிக்கு போகவேண்டும் அதன்பிறகு பஞ்சக்ரோக யாத்திரை செய்யவேண்டியது எப்படியென்றால்—முதற்தினத்தில் மணிகர்னியில் ஸ்தானஞ் செய்து கர்தமேஸ்வரத்திற்குச் சென்று கர்தமேஸ்வர சுவாமியை சேவித்து அன்றுதினம் அங்கிருந்து மறுதினம் பீரசண்டிபுரம் சென்று மூன்றும்தினம் அங்கிருந்து இராமேஸ்வரத்திற்குச் சென்று நாலாந்தினத்தில் கபிரதாரமடைந்து ஐந்தாம் தினத்தில் மணிகர்ணிகை சேரவேண்டும். ஒவ்வொரு ஸ்தலத்திலும் தீர்த்த ஸ்ராத்தாதிகள் செய்யவேண்டும். இந்த பஞ்சக்ரோக யாத்திரையால் திருலோக சம்சார பலிதமுண்டாகும் இதுவுமல்லாமல் சகலமான பாவங்கள் நிவர்த்தியாகும் இன்னம்.

(சுலோகம்.)

அயோத்தியா மதுராமாயா காசிகாஞ்சி அவந்திகா
புரீத்வாரவதீ சைவசப்தைதே மோக்ஷ தாயகா.

எப்படியென்றால் முக்திக்ஷேத்திரங்களெல்லாம் இந்த காசிதன்னிலிருக்கிறது இங்கிருக்கும் சங்கதுவாரத்தின் அருகில் துவாரகையும், பிந்துமாதவஸ்வாமி சன்னிதியருகில் காஞ்சீபுரியும், வருணநதி சமீபத்தில் மதுராபுரியும், இராமேஸ்வர சமீபத்தில் அயோத்தியாபுரியும் க்ருத்திராசேஸ்வர சுவாமி சன்னிதியருகில் அவந்திகாபுரியும், அசிநதி சமீபத்தில் மாயாபுரியும், பிரகாசித்துக் கொண்டிருக்கிறது சகல க்ஷேத்திரத்திர்க்காகிலும் இதுமகா யுக்த்தமாயிருக்கிறது.

இப்படிச்சொல்ல இதுகேட்டு வேடர் சந்தோஷித்து பிரம்மானந்த யோகியோடு சகல தீர்த்த ஸ்தானங்களும் சகலதேவத சேவையடைந்து அங்கிருந்து த்ருவேணி சங்கமம் ஸ்தானம் செய்வதற்காய்

புறப்பட்டார். அப்போது வேடர்கள் பிரம்மானந்தயோகியைக்கண்டு
சுவாமி! குணவதி மணிகேதனுக்கு பதிவிர்தையானபெண்களுக்குபங்
கம் கிடைக்காதென்று அபிப்பிராயத்தைச் சொல்லி இதை ஆகமாய்
கதை சொல்குறேன் என்றுசொன்னீரே அக்கதைதனை அடியேனுக்கு
சொல்ல வேண்டுமென்று கேட்க பிரம்மானந்தயோகி சந்தோஷ
மடைந்து சொல்லத் தொடங்கினர்.

---

# ஐந்தாம் மஜிலிக்கதை.

லலாடலிகிதம்

குணவதி மணிகேதனுக்கு திருஷ்டாந்தமாய் சொன்ன

## இரண்டாம் கதை.

---

பூர்வீகத்தில் இராவணன் லங்காபட்டணத்தை இராஜ்யபாரம்
செய்துக் கொண்டிருந்தான் அவர் ஈஸ்வரனை நோக்கி தவஞ்செய்ய
நிச்சயித்து கைலாசபதியை நோக்கி சமாதியோக நிஷ்டானுசாரியாய்
அகோரமான தபஞ்செய்ய அதற்கு ஈஸ்வரன் ஆனந்தமடைந்து பிரத்
தியக்ஷமாய் ஓ தசகண்டா! இனி உன் தபத்தை நிறுத்தும் உன
து தபத்திற்குமெச்சிவந்தேன் நீ கோரியபடி வரத்தைக்கேட்டுக்கொள்
ளென்றுசொல்ல அந்த இராக்ஷசன்கெங்காதரனை நமஸ்கரித்துதேவா!
தங்களுடைய அனுக்கிரஹத்தால் எனக்கிப்போதுபோகபாக்கியமிருக்
கிறது ஆனால் எனக்கு சமானமான இராக்ஷதர் கையிலும் எனக்கு
விரோதிகளாகிய தேவர்கள் கையிலும் அஷ்டதிக் பாலர்கையிலும்
இன்னும் இதரமானவர் கையிலும் மரணமில்லாதப்படி எல்லோரும்
எனக்கு பயப்படும்படி வரங்கொடுக்க வேண்டுமென்று சொல்ல அது
போல் பரமசிவன் வரங்கொடுத்து மறைந்துவிட்டார். அதுமுதற்கொ
ண்டு அதிக கெர்வமடைந்து எவர்களும் நிகரில்லாதப்படி அஷ்ட
திக் பாலரை ஜெயித்து, தேவரை சிறைப்பிடித்து எவரும் அவனு
க்கு எதிரில்லையென்று கெர்வமடைந்து மஹாதனத்தில் காலங்கழித்
துக் கொண்டிருந்தான். இப்படிருக்க ஒரு சமயத்தில் சந்தோஷசித்த
னாய் அலங்கரித்துக்கொண்டு கண்ணாடி எதிரில் நின்று தன் ரூபத்
தைப்பார்த்து வஸ்திரத்தை சரியாய் போட்டுக்கொண்டிருக்க இவன்
பின்பாகமாய் கமலாசன் நின்று இருப்பதைக்கண்டு நீயாரடா! எவ்வ



ளவு பயமில்லாமல் என் சமீபத்தில் நிற்க காரிய மேதென்று கேட்க
சமீபத்தில் நின்றுக்கொண்டிருந்த மந்திரி இராவணனைப் பார்த்து
ஐயா? இவர்தான் சிருஷ்டிகர்த்தான சதுர்முகபிரம்மா: இவர்சங்கல்
பானுசாரமாய் இந்த பிரபஞ்சம் நடக்கிறது, என்றுச்சொல்ல இதைக்
கேட்ட இராவணன் கோபமடைந்து இவனுடைய சங்கல்பானுசார
மாய் பிரபஞ்சம் நடக்கிறதா? அதை யான் சற்று பார்க்கிறேனென்றுச்
சொல்ல.

இதைக்கேட்ட பிரம்மா, ஓ மதாங்காரி! உனக்கு வரங்கொடுத்து
உன்னை கெர்வமென்கிற சமுத்திரத்தில் மூழ்கச்செய்த அந்த ஈஸ்வர
னும் என் சங்கல்பத்தை தீர்க்கமுடியாது. உன்னால் ஏது முடியுமெ
ன்றுச்சொல்ல. அதிக கோபம்பிறந்து காவலனையழைத்து அடாகாவ
லனே, நீ இராஜவீதியில் சென்று அங்கு போகப்பட்டமனிதரில் ஒரு
பாலகனை கொண்டுவரும்படி உத்திரவுசெய்ய. அக்காவலன் சென்று
ஒரு பாலகனைக்கொண்டுவந்து இராக்ஷதன் எதிரில்விட அந்த இரா
வணன் பிரம்மதேவனைப்பார்த்து ஓ! சாரதாபதி, இந்தப் பாலகனுக்கு
பெண்யெங்கு சேர்த்திருக்கிறாய்? இனி எத்தனைதினத்தில் இவனுக்கு
விவாகமாகும், சொல்லென்றுகேட்க. இதைக்கேட்ட கமலாசன் அடா
நிர்மூடா! இப்பாலகனுக்கு ஹிமலதப்பர்வதம்தென்பாகமாகியகாசிக்ஷே
த்திரத்தைச்சேர்ந்த கங்காதீரத்தில் இன்றைக்கு ஒன்பதாந்தினத்தின்
பகல் பனிரெண்டு மணிக்கு விவாகம் நடப்பதாய் நியமித்தேன் அந்த
தினம் விவாகம் ஆனபிறகு உனக்கு அறிக்கை செய்குறேன் என்றுச்
சொல்ல, இதைக்கேட்ட இராக்ஷசன்சிரித்து தன்மனதில் வேறொன்று
விதமாய் ஆலோசித்து அந்தப்பாலகனை ஒருபேழைதன்னில் போட்டு
தாளமிட்டு அந்தப்பெட்டிக்கு சீல்செய்து தன்னுடைய உக்கிராணத்
தில் பத்திரப்படுத்தினன். பிரம்மதேவன் சங்கல்பகாலம் சமீபிக்கவே,
இராவணன் தாயார் காசிக்குச்சென்று கங்காஸ்தானம் செய்து வருக
வேண்டுமென்று சந்தோஷ சித்தமடைந்து வேண்டிய பதார்த்தங்கள்
சேகரித்து ஒரு பெட்டிதன்னில் போட்டு பத்திரஞ்செய்து விட்டு தன்
புதல்வனுக்கு சொல்லி வரவேண்டுமென்று நிச்சயித்து அவன் படுத்
துக் கொண்டிருக்கும் அரைக்குச்சென்று அடாபுதல்வா! யான் காசி
யாத்திரைச் சென்று கங்கா ஸ்தானஞ்செய்து விசாலாக்ஷி சேவைய
டைந்து வருகுறேனென்றுச்சொல்ல இராவணன்பிரம்மாவுடன் சொ
ன்பந்தியம் மறந்து அப்படியே போய்வரும்படி சொல்லி தாயாருக்கு
நமஸ்காரஞ் செய்தான் இதையறிந்த அக்கிழவி கையிலிருந்த பெட்டி
யைக் கீழேவைத்து பாதத்தில்விழுந்த புதல்வனைவாரியெடுத்து அவன்

சிரசில் இரண்டு கரங்களை யிட்டு "தீர்காயுஷ்மான்பவ" என்று ஆசீர்வ
தித்து போகுஞ்சமயத்தில் தன் சொந்தபெட்டியை மறந்து பாலக
னிருக்கும் பெட்டியை எடுத்துக்கொண்டு போய்விட்டாள். அம்மாது
புறப்பட்டு கெங்காதீரமடைந்து அங்கு ஸ்தானஞ்செய்து சேலைக்கட்
டிக்கொள்ள பெட்டியைத் திறக்க அதிலிருந்த பாலகன் எழுந்து நிற்
கவே உடனே அங்கிருந்த ஓர் இராஜகன்னிகை புஷ்பஹாரத்தை கை
யிலேந்தி அதிசீக்கிரமாக வந்து அந்தப்பாலகன் கண்டத்தில்தரித்து
அவனுடைய பாதங்களுக்கு நமஸ்கரித்து கரங்களை கூப்பி எதிரில்
நின்றாள்.

இப்பால் இராவணன் லங்கைதன்னை பரிபாலிக்குஞ் சமயத்தில்
பிரம்மதேவன் "ததேவலக்னம் சுதினம்ததேவா" என்றுச்சொல்லி வாய
லில் கட்டியிருக்கும் ஆராட்சிமணியை சப்திக்க இராவணன் அதைக்
கேட்டு கோபக்குறியுடன் வாணிநாயகனைப்பார்த்து நீ ஏதுக்காரணமா
ய் இந்த மணியை யடித்தாயென்று கேட்க. இதைக்கேட்ட பிரம்மதே
வன் ஓ மதாங்காரி! அப்போதே மறந்துவிட்டாயா? அந்தநாளில்காசி
க்ஷேத்திரத்தில் விவாகமாகுமென்றுச் சொன்ன பால்யனுக்கு இத்தி
னத்தில் விவாகமுடிந்து விட்டது என்றுச்சொல்ல அப்போது இரா
வணன் உக்கிரானத்தில் வைத்த பெட்டியை எடுத்து வரும்படி காவ
லருக்கு உத்திரவு செய்தான்.

இப்படிருக்க அங்கு இராவணன் தாயார் அந்தவிவாகத்தை நிரு
த்த பிரயத்தினம் செய்தாள், இதற்குள் அங்கிருந்த சிலபேர் இம்மா
தைக்கண்டு அம்மா! நீ விவாகத்தை செய்யக்கூடாதென்றுச் சொன்
னால் பூனையாக ஜென்மமெடுப்பாய் புண்யஸ்தலமாகிய இந்த காசிக்கு
வந்தும் பாவம் நாசமாகும் கெங்கையில் ஸ்தானஞ்செய்தும் விவாகத்
தைக் கெடுப்பது நலமல்ல, என்று சமாதானஞ் சொல்ல அம்மாது
அந்த தம்பதிகளை இருவரையும் அந்த பெட்டியில் வைத்து உடனே
விமானமேறி ஆலஸ்யமில்லாமல் இராவணன் உக்கிரான யரைதன்னில்
அந்த பெட்டியை வைத்து விட்டு தன்னுடைய பெட்டியை யெடுத்துக்
கொண்டு விமானமேறி மறுபடியும் வாரணசிசேர்ந்தாள். பிறகு இரா
வணன் அனுப்பப்பட்ட காவலாளிகள் உக்கிரானம் வந்து அங்கிருக்
கப்பட்ட பெட்டியை எடுத்துக்கொண்டுபோய் இராவணன்முன்னில்
வைத்தார். அவன் அந்தப்பெட்டியை பரிசோதிக்க தான் போட்டிரு
ந்த முத்திரையில்லாமல் இருக்கும் சந்தேகத்தால் பெட்டியை திறந்து
பார்க்கையில் அதில் தம்பதிகளிருவரும் யிருந்தார். அவரைக்கண்டு



அதிக ஆச்சரியமடைந்து அந்த தம்பதிகளுக்கு வேண்டிய வெகுமதி
களை தந்து அனுப்பினன். ஆகையால் பிரம்மவிதியை வெல்வதற்கு
சாத்தியமாகாது அதுபோல் நீர் புருடனாயிருக்கும்பொருட்டு பிரம்ம
விதித் இருந்தார்.

இதுபோல் குணவதி மணிகேதனுக்குச் சொல்லி, மந்திரிபுதல்
வன் மேலிருந்த ஆசையும் எங்கள் சத்தியமும் தீர்ந்துபோய்விட்டது
நீயென்று அறிந்த பிறகு உன்னையே புணர்வது தர்மமென்று எண்ணி
உன் கைப்பிடித்தோம் இதுபற்றி எங்களுக்கு எவ்வளவும் தோஷம்
கிடையாது பகவான் சங்கல்பமிப்படிருக்க ஆர்தான், யேதுசெய்யக்
கூடலாமென்று சொல்லக்கேட்ட மணிகேதன் சந்தோஷமடைந்து
அந்த நால்வருடன் சுகசம்சாரம் சகலபோகத்துட னிருந்தான். இப்ப
டிசிலதினம் சென்றபிறகு ஜேஷ்ட பாரியாளான குணவதி கெர்பவதி
யாய் ஓர் ஆண்குழந்தையைபெற்றாள் மற்றமூவரும் தாசி ஜனத்துடன்
கூடி அவ்வேந்தனுக்கு உபசாரங்கள் செய்துக்கொண் டிருந்தாரென்
றுச்சொல்லி முடிந்தவுடன் ப்ரயாகைநதி சமீபித்தது சாயந்திரகால
மும் நெருங்கியது பிரம்மானந்தயோகிகதை நிறுத்தினர். அதன்பிறகு
எல்லோரும் புசித்து சந்தோஷமாக கொஞ்சநேரம் மொழிகளாடி சய
னித்தார். மறுநாள் உதயத்தில் எழுந்து ப்ரயாகைதன்னில் ஸ்தானம்
செய்து பகவானை தரிசனம் செய்துக்கொண்டு போஜனமறிந்த
பிறகு வேடர்கள் பிரம்மானந்த யோகியைபார்த்து சுவாமி இந்தக்ஷே
த்திரமகிமை எங்களுக்கு சொல்லவேண்டுமென்று கேட்க அந்தயோகி
யும் சந்தோஷமடைந்து சொல்லத்தொடர்ந்தார்.

ஓ வேடரே கேட்பீர்:—ஜெகத்ருஷ்டிக்கு பூர்வீகத்தில் பரமாத்
மா இங்கிருக்கும் அக்ஷயமென்னும் ஆலிலைமேல் வசித்துக்கொண்டிரு
ந்தார், ஆகையால் இந்த ஸ்தலத்திற்கு எப்போதும் நாசம்கிடையாது
இங்கு பிரம்மதேவன் தசாஸ்வமேதம் செய்தபடியால் இதற்கு தசா
ஸ்வமேத கட்டமென்று பெயருண்டாச்சுது இங்கு மாதவமூர்த்திவா
சம் செய்வதால் விஷ்ணுக்ஷேத்திரமென்று பெயருண்டாச்சுது பிரம்ம
தேவன் தன்னுடைய பெயர் பிரகாசிக்கவேண்டுமென்று கேட்டுக்கொ
ண்டபடியால் விஷ்ணு பிரஜாபதி க்ஷேத்திரமென்று சொல்வார்கள்
யாகத்திற்கு பிரதான ஸ்தானமானபடியால் பிரயாகை என்னப்படும்.
பூர்வீகத்தில் சாயாதேவி கர்பமாயிருக்கும் காலத்தில் சூரியன் சங்க
மம்செய்ய அப்போது சிலதுபாகம் பிண்டமாகவும் சிலதுபாகம் த்ரவ
ரூபமாகவும் உட்பவிக்க தேவாதிகள் வந்து த்ரவரூபத்தை யமுனாநதி

யாகவும் பிண்டத்தை எமனுக நியமித்தார். அதன்பிறகு பகீரதனுல் கொண்டுவரப்பட்ட கெங்கை யமுனையுடன் கலந்தது பிறகு இந்தஸ்தலத்தை பிரம்மா தியானிக்க சாத்தியப்படாமையால் பிரம்மா தன் லோகத்திற்கு போகவே அப்போது சரஸ்வதி யான் தியானிக்குறேன் என்றுச்சொல்லி ப்ரயாவுக்குவந்து தியானிக்க வகை தெரியாமலிருக்க கெங்கா யமுனை சரஸ்வதியை தன்னுட னிருக்கும்படி தியானிக்க அப்போது சரஸ்வதி கெங்கா யமுனையைப் பார்த்து யான் பிரகாசமா யிருந்தால் பிரம்மா என்னை பார்க்கும் பக்ஷத்தில் நான் லஜ்ஜை யடையவேண்டும் ஆகையால் நான் அடங்கி இருக்குறேன் என்றுச்சொல்ல அவரும் அதுபோல் அங்கீகரித்து இருந்தார். ஆகையால் இங்கு செய்யப்பட்ட கொஞ்சதானமானது மலைபோல் பலிதம் தரும் இங்கு பரத்வாஜாஸ்ரமம் இருக்கிறது இங்கு முக்கியமானது ஏதெனில்,

(சுலோகம்.)

த்ரிவேணீம் மாதவம்சோமம் பாரத்வாஜம் சவாசுகீம்
வந்தேக்ஷயவடம் சேஷம் ப்ரயாகம் தீர்த்தநாயகம்.

இப்படி சொல்லப்பட் டிருக்கிறது யென பிரம்மானந்த யோகி சொல்ல, கேட்டு ஆனந்தமடைந்து தீர்த்தவிதிகளை செவ்வையாய் நடத்தி அதன்பிறகு தசாஸ்வமேத கரைதனில் இராமலிங்க சுவாமிக்கு அபிஷேகம் செய்வதற்காய் கெங்கையையெடுத்து காவடி கட்டி அங்கிருந்து புறப்பட்டு போகையில் பிரம்மானந்த யோகியைப் பார்த்து சுவாமி! மணிகேதனுக்கு புத்திரன் பிறந்தானே பிறகு கதை சொல்லென்று கேட்க யோகீந்திரன் சொல்லத்தொடங்கினர்.

---

# ஆரும் மஜிலிக்கதை.

## ஈஸ்வர கருணாநிதி.

அதன்பிறகு, மணிகேதன் புத்திரன் ஜனித்தானென்கிற சந்தோஷத்தால் சோடசதானஞ்செய்து விப்பிரவரை சந்தோஷமடையச்செய்து புரோஹிதரையழைத்து பாலகனுக்கு ஜாதககர்ம நாமகரணம் செய்வித்து ஜோதிஷனை வரவழைத்து ஜாதகம் எழுதும்படிச்சொல்ல அந்த ஜோதிஷன் பாலகன் ஜனித்தலக்கினத்தை செவ்வையாய்சோதித்து! இந்தப் பாலகனுக்கு தாய்தந்தைகளே விரோதிகள்; இவ்வை



கொல்லவேண்டுமென்று வேந்தன் கத்தியை கைப்பிடித்துக்கொண்டிருக்கிறுன். இவனை பலிக்கொள்வதற்கு தேவதை காத்துக்கொண்டிருக்கிறது. பிறந்தபோதே மரணம் சித்தமாயிருக்கிறது என்றுச்சொல்லி இதுவுமன்றி இவன் ஜீவித்திருந்தாலல்லவா ஜாதகம் எழுதவேண்டும்,

(சுலோகம்.)

மாதாசத்ரு பிதாவைரி ராஜாகட்க தரஸ்ததா
ஜைதவேதா பலமாந்போதி ஜாதஸ்ய மரணம் த்ருவம்.

இதுபோல் அர்த்தமான சுலோகமெழுதி கையில்கொடுக்க. மணிகேதன் அதை வாசித்துப்பார்த்து ஆச்சரியமடைந்து விதி எப்படி நடக்கிறதோ அதை அறிவேன், இதை அறியாத மனிதர் எப்படிப்பட்டவர். தனக்கிந்த சமுசாரம் எப்படிலபித்தது? முந்தி என்ன நடக்கும்? தெரியாது! இந்த சுலோகம் பாலகன் கண்டத்திலே இருக்கச்செய்வேனென ஒரு தாயத்தைசெய்து அதிலந்த கடிதத்தைவைத்து தாயத்தைமேலும் அந்த சுலோகமெழுதி அழகில் சிறந்த அந்த பாலகன் கழுத்தில் கட்டினான்.

இப்படிருக்குஞ் சமயத்தில் ஜெயந்தவேந்தன் மந்திரியான இராஜசேனன், நாலு தாசி ஜனத்துடனும், மணிகேதன் வசித்துக்கொண்டிருக்கும் வேந்தன் மந்திரி அவருக்கு பந்துவானபடியால் அவர் புதல்வியை பேசுவதற்காய் தன் குமாரனுகிய சோமதத்தனை அழைத்துக்கொண்டு அந்தப் பட்டணத்திற்குவந்து மணிகேதன் இறங்கியிருக்கும் வீதிமார்க்கமாய் போகையில் இந்துமதி அவரைப்பார்த்து அப்போதே வீட்டிற்குள்வந்து மற்றமூவரையும் அழைத்துக்கொண்டு கபாட பந்தனஞ்செய்தார். அவருடன் நமது தேசத்துமந்திரியும் அவன் புதல்வனுகிய சோமதத்தன் வந்திருக்கின்றுர், அதோ இந்த மார்க்கமாக வரப்பட்டவரை கபாடத்வாரமாய் மணிகேதனுக்குக் காட்டினுர். அதைப்பார்த்தவர் பயமடைந்து நம்மை தேடிக்கொண்டு வந்தானோ என்னமோ, என்றுச்சொல்ல குணவதி ஆ! ஹா! இருந்தாலு மிருக்கலாம். எனதுதந்தை மனத்வேஷமடைந்து அனுப்பி இருக்கலாம் அந்த மந்திரிபுதல்வன் தன்னை மோசம்செய்து போனுரென்ற துக்கத்தால் தன் தந்தையை அழைத்துக்கொண்டு தான் வந்திருப்பான். இதற்கு சந்தேகம் கிடையாதென்றுச்சொல்ல மணிகேதன் தனது நால்வர் பத்தினிகளை அழைத்து ஓ யெனது பிராணசகிமாரே! நாமிங்கிருப்பது அவருக்கு தெரியாமற்போகாது. அப்படி

தெரிந்தவுடனே நம்மை இன்னட்டின் வேந்தனுக்கு வொப்புவித்தவுட
னே அவர் நம்மை சிறையடைப்பார். பிறகு, ஜெயிந்திவேந்தனுக்கு
தெரியச்செய்ய. அவர் சேனுயுக்த்தனய்வந்து நம்மைப் பிடித்துக்கொ
ண்டுப்போய் வேந்தன், மந்திரி, சேனபதி, வர்த்தகன், உங்களுங்
கள் தாய் தந்தைகள் மனேவியாகூலத்தா லென்னே தண்டிக்காமல்
விடார். நீங்கள் அவர்வயற்றில் ஜனித்தப்படியால் ஒரு சமயம் உங்
களைவிட்டு விடுவார். நான் அங்குசென்று அவர் நிர்ப்பந்தத்தி லகப்
பட்டு கஷ்டப்படுவதைவிட நானிப்படியே தேசாந்தரம் செல்லுகிறேன்
நீங்கள் சுகமாக நாட்டையடைவீர். உங்களுக்கு மெந்தனுக்கும் இது
வரைக்கும் ருணனுபந்த மிருந்தது. அது இப்போது தீர்ந்துவிட்டது
என்றுச்சொல்ல. அம்மாதர்கள் நால்வரும் இம்மொழிகேட்டு கண்
ணீர் நேத்திரத்தில்சொரிய, தாய் தந்தைகளேயும், பந்து மித்திராதி
களேயும், வீட்டை முதலானதும்விட்டு நீயே கெதியென்று எங்கள்
மனதில் இடமாய் நம்பி நீர் இருக்குமிடமே எங்களுக்கு சொந்தமனே
ப்போல் பாவித்து உன்னுடன்கூடி தேசாந்திரம்வந்து இதுவரைக்கும்
சமுசாரஞ் செய்துக்கொண்டு சுகமாயிருந்து இப்போது உம்மை காட்
டில் கலக்கிவிட்டு எங்கள் தாய்தந்தைமாரிடம் போனல் எங்களுக்கு
என்ன சந்தோஷம்? எங்களைக் கண்டவுடன் பந்து ஜனங்களெல்லாம்
வெறுப்புடனேபார்த்து நிர்ப்பாரே? அதென்றைக்கும் ஆகாது. எங்
களே விபசாரி மாதருக்காகிலும் மேலாகவெண்ணி வெருக்கமாட்டாரு
அப்போது மகாதோஷம் லபிக்கும். அங்கு போவதைவிட மரணமே
பிரியமாகும், உமதிடம் மரணமடைந்தால் எங்களுக்கு சாயுஜ்யபதவி
கிட்டும் மாதருக்கு புருஷனன்றி வேறுதுணேயேது சுகதுக்க மெப்படி
பட்டாலும் உம்முடனிருந்து அனுபவிக்கவேண்டும். உம்மைவிட்
டு ஓர் நிமிடமாகிலும் நிற்கமாட்டோமென்றுச் சொன்னவுடனே மணி
கேதன் இராஜபுதல்வியான குணவதியைப்பார்த்து ஒ நாயகமே! நீ
தீர்த்தமாடி பத்துதினமாய் பாலகனுடன் இருக்குருய் மற்ற மூவரும்
ஏதுகஷ்ட மில்லாதவர் அவரென்னுடன் எங்காகிலும்வருவார் நீ பால
களே எடுத்துக்கொண்டுவருக கஷ்டமல்லவா. ஆகையால் உன்தாயார்
வீட்டிற்கு போவென்று சொல்லவே குணவதி நாயகன்மொழி கேட்ட
மாத்திரத்தில் ஒ நாயகா! இன்றுடனெனக்கு ஸ்தானந் தீர்ந்துவிட்
டது. பிறக்கச்செய்ததெய்வம் எப்படியாகிலும் காப்பாற்றும் அந்த
பாலகனேப்பற்றி யெனக்கேது துக்கமில்லே தனியாயிருந்தால்போதும்
உம்மைபோன்ற நாயகரைவிட்டு பிழைக்கலாகுமா? உம்மை சூழ்ந்துக்
கொண்டிருந்து உமக்கு வரப்பட்ட கஷ்ட நிஷ்டூரத்தை நானும் அனு



பவிக்க வேண்டுமென்று என்னபிப்பிராயம் என்மொழிக் கேட்காமல்
விட்டுப்போவீரானல் பெருத்த பிரமாண மிருக்கிறது. என் பிராண
மிருக்காதென்றுச்சொல்லி ஐந்துப்பேரும் ஸ்தானபோஜனம் தீர்த்
துக்கொண்டு சந்தோஷமாயிருந்தார். இப்படிருக்க மணிகேதன் தன்
னுடைய தைர்யமாய் குணவதி கெர்ப்பத்தில்ஜனித்த பாலகனே விட்டு
போக மனமில்லாமற் கொஞ்சம் விசனமடைந்து ஒரு காகிதமெடுத்
ததில்:—

(சுலோகம்.)

யோமேகற்ப கதஸ்யாபி வ்ருத்திம்கல்பித வானுஜ
தேஷாமதி விஞசாய கிம்வாசுப்தோத வாம்ருத.

எப்படியென்றுல் கர்பத்தி லிருக்கும்போது உன்னே எந்த பக
வான் ரக்ஷித்தானே, அவனே உனக்கு சகல ஜீவனமுண்டாக்குவான்.
அந்த பகவான் நித்திரை செய்குரானே? இல்லாமல் யின்று உன்னி
டம் வந்தானே? என்று அர்த்தம் கொடுக்கப்பட்ட சுலோகத்தை
எழுதி ஜன்மநக்ஷத்திர கிரஹனத்தில் நெற்றியில் பட்டம் கட்டுவது
போல் அந்த பாலகனுக்கு நெற்றியில் கட்டி அதிக துக்கமடைந்து
வணையில்போட்டு முன்னுக்குச் சென்று மறுபடியும் அருகில்
வந்து பாலகனே முத்தமிட்டு துக்கித்து தைர்யமடைந்து பகவானே
நினைந்துக்கொண்டு அதை விட்டுச்செல்ல பிறகு குணவதிதான்பெற்ற
பாலகனிடஞ்சென்று ஸ்தன்யபாணங்கொடுத்து நன்றுய்போர்வைமூடி
பாலகன் தலேயிடம் தன்னுடைய முத்துஹாரத்தை கழட்டி வைத்து
பெற்றபாலகனே விட்டுப்போவதற்கு மனமில்லாமற் துக்கத்தில் மூழ்கி
கண்ணில் ஜலம்சொருகி நாயகன் பின்தொடர்ந்தாள். மற்ற மூவ
ரும் துக்கமடைந்து நாயகனுடன் நடந்தாரென்றுச் சொல்லவே
அஸ்தமிக்கும் சமயமாச்சுது. பிரம்மானந்த யோகியும் கதை நிறுத்தி
விட்டார். அதன் பிறகு சமீபத்திலிருக்கும் கயாக்ஷேத்திரமடைந்து
ஸ்தானுக்ருத்யங்கள் தீர்த்துகொண்டு அந்த ஸ்தலபெருமையைகேட்க
வேடர் ஆவலோடுவிரும்ப பிரம்மானந்த யோகி சொல்லத் தொடர்ந்
தார்.

கேட்டீரா வேடரே! ஆதிகாலத்தில் சயாசூரனென்கிற இராக்ஷ
சன் ஒருவன் தபஞ்செய்து சரீரமானது அதிபவித்திரனதால் சிவ
னுல் வரமடைந்து கெர்வமேலிட்டிருக்க பிரம்மதேவன் அவன் மதத்
தை யடக்கவேண்டுமென்று அவ்விடத்துக்கு வந்து உனது திரேகத்
தின்மீது யான்யாகஞ்செய்ய எண்ணமிட்டேன் என்றுச்சொல்ல அது

போல் அவனும் சம்மதிக்க அப்போது அவனை படுக்கவைத்து அவன் மீது யாகஞ்செய்ய ஆரம்பித்தார். அப்போது அவன் சிரமாத்திரம் அசைந்துக் கொண்டிருந்தது அந்தசமயத்தில் எத்தனை பர்வதம்கொண்டுவந்து வைத்தாலும் பிராரப்த கிராதப்படியால் புருஷன் சாபத்தால் சில ரூபமாயிருந்த ஒரு பதிவிருதா சிலையைக் கொண்டு வந்து அவன் தலைமீதுவைக்க கொஞ்சமாய் அசைந்துக் கொண்டிருந்தது. அதன்பிறகு விஷ்ணுமுதலானதேவர்கள் அந்த சிரசின்மீது அவர்கள் பாதம் வைக்கவே ஆடாமலிருந்தது அதன்பிறகு பிரம்ம யாகத்தை பூர்த்தி செய்துக்கொண்டார். அப்போது கயாசூரனும் சிலைரூபமாயிருந்த பதிவிருதையும் விஷ்ணுவை தியானிக்கவே பகவான்கோதண்ட ஸ்வரூபமாய் இங்கு வசித்துக்கொண்டிருந்தார். அதன்பிறகுதேவாதிதேவரும் இந்த சிரசின் மீது யாரும் பிண்ட பிரதானம் செய்தால் (101) குலத்தாரும் பதவியடைவாரென்று சொன்னார்.

(சுலோகம்.)

சமீபத்ர ப்ரமாணேந பிண்டந்த் யாக்தயாசிரே
உத்தரே சப்தகோத்ராணி குலமேகோத்தரம் சதம்.

இதுவுமன்றி இந்தஸ்தலத்தில் இருக்கப்பட்ட விஷ்ணுபாதத்தையும் அதன் சமீபத்திலிருக்கும் அஷ்டாதச (18) பாதத்திலும் பிண்டபிரதானம் செய்யவேண்டும். இங்கிருக்கப்பட்ட பல்குநிநதியும், உத்திரமானச தீர்த்தமும் தக்ஷிணமானச தீர்த்தமும் உதிசீதீர்த்தமும் கனகலதீர்த்தமும் இந்த பஞ்சதீர்த்தங்கள் முக்கியமானது. இங்கிருக்கப்பட்ட ராமபர்வதமென்றுச் சொல்லப்பட்ட ப்ரேத பர்வதத்தின் மீது அஷ்டகபாலார்த்தம் செய்வதினால் பித்ருதேவதைகள் திருப்தியடைவார். இந்த பர்வதங்கீழ் இருக்கப்பட்ட பிரம்மகுண்டம் மிகவும் சிரேஷ்டமானது என்றுச்சொல்ல அந்தவேடர்கள் சந்தோஷமடைந்து ஸ்ராத்தாதி விதிகளை தீர்த்துக்கொண்டு பிரம்மானந்தயோகியுடன் கூடி போஜனமருந்தி அந்த இராத்திரி அவ்விடந்தன்னில் சயனித்து நித்திரைசெய்து மறுநாள் உதயத்திலெழுந்து நித்திய கருமங்களை தீர்த்துக்கொண்டு பிரயாணமடைந்தார். அப்போது வேடர்கள் பிரம்மானந்த யோகியைப்பார்த்து சுவாமீ! நேற்றியதினம் சொன்னகதைதன்னில் மணிகேதன் பாலகனைவிட்டு தன் நான்கு பத்தினிகளுடன் கூடி போனானென்றீரே அதின்பிறகு அவர்களை எப்படியாச்சுது அதைத் தெரியச்சொல்லுமென்று கேட்க. பிரம்மானந்தயோகி சொல்லத்தொடங்கினார்.



# ஏழாம் மஜிலிக்கதை.

## பகவான் அனுகூலம்.

கேட்டீரா வேடரே! மணிகேதன் தன்னுடைய நால்வர் மாதருடன் கூடி பாலகனைவிட்டு போனபிறகு, நாலுமணிநேரம் பொருத்து பாலகன் நித்திரையைவிட்டெழுந்து அழுக ஆரம்பித்தான். அச்சமயத்தில் அந்த வீட்டின் சொந்தக்காரி அதிகநேரமாய் அழப்பட்ட பாலகன் த்வனியைக்கேட்டிருந்து ஆரும் சமாதானஞ் செய்யாமல் இருப்பதைக்கண்டு ஆசையுடன் அவ்வீட்டில் பிரவேசித்துபார்க்க அங்கு ஆருமில்லாததைக்கண்டு, அய்யோ! பாவிகளே! உங்கள்போல கடினமானவர்க்கு பாலகன் யேன்? அதிகநேரமாக அழுதுக்கொண்டிருக்க தேருதல்செய்ய திக்கில்லாமற் போச்சுதே. மதம்பிடித்த யானைப்போல் நான்கு மாதரிருந்தும் ஒருவராகிலும் பாலகனிடத்திலிருக்காமல் எங்குபோனீரோ? பதினொருதினத்தில் புன்னகை இருக்கப்பட்டதிரேகத்துடன், பெற்றமாது எங்குசென்றளோ! தெரியவில்லை என்று ஆச்சரியப்பட்டு ஏணைதனை ஆட்டிவிட்டு வீட்டிற்குவந்து தன் நாயகனைப்பார்த்து நமஸ்கரித்து பயமடைந்து மரியாதையுடன் தூரத்தில் நின்று, ஐயா! நமது அடுத்தவீட்டில் குடித்தனமிருந்தவரில் யொருவராகிலுமில்லையே, குழந்தை பரிதாபத்தால் பிராணன்விடுவான் உத்திரவு தருவீரானால் பாலகனை எடுத்துக்கொண்டு வருகிறேனென்றுச்சொல்ல. இம்மொழிகேட்ட விப்பிரவன் அதிவேகமாய் அவ்வீட்டிற்குவந்து நாற்புறமும் தேடிப்பார்த்தும் ஆருமில்லா திருப்பதையறிந்து ஏணையருகில்சென்று பாலகன் நெற்றிதன்னில் கட்டிருக்கும்படியான கடிதத்தை வாசித்துப்பார்த்து தன்னுடைய நாயகிமுகத்தை நோக்கி மாதே! பிரபித்த பகவான் ரக்ஷிப்பாரென்று எழுதிவைத்துவிட்டு தாய்தந்தைகள் எத்தேசமோ போய்விட்டார். அவர்களென்ன அபராதஞ்செய்து இங்கு வந்தனரோ தெரியாது. ஆனபோதிலும் பெரிதல்ல, நீ அந்தப் பாலகனையெடுத்து சந்தோஷப்படும்படி செய்யென்றுச் சொல்ல. இம்மொழிகேட்ட அம்மாது கணவன் உத்திரவுப்படி அப்பாலகனை யெடுத்து ஸ்தன்யபானங்கொடுத்து சந்தோஷப்படுத்தி அதின் லலாடத்தில் எழுதியிருந்த கடிதத்தையெடுத்து கழுத்தில் இருக்கப்பட்ட தாயித்துதன்னில் கட்டிவிட்டு ஓர் தாதியை நியமித்து அம்மாதால் அப்பாலகனுக்குப் பால்கொடுக்கும்படி செய்து.

தினமொரு மேனியும் பொழுதொரு வண்ணமாய் வளர்த்துக்கொ
ண்டுவந்தார். அந்த பாலகனுடைய மதனமொழிகேட்டு அந்த வேதி
யர்கள் சந்தோஷ மடைந்திருந்தார்.

இப்படிருக்க மணிகேதன் நான்குபேர்மாதருடன்கூடி அங்கிருந்
து புறப்பட்டு அந்த இராக்காலத்தில் காடு, மலை, வனாந்திரங்கள்தா
ண்டி ஒரு கிராமமடைந்து அங்கு தங்கி பாலகனையீன்ற மாதாத்தின
த்திற்கு உபசாரங்கள்செய்து பிறகு, அங்கிருந்து புறப்பட்டு பர்பா
தேசமதில் காலமுஷ்டியென்னும் கிராமமடைந்தார். அச்சமயத்தில்
வேந்தப்புதல்விக்கு மூன்றிராத்திரியாக பாலகனுக்கு பால்கொடாம
லிருப்பதைப்பற்றி ஸ்தன்யவேதனை யடைந்து கஷ்டப்பட மற்ற மூவர்
அனேகமாகிய உபசாரங்கள் செய்தும் வேதனை தீரவில்லை. இதையறி
ந்த மணிகேதன் அன்னகாத்தி லிருக்கப்பட்ட ஒரு மருத்துவமாதை
அழைத்துவந்து சமாச்சாரமெல்லாஞ்சொல்லி வியாதியை தீர்க்கும்
படிகேட்க. அக்கிழவி இவளைப்பார்த்து அய்யா! மல்லிகை மொக்
கைக் கொண்டுவந்து மார்மீதுவைத்து தட்டியால் கெட்டியாய்க்கட்டி
இப்படி மூன்றுதினங்கட்டினால் வியாதி தீர்ந்துபோகுமென்று சொல்
லிவிட்டு அம்மாதுப்போக அதுபோல் இவர்கள்செய்ய வியாதிதீர்ந்து
சுகமடைந்தாள். கர்பதீக்ஷா பத்தனை மணிகேதன் சமீபத்திலிருக்
கும் ஒரு தேவாலயத்தில் வாசஞ் செய்துக்கொண்டிருந்தான். அந்த
தேவஸ்தானத்திற்கு, அர்ச்சகராகிய வேதியர், இவரைக்கண்டு இவரா
ரோ யோகியா யிருக்கின்றார். இவரால் மந்திரோபதேச மடைந்தால்
நலம்பெறலாமென்று தன்மனதில் எண்ணமிட்டு நித்தியமும் அவருக்கு
அனேகவித பக்ஷண போஜனங்கள் கொண்டுவந்துகொடுத்து அதிக
பக்தியால் சிஷ்யபாவமா யிருந்தான்.

அந்தக் காலமுஷ்டி யென்கிற நகரத்தை பரிபாலித்துக்கொண்டு
வந்த கஞ்சாக்ஷனென்கிற வேடவேந்தன் நவராத்திரிகாலத்தில் ஒன்ப
தாம் தினத்தில் தன்னுடைய செந்திராயுதத்தை அந்த தெய்வாலயத்
தில்வைத்து ஆராதனை செய்துக்கொண்டிருந்து, ஆராகிலும் ஒரு பால
கனைக்கொண்டுவந்து வைத்திருந்து மஹர்னமி பூஜாசமயத்தில், அந்த
கத்தியால் தேவதைக்கு நரபலியாக அப்பாலகனை வெட்டுவான். இப்
படியாக அன்னாட்டில் வெகுநாளாக நடந்துக்கொண்டுவருகிறது. இப்
படிவருக, அவ்வருஷம் சமீபித்தகாலத்தில் தேவதைக்கு நரபலிகொடு
ப்பதற்காய் 1000-வராகன்கள் கொடுத்து தேசமெங்குந் திரிந்துபார்
த்தாலும் ஆரும் அகப்படாததைப்பற்றி இச்சங்கதி அவ்வேந்தன் மந்



திரிகேட்டு காவலரையழைத்து அடா காவலரே! நமது கிராமத்தில்
தேடி ஆராகிலும் அகப்பட்டால் விசாரிக்காமல் பிடித்துக்கொண்டு
வாருமென்று உத்திரவுதருக. இப்படி மந்திரியால் உத்திரவுயடைந்து
காவலர் நாடெல்லாந் தேடியும் பிறகு அந்த தேவாலய அர்ச்சகனு
டைய பாலகன் வீதியில் விளையாடிக்கொண்டிருக்க. அவனைக்கண்டு
பிடித்துக்கொண்டுவந்து மந்திரி சுவாதீனஞ்செய்தார்: இந்த சங்கதி
யெல்லாம் அந்த அர்ச்சகன் கேழ்வியடைந்து, இனி தான் சென்று
கேட்டபோதிலும் விடமாட்டாரென்கிற துக்கமடைந்து கண்ணீர்
சொரிந்து தேவஸ்தானத்தில் தவஞ்செய்துக்கொண்டிருந்த மணிகே
தனிடத்திற்குவந்து சாஷ்டாங்க வந்தனம்புரிந்து சுவாமி! எனக்கு
புத்திரதானம் கொடுக்கவேண்டும். இப்படி அபயதானம் கொடுக்கிற
வரைக்கும் நான் உமது பாதகமலங்களை விடமாட்டேனென்று அவர்
பாதங்களை கெட்டியாய்ப்பிடித்துக்கொண்டு அவர்பாதத்தை தன் சிரத்
தின்மீதுவைத்து நேத்திரஜலத்தால் அவர் பாதத்தைக்கழுவ. இதை
க்கண்ட மணிகேதன் மஹா தயாளகுணசாலி ஆனபடியால், அர்ச்சக
னோடு கொஞ்சநேரம் வாதாடி அந்த அர்ச்சகனுடைய இரண்டுகாத்
தை பிடித்தெடுத்து அய்யா! என் பிரியசினேகிதனே, என்னால் சாத்தி
யமாகயிருந்தால் அவஸ்யமாய் அந்தக்காரியத்தைசெய்யத்துணிவேன்.
நீ அதைர்யப்படவேண்டாம். நான் விப்பிரவனல்ல, க்ஷத்திரியன்
என்னால் ஆகவேண்டியது யாதெனில்,எதிருக வரப்பட்டவர்மேற் போ
ராடி ஜெயிக்க வல்லவனாயிருப்பேன். ஆனால், உனது சமாச்சாரத்தை
மனப்பூர்த்தியாய் அறிக்கை செய்குவாயென்று அபயஸ்தமிட அந்த
அர்ச்சகனெழுந்து கைகள் கோர்த்துக்கொண்டு எதிரில்னின்று ஓ!
தயா நிதியே! ஆபத்பாந்தவா! என் மொழிதனைக்கேட்பீர். கஞ்சாக்ஷ
ரென்கிற வேடனொருவன் இந்த இராஜ்ஜியத்தை பரிபாலிக்கிரான்.
அவனுக்கு இந்த சத்தி யனுக்கிரகம் வேண்டுமென்று நவராத்திரிகா
லத்தில் தன்னுடைய செந்திராயுதத்தை இந்த ஆலயத்தில்வைத்து
கையால் பூஜிக்கச்செய்து மஹர்னமி தினத்தில் இந்தத் தேவதைக்கு
என்பலியாக, ஒரு பாலகனைவெட்டி வுடனே அந்தக் கத்தியை அவ்
வேந்தன்பெற்றுச் சந்தோஷமடைவான். அது எப்படியென்றால் இதற்
காகவே சிலதினத்திற்குமுந்தி ஒரு பாலகனை சித்தப்படுத்தி அந்த
தினத்தில் அப்பாலகனுக்கு அப்பங்கிஸ்தானஞ் செய்யவைத்து புதிய
வஸ்திரத்துக்கு மஞ்சள்தோய்த்து. அந்தப் பாலகனுக்குக்கட்டி தேவி
எதிரில்நிறுத்தி அந்த தேவதைக்கும், கத்திக்கும், மங்களாரதிசெய்து
அந்தக்கத்தியை வேந்தன்கையில் கொடுக்க. வேந்தனதைப்பெற்று,

பாலகனை அந்தக் கத்தியால் வெட்டி பிறகு, தீர்த்தபிரசாதம் கைக்கொண்டு மனைக்கு செல்லுவான். இப்படியாக அனேகதினமாய் நடந்துக்கொண்டிருக்கிறது. இந்ததினத்தில் எனது ஆசைப்பாலகனை பிடித்துக்கொண்டு போய்விட்டார். அய்யா! எனக்கிருப்பது ஒரேபுத்திரன், நானே மஹர்னமிதினத்தில் என்னெதிராக பலிகொடுப்பாரே அவனை வெட்டுவதற்காய் கத்தியை என் கையால் எடுத்துக்கொடுக்கவேண்டுமே இந்த சங்கடத்தை நான் எப்படிப்பார்த்து சகிப்பேன். இதை யெப்படியாகிலும் நீர்தான் தீர்க்கவேண்டும். பிறரால் முடியாதென்றுச்சொல்ல. அர்ச்சகனைப்பார்த்து அய்யா! நான் பரிதேசி என்னலென்னயாகும் ஆனாலும் என்னால் செய்யவேண்டிய உபாய மேதாகிலுமிருந்தால் சொல்லுவீர். அப்படியாகிலும் உனது காரியம் பூர்த்திசெய்கிறே னென்றுச்சொல்ல அந்த அர்ச்சகன் இதைக்கேட்டு, சுவாமீ! நீர் இதற்குமுந்தி க்ஷத்திரியனென்று சொன்னீரல்லவா, வேந்தருக்கு துஷ்டனிக்கிரக சிஷ்டபரிபாலனஞ் செய்து, சரணாகதியடைந்தவரை ரக்ஷிப்பது தர்மமல்லவா. ஆகையால், நான் சொல்வதுப்போல் செய்தால் தோஷமில்லை. அதேதெனனில், நான் இந்தனவராத்திரியில் நிதமும் தேவாலயத்தில் கத்தியை பூஜித்துக்கொண்டு வருவேன். துர்காஷ்டமி தினத்தில் உம்மை ஆலயத்துக் கழைத்துக்கொண்டுபோய் ஆருக்குந் தெரியாமல் தேவதை பின்பாகத்தில் ஒளித்துவைக்கிறேன் அந்தயிடம் இருட்டாகயிருப்பதால் அங்கு நானன்றி மற்றவர்வர வுத்திரவுக் கிடையாது, உமக்கு பயமேதுங் கிடையாது. கடினசித்தமடைந்த வேந்தன் மஹர்னமிதினத்தில் கத்தியைக் கொடுமென்று கேழ்ப்பான், அந்தசமயத்தில் நீர் கைநீட்டினால் உங்கள்கரத்தில் கத்தியை, தருகிறேன், உடனே நீர் அந்தக் கிராதகனை வெட்டிவிட்டு நைவேத்தியஞ் செய்யும்படி சொல்வீர். அந்தசமயம் நான் நைவேத்தியஞ் செய்குவேன் தூரத்தில் நின்று இருக்கப்பட்ட மந்திரி சேனாபதிகள் நீரே வேந்தனென்றுமதித்து உம்மை அந்தப்புரத்திற்கு அழைத்துக்கொண்டு போகுவார். இந்தராஜ்பமும் உம்மைச்சேரும், என் புதல்வனும் பிழைத்திருப்பானென்றுச் சொல்லக்கேட்ட மணிகேதன் அர்ச்சகன்சொன்ன யுக்திக்கு ஆனந்தமடைந்து உனதிஷ்டம்போல் செய்கிறேனென்று அபயஸ்தமிட அர்ச்சகன்சம்மதித்து ஏதும் தெரியாதவன்போலிருந்து பாலகனையும் கோராமல் நித்தியம் பூஜைசெய்துக்கொண்டு துர்காஷ்டமிதினத்தில் மணிகேதனை அழைத்துக்கொண்டுவந்து கர்பாகிரஹத்தில் வொளித்தான். இப்படிருக்க கஞ்ஜாக்ஷன் மஹர்னமிதினத்தில் அர்ச்சகன் பாலகனுக்கு அலங்காரஞ்



செய்து அழைத்துக்கொண்டுவந்து தேவியெதிரில் நிறுத்தி அவன் பாலகன் சமீபத்தில் நின்று பூஜைகாலத்தில் பாலகன் கழுத்தில் பூமாலை தரிக்கச்செய்து கத்தியை தரும்படிக்கேட்டு கண்களைமூடி தேவி மீது தியானமாயிருந்தான்.

அந்தச் சமயத்தில் அர்ச்சகன் கத்தியை தேவி பின்பக்கத்திலிருக்கும் மணிகேதன்கையில் கொடுக்க. உடனே கஞ்ஜாக்ஷன் சிரம் கீழ் விழும்படிவெட்டி நான் உடனே நைவேத்தியம் தரும்படிசொல்ல அர்ச்சகன் கட்டளைப்படி தேவிக்கு நைவேத்தியஞ் செய்தார். அந்த சமயத்தில் அங்கிருந்த மந்திரியும் சேனாபதியும் இவராலே தேவிவாக்கால்வந்தபடி இருக்கிறதென்று சந்தோஷமடைந்து நமஸ்காரஞ்செய்து மணிகேதன் உடனே தீர்த்தபிரசாதம் பெற்றுக்கொண்டு மறுபடியும் அவரை யழைத்துக்கொண்டு அந்தப்புரமடைந்தார். இப்படியிருக்க மறுதினத்திற் தன்னுடைய நாலு பத்தினிகளை வரவழைத்து அர்ச்சகனுக்கும், அவன் புதல்வனுக்கும் அனேக வஸ்திராபரணங் கொடுத்து சந்தோஷ சவுக்கியத்தில் இருந்து இராஜ்யபாலனஞ்செய்தார். இப்படியிருக்க, கஞ்ஜாக்ஷன் மக்கள் மனவிமாரை, ஆதரித்து அவருக்கு எந்தவிதத்திலும் சுவாதீனங் கொடாமலிருந்தான், மந்திரி சேனாபதிகள் இவனுக்கு சுவாதீனமாய்விட்டார். அப்பொழுது சுகமாக இராஜ்யபரிபாலனஞ் செய்துக்கொண்டு தன்புதல்வன் மரணத்தை மறந்து சுகமாயிருந்தான்.

இதன்பிறகு மணிகேதன் பாலகனை விட்டு வந்த ஜெயந்தகாத்திற்கு தாரித்திரஹிம்சை நேர்ந்தது அங்கிருந்தஜனங்கள் மூலைக்கு ஒருவராய் போய்விட்டார் அப்போது அந்தப்பாலகனை வளர்த்துக்கொண்டிருந்த வேதியதம்பதிகள் அந்தபாலகனை முதுகில் கட்டிக்கொண்டு மணிகேதன் பரிபாலிக்கும் தேசமடைந்து பிச்சையெடுத்து ஜீவித்துக்கொண்டிருந்தார். இப்படிருக்க இன்னாட்டில் நவராத்திரி வருகவே மந்திரி மணிகேதன் அருகில்சென்று ஐயா! இந்த கிராமத்தில் வருஷாந்திரம் நவராத்திரிதன்னில் துர்க்கி உச்சவம் வெகுகாலமாய் நடந்துக்கொண்டு வருகிறது, அந்த உச்சவத்தை கிரமமாய் நடத்தவேண்டுமென்று சொல்ல இராஜசேகரன் கேட்டு ஓ மந்திரி நடத்தவேண்டியிருந்தால் கட்டளைப்பிரகாரம் நடத்துவீரென்று உத்திரவுக் கொடுக்க இதைக்கேட்டு மந்திரி குலப்பாதகரை அழைத்து (1000) வராகன் கொடுத்து நரபலிக்காக ஓர் பாலகனை வாங்கி வருவீரென்று உத்திரவு செய்தனுப்பினார். அவர் வீதி வீதியாய் திரிந்து நரபலிக்கு பாலகனை

கொடுத்தால் அவருக்கு ஆயிரம்வராகன் தருகிறோமென்று பறைசாட்டிவருக இந்த ஓசைதனை ஜெயந்திநகரத்து வேதியன் தன் தேவியைப் பார்த்து நாயகி! நமது கர்ப்பத்தில் பாலகன் பிறந்ததில்லை தெய்வாதீனமாய் இப்பாலகன் நமக்கு கிடைத்தான். ஐந்துவருடமாக அதிக பிரயாசைப்பட்டு காத்தோம், இப்போது இவனைவிற்றால் ஆயிரம்வராகன் அகப்படும் விற்காமற்போனால் இந்த பிச்சைதான் நமக்கு பெரும் வீடு.

(சுலோகம்.)

அபுத்ரஸ்ய க்ருஹம்சூன்யம் தேசசூன்யோஹ பாந்தவா
மூர்க்கஸ்ய ஹ்ருதயம் சூன்யம் சர்வசூன்யம் தரித்ரதா.

என்னும் மொழிபோல் பாலகரில்லாத வீடு சூன்யம் பந்துக்களில்லாமற்போனால் சூன்யம் மூர்க்கமாயிருந்தால் குணமானது சூன்யம் தரித்திரனுக்கு எல்லாம் சூன்யமாகும், இந்தபாலகன் நமது வீரியத்தில் ஜனித்தவனல்ல; மத்தியில் வந்தவன் இந்தப்பாலகன் தாய்தந்தைகள் எப்போது விட்டுப்போனாரோ அப்பொழுதே செத்தவனுக்கு சமானமானவன் ஆனால் இதுவரைக்கும் ஆயுசுடனிருந்தான். இப்படியிருந்தும் பகவான் நம்மைக்காட்டியது நம்மால் ஜீவிக்கலானான் இந்த சமயம் நமக்கும் அவனுக்கும் ருணானுபந்தம் தீர்ந்துவிட்டது. இனி அந்தப் பாலகனுக்கு ஆயுசிருந்தால் பகவான் காப்பாற்றுவான். ஆகையால் இந்தப் பாலகனைதந்து திரவ்யம் பெற்றுக்கொண்டால் சில காலமானாலும் சுகமாய் பிழைக்கலாம் என்றுச்சொல்ல இதைக்கேட்ட அவன் தேவியும் நாயகனைப்பார்த்து ஓ நாயகா! நீர் சொல்வது நிக்ஷேபமே ஆனபோதிலும்பெற்றவரைவிட வளர்த்தவருக்கு பாசமதிகமாகும் அதெப்படியென்றால், இந்த புவனத்தை தன் குக்ஷியில் வைத்து ரக்ஷிக்கப்பட்ட பக்ஷிவாகனமேறிய ஸ்ரீகிருஷ்ணன் தேவகி தேவி கெர்பத்தில் பிறந்தும், வளர்த்த கோபிகையென்னும் ஓர் யாதவமாது தான் பெற்றப்பாலகன்போல் ரக்ஷிக்கவில்லையா இதையெல்லாம் பாகவதத்தில் வாசிக்கவில்லையா? ஆகையால் வளர்த்த பாசமதிகரித்திருக்கும், இந்த விஷயத்திற்கு நானெப்படி சம்மதிப்பேன் என்மனம்கொஞ்சமாகிலும் சம்மதிக்கமாட்டேன் இவனுக்குபால்யத்தில் நாமென்ன செய்தாலும் செய்யலாம் நமக்கு விரோதியாய் நடக்கமாட்டான் அப்படிக்கொத்த பாலகனை விற்று ஜீவிக்கவேண்டுமா! நித்தியாத்மனான ஸ்ரீ ஹரி நமது சத்தியத்திற்கு மகிழ்ந்து தாரித்திர ஹிம்சை செய்கான் தவிர இது எக்காலும் நிற்காது இப்படி சம்பாதித்த திரவியம் நிர்க்காது,



(சுலோகம்.)

ஆசாணு மனதீமனோ ரதகுலாத்ருஷ்ணா தரங்காகுலா
ராகக்ராஹவ தீவிதர்க்கவிஹகா தைர்யத்ருமத்வம்சநீ
மோஹாவர்த்த சுதுஸ்தராதிகஹநா ப்ரோத்துங்ச கிந்தாதடி
தஸ்யாபாரக தாவிசுத்தமனசோ னம்தம்தி யோகீஸ்வரா.

என்னும் நீதிவாக்கியம் அனுசரித்து மேற்சொல்லிய துராசைகளை நிக்கிரயிக்க யோகப்யாச யோகமான பூசுரன்கெர்ப்பத்தில் ஜனித்தும் உமக்கேன் இப்படிபேராசை இப்படி செய்வதற்கு என் மனம் பதருகின்றது என்றுச்சொல்ல இதைக்கேட்ட அந்த பூசுரன் நாயகியைப் பார்த்து ஓ மாதே! உனக்கேதும் தெரியாது துஷ்கார்ய ப்ரவர்த்தனமாவதும், சத்கார்ய ப்ரவர்த்தனமாவதும் இதற்கு நாம் சொந்தக்காரல்ல நிர்மிக்கப்பட்ட தெய்வமே நம்மையிதுபோல் செய்யுகிறான். ருணானுபந்தமிருக்கும் வரையில் பசு பத்னி மக்கள். வீடு இருக்கும் ருணானுபந்தம் தீர்ந்துவிட்டால் இதயெல்லாம் நமக்கு தூரமாகும் இதுபோல் இந்தப் பாலகனுக்கும் நமக்கும் ருணானுபந்தமிருந்தது நாம் வளர்த்தோம் இந்த சமயத்தில் அவனுக்கும் நமக்கும் ருணானுபந்தம் தீர்ந்து விட்டப்படியால் பகவான் நமக்கு இந்த மதிதந்தான். இதைப்பற்றி நீ எவ்வளவு விசனமடைய வேண்டாம் இது காலம் நீ இந்த பாலகனை சொந்தபுத்திரனைப்போல் காப்பாற்றினது நிஜமானால் பகவான் இவனை ரக்ஷிப்பான் நாம் துக்கமடையாமல் இவனைதந்து திரவியத்தை பெற்றுக்கொண்டு சுகமாயிருக்கலாமென்று நீதியாக போதிக்க இதைக்கேட்ட அம்மாது சம்மதித்து ஒப்பிக்கொண்டாள். அந்த வேதியன் இராஜவீதியில் பறைசாட்டிக்கொண்டு போகப்பட்ட காவலரை அழைத்து ஐயா! எனது வீட்டில் ஒருப்பாலகனிருக்கிறான் எனக்கு ஆயிரம் வராகன் தந்தால் அவனை தருக சம்மதிப்பேன். இதுபோல் என்தேவியையும் கேழ்ப்பீர் என்றுச்சொல்ல காவலர் யம்மாது அருகில் சென்று அம்மா! உனது பாலகனை தருவாயா என்று கேட்க அதற்கு அம்மாது ஐயா காவலரே! ஆயிரம் வராகன் தந்தால் நான் கொடுக்க சம்மதிப்பேன் என்றுச்சொல்ல இதைக்கேட்ட காவலர் மந்திரியிடம் வந்து ஐயா! இந்நாடெல்லாம் தேடியும் யாரும் பாலகனை தருக சம்மதிக்கவில்லை ஓரிடத்தில் ஏழைப்பிராமணனும் அவன்தேவியும் ஓரிடத்திலிருந்தார் அவரிடத்தில் ஒருப்பாலகனிருக்க அதைகேட்க பேருக்கு ஆயிரவராகன்தந்தால் தருகிறதாய்சொன்னார். என்றுச்சொல்ல மந்திரி இதைக்கேட்டு அதைப்போல் கொடுக்கும்படி உத்திர

வுசெய்ய காவலர் இரண்டாயிரவராகன் அந்த பூசுரனுக்குக்கொடுத்து
விட்டார். பிறந்தது முதல நாயகி நாயகனும் பட்ட கஷ்டத்தை தீர்த்
திட இந்த திரவியத்தைப் பார்த்து சந்துஷ்டியடைந்தார். பிறகு அந்
தப் பாலகனை காவலர் வசம் ஒப்பவித்து விட்டார். அந்தக் காவலர்
அந்தப்பாலகனை அழைத்துக் கொண்டுபோய் மந்திரியிடம் ஒப்பவி
க்க அந்த மந்திரி அந்தப்பாலகனை தன் வீட்டில் வைத்துக்கொண்டு
போஷித்து வந்தார்.

அந்தப்பாலகன் மந்திரி வசம் வந்ததினமுதல்கொண்டு மணிகே
தனுக்கும் அவர் ஜேஷ்ட பத்தினியாகிய குணவதிக்கும் அன்னமுத
லான சகலபதார்த்தங்கள் வாயிக்குருசிகரமில்லாமல் இருந்தது இதை
யறிந்து வைத்தியனை அழைத்து கைக்காட்ட அந்த வைத்தியன் நாடீ
பரிக்ஷை பார்த்து எந்த ரோகமும் கோசரமாயிருக்க நிர்நிமித்தமாய்
இப்படி யாவதற்குக் காரணமேது என்று அவரவர் மனதில் நினைத்து
க்கொண்டு ஒருவர் முகம் ஒருவர் பார்த்து நாம் யெந்த வியாதியும்
இல்லை யென்றுச்சொன்னால் நம்மை வெருப்பார் என்று எண்ணமிட்டு
ஒருவன் உஷ்ணமென்றும் ஒருவன் பித்தமென்றும் சிலதுபேர் பித்த
உஷ்ணமென்றும் இன்னம் சிலதுபேர் ஜ்வரமென்றும் இப்படி அவா
வர் மனதிற்கு தோற்றவாருப்போல் சொல்லி ஜீர்னசக்தியான லேக்கி
யம் செய்து தந்து காலம் கழித்துக்கொண்டிருந்தார். மணிகேதனும்
அவன் தேவியும் வைத்தியர் சொன்னது நிஜமென்று அவர்தந்த மரு
ந்து தின்றுக்கொண்டு வந்தார் அதனால் குணமேதும் கிடையாது தின
த்திற்கு தினம் கவலையடைந்தார். இப்படிருக்க நவராத்திரி சமீபிக்க
வே வழக்கப்படி பட்டத்து செந்திருபுதம் வைத்து பூஜித்துக்கொண்
டிருந்தார் ஒன்பதாம் தினத்தில் மந்திரி மணிகேதன் அருகில் வந்து
ஓ இராஜசேகரா! இந்த தினம் மஹாநமி, மகாபூஜை நிறவேற்றுகிறத
ற்கு தாங்கள் தயவுசெய்து தேவாலயத்திற்கு வருக வேண்டுமென்று
அழைக்க ஹரிஹரி இதுவொரு பாபம் சம்பவித்ததா! என்று துக்க
மடைந்து மந்திரி பலத்காரத்தால் தேவாலயத்திற்கு வந்து கரத்தை
கூப்பி தேவி முன்னில் நின்றார் அத்தினத்தில் அப்பாலகனுக்கு ஸ்தா
னம் செய்யவைத்து உபசாரங்கள் ஆசரித்து பாலுசாதமிட்டு மஞ்சள்
வேஷ்டி கட்டி கண்டத்தில் செகப்பு புஷ்பமாலை போட்டு தேவஸ்தான
த்திற்கு அழைத்து வந்து கழுத்தை குனியச்செய்து, பலிபீடத்தின்
அருகில் நிறுத்தினார். அர்ச்சகன் தேவிக்கி மங்கள ஹாரதிசெய்து
வேந்தன் கையில் செந்திருபுதம் தந்து பலிக்கொடுப்பீரென்றுச் சொ



ல்ல இதற்குள் அஸ்தமானமாச்சுது சமீபத்திலிருக்கும் அயோத்தியா
புரிக்கு வந்து கார்யாதிகளை தீர்த்துக்கொண்டு போஜனமறிந்து சய
னிக்கும் சமயத்தில் வேடர்கள் பிரம்மானந்த யோகியைப் பார்த்து
ஐயா! இந்த ஸ்தலபெருமை சொல்லுமென்று கேட்க பிரம்மானந்த
யோகி சொல்லத்தொடர்ந்தார்.

இந்த அயோத்தியா புரியானது வைகுண்டத்திற்கு சமானமா
னது இந்தப்புரியை சூர்யகுலத்திற் பிறந்த இக்ஷ்வாக்கு மகாவேந்தன்
முதலான சக்கிரவர்த்திகள் பரிபாலித்தார். அவர் சந்ததியி சேர்ந்த
தசரதசக்கிர வர்த்திக்கு ஸ்ரீராமலக்ஷ்மண பரத சத்துருக்கர் என்று
நாலு புதல்வர் ஜன்மித்து மிதுலாநகரத்தின் ஜனக சக்கிரவர்த்தியும்
அவர் தம்பியும் புதல்வரை ஜனித்தார் லோகரக்ஷணார்த்தமாய் ஸ்ரீராம
மூர்த்தி இராவணாதி இராக்ஷசரை சங்காரம் செய்து பிரசித்தியடைந்
தார். இந்த அயோத்தியா வைகுண்ட மென்றும் இங்கு இருக்கப்ப
ட்ட சரயூநதி விரஜாநதியென்னும் பிரசித்தியா யிருக்கிறது ஸ்ரீராம
சுவாமியுடைய அவ்தாரத்தால் இந்த ஸ்தலம் மகா மகிமையடைந்து
இருக்கிறது.

(சுலோகம்.)

அயோத்தியா மதுராமாயா காசிகாஞ்சி அவந்திகா
புரித்வார வதீசைவ சப்தைதே மோக்ஷதாயகா.

என்பதுபோல் மோட்சஸ்தலம் ஏழு வீட்டிலும் பிரதான ஸ்தல
மாயிருக்கிறது இங்கு நாம் சேவிக்கவேண்டிய ஸ்தலம் யாதெனில்,
யாகவேதி, யாகசாலை, ஸ்ரீராம ஜன்மஸ்தானம், சீதாலக்ஷ்மண பரத
சத்ருஞ்ஞ அனுமந்த சமேதம், ஸ்ரீராமசுவாமி சந்நிதி, ஸ்வர்னராம
லக்ஷ்மணசந்நிதி, கனகமண்டபம், இந்திரமண்டபம், தர்மஸ்தானம்,
ஹரிஸ்தானம், விஷ்ணு ஹரிஸ்தானம், சித்திரபீடம், வசிஷ்டஸ்தா
னம், பராசரஸ்தானம், அகஸ்தியஸ்தானம், சுக்ரீவாங்கதாதிஸ்தானம்
அனுமந்தசன்னிதி, வித்தியாகுண்டம், அக்கினிகுண்டம், அனுமந்த
குண்டம், கஜேந்திரகுண்டம், சீதாகுண்டம், சுக்ரீவகுண்டம், விபீஷ
ணகுண்டம், தசரதகுண்டம், கோசலகுண்டம், சுமத்திராகுண்டம்,
ருக்மணிகுண்டம், பிரஹஸ்பதிகுண்டம், ஊர்வசிகுண்டம், யோகினி
குண்டம், பிரம்மகுண்டம், ரணவிமோசன குண்டம், குசுமாயுதகுண்
டம், வால்மீகதீர்த்தம், சக்கிரதீர்த்தம், வைகரணிதீர்த்தம், இதுகள்
முக்கியமானது இந்த சரயுநதியை வசிஷ்டநதியென்றும், இராமகெங்
கையென்றும், சொல்லுவார். இதுவுமன்றி இந்த அயோத்தியாபுர

மானது பூர்வகாலத்தில் விஸ்தாரமாயிருந்தது அந்த காலத்தில் காசி க்ஷேத்திரம் இந்த அயோத்தியாபுரிக்கு ருத்திரபூமியாயிருந்தது என்று பிரம்மானந்தயோகி சொல்ல வேடர் கேட்டு சந்தோஷமடைந்து யோகியோடும் கூடி சகல ஸ்தலங்களை சேவித்து ஸ்ரீராமசாமி பிரசாதத்தை அடைந்து அங்கிருந்து புறப்பட்டார். அப்படி போகுஞ்சமயத்தில் வேடர் யோகியைப்பார்த்து சுவாமி தாங்கள் சொன்ன கதைதன்னில் மணிகேதன் பூர்வீகம் தான்பெற்று விட்டு வந்த பாலகனை தேவிக்கு பலிக்கொடுக்க செந்திறுபுதம் பிடித்துநின்றார் என்றுசொன்னீரே அந்தக் கதைதன்னை சொல்லுமையாவென்று கேட்க யோகிச் சொல்லத் தொடர்ந்தார்.

---

# எட்டாம் மஜிலிக்கதை.

## ருணானுசம்பந்தம்:

ஓ வேடரே! கேட்பீர், அர்ச்சகனால் கொடுக்கப்பட்ட செந்திறுபுதத்தைபெற்றுக்கொண்டு தன்னுடையபுதல்வன் சிரத்தைகொய்ய எண்ணமிட்டு கத்தியைநோக்கியவுடன் மணிகேதன் தேகத்தில் வேர்வையுண்டாகி தேகமுழுதும் நடுக்கலிட்டு கத்தியானது கைச்சோர்ந்து கீழேவிழுந்தது மறுபடியும் அதையெடுத்து மேலுக்கு தூக்குஞ்சமயத்தில் மனதில் சங்கடமுண்டாகி சக்தியற்று ஆ ஹா! இதுயென்ன ஆச்சரியம் இப்படி துயரமிட்டு செவுத்தை ஆதாரமாய் செய்துக்கொண்டுசாய்ந்து நிர்நிமித்தமாய்நிற்க. இப்படியாக காரணமேதோவென அர்ச்சகனைகேட்க, அவர் இதைபார்த்து ஐயா! தேகசம்பந்த முண்டானவர்க் கேதாகிலும் ஆபதை யுண்டாயிருந்தால் இப்படி லபிக்கும். அதை தேவரீர் செவ்வையாய் ஆராய்ந்து காரியத்தை செய்ய எண்ணமிடுவீர், கைசோர்ந்து போனபிறகு ஆலோசித்து விசனமிடுவது சரியல்ல என்றுச்சொல்ல, இதைக்கேட்ட மணிகேதன் ஐயா! எனக்கு தேக சம்பந்தமான பந்துக்கள் இங்குயாரும் கிடையாது என்றுச் சொல்ல சமீபத்தில் நின்றுக்கொண்டிருந்த மந்திரியானவன் வேந்தனைப்பார்த்து தேவா! தாங்கள் நேற்றியதினம் உபவாச மிருந்தப்படியால் உங்களுக்கு தேகதாருட்ய மில்லாமல் இப்படி இருக்கலாம், ஆகையால் போஜநார்த்தமாய் வீட்டிற்கு போகலாம் வாவென்று அழைக்க அந்த மணிகேதன் மறுபடியும் அப்பாலகன் சிரத்தைக் கொய்யத் துணிந்தார். அந்தகத்தியானது ஸ்தம்பம்போல் நின்றுவிட்-



டது அதை யசக்குவதற்கு சக்தியற்றும் எல்லோரும் அசக்கிபார்த்து விட்டார். இதைப்பார்த்து மந்திரி ஓ இராஜகுல சூடாமணி! இந்தப் பாலகன் தந்தை மந்திரவாதியாயிருந்து கத்தியை மரம்போல செய்து இருக்கலாம், தன்பாலகன் சாகாமலிருக்க இவன் கண்டத்தில் ஒருயந்திரத்தை கட்டியிருக்கிறான் ஆனால் இன்னமோர்விசை பரிக்ஷித்து பார்க்கவேண்டுமென்று சொல்ல மணிகேதன் மறுபடியும் அந்தகத்தியை எடுத்துப்பாலகன் சிரசைத்துணிக்க அந்தச் சமயத்தில் கத்தியானது மூன்று துண்டாக பூமியில் விழுந்தது, இப்படி துண்டாய் விழுந்தும் அவன்சிரம் அறுபடாமல் போனதும் வேந்தன் யுதரத்தில் ஒருவிதமான எரிச்சலெடுத்து நிற்கமாட்டாமல் பூமியில் விழுந்து மூர்ச்சையடைந்து கொஞ்சநேரத்திற் கெல்லாம் மூர்ச்சை தெளிந்து அர்ச்சகனைப் பார்த்து ஐயா! இதற்கு ஏதுக்காரணமோ அதை நீரே சொல்லவேண்டுமென அதற்கு வேதியன் தேவா! நான் ஏதென்றுச் சொல்லுவேன் நான் சொன்னதை சித்தத்தில் வையாமற்போனீர். முந்தியே நான் சொன்னதற்கு அப்படிக் கொற்றவர் கிடையாதென்று சொன்னீர். இப்படி சொல்லத்தகாது ஏதோ ஒரு சந்தர்பத்தால் கொஞ்சம் பந்துக்களாயிருந்தால் இப்படி ஆபதை சம்பவிக்கும். இந்த பாலகனுக்கும் உமக்கும் எங்கோ ரத்தசம்பந்த மிருக்கவேண்டும் அதைசெவ்வையாய் பரிக்ஷித்து கார்யத்தை நடத்தவேண்டும் அப்படியன்றியோசனை செய்யாமல் காரியம் செய்து விட்டு பிறகு துக்கமடைவது நீதியல்ல இதற்காக ஒரு சின்னகதைதன்னை சொல்குறேன் அதைக்கேட்பீரென்று சொல்லத்தொடர்ந்தார்.

---

### அர்ச்சகன் வேந்தனுக்கு சிறுகதைச் சொல்வது:

அல்காவதி யென்றபட்டணத்தில் ஒரு மந்திரவாதி யிருந்தான் அவன் தன்னுடைய மந்திரபலத்தால் சகல மிருகஜாதி ரூபமும் நானாவிதமான பக்ஷிரூபமும் யெடுக்க சக்திபற்றவனா யிருந்தான். இப்படிருக்க அவனுக்கு அனேக தினமாக சந்தானமில்லாமலிருந்து தள்ளாதவயதில் ஒரு பெண்குழந்தை ஜனிக்க அந்தக்குழந்தையை அதிகபிரியத்துடன் வளர்த்து வந்தான் இதுவுமன்றி தான் அப்பியாசித்து வந்த மந்திரமெல்லாம் உபதேசித்தான். அப்பெண்குழந்தை எவ்வர்னபக்குவமடைவதைக்கண்டு சதுர்சாஸ்திர பிரவீணரான ஒருபிரமாச்சாரிக்கு விவாகம் செய்துத்தந்து அவன் பிறகே அம்மாதையும் அனுப்பிவிட்டு தான் தன் வீட்டிலிருந்தான்.

இப்படியாக மந்திரவாதி புதல்வியும் மருகனும் பிரயாணமடை
ந்து போகும்மார்க்கத்தில் எங்கும் நீரோட்டைக் காணமல் பசியால்
மெலிந்து வெகுதூரம்நடந்து ஓரிடத்தில் நீரோட்டைதனைக்கண்டு தா
கம் தீர்த்துக்கொண்டு அங்கிருக்கப்பட்ட ஆலமரத்தின் நிழலிலிருவ
ருமமர்ந்திருந்தார். இப்படி உட்காந்திருந்து விநோதமாகமொழிகளா
டிக் கொண்டிருக்க நாயகியைப் பார்த்து ஓ நாயகி! உன் தந்தை ஜகப்
பிரசித்தியடைந்த மந்திரவாதியல்லவா! அவரேதாகிலும்மந்திரம் உன
க்கு உபதேசித்திருக்கிராரு அந்த வித்தை எனக்குக் காட்டும் யான்
பார்த்து சந்தோஷிக்கலாம்என்றுச்சொல்ல இதைக்கேட்ட அம்மாது
நாயகா! நாம் நாடுசேர்ந்த பிறகு உனக்கெல்லாம் காட்டுகிறேன் உம்
மைத்தவிர யாருக்கு காட்டப்போகிறேன் இப்போது நாம் நடுக்காட்
டில் இருக்கிறோம் இதுவுமன்றி என் தந்தை இங்கில்லை ஏதாகிலும்
ஒரு ஆபதை நேர்ந்திட்டால் அதை தீர்ப்பதற்கு ஆறும் கிடையாது
இதைக்கேட்ட நாயகன் நீயெனக்குச் சொன்னல் அதுபோல் செய்கு
றேன் என்றுச்சொல்ல நாயகன் மொழியை தள்ளலாகாதென்றும் வர
ப்பட்ட ஆபத்து தனக்கு தெரியாமலும் தன்னுடைய சமுத்காரம் புரு
ஷனுக்கு காட்டவேண்டுமென்று சந்தோஷமடைந்து ஒருப்பிடி மண்
ணும் ஒருப்பிடிகல்லும் மந்திரித்து நாயகன் யெதிரில் வைத்து ஓநா
யகா! நான் அநேக விதமான ரூபங்களெடுப்பேன் நீ பயப்படவேண்
டாம் நான் பக்ஷிரூபமெடுத்து உன்னருகில் வரும்போது கொஞ்சம்
மண்ணையெடுத்து போடும் அப்போது நான் எப்போதும்போல் ரூப
மெடுப்பேன் மறுபடியும் மிருகரூபமானல் உன்னருகில் வருவேன் நீ
கொஞ்சதூரத்தில் இருக்கும்போதே ஒருக்கல்லை என்மீது படும்படி
போடுவீர் மறுபடியும் நிஜரூபமெடுப்பேன் என்றுச்சொல்லி மந்திரி
த்த மண்ணையும் கல்லையும் கொடுத்துவிட்டு ஆபரணமெல்லாம் நாயக
னிடம் தந்துவிட்டு ஒருசெடி அருகில் சென்று ரவிக்கையும் ஆடை
யும் அவிழ்த்துவிட்டு மந்திரஜபஞ்செய்ய நானாவிதமான பக்ஷிரூபமெடு
த்தாள் பிறகு புலிரூபம் தரித்து ஆர்பாட்டமாய் வருக அந்த கோர
ரூபத்தைப் பார்த்து பயமடைந்து தன் நாயகி மந்திரித்து தந்தகற்
களை அதின்மீது எறிவதற்கும் மனம் தோன்றுதப்படிக்கி கலவரப்ப
ட்டு மூர்ச்சையாய் பூமிமீது விழவே வியாக்கிரரூபமானநாயகி தன்னு
டைய பூர்வக்யான மில்லாமல் நாயகனைக் கொன்றுவிட்டாள்.

இப்படிருக்க அந்தமந்திரவாதி தன் இஷ்டானுசாரமாய் வீட்டை
விட்டு நாயகியுடன் புறப்பட்டு வனசஞ்சாரம் செய்துக் கொண்டிருந்
தான் இப்படிருக்கும் சமைத்தில் கானகத்தில் தண்ணீர் குடித்துக்கொ



ண்டிருந்த புலியைக்காண அதின்கரத்தில் வளயலிட்டிருப்பதை இந்த
மந்திரவாதி நாயகியறிந்து ஓ நாயகா! இந்த புலிக்கரத்தில் வளையலி
ருக்க காரணமேதென்று கேட்க அம்மந்திரவாதி கல்லை மந்திரித்து
அதின்மீது போடவே அச்சமயத்தில் தன்னுடைய நிஜரூபமெடுத்து
தந்தையெதிரில் வஸ்திரயீனமாக நிற்க. பார்த்த அந்த மாது தாயான
வள் தான் கட்டியசேலைதன்னில் பாதிக்கிழித்து புதல்விக்கு கொடுக்க
அதை அம்மாது தரித்தாள் இதுவரைக்கும் மந்திரவாதி கண்களை
மூடிக்கொண்டிருந்து சேலைகட்டின பிறகு கண்திறந்து தன் புதல்வி
யைக் கண்டுயேனம்மா! மாதருக்கு வித்தை கற்றுத்தருவது எப்போ
தும் தப்பிதம் உனக்கு சகல வித்தைகள் புகட்டிருந்தும் உனது மௌ
டீகத்தால் ஸ்ரீபுத்தியை பெருமையாய் செய்யாமல் விபரீதகாரியம்செ
ய்துக்கொண்டு இப்படி வாத்தகுமா! என்று கேட்க அம்மாது தந்தை
க்கு நமஸ்கரித்து கண்களில் ஜலம் சொரிந்து தந்தையே! நான் ஏது
ச்செய்கிறேன் என்னை நாயகன் நிர்பந்தம் செய்ததற்கும் அவர் உத்
திரவுக்கு அடங்கினன் இந்தக் காரியத்தைச் செய்தேன்.

(சுலோகம்.)

ராமோஹேமம் ருகம்நவேத நஹுஷோயானே நியோஜ்யத்வஜான்
விப்ரங்யே கதமஸ்யவத்ஸ ஹரனேலஜ்ஜாம் ஜஹேனஹோஹய
த்யூதப்ராத்ரு நதுஷ்டயம்ச சமஹிஷிம்தர்மாத்ம ஜோதத்தவான்
ப்ராயஸ்சர்வ ஜகத்விநாச சமயேபுத்வா பரிக்ஷீயதே.

தசரதன் வரப்பாலகனுகிய ஜேஷ்டபுத்திரன் ஸ்ரீராம சேந்திரன்
மாரீசன் மணிதனென்று அறிந்திடாமல் மானென்று நினைந்தார்,
நஹுஷ சக்கிரவர்த்தி தன்னுடைய பல்லக்கு சுமக்க விப்பிரவனை நிய
மித்தார் கார்த்யாவீர்யார்ஜுனன் பூசுராச்ரேசன் கோவைநபகரிக்க
வேண்டி வெட்கம் விட்டவனுய் நின்றான் தர்மநந்தன் தன்னுடைய
நாலுதம்பிகளும் பட்டப்பு தேவியையும் துர்யோதனன் சபையில்வை
த்து ஓடினன். இப்படி மகானுபாவரெல்லாம் காலகதியால் கஷ்ட
மெல்லாம் அனுபவித்தார் என்தலைதன்னில் எழுதியப்படி "விநாச
காலே விபரீதப்புத்தி" என்பதுபோல் எனக்கு இப்படி புத்திலபித்தது
ஐயோ தெய்வமே! நான் இப்படி கஷ்டப்பட்ட இந்தவித்தை யப்பியா
சித்தனே! இல்லாமல் யென்விதி இப்படிருந்ததோ என்று துக்கமடை
ந்து இனிநான் நாடடைந்து பந்துக்கள். முகம் பார்க்கமாட்டேன்.
இந்த அபவாதமும் துக்கமும் என் மரணகாலம் வரைக்கும் விடாது.
ஆகையால் நீங்கள் என்னைப்பற்றி துயரப்படவேண்டாம் என்னை ஆசி

ர்வதித்து அனுப்பினால் நான் மறுபடியும் வியாக்கிர ரூபமெடுத்து இந்தக் கானகத்தில் என் பிராணத்தை விடுவேன் என்றுச்சொல்லி தாய் தந்தைகளுக்கு வந்தனஞ்செய்து உடனே புலிரூபமெடுத்து கானகஞ் சென்றாள்.

இதுபோலாக விசாரிக்காமல் திரேக சந்தர்ப்பமுடையவரை கொன்றுவிட்டு பிறகு யோசிப்பதில் பயனில்லை என்றுச்சொல்ல, இதற்குள்ளாக மந்திரி வேந்தனைப் பார்த்து தேவா! இதுவெல்லாம் வீண்சங்கதி சோகமடைவதும் கத்திமயங்கும்படி மந்திரத்தால் செய்வதுண்டு இந்தப்பாலகன் தந்தை ஒரு மந்திரயந்திரமெழுதி இவன் கழுத்தில் கட்டியிருக்கிறான் அதை அவிழ்த்து விட்டு பலிக்கொடுப்பீரென்றுச் சொல்ல மணிகேதன் இதைக்கேட்டு தான் அந்த மந்திரத்தை அவிழ்த்து அதில் என்ன இருக்கிறதோ பார்ப்போமென்று வெளிச்சத்தில் வந்துபார்க்க தன்கையால் எழுதப்பட்ட "யோமே கர்பகதஸ்யாபி" மாதசத்ருபிதாவைரி" என்னும் இரண்டு பதங்களை நினைவுகூட்டிக்கொண்டு இந்தப்பாலகன் முகாரவிந்தத்தைப்பார்த்து தன் புதல்வனென்று அறிந்துக்கொண்டு அர்ச்சகனை கொண்டாடி சந்தோஷமடைந்து அந்தப்புரம் வந்து தன்னுடைய நாலுபட்டதேவிமாரை அழைத்து யருகில் நின்றுக் கொண்டிருந்த பாலகனை ஜேஷ்ட பாரியாளாகிய குணவதிக்குக் காட்டி இப்பாலகன் யார்? உனக்குத் தெரியுமா! என்று கேட்க அம்மாது அயிஸ்வர்ய மதத்தால் தன் உதிரத்தில் பிறந்த பாலகனை மறந்து "அவன்யாரோ நானறியேன்" என்றுச்சொல்ல அந்தமொழியானது மணிகேதன் காதில் நாராசம் விட்டதுபோலிருந்தது அப்பொழுது மணிகேதன் ஐயோ! தாயார் தான்பெற்ற பாலகனைப்படியாலும் மறந்து போவதுமுண்டா! அதிக துக்கமடைந்து சீசீ அயிஸ்வர்யம் மிகவும்கெட்டது தன் உதிரத்தில் பிறந்த பாலகனைக்கூட மறக்கச் செய்கிறது இதுவுமல்லாமல் கூடப்பிறந்தவரைக்கூட மறக்கச்செய்யும்? என்று தன் மனதில் தானே அழுதுக்கொண்டு பாலகனையெடுத்து முத்தமிட்டு மடிமீது உட்காரவைத்து தலைத்தடவி மாதரைப்பார்த்து அவருடன் நடந்த சவிஸ்தாரம் சொல்ல குணவதி செவ்வையாய் யோசித்து பிறகு ஞாபகம் வந்து அந்தப்பாலகனை எடுத்து முத்தமிட்டு உச்சிமுகர்ந்து திருஷ்டி கழற்றி அடா நான் பெற்ற ரத்தினமே பாவிகளான எங்கள் கர்பத்தில் பிறந்து இப்படி கஷ்டம் அனுபவித்தாய் இன்றைக்கு உன்னைப்பார்க்க ருணமிருந்ததாயென்று சோகசாகரத்தில் மூழ்கி முந்தி சங்கதிகளை நினைந்துக்கொண்டு அழப்பட்ட குணவதியை மற்றமூவர்களும் பார்த்து அழுகத்தொடர்ந்தார். இதை



யெல்லாம் பார்த்து பாலகன் பயமடைந்து தன்னை எதுசெய்குவாரோ என்று திகிலடைந்து அவரைவிட்டு தூரமாய் ஒருமூலை தன்னில் பதுங்கினான். இதைக்கண்ட மணிகேதன் எல்லோரையும் சமாதானப்படுத்தி பாலகனை தைர்யப்படுத்தி தின்ன பழவர்க்கங்களை கொடுத்து மாதரைப்பார்த்து மாதரே நீங்கள் விசனம்விட்டு சந்தோஷமாய் நால்வரும் ஒருமனதாய் பேதமில்லாமல் இந்தப்பாலகனை ரக்ஷிப்பீர் ஜாதகத்தில் ஜோதிஷன் எழுதிய ஆபதைகள் நேரில் நடந்து விட்டது. தாய் தந்தையான நாமே முதலில் விரோதியா யிருந்தோம். நம்மை மறந்து போஷித்தவரை தாய்தந்தையென்று நம்பி இருந்தான் க்ஷாமதிசையை சகிக்கமுடியாமல் அவர் விற்றப்படியால் அவர்நமக்குவிரோதியாகிவிட்டார். பிரபுவான யான் இவனை பலிக்கொடுக்க மனத்தைர்யம்கொண்டுகத்தியை எடுத்தேன் தேவதையும் இவனை பலிக்கொள்ள எண்ணமிட்டாள்.

நிறைந்த ஆயுசுடையவனாதலால் இந்தப்பாலகன் பிழைத்தான். இனிதுக்கமடைய காரியமில்லையென மாதருக்கு தேருதலை சொல்லிவிட்டு, மந்திரியை யழைத்து இதுமுதல்கொண்டு தேவதைக்குபொலி கொடுக்கும் பூஜைதன்னை நிறுத்துவீரென உத்திரவு செய்து விட்டு, பகல் போஜனம் பாலகனோடு செய்து தன்னுடைய கொலுமண்டபம் யடைந்து ரத்தினகசிதமாகிய சிம்மாசனத்தில் பரிஜனங்கள் சூழகொலுவமர்ந்திருக்கும் சமயத்தில் மந்திரியை அழைத்து நேற்றியதினம் தேவதைக்குப் பலி கொடுப்பதற்கு இப்பாலகனை விக்கிரயித்தவரை இக்ஷணத்தில் அழைத்து வாவென்று சொல்ல அம்மொழிக் கேட்ட மாத்திரத்தில் சேகுவரை அழைத்து அந்த வேதிய குலோத்தமமான நாயகி நாயகரை அழைத்து வரும்படி மந்திரிசொல்ல அதுபோல் காவலர் சென்று அவ்விருவரை அழைத்துக்கொண்டு வந்து வேந்தன் முன்னில் நிறுத்தினர். அப்போது மணிகேதன் அவரைப் பார்த்து நீங்கள் இந்தப்பாலகனைவிக்கிரயித்தது நிக்ஷயமா? இந்தப்பாலகன் உங்களுக்கு எங்கு அகப்பட்டான்? இல்லாமல் உங்களுடையவயற்றில் ஜனித்தவனா? நிக்ஷயம் சொல்வீர் இல்லாவிட்டால் தண்டனைக்கு உள்படுவீரென்றுச்சொல்ல அந்த வேதியன் கைகளைக் கட்டிக்கொண்டு வேந்தனைப் பார்த்து பயமடைந்து. ஓ இராஜோத்தமா! நாங்கள் அநேகதினமாக காலமுஷ்டியென்னும் நகரத்தில் வாசம் செய்தோம் ஓர் சமயத்தில் ஒருவேதியன் தன்னுடைய நாலு பத்தினியுடன் கூடியந்நாட்டிற்கு வருக நமது வீட்டின் ஓர்புரத்தில் வாசம் செய்திருந்தார். இப்ப

டிருக்கும் சமயத்தில் கர்ப்பிணியாயிருந்த ஜேஷ்டபாரியாள் ஆண் புதல்
வனைப் பெற்றாள். பத்து இராத்திரி சென்றபிறகு பதினோராம் தினத்
தில் பாலகனை ஒண்டியாய் விட்டு அவரெங்கே சென்று விட்டார்.
ஆனால் இதுவரைக்கும் அவரிருக்குமிடம் தெரியவில்லை, பாலகன்ரோ
தனை செய்வதைக்கண்டு என்தேவி சென்று பார்த்து வந்து எனக்குச்
சொல்ல எனது உத்திரவுபடைந்து அப்பாலகனை எடுத்துக்கொண்டு
வந்து இதுமுதல் காப்பாற்றினோம். இப்படிருக்க நிரந்தரமாய் அன்
னட்டிற்கு க்ஷாமம் வருக உமது தேசம் வந்து வாசஞ்செய்து சுகமா
யிருந்தோம். தரித்திர தோஷத்தால் எங்களுக்கு இப்படி துர்புத்தி
பிறந்து இப்பாலகனை விற்றோம் என்றுச்சொல்ல இதைக்கேட்ட மணி
கேதன் அவரைப் பார்த்து வளர்த்தப் பாலகனை நரபலிக்கு தந்தப்படி
யால் உம்மை கடினமாய் தண்டிக்கவேண்டும், ஆனாலும் தாய் தந்தை
கள் விட்டு வந்த சமயத்தில் போஷித்த உபசாரத்திற்கு மன்னிக்கலா
ச்சுது, என்றுச்சொல்லி அவருக்கு வேண்டிய திரவ்யம் தந்து வழிக்
கூட்டி அனுப்பிவிட்டார்.

இப்படிருக்க ஒருநாள் இராத்திரியில் நாயகி நாயகனும் சயன
கிருஹத்தில் மன்பதகேளி விலாசமா யிருக்கும்போது குணவதி நாயக
னைப் பார்த்து, ஓ நாயகா! என்மொழியை கேட்பீர், யேதென்றால்
நாம் பந்து ஜனத்தையும் மாதா பிதாக்களை விட்டு தூரதேசத்திற்கு
வந்து அதிக நாளாய் விட்டது. நமது பாலகனுக்கு உபநயவிவாகம்
முதலாகிய சுபகாரியங்கள் நடத்தவேண்டி யிருப்பதால் இனி நாம்
பந்து ஜனத்துடன் சேரவேண்டும், தூரதேசத்தி லிருக்கலாகாது;
அப்படி இருந்தால் ஆபத்து சம்பவிக்கும் நாம் தாய் தந்தைகளுக்கு
நமது சேதியைமுந்தி அறிக்கை செய்யலாம் அதற்கு அவர் நம்மை
அபேக்ஷை யடைந்தால், தங்கள் முந்தி தேசத்தை ஜெயித்து அங்கு
இராஜ்யபாரம் செய்துக்கொண்டிருப்பீர், தெய்வ கிருபையால் நமக்கு
எல்லாம் சகாயமாகிறது. இந்தச் சமயத்தில் பாகவேந்தனை ஜெயித்து
அவன் அனுபவிக்கும் தேசத்தை வசப்படுத்திக் கொள்ளாமல் இருப்
பது நலமல்ல, க்ஷத்திரிய குலத்தில் ஆண் சிங்கமாய் பிறந்து, பிறகு
தைர்ய சாதனம் செய்யவேண்டும். இதராளுக்கு பிரியனா யிருந்தும்
சொந்தமாய் சம்பாதித்து தின்னவேண்டும். இதுவுமன்றி பந்துஜன
த்துடன் சேராமல் பிழைக்கவேண்டும். என்றுச்சொல்லநாயகியுடைய
விவேக சாதுர்யத்துக்கு சந்தோஷமடைந்து உதயத்திலெழுந்து பெ
ரிய மந்திரியை அழைத்து தன்னருகில் அமரச்செய்து ஓ மந்திரிசிகா



மணியே! நான் யெனது சமுசாரசகிதமாய் ஸ்வதேசத்திற்குப் போய்
வருக அபேக்ஷையடைந்தேன். ஆனால் அங்குச்சென்று பாலகனுக்கு
உபநயனவிவாக சுபகார்ய முடித்து வருகிறவரைக்கும் நீ என்னைப்போ
ல் நீதியாய் குடிஜனங்களுக்கு லோபமொன்றும் வாராதபடிக்கு இரா
ஜ்யபாரஞ்செய்வாயென்றுச்சொல்ல, இதைக்கேட்ட மந்திரி 'ஓ! இரா
ஜகுலோத்தமா! இராஜ்யபாரம்வகித்து குடிகளுக்கு தர்மலோபமில்லா
மல் ரக்ஷிக்க இராஜநீதிகள் கற்றுணர்ந்த உங்களுக்கேது ஸ்திரமா
யிருக்க என்னைப்போ லொத்தவனுக்கு எப்படியாகும் ஆனாலும்
"நாவிஷ்ணு ப்பிருதிவீபதி" என்னும் மொழிபோல் உமது உத்திரவுப்
படி நடக்காவிட்டால் எனக்கு துரோகம் சம்பவிக்கும்; ஆனால்
தமது உத்திரவு சிரமேல்வகித்து முத்திரைதன்னை சிம்மாசனத்தில்
நிருத்தி வேந்தனை பாராட்டியதுபோல் பாவித்து குடிகளை பாதுகார்ப்
பேன். தாங்கள் சகலகாரியத்தையும் தீர்த்துக்கொண்டு சீக்கிரமாய்
வருவீரென்றுசொல்ல இம்மொழிகேட்ட மணிகேதன் சந்தோஷம
டைந்து சந்திராயுதத்தையும் முத்திரைமோதிரத்தையும் கொடுத்து
விட்டு, சதுரங்கபல சமேதராய் அபரிமிதமான தனத்தை எடுத்துக்
கொண்டு நாயகிமார் பாலகனும் புரோஹித சேடிகளோடும் அந்த
நகரம்விட்டு மகா அட்டகாசத்துடன் தன்மாமன் நகரமாகிய ஜெயந்தி
நகரஞ்சேர்ந்து அங்கு ஓர் நந்தவனத்தில் தன் பரிசனத்துடன் கூடியி
ருந்தார்கள். இப்படியிருக்குஞ் சமயத்தில், ஓர் காவலனையழைத்து
வெள்ளத்தில் அடித்துக்கொண்டுபோன உங்களுடைய புதல்விமார்
நால்வரும் வந்திருக்கிறார்கள். தாய்தந்தைகளைப்பார்க்க அபேக்ஷையா
யிருக்கிறாரென்று வேந்தனுக்கு சொல்லிவாவென்று காவலனையனுப்ப.
அவன் வேகமாய்ச்சென்று சுமசேகரனைப்பார்த்து, ஓ இராஜசேகரா?
உங்களுடைய புதல்விமார்கள் நால்வரும்வந்து புரபாஹ்ய பிரதேசவ
னத்தில் இறங்கியிருக்கிறார்கள். உங்களை பார்க்கவேண்டுமென்று மன
க்கவலை அடைந்திருக்கிறார்கள். உமக்குசந்தோஷமிருந்தால் நீங்கள்வ
ந்து உங்கள் முகதரிசனந்தந்து அவர்களைப் பார்த்துவருவீர். இல்லா
மல் மனவிரோதமடைந்து உத்திரவுதந்தால் அவர்தேசத்திற்குபோய்
விடுவார்கள். உங்களபிப்பிராயத்தை சோதித்துவரும்படி என்னையனு
ப்பினார்களென்றுச்சொல்ல சுமசேகரன் சந்தோஷ வசனத்தைக்கேட்டு
ஆனந்தத்தில் மூழ்கி கொஞ்சநேரம் மூர்ச்சையடைந்து தெளிந்து, மந்
திரி, சேனாதிபதி, தனது ஸ்திரீயையழைத்து, அவர்களுக்கும் இந்த
சந்தோஷமொழியைச்சொல்லி அழைத்துக்கொண்டு மணிகேதன் இற
ங்கியிருக்கும் வனமடைந்து அவனுடைய பரிவாரஜனங்களைப்பார்த்து

பயமடைந்து சமீபத்திலிருக்கும் டேருதன்னில் பிரவேசித்து நாலு புதல்விகளைப்பார்த்து அவரவர்கள் புதல்விமாரை அவரவர்கள்கண்டு கண்ணீர்விட்டு தாய்மாரே! நீங்கள் இறந்துபோய் விட்டதாக எண்ணி யிட்டோம்,

நீங்கள் மறுபடியும் யெங்களுக்கு முகதரிசனம் தந்தீர். நாங்கள் ஏதுதவஞ் செய்தோமோ தெரியாது. இன்றைக்கு நாங்கள் தன்யனானோம். நீங்கள் உங்கள் வீட்டிற்குவாராமல் இங்கிருப்பது நியாயமாவென்று கேட்க, குணவதி நடந்த சங்கதியெல்லாம் சவிஸ்தாரமாய் சொல்லி உங்கள் சித்தத்திற்கு நேர்விரோதம் செய்ததாய்தெரிந்து எங்களை வீட்டிற்கு வாவென்றுசொல்ல நியாயமா? அப்படி இலேசமில்லாமற் போனால் அழைத்துச் செல்லுவீர்; இதுவுமன்றி எங்களைப் பெற்ற தாய்மாரைப்பார்த்து வருகிறோம். அப்படி ஆகாதென்றால் உங்கள்போலாகவே அவரையிங் கழைத்துவர செலவுதந்தால் பார்த்துவிட்டு இப்படியே போகிறோம். வெள்ளத்தில் அடித்துக்கொண்டுபோன விதத்தை இப்போது தெரிந்துக்கொண்டீரு வென்றுச் சொல்ல குணவதியின் மிருதுமொழிகேட்டு விசனமடைந்து நேத்திரத்தில் ஜலம்விழுக நீங்கள் அபராதம் செய்யவில்லை. நீங்கள் மணிகேதனுக் கெழுதிக்கொடுத்த சுலோகமே சொல்லுகிறது. ஆனால் இராஜியம் பரிபாலிப்பதற்கு ஆண்குழந்தைக் கிடையாது. பெண்குழந்தைகள் நீங்கள் இதுவரைக்கும் ஆரதேசத்திலிருந்தீர்கள். நாங்கள் நித்தியமும் உங்கள் நினைப்பினால் விசனமடைந்திருந்தோம். இப்போது உங்களைப்பற்றி சந்தோஷமடைந்தோம், உன் கணவனான மணிகேதன் எங்கள் நால்வருக்கும் பாலகன் நீங்கள் நால்வரும் யெங்களுக்கு மறுமக்கமார் ஆனால் யெங்களுக்கு விர்தாப்பியகாலஞ் சம்பவித்தது இராஜ்யத்திற்கு வேறுயாருமில்லை. ஆகையால் உங்கள் புருடனேயெங்கள் இராஜ்யத்தைக் கைக்கொண்டு எங்களை போஷிக்கவேண்டும். இதுபோல் வேந்தனும், மந்திரியும், சேனாபதியும், தனபதியும், ஒரேமனதாகச்சொல்லி, அவரெங்கிருப்பார்? அவரை நாங்கள் எப்படிப்பார்க்கலா மென்றுச்சொல்ல குணவதி நால்வரையும் அழைத்துக்கொண்டு புருஷனிருக்கு மிடத்திற்குச்சென்று விசித்ர மணைமீது அமரும்படிச் செய்து அவ்விடத்தில் அமர்ந்திருந்த மணிகேதனைப்பார்த்து, இந்த நாலுமாதரும் நாயகா இதோ பார்த்தீர் உங்கள் மாமன்மார் வந்தாரென்றுக்காட்ட அந்த இராஜபுத்திரன் உடனே யெழுந்து ஒவ்வொருவருக்கும் நமஸ்கரித்து பயபக்தி யுக்தனாய் சேவகன்போல கைகட்டி நிற்க இப்படி நின்றுக்கொண்டிருந்த மருகனைப்பார்த்து வேந்தன் ஆசிர்வதித்து பலவந்தமாய் தன்னுடன் அமரும்படிச்செய்து ஓ புண்ய



புருஷா! நாங்கள் இந்த இராஜ்யத்தை தமக்கு பட்டங்கட்ட யுத்தேசித்தோம் இதற்கு சம்மதிக்கவேண்டுமென அனேக விதமாய் கேட்டுக்கொண்ட பிறகு அவர் அதற்கு சம்மதமடைந்தார். உடனே புதல்விமாருக்கு பல்லக்குகளும் இவருக்கு திவ்யமானரதமுங் கொண்டுவந்து அதிக சந்தோஷமாய் இராஜா அந்தப்புரத்திற்கு அழைத்துவந்து சோடச வுபசாரணஞ்செய்து ஓர் சுபதினத்தில் மணிகேதனுக்கு அந்த இராஜ்யம் பட்டாபிஷேகஞ்செய்தார்கள். இப்படிச் சிலகாலஞ் சுகமாயிருந்து மணிகேதன் லொருசமயத்தில் தன் தந்தை பரிபாலித்த இராஜ்யமான விசித்திரபுரத்தை மறுவேந்தன் பிடித்ததைக்கைக்கொள்ளவேண்டுமென்று மாமனார் சேனைகளை அழைத்துக்கொண்டு அத்தேச வெதிரியை ஜெயித்தந்த இராஜ்யத்தை தன் நாட்டில்சேர்த்து பரிபாலித்துக்கொண்டு நால்வர் மாதருடன் சகல போகபாக்கியம் அனுபவித்து சுகமாயிருந்தார்கள். இப்படிச்சொல்லுஞ்சமயத்தில் சூரியன் கிழக்குதிசை மறைந்தான். இதையறிந்து பிரம்மானந்தயோகி கதைதன்னை நிறுத்தினர். அதன்பிறகு, சமீபத்திலிருக்கும் காளிக்கட்டமென்றுசொல்லப்பட்ட (கல்கத்தா) நகரமடைந்தார்கள். அங்கு ஸ்தானமுதலானதும் தீர்த்துக்கொண்டு போஜனமருந்தி இருக்குஞ் சமயத்தில் வேடர்கள் யோகியைப்பார்த்து அப்பா! இந்த ஸ்தலமகிமை சொல்லென்றுக்கேட்க போகி சொல்லத்தொடர்ந்தார்.

ஆதிகாலத்தில் மாயாசக்தி அதிக பயங்கரரூபமெடுத்து துஷ்டராக்ஷதரை வதைத்துக்கொண்டிருக்குங் காலத்தில் ஒருநாள் தன்னுடைய கோரஸ்வரூபம் தனக்கு விகாரமா யிருப்பதையறிந்து சாந்தரூபமெடுத்து இராக்ஷதரை வதைத்துக்கொண்டிருக்குஞ் சமயத்தில் தன் கணவனான பரமேஸ்வரன்பார்த்து மோஹித்து அம்மாதை தன் கையால் பிடித்தெடுத்து இடுப்பில் வைத்துக்கொண்டு அனேகதேசங்கள் திரிந்துக்கொண்டிருக்க. அப்போது, இங்கு இருப்பவரெல்லோரும் மாயா சக்தியினுடைய சேவை இல்லாமற் போனதுபற்றி விசனமடையவே மகாவிஷ்ணு அவருடைய துக்கத்தை தீர்க்கவேண்டுமென்று தன்னுடைய சக்கரத்தை பிரயோகிக்க அந்தச் சக்கரம் மாயா சக்தியென்னும் காளியை கண்டித்தது. இப்படிக் கண்டிக்கப்பட்ட துண்டுகளில் அம்மாதின் ஓர் விரல் இந்தஸ்தலத்தில் விழுந்தது. ஆகையால் இதற்கு காளிகட்டமென்று பெயருண்டாச்சுது. இங்கிருக்கும் காளிகாதேவியை பூஜித்தவற்கு சகலசாம்ராஜ்யபதவி கிடைக்குமென்றார். இப்படிச்சொல்லி மறுநாளுதயம் காளிகாதேவியை சேவையடைந்து அங்கிருந்து புறப்பட்டார்.

# ஒன்பதாம் மஜிலிக்கதை.

## சமயோசிதஞானம்.

அதன்பிறகு பிரம்மானந்த யோகியுடன் சேர்ந்துபோகும் சமயத்தில் வேடர் யோகியைப்பார்த்து சுவாமி! தாங்கள் இதுவரைக்கும் சொன்னகதையைக்கேட்டு சந்தோஷமடைந்தோம். இனிவேறொரு கதைசொல்லி வழிநடைக்கஷ்டம் தெரியாதபடிசெய்யீரென பிரார்த்திக்க அந்த யோகி சொல்லத்தொடர்ந்தார். மணிபுரமென்றொரு பட்டணமிருந்தது அந்தப்பட்டணத்தை புத்தியில் ப்ருஹஸ்பதிபோலவும், வித்தையில், சரஸ்வதிபோலவும்,ரூபத்தில் மன்மதனைப்போலவும்,பாக்கியத்தில் குபேரனைப்போல்வும், தேஜத்தில் மகா விஷ்ணுவைப்போலவும், க்ஷமாகுணத்தில் தாத்திரியைப்போலவும், போகத்தில் இந்திரனைப் போலவும், சத்தியத்தில் அரிச்சந்திரனைப் போலவும், தர்மத்தில் தர்மவேந்தனைப் போலவும், தியாகத்தில் கர்ணனைப் போலவும், மனோதிடத்தில் பலசக்கிரவர்த்தி போலவும், பராக்கிரமத்தில் தசகண்டனைப்போலவும், யுத்தத்தில் தசரதன் ஈன்றபுதல்வனைப்போல இருந்தும், பரமாதை மனக்கவலைதன்னிலிடாமற் பூர்ண சந்திரனைப்போல நிறைந்து சகல வேதபுராணங்களை பாராட்டி இராஜதர்மத்தில் அதிக்ரிக்காமற் குடிகளை ரக்ஷிக்கப்பட்டவனா யிராநின்ற சந்திரகேதனென்றொரு வேந்தன் பரிபாலித்துக் கொண்டிருந்தான். இவர் இராஜ்யத்தில் மாதமும்மாரி பெய்து குடிகளிடம் ஆறிலொருகடமை வாங்கி நீதி செலுத்தி வந்தார். இப்படி அயிஸ்வரிய சம்பன்னராய் பிரபாவதி என்ற மாதுடன் கூடி இராஜ்யமாண்டுவருக சிலகாலம் சென்றபிறகு அம்மாது கர்பத்தில் ரத்தினவர்ம, நாகவர்ம. என்ற இரண்டுபுதல்வர்கள் பிறந்தார்கள். அந்தப்புதல்வர் ஜனித்தநாள்முதல் அத்தேசத்திலிருக்கும் இராஜலட்சுமி மறுவேந்தனிடமடைய இப்பட்டத்துவேந்தனை சந்தரகேதன் ஜனக்கூட்டம் தனக்கூட்டம் இதுகள் விட்டுப்பிரிய இதையறிந்த மறுவேந்தன் இவனைஜெயிக்க சுலபமென்று எண்ணமிட்டு வந்துவிட்டான். அப்போது சந்தரகேதன் மறுவேந்தனுடன் போராட சக்தியற்றவனாயிருப்பதால் அவர்கையில் அகப்படாமல் துக்கத்தில்மூழ்கி அந்த இராக்காலத்தில் தன்கையில் அகப்பட்ட பூஷணாதிகளை எடுத்து பிறருக்கு அகப்படாதிருக்கும்படி பூமியில் புதைத்துவிட்டு தனக்குவேண்டுமான திரவ்யமெடுத்துக்கொண்டு தன்னைச்சேர்ந்த தாரித்திர தேவதையுடன் தாரபுத்திராதிகளுடன் கூடி கள்ள



வழியாய் புறப்பட்டு தெய்வமே துணையென்று தன்யகிராமமென்ற ஓர் வைஷ்ணவ அக்கிரஹாரமடைந்து தான் விஷ்ணுசித்தனென்றும், தன்னுடைய தேவி எதிராஜவல்லியென்றும், ஒரு குமாரனை பாகாலனென்றும் மற்றொருவனை பரவாசுதேவனென்றும் பெயர் வகித்துக்கொண்டு திருமணி திருச்சூர்ணம்தரித்து அந்த தரித்திரதேவதையை கோரி தான் பார்க்கப்பட்ட வைஷ்ணவர்க்கெல்லாம் அடியேன்தாசன் அடியேன்தாசன்;" என்றுச்சொல்லி வந்தனம் செய்துக்கொண்டு நாராயணா, கோவிந்தா,பக்தஜனாஸ்ரயா, ஜகன்னாதிக்காரணா, என பகவான் நாமங்களை அதிகபக்தியுடன் சொல்லிக்கொண்டு பிச்சை யெடுத்துக் காலம் கழித்துக் கொண்டிருந்தான். இப்படியாக பதினொரு வருடகாலம்வரையில் பாலகரைக்காப்பாற்றி சத்தியானுசாரம் குருகாணிக்கைக் கொடுத்து வித்தியாப்யாசம் செய்யவைத்தும் பிறகு தான் கொண்டுவந்த திரவ்யமெல்லாம் செலவாய்ப்போய் விட்டது. இப்படியிருக்க ஒரு சமயத்தில் தன்தேவியுடன்,

(சுலோகம்.)

இராஜவத் பஞ்சவர்ஷாணி தசவர்ஷாணி தாசவத்
ப்ராப்தேது ஷோடசே வர்ஷே புத்ரம் மித்ரவதாசரேத்.

என்னும்மொழிபோல் பாலகர் ஜனித்த ஐந்துவயது வரைக்கும் பாலகர்போலவே போஷிக்கவேண்டும். பதினொரு வயதானபிறகு புத்திரனும் மித்திரனைப்போல பாவிக்கவேண்டும் இப்படி சாஸ்திரம் சொல்லிருக்கின்றது அதுபோலாக எனது பாலகருக்கு சகல வித்தையும் கற்றுதந்தேன். இப்போது அவர்கள் எவ்வளவதிசை யடைந்தார்கள், விவேக மடைந்திருப்பதால் அவரே பிழைத்துக்கொள்வார் என்கையிலிருக்கப்பட்ட தனமெல்லாம் செலவழிந்து விட்டது "குந்தித்தின்றாலும் குன்றும்கரையுமென்னும்" மொழிபோல் நாம் இத்தனை நாளாக இன்னுடு சேர்ந்தது முதல் ஒருகாசாகிலும் வெளியிலிருந்து கொண்டு வந்ததுண்டா ஆகையால் இருக்கப்பட்டதை செலவழித்து தின்றோம் அதுவும் தீர்ந்துவிட்டது இனி இந்த கிராமத்தில் இருந்தால் மரியாதை போய்விடும் மற்றொரு கிராமத்திற்கு சென்று பிச்சை யெடுத்தாகிலும் பிழைக்கலாகும்நமது பாலகர்கள் முந்திநிலையை அறியமாட்டார்கள். இப்போது நாமடைந்த ஈனதிசை எவருக்கும் தெரியாது நாம் கொண்டுவந்த திரவ்யத்தில் கொஞ்சமிகுதியா யிருக்கிறது மிதமாய் ஜீவித்தால் இன்னும் இரண்டுவருடம் ஜீவிக்கலாம். இப்போதுநமது பாலகர்கள் விசேஷமாய் தனத்தை செலவழிக்கக் கோருகிறார்கள். நம

மாய் சொன்னால் புத்திகேட்கார்கள். பயப்படுத்திச் சொன்னால் முரட்டுத்தனம் செய்வார்கள். எனக்கு இரண்டுபக்கம் சங்கடம் லபித்தது என்று மொழியாடிக்கொண்டிருந்த தாய்தந்தைகள் மொழியை சாளரத்தில் நின்றுக்கொண்டிருந்த இரண்டுபுத்திரர் கேட்டுவிட்டார். இப்படிநாலுதினம் சென்றபிறகு ஒருசமயத்தில் பிரபாவதி தன்புதல்வரையழைத் தடா என் செல்வக்குமாரரே! நீங்கள் எவ்வர்ன திசையடைந்தீர். ஆனாலும் யுக்திமதியை யோசிக்காமலிருக்கிறீர் நீங்களிப்போது அதிச்சுதனமாய் தனத்தை செலவுசெய்துக்கொள்கிறீர், அது செலவழிந்துவிட்டால், பிச்சையெடுக்கவேண்டும். இது சரியான புத்தியல்ல அதை சேகரிக்காமற்போனால் நமக்கு அகபுரமேலபிக்கும் ஆனால்நாம் விப்பிரகுலமல்ல காலதிசையால் இப்படியிருக்க விதியானது தேசகால விஷயத்தை அனுசரித்து இந்த வேஷம் நமக்குலபித்தது உங்கள் தந்தை க்ஷத்திரியன் நீங்கள் பிறந்தகாலத்தில் நமது இராஜ்யத்தை மறுவேந்தர் புகுந்தார்; யுத்தஞ்செய்ய சாத்தியப்படாமல் உபாயமாய் தப்பித்துக்கொண்டு வந்து விட்டார். அதிக கஷ்டப்பட்டு உங்களை ரக்ஷித்தார். இப்போது தந்தைக்கு தளர்ந்த வயதானபடியால் அவரைக் காப்பாற்ற பாலகரை கோருவது நீங்களின்னும் பால்யபுத்தி விடமாட்டீர்கள், சம்சாரத்தைப் பார்க்காமலும் மானபிமானத்தின்மேல் புத்திநாட்டாமலும் மறுவேந்தன்பிடித்த ராஜ்யத்தைக் கொள்ளுதற்கும், அபேக்ஷையில்லாமல் இருப்பதை யறிந்து நான் உங்களைப்பற்றி துயரப்படுகிறேன் என்றுச்சொல்ல, தாய் மொழியைக்கேட்ட பெரியவன் சின்னவனை அழைத்து சொல்லத்தொடர்ந்தான்.

(சுலோகம்.)

உத்யோக ப்ராப்னு யாதர்தம் யசோவாம்ருத்தியு மாப்னுயாத்
நிருத்யோ கிலயேன் ம்ருத்யுர்ந யசோநார்த சம்பத.

என்னும் மொழிபோல் ஒரு காரியத்தை அனுசரிக்கவேண்டுமென்கிற அர்த்தஞ் சொல்லும் இல்லாமல் ஆயுசை க்ஷீணிக்கச் செய்யும். இந்த இரண்டிலும் ஏதாகிலும் லபிக்காமற்போனால் தன்னிடமிருக்கும் திரவ்யம் இவ்வளவே யென்று பிராணம் விடும். ஆனால் எந்தக்காரியமாகிலும் செய்யாதமனிதன் ஆயுசுக்ஷிணிக்குமென்னும்சப்தம்கேட்காமலே பிராணத்தைவிடும் ஆகையால் நாமிருவரும் காலஹரணஞ்செய்து பிராணத்தை விடுவதைவிட்டு தேசாந்திரஞ்சென்று அங்கு தனமாகிலும் கீர்த்தியாகிலும் சம்பாதித்து பிராணத்தை விடுவது நலமாயிருக்கிறதென்று தனக்குள் தான் ஆலோசித்து கொஞ்சம் திரவியமெடுத்துக்கொண்டு தாய் தந்தைகளுக்குச் சொல்லாமல் ஆயுதங்களை தரித்துக்கொண்டு பாதசாரியாய் வெளியடைந்து நாநாபிரதேசங்களைத் திரிந்துகொண்டு அகப்பட்டமிருகங்களை துரத்திக்கொல்வது அதைவிட்டு பெரிய ஆரண்யமார்க்கமாய் பிரவேசித்து ஒன்றுந்தோன்றாமல் ஒருநதியோரத்தில் ஆயாசம் தீர்த்துக்கொள்ள அமர்ந்திருக்கும் சமயத்தில் பெரியவன் அங்கிருக்கும் ஆலமரநிழலில் சயனித்து நித்திரையடைந்தான் சிறியவன் தமயன் சமீபத்திலமர்ந்து தான் பிறந்ததும், வளர்ந்ததும், தேசாந்தரம் வந்ததும், ஆரண்ய மார்க்கமடைந்து கஷ்டப்பட்டதும், நினைந்து துயரமடையுஞ்சமயத்தில் நிரந்தரமாய்தங்கரூபத்துடன் திரேகமடைந்த ஒருபக்ஷி அந்த விருக்ஷத்தின் மீதிருந்து தமயன் புஜத்தின்மீது விழ அதைப்பார்த்து உடனே அந்த பக்ஷியை பத்திரப்படுத்தினன் யாரோவொரு வேடன் இதைப்பிடிக்க பாணத்தால் அடித்திருக்கிறான் அவன் இதைத் தேடிக்கொண்டு வருவானென்று பயமடைந்து தானும் படுத்துக்கொண்டு ஒன்றும் தெரியாதவன்போல் நித்திரை செய்துக்கொண்டிருந்தான்.



இப்படியிருக்க பெரும்வியாதியடைந்தவனொருவன் தன் பாணம் அடிப்பட்ட பக்ஷி பூமியில் விழுந்ததென யறிந்து அது விழுந்தவிடத்தில் தேட அகப்படாமையால் அங்கு படுத்துக்கொண்டிருந்த இராஜபுதல்வர் அருகில் வந்து ஐயா! என்று யழைத்தான், அப்போது நித்திரையாயிருந்த நாகவர்மன் எழுந்து ஐயா என்னக்காரணமா யழைத்தீர் நீயார் நாங்கள் நித்திரை செய்யும் காலத்தில் எழுப்பக்காரியமேது என்றுக்கேட்க வேடன் இராஜபுதல்வரைப் பார்த்து, சுவாமி! இந்த ஆலமரம் அதிக நாளாயிருக்கிறது இதன்பழம் தின்பதற்காய் ஒரு தங்கமயமான பக்ஷி தினாந்தரமாயிருந்து பகற்காலம் பார்த்து இங்கு வருகிறது அந்தபக்ஷி இந்த செடிமீது அமராதபடிக்கே தனக்கு வேண்டுமான பழம் தின்று விட்டு போய்விடும் நான் அதைக்கொல்ல வேண்டுமென்று பதினைந்து வருடமாக பார்த்துக் கொண்டிருந்தேன் தெய்வசங்கல்பம் இத்தினத்தில் சமயம் அகப்பட என்பாணத்தால் அதையடித்தேன்; அது இந்தவிடத்தில் விழுந்தது நான் எல்லாமிடத்திலும் தேடிப்பார்த்தும் அகப்படவில்லை உங்களுக்கு அகப்பட்டிருந்தால் என்மீது தயைபுரிந்து எனக்கு கொடுப்பீரென இதைக் கேட்ட நாகவர்மன் ஐயா! எங்களருகில் விழவில்லை, அது படிதப்பித்துக்கொண்டு ஓடிப்போயிருக்கவேண்டுமென்று என்மனம் எண்ணுகிறது என்றுச்சொல்ல இதைக்கேட்ட வியாதியஸ்தன் தனக்குள் தான் நாம் ஒண்டியாயிருக்கிறோம். இவரிருவராயிருப்பதுடன் விட

ஆயுதபாணிகளாயு மிருக்கிறார். மேலும் ரூபத்தில் மாரனை திரஸ்கரிக்கச்செய்யப்பட்டவர்கள் இவர்களைப்பார்த்தால் இராசபுதல்வரைப்போலிருக்கிறது இவரைஜெயிக்க எனக்கு சாத்தியப்படமாட்டாது என்ன செய்வார்களோவென்று துக்கமடைந்து பெருமூச்சிவிட்டுநிற்க இதற்குள் நாகவர்மன் வேடனைப் பார்த்து ஐயா! ஒரு பக்ஷிபோனால் மறுபக்ஷி அகப்படாதா! இதற்காகதுக்கமடையவேண்டுமோவென்ன வேடன் இம்மொழிகேட்டு சுவாமி! இந்த பக்ஷியினுடையமகிமை சொல்லுகிறேன் கேளும் எப்படியென்றால், அந்தப்பக்ஷியை அறுத்து அதன் தலை தின்னப்பட்ட மனிதன் சிரித்தமாத்திரத்தில் மிதமில்லாமல் ரத்தினம் கொட்டும், அதன் உடலைதின்பவன் இராஜ்யமாள்வான் ஆகையால் அதற்காக பதினைந்து வருடம் காற்று மழைதன்னில் அடிபட்டு சமயம் பார்த்து அடித்தும் எனக்குக் கிட்டவில்லை மறுபடியும் அந்தபக்ஷியைக் கண்டுபிடிக்க எத்தனைகாலம் பார்க்க வேண்டுமோ தெரியாது தாங்களே ஆலோசிக்கவேண்டும். அதற்காக நான் விசனப்படுகிறேன் என்றுசொல்ல, நாகவர்மன் அவனுக்காக தானும் விசனமடைந்து நடித்தான். ஐயா உன் துக்கத்தைப்பார்த்து எனக்குச் சகிக்க முடியவில்லை நான் உனக்கேதாகிலும் திரவியம் தருகின்றேன் அதை பெற்றுக்கொண்டு போவீரென்றுச்சொல்லி நூறுவராகன் அவனுக்குத்தருக அதைபெற்று சந்தோஷத்துடன் போய்விட்டான். பிறகு, நாகவர்மன் பக்ஷியின் சிரசை தான் தின்றுவிட்டு சரீரமாம்சத்தை பக்குவஞ்செய்ய, அதற்குள் அவன் நித்ரையிலிருந்தெழுந்த தமயனுக்குக்கொடுக்க அவன்தின்றான். அங்கிருந்து இருவரும் புறப்பட்டு சாபங்கமென்கிற கிராமமடைந்து அங்கொரு சத்திரத்தில் படுத்துக்கொண்டிருந்து பிறகு, இளயவன் பெரியவனைப்பார்த்து அண்ணா! இன்றைக்கு பசி அதிகமாயெடுக்கிறது. இங்கு சமயல்செய்து புசித்துவிட்டு முன்னுக்கு போகலாமென்று சொல்ல மூத்தவன் சம்மதித்து சாமான்களைக் கொண்டுவருக கடைவீதிக்குச் சென்றான்.

அந்த கிராமத்திற்கு இரண்டு யோசனைதூரத்தில் சுருங்காரபுரமென்றொருப் பட்டணமிருந்தது. அந்தப் பட்டணத்துவேந்தன் இந்திர குப்தன் சந்ததியில்லாமல் மரணமடைந்தான். "பாழுருக்கு பரையனே யேரியவன்" யென்னும் மொழிபோல் அந்தவேந்தன் பங்காளிகள் எனக்கு பாதியென்றும் உனக்கு பாதியென்றும் அன்னாட்டை முப்பதுபேர் போராடிக்கொண்டிருந்தார்கள். இதையறிந்து அன்னாட்டின் குடிஜனங்களும் மந்திரிமார்களுங்கூடி சபை நியமித்து வேந்தன்



பத்தினியையழைத்து அம்மாது அபிப்பிராயத்தை கேட்க, அத்தேவி ஐயா! மந்திரியே! எனது புதல்விக்கு விவாகஞ் செய்துவரப்பட்ட மருகனுக்கு இராஜ்யம் தந்து அவரால் வம்சாபிவிருத்தி யாகவேண்டுமென அபிப்பிராயம் நமது எஜமானுக்கு இருந்தக் கவலை நீ அறிந்திருப்பாயல்லவா அதுபோல் எனது இஷ்டமிருக்கின்றது. இந்தப் பாதகர் இதைப் பங்கிட்டு சுவாதீனம் வந்தப்பிறகு நம்மை துரத்தடிப்பார். ஆகையால் யோக்கியமான வேந்தப் புதல்வனுக்கு புதல்வியைத்தந்து விவாகஞ்செய்து அவர் இராஜ்யத்தை அநுசரித்து பரிபாலிக்கிறவரைக்கும் நீயே சகலத்தையும் பாராட்டி நடக்கவேண்டுமென்றுசொல்ல இதைக்கேட்ட சபையோர்களும் சம்மதித்து இராஜ்யத்தை பங்காளிகனிடம் கொடாமல் தீர்மானித்தார். இராஜன் புதல்விக்கு இன்னம் சரியானவயதுவரவில்லை. அனேகபேர்கள் வேந்தர்ப்புதல்வ ரிருக்கிறார்கள். அவரில் ஒருவருக்கு கொடுத்தால் ஒருவருக்கு விரோதம் நாம் சொன்னாலும் தப்பிதம் நியமிப்பார். இதர்க்கோர் உபாயம் ஆலோசித்துச்சொல்ல மந்திரியே சாமர்த்திய முடையவனென்று மந்திரிக்குச்சொல்ல, மந்திரி இதைக்கேட்டு சபையைப்பார்த்து ஓ சபையோரே! என்மொழியைக் கேட்பீர். வேந்தன் புதல்விக்கு புத்தியும் பலமும் போதாது. நாமொரு வேந்தனுக்குக்கொடுத்து விவாகஞ்செய்து கண்குளிரப்பார்த்தால் இதரமானவற்கு விரோதமாகும். சுயம்வரஞ் செய்வோமென்றால் இது சமயமல்ல, ஆகையால் சகல தேசவேந்தர்ப்புதல்வரை அழைத்து பட்டத்துயானையின் தும்பிக்கைதனில் ஒருபுஷ்ப ஆரத்தைத் தந்து அது ஆருக்கு புஷ்பமாலை சூட்டுகிறதோ அன்னவருக்கு நாமிருந்து சந்தோஷமாய் அழைத்துக்கொண்டுவந்து விவாகஞ்செய்து இன்னாட்டை அவருக்கு வொப்பவிப்பது நலமென்றுச்சொல்ல சபையோர் சந்தோஷமடைந்து அதுபோலாகவே வேந்தர்புதல்வரை அழைத்துவ்வரும்படி சேகுவரை அனுப்பினர்.

இப்படியிருக்க இந்த சாபங்குகிராமத்தின் கடைவீதியில் வியாபார விஷயமாய்வந்து குந்திக்கொண்டிருந்த ரத்தினவர்மன் அந்த மார்க்கமாய் போகப்பட்ட ஜனங்களைப்பார்த்து ஓ வர்த்தகனே! இந்த ஜெனங்கள் எங்கு போகிறார்களென்றுக் கேட்க? ஐயா! இங்கிருந்து இரண்டுயோசனை தூரத்தில் சுருங்காரபுர மென்றொரு பட்டணமுண்டு, அப் பட்டணத்துவேந்தனுக்கு சந்தான மில்லையென்று மனக்கவலையடைந்து மரணமடைந்தார். இப்போது ஆறுமாதமாகிவிட்டது அவ்ருக்கு ஒரு புதல்வி இருக்கின்றாள் அம்மாதை விவாகஞ்

செய்துவரும் மருகனுக்கு மகுடஞ் சூட்டப்போகுறார்களாம் அதற்கு எல்லோரும் போய்க்கொண்டிருக்கிறார்கள். நீரும்போகலாம் அதிருஷ்டமிருந்தால் ஒருசமயம் உமக்கு லபிக்குமென்று சொன்னவுடனே அம்மொழிகேட்டு ரத்திரவர்மன் வியாபாரத்தைவிட்டு அவர்கள்பின்பற்றி சுருங்காரபுரமென்ற பட்டணஞ்சேர்ந்தான். இதற்குள் அப்பட்டத்துயானை தும்பிக்கையில் புஷ்பமாலைகொடுத்து இரண்டுபக்கமும் மாவெட்டிக்காரர் காவல்புரிந்து நடத்திக்கொண்டுவருஞ் சமயத்தில் அந்தப் பட்டத்து யானையானது கூட்டத்தை தள்ளிக்கொண்டு தூரமாக உட்கார்ந்துக்கொண்டிருந்த ரத்தினவர்மன் கண்டத்தில் புஷ்ப ஆரத்தைச்சூட்டி தும்பிக்கையால் அவனையெடுத்து முதுகின்மேல் வைத்துக்கொள்ள இதை எல்லோரும்பார்த்து சந்தோஷமடைந்து அந்தப்புறத்திற்கு அழைத்துக்கொண்டுவர இதைக்கண்டு இராஜபத்தினி எதிர்நோக்கிவருக ஆனை நின்றுவிட்டது. உடனே ரத்தினவர்மன் ஆனையைவிட்டிறங்கி மாமிக்கு வந்தனம்புரிய அம்மாது இவனைக் கண்டு "தீர்காயுஷ்மான்பவா" என ஆசீர்வதித்து அப்பா! எமக்கு மருமகனானாலும் புதல்வனானாலும் நீர்தான் எங்களை ரக்ஷிக்கவேண்டும், எங்களைப்போலவே இந்நாட்டை பரிபாலிக்க வேண்டுமென்றுச் சொல்ல அம்மொழிக்கு சம்மதித்து வாக்குதத்தம்தந்து வெளியில் வந்து சபையலங்கரித்து மந்திரியை அருகிலழைத்து எல்லோருக்கும் தாம்பூலங்கொடுத்து இராஜபுத்திரியை விவாகஞ் செய்துக்கொண்டு தாய் தந்தை தன்னுடன்வந்த தம்பியை மறந்து அதிக போகபாக்கியங்களை அனுபவித்து சுகமாயிருந்தானென்றுச் சொல்லவே சூரியன் கிழக்குதிசையில் மறைந்தான். யோகியும் கதையை நிருத்திவிட்டு அருகிலிருக்கும் மதுராநகரமடைந்து சுகமாய் போஜனஞ்செய்து நித்திரைசெய்யுஞ் சமயத்தில் வேடர்கள் இந்த ஸ்தலபெருமை சொல்லும்படிகேட்க சொல்லத் தொடர்ந்தார்.

திரேதாயுகத்தில் ஸ்ரீராமச்சந்திரன் இராஜ்யபரிபாலனஞ் செய்துக்கொண்டிருக்க "மது" என்னும் இராக்ஷதன் ஒருவன் இங்கு யமுனாநதியருகில் ஆரண்யத்தில் வாசஞ் செய்துக்கொண்டிருந்தான். ஆகையால் இந்த வனத்திற்கு மதுவனமென்று பெயருண்டாச்சுது. அந்த துஷ்ட இராக்ஷதன் மரணமடைந்த பிறகு அவன் புதல்வனை லவணன் தந்தையைப்போல் அதிகக் கொடியவனாயிருந்தான். ஸ்ரீராமச்சந்திரர் தம்பியான சத்ருக்னன் லவணனை சம்மரித்து, மதுவனத்தை நிர்மூலஞ்செய்து மதுராபுரமென்ற நகரத்தை நிர்மித்து தான் சில



இராஜ்யபாலனஞ்செய்தான். லவணன் தப்பியாகிய ஹர்யாஸ்வனுக்கு மதுராபுரத்தை ஸ்ரீராமச்சந்திரன் இராவணன் தம்பிக்கு எப்படி பட்டங்கட்டினாரோ அதுபோல் பட்டங்கட்டி மனுநீதிகளைபோதித்து அங்கிருந்து அயோத்தியாபுரிக்குச் சென்றார். அதுமுதற்கொண்டு ஹர்யஸ்வ சந்ததியிலுதித்த துர்யோதன கம்சாதிகளை வசுதேவன் புத்திரனாக ஜனித்து கம்சாதி இராக்ஷதர்களை சம்மரிப்பதற்காய் ஸ்ரீமந்நாராயணமூர்த்தி யாதவகுலஸ்தனாய் சம்மரித்து பாண்டவரை ஆதரித்து துர்யோதநாதிகளை கொல்வதற்கு உபாயத்தை போதித்து லோகோபகார்த்தமாய் அர்ச்சுனனுக்கு அஷ்டாதச யோகத்தை உபதேசித்து அதன்பிறகு தான் யதாஸ்தானத்திற்கு சென்றார். ஆகையால் இந்த மதுராபுரம் அதிக முக்தியடைந்த ஸ்தலமாகும் பரமாத்மா இங்கு வசித்த க்ஷேத்திரமாயிருக்கிறது. இங்கிருக்கும் யமுனாநதியில் ஸ்நானஞ்செய்து அஷ்டபார்ய சகிதமாக நின்ற கிருஷ்ணமூர்த்தியை சேவித்தவர்க்கு சகலாபீஷ்டம் அனுகூலமாகும் இதுவன்றி பலராமமூர்த்தியை சேவித்தவர்க்கு போகபாக்கிய மடைவார். இப்படி பிரசித்தியடைந்த ஸ்தலத்தில் வேடரும் யோகியுடன்கூடி. சேவையடைந்து போகுஞ்சமயத்தில் வேடர் யோகியைப்பார்த்து சுவாமி! ரத்தினவர்மன் இராஜ்ய மாண்டுக்கொண்டிருப்பதாய் நேற்றைய தினம் சொன்னீரோ அவன் தம்பி எப்படியாகிவிட்டான் அதை சொல்லவேண்டுமென்று கேட்டார் யோகிசொல்லத் தொடர்ந்தார்.

# பத்தாம் மஜிலிக்கதை.

## வேஸ்யமோகலக்ஷணம்.

அதன்பிறகு சரபந்த கிராமத்தில் ரத்தினவர்மன் சகோதரனை நாகவர்மன் தமயன் வராதிருப்பதைப்பற்றி துயரமடைந்து கடைவீதி சென்று அங்கு வர்த்தகரைவிசாரித்து நானாதேசமெங்குந் தேடித்தேடி ஆயாசமடைந்து ஐயோ! அந்த சண்டாளனான வேடன் என்னுடன் பொய்மொழிகளாடி எங்களை மோசஞ்செய்தான் நானதை யறியாமல் நம்பி என் தமயனுக்கு இராஜ்யம் லபிக்குமென்று அந்த பக்ஷிமாம்சத்தை பக்குவஞ்செய்து தின்னச்செய்தேன், அதனால் பயித்தியம் பிடித்து என் தமயன் எங்கு சென்றானோ ஐயோ தெய்வமே என்கெதியின்னமெப்படியோ? என சிந்தாகிராந்தனாய் நின்றுமறுபடியும்வீட்டிற்குவந்து தானிரங்கி இருக்கும் பிராமணன் வீட்டில் போஜனஞ்செய்து

தமயனை தேடிக்கொண்டு பயித்தியம் பிடித்தவனைப்போல் திரிந்துக் கொண்டிருக்கும் சமயத்தில் அம்மார்க்கத்தில் (சந்திரரேக) யென்னும் ஓர்தாசி தன் வீட்டின் அந்தப்புரத்தில் மஞ்சத்தின்மீது யமர்ந்திருக்க இவனுடைய ரூபலாவன்யத்தைப் பார்த்து மோகாகாந்தமனமாய் மன்மதபாதைக் கோர்வாமல் இவனை தன்வசம் செய்துக்கொள்ள வேண்டுமென்று பெருமனமிட்டு வீணைதனையெடுத்து காலத்திற்கு தகுந்த இராகத்தை குயில் சுபாவமாய் பாடிக்கொண்டிருக்க நாகவர்மன் இதைக்கேட்டு அதிக சந்தோஷமேலிட்டு இன்னங்கொஞ்சநேரம் இந்த அம்சத்வனியை கேட்கலாமென்று அவள் வீட்டின் வாயலில் குந்தி அதிக சந்தோஷம் மேலிட்டு மோகக்கடலில் மூழ்கி அந்தக் கானத்திற்குத் தகுந்தபடி தாளம்போட்டு தலையசைக்கிக்கொண்டு இருக்க அந்ததாசி தாளசப்தத்தைக்கேட்டு அவருக்கு சுவதந்திரமாயிருக்கும் தாள ஞானத்திற்கு சந்தோஷமடைந்து வித்வானென்று மறிந்து அவர்தன் மோகவலையில் அகப்பட்டானென்று எண்ணமிட்டு மெதுவாயவனருகில்வந்து தூரமாக நின்று அவர் திரேககாந்தியும் ரூபலாவன்யத்தை பார்ந்து மோகமீறி தன் அஸ்தத்தால் அவர்கையைப்பிடித்து அந்தப்புரத்திற் கழைத்துச் சென்று அம்சதூளிகா மஞ்சத்தின் மீதமரச்செய்து தாம்பூலச்சந்தனாதி யளிய செய்து அவர் மனோரத்தினத்தை திருடிக்கொள்ளும் சமத்காரமொழிகள் பேசி வசப்படுத்த இதற்குள் நாகவர்மன் அவளுடைய சமத்காரமொழிக்கு கட்டுப்பட்டு ஆனந்தமடைந்து சிரிக்க உடனே ஜாதிக்கொருவிதமாய் ரத்தினங்கள் விழுந்தது இதை பார்த்ததாசி ஆச்சரியமடைந்து அவருக்கு தெரியாதப்படிக்கு அதை வாரி யெடுத்துக்கொண்டு இதில்யொன்றை வர்த்தகருக்கு காட்ட அவர் இதை பரிக்ஷித்து இது அபூர்வரத்தினம் யென்றுச் சொன்னவுடனே இம்மாது அவருடன் எந்நேரமும் பிரியாமல் சரசசல்லாப மாடிக்கொண்டிருந்து சிரிப்புகாட்ட சிரித்தவுடன் கீழேவிழும் ரத்தினத்தை பொருக்கி விற்றுக்கொண்டு இப்படி ஈரேழுவருடம் வரைக்கும் இடைவிடாமற் சுகமாயிருந்தான்.

இப்படிருக்க ஓர்தினத்தில் இம்மாது தாயாரான செந்திரமுகி இந்த ஆச்சரியத்தைக் கண்டு மகளைப் பார்த்து ஓ என்து பிரியபுதல்வியே! உன்னுடைய புருஷனிடத்தில் ஏதோ வித்தை இருக்கிறது சமயம்பார்த்து உபாயத்தால் அதை தெரிந்துக்கொண்டால் நீ சவுக்கியமடைகுவாய் உனது மதனகிரீட விலாசத்தை அவருக்குக்காட்டி சுகந்நேரும் சமயத்தில் உனது வாயிலிருந்து ரத்தினம் விழுவதற்கு



காரணமேதென்று தெரிந்துக்கொண்டு பிறகு அவருடன்கூடி சுகத்தை அனுபவிப்பாய், அந்த சமயம்போனால் பிறகு புருஷர் நமக்கு அயிக்கியமாகமாட்டார் நீ அதை தெரிந்துக்கொண்டு எனக்குச் சொன்னால் அதற்குத்தகுந்த உபாயஞ் செய்கிறேனென்றுச் சொல்ல அதுபோலாகட்டுமென்று தாயாருக்குச் சொல்லிவிட்டு காலத்தைப் போக்கிக்கொண்டிருந்தாள். இப்படியிருக்க ஓர்தினம் இராத்திரிவேளையில் போஜனம் செய்துவிட்டு சயனகிரஹமடைந்து ரத்தினகசித மஞ்சத்தின் மீது நாயகனோடு சயனிக்குஞ் சமயத்தில் நாகவர்மன் பஞ்சபாணத்தால் மெலிந்து திரேகம் வேர்த்து மன்மத விசாரத்திலாய்ந்து சோகமடைந்து நாயகி முகத்தைப் பார்த்து ஓ நாயகி! இன்றைக்கு என் இவ்விதமாய் என்னை அலயச்செய்கிறாய் அதோ பார்த்தாயா, மாரன் தன் பாணத்தால் என்மார்பில் தைக்குரான், சந்திரனோ தன் கிரணத்தால் என்பலத்தை வொடுக்குறான் என் திரேகம் தத்தளிக்கிறது இப்படிச்செய்யக் காரணமென்ன நீ கோரியதெல்லாம் தருகிறேன் இதுவுமன்றி எனது திரேகமே உனக்கு அயிக்கியமாயிருக்க இனிவேறு வேண்டுமாவென்று அநேகவிதமாய் காமவிகாரத்தால் மெய்மறந்து அவளைப்புகழ இதைக் கேட்டு அம்மாது ஓ நாயகா!, உமது வாயிலிருந்து ரத்தினங்கள் விழக் காரணமேது அதைச் சொல்லுமென்றுக்கேட்க அதற்கந்தக் காமாந்தகன் விவேகமற்று சொல்லத்தொடர்ந்தான்.

இப்படிச்சொல்லவே அதைக்கேட்ட வேடர் சுவாமி! கேவலமாகிய மாதருக்கு எக்கொலைசெய்தாலும் அது எப்படி சொல்லலாகும் என்னமாய்கை அதை விபரமாக சொல்லுமையா வென்று கேட்க யோகி சொல்லத்தொடர்ந்தார். கேட்பீர் வேடரே எப்படியென்றால்.

அறுசீர் ஆசிரியவிருத்தம்.

சொல்லுவேன்கேள் காமுகர்க்குவிவேகமில்லை
சுதாசுற்றமேலாசை விருப்பமில்லை
தொல்லுலகில் அனுஷ்டானம்பூஜைநியாயம்
தோகையரின் நினவன்றிவேறுமுண்டோ
நில்லுமெனநிலையில்நிர்பார் நிஜத்தைப்பேசார்
நீட்கீர்த்திதனை நடார்நீனிலத்தில்
கல்லுபோல்மனமாக்கி அவள்களிக்க
கந்திபேகொலைப்புரிவார் காண்பீரின்று.

மாதர் மோகவலையில் அகப்பட்டவர்களுக்கு அதுவே பேரின்
பம் பெற்றதாய் தந்தைகளை மறப்பார் நிஜமென்பதை யோசிக்கார்
தனக்குவரும் ஆபத்து இன்னதென அறியாதப்படிக்கு கொலைப்
புரிவார் இப்படி பொல்லா விகாரத்தி லகப்பட்ட நாகவர்மன்
தன் திரேகத்தை மறந்து மோகதாபத்தில் விழுந்து முந்திவரு
வதை தான் தெரியாமல் தன் பிராணனை கொடுத்தப்போதிலும் பெரி
தல்லவென்று பெரும்மனமிட்டு நாயகீ நான் ரத்தினபக்ஷி சிரத்தைத்
தின்றேன் அந்த சிரமானது எக்காலத்திலும் ஜீரணசக்திக் கிடை
யாது. ஆகையால் நான் எச்சமயத்தில் சிரிக்கிரேனோ அச்சமயத்தில்
என்வாயிலிருந்து ரத்தினங்கள் விழுமென்று சொன்னவுடனே இதை
கேட்டு ஆச்சரியமடைந்து அன்றைய இராத்திரி நாகவர்மனுடன்
கேளி விலாசமாயிருந்து மறுநாட்காலை உதயத்திலெழுந்து இராத்திரி
நடந்த சங்கதிகளை யெல்லாம் தன் தாயாருக்குச்சொல்ல இதைகேட்டு
அம்மாது உடனே அவனுக்கு மர்மமாக மருந்துக் கொடுத்து
வியாதி உண்டாக்கும்படி செய்து அவன் தொந்திரவுப்படும் சமயத்
தில் அவனோடும் இவர்கள் விசனமடைந்து அதற்குத்தகுந்த மருந்து
த்ருகின்றேனென்றுச் சொல்லி வாந்தியாகும்படி மருந்துத் தருக
அதை புசித்தமாத்திரத்தில் அவன் வாந்தியெடுக்க அவ்வாந்தியில்
அப்பக்ஷியின் சிரம்வந்து விழவேஇதை யெடுத்துக்கழுவி தன்மகளுக்
குக் கொடுத்தாள். இவன் வாந்தி யெடுத்தவுடனே சங்கடமடைந்து
கண்கள் சொரிகிப்போக இவனைப் பாராட்டாமல் நித்திரை செய்து
விட்டார். பிறகு நாகவர்மன் சிலநேரத்திற்கெல்லாம் எழுந்து திரே
கத்தை திடஞ்செய்துக்கொண்டு சந்திரரேகையுடன் சிலநாள் சுகானு
பவமாயிருக்கும் சமயத்தில் தனது வாயில் ரத்தினம்விழுகாமல் இரு
ப்பதைக்கண்டு லக்ஷயம் செய்யாமலிருக்கவே,

(சுலோகம்.)

வித்தம்த்யஜந்திகணிகா ஸ்வகல்யம்ந்றுபதிம்ப்றஜா
தக்தம்றுகாஸ்த தாரண்யம் ஜாரோபேக்ஷயாஜரத்ஸ்றீய.

லோகத்தில் திரவ்யமில்லாதவனை தாசி மாதர்கள் வெறுப்பார்
குடிஜனங்கள் சமர்த்து யில்லாத வேந்தனை புகழார் கானகத்தில்
தீபற்றியெறிந்தால் காட்டு மிருகங்கள் விட்டுப்போகும் ஜாரஸ்திரீகள்
எவ்வர்னமிருக்கும் வரைக்கும் ஜாரப்புருஷரை கோரிசுகித்து பலத்
தை வெடுக்குவார் தாசிமாதர்கள் நடன விநோதத்தால் புருடனை
மோகபாசத்தில் அகப்படச்செய்து திரேகபலத்தையும் திரவ்யத்தை



யும் அபகரித்துக்கொண்டு அவர் கையில் வோடுதந்து அனுப்புவார்
குலமாதருக்கும் தாசிமாதருக்கும் எந்தவிஷயத்தில் பேதமில்லாம
லிருந்தாலும் தாசிமாதருக்கு அபகரிக்கும் குணமாத்திரம் அதிகமா
யிருக்கும் மோகவலைதனை வீசிப்பிடிப்பது தாசிமாதருக்கு நிஜரூபமா
யிருக்கிறது அதைதெரியாமல் அவள்மோகத்தில் அகப்படலாகினேன்
இது என் விதியின் செய்ல் தான் எவ்வர்னபுருடர் துஷ்டகார்யத்தை
வெருப்பாறோ அல்லது கன்னியஸ்திரீமோகமென்னும் வலையில் அகப்
பட்டு தொந்திரவுபடுவார்களோ இப்படியாகச்சொல்லி துக்கமடைந்து
தாசிமாதர் சுகமானது எனக்கு நன்றாய் அனுபவத்திற்கு வந்தது.
இனி நான் இங்கிருந்தால் பிராணபயம் சம்பவிக்கும் வீணாய் பிராணம்
விடுவதற்காகிலும் எங்கேயாகிலுஞ் சென்று பிச்சையெடுத்து பிழைக்
கலாமென்று தீர்மானித்து அங்கிருந்து புறப்பட்டு ஹிமவத்பர்வத
மறுகில்வர அங்கு ஓர் குகைதன்னில் தவஞ்செய்துக்கொண்டு இரண்டு
சீடருக்கு பாடஞ்சொல்லிக் கொண்டிருக்கப்பட்ட சதானந்த சன்யாசி
யைப்பார்த்து அவருக்கு வந்தனஞ்செய்து தன்னுடைய சவிஸ்தாரத்
தைச்சொல்லி, அவர்கண்ணோக்கி அடாபாலகா! உனக்குமங்களமாகு
மென்றார்.

(சுலோகம்.)

மாதாநிந்ததி நாபிநந்ததி பிதாப்ராதா நஸம்பாஷதே
ப்ருத்யஃ குப்யதிநானுக சதிஸுதஃ சாந்தாசநாலிங்கதே
அர்த்தப்ரார்த நசங்கையான குருதேஹ்யாலாக பமாத்ரம்ஸ்ருஹ்ருத்
தஸ்மாதர்த முபார்ஜிதப்ரய சகேஅர்தேந சர்வேவசாஃ

என்பதுபோல் லோகத்தில் புருடனுக்கு திரவிய மிருக்கவேண்
டும். அவனிடத்தில் திரவிய மில்லாமர்போனாலும் அந்த தனத்தை
சம்பாதிக்கும்படி சாமர்த்திய மிருக்கவேண்டும். அதுவுமில்லாமற்
போனால் அந்த புருஷனுடைய கஷ்டஞ்சொல்ல முடியாது. எப்படி
யென்றால்: தனமில்லாதவனை பெற்றதாயும் நிந்திப்பாள், தந்தைவெரு
ப்பான், கடுமொழியாடுவார், கூடப்பிறந்தவர் மொழியாடக் கஷ்ட
மாகும் ஊழியக்கார் நிற்கமாட்டார், பாலகர் சொன்னமொழியை
கேளாமல் வெருப்பார், அக்கினிசாக்ஷியாய் மாங்கல்யம் தரித்தமாது
பதிவிருதையா யிருந்தபோதிலும் வெறுத்து சுகானுசாரங் கொடுக்க
வெருப்பாள், அவள் பதிவிருதையா யிருப்பதால் தன்னுடைய விதி
வசமென்று மனதிடம்வைத்து புருஷனுடன் மொழியாட வெருப்பாள்
ஆனாலும் அம்மாது ஒருசமயத்தில் சோகமனுபவிப்பாள். இதுவு

மன்றி தனக் கதிக நேசமுடன் இருக்கப்பட்ட சிநேகிதன் முகத்தை
காட்டினால் திரவியங் கேட்பானென்று வெட்கி முகத்தைக் காட்டா
மல் தப்பித்துக்கொண்டு திரிவான், நாமே வலியமொழியாடினாலும்
இதோ வருகிறேனென்றுச்சொல்லி மொழியாடாமல் போகுவான்
ஆகையால் நீ சர்வகார்ய சாதகமான திரவியத்தை சேகரிக்கவேண்டும்
தனமில்லாமற்போனால் மேற்சொல்லிய சுலோகம்போல் திரேகசம்பந்
தம் ரத்தசம்பந்தம் விட்டுப்பிரியுங்காலத்தில். இந்தத் தாசிமாதர்கள்
பிரிய ஆச்சரியக்கரமா? இப்படிச்சொல்லவே இதைக்கேட்ட நாகவர்
மன் சன்யாசியை வலப்பிரதக்ஷணமாய்வந்து சாஷ்டாங்கமாகநமஸ்கா
ரஞ்செய்து சுவாமி! தங்களுக்கு நான் சரணாகதமடைந்தேன். தாங்கள்
பெருமனமிட்டு சரணாகதமடைந்தவனை நீரே ரக்ஷிக்கவேண்டுமென்று
இரண்டுபாதங்களைப்பிடித்து விடாமலிருப்பதைக்கண்டு சன்யாசி நாக
வர்மனைப்பார்த்து பச்சாதாபமடைந்து தன்னிடத்திலிருந்த காமதே
வைக் கொண்டுவந்துகொடுத்து அப்பா! நீ இதைபோஷித்துக்கொண்டு
வந்தால்உனது ஜீவனம் சுலபமாக நடத்தலாம். தினந்தோறும் உதயக்
காலமெழுந்து இதற்கு வலப்பிரதக்ஷணமாய்வந்து நமஸ்காரஞ்செய்து
நின்றால் அது சாணமிடும் அந்தச் சாணத்தைக் கொண்டுபோய் ஜலத்
தில் கழுக அதில் ஒருபிடி திரவியம் அகப்படும். அந்த திரவியத்தில்
பாதிதர்மஞ் செய்யவேண்டும் மிகுதியை உனது சொந்தத்திற்கு செல
வழித்துக் கொள்ளலாமென்றுச்சொல்லி ஆசீர்வதித்தனுப்ப. அந்த
நாகவர்மனானவன் அதிக சந்தோஷமடைந்து அதைக் கொண்டுவந்து
தான் முந்தி வைராக்கியமடைந்ததை தன் மதத்தால் மறந்து மறுபடி
யும் அந்தத் தாசிமனையடைய இதைக்கண்டு மன்னவன் இன்னம்
ஏதோ விசேஷம் கொண்டுவந் திருக்கிறான். அதை அபகரிக்கலா
மென்று மனதிலெண்ணி கதவைத்திறந்து உடனே அவனை சேர்த்துக்
கட்டி சுவாமி! தாங்கள் என்னுடன் சொல்லாமல் வீட்டைவிட்டுப்
போகலாமா? தங்களை எங்குந்தேடியும் அகப்படாமலலையலானேன்.

எனது தசாநாதன் நலமாயிருப்பதால் தாங்கள் அகப்பட்டீர்
நானும் அதிக சந்தோஷமடையலானேனென்று ஜலத்தைக் கொண்டு
வந்து அவன்பாதங்களைக்கழுவி தன்னுடைய முந்தானியால்துடைத்து
இருக்கரத்தால் பிடித்து மஞ்சத்தின் மீது அமரும்படிச்செய்து நாய
கா இதுவரைக்கும் தங்களுடைய ஆசீர்வாதத்தால் நாங்களெல்லோரு
ம் க்ஷேமம் ஆனால் தங்களுடைய திரேகஸ்திதியும் ஆரோக்கிய பாக்கி
யத்தையும் தெரிவிக்கவேண்டும் இத்தனை தினமாக எங்கிருந்தீர் எந்



தெந்ததேசம்திரிந்தீர், ஆங்காங்கு விசேஷங்களேது? ஏதேதுசம்பாதி
த்துவந்தீரென்று சூதுமார்கமாய்கேட்க இதுவுமன்றி கபடமாகவே
சரசங்கள்செய்ய ஆரம்பித்தாள். நாகவர்மன் அம்மாதுடைய மோச
யெண்ணத்தை தன் மனதில் நாட்டாமல் தான்போய்வந்த ஸ்தலத்தை
யும்தான் சம்பாதித்துவந்தவஸ்துவையும் ரதிசுகாபோகத்தில் சொல்ல
மறுநாள் உதயமானவுடனெழுந்து காமதேவுயருகில் சென்று நமஸ்
காரஞ்செய்து முந்தி நிற்குஞ்சமயத்தில் அப்பசுவானது சாணமிட
நாகவர்மன் அதை எடுத்துக்கொண்டு அந்தப்புரம் வந்து தங்கப்பாத்
திரத்தில் ஜலத்தைக்கொட்டி அந்தச்சாணத்தை கழுக அதில் ஒருபிடி
திரவியம் அகப்பட்டது அதில் பாதிபாகம் தர்மம்செய்து மிகுதியை
அம்மாதுக் கீய்ந்தான். அம்மாது அதைப்பெற்றுக்கொண்டு அதிக
ஆச்சரியமடைந்து ஒரு மாதகாலம் இவனுடன் சந்தோஷமாயிருந்து
பிறகு அதை அபகரிக்க வேண்டுமென்று மனமிட்டு மோசஞ்செய்து
இவனை துரத்தவேண்டுமென்று தாயும் பெண்ணும் பேசிக்கொண்டு
ஒருவரு மறியாதப்படிக்கு ஓரிடத்தில் அப்பசுவைக் கட்டிவிட்டு
தோட்டக்காரனை அழைத்து இன்றுராத்திரிக்கு பத்து மணிக்குமேல்
ஓர் மனிதனை அனுப்புகின்றோம். அவன் தோட்டத்திற்கு வந்து பசு
வைத் தேடிக்கொண்டிருப்பான். அந்தச்சமயத்தில் நீங்கள் அவனு
டன் உன்னுடைய பசுவானது எங்கள் தோட்டத்திலிருக்கும்படியான
வயல்களை மேய்ந்துவிட்டது அதைப்பற்றி அப்பசுவை கிராம அதிகாரி
னிடத்தில் வொப்பவிக்கவேண்டுமென்று கட்டி விட்டோமெனச் சொ
ல்லுங்கள் அதைக்கேட்டு அவன் உங்களுடன் கலகத்திற்குவருவான்
அப்போதுநீங்களிருவரும் ஒன்றாய்ச்சேர்ந்து அவனைஒருசெண்டாகத்
தூக்கி ஓர் பாழுங்கிணற்றில் போட்டுவிட்டு உடனே எந்தனுக்குச்
சொல்லென்றுச் சொல்லி பேருக்கு நான்குவராகன் தந்து அனுப்பி
னாள் அவர் அதுபோல் செய்கிறோமென்றுச் சம்மதித்து தோட்டத்தி
ற்கு அவன் வரப்பார்த்துக்கொண்டிருந்தார்கள். இப்படியிருக்க அந்த
தாசியுடைய தாயான செந்திரமுகி நாகவர்மனை அழைத்து சுவாமி!
காட்டிற்குச் சென்ற பசுவானது இன்னம் வீட்டிற்கு வாராமலிருக்கி
றது என் புதல்வியான தங்கள் நாயகி விசனமடைந்து போஜனமருக
வில்லை ஆகையால் நீர்சென்று பசுவை தேடிக்கொண்டு வரும் வரைக்
கும் புசிக்கமாட்டாளாம். அதிக துக்கமடைந்து சயனித்துக் கொண்
டிருக்கிறாளென்று கபடமாகச் சொல்ல இராஜகுமாரன் நிஜமென்று
மனதிலெண்ணி வீட்டிற்குள் போகாமல் வீதியெங்கும் தேடி தோட்
டக் காவலாளிகளைப்பார்த்து ஐயா! உங்கள்தோட்டத்திற்கு ஏதாகிலும்

ஓர் பசுவந்ததுண்டா? என்றுக் கேட்டவுடன் அவர் இவனைப்பார்த்து ஐயா! அந்தப் பசுவானது எங்கள் தோட்டத்தில் புகுந்து வயல்களையெல்லாம் மேய்ந்து விட்டபடியால் அதை விடுவதில்லை. நீர்யாரோ உமக்கும் அந்தப் பசுவுக்கும் சம்பந்தமேதென்று வித்யாசமாய் தூஷிக்க இதைக்கேட்ட நாகவர்மனுக்கு கோபமுண்டாகி அவர்களுடன் கலகம் செய்தான். அவரிருவராயிருப்பதைவிட தாசினுடையமொழிக்கு இசைந்த வரானபடியால் நாகவர்மனை இருவருமெடுத்துக்கொண்டுபோய் ஓர் பாழுங் கிணற்றில் மனப்பூர்த்தியாய் போட்டுவிட்டாரென பிரம்மானந்த யோகிச்சொல்ல இதற்குள் சூரியன் அஸ்தமயமானால் பிரம்பானந்தயோகி கதைதனை நிறுத்திவிட்டார். பிறகு எல்லோருங்கூடி சமீபத்திலிருக்கப்பட்ட கோகுலத்திற்குச் சென்று போஜனமறிந்து சயனிக்குஞ்சமயத்தில் வேடர்கள் இந்த யோகியைப் பார்த்து ஐயா! இந்த க்ஷேத்திரமகிமை எங்களுக்குச் சொல்லவேண்டுமென்று கேட்க யோகி சந்தோஷமனதுடன் சொல்லத்தொடர்ந்தார்.

கேட்டீரோ வேடரே! இந்த கோகுலத்தில் யசோதாதேவி ஸ்ரீ கிருஷ்ண பலராமரை தோட்டத்தில் தொட்டில்கட்டி வளர்த்தாள். இதுவுமன்றி கிருஷ்ணன் ஆடிக்கொண்டிருந்தபடியால் கிருஷ்ணவிலாசஸ்தலமென்றுச் சொல்லுவார் அந்த கிருஷ்ணமூர்த்தி பாலும்வெண்ணையும் திருடி தின்றஸ்தலம்மிதுவாகும் ஆகையால் இங்கிருக்கும் கிருஷ்ணமூர்த்திக்கு நவநீதப்ரியனென்று பெயருமுண்டு இங்கிருக்கும் கோபிகா ஸ்திரீகளெல்லோரும் ஸ்ரீ கிருஷ்ணன்மீது பக்தியுடையவளாயிருக்கிறார்கள் அதுபோலவே இன்றையதினம் யமுனாநதியில் நிர்மாணமாய் கிரீடை செய்துக்கொண்டு கிருஷ்ணபஜனை செய்வார்கள். இப்படி முக்தியடைந்த கோகுலத்தில் சுவாமியை சேவையடைந்தவர்க்கு சகல சம்பதைகள் லபிக்குமென்றுச்சொல்ல வேடர்கள் சந்தோஷித்து மறுநாள் உதயத்திலெழுந்து பிரம்மானந்த யோகியோடு யமுனா நதியில் ஸ்தான முதலான ஷட்கர்மங்களை தீர்த்துக்கொண்டு ஸ்ரீ கிருஷ்ண மூர்த்தியை சேவையடைந்து அங்கிருந்து புறப்பட்டு போகத்துணிந்தார். இப்படி போயிக்கொண்டிருக்குஞ் சமயத்தில் வேடர்கள் பிரம்மானந்த யோகியைப்பார்த்து சுவாமி! தாங்கள்நேற்றயதினம் சொன்ன கதையில் நாகவர்மனை தோட்டக்காரர் கிணற்றிலெறிந்தாரென்றுச் சொன்னீரே அதன் பிறகு கதைதனைசொல்லென்று கேட்க பிரம்மானந்தயோகி சொல்லத்தொடர்ந்தார்.



# பதினோராம் மஜிலிக்கதை.

## தாசிகளின்சகவாசம்.

ஓ! வேடரே கேட்பீர் எப்படியென்றால் தோட்டக்காரர்கள் நாகவர்மனை கிணற்றில் தள்ளிவிட்டு தாசியிடம்சென்று நடத்தியசங்கதியைச் சொல்ல இதை நம்பிக்கைப்படாமல் இவர்கள் கிணற்றில்தள்ளி விட்டாரோ அல்லது பொய்மொழி பேசுகிறாரோ! தெரியவில்லை அவன் மாண்டானோ அல்லது பிழைத்திருக்கின்றானோ அதை நான் பரீக்ஷிக்க வேண்டுமென்று தான் மறுநாள் உதயத்திலெழுந்து கிணற்றருகில் வந்து சேர்ந்தாள்.

இங்குகிணற்றில் ஜலம் கொஞ்சமாயிருப்பதால் நாகவர்மன் ஜலத்தில் மூழ்காமலும் தெய்வக்கடாக்ஷத்தால் அடியும் படாமல், ஜலத்தில் நின்று அந்த இராத்திரி அதிக பிரயாசைப்பட்டு தைரியத்தைக் கைக்கொண்டு கரைமீதிலிருந்து தொங்கிக்கொண்டிருந்த கொடியைப் பிடித்துக்கொண்டு மேலுக்கு ஏறிவரும் சமயத்தில் செத்தவனை யெடுத்துப் போடுவதற்கு கூலிக்காரரை அழைத்துக்கொண்டு தாசி கிணற்றருகில் வந்துப்பார்க்கவே பிராணத்துடன் கரைமீது வரப்பட்ட நாகவர்மனைப் பார்த்து ஆ ஹா! மோசம் வந்ததே இவன் இன்னம் பிழைத்திருக்கிறான் இதற்கேது செய்குவேன் ஏது உபாயம் தேடுவேன் எப்படியாகிலும் நாம் தப்பித்துக்கொள்ள மார்க்கம் தேடவேணுமென்று யோசித்து அடா! கூலியாட்களே இந்தக்கிணற்றில் இரங்கி அவனை மேலுக்கு எடுப்பீரெனச் சொல்லவே இதைக்கேட்டு கூலியாட்கள் கிணற்றில் இரங்கி நாகவர்மனைமேலுக்குயெடுத்து விட்டார் இதற்குள் அந்த்தாசியானவள் இவனைக்கண்டு சந்தோஷம் உண்டானவள்போல் நடித்து நாயகா தாங்கள் இராத்திரி வராமலிருப்பதால்நான் நித்திரை ஆகாரம் விட்டு துக்கமடைந்திருந்தேன், தாங்கள் இந்தக்கிணற்றில் விழக் காரணமேது? எனது தெசையானது நன்றாயிருப்பதால், தாங்கள்மறுபடியும் பிழைத்து வந்தீரென உன்னதமாய் மொழியாட மூடமதியணிந்த நாகவர்மன் அவள் மோசயெண்ணம் அறியாமல் தான் கஷ்டத்திற்கு பரிதாபப்படுவது நிக்ஷபமென்று நாயகி! நான் நேற்றியதினம் பசுவைத்தேடிக்கொண்டுபோக உனதுதோட்டக்காவலர்கள் நிஷ்காரணமாய் மொழியாடி கலகம்செய்து என்னையெடுத்து கிணற்றில் போட்டுவிட்டார் என்றுச் சொன்னவுடன் அம்மாது ஐயோ தங்களுடைய அதிர்ஷ்டம் நன்றாயிருக்கிறது இந்த பாழும் தோட்டத்தில்

இரண்டு முனிநாதரிருக்கிறார் அவரே உங்களை இந்தக் கிணற்றில் எடு
த்துப் போட்டிருக்கலாம் இந்தப்பாழும் தோட்டத்திற்கு ஏன் வந்தீர்
அந்த பசுவானது இன்றைக்கு அகப்படாமல் போனால் நாளையதினம்
அகப்படுமென்று எண்ணாமல் அவருடன் போர் வைத்துக்கொண்
டீர் ஏதுமறியாமல் இத்தனைக் காரியத்திற்கு தலையிட்டீர் தாங்கள்
சற்குண முடையவரானப் படியால் பிழைத்தீர் இல்லாமற்போனால்
ஏது லபிக்குமோ தெரியாது ஆனால் பிராணத்துடனிருந்தால் இதைப்
போல் பசுவை அநேகம் சம்பாதிக்கலாம்.

ஆனால் தாம்பிழைத்தது பெரிய பாக்கியந்தான் வீட்டிற்குபோக
லாம் வருவீர் தாங்கள் வரவில்லையென்று நான் இராத்திரிதினம் நித்
திரைவிட்டு பார்த்தக்கண் பூர்த்துப்போச்சுது இதுவுமன்றி இருவ
ரும் ஏகமனதாய் புசிப்பதாச்சுதே இதை நினைந்து உபவாசமாயிருந்
தேன் முக்கியமாய் எனக்கு தங்களுடன் இன்னம் கொஞ்சக்காலம்
சுகமனுபவிக்க பிராப்தமிருக்கிறது ஆகையால் பகவான் தங்களுக்கு
வந்த கஷ்டமெல்லாம் நிவர்த்திசெய்தார், இதுவன்றி அந்த சமயத்
திற்கு உங்களருகில் என்னையழைத்துக் கொண்டுவந்த ஸ்ரீ ஹரிநாரா
யணனுக்கு இதோ வந்தனம் செய்குறேன் என்றுச்சொன்னாள். எப்
படியென்றால் இதரமானவர் மனதை தெரிந்திட சாமார்த்தியம் யாரு
க்கும் கிடையாது. மொழிகளால் ஒருவர் மனதை அறிந்திட சாமர்த்
தியமான புத்திவான்கள் சூக்ஷமத்தில் அறிந்திடலாம் அதுபோல்
இந்தப்புருடன் பால்ய வயதானபடியால் அவள்மோசமொழியை அறி
ந்திடாமல் அவள் நிஜமாக துக்கப்படுகின்றாளென்று தன் மனம்
நாட்டி அவள் பின்பற்றி வீட்டிற்குச் சென்று அந்ததினம் அம்மாது
டன் சேர்ந்து சுகாசுகத்தை அனுபவிக்க வேண்டுமென பெருமனமி
ட்டு சரச சல்லாபங்களாட அவள் அதற்கு இடம் கொடாமல் உபாய
த்தால் நாயகா! இந்தப்பசுவை நீங்கள் எந்த தேசத்திற்குச் சென்று
கொண்டுவந்தீரோ அவ்விடத்திற்கு போய் இருக்கலாம், அங்காகி
லும் சென்று தேடிவந்தால் நலமாயிருக்கிறது ஆனால் அது கேவல
மான பசுவல்ல தாங்கள் காலஹரணம் செய்தால் நமக்கு லபிக்காமல்
போகும் என்று இப்படியாக அந்த இராத்திரியெலலாம் மொழி
களாடி பொழுதுப்போக்கினாள் தவிர இவனுக்கு சுவாதீனப் படவி
ல்லை இதற்குள் சூரியன் உதியமானவுடனே நாகவர்மன் உனதிஷ்டப்
படிச் செய்குறேனென்று அந்தப்பசுவை தேடிக்கொண்டு ஹிமாலய
பர்வதமருகில் தவஞ்செய்யும் சதானந்த யோகீஸ்வரன் ஆஸ்ரம மடை
ந்தான்.



இப்படிருக்க மூத்தவனாகிய ரத்தினவர்மன் சிங்காரபுரத்தின்
வேந்தன் புதல்வியை விவாகஞ் செய்துகொண்டு இராஜ்யம் பரிபா
லித்து குடிகளைக் காற்றுக்கொண்டு தனது மாமியை இடைவிடாமல்
ரக்ஷித்து பிரசித்தியுடனிருந்தான். இவனுடைய தேவியானவள் புஷ்
பவதியாகாம லிருப்பதைப்பற்றி சரபந்த கிராமத்தில் வசிக்கும் செங்
கிரசேகை என்கிற தாசிபெண் மூத்தவளான சோமசுந்தரியை மோகி
த்து அவளுடன் தினந்தோறும் கிரீடாவிநோதத்தில் சுகித்திருந்தான்.
இப்படி நாலுவருடமாய் நடந்துக்கொண்டிருக்க, இந்தச்சங்கதி மாமி
யறிந்து விசனமடைந்து, மருகனுக்கு புத்திச்சொல்ல சாத்தியமாகா
தென்று தெரிந்து யோசிக்குஞ் சமயத்தில் தெய்வகடாக்ஷத்தால் இவ
னுடைய தேவி புஷ்பவதியானாள். இதையறிந்து நல்ல சுபதினத்தில்
கர்பாதான மஹோஸ்வம் நடத்தினார். இந்த ரத்தினவர்மன் தேவி
மீது அதிக மோகமடைந்து அந்தத் தாசியைமறந்தான். தாசிமாதர்
கள் தனது சொந்தக்கணவனைவிட மற்றொருவன்மேல் அபேக்ஷவை
த்து அவனெந்த விகாரமாய் இருந்தபோதிலும் மனதில் வையாமல்
அவனுக்கு வேண்டிய பொருளை இதரமனிதரால் சேகரித்துக் கொடுத்
துக்கொண்டிருந்தாள். ஆனால் அவனுடைய ரூபம் எப்படியென்றால்
காட்டுக்கட்டை யெரித்தகரி எவ்வர்ணமா யிருக்குமோ அதுபோல்
ரூபமும் பெருச்சாளி நேத்திரத்திற்காகிலும் விசாலமான நேத்திர
முடையவனாங், கணேசன் வயிற்றுக்கு சமமாய் வயறுடையவனாய்,
வோட இவனைக்கண்டு வெட்கமடைந்து வோடிப்போகும் அதுபோல்
முதுகுடைந்தவனாயும், நண்டு திரேகமுடையவனாயும், இரும்புக்காகி
லும் மெதுவாயிருக்கப்பட்ட அஸ்தமுடையவனாயும், குதிரைவால்
ரோமத்திற்காகிலும் மெதுவாயிருக்கப்பட்ட ரோமமுடையவனாயும்,
உயரத்தில் ஏரக்குறைய பத்தடிமனிதனாக, இருக்கப்பட்ட ஓர் புரு
டன்மேல் மோகமடைந்து நம்பிக்கொண்டிருந்தாள்.

(சுலோகம்.)

லக்ஷ்மி லக்ஷ்மண ஹீநேச குலஹீநே சரஸ்வதி
அபாத்ரே ரமிதேநாரி கிரேளவர் ஷதிவாசவ:

என்னும் மொழிபோல் லக்ஷ்மி தரித்திரவானிடத்தில் எப்படி
சேருவாள். சரஸ்வதி தரித்திரவானனுக் கெப்படி வாக்கில் ஸ்தாபித
மாகுவள். குல ஸ்ரீயாசப்பட்டவள் எப்படி நிஜப்புருடனை கோருவள்.
மழையானது எப்படி மலைச்சாரலில் பெய்யுமோ அதுபோல் இந்த
சுந்தரியான தாசியானவள் அந்த நீச்சப்புருஷன்மேல் மோகமடைந்

இருப்பதால் ஒரு சமையத்தில் அவனுடன் மொழிச்சொல்லலானாள் எப்படியென்றால், இந்நாட்டின் வேந்தனாகிய ரத்தினவர்மன் இதுவரைக்கும் என்மீது மோகசாந்தனாயிருந்தான். இப்பொழுது அவன் தன் மனைவின்மீது மோகத்தைவைத்து என் மோகத்தைவெருத்து என்னை மறந்திருக்கிறான். அவர் தன் பத்தினியைவெறுத்து மறுபடியும் என்மீது மோகமடையும்படி நீ செய்யவேண்டுமென்றுச் சொல்ல இதைக்கேட்ட சோரருடன் அம்மாளைப்பார்த்து ஓ நாயகி! சரபந்த கிராமத்து மஷானத்தில் ஓர் பறையன் காட்டேரியேவல் செய்குறான் அவன் மகாசமர்த்தனென்று உலகமெங்கும் கியாதியடைந்திருக்கிறான் நாம் அவனையழைத்து இராஜன் தேவியை மடியச்செய்வோம் பிறகு உன்மீது மோகமடைந்து இரவும் பகலும் நீயே கெதியெனநாடி நிற்பாரென்றுச்சொல்ல. இம்மொழிகேட்டு அந்தத் துஷ்டமாது இதற்கிணங்கி சம்மதமடையவே அவன் மந்திரக்காரனை வரவழைத்து சூனியஞ் செய்யச்சொன்னான். அதுபோல் அவனும் செய்யலுற்றான். பூரண சூர்யோகத்தில் ஜன்மித்த அம்மாளுக்கு ஏதும் ஆபத்துயணுகவில்லை, இதையறிந்த அத்தாசி துக்கமடைந்து மறுபடியும் அந்த மந்திரக்காரனை அழைத்துக்கேட்க அதற்கவன் அம்மா நான் ஜலத்தை மந்திரித்துத்தருகிறேன் அந்த ஜலத்தைக்கொண்டுப்போய் அம்மாளுக்கு ஸ்தானம் செய்யவைத்தால் உடனே அம்மாள் சிலைரூபமாகுவாளென்று ஜலத்தை மந்திரித்து கொடுத்துவிட்டுச்சென்றான். அந்தத் தாசியானவள் ஜலத்தைக் காப்பாற்றிவைத்திருந்து இராஜனுடைய அந்தப்புரத்து தோழிமாதருடன் சிநேகஞ்செய்துக்கொண்டு அவள்கையால் மந்திரக்காரன்தந்த ஜலத்தைக்கொடுத்து அம்மா இதைவேந்தன் தேவிமீது தெளிப்பாயென்றுதருக அதுபோல் அம்மாது தடையில்லாமல் தெளிக்கவே தக்ஷணமே எவ்வர்ணரூபமாயிருந்த இராஜப்புதல்வி சிலைரூபமாய்விட்டாள். அந்தப் புதல்வியுடைய தாயானவள் இதைப்பார்த்து துக்கமடைந்து மருகனுக்குச் சொல்ல. அவர் இது என்னமோ பூர்வஜென்ம கர்மமென்றுச்சொல்லி சமாதானப்படுத்தி சிலதுநாள்வரைக்கும் அந்த மாதுமுகத்தைப்பார்க்காமல் வைராக்கியமாயிருந்து பிறகு மன்மதவேதனை சகிக்காமல் எப்போதும்போல அந்த சோமசுந்தரியிடம் சேர்ந்து சந்தோஷமாய் இருந்தான்.

இப்படிருக்க நாகவர்மன் பசுவை தேடிக்கொண்டு சுதானந்த யோகி மனைக்குச்சென்று விசாரிக்கவே அம்மஹானுபாவன் விஷ்ணு



பதவியடைந்தாரென தெரிந்திட அவர் சீடரிடம் சென்று பார்க்க, அவர்கள் குருதனமாகிய கமண்டலத்தையும் யோகதண்டத்தையும், பாதக்கொரடையும், பாகித்துக்கொள்ளும் விஷயமாய் மனஸ்தாபமடைந்திருந்தார் அச்சமயத்தில் அங்குவந்த நாகவர்மனைப் பார்த்து அவர் மனோவியாகூலத்தை தீர்த்துக்கொள்ள மத்தியஸ்தனாக இவனை நியமித்து அமரும்படிச்செய்து அவரோடு அந்த வஸ்துக்களுடைய மகிமைதனைச் சொல்லத்தொடர்ந்தார். ஐயா! இந்தக்கமண்டலமானது பகற்காலத்தில் அதிபக்தியுடன் புசிக்க எத்தனைப்பேருக்கு அன்னம் வேண்டுமானால் இதற்கு நமஸ்கரித்து நின்றால் உடனே எல்லோரும் சந்தோஷமடையும்படி பத்துவித பதார்த்தத்துடன் திருப்திகரமான சாதம் கிடைக்கும் இந்த யோகதண்டம் சூத்திரமானது நேத்திரம் மூடிக்கொண்டு தியானிக்க அதில் ஒரு தேவதை சுப்பிரசன்னமாய் வந்து ஒருபிடி திரவியத்தையும் நவரத்தினங்களையும் கொண்டுவந்துக் கொடுக்கும் இந்தப் பாதக்கொரடை பாதத்தில்தரித்து பரந்தாமாவென்று தான் போகவேண்டிய விடத்தை நினைந்தமாத்திரத்தில் அவ்விடத்திற்கு கொண்டுப்போய் விட்டுவிடும் ஆகையால் இந்த வஸ்துக்களில் ஒருவன் கமண்டலமும், மற்றொருவன் யோகதண்டமும், பெற்றுக்கொண்டோம் மிகுதியான பாதக்கொரடு விஷயம் எந்தனுக்குச் சேரவேண்டும் இன்னமொருவன் எந்தனுக்குச் சேரவேண்டும் என்று இரண்டுபேரில் கலகமாகி நிற்கிறது ஆனால் எங்கள் குருவானவர் உனக்கு தந்த பசுவுடன் இந்த மூன்று வஸ்துவுகள் சொந்தமாயிருந்தது. பசுவை உனக்கு தந்தார். மற்றதில் ஒருவன் ஒன்று பெற்றேன் மற்றொருவன் இன்னமொன்றைக் கைக்கொண்டான் மிகுதி பாதக்கொரடு இருக்கிறது ஐயா இந்த இரண்டுபேரில் எவருக்குசேரவேணுமோ அதை நீரே அறிந்து எங்கள் மனவியாகூலத்தை தீர்ப்பீரென்றுச் சொல்ல இதைக்கேட்டு நாகவர்மன் அதை தான் அபகரிக்கவேண்டுமென்று பெரும்மனமிட்டு ஐயா! இதை இப்படி தீர்ப்பதற்கு தகுதியல்ல யான் ஒருக்கல்லை எறிகின்றேன் அதை எவன் முந்திக்கொண்டு வருகின்றானோ அவனே இந்த இரண்டு வஸ்துக்களுக்கு சொந்தமாகுவான்; சும்மா கலகஞ்செய்தால் பிரயோஜனம் கிடையாது என்று சொல்ல,

அதற்கு அந்த யோகி சீடர்கள் சம்மதமடைந்து உனதிஷ்டம் போல் செய்யுமென்றுச் சொல்ல நாகவர்மன் ஒருக்கல்லைக் கொண்டுவந்து அதற்கு கயர்கட்டி அவர்களிருவருக்கும் காட்டி அதிக தூரமாக எறிந்து இருவரையும் ஓரிடத்தில் நிறுத்தி "ஹூம்" என்றவு

டன் இருவரும் அந்தக்கல்லே எடுத்து வருக ஓடினர்கள். அப்போது
நாகவர்மன் அந்த பாதக்கொரடை காலில் அணிந்து "பாந்தாமாசரீர
பந்த கிராமத்திலிருக்கும் செந்திரரேகை யென்னும் தாசிமனைக்குகொ
ண்டுப்போ" என்று ஸ்மரித்தவுடனே. இவனே அந்த நிமிஷத்தில்
கொண்டு வந்து அந்த தாசிமனேயில் நிறுத்தியது. உடனே அவள்
கதவைத்திறந்து நாகவர்மனைப் பார்த்து பாதங்களுக்கு ஜலத்தைக்
கொட்டி அவர் பாதங்களை பட்டு பீதாம்பரத்தால் துடைத்து அழை
த்துக்கொண்டுப்போய் மஞ்சத்தின்மீது அமரச்செய்து நாயகா! பசுவு
யகப்பட்டதா என்று கேட்க இதைக்கேட்ட நாகவர்மன் மாதே
அதற்கு பதிலாக இந்த பாதக்கொரடு அகப்பட்டதென்று அதின்
மகிமை யெல்லாம் சொன்னுன். இந்த ஆச்சரியத்தைக் கேட்டு அதிக
சந்தோஷமடைந்து நீர் போனவுடனே பசுவானது வீட்டிற்கு வந்து
சேர்ந்ததென்றுல் நாகவர்மன் சந்தோஷமடைந்து இருவரும்ரதிமதன்
போல் கிரீடா விலாசத்திலிருக்கும் சமயத்தில் அம்மாது நாயகா பசு
வுக்காகிலும் சிரேஷ்டமான இந்த பாதக்கொரடை சம்பாதித்தீர் இனி
நமக்கு சமானமானவர் யாரிருக்கின்றுர்கள். தங்களுடைய பிராணன்
பிழைத்திருக்கிறவரைக்கும் எனக்கேதும் கஷ்டமனுகாது. என்றுச்
சொல்லி அவனுக்கு மதக்கிரீடா விலாசத்தில் மயங்கும்படி ரதிசுகத்
தை தந்து மோகத்தை மீரச்செய்து அந்தப் பாதக்கொரடைதான்
கிரஹிக்கவேண்டுமென்ற எண்ணமிட்டு அவனுடன் புன்சிரிப்படைந்து
மொழியாடவே ரத்தின பக்ஷிசிரத்தை அவள் தின்று இருப்பதால் அ
வள் வாயிலிருந்து ரத்தினங்கள்கொட்டியது.) அதைப்பார்த்து நாகவர்
மன் ஆச்சரியமடைந்து ஆ ஹா! இவள் நம்மை மோசஞ்செய்து நமக்
குவாந்திக்கு ஔஷதம்தந்து பக்ஷி சிரத்தை தான் விழுங்கினுள்.
இதுவுமன்றி கிணற்றில் தள்ளிவிட்டு பசுவை அபகரித்தாள் தந்திரம்
செய்து இந்த பாதக்கொரடை கைக்கொள்ள எண்ணமிட்டிருக்கிறுள்
என்று மனமிட்டு விசனமடைந்திருந்தான். இந்த நாகவர்மன் மனதை
அறியாமல் அந்த தாசியானவள் மனிதர் சஞ்சாரம் செய்யாத இடமா
யிருக்கப்பட்ட லங்கை தீபாந்திரத்தில் சங்கரிதேவி கோவிலிருக்கிறது
அந்த தேவிக்கு பூஜைசெய்தால் மாதருக்கு ஸ்வர்கப்ராப்தியாகுமெ
ன்று பெரியோர் சொல்லுவார் ஆகையால் தங்கள் அனுக்கிரஹத்தால்
எனக்கு ஸ்வர்க்க பிராப்தியாகவேண்டும் என்னே அழைத்துக்கொண்
டுப்போய் அந்த ஈஸ்வரிக்கு பூஜைகள் செய்தபிறகு மறுபடியும்
என்மனைக்கு அழைத்துக்கொண்டு வருவீர் எனபிரார்திக்க பாதக்கொ



ரடு தன்னிடமே இருக்குமென்று எண்ணமிட்டு ஸ்திரீ மோகத்தில்
அகப்பட்ட நாகவர்மன் நல்லதென்று சம்மதித்து மறுதினம் பூஜை
சாமான்கள் தயார் செய்துக்கொண்டு வருக நாகவர்மன் பாதக்கொ
ரடை காலில் தரித்துக்கொண்டு அம்மாதை எடுத்துத்தோளில் வைத்
துக்கொண்டு "பாந்தாமா லங்காதீபத்தி லிருக்கப்பட்ட சங்கரிதேவி
கோவிலுக்குபோவென்று ஸ்மரித்தவுடனே கொண்டு போய்விட்டது.
அந்தமாது சிலது லாகிரி வஸ்துக்களை சக்கரைதன்னில் கலக்கி இவ
னுக்கு தெரியாமல் கொண்டு வந்திருந்தாள். தேவியை பூஜைசெய்வ
துப்போல் நடித்து அந்த சக்கரைதனே நைவேத்தியஞ் செய்து அவ
னுக்கு மயக்கம் வரும்படி முந்தியாய் அந்த சக்கரை தருக அவன்
சக்கரையென்று மதிமயங்கி புசித்தவுடன் தாம்பூலச்சுருள் தந்து
சரசசல்லாபமாட இதற்குள் அம்மருந்து திரேகத்தில் வியாபித்து
தலேசுழற்றி தன்னே அறியாமல் பூமியில் விழுந்தான். உடனே அருகி
லிருந்த அம்மாதுகொண்டுவந்ததெல்லாம் விட்டுவிட்டு பாதக்கொரடை
அணிந்து "பாந்தாமா சரபந்த கிராமம் சேரவேணுமென்றுச் சொன்ன
மாத்திரத்தில் உடனே தன் வீடு வந்து சேர்ந்தாள். என்று சொன்ன
வுடனே சூரியன் மேற்கு திசைமறைந்தான் பிரம்மானந்தயோகி கதை
தனேநிறுத்திவிட்டு சமீபத்திலிருக்கும்பிருந்தாவனத்திற்கு வேடருடன்
சென்று அங்கு ஸ்தானபோஜனாதிகாரியம் தீர்த்துக்கொண்டப் பிறகு
வேடர் யோகியைப்பார்த்து சுவாமி இந்த க்ஷேத்திர பிரபாவம் எங்க
ளுக்கு தெரியும்படி சொல்லுமென்று கேட்க பிரம்மானந்தயோகி
சொல்லத் தொடர்ந்தார்.

பூர்வகாலத்தில் ஜலதரன் என்கிற இராக்ஷசனிருந்தான் அவனு
டைய பத்தினியாகிய ப்ருந்தயென்பவள் அதிரூபமடைந்திருந்தாள்.
அந்த மாதுசிரோண்மணியை மகாவிஷ்ணு பார்த்து மோகமடைந்து
சேர்வதற்கு மனமிட்டு அந்த துஷ்டனுகிய ஜலதரனே கொன்று விட்
டார். அதன்பிறகு ப்ருந்தயென்னும் அவன்தேவி கணவன் மரணம
டைந்ததைதெரிந்து புருடனேடுதானும் தன்னுவியைபோக்கிவிட்டாள்
அப்போது மகா விஷ்ணுவுக்கு உண்டானமோகம் நிவர்த்தி செய்வ
தற்காய் லக்ஷ்மிதேவியால் கொடுத்தனுப்பப்பட்டவிதையை அம்மாது
சாம்பலாயிருந்த இடத்தில் விதைக்க உடனே துலசி விருக்ஷம் பிறந்
தது அதை பகவான் அங்கீகரித்து அந்த மோகத்தை போக்கடித்
துக் கொண்டார் மகாவிஷ்ணுவு இங்கு சிலகாலம் வாசஞ்செய்தபடி
யாலும் அதன்பிறகு கிருஷ்ணமூர்த்தி இந்தயிடத்தில் பசுக்களைமேய்

த்துக் கொண்டிருந்தபடியாலும் இந்தஸ்தலம் அதிக பிரசித்தியடைந்தது இங்கு கிருஷ்ணமூர்த்தி வேணுநாதம் செய்த கௌரிவனமென்ற கதம்பவனமாக பிரகாசமடைந்து ஸ்ரீகிருஷ்ணன் பசுக்களுக்கு நீர் காட்டிய கோவிந்த குண்டமொன்று பிரகாசிக்கிறது இங்கு சுவாமி! அர்சாரூபமாய் நம்மைப்போலொத்த மனிதருடைய பாபங்கள் அதஞ்செய்ய மதனமோகன சுவாமி, கோவிந்ததேவ சுவாமி, கோபிநாதசுவாமி, என்ற நர்மங்களோடு வாசஞ் செய்துக்கொண்டிருக்கிறார்.

இப்படி சொல்லவே வேடர்கள் சந்தோஷமடைந்து மறுநாள் உதயத்தில் திவ்ய தீர்த்தமான கோவிந்தகுண்டத்தில் ஸ்தானஞ்செய்து கிருஷ்ண சுவாமியை சேவையடைந்து போஜனம் தீர்த்துக்கொண்டு அங்கிருந்துப் புரப்படுஞ்சமையத்தில் வேடர்கள் யோகியைப் பார்த்து சுவாமி! தாங்கள் நேற்றியதினம் சொன்ன கதைதன்னில் வேந்தர் புதல்வர்பட்ட கஷ்டத்தைக் கேட்டு மனவியாகூல மடைந்தோம் தன சம்பத்தால் ரத்தினவர்மன் மாதா பிதா சகோதரனை மறந்து தனது தேவியடைந்த கெதியை மனதில் எண்ணாமலும் தான் ஓர் நாட்டிற்கதிபதி யென்றும் யோசியாமல் மோகமடைந்து துஷ்டமாயவலை வீசப்பட்ட சந்திரரேகையுடைய தமக்கையாகிய தாசிமாதை சேர்ந்து சந்தோஷமா யிருந்தான். இவனுடைய தம்பியாகிய நாகவர்மன் படுப்பாவியாகிய தாசிமாதைச் சேர்ந்து கஷ்டப்பட்டு சம்பாதித்த மகிமையுடைய வஸ்துவை யெல்லாம் அவள் மொழிக்கு மோகமடைந்து கைச்சோர்ந்துவிட்டான் பிறகு தன்னுடைய பிராணமும் போனதுப்போல் மூர்ச்சை யடைந்தான் அப்படிக்கொத்த நாகவர்மனுடைய சங்கதியாதோ அதைக் கேட்கவேண்டுமென்று கேட்க பிரம்மானந்த யோகி வேடரைப் பார்த்து சந்தோஷமடைந்து பூர்ணமனதுடன் சொல்லத் தொடர்ந்தார்.

---



# பனிரெண்டாம் மஜிலிக்கதை.

## பகவான் கடாக்ஷம்.

---

ஓ வேடரே! ஏகமனதாய் கேட்பீர் எப்படியென்றால் நாகவர்மன் அம்மாது கைமருந்து தின்று அந்த இராத்திரியெல்லாம் மூர்ச்சையடைந்திருந்து, மறுநாள் உதயத்தில் குளிர்ந்த காற்றுவீசுவதினால் மூர்ச்சை தெளிந்தெழுந்து உட்கார்ந்து விழித்துப்பார்க்க சமீபத்தில் அந்த தாசியும் பாதக்கொரடும் இல்லாமல் போனதுப்பற்றி மனதாயாசமடைந் தப்போது நாகவர்மன் ஆ ஹா? மோசம் செய்தாள் எனது பாதக்கொரடை அபகரிக்க இவ்வித தந்திரங்கள் செய்தாள், கூத்திமாருடன் எப்போதும் நிக்ஷயத்தைச் சொல்லலாகாது அது தெரிந்திருந்தும், நான் அவள் மோசயெண்ணத்தையறியாமல் உண்மையைச் சொல்லிக்கொண்டு வந்ததைப்பற்றி எனக்கு இப்படிக் கொற்ற கஷ்டம் சம்பவித்தது. பெரியோர்கள் தாசிமாதரின் நேசத்தை வெறுத்திருப்பார்கள். என்னைப் போலொத்த அறிவு கெட்டவரவர் சகவாசத்தில் முந்தி வரப்பட்ட கஷ்டத்தை அழியாமல் அவர் மோகவலையில் அகப்பட்டு நொந்துருகலானேன்.

இப்போது மனித சஞ்சாரமில்லாத தீபாந்திரத்தில் அகப்பட்டு துயரப்பட காலமாச்சுது இனிநாம் என்னசெய்வது பிராணதியாகமே தகுந்த மார்க்கமென்று நிச்சயித்து அந்த தாசிமாது வைத்துப்போன பூஜை சாமான்களை எடுத்து கெங்கையைப் பூஜித்து, ஹரி என்று அங்கிருக்கப்பட்ட கிணற்றில் குதிக்க யோசித்தான், அச்சமயத்தில் அநாதரக்ஷகனை பகவான் குரங்கு ரூபமாய் அவன் கண்ணுக்குத் தோன்றி "நிற்பீர் நிற்பீர்" என்று ஓசைப்பிறந்தது அதைக்கேட்டு நாகவர்மன் அந்தக்கிணற்றின் படிமீதிருந்து பார்க்க அந்தக்குரங்கு அவ்வேந்தன் சமீபத்திலிருக்கப்பட்ட ஒரு கொய்யாச்செடி மீதேறி கிழக்கு திசையிலிருக்கப்பட்ட பழத்தைத் தின்று செடிவிட்டிறங்கி வந்து அந்தக்கிணற்றில் கிழக்கு திசையாகக்குந்தி இரண்டுகை ஜலம் புசித்தவுடனே மனித ரூபமாச்சுது மறுபடியும் அந்தச் செடியேறி மேற்கு திசையிலிருக்கும் பழத்தைத்தின்று அந்தக்கிணற்றில் மேற்கு திசை தண்ணீர்குடிக்க கிளிரூபமெடுத்தது மறுபடியும் அந்தச் செடியேறி தெற்கு திசைபழம் தின்று தெற்கு திசை நீர்குடிக்க முந்தியிருந்த குரங்கு ரூபம்தரித்து அங்கிருக்கப்பட்ட சங்கரீதேவி

க்கு வந்தனஞ்செய்து தான் வந்தமார்க்கமாய் போய்விட்டது. இதை கண்ட நாகவர்மன் சமீபத்திலிருந்த கானகஞ்சென்று அங்கு உனர்ந்திருக்கப்பட்ட சொரக்காய் குடுக்கைகளை சம்பாதித்துக் கொண்டு வந்து அங்கிருக்கப்பட்ட பேய்க்கரும்பு செடியையொடித்து ஒருதண்டுக்கு மூன்றுச் சொரக்காய்களைக் கட்டி அந்தச்செடியேறி கிழக்கு, மேற்கு, தெற்கு, திசைதனிலிருக்கப்பட்ட பழங்களை அறுத்து ஒவ்வொரு திசைப்பழங்களை ஒவ்வொரு சொரக்காயில் போட்டு அந்தக் காயின் மீது (கி-மே-தெ) என்கிற எழுத்தையோர் இரும்பால் எழுதி அந்தக் கிணற்றிலிரங்கி கிழக்கு மேற்கு தெற்கு திசையிலிருக்கும் நீரை மூன்றுக் காயில் நிறைப்பிக்கொண்டு அந்தக் காய்களுக்கு (கி-மே-தெ) என்றயெழுத்தை எழுதிவிட்டு வடதிசையிலிருக்கும் தேவிப்பிரசாதத்தை ஒரு பழைய துணியில் கட்டி அதை அந்தக்காய்களின் மத்தியில் கட்டி தான் செடியேறி மேற்கு திசையிலிருக்கும் பழத்தைத் தின்று கிணற்றில் மேற்குபாக ஜலத்தைக் குடித்த மாத்திரத்தில் கிளிரூபம் தரித்து தன் மூக்கில் அந்தக்காவடியை கடித்துக் கொண்டு நிமிஷநேரத்திற்கெல்லாம் சமுத்திரம் தாண்டி அக்கரை வந்து(கி) என்ற சொரக்காயிலிருக்கும் பழம் தின்று அந்த குரியிட்ட காயிலிருக்கும் ஜலத்தைக்குடித்த மாத்திரத்தில் முந்திபோலவே மனிதரூபமானான்.

வெகுநாளாய் காசியாத்திரை போனவர் மறுபடியும் வருஞ்சமயத்தில் காவடி எடுத்துக்கொண்டு வருவதைப்போல் அந்தக்காவடி தோளில் வைத்துக்கொண்டு தாசிமாது செய்த மோசங்களை எண்ணி எண்ணி அவளுக்கு பதில் நாம் செய்யவேண்டுமென்று மனமிட்டு மறுபடியும் அம்மாது வீட்டிற்கு வந்து அவள் பெயரிட்டழைத்தான். அந்த தாசிமாது அக்குரலோசைக்கேட்டு நாகவர்மன் என்றறிந்து, தான்செய்த மோசயெண்ணத்தை நினைந்து வெட்கமடைந்து கதவைத்திறந்து அவருடைய முகத்தைப் பார்க்காமல் பூமியைப் பார்த்துக்கொண்டு வாருமென்றழைத்து ஒரு ரத்தின கம்பளம் போட்டு அதின் மீது அவரை அமரும்படிச்செய்து தான் தூரமாய் நின்று நான் தங்களுச்குச்சொல்லாமல் வந்தப்படியாலல்லவா தாங்கள் இவ்வளவு கஷ்டமடைந்தீர். அந்த சங்கரிதேவி பூஜைக்காய் நான்செய்த அர்சைபாத்திரம் இங்கனே வைத்துவிட்டு மறந்துவந்ததால் அது கியாபகத்திற்குவருக சுகநித்திரைதன்னிலிருக்கும் உமக்கு வீண்கஷ்டம் கொடுக்கலாகாதென்று இங்குவந்து அந்தப்பாத்திரமெடுத்துக் கொண்டு பூஜை பூர்த்திசெய்யலாமென்று பாதக்கொரடு தைரியத்தால்



இங்கு வந்தேன். அதனால் இன்று சாயந்திரம் வரலாமென்று எண்ணமிட்டிருந்தேன் இதற்குள் தாங்களே வந்துவிட்டீர் அதிக சந்தோஷமடைந்தேன் என்றுச்சொல்லி நாகவர்மனை ஆலிங்கனஞ் செய்துக் கொண்டு முத்தமிட்டு அவர் தொடைமீதமர்ந்து காமவிகாரசேஷ்டைகள் செய்து நாயகா! தாமெப்படி வந்தீரோ! அது ஆச்சரியமாயிருக்கிறது பாதக்கொரடு இல்லாமல் வந்தீரே அதைக் கேட்கவேண்டுமென ஆவலாய் இருக்கிறேன். என்மீது கருணைக்கூர்ந்து தாங்கள் வந்த சவிஸ்தாரத்தை அறிக்கை செய்யவேண்டுமென நாகவர்மன்புத்தியை நிலைநிறுத்திக்கொண்டு இவளுக்கு நிஜத்தைச் சொல்லலாகாதென்று மனமிட்டு வஞ்சன மொழியாகச் சொல்லத்தொடர்ந்தான்.

ஓ எனது பிராணவல்லபீ! நான் நித்திரையை விட்டெழுந்து கண்விழித்துப் பார்க்குஞ்சமயத்தில் நீயும் பாதக்கொரடும் இல்லாமற்போச்சுது, இதையறிந்து அங்கிருந்த கிணற்றில் விழுந்து பிராணத்தியாகம் செய்துக்கொள்ளலாமென்று குதிப்பதற்கு யோசித்து நாலுதிசைகளும் பார்த்துக்கொண்டிருக்கும் சமயத்தில் எனக்கு சமீபத்திலிருந்த ஒரு பர்னசாலையில் தபசிகாமணியாயிருந்த ரிஷியருகில் சென்று வந்தனம் செய்ய இதையறிந்த ரிஷியானவர் ஞானதிருஷ்டியால் தெரிந்து கண்விழித்து என்னைப்பார்த்து உன் அபிப்பிராயத்தை சொல்லென்றுக் கேட்டார். யான் சரணமடைந்து சுவாமீ! புண்ணியவான்களுடைய சேவையால் தன்யனானேன் எனக்கு ஏதாகிலும் ஒரு ரகஸ்யமுபதேசித்து அனுப்பவேண்டுமென்றுபிரார்த்திக்க அந்தமகானுபாவன் கருணித்து இந்த சொரக்காய் முன்னில் மந்திரஜலத்தையும் மற்றமூன்றில் கொய்யாப்பழங்களும் நிரப்பி சிஷியரால் காவடிக் கட்டி என்கையில் கொடுத்து கண்ணை மூடும்படிச் சொன்னார். அது போல் யான்செய்ய அதிக அபாரமாகிய சமுத்திரம் ஒரு க்ஷணத்தில் தாண்டிவந்தேன் உன் வீட்டையும் கண்டேனென்றுச்சொல்ல இதைக் கேட்ட அம்மாது சுவாமி! தங்கள்ஊழியக்காரியாகியஎன்மீது கிருபைக்கூர்ந்து மந்திர ஜலத்தாலும் இந்தப்பழத்தாலும் ஏதேது சூக்ஷமங்களிருக்கிறதோ அதைச் சொல்ல வேண்டுமென்று கேட்க இதைக் கேட்ட நாகவர்மன் இந்த மோசக்காரிதனை நம்பி நாம் நிக்ஷயத்தைச் சொன்னால் மறுவிசை நமக்குக்கஷ்டம் லபிக்குமென்று மனமிட்டு இவளை மோசஞ்செய்ய வேண்டுமென்று பெரும்மனமிட்டு சொல்லத் தொடர்ந்தான்.

பிராணநாயகி! இந்தக் காயிதன்னிலிருக்கும் பழத்தைத் தின்று
இந்தக்காயிலிருக்கும் நீரைக்குடித்தால்கிழவர் எவ்வர்னபால்யராவார்.
எவ்வர்ன மாதர் புஷ்பவதியான பால்யருக்கு சமமான காலமடைவா
ரென்று மர்மமாகச் சொல்ல அந்த தாசிமாது மோசமென்று அறியா
மல் முந்திப்போல் நிஜமென்று நிக்ஷயமாய் நம்பி சுவாமீ! எனது
தாயாரனவள் கிழவியாயிருக்கிறாள் எனக்கும் திரேகம் தளர்ச்சியாய்
வருகின்றது ஆகையால் எங்களிருவருக்கும் எவ்வர்ன பக்குவமடையு
ம்படி மனமிட வேண்டுமென்று சொல்ல நாகவர்மன் அவருக்கு தைரி
யமொழிகூறி குளத்திற்குசென்று ஸ்தானஞ்செய்து வரும்படிசொல்லி
முந்தி அவள் தாயையனுப்ப அக்கிழவி ஸ்தானஞ்செய்து வந்தவுட
னே மகளை ஸ்தானத்திற்கு யனுப்பினாள் அந்தக் கிழவிக்கு (தெ) என்
கிற எழுத்து எழுதியிருக்கும் காயிலிராநின்ற பழத்தை தின்னச்செ
ய்து அதே விலாசத்திலிருக்கும் ஜலத்தைக் கொடுக்க உடனே அக்கி
ழவி ஒரு குரங்காகிவிட்டாள். அதைப் பிடித்து ஓர் விடத்தில் கட்டி
விட்டான். அம்மாது ஸ்தானம் தீர்த்துக்கொண்டு வந்தவுடனே (மே)
என்று எழுதிய காயிலிருக்கும் பழம் தின்னச்செய்து அதேக்குறி
யிட்ட நீரைக்குடிக்கச் செய்தான் உடனே கிளிரூபமெடுத்துவிட்டாள்
அதன்பிறகு நாலுநிமிஷம் பொருத்து ஊழியமாதர்கள் வந்து வீட்
டையெல்லாம் தேடிப்பார்த்தும் எஜமானியாயிருக்கும் செந்திரரே
கைதனைக் காணாதப்படியால் கிலேசமடைந்து நாகவர்மனை கேட்க
அவர் தனக்கேதும் தெரியாதென்று சொன்னான்.

இதைக்கேட்ட அந்த ஊழியமாதர்கள் உடனே புறப்பட்டு சுருங்
கரப் புரத்திற்குச்சென்று செந்திரரேகை சகோதரியாகிய சோமசுந்
தரியுடன் அம்மா எவனோ ஒரு மந்திரக்காரன் வந்து உமது தங்கை
தனையும் தாயாரையும் மாயம் செய்திருக்கின்றான் என்றுச் சொல்ல
உடனே அம்மாது வேந்தனுடன் இந்த சங்கதியெல்லாம் சொல்ல
இதைக் கேட்டவேந்தன் அவனைப்பிடித்து வரும்படி திட்டஞ்செய்து
காவலரைய்னுப்ப காவலர் ஓடிவந்து நாகவர்மனை சூழ்ந்துப் பிடிக்க
இதைக்கண்ட நாகவர்வன் பிரம்மன் விதி இப்படியாச்சுதே என துக்
கமடைந்து அந்தக் காவலர் பின்தொடர்ந்து போக ரத்தினவர்மன்
இவனைப்பார்த்து மதாங்காரத்தில் மூழ்கியிருப்பதால் தம்பியென்
றுத் தெரியாமல் அடா தாசிமாதரை ஏதுச்செய்தாயென்றுக் கேட்
டான். இதைக்கேட்ட நாகவர்மன் அவன் தமயனென்று தூக்கோஷ
மடைந்து தைர்யமாக என்சுத்தியார் என்னைக்கெடுக்க மோசமன



மிட்டாள் அதற்கு பதிலாக யான் அவளை மாயஞ்செய்தேன் என்றுச்
சொல்ல அம்மொழிக்கேட்ட இராஜசேகரன் கோபாக்கிராந்தனாய்
இவன் மகாதுஷ்டனாக தோற்றப்படுகிறது இராஜஸ்தானத்தில், பய
மும் மரியாதை யில்லாமல் மொழியாடுகிறான் இப்படிக்கொத்தவனை
பிராணதியாகம் செய்புமென்று உத்திரவு தந்தார். இப்படிச்சொல்லிக்
கொண்டிருக்க சாயங்காலமாகி விட்டது. யோகியும் கதைதன்னை நிறு
த்திவிட்டு சமீபத்திலிருக்கும் கோவர்த்தனைக்கு வேடருடன்சென்று
நேமநிஷ்டிகள்முதலியதும் தீர்த்துக்கொண்டு போஜனமறிந்திருக்கும்
சமயத்தில் யோகியை வேடர்கள்பார்த்து ஐயா! இந்த க்ஷேத்திரமகி
மைதெரிவிக்கவேண்டு மென்று கேட்க பிரம்மானந்தயோகி சொல்லத்
தொடர்ந்தார்.

ஐயா வேடரே! இங்கு ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி கோபிகாஸ்திரீ
களைப்பார்த்து இந்திரனுக்கு வழக்கமாய் பொங்களிடுவது நிறுத்தி
விட்டு கோவர்த்தனகிரிக்கு பொங்களிடுவீரென்றுச் சொல்ல அது
போல் கோபிகாஸ்திரீகள் யாதவர் செய்யும் சமயத்தில் இதையறிந்த
இந்திரன் சப்தமேகங்களை அனுப்பி இடியும் மின்னலுமாய் வர்ஷிக்
கும்படி உத்திரவு செய்தனுப்பினான் அதுபோலவே மேகங்கள் வர்
ஷிக்க கோபிகர்களும் கோவுகளும் அம்மழைக்கு சகிக்காமல் தத்த
ளித்துக் கொண்டிருக்க ஸ்ரீகிருஷ்ண மூர்த்தி பார்த்து கோவர்தனை
என்னும் மலைதனை தன்னுடைய சுண்டுவிரலில் எடுத்து கொடையாய்
பிடிக்க அதின் கீழ் யாதவரும் கோவுகளை தங்கச்செய்து இந்திரனு
டைய கர்வபங்கத்தைப்படுத்தி விட்டார். இப்படிக்கொத்த புண்ணிய
பர்வதமருகில் ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி கோவுகளை மேய்த்துக்கொண்டு
வாசம் செய்ததுமன்றி சந்தன சக்கிரவர்த்தி புத்திரகாமியாக இங்கு
தவம் செய்யும் சமயத்தில் கங்காதேவி அவரை இச்சித்து பீஷ்மாச்
சாரியை பெற்றாள். ஆகையால் இங்கிருக்கப்பட்ட சந்தனகுண்டத்தில்
புத்திர அபேக்ஷை யுடையவர் ஞாயிற்றுக்கிழமை தினம் பக்தியுடன்
ஸ்தானஞ்செய்து அவரவர் கோரிக்கைப்பிரகாரம் சங்கல்பம்செய்துக்
கொண்டு சுவாமியை தியானிக்கப் பட்டவர்களுக்கு தப்பாமல் புத்திர
பாக்கியம்லபிக்கும் இதுவுமன்றி ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி கங்கைதனைமன
தில் எண்ணமாத்திரத்தில் கங்கா இங்கு பிரத்தியக்ஷமாகி விட்டாள்.
அப்படிக்கொத்த கோவர்த்தனகிரிக்கு சமீபத்திலிருக்கும் மானசசங்
கந்தன்னில் ஸ்தானம்செய்பவர்கட்கு கங்காபலிதத்துக்காகிலும் அதி
கப் பலிதங் கிடைக்கும் இன்னும் ருணவிமோசனம் ரோகவிமோசனம்
பாபவிமோசனம் என்னும் இப்படிக்கொற்ற குண்டங்களிருக்கிறது.

இங்கு பிரகாசிக்கப்பட்ட ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி வாசஞ்செய்த நந்தக மனமென்னும் ஸ்தலத்தை சேவித்தவர்களுக்கு தாரித்திரம் துலேயும் இந்த ஸ்தலத்திற்கு சமீபத்தில் ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி பாரியாளான இராதாதேவி ஜன்மித்த "பிரசன்ன" என்னும் புண்ணியக்ஷேத்திர முண்டு அங்கு ஸ்ரீராதாதேவி சன்னதியும் இராதாதேவி தோழராகிய லலிதா, விசேஷா, சம்பகலதா, ரங்கதேவி, சித்திரரேகா, சுதேவி, சந்திராவளி, முதலானவர் சன்னதிகள் இருக்கிறது இந்த தேவர்களை சேவை யடைந்தவர்களுக்கு சகல போகபாக்கியம் கைக்கூடும். அன்றியும் நந்தகமனமருகில் கிருஷ்ணமூர்த்தி கோவுகளுக்கு நீர் காட்டிய ஆறுமிருக்கிறது இந்த னந்தகமனத்தில் இராதாதேவியுடன் கூடி ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி வாசஞ்செய்த அநேக திவ்ய ஸ்தலங்களிருக்கிறது இதுகளை சேவை யடைந்தவற்கும் கேட்டவற்கும் சகல பாபம் தீர்ந்து விடுமென்று பிரம்மானந்தயோகி சொல்லவே வேடர்கள் சந்தோஷமடைந்து மறுநாட் காலையிலெழுந்து யோகியுடன் ஸ்தானாதி கருமங்களை தீர்த்துக்கொண்டு சுவாமி சேவையடைந்து அங்கிருந்து புறப்பட்டுப்போகும் சமயத்தில் வேடர்கள் யோகியைப் பார்த்து சுவாமி! தாங்கள் நேற்றியதினம் சொன்ன கதைக்கேட்டு அதிகதுய்ரமாயிருக்கிறது ஏனென்றால், ரத்தினவர்மன் தன் தம்பியான நாகவர்மனை சிரச்சேதம் செய்ய உத்திரவு தந்து அனுப்பிவிட்டான் தன்தேவியான மாலினி சிலையாகிவிட்டாள் ஒன்றுப்ச்சேர்ந்த அண்ணன் தம்பி இருவரும் மறுபடியும் பிரிந்துவிட்டாறே இராஜ்யத்தை விட்டு விப்பிர வேஷந்தரித்து புத்திராலே போஷித்துக்கொண்டிருந்ததம்பதிகளை புத்திரசோக அனுபவித்தாரே தனக்கிருந்த ஒருப்புதல்வி சிலையாகிவிட்டாலென சுருங்காரப்புரத்தின் வேந்தனை இந்திரகுப்தன் தேவி விசனமடைந்தாள். ஆகையால் அவர்களுடைய சவிஸ்தாரத்தை தெரியச் சொல்லுமென்றுக் கேட்க பிரம்மானந்த யோகி சந்தோஷமடைந்து சொல்லத் தொடர்ந்தார்.



# பதிமூன்றும் மஜிலிக்கதை.

## இராஜ்யமதாந்த கெர்வம்.

ஓ! வேடரே கேட்பீர்! எப்படியென்றால் நாகவர்மன் தமயனால் விதிக்கப்பட்ட தண்டனைக்கு உள்பட்டு தமயனைப்பார்த்துச் சொல்லத் தொடர்ந்தான். அண்ணா! ரத்தினபக்ஷியுடைய மாமிசத்தை பக்குவஞ்செய்து உனக்கு இராஜ்யப்பிராப்தமாகுமென்று திண்ணச்செய்தேனே உன்னுடன் பிறந்ததற்கு என்னைமறந்து வெட்டும்படி உத்திரவு தந்திரல்லவா பெரிதல்ல எனது கர்ம்மவசமிப்படி யிருந்தால் நானேதுச் செய்யக்கூடும் இனியாகிலும் புத்தியுடன் சுகமாய் பிழைப்பீர் இதோ யான்போய்வருகிறேனென்று அண்ணனுக்குவந்தனஞ்செய்து காவலர் பின்தொடர்ந்துப் போகுஞ்சமயத்தில் நாகவர்மனைப் பார்த்தவுடனே ரத்தினவர்மன் தன்னுடைய பூர்வநிலைமைகளை மனதில் நினைந்து உடனே எழுந்து ஓடிவந்து தம்பியை அழைத்துக்கொண்டுவந்து தன்னுடைய சிம்மாசனத்தில் அமரும்படி செய்து தம்பி! இராஜ்ய மதாந்தத்தாலும் ஸ்ரீ லோலனாய் இருப்பதாலும் உன்னை மறந்தேன் கோபிக்க வேண்டாம் பூர்வஜன்ம பிராப்தியினால் நாமிருவரும் முகதரிசனமானோம் நீ இதுவரைக்கும் எந்தவிதமாக காலத்தை கழித்துக்கொண்டு இருந்தாயோ அதை சவிஸ்தாரமாக எனக்குச் சொல்லுமப்பா வென்றுக்கேட்க இதைக்கேட்ட நாகவர்மன் கானகத்தில் விருக்ஷத்தின்கீழ் சயனித்து இருந்ததுமுதல் இது வரைக்கும் நடந்தசங்கதிகளை விபரமாகச்சொல்ல ரத்தினவர்மன்கேட்டாச்சரியமடைந்து தம்பி முன்னிருந்த தாசிவீட்டில் வைத்துவந்த வஸ்துக்களை யாவற்றும்வரவழைத்துக்கொடுத்து அவளைசந்தோஷமாயுபசரித்து வருக தமயனைப்பார்த்து அண்ணா நமது தாய்தந்தையர்களைப்பார்க்க மனதிச்சையடைந்தேன் நாமிருவரும் போகவேண்டுமென்றுச்சொல்ல இதைக்கேட்ட தமயன் தம்பியைப்பார்த்து அப்பா! போகவேண்டியது உண்மைதான் ஆனல் எனது துன்பங்களையெல்லாங்கேளும் எப்படியென்றால் வர்த்தக விஷயமாய் உன்னைவிட்டு வந்தநாளில் ஒரு மொழியைக்கேட்டு இங்கு வந்தேன் எனக்கு இராஜ்யபாரம் தந்து வேந்தன் புதல்வியை விவாகஞ்செய்துத்தந்தார் இப்படி சிலதினம் சுகமாயிருந்தேன் இப்போது நிர்நிமித்தியமாய் உனது அண்ணி சிலரூபமாகிவிட்டாள் இதையறிந்த எனது மாமியார் நித்திரை ஆகாரம் விட்டு துக்கமடைந்

திருக்கின்ருர் இப்படியிருக்க நானெப்படிவருவேனென்று பெருமூச்சி
விட்டுச்சொல்ல இதைக்கேட்ட நாகவர்மன் தமயனைப்பார்த்து அண்
ணுநான் சென்று பெரியோரை சேவித்து ஏதாகிலுமிதற்கு அனுகூல
வஸ்துவுக்களைக் கொண்டு வருகிறேனென்றுச்சொல்லி நமஸ்காரஞ்செ
ய்துபாதக்கொரடை யணிந்து முந்தி தான்போயிருந்த ரிஷியாஸ்ரமம்
விட்டு சப்த சமுத்திரத்தையுந்தாண்டி நால்புரமும் பார்க்க. பிழைப்
பிப்பதற்கு யாதொன்றுங் கிடையாமல் போனதால் ஓர்நாழிகையோசி
த்து "பரந்தாமா" நான்வந்தக் காரியத்தைப்பூர்த்தி செய்யவேணுமெ
ன்றுமனதில் தியானிக்க உடனேஹிமவத்பர்வதமூலையில் தபசுசெய்து
க்கொண்டிருக்கும் சாந்தானந்த ரிஷியருகில் நாகவர்மனைக்கொண்டு
போயிவிடவே அன்னுகவர்மன் பக்திவிசுவாசத்துடன் நமஸ்கரித்து
எதிர் நிற்க அந்தத் தபயோகியானவர் ஞானதிருஷ்டியால் இவன்
வந்த மனேயபிப்பிராயத்தை தெறிந்து மொழியாடினுல் தபோ
பங்கமாகுமென்று மனதில் நினைந்துக்கொண்டு சமீபத்திலிருக்கப்
பட்ட ஒரு மூலிகையெடுத்து இவன் கையில் கொடுத்து போகும்படி
சைகை செய்யவே இதைப்பெற்றுக்கொண்டு நாகவர்மன் ஆகாசமார்
க்கமாய் வரும் சமயத்தில் அந்த மூலிகை கைசோர்ந்து சௌராஷ்ட
தேசத்தை பரிபாலிக்கும் புருஷோத்தமகாராஜன் புதல்வியான காந்தி
மதி இராஜமந்திரமேடைமீது குளிர்ந்த காற்றுக்காக நின்றுக்கொண்
டிருக்க அம்மாது புஜத்தின்மீது விழவே அம்மாது இது
யென்ன, ஆச்சரியமென்று முகமெடுத்துப் பார்க்க ஆகாசமார்க்கமாய்
போகப்பட்ட நாகவர்மனைப் பார்த்து பிரமித்து தான்செய்த நோம்பு
பல்ன் தெய்வ கடாக்ஷத்தால் இன்றைபதினம் பூர்த்தியாச்சுதென்று
சந்தோஷிக்குஞ் சமயத்தில் நாகவர்மன் தான் அதிக பிரயாசைப்பட்டு
சம்பாதித்த மூலிகை கைசோர்ந்து விட்டதே! என்று வியாக்கூலத்து
டனே பூமியிலிறங்கி வந்து இராஜபுதல்வியைப் பார்த்து அம்மூலிகா
ரத்தினத்தை கொடுக்கும்படி கேட்க அம்மாது அவரைப் பார்த்து
ஓ ராஜகுமாரகா! நான் எந்நேத்திரத்திற்கு ரூபமுள்ளபுருடன் அகப்
படுகிறவரைக்கும் விவாகஞ் செய்யேனென்று நிச்சயித்து அநேக வேந்
தர் புதல்வரை வெருத்தேன்,

பிறகு நானிருக்கும் பதினென்கு மேடைமீது எவர் வருவாரோ
அவரை விவாகமாட வேண்டுமென்று நோம்பு அனுசரித்தேன் இன்று
ஆறுவருடகாலமாக பார்த்துக்கொண்டிருக்கிறேன், அநேகதேசத்து
வேந்தப் புதல்வர் எனக்காக பிரயத்தினமடைந்தும் வீண்பல்னடைந்



தார்சிலர் பயித்தியம்பிடித்துபோய்விட்டார் அதில் நீர் ஒருவர் தான்
பதினென்கு மேடையும் மீறிவந்தவர் நீரென்னைக் கைப்பிடித்து உம்மு
டனே அழைத்துப் போகவேண்டுமென்று பிரார்த்தித்து காமா
ந்தகாரத்தில்மூழ்கினவளாய் அவரை ஆலிங்கனஞ்செய்து சரசவிநோத
மன்மத சேஷ்டைசெய்து மன்மத விகாரத்தை தீர்த்துக்கொண்டு உட
னே தன் கண்ணுக்குத் தோன்றியபுருடன் ஆகாயமார்க்கத்தில்போக
ப்பட்ட இராஜகுமாரனை இத்தினத்தில் காந்தர்வ விவாகமானேனெ
ன்று தாதிகளால் தாய் தக்தைகளுக்கு சொல்லியனுப்ப அவரிதைக்
கேட்டு சந்தோஷமடைந்து புதல்வியிருக்கும் அந்தப்புரத்திற்கு வந்து
நாகவர்மனைப் பார்த்து ஆச்சர்யமடைந்து அவரை அநேக விதமாக
உபசரித்து மறுநாள் அவரிருவருக்கும் அப்யங்க மங்கள ஸ்தானங்
கள் செய்யவைத்து திவ்யமான சுபதினத்தில் அக்கினி சாக்ஷியாய்
விவாகஞ் செய்துக்கொடுத்து பிறகுநாகவர்மன் பதினைந்துதினம் அந்
நாட்டிலிருந்து காந்திமதியை அழைத்துக்கொண்டு தமயனை
ரத்தினவர்மனிருக்கும் நாட்டிற்குவந்து அண்ணனைக்கண்டு வந்தனஞ்
செய்ய ரத்தினவர்மன் இவனைக்கண்டு சந்தோஷமடைந்து தம்பியை
ஆலிங்கனம் செய்துக்கொண்டு ஆனந்தமடைந்தான்.

அச்சமயத்தில் நாகவர்மன் தான் கொண்டுவந்த மூலிகைதனை
சந்தனமாயிழைத்து ஜலத்தில் கலக்கி சிலைரூபமாயிருக்கும் அண்ணி
க்கு ஸ்நானம் செய்விக்கும்படிச் சொல்ல அதுபோல் தாதிகள்செய்ய
முந்திக்காகிலும் அதிமேன்மை ரூபமடைந்து பதியருகில்வந்து சாஷ்
டாங்க வந்தனஞ்செய்து நின்ருள். ரத்தினவர்மன் இம்மாதைக்கண்டு
அதிக சந்தோஷமடைந்து இருக்கைகளால் சேர்த்து அணைந்து தன்
தொடைமீது உட்கார வைத்துக்கொண்டு உனக்கு அந்த தினத்தில்
ஜலம் கொட்டுவதற்கு வந்த தாதியெவளென்று விசாரித்துத் தெரிந்
துக்கொண்டு அப்போதே அத்தோழியைக் கொண்டுவந்து சபையில்
நிறுத்தி நீ நிஜத்தை சொன்னுலொழிய உன் ஆவிதிற்கும் இல்லாவிட்
டால்எமன்பதவி சேருவாயென்றுசொல்ல இதைக்கேட்ட அத்தோழி
சுவாமி! நானேதென்றுச்சொல்லுவேன் எப்படியென்ருல் சோமசுந்தரி
ஏதோ ஜலங்கொண்டுவந்து தெளித்தாள். உடனே பட்டத்துதேவி
சிலைரூபமானுள். இந்த சங்கதிகளை தங்களுக்கு இதுவரையிலும்
சொல்லாமல் இருப்பதால் யான் பாபியாகும் இதை க்ஷமித்து ஆட்
கொள்ள வேண்டுமென்று சாஷ்டாங்க நமஸ்காரஞ்செய்து நிற்க வேந்
தனுக்கு கோபமுண்டாகி குலத்துரோகியாகிய இந்தத் தோழியைப்

பிடித்து நாலுவீதிகள் சுற்றிவந்து ஆனைக்காலில் மெறிக்கும்படி
உத்திரவுசெய்ய காவலர் அதுபோல் அந்தத் தோழியை அழைத்துக்
கொண்டுப் போகுஞ் சமயத்தில் அருகிலிருந்த பட்டபுதேவிக்கும்,
காந்திமதிக்கும், இளமனதுண்டாகி வேந்தனைப்பார்த்துநாயகா! இவள்
செய்தகுற்றத்தை பொருத்தாட்கொள்ளவேண்டுமென்று ப்ரார்த்திக்க
இம்மொழிக்கேட்டவேந்தன் சந்தோஷமடைந்து மனம்பூரித்து அது
போலாகவே ரத்தினவர்மன் அம்மாதை மன்னித்து சோமசுந்தரியெ
ன்னும் தாசியை வரவழைத்து கம்பத்தில்கட்டி அடிக்கவே அத்தாசி
நிக்ஷயத்தைச் சொல்லிவிட தோழிக்குத்தந்த ஆக்கினை இவளுக்குநிய
மிக்க அதுபோல் காவலர் ஆனைக்காலில் இவளைக்கட்டி நாலுவீதியும்
சுற்றிவந்தபிறகு ஆனைக்காலில் மெதித்து விட்டார்.

இப்படி அண்ணன்தம்பி இருவரும் கூடி சுகமாய் சுருங்காரபுரத்
தில் சிலநாளிருந்து பிறகு தாய்தந்தைகளைப் பார்க்கவேண்டி புரப்ப,
ட்டு அவரிருப்பிடமடைந்து அவர்களுக்கு வந்தனம்செய்து இவர்கள்
சவிஸ்தாரத்தைச் சொல்ல அவர்கள் மக்களையும் மறுமக்கள் மாரைப்
பார்த்து சந்தோஷ மடைந்திருந்தார். இப்படிருக்க தந்தை அனுமதி
பெற்று முந்தியாண்டுக் கொண்டிருந்த சோதிப்புரத்தை கெலித்து தந்
தைக்கு மகுடஞ்சூட்டி மனோரஞ்சனி புரத்தையும் சுருங்காரப்புரத்தை
யும் ஜோதிப்புரத்துடன் சேர்த்து அவரிருவரும் இளையவேந்தனுப்
அப்பட்டணம் ஆண்டுக்கொண்டு சந்தோஷமாயிருக்க ஓரகத்திமாறி
ருவரும் ஒருமித்து பரஸ்பர விஸ்வாசத்துடன் அவரவர் நாயகருக்கு
சந்தோஷமாய் நடந்துக்கொண்டு அவருக்கு நற்குணமான உபதேசம்
செய்துக்கொண்டு மாமன் மாமிக்கு சேவை செய்துக்கொண்டு புத்
திரமித்திர பாந்தவருடன் அதிக சந்தோஷமடைந்திருந்தார்.

இப்படிசொல்லும் சமயத்தில் சூரிய பகவான் தன்னுடைய நாய
கியைப் பார்க்க மனமிட்டு அதிக வேகமாய் போகுஞ்சமயத்தில் அஸ்
தமயமாச்சுது; இதையறிந்து பிரம்மானந்த யோகியும் வேடரும் சீக்
கிரமாய் சென்று எவ்விடத்திலாவது வசிக்கவேண்டுமென்று பெரும்
மனமிட்டு போகையில் சமீபத்தில் அஸ்தினுபுரி தோன்றியது அப்
போது பிரம்மானந்த யோகியும் வேடரும் மகத்தான சந்தோஷமடை
ந்து அங்குசென்று ஸ்நானம்செய்து தர்மசாலையில் பூஜித்து சயனிக்
கும் சமயத்தில் வேடர்கள் யோகியைப்பார்த்து சுவாமி! இந்த ஸ்தல
விசேஷத்தை சொல்லுமென்று கேட்க யோகியவருடன் அப்பா! இந்த
ஸ்தலபெருமைதனை சொல்ல அதிகப் பொழுதாகும் இப்போது நாம்



ஆயாச மடைந்திருக்கிறோம் ஆகையால்நாளையதினம் சொல்லுகிறேன்
என்றுச்சொல்ல அதுப்போல் எல்லோரும் நித்திரை செய்தார் மறு
நாள் உதயத்திற்கு காலக்கடனை தீர்த்துக்கொண்டு பிரம்மானந்த
யோகி வேடருக்கு அஸ்தினுபுரி பெருமைதனை சொல்லத் தொடர்
ந்தார்.

இந்த அஸ்தினுபுரம் பரதகண்டத்தில் மிகுந்த பிரசித்தியடைந்
தது இதில் சென்திரகுலத்தானாகிய "அஸ்தி" என்னும் வேந்தன்
இராஜ்ய பரிபாலனம் செய்தப்படியால் இதற்கு அஸ்தினுவதியென்
றும் அஸ்தினுபுரமென்றும் பெயருண்டாச்சுது. பிறகு இந்திர
பிரஸ்தபுரமென்றும் பெபருண்டு இதற்கு ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி விஸ்
வகர்மனால் இந்திரபுரத்தை மேன்மையா நிர்மித்து பாண்டவர்க்கு
கொடுத்தார்.

இந்தப்புரியை பாண்டவர் பரிபாலிக்குங் காலத்தில் அப்பாண்ட
வர்க்கு தாயாதிகளாகிய கௌரவர் பாண்டவரை துரத்திவிட்டு இரா
ஜ்யபரிபாலனஞ் செய்துகொண்டிருந்தான், அந்தசமயத்தில் ஸ்ரீகிருஷ்
ணமூர்த்தி பாண்டவர் சகாயமாய் கௌரவரென்னும் துர்யோதனாதி
களை பாண்டவர் கையால் மாளச்செய்யும் உபாயத்தை போதித்து
துர்யோதனாதிகளை எமலோகத்திற்கு அனுப்பினார். இந்த பாண்டவ
ருடைய கௌரவருடைய சரித்திரமெல்லாம் உங்களுக்குச் சொல்ல
பத்து வருஷமானாலும் போதாது அந்தக் கதைதன்னை வியாசமுனீந்
திரன் பதினெட்டு பர்வமாக பாரதம் மகா ரகஸ்யமாகச் சொன்னார்.
மறுப்படியும் கிருஷ்ணமூர்த்தியும் அம்பா இந்திராஸ்வினி தேவாக்
குலத்தரான தர்ம பீமா அர்ஜுனா நகுல சகாதேவரும் சத்தியரூப
மான துரோபதியும் இங்கு வாசஞ்செய்த காரணத்தால் இது பவித்
திரமான ஸ்தலமாச்சுது இன்றைக்கும் இந்த ஸ்தலத்தில் எங்கு பார்
த்தாலும் பாரத பாகவத் காலக்ஷேபங்கள் நடக்கிறது இதற்கு சமீப
த்திலிருக்கும் மாயாத்வாரம், கங்காத்வாரம், ஹ்ருஷிகேசம், பதரி
காஸ்ரமம், முதலான திவ்ய ஸ்தலத்தை சேவை யடைந்தவர்களுக்கு
கொடிய பாவங்கள் தீருமாம் இதுவுமன்றி சுகப்பிரம்மரிஷி வாசம்
செய்தயிடம் பரிக்ஷின்ன மகாவேந்தன் தவம்செய்த இடமாக்கும்
தக்ஷபிரஜாபதி யாகஞ்செய்த ஓமகுண்டலமாம்மகாவிஷ்ணு சயனித்த
இடமும் பிரகாசிக்கின்றது என்றுச்சொல்லவே வேடர் சந்தோஷம
டைந்து அந்த ஸ்தலத்தை சேவையடைந்து அங்கிருந்துப் புறப்பட்

டுப் போகுஞ்சமயத்தில் பிரம்மானந்த யோகியைப் பார்த்து சுவாமீ!
தாங்கள் சொன்ன நாகவர்மன் கதைக்கேட்டு சந்தோஷமடைந்தோம்
எங்களுக்கு நடை சாயும்படிக்கும் கால்கள் நோய் தெரியாதப்படிக்
கும்இன்னமொரு கதைச்சொல்லுமையா என்றுக்கேட்க பிரம்மான
ந்தயோகி சந்தோஷமடைந்துச் சொல்லத்தொடர்ந்தார்.

---

# பதிநான்காம் மஜிலிக்கதை.

## சகவாசகுணம்.

ஓ வேடரே! கேட்பீர் அநேக பாக்கியத்தில் மேன்மை பொருந்
தியும் சகல பட்டணத்திற்காகிலும் தங்கமயமா யிருக்கப்பட்ட காஞ்
சிபுரத்தில் வீரவிக்கிரமென்னும் வேந்தன் இராஜ்யமாண்டுக் கொண்
டிருந்தான். அந்த வேந்தனுக்கு தீர்க்க தர்சனமென்றொரு மந்திரி
யிருந்தான். வேந்தனும் மந்திரியும் அதிக அன்யோன்யமாய் சினே
கித்துக்கொண்டு அந்த தேசத்தில் மிகுதியான சம்பதை வகித்தார்.
குடிகளெல்லாம் சதாக்காலம் இவ்வேந்தனும் மந்திரியும் வரதராஜ
சுவாமியுடைய கிருபாகடாக்ஷத்தால் இராஜ்யபரிபாலனம் செய்துக்
கொண்டிருக்க வேண்டுமென்று பிரார்த்தித்துக் கொண்டிருந்தார் இப்
படிருக்க வெகுகாலமாக வேந்தனுக்கும் மந்திரிக்கும் புத்திரபாக்
கியமில்லாமல் போனதால் அவரிருவரும் சோகமடைந்து வரதராஜ
பெருமாளை நோக்கி தியானித்துக் கொண்டிருந்தார். இப்படி சில
தினத்திற்குப் பிறகு வேந்தனுக்கு ஒரு ஆண்குழந்தையும் மந்திரிக்
கொரு பெண் குழந்தையும் பிறந்தது இதைக்கண்டு வேந்தனும் மந்தி
ரியும் மகா சந்தோஷமடைந்து அநேக தேவாலயங்களுக்கு மஹோற்
சவங்கள் செய்ய வைத்து சோடஷதானங்கள் செய்து வேந்தன் புத
ல்வனுக்கு பிரதாப செந்திரனென்றும் மந்திரி புதல்விக்கு இந்துவதன
யென்று பெயரிட்டார். இப்படி கோரதபத்தால் பிறந்த இராஜகுமார
னும் மந்திரி குமாரத்தியும் தினமொருமேனி பொழுதொரு வண்ண
மாய் வளர்ந்து சுக்கிலபக்ஷ சந்திரனைப்போல் பிரகாசித்துக் கொண்
டிருந்தார். இவர்களுக்கு ஐந்து வயதானவுடனே வித்யாப்யாசம்
செய்தார். இராஜபுதல்வனாகிய பிரதாப சந்திரனும் மந்திரி புதல்வி
யாகிய இந்துவதனையும் ஓரே பாட்சாலையில் ஓரே யிடத்திலே குந்தி
படித்துக் கொண்டிருந்தார்.



வேந்தப்புதல்வனும் மந்திரிப்புதல்வியும் ஓர் ஆசனத்திலமர்ந்து
ஒருவர்மீது வொருவர். கைப்போட்டுக்கொண்டு படிக்கிறதும் வொரு
வர்தின்னும் பண்டத்தை வாயிலிருந்தெடுத்து வொருவருக் கொருவர்
கொடுப்பதுமாயிருந்தார். இப்படியாக விஸ்வாசத்துடன் படித்துக்
கொண்டிருக்கஇந்த இந்துவதன்மாதுக்கு வயது பத்தானபடியால் மந்
திரி இதை தெரிந்துக்கொண்டு இனி நமது புதல்வி புருஷரோடு சேர்
ந்து படிக்கிறது நீதியல்லவென்று தன்மனதில் எண்ணமிட்டு புதல்
வியை தன் வீட்டில் படிக்கும்படி திட்டஞ்செய்து அந்தப்புரத்தில்
நிறுத்திவிட்டான்.

இப்படியிருக்க இந்தயிருவர் பிறிந்தநாள் முதற்கொண்டு இந்து
வதனமாதும் பிறதாபசந்திரனும் மனோவேதையடைந்து அன்ன
பனதிகளைவிட்டு பயித்தியம் பிடித்தவர்போலிருந்தார்கள். எத்தனை
பேர் தேருதலைசெய்தும் காரியமில்லை. இந்துவதனமாதுக்கு பிசாசு
பிடித்ததோ என்னமோவென்று மந்திரக்காரரை யழைத்து மந்திரித்
துப்பார்த்தார்கள். அனேகமான வைத்தியர்வந்து மிதமில்லாத மருந்
துகளை கொடுத்தார்கள். இப்படியாக அனேகமான மந்திரதந்திரஞ்
செய்தும் நிஷ்பிரயோஜன மாகிவிட்டது. நிஜமானவியாதி தெரியாமற்
போனபடியால் மந்திரிக்கு அதிக விசனமுண்டாச்சுது. இது இப்படி
யிருக்க இங்கு வேந்தன் தன் புதல்வனுக்குண்டான வியாதியை யறிவ
தற்கு மணிமந்திர ஔஷதம் கொடுத்துப்பார்த்தும் சாத்தியபடவில்லை
அதன்பிறகு இராஜபுதல்வன் சினேகிதர் இவன் மனோவியாதியை
தெரிந்துக்கொண்டு வேந்தனிடம் தெரியச்சொன்னார்.

அப்போது வேந்தனுக்கு மகாகோபம்பிறந்து என்னைப்போ
லொத்தவரிடத்தில் சம்பந்தஞ்செய்யாமல் அல்பமான மந்திரியாயிருப்
பவனுடைய புதல்வியைக் கோருவது நமது குலத்திற்கு ஈனமல்லவா
யென்றும் இந்துவதனயாதை கலியாணஞ் செய்வதற்கு எனக்கு
சம்மதமில்லையென்றும் சொல்லியனுப்பினார். இந்த சங்கதிகளைக்கேட்
டதுமுதல் பிரதாப சந்திரனுக்கு மனோவியாகூலம் அதிகரித்துக்
கொண்டிருந்தது. இந்துவதனமாதுக்கும் பிரதாபசந்திரனை பார்க்
காதபடியால் மனமானது தத்தளித்துக்கொண்டிருந்தது.

இப்படிருக்க பிரதாபசந்திரன் தனக்கு தன்தந்தை அம்மாதை
விவாகஞ்செய்து கொடுக்க மாட்டானென்று தெரிந்துக்கொண்டு தன்
மன ஆவலை இந்துவதன மாதுக்கு அறிக்கை செய்தான். இதைக்க
ண்ட இந்துவதன் "தேடப்போன தெய்வம் எதிரில் அகப்பட்ட",

தென்ற மொழிபோல் சந்தோஷமடைந்து நாயகா எனக்கு உன் மீது அதிக மோகப்பிரயைக் கொண்டிருக்கிறேன் நமக்கு தெய்வம் இப்படி முகதர்ச்சன மில்லாமல் செய்தது ஆனாலும் பெரிதல்ல நீர் யென்னை வேண்டுமென்றுமனமிட்டவர் நிஷயமானால் இந்த இராத்திரி பனிரெண்டு மணிக்கு தாங்கள் திவ்ய ஆபரணாகிதராய் வேகமாய் நடக்கப்பட்ட குதிரையொன்றை தயார் சய்துக்கொண்டு நமது பூஞ்சோலையில் வந்திருந்தால் யான் வருகிறேன் என்று கடிதமெழுதி அனுப்ப இதைக்கண்ட பிரதாபச் சந்திரன் மனம் பூரித்து அதே இராத்திரி பனிரெண்டு மணி நேரத்திற்கு வேண்டிய திரவியமெடுத்துக்கொண்டு ஆபரண அலங்கிரதஞ்செய்து திவ்ய புரவியேறி நந்தவனமடைந்திருக்க அம்மாது அதுபோலாகவே அலங்கிருதம் செய்துக்கொண்டு பிரதாப சந்திரன் இருக்கும் சோலைக்கு வந்து இருவரும் அப்புரவியேறி தைர்யத்துடன் காட்டுமார்க்கம் புரப்பட்டுப்போக சூரியன் உதயமாகி விட்டான், அச்சமயத்தில் இறங்கி ஓர் செடியில் குதிரைதனைக் கட்டிவிட்டுஆயாசந்தீர்த்துக்கொள்ள இருவரும் சயனித்தார்கள். அச்சமயத்தில் மந்திரிப் புதல்வியாகிய இந்துவதன மெய்மறந்து நித்திரை செய்துவிட்டாள். பிரதாப சந்திரன் மாத்திரம் நித்திரைபோகாமல் விழித்துக்கொண்டிருந்தான். இப்படிருக்க அந்தக் கானகத்திலிருந்து ஒரு பெரியவேங்கை இவன் சமீபமாய்வருக இதைப்பார்த்த பிரதாப சந்திரன் தன்பாணத்தாலடிக்க பிரயத்தினப்பட்டான். இதைக்கண்ட அந்தவேங்கை ஓர்புதரில் போய் வொளிந்தது அங்கு போகவே அது மற்றொரு இடத்தில்போய் ஒளிந்தது இப்படிபுலிபோன இடமெல்லாம் துரத்திக்கொண்டுபோய் ஓரிடத்திலந்தப்புலியைகொன்றுவிட்டு திரும்பிவருஞ்சமயத்தில் வழித்தெரியாமல் அன்றுசாயந்திரம் வரைக்கும் தேடித்தேடி ஆயாசமடைந்து இந்துவதன இருக்குமிடம் தெரியாமல் சோகமடைந்து கண்ணீர்விட்டுக்கொண்டு ஓ. இந்துவதனா! இந்துவதனா! என்று பெயரிட்டு அழைத்தும் குறலோசைக் காணாதப்படியால் மகாகஷ்டமடைந்து மூர்ச்சையாக பூமியில் படுத்தான்

இங்கு இந்துவதன நித்திரை யெழுந்து பார்க்க தன் பிராண நாயகன் காணாதப்படியால் தாமரை சந்திரனை பார்ப்பது போல் அதிக நேரமாக நாலுதிசைகளும் பார்த்து கண்கள் பூர்த்து பசியால் பீடித்து கோவென்றழுது அதுபிறகு எதுந்தோன்றாமல் மெய்மறந்து பூமிமீது சாந்து கொஞ்சநேரம் தன் மனதை தைரியப்படுத்தி இனி அஸ்தமான சமயம் சமீபித்தது நாம் எது செய்யலாமென்று புத்தி



தோன்றாமல் தைர்யத்துடன் அக்கானகம் தாண்டி சமீபத்திலிருக்கும் கிராமத்திற்குச் சென்று இராப்பொழுதுகடந்து மறுதினத்தில் பிரதாபசந்திரன் போனசங்கதி தெரிந்துக்கொள்ளலாமென்று புரவியேரி நடக்க அம்மார்க்கத்தில் தனிக்குதிரை மீது ஓர் மனிதன் போகக் கண்டு அப்போது கொஞ்சம் தைர்யமிட்டு பகவானை நினைந்து அந்தக் குதிரை சமீபமாய் வருக அவனைபெரியவனுமல்ல கிழவனுமல்ல எவ்வர்ணமுடைய புருடனாயிருக்க மனதில் சந்தேகமடைந்து இனியெப்படி தப்பித்துக்கொல்வது என ஆலோசிக்கும் சமயத்தில் குதிரை மீதிருந்தவன் இம்மாதைப்பார்த்து ஆ ஆ இதோ வரப்பட்டமாது இந்திராணியோ, லட்சுமிதேவியோ, அந்த மங்கைபார்வதியோ, மன்னவற் கரசியோ, இவ்வனதேவதையோ, ஏதும்தெரியவில்லையே இம்மாதின் முகத்தைக்கண்டால் பூர்ணசந்திரனைப்போல் பிரகாசிக்கிறது இவள் நெற்றியிலிருக்கும் புருவமோ மாரன்கைவில்லோ மலர்ந்த மூன்றாம் பிறையோ ஏதும் தோற்றவில்லையே இரண்டு நேத்திரத்தைப் பார்க்க சேல்கண்டயோ வேலோ தாமரை இதழோ ஏதும் தோன்றவில்லை இருத்தாடைகளைப் பார்த்தால் நிலைக்கண்ணாடிக்கு சமமாயிருக்கிறது நாசியோ கமுகுமலர் போலிருக்கிறது உதடோ கோவைக் கனிக்கு நிகராகுமா ஆகாது அந்த உதட்டின் உட்புரத்தில் அமைந்திருக்கும் பர்க்களைப்பார்த்தால் முத்துச்சரம்போல்கோர்த்திருக்கிறது இவள் மோக்கட்டையோ ஆலப்பழம்போல்தோற்றுகிறது கண்டமோ கதலிமரம்போலிருக்கிறது இறுக்கைகளோ கோதண்டத்திற்குசமமென்றுச்சொல்லலாகும் ஆ ஆ இம்மாதின் கும்பஸ்தனங்களைநாமெப்படி வர்ணிக்கலாகும் அது ஆனைமத்தகமோ, தாளமோ, தங்கக்குடமோ, பூக்குடமோ, செண்டோ, சேர்ந்தமலையோ இது நிமிர்ந்து குவிந்து மலர்ந்து பூரித்து வட்டமிட்டசட்டத்தை கெட்டிமுத்து ரவிக்கையால் நெட்டி பிகியகட்டிய இம்மார்பை பார்த்து மனம் தளருதே மையல்மீறுதே மறுவகோருதே ஆ ஆ இவள் இடையோ சிங்கத்திடையோ, சிற்றுடுக்கையோ, கைப்பிடியோ, இவ்விடைக்கு தகுந்த இரண்டு துடைகளைப் பார்க்க வாழத்தண்டோ வஜ்ஜிரநூலோ ஏதும் தோற்றவில்லை முழங்காலைப் பார்த்தால் நண்டுக்கு சமமாயிருக்கிறது இதுவுமன்றி சிரசில் இருக்கப்பட்ட ரோமத்நாரனைப் பார்த்தால் கருங்கடலோ, பாச்சிக்கொடியோ, இருண்டபானமோ, அந்த அழகுடைய கூந்தலை சம்பங்கி எண்ணெயால்வாரி ஜடைப்பின்னலிட்டு நாகம் போல் சுற்றி அதில் மல்லிகை முல்லை மருவு செண்பகம் இருவாட்சி ரோஜா மனோரஞ்சிதம் சேர்த்து மந்நியில் கோர்த்து இருக்கும் உன்

னதமே உன்னதம் இவள் திரேகமுழுதும் ரோமரேகையைப் பார்க்கிற சங்கிலிக்கு சமமாயிருக்கிறது இவள் ரூபத்தை பார்த்தால் தங்கஸ்வரூபமா யிருக்கிறது. இம்மாதை இவ்வளவு அழகுடன் அமைத்த அந்த பிரம்மதேவனுக்கு கோடி வந்தனம் செய்கிறேன். இம்மாதை சோரதச்சடலம் ஓர்சடலமா நாம் எப்படியாகிலும் இவளை வசப்படுத்தி மயங்கும்படி மனம் பூட்டவேண்டும் இவளை நாம் எப்படி அழைப்பது இம்மாதுப் பெயரேதோ நாம் ஏதென்றழைப்பது ஆனபோதிலும் சந்திரனை போன்றமுகம் படைத்தமா தாகையால் இப்பெயரிட்டழைப்போமென ஓ இந்துவதனா! நீ இப்படி தனியாய்போகக்காரணமேதென்றுகேட்க அம்மாது அவன் கபடத்தைத் தெரிந்துக்கொண்டு இரேங்கிதபாகமாய் இவனைக்கொல்லவேண்டுமென்று நினைத்துஅவனைப் பார்த்துச் சொல்லத்தொடர்ந்தாள்.

ஓ மகாராஜா! எனது பாக்கியவசத்தாலல்லவா இந்த கானகத்தில் காணலானேன். இன்றைய தினமல்லவா எனது நோன்பின் பலன் பூர்த்தியாச்சுது ஆ ஆ நான் இத்தனை காலமாய் இந்தக்கானகத்தில் திரிந்தும் உன்னைப்போலொத்த ரூபலாவண்யனை தேடியும் கிட்டவில்லை என் நேத்திரத்திற்கு எந்தப்புருடன் லபிப்பானே என்று பெரும்மனமிட்டு இக்கானகத்தில் தவஞ்செய்துக் கொண்டிருக்கிறேன். எனக்கு வரம் தந்ததேவி சொன்னதுப்போல் உன்னைக்கூடுவதற்கு மனம்பதருகின்றது ஆகையால் தேவி பூஜைசெய்து என்னைச் சேருவாயென்றுச் சொன்னவுடன் சேனைத்தலைவன் சந்தோஷமடைந்து மாதே அந்த தேவி பூஜைசெய்யும் விதாயத்தை தெரியச்சொன்னால் அதுபோல் செய்ய ஏதும் தடையில்லை என்றுச்சொல்ல இதைக்கேட்ட இந்துவதன யோசித்து இவனை கபடமாக கொல்லவேண்டுமென்று மனமிட்டு நிற்க இது என்னவிபரீதம் வீணுயொரு புருடனைக்கொல்லக்காரணமேது சரி இவனைக்கொல்லாமல் போனால் நமது பதிவிருதாதர்மத்திற்கு பங்கமாகிறது இது என் மனதிச்சையாக செய்த காரியம் தவிர வேறொன்றுமல்ல எப்படியென்றால் நமது மனதிற்கு நாமே விசாரணை செய்துக்கொள்ளலாம் இந்தலோகத்தில் மாதரால் புருடருக்கு துற்புத்தியுண்டாகிறதா அல்லது புருடரால் மாதருக்கு துற்புத்தியுண்டாகிறதா இதை யோசிக்குமிடத்தில் புருடரே காரணமாகயிருப்பதாக பெரியோர்கள் சொல்லி இருக்கின்றார்கள்.



(சுலோகம்)

ந்சதே நாபிவர்ஷாணு முபைதிமத நாசய.
தத்ராசக்த்யா நிவர்தந்தே நராஜைர்யேண போஷிதா:

என்னும் மொழிப்போல் நூறுவருடமானாலும் காமம் விடாது ஆனால் புருஷர் அசக்தியால் வெருப்பார் மாதர்கள் நிக்ரஹசக்தியால் வெருப்பார் புருஷருடைய அபேக்ஷை அதிகமாயிருப்பதால் மாதர்கள் கெட்டவராகிறார்கள் புருஷர் பலத்காரமாய் அபேக்ஷை படுவதால் பிறகு மாதர்கள் கெட்டநடைக்கு உட்பிரவேசிக்கிறார் ஆகையால் புருஷரால் தோஷமேலிட்டிருப்பதன்றி மாதர்கள் அல்லவென்று யோசித்து தன்னுடைய அபிப்பிராயத்தை வெளியில் காட்டாமல் தான் அவன்மீது மிகுந்த மோகமடைந்தவள்போல் நடித்து தேவி பூஜை செய்யும் நிலைமைதனைச் சொல்த்தொடர்ந்தாள்.

ஓ மகாராஜனே! தேவி பூஜையென்பது அதிக கஷ்டமென்று நினைக்கவேண்டாம் அது நிமிஷப்பொழுதில் முடியும் அதன் பிறகு நமதிஷ்டம்போல் இருக்கலாம் என்றுச் சொன்னவுடனே அந்தசேனைத்தலைவன் சந்தோஷசமுத்திரத்தில்மூழ்கி அடிபிராணவல்லபி சீக்கிரம் சொல்லும் அதுபோல் செய்கிறேனென்றுக் கேட்க இம்மொழிக் கேட்டு இந்துவதன அவனைப் பார்த்து ஐயா! நீர் அணிந்திருக்கும் ஆடைகளும் செந்திராயுதத்தையும் இங்கு வைத்து விட்டு இந்தக்குதிரையை ஓர் விடத்தில் கட்டி விட்டு இந்த ஆற்றில் ஸ்தானஞ்செய்து இந்த வில்வசெடியின் கீழமர்ந்து தேவிமந்திரமான ஸ்ரீம் க்லீம் ஹ்ரீம் என்கிற மந்திரத்தை கண்களை மூடிக்கொண்டு நூற்றெட்டு விசை ஜபித்து வரும்படி உத்திரவு செய்ய அதுபோல் அவன் ஸ்தானஞ்செய்து கண்களை மூடிக்கொண்டு ஜபிக்கும் சமயத்தில் இந்துவதனா அவன் பட்டாகத்தியை யெடுத்து அவன் சிரத்தைக் கண்டித்து குதிரைதனை வெட்டிவிட்டு அவனுடைய ஆடைகளை தான் தரித்துக்கொண்டு பட்டாகத்தியை இடுப்புதனில் தரித்துக்கொண்டு குதிரையுடைய இடது செவியை அறுத்துக்கொண்டு இராஜகுமார வேஷம்பூண்டு இந்துசேகரனென்கிற பெயரும் தரித்துக்கொண்டு அங்கிருந்து புரப்பட்டு வருஞ்சமயத்தில் தெய்வ கடாக்ஷத்தால் கௌதமநகரம் அகப்படவே அந்நாடு வந்து சேர்ந்தாள்.

இப்படிருக்க கானகத்தில் புலியைத் துரத்திக்கொண்டுப்போன பிரதாபசெந்தீரன் வழித்தெரியாமல் துக்கமடைந்து துஷ்ட ஜந்துகளுக்கு பயமடைந்து அந்த இராத்திரியெல்லாம் நித்திரை பங்கமடை

ந்து ஓர் செடியின்மேல் ஒளித்திருந்து மறுநாட் சூரியன் உதயமான உடனே செடியை விட்டிறங்கி நாற்புறமும் தேடிப்பார்க்க எங்கும் தனது நாயகியுடைய முகாரவிந்தத்தையும் கண்டத்வனியும் கேளாதபடியால் இந்துவதனாவென்று பெயரிட்டு அழைத்து நாற்புறமும் தேட அகப்படாமையால் மெய்மறந்து இந்துவதனா தன் கண்ணில் அகப்பட்டதுபோல் பிரமித்து ஓ இந்துவதனா! ஏன் பேசாமலிருக்கிறாய் என்மீது கோபமாகுமா? என இப்படியெல்லாம் சொல்லிக்கொண்டு வருஞ்சமயத்தில் தெய்வ கடாக்ஷத்தால் அங்கொரிடத்தில் தபசிரோமணி ஒருத்தர் இருக்கக்கண்டு அவரருகில் சென்று வந்தனம்புரிந்து கண்ணீர் தாரதாரையாய்விட்டு அழுகவே இதைக்கண்டத் தபசிரோமணிகருணைக்கூர்ந்து அவனைதன் அஸ்தத்தாலெடுத்துஉட்காரவைத்து கண்களை துடைத்து தைரியமொழிகளைச் சொல்லி தன்னிடத்திலிருந்த அன்னமிட்டு புசிக்க செய்யவைத்து அவர் கமண்டலத்திலிருந்த நீரைப்பானம்செய்ய சொல்ல அதுப்போல் அவன் குடித்து அந்தக் கமண்டலத்தை பூமியில்வைக்க அந்தக் கமண்டலத்திலிருந்து துளிஜலம் அங்கு பிராணமற்று விழுந்துக்கடந்த புழுவின்மீது விழவே உடனே பிழைத்துவிட்டது இதைக்கண்ட பிரதாப சந்திரன் ஆச்சரியமடைந்து அந்த தபசியுடன் தனது வரலாற்றையெல்லாம் சொல்லிவிட்டு சுவாமீ! இப்போது தாங்கள்தந்த அன்னத்தை அமுர்தம்போல் நான் புசித்தேன் இதுவுமன்றி கமண்டல ஜலத்தையும் பானஞ்செய்து அதிக சந்தோஷமடைந்தேன். இப்போது இங்கு மரணமடைந்திருந்த புழுவானது கமண்டல ஜலம் பட்டமாத்திரத்தில் பிராணம் வந்தது. ஆகையால் தாங்கள் இந்த பேதைமீது கருணை கடாக்ஷம் வைத்து இந்த பிரபாவத்தை நான் அறியும்படி சொன்னாலும் சரி இல்லாமல் இந்தக்கமண்டலத்தை தந்தாலும் சரி அப்படிக் கொடுக்க சம்மதமில்லாவிட்டால் என் ஆசைநாயகி சிக்குகிற வரைக்கும் என்னுடன் கூட இருக்கவேண்டுமென்று கேட்க இதைக் கேட்ட தபசியாகி பிரதாபசெந்திரன் துக்கசாகரத்தை சகிக்காமல் ஓ இராஜகுமாரா! நான் இந்தக்கமண்டல ஜலத்தையும் இதின் பிரபாவத்தையும் சொல்வதற்கு நயமாகாது எனக்கு குருநாதர் அருள் செய்து தந்தார் இதிலிருக்கும் ஜலத்தை மரணமடைந்த எதின்மீது தெளித்தால் உடனே சஞ்சீவியாகிவிடும் ஆனாலும் என் கண்ணெதிரிலகப்பட்ட ஜீவராசிகள்மீது தெளிக்கவேண்டும் தவிர தோற்றுகப் பொருள் கிட்டாது இப்போது உனது துக்கத்தைப் பார்த்து சகிக்க முடியவில்லை ஆகையால் உனது நாயகி அகப்படும் வரைக்கும் உன்னு



டன் வருகின்றேன் புறப்படுமென்றுச் சொல்லி பிரதாபசெந்திரனுடன் கூடப்போய்க்கொண்டிருக்க அம்மார்க்கத்தில்குதிரை இருதுண்டமாக கிடைக்கக்கண்டான் இதைப்பார்த்து பிரதாபசெந்திரன் திகிலடைந்து ஐயோ! எனது குதிரையும் என் நாயகியும் மடிந்து விட்டாளேன்று விசனமடைந்து இந்துவதனா! இந்துவதனா! இந்தப் பாதகனுடன் வந்து இப்படி மடியலாமா நான் என்னகுற்றம் செய்தேனோ என் புத்திக் கெட்டவில்லையே என பெருமூச்சுவிட்டு பூமியில்விழுந்து மூர்ச்சையடைந்து சிலநேரத்திற்கெல்லாம் மூர்ச்சைத் தெளிந்து எழுந்தவுடனே தபோதனன் இவனைப்பார்த்து ஓ இராஜகுமாரா! ஏன் இப்படி துயரமடைகிறாய் என்னிடத்திலிருக்கும் கமண்டல ஜலத்தைத் தெளித்து எழுப்பி தருகிறேனென்றுச் சொல்லி அந்தஜலத்தை தெளித்தார். உடனே குதிரையும் ஓர் சேனாநாயகனும் சஜீவியாய் யெழுந்தார்கள். பிரதாபசந்திரன் இவனைப்பார்த்து ஐயோ! நான் மெய்மறந்தேன், இதுவென் குதிரையல்ல இவன் எனக்கு தெரிந்த மனிதனல்ல ஆனால் இந்த இரண்டு ஜீவன்களும் என்னால் பிழைத்ததே புண்ணியமாகும் இந்த புண்ணியமெனக்கே உண்டாச்சுது என மனதில் எண்ணாமிட்டு அந்த சேனாநாயகனைப் பார்த்து ஓ வீரா! நீயார் உனது விஸ்தாரத்தை தெரிவிப்பாயென்று கேட்ட மாத்திரத்தில் அவன் இராஜகுமாரனைபார்த்து சுவாமி! நான் அந்தப்புரத்தின் சேனாநாயகன் யான் வேட்டையாட இம்மார்க்கமாய் போய்க்கொண்டிருக்க ஆரோ ஓர் மாது சந்திரமுகியென்பவள் என் பின்பற்றி குதிரையேறி வந்தாள். நான் அவளைக்கண்டு மோகமாக அவள் என்னை தேடி ஜபம் தபம் செய்துவரும்படி எனக்குமந்திரோபதேசந்தருக யான்தவஞ்செய்யும் சமயத்தில் என்னை ஆரோ கொன்றுவிட்டார். அதன்பிறகு எனக்கேதும் தெரியாது ஆனால் அந்த சந்திராங்கி கொன்றிருக்கமாட்டாளென்று நினைக்கிறேன் அவளைக்கோரி யெவரோ இப்படி செய்திருக்கலாமென்று என்மனம் எண்ணுகையா லென்றுச்சொல்ல பிரதாபசெந்திரனுக்கு சந்தேகமுண்டாகி தன்னுடைய நாயகியாகவே இருக்கவேண்டுமென்று எண்ணமிட்டு மனவியாகூலமடைந்து மறுபடியும் மனதை தைரியம் செய்துக்கொண்டு தபசியை கண் சைகைசெய்து ஒன்றுமறியாதவன்போல் அவ்விடம் விட்டு போகத்துணிந்தார். அந்த சமயத்தில் சேனாநாயகன் தனது உடுப்பாவிகளும் செந்திராயுதமும் இல்லாமல் போனதைப்பற்றி துயரமடைந்து இதுவுமன்றி குதிரையின் இடது செவி அறுப்பட்டதைப் பார்த்து வெட்கமடைந்து நின்றான். இதைக்கண்டப் பிரதாபசெந்திரன் அவனுக்கு தேறுதலைச்

சோளவி நாடு சேர்ந்தபிறகு யோசித்துக் கொள்ளலாமென்று அவனை அழைத்துக்கொண்டு அந்தபுரத்திற்கு போய்ச்சேர்ந்தார்.

இப்படியிருக்க இவரிருவரும் குருசீடர்போல் இருந்து அந்நாட்டில் தர்மசத்திரத்திற்புசித்து சயனித்தார்கள். பிரதாபசெந்திரன் மாத்திரம் இந்துவதன முகதரிசனமில்லாமல் பரிதவித்துக்கொண்டிருந்தார். சேனாநாயகன் தன்னுடைய நாடடைந்தது முதற்கொண்டு காட்டில் கண்ட மாதுமோகத்தால் தன்னுடைய உத்யோக காரியத்தை மறந்து இந்துவதனியை தேடுவதற்கு கொஞ்சம் தனமெடுத்துக்கொண்டு தேசதேசமாய் தேடபுறப்பட்டு போய்விட்டான். இப்படியிருக்க மறுநாள் உதயத்திலெழுந்து தபசியும் பிரதாபசெந்திரனும் இந்துவதனவை தேடுவதற்காய் அன்றெங்கும் திரிந்து ஏது சமாச்சாரம் தெரியாதபடியால் அங்கிருந்துப் புரப்பட்டு போகத்துணிந்தார்கள், இப்படி அனேகமான காடு மலை வனம் வனாந்திரந்தாண்டி ஓர் இருள் சூழ்ந்த கானகத்தில் புகுந்துப்போகுஞ் சமயத்தில் வழிதெரியாமலலைந்து கந்தமூல பலங்களை புசித்துக்கொண்டு கண்ணுக்குத் தோற்றப்பட்ட கிராமங்களிலும் பட்டணங்களுக்குஞ் சென்று அங்காங்கு தர்மசத்திரத்தில் புசித்துக்கொண்டு இப்படி ஏழெட்டுமாதமாய் இந்துவதனவை தேடிக்கொண்டிருந்தார்கள்.

இப்படிருக்க காஞ்சிபுரநகரத்தில் வீரவிக்கிரமனும் தீர்க்கதரிசனென்னும் மந்திரியும் மனவியாகூலமடைந்து இவரை தேடுவதற்கு கோடான கோடி சேனைகளையனுப்பி தேடி அழைத்து வரும்படி திட்டஞ்செய்ய இதுபோல் சேனைகள்சென்று அனேக தேசங்கள்தோறும் திரிந்தும் எங்கும் அகப்படாமையால் வேந்தனிடம் சொல்ல இம்மொழிக்கேட்ட வேந்தனும் மந்திரியும் பந்துஜனங்களும் சோகாக்ராந்தமடைந்து வேந்தன் மனதை தைரியப்படுத்திக்கொண்டு தன்னுடைய திரவியமெல்லாம் வியோகப்படுத்திவிட்டு அனேக தேசங்களின் பிரதாப செந்திரன் பெயரிட்டு தர்மசத்திரங்களும் கோவில்களும் கட்டிவைத்துவிட்டு இருந்தான் இதுபோலாகவே மந்திரியும் தன்னுடைய புதல்வி பெயரிட்டு சத்திரங்கள் கட்டிவைத்து விட்டான். இப்படிக் கட்டிமுடிந்த சத்திரத்தில் வேந்தன் புதல்வன் பெயரை ஓர்பலகையில் எழுதி பிரதாபசந்திரன் தர்மம் ஓர் சத்திரத்தில் இந்துவதனு தர்மம் என்றெழுதி அதின்கீழாக,



(சுலோகம்.)

வஸ்திரதானபலம் ராஜ்யம்
பாதுகாப்யாம் சவாஹனம்
தாம்பூலம் போதமாப்னோதி
அன்னதான பலத்ரயம்:

இப்படியாக சுலோகம் எழுதி அந்தசத்திர வெளியில் கட்டித்தின் வைத்தார் இதுபோல் தர்மம்நடத்திக்கொண்டு வருஞ்சமயத்தில் இந்துவதன புருஷரூபம் தரித்துக்கொண்டு இந்துசேகரனென்கிற பெயரிட்டுக்கொண்டு தான் போகப்பட்ட பட்டணங்கள் தோறும் கேட்பவற்கெல்லாம் தான் ஒரு வர்த்தகனென்று சொல்லிக்கொண்டுபோனாள். இப்படி அனேகவிடம் தேடியும் வேந்தன் அகப்படாமையால் அதிக துக்கமடைந்து மகாபலேச்வரபுரமென்கிற பட்டணம் சென்று அங்கிருப்பவரைக் கண்டு ஐயா! இங்கு ஏதாகிலும் சாதம் போடப்பட்டவர் வீடு அகப்படுமா என்றுக்கேட்ட அந்நாட்டிலுள்ளவர் இவளைப்பார்த்து ஓ வர்த்தகனே! உனக்கு அன்னத்திற்கு குறைவேதுண்டு எந்நாடுப்போன போதிலும் காஞ்சிபுரம் இந்துவதனயுடைய சத்திரமும் பிரதாபசந்திரனுடைய சத்திரமும் கட்டியிருக்கின்றார்கள் என்றுச்சொன்னவுடனே இம்மாது ஆச்சரியமடைந்து தனக்குள் ஆஹா! இதுயென்ன விந்தையாயிருக்கிறது! என் பேராலும் என்பிரிய நாயகன் பேராலும் தர்மசத்திரம் கட்டினவர் என் தந்தையும் என் பிராணவல்லபர் தந்தையாயிருக்கவேண்டுமென நிச்சயித்து அந்த அன்னசாலைக்குச் சென்று புசித்துவிட்டு திண்ணைமீது அமர்ந்து அங்கிருப்பவரைப் பார்த்து ஐயா! இந்த நகரத்தில் ஏதாகிலும் விசேஷமுண்டா என்றுக்கேட்க இதைக்கேட்ட அந்த சத்திரத்திலிருந்தவர் சொல்லந்தொடர்ந்தார்.

ஐயா தனவந்தனே! இப்பட்டணம் பரிபாலிக்கும் மகாபலனுக்கு பகவான் கடாக்ஷத்தால் ஒரு புதல்வியுண்டாச்சுது. அந்தப்புத்திரிக்கு வேந்தன் சகலவித்தைகளைக் கற்பித்து சகல ஆபரணம்பூட்டி சந்தோஷமாய் அந்தப்புரத்தில் இருந்தாள். இப்படிருக்க சில நாளுக்கு பிறகு விவாகம் செய்வதற்கு லக்கினம் நிச்சயித்து தேசதேசாதி வேந்தருக்கு கடிதம் அனுப்பி நகரத்தை அலங்கரித்து விட்டார். இந்த ஸ்வயம்வரத்திற்கு இராஜாதி ராஜர்கள் ரதகஜதுரகபதாதிகளுடன் வருக இவர்களுக்கு தகுந்த விடுதிகள் தந்து அமரும்படி செய்தார். இப்படியிருக்க மறுநாட் சுபதினத்தில் அம்மாதை அலங்காரம் செய்துக்கொண்டு வருக தோழிகளுடன்சென்று அந்தப்புரத்

தில் போய்பார்க்க அங்கு அம்மாது இல்லாமல் போய் விட்டாள். அச்சமயத்தில் மகா பலவேந்தனும் அவன் தேவியும் முதலானவர்களும் துக்கமடைந்ததை சொல்லத்தரமாகாது பிறகு வந்தவேந்தரில் சிலதுபேர் அவமானம் செய்தாரென்று கோபித்துக் கொண்டுப்போய் விட்டார் சிலதுபேர் மகாபலன் தப்பிதமல்லவென்று சொல்லிப்போய் விட்டார்கள். துரோணபுரிவேந்தன் மாத்திரம் இந்த இராஜ்யத்தைப் பிடித்துக்கொண்டு மகாபலனை செரசாலைதன்னில் இருக்கச்செய்தான். ஆகையால் இந்த நகரத்திலிருக்கும் குடிஜனங்கள் சந்தோஷமில்லாமல் துக்கமடைந்திருக்கிறார்கள் என்றுச்சொல்ல இம்மொழிக்கேட்டு வர்த்தக வேஷத்துடனிருக்கப்பட்ட இந்துவதனை தான் சின்னவயதில் அப்யசித்த கத்திசாதனையும் குதிரை சவாரியும். இவற்றில் ஜெயமடையலாம் துரோணபுர வேந்தனை கண்டிக்கலாம் என்று அந்தினம் சாயங்காலம் ரணக்களத்திற்குச் சென்று அங்குபமர்ந்து அந்நாட்டு ஜனங்களை அழைத்து தனக்கு சகாயமாய் சிலதுபேர் வந்தால் அவ்வேந்தனை துரத்துவேனென்றுச் சொல்ல அதற்கு அந்நாட்டு ஜனங்கள் சம்மதமடைந்தார்கள்.

இப்படி யுத்தத்திற்கு வந்தசேதியை துரோணபுரவேந்தன் தெரிந்து யுத்தசன்னத்தனாய் எதிரில் வந்து நின்றான். இவனைப் பார்த்து இந்து சேகரனென்கிறமாது அடாவேந்தனே இந்த இராஜ்யத்தை விட்டுப் போகிறாயோ இல்லாமல் என் பாதத்தில் சரணாகதமடைகிறாயோ என்றுச்சொல்ல அவ்வேந்தன். பயமடைந்து சொல்லாமல் ஓடிப்போய் விட்டான் இதை தெரிந்த இந்து சேகரன் அந்நாட்டை மகாபலனுக்கு ஒப்பிக்கவே அச்சமயத்தில் மகாபலவேந்தன் தன்னுடைய புதல்வி அகப்படாமல்போன துக்கத்தாலும் தான் செரச்சாலையிலிருந்தவனை மீட்டியதற்கும் சந்தோஷமடைந்து இவனுக்கே இந்நாட்டை மகுடஞ்சூட்டினால் தர்மமென்று எண்ணி இந்துசேகரனை இராஜ்யமாளும்படிச் சொல்ல இதைக்கேட்ட அம்மாது இதுவும் ஒரு காரியத்திற்கு நலமாகுமென்று சம்மதமடைந்து மகாபலேஸ்வரத்திற்கு வேந்தனானாள். இப்படிச்சொல்லும் சமயத்தில் சூரியன் கிழக்கு திசைதன்னில் மறைந்தார் பிரம்மானந்தயோகி கதைநிறுத்தி சமீபத்திலிருக்கப்பட்ட பாண்டுரங்க க்ஷேத்திரமென்னும் பாண்டரீபுரத்திற்கு சென்று நித்தியகிருத்யங்களை தீர்த்துக்கொண்டு போஜனமறிந்து சயனிக்கும் சமயத்தில் வேடர்கள் யோகியைப் பார்த்து ஐயா இந்த க்ஷேத்திரமகிமை சொல்லுமென்றுக் கேட்க யோகிச் சொல்லத்தொடர்ந்தார்.



அப்பா வேடரே! இந்ததிவ்யஸ்தலத்தில் வசிக்கும் ஸ்ரீகிருஷ்ணமூர்த்திக்கு பாண்டுரங்க சுவாமியென்று பெயராகும் லோகத்திலிருக்கப்பட்ட கிருஷ்ணவிக்கிரகமெல்லாம் கருநிரமாகயிருக்கும் இங்கிருக்கும்விக்கிரகமாத்திரம் வெண்மையாகயிருப்பதால் பாண்டுரங்க சுவாமியென்று பெயருண்டாச்சுது. இதற்குரகஸ்யார்த்தம் உண்டென்றுபெரிபோர் சொல்லுகிறார்கள், புவியிலிருக்கப்பட்ட மனிதருடைய அஞ்ஞானம் போவதற்கு தான் மாயமென்னும் நீலவர்ணத்தை விட்டு வெண்மை வர்ணத்தைத் தரித்து சுத்த ஸ்வாதியான சுபாவத்தை எல்லோருக்கும் காண்பிப்பதற்காய் இதுபோல் இந்த ஸ்தலத்தில் வாசம் செய்துக்கொண்டிருக்கிறார். இதுவுமன்றி பூர்வகாலத்தில் புண்டரீகனென்னும் பக்தனொருவன் தளர்ந்த வயதுடனிருந்த தன்தாய்தந்தைகளை காவடியில் வைத்து சுமந்துக்கொண்டு மாதா பிதார்சனசெய்துக்கொண்டு இந்த ஸ்தலத்திலிருக்கும் பீமா நதியருகில் தாய்தந்தைகளை அமரச்செய்து சுவாமியை தியானித்துக் கொண்டிருக்க புண்டரீகன் நிஜரூபத்திற்கு சந்தோஷமடைந்து அப்பொழுது ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி நிஜரூபமாய் வருக இதைக்கண்டப் புண்டரீகன் சுவாமிக்கு ஆசனமில்லாமல் நின்றுக் கொண்டிருக்கிறாரென்று மனமிட்டு அங்குக் கிடைந்த செங்கல்லை அவருக்கு ஆசனமாய் தந்தார். அதுமுதற்கொண்டு புண்டரீகபுரமென்று பெயருண்டாச்சுது. இந்த செங்கல்லை மஹாராஷ்ட பாஷைதன்னில் (விட்) என்றுச் சொல்வார்கள் ஆகையால் அந்தநாள் முதற்கொண்டு சுவாமிக்கு விடோபாயென்று பெயருண்டாச்சுது இதுவுமன்றி விடலேசனென்று பகவானுக்கு. பெயருமுண்டு எப்படியென்றால் (வி) என்றால் ஞானம் (ட) இல்லாதவர்க்கு (ல) ஞானம் கொடுக்கப்பட்டவனென்று அர்த்தமாகும் இங்கு நாராயணமூர்த்தி ஆதிகாலத்தில் ஆலயிலயில் பிரந்து தேவரிஷி கெந்தர்வாதிகளுக்கு சேவைதந்தார் இந்த ஸ்தலம் அதிக பவித்திரமானது அந்த ஆலமரம் இந் நாள்வரைக்கும் இருக்கிறது அந்த விருக்ஷத்தை சேவித்தவர்க்கு பாபங்கள் தீருமாம் இங்கிருக்கப்பட்ட நாராயண மூர்த்தியை ருக்குமணி சத்தியபாமை தேவாதிகளை சேவையடைந்தவற்கு சகல இஷ்டார்த்தம் சித்தியடைந்து சுகமடைவார்கள். பீமாநதியென்ற பெயருடைய நதியில் ஸ்தானம்செய்தால் அவருக்குச் சகல வியாதியும் தீரும் என்றுச்சொல்ல சந்தோஷித்து வேடர்கள் பிரம்மானந்த யோகியுடன் சேர்ந்து மறுநாட் பீமாநதிதன்னில் ஸ்தானஞ்செய்து பகவானை சேவையடைந்துபோஜனம் செய்துக்கொண்டு அங்கிருந்துப் புரப்பட்டார்கள்.

# பதினைந்தாம் மஜிலிக்கதை.

## வினைப்பயன்; பலிதம்.

இப்படி பிரயாணமடைந்துப் போகுஞ்சமயத்தில் வேடர்கள் பிரம்மானந்த யோகியைப்பார்த்து சுவாமீ! தாங்கள் நேற்றயதினம் சொன்னகதைதனை கேட்டு என்மனமானது அதிக விசனமுண்டாச்சுது மஹாமதினுடைய கெதியேதாச்சுதோ அதை தெரியச்சொல்லுமென்று கேட்க யோகி இதைக்கேட்டு சந்தோஷமடைந்து சொல்லத்தொடர்ந்தார்.

ஓ வேடரே! நான் சொல்வதைக் கேளீர் இந்துசேகரன் இராஜ்யத்தை தர்மநீதியாய் பரிபாலித்துக்கொண்டு தான் தன் துக்கத்தை நினைந்து காலத்தைக் கழித்துக்கொண்டிருந்தான்.

இவ்விதமாய் சிலநாட் சென்றப்பிரகு அந்த தேசத்திலிருக்கும் செம்படவன் ஒருவன் மஹா பலேஸ்வரத்திலிருக்கும் வர்த்தகரிடத்தில் ஒரு தண்டைக்கொண்டு வந்து விர்பதற்கு வந்தான். இதைப்பார்த்த வர்த்தகர் ஆச்சரியமடைந்து பார்க்க அதின் மீது "மஹாமதி" என்று பெயர் எழுதியிருந்தது அதைப்பார்த்தவுடனே மனம் நடுக்கவிட்டு ஐயோ! மோசம் வந்ததே! எனப்பதரி அடா இதுயேதென்றுக் கேட்க அவன் பயமடைந்து ஐயா சுவாமி! நான் ஏதுமறியமாட்டேன் யான் வலைவீசியெடுக்க, அதில் ஓர்மீன் அகப்பப்பட்டது அந்த மீனின்வயற்றில் இந்த தண்டை இருந்தது இது தவிர எனக்கு ஏதுந்தெரியாது என பெருங்கூச்சலிட்டுச் சொன்னான் உடனே அங்கிருந்த நகர் சேகுவர் ஓடிவந்து அந்த வர்த்தகரையும் செம்படவனையும் பிடித்துக்கொண்டுப்போய் இந்துசேகர வேந்தனெதிரில் நிறுத்தினர். அவ்வேந்தன் இவரைப்பார்த்து நிஜத்தைச் சொல்லுமென்றுச் சொல்ல இதைக்கேட்ட வர்த்தகர். இராஜோத்தமா! நாங்கள் ஏதுமறியமாட்டோம் எங்களிடத்தில் இந்தச் செம்படவன் இந்தத் தண்டையைக் கொண்டுவந்து கொடுத்தான். இவ்வளவு மேன்மையான ஆபரணத்தை நாங்களெல்லோரும் பார்த்துக் கொண்டிருக்க இதின் கீழ்பாகத்தில் "மஹாமதி" என்று இன்னாட்டின்பெரிய வேந்தன் புதல்வி பெயரிருந்தபடியால் உனக்கேதென்று விசாரிக்க அவன் குப்போமுறையோ வென கூச்சலிட இக்கூச்சல் சந்தடிக்கேட்டு காவலர் வந்து எங்களெல்லோரையும் பிடித்துக்கொண்டு வந்து உமதெதிரில் நிறுத்தினர். என்றுச்சொல்ல இதைக்கேட்ட இந்துச்சேகரன் பெரிய வேந்தனை அழைத்து அந்த தண்டையைக் காட்ட அவர் வெட்டித்தள்ளிய மரம்போலாக பூமிமீதுவிழுந்து "மஹாமதி" என பெயரிட்டு அழைத்து மூர்ச்சை யடைந்தார். அங்கிருந்த மந்திரிபிரதானி முதலானவர் சைதோபசாரஞ் செய்து சிலநேரம் பொருத்து மூர்ச்சைத்தெளிந்து எழுந்து நிற்க அச்சமயத்தில், இந்துசேகரன் அவரைப்பார்த்து ஐயா இந்த சங்கதி எந்தனுக்கு விபரமாக தெரியச் சொல்லுமென்று கேட்க இதைக்கேட்ட மஹாபலன் கண்ணீர் தாரை தாரையாய் விட்டு அடா என்புதல்வா! இது என் புதல்வியாகிய மஹாமதி காலிலிருந்தது இதை காலிலிருந்து கழட்டாதபடிக்கு ஒட்டியிருந்தேன். இந்த சூக்ஷமமான வேலை எந்த லோகத்திலும் செய்பவர்க்கிடையாது காலை ஒட்டாமல் இதை கழட்டமுடியாது இப்போது இதைப்பார்க்க இந்த தண்டை வெட்டியெடுத்ததல்ல காலைவெட்டி தான் கழட்டி இருக்கவேண்டுமென்று பெருங்கூச்சலிட்டு அழுதார். இதற்குள் வேந்தன் பத்தினியும் அழுகத்தொடர்ந்தாள். இந்த இந்துசேகரன் பெண் ஜென்மமானப்படியால் சோகமடைந்தாள். இதற்குள் தைர்யம் செய்துக்கொண்டு அவர்களுக்கு தேருதலை சொல்லி வர்த்தகரையும் செம்படவனுடைய முகத்தைப் பார்த்து இவர்களிடம் சூது மார்க்கம் ஏதும் அகப்படாமல் போனாலும் நிஜத்தை தெரிந்துக் கொள்கிற பரியந்திரம் இவர்களை சிறைச்சாலையில் அடையுமென்று காவலர்க்கு திட்டஞ்செய்து அந்த ஆபரணத்தை பத்திரப்படுத்தி விட்டு மஹாமதி எங்கிருக்கின்றளோ தேடிவருப்படி சிலதுகாவலரை தேசங்கள்தோரும் அனுப்பினான்.

இப்படிருக்க அனந்தப்புரத்து சேனாநாயகன் இந்துவதனனென் கிறமாதை தேடிக்கொண்டு தேசாந்திரம் வாசஞ் செய்துக்கொண்டு வருக இருண்டக்கானகத்தில் சில நகைகளும் மாம்சமில்லாமல் எலும்புமாத்திரம் அங்கிருக்கக்கண்டான். அதைப்பார்த்து நான் முந்திப் பார்த்து மோகித்தமாது எலும்பா யிருக்குமேயன்றி வேரல்ல வென அக்கமடைந்து அந்த நகைகளை எடுத்து மூட்டைக் கட்டிக்கொண்டு அவ்விடம்விட்டுப் புரப்பட்டு போகுஞ்சமயத்தில் மஹாபலேச்வரப் பட்டணம் அகபபட்டது அப்பட்டணம் சென்று இந்த நகைகளை விற்கலா மென்று யோசித்து அந்நாட்டின் வர்த்தகரிடத்திற்கு கொண்டுப்போய் காட்ட இதைப்பார்த்த அந்த வர்த்தகர் இந்த பூஷணமெல்லாம் மஹாமதி தேவியுடையது தவிர வேரில்லையென்று நிச்சயித்து

அவர்கள். இந்த சேனுநாயகனைக் கொண்டுபோய் வேந்தன் எதிரில்
நகை முட்டையுடன் ஒப்பவித்தார்கள், இதைக்கண்ட இந்துசேகரன்
நகைகளை அவிழ்த்துப்பார்க்க அதில் மஹாமதியென்கிற பெய்ரெழுதி
யிருந்தது அச்சமயத்தில் சேனுநாயகனைப் பார்த்து இவன் திருடனு
யிருப்பானே! அப்படி திருடியிருந்தால் இதே நாட்டிற்கு விற்பனை
க்கு கொண்டு வருவானு என சந்தேகமிட்டு அவனைப்பார்த்து அடா
உனது சவிஸ்தாரத்தை சொல்லென்றுக் கேட்க அப்போது சோரனு
கிய சேனுநாயகன் வேந்தனைப்பார்த்து ஐயா! நான் கானகத்தில் ஓர்
மாதைக் கண்டேன் அவளால் மரணமடைந்தேன் பிறகு பிழைத்தேன்
அம்மாதைத் தேடிக்கொண்டு வருஞ்சமயத்தில் இந்த நகைகளைக்
கண்டேன் இது தவிர வேரொன்றுமில்லை எனச்சொல்ல இதைக்கே
ட்ட இந்துசேகரன் இவன் நமது கையால் மாண்டவன் இவன் சவிஸ்
தாரத்தைக் கேட்டால் மகா சந்தோஷமா யிருக்கிறது பிறகு யோசிக்
கலாமென்றுச்சொல்லி இவனை சிரையில் அடைக்கும் படிக்குகாவல
ருக்கு திட்டஞ்செய்தார்.

இது இப்படியிருக்க தபசியும் பிரதாபசந்திரனும் தேசங்கள்
தோரும் திரிந்து காடு மலை வனுந்திரங்கடந்து ஓர் இருள் சூழ்ந்த
கானகத்திற்கு வந்து ஸ்தானபான ஜபதபங்களை தீர்த்துக்கொண்டு
கந்தமூலபலாதிகளை புஜித்துவொரு ஆலவிருக்ஷத்தின் கீழ் சயனித்
திருந்தார்கள். இப்படியிருக்க அந்தச் செடிமீது ஆணும் பெண்ணுமா
யிரண்டு அன்னபக்ஷிகள் வந்தமர்ந்து இவர்களைப் பார்த்து ஆண்பக்ஷி
பெண் பக்ஷியுடன் சொல்லத்தொடர்ந்தது.

கேட்டாயோ பெண்ணே! இன்றயதினம் தெய்வசங்கல்பமிருந்
தப்போதிலும் இந்த குருசீடன் பிழைப்பது கஷ்டமாகும் பிரதிகுரு
வாரத்திலும் இங்கிருக்கப்பட்ட வனதேவதை ஒரு மனிதனை தின்கி
றது வழக்கம் அந்தவாரம் இன்றைக்கு வந்தபடியால் எங்காகிலும்
தேடிக்கொண்டு வரும் இந்த தேவதைக்கு தர்மமென்ற மொழிக்
கிடையாது ஆகையாலே தான் ஸ்வயம்வரத்தி நின்றமாதை கொண்டு
வந்து தின்றது. அம்மாது செத்ததுமல்லாமல் அவள் அணிந்திருந்த
பூஷணங்களைப்பற்றி சிலதுப்பேருக்கு ஆபத்தை சம்பவித்தது இதுவு
மன்றி அவளுடைய இடதுக்கால் தண்டதனை கருடப்பக்ஷி எடுத்துக்
கொண்டுபோய் சமுத்திரத்தில் போட அதனை மீன் விழுங்கியது
அந்தமீன் செம்படவன் கையில் அகப்பட அதன் வயிர் கிழித்துப்
பார்க்க தண்டை யகப்பட்டது அதைக்கொண்டுபோய் வர்த்தகரு



க்கு காட்டியவுடன் வர்த்தகரும் செம்படவனும் சிரையிலிருக்ருர்கள்.
இதுவுமன்றி நேற்றையதினம் புதன்கிழமை ஆகையால் தேவதை
இங்கு வரவில்லை இங்கு அம்மாதை புசித்து சின்னபின்னமாய் செய்த
படியால் இவள் அணிந்திருந்த பூஷணமெல்லாம் பூமியில் கிடைந்தி
ருக்க எவனே ஒருவன் வந்துப்பார்த்து கொஞ்சநேரம் தன் மோக
னங்கி செத்தாளோயென மெய்மறைந்து அழுது பிரகு அந்த பூஷண
மெல்லாம் எடுத்துக்கொண்டுப் போனன் அவன்செய்த புண்ணியவச
த்தால் பிராணத்துடனிருந்தும் அவனும் சிரைதன்னிலிருக்கிறன்.

இவர்கள்செய்த பாபத்தால் இன்றையதினம் அந்த வனதேவ
தைக்கு ஆகாரமாகப் போகுராரென்றுச் சொல்லவே அந்தச் செடியின்
கீழ் சயனித்துக்கொண்டிருந்த தபயோகி இதைக்கேட்டு மனகல்மிஷ
மடைந்து பக்ஷி சொன்னதெல்லாம் இராஜ குமாரனுக்குச்சொல்லி
அப்பா! இனி நாம் இங்கிருக்கலாகாது போகலாமென்றுச்சொல்ல!
இம்மொழிக்கேட்ட இராஜப்புதல்வன் தபயோகியைப்பார்த்து சுவாமி.
பக்ஷிசொன்னமாதை பிழைக்கச்செய்தால் புண்ணியமல்லவா நீர் எழு
ப்புமையாவென்று கேட்க அம்மொழிக்கு தபசி சம்மதமடைந்து அம்
மாது எலும்புகளை கும்பலாகச்செய்து அதின்மேல் கமண்டலஜலத்
தை தெளித்தமாத்திரத்தில் அம்மாது நித்திரைவிட் டெழுந்தவள்
போல் எழுந்து அவர்காலில்விழுந்து நமஸ்கரித்து ஓ தீனதயாளா!
நீர் எம்மை பிழைக்கச்செய்தீர் என்னைவொரு இராக்ஷசிகொன்றது.
இப்போது எனக்கு பிராணம் தந்தீர். உங்களிருவரில் என்னை மாலை
தரிக்கப்பட்ட மகானுபாவனிருக்கின்ருன் அவர் உமது சீடரோ! அல்
லது உமது புதல்வரோ அல்லாமல் இனி யாரோதெரியேன் ஆனல்
உம்முடன் இருப்பவற்கே நான் பார்யாளாகுவேன் எனதுதாய்தந்தை
கள் நியமித்த சுபலக்கினம் இப்போதே கூடியதுயென்று என் மன
மென்னுகிறது ஆனல் இதுக்காகிலும் இனி வேருபகாரஞ்செய்ய என்
னல் தாமாகுமா என்றுச்சொல்லி அங்கு புஷ்பித்திருந்த வோர் புஷ்
பக் கொடியைக்கிள்ளி இராஜகுமாரன் கண்டமதில் தரித்தாள். அவ்
வேந்தன் தடுத்துச்சொல்ல சாத்தியப்படவில்லை.. ஆனலும் தன் மன
மானது இந்துவதனமீது இருப்பதைகாட்டினல் இம்மாது மனக்கிலே
சமடைவாலென்று வெருத்துச்சொல்லாமல் அங்கிருந்து புறப்பட்டு
மஹாபலேஸ்வரத்திற்கு வந்து பார்க்குஞ்சமயத்தில் அங்கு சத்திரம்
இந்துவதனபேராலும் பிரதாபசந்திரன் பேராலும் கட்டியிருக்கக்கண்
டு ஆச்சர்யமடைந்து அந்தச் சத்திரத்திலிருப்பவரை விசாரிக்க. அவ

ர்கள் இம்மொழிக்கேட்டு அய்யா! இது காஞ்சிபுரியிலிருக்கும் இரா
ஜனும் மந்திரியும் கட்டினரென்றுச்சொல்ல சந்தோஷமடைந்து அந்
தச்சமயம் அங்குபுசித்தார். அதன்பிறகு மஹாமதி தன் நாயகனைப்பா
ர்த்து சுவாமீ! என்னுடைய ஆபரணமில்லாதபடியால் என்னை ஆர்
பார்த்தபோதிலும் இந்தத் தேசாதிபதி புதல்வியென்று தெரிந்துக்
கொள்ளமாட்டார். ஆகையால், ஆலசியஞ்செய்தால் பலிதமில்லை ஆரு
டனாகிலும் என் தந்தைக்கு நான் பிழைத்து தர்மசத்திரத்தில் வந்திரு
ப்பதாய் சொல்லியனுப்ப வேண்டுமென்று சொல்ல இதைக்கேட்ட
வேந்தன் அப்படியே ஆகட்டுமென்று ஓர்கிழவன் கையில் கடிதமெ
ழுதி அனுப்பினர் அந்தக்கடிதத்தை எடுத்துக் கொண்டுப்போய்
துவாரத்தி லிருக்கப்பட்ட சேகுவர் கையில் கொடுக்க அந்தக்கடித
த்தை சேகுவர் கொண்டுப்போய் பெரியவேந்தன் கையில் கொடு
த்தார்.

இதைப்பார்த்தவுடன் வேந்தன் கொண்டுவந்த கடிதத்தை
செவ்வையாய் படித்துப்பார்த்து சந்தோஷமடைந்து அந்தக்கடிதத்
தை இந்துசேகரனுக்கு காட்ட அவனும் படித்து சந்தோஷமடை
ந்து மகா பலேஸ்வரனைவிட தானே அனேகவிதமான முயர்ச்சியோடு
மேளவாத்தியங்களை அழைத்துக்கொண்டுபோய் தர்மசத்திரத்தில்
இறங்கி யிருக்கப்பட்ட தபசிகாமணியையும் அவர் சீடனாயிருக்கும்
வேந்தப்புதல்வனையும் மஹாமதியையும் கொலுவிற்கு அழைத்துக்
கொண்டுவந்து அமரும்படி செய்தான். அந்தச்சமயத்தில் மஹா
பலேஸ்வரனுக்கு அவன் தேவிக்கும் எங்குமில்லாத சந்தோஷம்
மேலிட்டது. இதுவுமன்றி பரிஜனங்களும் சந்தோஷ சமுத்திரத்தில்
மூழ்கினர்கள். அச்சமயம் வேந்தன் சகலதேவாலயத்திற்கு தர்மங்கள்
செய்தும் விப்பிரவரை சந்தோஷப்படுத்தினர். இப்படிருக்க கொலு
தன்னில் அமர்ந்திருக்கப்பட்ட தபசியுடைய சீடனாகயிருக்கப்பட்ட
வனுடைய முகாரவிந்தத்தை இந்துசேகரன் பார்த்து இவன் பிரதாப
சந்திரனைப்போல் காட்டுகின்றது ஆனாலும் ஒருவரைப்போலொருவர்
பூமியிலிருக்காருமென்று தன்மனதில் தானே எண்ணமிட்டுக்கொண்டு
யோசித்து சற்றுநேரம் நிதானித்து நாம்தாமதமாக விசாரித்து தெரி
ந்துக் கொள்ளலாமென்று நிச்சயித்துக்கொண்டு நகரத்து பரிஜனங்க
ளுக்கு செலவு தந்துயனுப்பிவிட்டு வேந்தன் குடும்பத்தாரும் குருசீட
ரும் சந்தோஷமாக மொழியாடுஞ்சமயத்தில் அருகிலிருந்த மஹாமதி
ஐயா! யான் கோரியபுருஷன் இந்த குருசீடனே என்றுச்சொல்ல



இதைக்கேட்ட தந்தை அம்மாதை பார்த்து அம்மா உனக்கு பிராண
தாரம் தந்தவருக்கு நீயே நாயகியாக ஏதும் தடைக்கிடையாது
என்றுச்சொல்லி உடனேபிரதாபசந்திரனுக்கு ஸ்தானம்செய்யவைத்து
திவ்ய ஆபரணயலங்கிருதம் செய்து தபசிக்கு பீதாம்பரம் தந்து எல்
லோரும் சந்தோஷமாக புசித்துக்கொண்டிருக்கையில் இந்துசேகரன்
பிரதாபசந்திரன் அழகைப் பார்த்து இவரே நமது பிரியனென்று
நிச்சயத்தை தெரிந்துக்கொண்டு எல்லோரும் புசித்தானவுடன் தாம்
பூலந்தரிக்கும் சமயத்தில் மஹாபலன் தபசியைப் பார்த்து ஐயா!
இந்த இந்துசேகரனால் இந்த ராஜ்யம் லபித்தது இவருக்கும் விவாக
மாகவில்லை ஆனால் எனக்குதகுந்த மருகனும் அகப்பட்டு விட்டான்.
ஆகையால் இவருக்கு விவாகம் நடக்கவேண்டும் எப்படிசெய்வதோ
அதை தாங்களே யோசித்துச் சொல்லவேண்டுமென்றுக் சொல்ல
இதற்குள்ளாக இந்துசேகரன் வேந்தனைப்பார்த்து தந்தையே! தாங்
கள் சொன்னமொழி எனக்கு சந்தோஷமாச்சுது ஆனால் எனக்கு
விவாகம் இன்னம் சிலக்காலத்திற்கு பிறகு நடக்கலாம் இப்போதென்
தங்கையான மஹாமதிக்கு விவாகம் நடக்கவேண்டும் ஆலசியம் செய்
யலாகாது என்றுச்சொல்ல இதைக்கேட்ட மஹாமதி வேந்தன் சந்
தோஷமடைந்து மந்திரிகளை அழைத்து விவாகத்துக்கு வேண்டிய
காரியங்களை ஸ்திரப்படுத்துவீரென்றுச் சொல்ல இதைக்கேட்ட பிர
தாபசந்திரன் இதுயென்ன ஆச்சரியம் நாம் கோரியக்கனிக் கிட்ட
வில்லையே எப்படிக் கலியாணம் செய்யலாம் என்று யோசித்து வேந்
தனைப்பார்த்து ஐயா! இன்னும்யான் கோரியப்பொருள் ஒன்று என்
கையில் அகப்படவில்லை அது கிட்டும்வரைக்கும் யான் கலியாணம்
விரும்பமாட்டேன் அதுகிட்டும்வரைக்கும் தாமதம் செய்யவேண்டுமெ
ன்றுச்சொல்ல இதைக்கேட்ட இந்துசேகரன் இவர் தான் நமது நாய
கன் என்னும் சந்தோஷமேலிட்டு பிரதாப சந்திரனைப்பார்த்து ஐயா!
நீர்கோரியது ஏதோ அதைத்தெரிவித்தால் நான் பூர்த்தி செய்குறே
னென்றுச்சொல்ல இதைக்கேட்ட பிரதாபசந்திரன் இதையோசித்து
இவ்விடத்தில் சொன்னால் இவர்களுக்கு ஆயாசமுண்டாகுமென்று
மனமிட்டு பிறகு எப்படியாகிலும் நிஜத்தைச் சொல்லாமல் போனால்
பிரயோஜனமாகாதென எண்ணமிட்டு தன்னுடைய சவிஸ்தாரத்தை
எல்லாம் சொல்லி தன் கோரிக்கையான இந்துவதன மீதிருக்கப்
பட்ட மனதையும் தெரியச்சொல்லவே இதுகேட்ட இந்துசேகரன்
ஐயா விவாகம் நடக்கும் வேளைதன்னில் இந்துவதனவை முந்தி மாங்
கல்யதாரணஞ்செய்து பிறகு மஹாமதியை மாங்கல்யதாரணம் செய்வீ

றென்றுச்சொல்ல அம்மொழிக் கேட்டமாத்திரத்தில் பிரதாபசந்திரன் மிகுந்த சந்தோஷ மடைந்து அக்கலியாணத்திற்கு சம்மதமடைந்தான்.

அதன்பிறகு மஹாபலவேந்தன் இந்துசேகானுடன் ஆலோசித்துத் தன் பட்டணமுழுதும் அலங்காரம் செய்ய உத்திரவு செய்துவிட்டு விவாகமண்டபங்களும் தானதர்ம சாலைகளும் நிர்மித்து வரப்பட்டவருக்கு ஸ்தான போஜனங்களும் வாகனாதிகள் இருக்குமிடமும் தகுந்தபடி ஏற்பாடு செய்துவிட்டு பிற்பாடு திவ்ய ரத்நாபரணங்கள் முதலான சமஸ்த வஸ்துக்களை ஸ்திரப்படுத்திவிட்டு காஞ்சீபுரபிரதாபசந்திர மகாவேந்தன் இந்துவதன மஹாமதியை விவாகஞ்செய்துக் கொள்வதால் தம்பதி இஷ்டஜன சமேதராகவந்து இவர்களை ஆசீர்வதிக்க கோருகிறோமென்று கடிதமெழுதி தேசாதி வேந்தருக்கு அறிக்கை செய்தார் இதுவுமன்றி தனியாக ஒரு புரோஹிதனையழைத்து காஞ்சீபுரத்திலிருக்கும் விக்கிரமவேந்தனுக்கும் தீர்க்கதர்சியென்கிற மந்திரிக்கும் அறிக்கை செய்தார். இதைக்கேட்ட அவர் சந்தோஷமடைந்து குடும்பசமேதாரகபுரப்பட்டுவந்தார்கள். இவ்விதமாகசகல வேந்தரும் அவரவர் பரிவாடத்துடன் புறப்பட்டு விவாகம் நாளைக்கு என்றால் இன்று சாயந்திரம் மஹாபலேஸ்வரத்திற்கு வந்து சேர்ந்தார் இப்படி வந்த வேந்தருக்கெல்லாம் மஹா பலவேந்தன் தகுந்தபடி உபசாரம் செய்தார்.

அந்த சமயத்தில் காஞ்சீபுரிதனிலிருந்து வந்த வீரவிக்கிரம வேந்தனும் அவன் மனைவியும் தீர்க்கதர்சனையும் அவனுடதேவியும் இராஜா அந்தப்புரஞ் சென்று பிரதாபசந்திரனைப் பார்த்து அதிக நேரம் மொழியாடி இந்துவதன எங்கென்று கேட்டார். அச்சமயத்தில் இந்து சேகரன்வந்து அவரைப்பார்த்து ஐயா! அம்மாது விரதமனுஷ்டித்துக் கொண்டிருக்கின்றாள் விவாக சமயத்திற்கு வந்து சேருவாளன்றி இதற்குள் எவர் கண்களுக்கும் அகப்படமாட்டாளென்றுச் சொல்லவே இதைக் கேட்டு அவர் சந்தேகமிட்டார். அப்போது இந்துசேகான் அம்மாது நாளை விவாகத்திற்கு வருவது நிசுசயமென்று சத்தியம் செய்தான். அப்போது எல்லோரும் சந்தேகம் தீர்த்துக்கொண்டு சந்தோஷமாக இருந்து அந்த இராத்திரிப்பொழுது போக்கி மறுநாட் உதயமானவுடனே பிரதாப சந்திரனையும் மஹாமதியையும் அலங்காரஞ் செய்து லக்கினசமயத்திற்கு சரியாக கலியாண மண்டபத்தில் அமரச்செய்தார். அச்சமயத்தில் கலியாணத்



திற்குவந்த வேந்தரும் பந்து ஜனங்களும் மந்திரிகளும் புரோஹிதரும் நகரவாசிகளும் அவரவருக்குத்தகுந்த ஆசனத்திலமர்ந்து இதென்ன இன்னமொரு கலியானமாதைக்காணேம் இதைப்பார்த்தால் ஆச்சரியமாக இருக்கிறதென்று யோசித்துக்கொண்டிருந்தார்கள். இப்படி வந்தவர் ஆலோசனையைவிட எண்மணங்கு அதிகமாக பிரதாபச் சந்திரனுக்கும், தீர்கதர்சிக்கும், இருக்கப்பட்ட ஆலோசனை சொல்லமுடியாது அந்தச்சமயத்தில் இந்துசேகரன், பிரதாபச்சந்திரன், பக்கத்திலிருந்து கல்யாணமண்டபத்தில் வந்திருப்பவரைப் பார்த்துச் சொல்லத் தொடர்ந்தான்.

ஓ! சபையோரே, நான் சொல்லும்மொழியை சற்று கவனித்துக் கேட்பீர் எப்படியென்றால் காஞ்சீபுர பிரதாபச்சந்திர வேந்தனுக்கு மந்திரிப் புதல்வியான இந்துவதனமீதிருந்த மோகதாபத்தை தாய் தந்தைகளுக்குச் சொல்ல விவாகஞ் செய்ய லாகாதென்று தடுக்க. அவரிருவரும் பெரியோர்களுக்குத் தெரியாமல் புறப்பட்டுவந்து கானகத்தில் இருவரும் பிரிந்துப்போய்விட்டார். அதனால் பிரதாபசந்திர வேந்தன் தன் நாயகியை தேடிக்கொண்டுவரும் மார்க்கத்தில் இந்தத் தபசியால் மாண்டு எலும்பாயிருந்த சவத்தைப் பிழைக்கச்செய்துக் கொண்டுவருஞ்சமயத்தில் முதலில் ஓர் குதிரைதனையும் சேனாநாயகனையும் பிழைக்கச்செய்தார். அதன்பிறகு, இன்னாட்டுவேந்தன் புத்திரியான மஹாமதி சவிஸ்தாரத்தை பக்ஷியால் தெரிந்துக்கொண்டுவந்தார். இதுவரைக்குந்தான் இவர்களுக்குத்தெரியும் இந்துவதனபோனயிடம் இவர்களுக்குத் தெரியாது அந்த இந்துவதன இருப்பது என்க்கு நன்றாகத்தெரியும் அம்மாது பகவானை சதாகாலம் தியானித்துக்கொண்டு தன் நாயகனை விவாகஞ்செய்யும் வரைக்கும் தான் வெளிவரலாகாதென்று எண்ணமிட்டு இருக்கின்றாள்.

இப்போது விவாக சமய மாகையால் அம்மாது வருவதற்கு தடையில்லாமலிருக்கிறாள். அம்மாது இருக்குமிடம் எனக்குத்தவிர மற்றவற்குத் தெரியாது. ஆனாலும் இந்த சுபகாலதினத்தில் சிறைதனிலிருப்பவரை விடுதலைசெய்தால் நலமல்லவா. ஆகையால் எல்லோரையும் இங்குவரவழைத்து அவருக்குச் சந்தோஷஞ்செய்தனுப்பினால் சுபகாமல்லவாவென்றுச்சொல்ல இதைக்கேட்ட, சபையோர் சம்மதமடைந்து எல்லோரையும் வரவழைத்தார். இப்படி வந்தவரில் செம்படவனையும் சேனாநாயகனை அழைத்து சபைக்குமுந்தி நிறுத்தி அப்பா உன்னுடைய சவிஸ்தாரத்தைச் சொல்லுமென்றுகேட்க, அச்சம

யத்தில் சேனநாயகன் தன் வரலாற்றையெல்லாம் விசிதமாகச்சொல்ல
இதைக்கேட்ட தபசியும் பிரதாபச்சந்திரனும் யோசித்து நாம் பிழைக்
கச்செய்தவனிவன்தான், பக்ஷிசொன்னது உண்மைதானென்று தைர்
யஞ்செய்துக்கொண்டிருக்க. இதற்குள் இந்துவதன தன் கையிலிருக்
கும் பட்டாக்கத்தியையெடுத்து இது ஆருடையதென்றுக்கேட்டாள்,
அக்கத்தியை சேனநாயகன்பார்த்து என்னுடையதென்று வொப்
பிக்கொண்டதுமல்லாமல் முகமானது வெட்கமடைந்து தன்னுடைய
துர்மார்க்க நடக்கையானது இத்தனைபேரெதிரில் வெளியாச்சுதே
யெனதலைகுனிந்து அய்யோ தெய்வமே போனபிராணம் அப்போதே
போகாமல் பிழைத்து இத்தனைபேரெதிரில் அவமானமடையகாலமாச்
சுதேயென்று திகிலடைந்து ஆலோசித்துக்கொண்டிருந்தான். அதன்
பிறகுநகை மூட்டை அவிழ்த்து அதிலிருக்கும் தண்டையையெடுத்து
ச்செம்படவன் கொண்டுவந்த தண்டையுமெடுத்து கையில் வைத்து
க்கொண்டு அந்தநகைதனைச்செய்த கம்மாளனையழைத்து இந்த இரண்
டுதண்டைதனை மஹாமதிகாலில் பூட்டநலமாகுமாவென்றுகேட்க அக்
கம்மாளன் ஐயா! இதை இனிவேருசெய்து போடவேணுந்தவிர இப்
படிப்போட முடியாதெனச்சொல்ல அங்கிருப்பவர்யோசித்துமஹாமதி
முதலில் மரணமடைந்தது நிக்ஷயமேயென்று சாக்ஷியாகச் சொன்
னர்கள்.

இதற்குள் இந்துவதன சபையோரைப்பார்த்து உத்தமப்பெண்
களை பக்ஷியான் ரக்ஷிப்பான் இது சத்தியமென்றுச்சொல்லி தான் அந்
தப்புறத்திற்குப் போய்விட்டாள். பிறகு, தபசியானவர் நடந்த சங்கதி
களெல்லாம் விசிதமாகச் சொல்லினர். இதற்குள் இந்துசேகரன் அந்
தபுரம்போனவன் ஆண்வுடையைகழற்றிபெண்ரூபத்துடன் வருஞ்சமயத்
தில் தீர்கதர்சியும் பிரதாபச்சந்திரனும் எங்குமில்லாத சந்தோஷமடை
ந்தார். அது பிறகு, விவாகம் ஸ்திரமாச்சுது இந்த கல்யாணபந்தலில்
இந்துசேகரன் அதிநேரமாகவாராதிருப்பதால் மஹாபலேஸ்வரன் அவ
ரைத் தேடிபார்த்து எங்குமகப்படாமல் மனக்கவலை அடைந்திருக்க
இதைதெறிந்த இந்துவதன அவரைப்பார்த்து தந்தையே! நான்தான்
இந்துசேகரனக இருந்தவனென்றுச்சொல்லி அவர்மனதை தேருத
லைச்செய்து அதன்பிறகு பிரதாபச்சந்திரனுக்கு விவாகம் நடந்தது
சகலவிதமான தானதர்மங்களைச்செய்தார். பிறகு, துஷ்டனன சேன
நாயகனுக்கு நல்ல புத்திமதிகளைச்சொல்லி அனுப்பிவிட்டார் முதலில்
தண்டையுடைய நிஜத்தைச்சொன்னவர்த்தகருக்கும் மஹாமதி மரண
மடைந்த பிறகு தண்டைக்கொண்டுவந்த செம்படவனுக்கு வெகுமதி



கள்தந்தனுப்பினர். வந்த வேந்தருக்கும் பரிஜனங்களுக்குந் தக்கபடி
போஜனமமைத்தார். இவ்விதமாக விவாகம் இதிக சம்பிரமாக நடந்
தது. அப்போதெல்லோரும் சந்தோஷமடைந்தாகள். இப்படியிருக்க
இந்துவதனையும், மஹாமதியையும், பிரதாபச்சந்திரன் விவாகஞ்செய்
துக்கொண்டு தன் இராஜியமான காஞ்சிப்புரத்தை மந்திரிக்கையில்
வொப்பவித்துவிட்டு தான் மஹாபலேஸ்வரப் புறத்தில் தாய்தந்தை
யுடன் இராஜியபரிபாலனஞ் செய்துக்கொண்டிருந்தான்.

இப்படி யோகிச்சொல்லவே வேடர்க்கேட்டு சந்தோஷமடைந்து
நிற்க இதற்குள் அஸ்தமயமாகுஞ் சமயமாச்சுது அப்போது சமீ
பத்திலிருக்கும் நாசிகா பஞ்சவடி ஸ்தலத்திற்குச்சென்று அங்கு தின
குருத்யங்களை தீர்த்துக்கொண்டு சயனிக்குஞ்சமயத்தில் அந்த யோகி
யைப்பார்த்துவேடர்கள் சுவாமி? இந்தச் க்ஷேத்திரமகிமைதனை தெரி
யச்சொல்ல வேணுமென்றுக்கேட்க யோகி சம்மதமடைந்துச் சொல்
லத் தொடர்ந்தார்.

அப்பா வேடரே! இந்த க்ஷேத்திரமாவது நாஸிகஸ்தலம் பூர்வ
காலத்தில் இராவணனுடைய சுவாதீனத்திலிருந்தது இங்குவடதிசை
தன்னிலிருந்து வருந்தேவர்கள் பிரவேசிக்காதப்படிக்கு இதைலங்கா
தீவுக்கு தென்துவாரமாக செய்துக்கொண்டு காதூஷணதிகளை காவல்
வைத்தான் இங்கு ஸ்ரீராமசெந்திரன் சீதாலக்ஷ்மணசமேதராக வந்
துதபஞ்செய்யும் காலத்தில் சூர்பநகைவந்து ஸ்ரீராமன் மீதுமோகிக்க
அவர் லக்ஷ்மண மூர்த்தியிட்மனுப்ப அவர் இம்மாது மொழிக்கிணங்
காமல் மூக்கையும் காதையும் அறுத்து அனுப்பிவிட அதனல் இத
ற்கு நாசிகாசேதன ஸ்தலமென்றும், நாசிகயென்றும், பெயருண்டாச்
சுது இப்படிருக்க மூக்கும் காதும் அறப்பட்ட சூர்ப்பநகை கரதூஷ
ணதிகளுடன் முறையிடவே அவர் கோபமடைந்து ஸ்ரீராமனுடன்
போர்புரிய வருஞ்சமயத்தில் சீதாதேவியை அந்தபெரிய கிளையாயி
ருந்த ஆலமரத்தின் பொந்தியில் ஒளித்துவைத்து போர்புரிய ஆரம்
பித்தார். ஆகையால் இதற்கு பஞ்சவடியென்று பெயருண்டாச்சுது.
இதுவுமன்றி பிரம்மதேவன் சிரத்தை சிவன் கொய்தப்போது சிவனு
க்கு பிரம்ம அத்தி சம்பவித்தது அந்தக் காலத்தில் சிவனுடைய
வாகனம் இங்குவந்திருக்க வேதியர் சிலதுபேர் அதைப்பிடித்து உழு
வதற்கு பிரயத்தினப்பட்டதால் அது மனிதற்கு அகப்படாமல் பிடி
க்க வந்த சிலது வேதியரைக் கொன்றுவிட்டது. அதினல் சிவனு
க்கு பிராமண அத்தியும் சம்பவித்தது இந்தபாவத்தை தீர்த்துக்கொள்

வதற்கு சிவன் இந்தவிடத்தில் வந்து தினந்தோறும் ஸ்ரீராமதீர்த்தத்தில் ஸ்தானஞ்செய்து சுவாமியை ஆயிரம் செண்பக புஷ்பத்தால் பூஜித்துக்கொண்டு வருக ஒருநாள் ஒருபுஷ்பம் குறைந்தப்படியால் சிவன் தன் நாசியை கண்டித்து இங்கு விஷ்ணுவை பூஜிக்க அதனால் பிரம்ம அத்தியும் பிராம்மண அத்தியும் தீர்த்துக்கொண்டார். ஆகையால் இதற்கு நாசிகயென்று பெயரிருக்கிறதாக பெரியோர் சொல்லுகிறார் இங்கிருக்கப்பட்ட பஞ்சவடிதன்னில் ஸ்ரீ சீதாராமலக்ஷ்மணரை சேவை யடைந்தவற்கு சீதாராமலக்ஷ்மண தீரத்தில், ஸ்தானம் செய்தவற்கு இஷ்டசுபங்கள் கைக்கூடும். இதுவுமன்றி இதை தென்காசியென்றும் இதற்கு சமீபத்திலிருக்கும் கோதாவரி யுற்பத்தி ஸ்தானத்தையும் கங்காநதியும் பாவிப்பவருக்கு சகல பாவங்கள் தீர்ந்துவிடும் கோதாவரி யுற்பத்தி ஸ்தானத்திலுண்டான த்ரியம்பகத்திற்கு போனபேர்களுக்கு த்ரியம்பகேஸ்வரனை சேவை யடைந்தவருக்கும் சகல காமியபலத்தை கைக்கூடுவதன்றி மோக்ஷமென்னும் வீடு லபிக்குமென்றுச்சொல்ல வேடர்கள் கேட்டு சந்தோஷமடைந்து மறுநாள் ஸ்ரீராமதீர்த்தம் முதலான தீர்த்தத்தில் ஸ்தானம்செய்து பஞ்சவடி முதலான ஸ்தலத்தை சேவையடைந்து அங்கிருந்துப்புறப்பட்டுவருஞ் சமயத்தில் யோகியைப்பார்த்து சுவாமீ!, தாங்கள்சொன்ன பிரதாபசந்திரன் இந்துவதன என்னும் மாது கதைக்கேட்டு சந்தோஷமடைந்தோம் இப்போது இன்னமொருக் கதைச்சொல்லி எங்களுக்கு மார்க்கப் பிரயாசை அடையாதிருக்கும்படிச் சொல்ல வேண்டுமென்றுக்கேட்க பிரம்மாநந்தயோகி சந்தோஷமடைந்து வேடருக்கு கதைச்சொல்லத் தொடர்ந்தார்.

# பதினாறும் மஜிலிக்கதை.

## பூர்வார்ஜிதபலப்ராப்தி.

கேட்டீரா வேடரே! முந்திக்காலத்தில் காம்போஜ தேசத்தில் சோமாவதி என்றொருப் பட்டணமுண்டு அந்நகரத்தை சோமசேகரனென்கிற வேந்தன் பிரம்மக்ஷத்திரிய வைஸ்ய சூத்ராதிகளை அவரவர் நிலைப்படி மீராமல் நடக்கும்படி உத்திரவு செய்து அதிக தர்மமாக இராஜ்யபரிபாலனம் செய்தார். இவருக்கு பதியே தெய்வமென்றும் எக்காலமும் பதிசேவை யடைந்தும் பதிமொழி மீராமலும் நடத்துக்கொண்டுவந்த புஸ்யவதியான நாயகி ஓர்மாது உண்டு எந்தபுவனத்திலும் அம்மாதுக்கு சமானரூபரேகை விலாசலாவண்ய விலக்ஷணைசமத்காரமுள்ள மாது கிடையாது அப்படிக்கொத்த உத்தமமாதைக் கூடி வேந்தன் இஷ்டசுகத்தை அனுபவித்துக்கொண்டு வந்தான், அவ்வேந்தன் வீரப்பிரதாப முடையவன் பகவானுக்கு பக்தி வைராக்கிய முடையவன் சகல அஸ்திர சாஸ்திரமறிந்து சுதலயன் என்கிற மந்திரியை யடைந்து வெகுகாலம் வரைக்கும் இராஜ்யமாண்டு வந்தான். இப்படி ஆண்டுக்கொண்டு வருஞ்சமயத்தில் அவருக்கு புத்திர பாக்கியம் கிடைக்கவில்லை. அதனால் அவர் பச்சாதாபமடைந்து தன் இஷ்டதெய்வமான சோமேஸ்வரனென்னும் பரமேஸ்வரனை அதிக பக்தியுடன் சேவித்து தினசோமவாரம் சேவையடைந்தப் பிறகு புஜித்துக்கொண்டு தினந்தோறும் தீர்த்த பிரசாதங்களை வரவழைத்துக் கொண்டிருந்தான். இப்படிருக்க அவருக்கு எழுவது வருஷமாச்சுது அவர் தேவிக்கு நாற்பது வருஷமாச்சுது இனிமேல் புத்திரர் ஜன்மிப்பது• துர்லபம் ஆனால் பகவான் கடாக்ஷத்தால் புத்திரர் உண்டாகவேணும் "அபுத்ரச்யகதிர்நாஸ்தி" என்னும் மொழிபோல் புத்திரர் இல்லாதவர் பிழைப்பு வியர்த்தமாகும் ஆகையால் நிப்பிரயோஜனமான இந்தவுடலை வைத்திருப்பது நலமல்லவென, மனதில் எண்ணிக் கொண்டிருந்தார்.

இப்படிருக்க ஓர் சோமவார தினத்தில் பகவான் சேவையடைவதற்குச் சென்று தீர்த்த பிரசாதங்களை உசிதமாக் அனுசரித்து பகவானைப் பார்த்து ஓ பக்தபராதீனா! ஆர்தஜனரக்ஷகா! எனக்கு புத்திரபலன் அடையும்படி அனுக்கிரகிக்கவேண்டும் அப்படி கொடாவிட்டால் என் பிராணத்தை உன் பாதாரவிந்தத்தில் போக்குவது நிக்ஷயம் எனச்சொல்லி அன்ன ஆகாரமில்லாமல் யேகசித்தமடைந்து அச்சன்னிதானத்தில் பகவான் நாமத்தை தியானித்துக்கொண்டு படுத்துக் கொண்டார். இப்படிருக்க அந்த சோமவாரம் இராத்திரி காலத்தில் பார்வதி பரமேஸ்வரச் சமேதராக அங்கு வந்து அவ்வேந்தனுடைய மனோதிடத்தை மெச்சி ஓ இராஜகுலபாலகா உனது பக்திக்கு மெச்சினேன் எழுந்திருமென்றுச் சொல்லியெழுப்பி அப்பா சோமசேகரா நீ இப்படி அடஞ்சாதித்துக் கொண்டிருக்கிறாய் ஆனால் உனக்கு புத்திரபாக்கியம் கிடையாது "புத்ராச்சதகுணாம்புத்ரீம்" என்னும்மொழி அனுசரித்து புத்திரனுக்காகிலும் புத்திரியே நலமாகும் உனது வம்சத்தில் கன்யாதானம் செய்தவர் யாரும் கிடையாது ஆகையால் உனக்கு திரிலோக சுந்தரியான பெண் குழந்தை ஜனிப்பதாக பார்வதியனுக்கிரஹித்தாள்.

அம்மாதைக் கன்யாதானம்செய்து தந்தால் உனதுபித்ரு முக்தியடைவார் இது எப்படியென்றால் லோகத்தில் இருக்கப்பட்ட தானத்திற்கெல்லாம் அன்னதானம் பெரிது ஆனாலும் இப்புவியில் கன்யாதானத்திற்கு மிஞ்சினதானம் கிடையாது அதைப்பற்றி நீ கன்யாதானம் செய்குவாய் இதனால் உன்வம்சம் விருத்தியாகும் இப்போதிந்த தேவாலயத்திற்கு தென் பாகத்தில் ஒருமாஞ்செடி இருக்கிறது அதில் மிதமில்லாமல் பழம் பழுத்திருக்கும் அந்தப்பழத்தில் உனக்கிஷ்டமான பழம் அறுத்துக்கொண்டுப்போய் உனது தேவிக்குக்கொடும் அம்மாது கெர்பமடைந்து அதிரூப சவுந்திரியமுடைய ஒரு பெண் குழந்தையை பெருவாளென்றுச்சொல்லி அந்தர் தியானமாகிவிட்டார். இதை தெரிந்தவேந்தன் சந்தோஷமடைந்து பகவானுக்கு நமஸ்காரம் செய்து அந்த இராத்திரிகாலத்தில் தேவாலயத்தில் தென்பாகத்திற்கு வந்து பார்க்க மாஞ்செடியிருந்தது அதின் பழம் வொன்றைவிட வொன்று அதிக மனோஹரமாக யிருக்க, இதைப்பார்த்து ஆச்சரியமடைந்து அதிகமாக பாலகர் வேண்டுமென்று அபேக்ஷையால் அச்செடியேறி இருபது பழத்தையறுத்து வஸ்திரத்தில் கட்டிக்கொண்டு இறங்கி வந்துப்பார்க்க அதில் ஓரே பழம் நின்றது மறுபடியும் செடியேறி நூறுபழம் அறுக்க மறுப்படியும் ஓரே பழந்தான் நின்றது இதைப்பார்த்து வேந்தன் தனக்கு பலிதமொன்று தான் என எண்ணமிட்டுக் கொண்டு சோமேஸ்வரனுக்கு வந்தனஞ்செய்து தன் வீட்டிற்கு வந்து அந்தப்புரமடைந்து நாயகியை அழைத்து அந்தப் பழத்தை புஜிக்கும்படி கொடுத்தார் அம்மாது நாயகன் மொழிக்கு எதும் மறுமொழிச் சொல்லாமல் மஹா பிரசாதமென்று பக்ஷித்தாள். அதுமுதற்கொண்டு அம்மாது முகத்தில் கர்பசின்னங்களுண்டாச்சுது வேந்தன் இதைப்பார்த்து ஆனந்தமடைந்து நாயகி இச்சித்த பதார்த்தங்கள் தந்தும் அதி விஸ்வாசத்துடன் போஷித்துக் கொண்டுவந்தார்.

இப்படி தசமாதம் பூர்ணமான பிறகு நல்ல சுபதினத்தில் சவுந்தர்ய ரத்தினாகரம்போல் பெண் குழந்தைதனை ஜனித்தாள். இதைக் கேட்டு சோமசேகரன் ஆனந்தமடைந்து பதினோரும் தினத்தில் புரோஹிதரை அழைத்து ஜாதககர்ம நாமகருண மஹோத்ஸவாஞ் செய்ய இச்சையடைந்த சமையத்தில் பந்துஜனங்கள் அக்குழந்தைதனைப் பார்த்து ஓ இராஜகுலோத்தமா! உனது வம்சத்தில் ஏழு தலைமரைவருக்கும் பெண்குழந்தைகள் பிறந்தது கிடையாது நீ மகாதுர்முஷ்டி நீ உத்தம புருஷனாகையால் அந்த சோமேஸ்வரன் உன் மீது



அனுக்கிரயித்து இந்த பெண்குழந்தை தந்தாரென நம்புகிறோம் இம்மாதம் கன்யாதானஞ்செய்தால் உனது ஏழுதலைமரைவரைக்கும் பதவி கிட்டுவதுதவிர நீசெய்த பாக்கியத்தாலும் எங்களுக்கு கீர்த்தியுண்டாகும்இதற்கு சந்தேகமில்லை ஆனால் நீ நமதுகுடும்பம் விர்த்தியாகும்படி இக்குழந்தைக்கு பவானியென்று பெயரிட நலமென்றுச் சொல்ல இதைக்கேட்டு வேந்தன் சந்தோஷமடைந்து தன் புதல்விக்கு நாமகரணம் செய்து வந்த பந்து மித்திராதிகளுக்கு தாம்பூலம் தந்து வேதியருக்கு தக்ஷணதானங்கள் செய்து சந்தோஷமாக குடிகளை காத்து தர்மத்தைக்கைவிடாமல் அந்நாட்டை பரிபாலித்துக்கொண்டு வந்தார்கள்.

இப்படிருக்க அப்புதல்வியை தினமொருமேனி பொழுதொருவண்ணமாய் வளர்த்துக்கொண்டு வந்து ஓர்நாள் அவ்வேந்தன் அப்புதல்வியை தன்னுடைய துடை மீது குந்த வைத்துக் கொண்டு அப்புதல்வி பேசப்பட்ட மருதுமொழியைக் கேட்டு சந்தோஷமடைந்து இருந்தான். இதுபோலாக ஓர் சமயத்தில் சதிபுருடரிருவரும் சரசசல்லாபமாக இருக்கும் சமயத்தில் அவ்வேந்தன் நாயகியைப்பார்த்து ஓ மாதரசே! பகவான் கடாக்ஷத்தால் நமக்கு அதிக அழகுடைய புதல்வி பிறந்தாள். இம்மாதுக்குத்தகுந்த புருடன் என்றைக்கிருக்கின்றானோ தெரியவராது, இச்சமயத்தில் இந்த ஆலோசனை பிறந்தது என பிரீதியுடன் சொல்ல இதைக்கேட்ட அம்மாது சற்றுநேரம் ஆலோசித்து நாயகா நீர்சொன்னது நிக்ஷயமே ஆனால் நமக்கு பெண்பிள்ளை பிறந்தது பெரிதல்ல இம்மாதுக்கு தகுந்த புருடன் அகப்பட்டபோதல்லவா நாம் தன்யரானோம் என்றுச்சொல்லி இருவரும் சந்தோஷமாயிருந்து தன் புதல்விக்கு வித்தியாப்பாசம் செய்து காலங் கழித்துக் கொண்டிருந்தார்.

இது இப்படியிருக்க காஸ்மீரதேசத்தில் பாடலீபுர மென்றொரு பட்டணமுண்டு அப்பட்டணத்தை ஜெயசேனனென்கிற வேந்தன் பீமசேனனென்கிற மந்திரியுடன் சத்தியமென்கிற செங்கோல் பிடித்து இராஜ்யப் பரிபாலனம் செய்துக்கொண்டிருந்தார்கள். இப்படியிருந்து தனக்கு புத்திரயபேக்ஷையடைந்து தினசோமவாரம் விரதமனுஷ்டித்து தன்னுடைய பட்டணத்திற்கு சமீபத்திலிருக்கப்பட்ட கந்தர்வமலையென்னும் பர்வதத்தில் இருக்கப்பட்ட குஹையில் அஷ்டாங்க யோக நிரந்தரஞ்கிய நீதியோத்திரனென்னும் தபசியை அனுசரித்து அவர் சேவைதனை செய்துக்கொண்டிருந்தான். அந்த தபசி இருக்

கப்பட்ட இடத்தில் சுகந்த புஷ்பசெடிகளும் பல கனிச்செடிகளும்,
திவ்யமான தடாகமும் சூழ்ந்திருப்பதால் இதை இந்திரவனமென்றுச்
சொல்ல நீதியாகும் இப்படிக்கொத்த வனத்தைப் பார்த்து சந்தோஷ
மடைந்து அப்சரபெண்கள் அங்கு வந்து ஜலக்கிரடை செய்துவிட்டு
போவது வழக்கம் இப்படியிருக்க ஓர் சமயத்தில் ரத்தினவர்மனென்
னும் கெந்தர்வபுருடன் இந்துகள என்கிற அப்ஸரபெண் மீது மோக
மடைந்து அவ்வனத்தில் உன்னிதத்தைப் பார்த்துப்பார்த்து சந்தோ
ஷமடைந்து அங்கிருக்கப்பட்ட புஷ்பவாசனையால் தென்றல் வீச இரு
வர் மனது பூரிக்க மாரன்கணை தூவ இதை சகிக்காமல் இருவரும் கூடு
வதற்கு இடமில்லாமல் யோசிக்கும் சமயத்தில் அருகிலிருந்த ஜொனை
யைப் பார்த்தார் அச்சமயத்தில் அந்த ரிஷியானவர் உதயத்திலெழு
ந்து ஸ்தானம் செய்வதற்கு நதிக்கு போய்விட்டார். அதை தெரிந்து
அந்த ஜொனைக்குள் புகுந்து ரதிகிரீடாவிலாசம் செய்யும் சமயத்தில்
அதரபானத்தை ப்ரோக்ஷிக்கும் காலத்தில் நீதியோத்திரனென்னும்
ரிஷியானவர் ஸ்தானம் செய்துவிட்டு பகவான் நாம கீர்த்தனைகள்
பாடிக்கொண்டு தன்னிறுப்பிடம் வருஞ்சமயத்தில் இவர்கள் செய்யும்
படியான துஷ்டசைகைகளை பார்த்துவிட்டு "ஹரிஹரி" என்று
ஹரித்யானுதிபனுக குஹைக்கு முன்னில் வந்து நின்றுக்கொண்டிரு
ந்தார். அவரிருவரும் பரமசுக ஆனந்தமடைந்து ஆஸ்ரமத்தை
விட்டு வெளியில் வருஞ்சமையத்தில் தபயோகியை பார்த்து
பயமடைந்து நின்றுவிட்டார். இதையறிந்த தபயோகி கோபமடை
ந்து கண்கள் சிவந்து பர்க்கலை நரநரவென்று கடித்து அடா துர்மார்
க்கனே! யாககுண்டம் தபசு தேவதை ஆராதனை முதலான சத்கார்
யம் நடக்குமிடத்தில் பரிசுத்தமென்று தெரிந்தும் இப்படி துஷ்ட
வேலை செய்யலாகுமா என்றுக்கேட்டு அடா சண்டாளா இதோநான்
சாபமிடுகிறேன் பிடியுமென்றுச்சொல்லி அடாப்பாவி நீ நபுஞ்சனுகப்
போகக்கடவது அடி சண்டாளி நீ நரனைக்கூடி வாழ்வாயென்று சாப
மிட்டு மறுப்படியும் ஸ்தானத்திற்கு சென்று ஸ்தானஞ்செய்து விட்டு
வருஞ்சமயததில் அவ்விருவரும் அவர் பாதத்தைக் கெட்டியாகப்
பிடித்துக்கொண்டு சுவாமிநாங்கள் மதியீனமடைந்து செய்தக்காரியம்
பிழையாகும் அதை நீங்கள்க்ஷமிக்கவேண்டுமென்று பரிதாபத்துடன்
கேட்க இதைக்கேட்ட தபசி சாந்தமனமிட்டு என்மொழி பிசகாது
ஆகையால் நீ ஒருவருடம் வரைக்கு மனிதரூபமெடுத்து ஓர் குழந்தை
யை பெற்றுவிட்டு நீ உன் புருடனுடன் சுகமாகச் சேருவாய் அடா
பயித்தியனே நீ உன் மாது வருகிறவரைக்கும் நபுஞ்சனுகயிருந்து



பிறகு எப்போதும்போல புருஷத்வ மடைந்திருப்பாயென்று சாபம
ளிக்கவே அப்போதே கெந்தர்வன் நபுஞ்சகனுகிவிட்டான். அம்
மாதோ ரூபலாவன்யத்துடன் மானவ ஜென்மமெடுத்து அந்த ஆஸ்
ரமம் வெளியில் உட்கார்ந்து தியானஞ் செய்துக்கொண்டிருந்தாள்.

அந்தச் சமயத்தில் பாடலீபுரத்தின் வேந்தனுகிய ஜெயசேனன்
எப்போதும்போல் திங்கட்கிழமை தினம் ஸ்தானஞ்செய்துவிட்டு தப
யோகியை சேவையடைவதற்கு அந்த குஹைக்கு வந்து பயபக்தியு
டன் சேவையடையும் சமயத்தில் அங்கு குந்திக்கொண்டிருந்த அப்
ஸரமாது இவனுடைய ரூபரேகை விலாசத்தைப் பார்த்து மோகமடை
ந்து தபயோகியருகில் சென்று வந்தனஞ்செய்து அவர் பின்பாகமாக
நின்றுக்கொண்டிருக்க அச்சமயத்தில் தபயோகி இம்மாதைப்பார்த்து
ஓ மோஹனங்கி! நீ இப்புருடனுடன் சென்று ஒருவருடமிருந்து ஓர்
புதல்வனைப் பெற்றுவிட்டு உன் நிஜரூபமெடுத்துக் கொண்டு உன் நாட
னடைந்து சுகமாக வாழ்வாயென்றுச் சொல்லிவிட்டு மறுபடியும் இவ்
வேந்தனைப் பார்த்து ஓ பூசுராங்கா! உனதுதேவிக்கு புத்திரசந்தானம்
கிடையாது ஆகையால் இம்மாதை நாயகியாக அழைத்துச்சென்று
சுகமாயிருந்தால் இம்மாது வயற்றில் இராஜ்யத்திற் கதிபதியான
புத்திரன் ஜனிப்பான் உடனே அப்பாலகனை உன் பட்டத்து தேவிக்
கையில் கொடுக்க பிரசவித்த லக்ஷணமாக இருப்பாள் இது ரகஸ்ய
வேதமென்று மனதில் வைத்துக் கொள்ளென்றுச் சொல்ல இதைக்
கேட்ட ஜெயசேனன் தபசிக்கு வந்தனஞ்செய்து சுவாமி! தங்கள்
உத்திரவுக்கு மீறி நடக்கமாட்டேன் என்றுச்சொல்லி அவரிடத்தில்
உத்திரவு பெற்றுக்கொண்டு அந்த நாகவேணியை தன்னுடன் அழை
த்துக்கொண்டு இராஜ்யத்திற்கு வந்து அந்தப்புரமடைந்து தனது
பட்டத்து தேவியை அழைத்து நடந்த சங்கதியெல்லாம் விசித
மாகச் சொல்லி அம்மாதைக்காட்ட பட்டத்துதேவி சம்மதித்து சக்
காளத்தியென்கிற பொறுமை விட்டு நாயகன் உத்திரவுபோல் அவ
ளை சகோதரியாக பாவித்திருக்குஞ் சமயத்தில் அப்ஸரமாது
தான் கெர்பமடைந்தேனென்கிற மொழிகூறினுள். இப்படித் தசமா
தம் பூர்த்தியான பிறகு பூர்ண சந்திரோதயம்போல் ஆண் குமரனைப்
பெற்றுள். உடனே அச்சிசுவை பட்டத்துதேவிப் பக்கத்தில் படுக்க
வைத்துவிட்டு தான் நிஜரூபம் தரித்துக்கொண்டு பாலகனை வெருத்து
வேந்தனிடம் உத்திரவுபெற்றுக்கொண்டு தபயோகியிடம்வந்து வந்த
னஞ் செய்து நடந்ததைச் சொல்லி பிறகு இந்திரலோகமடைந்து
ரத்தினவர்மனென்றும் கெந்தர்வபுருடனுடன் சுகமாகயிருந்தாள்.

இங்கு கமலாதேவி பக்கத்தில் படுக்கவைத்தபாலகனைப் பார்த்து வுடன் பிரசவேதனைப் பட்டவள்போல் நடித்து முந்தி தப்போகர் சொன்னதுபோ லாச்சுது. இதையறிந்த ஜெயசேனன் தனக்கு புத்திரன் பிறந்தானென்று தன்பட்டணம் முழுதும் சக்கரைகொடுத்தார். பாலகன் பிறந்த பதினோராந்தினத்தில் பந்துஜனங்களையும் புரோகிதரையும் அழைப்பித்து பாலகனுக்கு நாகராஜனென்று நாமகரணஞ்செய்து சகல வேதியருக்கு சந்தர்ப்பனம் நடத்தி தானதர்மங்களைச்செய்து சந்தோஷப்படுத்தினன் இப்படிருக்க அந்த ஜெயசேனனும் அவன் தேவியும் பரமானந்த சந்தோஷமாக புத்திரனை போஷித்துக்கொண்டுவந்தார். அப்பால்கனை ஆனையேற்றம் குதிரையேற்றம் வில்வித்தை முதலான வித்தைதனில் தேர்ச்சியடைந்தான் இந்த நாகராஜன் பதினாரம்வருஷத்தில் சகலவேத புராணங்களைப்படித்து சமர்த்தனுப் சரஸ்வதிக்கு சமமாக சுத்த வாக்குடையவனக இருந்தான். இப்படிருக்க தாய்தந்தைகளுக்கு லபித்த பாலகன் சௌவுந்தரியத்தைப் பார்த்து ஆனந்தமடைந்து இந்தப் பாலகனுக்குத் தகுந்தமாது இப்பூலோகத்தில் நாம்காணலாகாதென ஆலோசித்துநல்லதேர்ச்சியடைந்த சித்திரக்காரனையழைத்து பாலகன்போல் படமெழுதி மந்திரவசத்தில் தந்து அப்பாமந்திரி என் பாலகனுக்கு சுகுணமுடையபெண்ணை விசாரித்துக்கொண்டு வரும்படிச்சொல்லி அவருக்குவேண்டிய சகாயதிரவியங் கொடுத்தனுப்பினன்.

இப்படிருக்க சோமவதிப்பட்டணத்து வேந்தனகிய சோமசேகரன் தன் புதல்விக்கு விவாகஞ்செய்ய வேண்டுமென்று மனமிட்டு சிப்பிகளை அழைத்து இம்மாதுப்போல் படமெழுதி மந்திரிவசத்தில் கொடுத்து அப்பா-மந்திரி! நீ இம்மாதுக்குத் தகுந்த புருடனைத்தேடி வரும்படிச்சொல்லி வேண்டிய திரவியசகாயந் தந்தனுப்பினன். இதைப் பெற்றுக்கொண்டு மந்திரி புறப்பட்டு சகல தேசமெல்லாந் திரிந்தும் இம்மாதுக்குத்தகுந்த புருடன் அகப்படாமையால் பாடலீபுரத்திற்கு சமீபத்திலிருக்குஞ் சந்திராவதி நதியோரத்தில் போஜனஞ்செய்துக் கொண்டிருந்தான்.

இதுபோலாகவே நாகவர்மனுடையபடங் கொண்டுவந்த மந்திரியும் அனேகதேசந் திரிந்தும் எம்மாதும் இவனுக்குச் சமமல்லவென வெருந்து ஆயாசமடைந்து திரும்பிவருஞ் சமயத்தில் அந்த சந்திராவதிநதியோரத்தில் ஸ்தானஞ்செய்து போசனஞ் செய்துகொண்டிருந்தான். இப்படி இரண்டுமந்திரியார் அக் கரைதன்னில் ஒருவனும்



இக் கரைதன்னில் ஒருவனுமாகயிருக்க இவர்களுடன் கூடவந்த சேனைகளால் சங்கதி தெரிந்துக்கொண்டு இருவரும் ஓரிடத்தில் கூடி யோக க்ஷேமத்தை விசாரித்துக்கொண்டு இருவரும் ஒரேக்காரியமாக வந்தபடியால் அவரவரிடத்திலிருந்தப் படத்தைமாற்றிக்கொண்டு இரண்டு பேரும்பார்த்து சந்தோஷமடைந்து குலகோத்திரத்தை விசாரித்துக் கொண்டு அவரவர் பட்டணம்போக புறப்பட்டார் அவரவர் கொண்டு வந்த சித்திரபடங்களைப்பார்த்து அவரவர் வேந்தர்கள் சந்தோஷமடைந்து விவாகத்திற்கு பிரயத்தனப்பட்டார்கள்.

இப்படிருக்க பெண்வீட்டின் வேந்தனகிய சோமசேகரன் எழுதிய தென்னவென்றல் கலியாணலக்கினம் நாலுதினத்திற்கு முந்தி பதிசதியும் புறப்பட்டு விஜயஞ்செய்ய வேண்டுமென்று ஜெயசேன வேந்தனுக்கு லக்கினபத்திரிகை எழுதி அனுப்பினன் இப்படிருக்க அன்னாட்டு மந்திரியும் வேந்தனும் கொலுவுகூடத்திலமர்ந்து சந்தோஷமாக குமாரனுடைய விவாகமொழியை பேசிக்கொண்டிருக்குஞ் சமயத்தில் சேகுவர் வோடிவந்து அப்பா! ஆரோ சோமசேகரமகாராஜனிடமிருந்து வந்திருக்கின்றான். அவரை யழைத்துவரும்படிச் சொன்னல் அழைத்துவருகின்றேமென்றுச் சொன்னவுடனே வேந்தன் இம்மொழிகேட்டு சந்தோஷமடைந்திருக்க மந்திரி தான் கொலுவைவிட்டெழுந்து கொலுச்சாவடிக்கு முன்னில்வந்துசோமபட்டணத்து காவலனைப்பார்த்து அப்பா! நீங்கள் எங்கிருந்து வந்தீரென்றுக்கேட்க இம்மொழிகேட்டுக் காவலன் சுவாமீ! சோமசேகரவேந்தன் சுபலக்ன பத்திரிக்கைதந்தார் அதைத் தங்களுக்குக் கொடுப்பதற்காய் வந்தோமென சொன்னவுடனே வேந்தன் புன்சிரிப்படைந்து அக்கடிதத்தைப் பெற்றுக்கொண்டு வந்தவற்கு உபசரிக்கும்படி உத்திரவு செய்துவிட்டு கொலுவிற்குவந்து இராஜோத்தமா! இதோ லக்கினபத்திரம் வந்ததென்றுக்காட்ட வேந்தன் சந்தோஷமடைந்து வந்தவர்களுக்கு வெகுமானங் கொடுத்தனுப்பிவிட்டு சகலவிதசாமான்களை சேகரித்துக்கொண்டு புரோகித பந்துமித்திராதிகளுடன் புறப்பட்டு சோமசேகரபுரத்தின் ஓர் நந்தவனத்தில் அமர்ந்தார்கள் இதையறிந்த சோமசேகர வேந்தன் எதிர்ச்சென்றவரை அழைத்துவந்து இராஜவீதிதன்னில் ஓர் விடுதிக்காட்டி அதிலமரும்படி சொன்னர்.

இப்படிருக்க அச்சமயத்தில் சோமசேகரவேந்தன் தன்னுடன் தம்பதிலாம் அலங்காரஞ்செய்து வேதவிப்பிரவர் வேதகோஷம்பாட தம்பதி இருவரையும் அலங்காரஞ்செய்து கலியாணபந்தலுக்கு அழைத்துக்

கொண்டுவந்து சுபலக்கினத்தில் பாணிக்கிரஹனம் முடித்தார் அதன்
பிறகு சோமசேகரனிவந்தன் கோதானம், பூதானம், சுவர்னதானம்,
முதலானதானங்கள்செய்துவிட்டு சந்தோஷத்துடன் கன்னியாதானம்
செய்துதந்தார். இப்படிக் கலியாணம் நடந்தப்பிறகு, மறுநாள் நாக
வல்லிதினத்தில் குலதேவதையான சோமசேகர பகவானைச்சேவித்து
வரவேண்டுமென்று மருகனையும் புதல்வனையும் தங்கப் பல்லக்குமீதில்
உட்காரவைத்துக்கொண்டு அதிக வைபதத்துடன் கோவிலுக்குமுந்தி
பல்லக்கு நிறுத்தவே சில பிராமண சுமங்கல்ய ஸ்திரீகள் தம்பதி இரு
வரையும்கோவிலுக்குள் அழைத்துபோகுஞ் சமயத்தில் அந்தத் தேவ
ஸ்தானத்திற்கு பிரதிவெள்ளிச் செவ்வாய்க்கிழமைதினத்தில் பகவான்
சேவையடைவதற்கு ஏழு கெந்தர்வமாதர்கள் வருவது வழக்கம்
ஆகையால் அன்றைதினம் அந்தக் கோவில்தன்னில் அம்மாதர்கள்
வந்திருந்தார்கள். இந்த நரமனிதர் வருவதைக்கண்டு பின்னுக்கு திரு
ம்பிவருஞ்சமயத்தில் இந்த ரூபசவுந்தரியனைப்பார்த்து மோகமடை
ந்து இவன் மானிடனாகயிருந்தும் மானிடனல்ல நமது வம்சத்திலும்
கலந்திருக்கிறன் ஆகையால் இவனை நாம் அபகரித்துக்கொண்டு போ
கவேணுமென்று பெருமனமிட்டு ஒருவர்க்கொருவர் மொழியாடிக்
கொண்டு அங்கிருந்தவர்க்கெல்லாம் மூர்ச்சையாகும்படி மந்திர யுச்
சாடனஞ்செய்து அதன்பிறகு நரபுருடன் சமீபத்திற்குச் சென்று
அவன் நெற்றிக்கு திலதமிடவே அப்புருடன் கிளிரூபமெடுத்தான்
உடனே அம்மாதர்களிலொருத்தி அக்கிளியைப்பிடித்துபுஜத்தின்மீது
வைத்துக்கொண்டு போய்விட்டாள். அதன் பிறகு, எல்லோரும் புறப்
பட்டு இந்திரபுர மடைந்தார்கள்.

அப்போதங்கு சோகமடைந் திருந்தவர்க ளெல்லோருமெழுந்து
கண்திறந்துப்பார்க்க கலியாணப் பிள்ளைதனைக்காணமல் போனபடியா
ல் திகிலடைந்து தீவட்டிகளைக்கொண்டு எங்கும் தேடிப்பார்த்தும்
அகப்படாமல் போனதால் எல்லோரும் சோகமடைந்தார்கள். ஜெய
சேன மஹாவேந்தன் இதரால் முகத்தைப்பார்க்க வெட்கமடைந்து
அந்த மறுதினமே தன்னுடைய பரிவாரத்துடன் புறப்பட்டு தன் நக
ரம்சேர்ந்தான் இப்படிருக்க அந்த பவாணியுடைய தாய்தந்தைகள்
மருகனைக் காணமல் துக்கமடைந்து இக்குழந்தைதனை எப்படிப் பார்
த்துக்கொண் டிருப்போமென அம்மாதை சேர்த்துகட்டியழுது அய்
யோ! பகவானே! இந்தவொருபெண்ணால் வரப்பட்ட மருகனில் கியா
தி யடையலாமென்று பெருமனங்கொண்டிருக்க, இப்படியுஞ் செய்ய



ல்லாமா அபகீர்த்தியானமொழி அடையவிட்டாயேயென கண்ணீர்விட்
டழுது புதல்வியை அழைத்துக்கொண்டு தன் நகரம்போய்சேர்ந்தான்.

இப்படி தபயோகிச்சொல்லுஞ் சமயத்தில் சூரியன் மேற்குதிசை
மறைந்தான் அப்போது கதையை நிறுத்திவிட்டு சமீபத்திலிருக்கும்
பம்பா க்ஷேத்திரத்திற்குச்சென்று காலக்கடனை தீர்த்துக்கொண்டு
போஜனஞ்செய்து நித்திரைசெய்யுஞ் சமயத்தில் வேடர்களிதைப்பார்
த்து சுவாமீ! இந்த ஸ்தலத்தின் பெறுமைதனை சொல்லுமென்றுக்
கேட்க யோகிச் சொல்லத்தொடர்ந்தார்.

எப்படியென்றால் இங்கு பம்பாசரோவரம் ப்ரசித்தியானபடியால்
இதற்கு பம்பாக்ஷேத்திரமென்று பெயருண்டாச்சுது இந்த மகேஸ்வர
தீரத்தில் இருப்பதால் பரமசிவனுக்கு பம்பாபதியென்று பெயருண்டா
ச்சுது புராணத்திலும் பம்பாபதி விருபா க்ஷேஸ்வரனென்றும் எழுதி
யிருக்கிறது. இதை விருபாக்ஷ க்ஷேத்திரமென்றும் பெரியோர் சொல்
லுவார்கள். இங்கிருக்கும் மதங்க பர்வதத்தில் மதங்க மஹாரிஷி
தபஞ்செய்து இஷ்டசித்தியடைந்து தன் புதல்வியான அருந்ததிதனை
வஷிஷ்ட மகாரிஷிக்குத் தந்தார். இந்த மலைமீதிருக்கப்பட்ட மதங்கே
ஸ்வரனை சேவையடைந்தவற்கு சகல ஐஸ்வரியம் கைக்கூடும். ஆகை
யால் மதங்கவனமென்று புகழலாச்சுது துங்கபத்திராநதி இங்கு உர்ப்
பத்தியானதாலும் தபோத்தமர் தபஞ்செய்வதற்கு தகுதியான மலை
கள் இருப்பதாலும் பூர்வகாலத்தில் கோடானகோடி தபயோகர் இங்
கு வாசஞ்செய்து அவரவர் கோரிக்கைதனை பூர்த்திசெய்துக்கொண்
டார். இதற்கு சமீபத்திலிருக்கும் ருஷ்யமுக பர்வதத்தில் வாலிச் சுக்
கிரீவன் வாசஞ்செய்து கிஷ்கிந்தாநகரத்தை நியமித்துக்கொண்டு இரா
ஜ்யம் ஆண்டுவந்தார்கள். இப்படிருக்க சுக்கிரீவன் பத்தினியை வாலி
யபகரித்துக்கொண்டு போனதால் அவன் துக்கமடைந்திருந்தான்.
இப்படிருக்குஞ்சமயத்தில் ஸ்ரீராமச்சந்திரன் லக்ஷ்மண சமேதராக
வனவாசம் வருஞ்சமயத்திப் இந்தவிடத்திற்கு வந்திருக்கும்போது
சுக்கிரீவன் தூதனான அநுமந்தன் ஸ்ரீராமச்சந்திரனை சேவையடைந்த
பிறகு சுக்கிரீவன் ஸ்ரீராமச்சந்திரனை சரணுகதமடைய ஸ்ரீராமர் வாலி
யைக்கொன்று கிஷ்கிந்தானகரத்தை சுக்கிரீவனுக்கு பட்டஞ்சுட்டினார்
இந்தச்சமயத்திலும் வாலி சம்ரக்ஷணஸ்தலம் அகப்படுகின்றது. இதுவு
மன்றி சப்ததாள விருக்ஷத்தை ஸ்ரீராமச்சந்திரன் வெட்டித்தள்ளி
னதும் தெரிகிறது இதுவுமல்லாமல் இந்தவிடத்திற்கு ஓர் காததூர
மார்க்கத்தில் மர்ல்பவந்தத்தில் ஸ்ரீராமச்சந்திரன் வருஷாகாலத்தில்

வாசஞ்செய்ததுமன்றி நூற்றியெட்டு சிவலிங்கத்தை உற்பத்திச்செய்து. ஸ்ரீராமச்சந்திரன் பூஜித்தார் துங்கபத்திரா தீரத்தின் குஹைதன்னில் ஸ்ரீரங்கநாதர் சன்னிதியும் பிரகாசிக்கிறது இந்த பம்பக்ஷேத்திரத்தை தென்காசியென்று மகாரிஷிகள் சொல்லுவார்கள் இங்கிருக்கப்பட்ட துங்கபத்திரதன்னில் சப்த சமுத்திரஜலம் மஹாரிஷிகளால் வரப்பட்ட தென்று சொல்வதால் இவ்விடத்தில் மகத்துவமுண்டு இதுவுமன்றி ஸ்ரீராமசந்திரன் தன் பாணத்தால் நிர்மித்த தீர்த்தமு மிருக்கிறது. இது சுழியாக திரிந்துக்கொண்டிருப்பதால் இதற்கு சக்கிரதீர்த்தமென்று சொல்லுவார் இன்னம் ஸ்ரீராமசெந்திரன் தினந்தோறும் பம்பாசரோனதியில் ஸ்நானஞ்செய்து பம்பாவதியை சேவை செய்துக்கொண்டிருந்தார். இப்படியிருக்க லக்ஷ்மண பெருமாளுக்கு தன்னுடைய தமயன் வைஷ்ணவராக இருந்தும் சாக்ஷாத்நாராயணனாகயிருந்தும் அவர் இப்படி செய்வது தனக்கு சம்மதமில்லாமல் இருந்தது அந்த சங்கதியை ஸ்ரீராமசெந்திரன் தெரிந்துக்கொண்டு லக்ஷ்மணனுக்கு இருக்கப்பட்ட சிவகேசவ பேதத்தை போக்கடிக்க வேண்டுமென்று மனமிட்டு ஓர் தினத்தில் ராமச்செந்திரன் பம்பாசரோவ தீரத்தில் ஸ்நானஞ்செய்து தன்கணையாழியை கழட்டிகரை மீது வைத்துவிட்டு தன்னிருப்பிடம்வந்து தம்பியைப்பார்த்து தம்பி! யான் கணையாழியை பம்பசரோவதி நதிக்கரைதன்னில் வைத்துவிட்டு மறந்துவந்து விட்டேன் நீசென்று எடுத்துக்கொண்டு வாவென்றுச் சொல்ல லக்ஷ்மணமூர்த்தி அங்கு சென்றுப்பார்க்க ஓர் கல்லுமீது இருந்தது அதையெடுக்க கைக்கு வாராமல் கல்லுக்குள் புதைந்து விட்டது அப்போது லக்ஷ்மண மூர்த்திசெய்யும் சமத்காரமேதும் சாத்தியப்படாமல் போனபடியால் மறுபடியும்வந்து தமயனோடு நடந்ததைசொல்ல அப்போது தம்பியைப்பார்த்து அப்பா! நீ சென்று பம்பா தீரத்தில் ஸ்நானஞ்செய்து பம்பாவதியை சேவையடைந்து கணையாழியைக் கேட்டு பெற்று வருவாயென்றுச் சொல்லியனுப்ப அதுபோல் லக்ஷ்மண மூர்த்திசெய்ய அந்தக்கரை தன்னிலிருக்கப்பட்ட கணையாழியை எடுக்குஞ் சமயத்தில் எங்கு பார்த்தபோதிலும் மோதிரமாக பள்ளங்கள் அகப்பட்டது. அதைப்பார்த்து ஆச்சரியமடைந்து அவ்விடம் விட்டு தமயனிடம் வந்து கணையாழியைக் கொடுத்து பம்பாசரோவதீரத்தில் அனேகமான மோதிரம்போல் பள்ளம் அகப்படக் காரணமேதென்றுக் கேட்க அப்போது ஸ்ரீராமசெந்திரன் தம்பியைப் பார்த்து அப்பா! ஸ்ரீராமவதார காலம் வரைக்கும் இப்படிநடக்கிறது வழக்கம் அதுபோலாக அப்பள்ளம் அகப்படுகிறது என்றுச்சொன்



னார். ஆகையால் இப்படி மகத்வமடைந்த இந்தஸ்தலத்தை சேவையடைந்தவர்க்கும் பம்பாசரோநதியில் ஸ்நானம் செய்தவற்கும் சகல பலிதம் கைக்கூடுமென்று பிரம்மானந்தயோகி சொல்ல வேடர் கேட்டு சந்தோஷமடைந்து மறுநாள் நதிதன்னில் ஸ்நானஞ் செய்துவிட்டு போகப்புறப்பட்டார். அப்போது யோகியைப் பார்த்து சுவாமி! பவானியுடன் கெந்தர்வமாதர் அபகரித்துக் கொண்டுபோனார் அவர் சவிஸ்தாரம் கேட்டது முதல் எங்கள் மனம் பதைக்கிறது ஆகையால் அக்கதை மிகுதியை சொல்லுமையா வென்றுக்கேட்க யோகிச்சொல்லத் தொடர்ந்தார்.

# பதினேழாம் மஜிலிக்கதை.

## மாதர்க்குண நடக்கை.

கேட்டீராவேடரே! சோமசேகரன் தன்னுடைய புதல்வியைப்
பார்த்து விசனமடைந்து மருகன் எப்படி போனானென்று பெருங்
கவலையிட்டு புதல்வியை போஷித்துக் கொண்டுவந்தார். அந்தப் பவா
னிக்கு பத்துவயதானவுடனே புத்தியறிந்தாள் இதையறிந்து தாய்தந்
தைகள் துக்கமடைந்து வேடிக்கைகள் செய்யாமலும் பந்துஜனத்தி
ற்கு தெறிவிக்காமலும் ருதுஸ்நானஞ் செய்யவைத்து வீட்டிற்குழைத்
துக்கொண்டார் அப்போது மருகன்போன திசையறியாமல் விசன
மடைந்து தினமொருப்பொழுதாக காலங்கழித்தார்கள். அதன்பிறகு,
அந்தபவானி எவ்வர்னம்பக்குவ மடைந்தபடியால் மன்மதவேதை யா
ருக்கும் சொல்லாமல் தனக்குள்தானே துக்கித்துக்கொண்டு செந்திர
தென்றல்மாரனைவெறுத்து நித்திரை ஆகாரத்தையும் பூஷண அலங்கா
ரத்தையும் ரத்தினகசித மஞ்சத்தையும்விட்டு பூமியில் தன் முந்தானிப்
போட்டு படுத்துக்கொண்டு காலத்தைப் போக்கினாள். அம்மாது புரு
டனை கொண்டுப்போன ஏழு கெந்தர்வஸ்திரீகள். அவரவர் விடுதிப்பிர
காரமிருந்து ஓர் இராக்காலத்தில் ஈஸ்வரன் சன்னதிக்கு வருஞ்சமயத்
தில் பவானி சயனித்துக்கொண்டிருந்த வுப்பரிமாற்கமாகவருக. அக்
கினி யனல்போல் அனல்வீச அதிலொருத்தி ஆ! ஆ!! இங்கு இப்படி
அனல்வீசக்காரணமேதென்று மற்றவரைக்கேட்டாள் அதிலொருத்தி
இதுநோம்பு யனுஷ்டித்தமாதின் மனக்குரோதம் இது நெருப்புக்காகி
னும் அதிகமாக அனல்கொடுக்குமென்றுச்சொன்னாள். மற்றொருத்தி

அதினுமவர் ருதுஸ்தானமுதல் புருஷன்சுகமில்லாமல் விசனமடைந்து
விடப்பட்ட சுவாசமானது அக்கினிமேகத்திற்காகிலும் அதிக பெரி
தென்றுச் சொன்னாள்.

மற்றொருத்தி ஆ! ஆ! நாம் நாகவேந்தனை அழைத்துக்கொண்டு
போ யிருக்கிறோமல்லவா அவர்தேவி பதிதியானமடைந்து இந்த உப்
பரிதன்னில் வாசஞ்செய்துக்கொண்டிருக்கின்றாள். அவள் ருதுமதி
ஆகிஇப்போது ஆருமாதமாச்சுது அந்நாள்முதல் மாதாந்திரம் ருதுஸ்
தானமான தினத்தில் பதிசுகமில்லாமல் விரஹவேதனையால் மனம்
நொந் தழுகின்றாள் அவள் விரஹாக்கினி அனலானது அண்டசரா
சரம் வியாபித்து பிரபஞ்சத்தை தயிக்கச்செய்யும் முந்தி இதுபோல்
சொன்னமாது இந்தப் பாபத்திற்கு நாமே சொந்தமாகயிருந்தோம்.
நாமிதற்கு சுவாதீனமாகலாகாது பதியை அழைத்துக்கொண்டுவந்து
அம்மாது இடம் விட்டு விட்டு நாம் ஒருமையாக இருந்தால் நலமென்
றுச்சொல்ல இதைக்கேட்ட இன்னொருமாது சொன்னதாவது அக்கா!
நீங்களெல்லோரும் சொன்னது சரிதான் அந்த புருஷனை விட்ட உத்
தமபெண் அடைந்த விசனத்தை கணக்கிடமுடியுமா இது லோகத்தில்
எல்லாம் மாதருக்கு உண்டான குணந்தான் அதினால் பதிவிரதமாத
ருக்கு உண்டான துக்கமானது அதிகமாகும் ஆனால் நான் ஒருயோ
சனை சொல்லுகிறேன் எப்படியென்றால் நாமெல்லோரும் வாரத்திற்
கொருவிசை வெள்ளிச்செவ்வாயும் பகவான் சேவைக்கு வருகின்றோ
மல்லவா அச்சமயத்தில் அப்புருடனை அழைத்துக்கொண்டு வந்து
அம்மாது சமீபத்தில் விட்டு சுகமனுபவித்த பிறகு நாம் தெய்வலோக
த்திற்கு போகுஞ்சமயத்தில் மறுபடியும் அழைத்துக்கொண்டு போக
லாமென்றுச் சொல்லி இதுவுமன்றி இப்படிச் செய்தால் நாம்சுகமடை
யலாம் அம்மாதும் சுகமடைவாள் என்றுச்சொல்ல இம்மொழிக்கே
ட்டு எல்லோரும் சம்மதமடைந்தார்கள்.

இப்படி உபாயம் நமதுக்குள் நாமே தீர்த்துக்கொண்டது நலமா
குமென்றுச் சந்தோஷமடைந்து தெய்வலோகம் சேர்ந்தார், அங்கு
ஒருவாரம் சென்ற பிறகு மறுபடியும் பகவான் சேவை காணவருஞ்
சமயத்தில் நாகவேந்தனையும் அழைத்துக்கொண்டு வந்து பவாணி
இருக்கப்பட்டமேடைமீது விட்டார்கள். அப்போதெல்லோரும் சேர்
ந்து ஓ இராஜமார்த்தாண்டா; இது உனது தேவி இருக்கப்பட்ட இட
மிது தான் அம்மாதைக்கண்டு இந்த இராத்திரி சுகத்துடனிருந்து



நாலாஞ்ஜாமத்தில் எங்களுடன் வருக வேண்டுமென்று சொல்லிக்
கொண்டிருக்க அப்பொழுது சமீபத்தில் சயனகிரஹத்தில் நித்திரை
யில்லாமல் பதிதியான மடைந்திருக்கிற பவாணிமாது இம்மொழிக
ளைக்கேட்டு திடுக்கிட்டெழுந்து வெளியில்வந்து அங்கு மொழியாடிக்
கொண்டிருப்பவரைப்பார்த்து மெய்மறந்து நிற்க. இம்மாதைப்பார்த்
தந்த கந்தர்வமாதர்கள் சொன்னதாவது ஓ! மாதரசே, உன் நாயகன்
மீது இருக்கப்பட்ட பக்தியையும், மோகத்தையும், பிரயத்தையும்,
விசுவாசத்தையுங்கண்டு ஆனந்தமடைந்தோம். இதோ உன் நாயகனைக்
கொண்டுவந்தோம் உனது மன்மதவேதனைமாரி பிரீதியுடன்சேர்ந்து
இந்த இராத்திரி சந்தோஷமாகயிருந்து நாலாஞ் ஜாமத்தில் எங்கள்
பின் அனுப்பவேண்டும் நாங்கள் எங்கள் லோகத்திற்கு அழைத்துக்
கொண்டுபோகுறோம் இவ்விதமாக வாரந்தோரும் அழைத்துக்கொண்
டுவந்து மறுபடியும் அழைத்துக்கொண்டு போகுறோம். இதை இதர
மனிதருக்குச் சொல்லாமல் எங்களை ரக்ஷிக்கவேண்டுமென்றுச்சொல்லி
வேந்தனை அங்கு விட்டுவிட்டு பகவான் சேவைக்குச்சென்றார்.

காமசவுந்தர்யமுடைய பவாணி நாயகன் எதிரில்வந்து பாதங்
களுக்கு ஜலங்கொட்டி முந்தானியால் துடைத்து புஷ்பத்தால் அர்ச்
சித்து சரண கமலங்களுக்கு வந்தனம்புரிந்து இன்பத்துடன் சயன
கிரஹத்திற்கு அழைத்துக்கொண்டுவந்து ரத்தினகசிதமான பஞ்சணை
மீது அமரச்செய்து அநேகவிதமாக உபசரித்து ஓ பிராணநாதா!
என்னை விட்டு நீர்போனது முதல் நான் படுங்கஷ்டத்தை சொல்ல
முடியுமா இப்போது உமது திருமுகச்சேவைக் கண்டமாத்திரத்தில்
எனது ஜென்மமானது சாபல்யமாச்சுது நான் பாக்கியசாலியானேன்
என்மீது கருணைகடாக்ஷம் வைத்து தாமிதுவரைக்கும் அனுபவித்த
சுகத்தைப்போல் என்னுடன் இருக்க கோருகிறேன் என்றுச்சொல்ல
இதைக்கேட்ட வேந்தன் மனக்கவலையடைந்து இருக்க அப்போது
அம்மாது நாயகனைப்பார்த்து நாயகா தாம் இப்படி முகவாட்டத்து
டன் இருக்கக் காரணமேதென்றுக்கேட்க அப்போது நாகவேந்தன்
இம்மாதைப் பார்த்து ஓ பதிவிருதசுந்தரீ! உன்னுடைய செந்திரனைப்
போன்ற அழகுடைய முகத்தைப் பார்த்தமாத்திரத்தில் மனம்பதரு
கின்றது யானை கூட்டிலகப்பட்ட கிளிப்போல் கஷ்டமடைந்து கால
த்தைக் கழிக்கிறேன் அந்தசிறை விடுதலைக்காலம் எப்போ சமீபிக்
குமோ என்று பரம்பொருளாகிய சிவப்பெருமானை தியானிக்க அவர்
கருணைகடாக்ஷத்தால் என் ஜென்மம் சுகிருதமடைந்து இத்தினத்தில்

உன்னருகில் வந்தேன் இனி அவர்கள் வருஞ்சமயமாச்சுது இனி தாமதம் செய்யாமல் சுகத்தைக் கொடுத்தனுப்புமென்று கோர இதை கேட்ட அம்மாது ஓ நாயகா! நீர் இப்படிச் சொல்வது நலமாகுமா நான் எப்போதும் உன் பாதக்கமலச்சேவைக் கோரி இருக்கப்பட்டவள் உனது இச்சைதனை பூர்த்தி செய்யாமல் போவனோ என்றுச்சொல்லி நாயகன் பக்கமடைந்து அந்த இராத்திரி சாரயும் சர்பம்போலும் மதனும் ரதிபோலும் சுப்பிரமண்யர் வள்ளிபோலும் ரதிகிரீடா விலாசத்தை ஆனந்த, பூர்த்தியாக ஆடி ஆலிங்கனஞ்செய்து மன்மத விகாரத்தை தீர்த்துக்கொண்டு சந்தோஷமாகயிருந்தார். இப்படியிருக்குஞ் சமயத்தில் அந்த கெந்தர்வமாதர் ஏழுப்பேரும் நாலாம் ஜாமத்திற்கு வந்து நாகவேந்தனை அழைத்தார், அப்போது அவ்வேந்தன் நாயகியை விட்டுப்போக மனமில்லாமலும் அவரை வெறுக்க மனமில்லாமலும் துக்கசாகரத்தில் மூழ்கி இருந்தான். இதைதெரிந்து அம்மாதர்கள் வேந்தன் அருகில் வந்து நெற்றிக்கு திலதமிடவே கிளிரூபமாகிவிட்டான்.

உடனே அக்கிளியை கைமீதில் ஏற்றிக்கொண்டு இந்திரப்புரஞ் சென்றுவிட்டார், இவ்விதமாக நாலுமாதக்காலம் ரகஸ்யமாக நடந்துக்கொண்டுவந்தது இந்தசங்கதிகளெல்லாம் இதரமனிதருக்குத் தெரியாது இந்தபவானி "ஆசாசா: பரமம் துக்கம் நிராசா: பரமம்சுகம்" என்னும் மொழிபோல் இதற்குள் சந்தோஷமடைந்து தாய் தந்தைகளுக்குச் சொல்லாமல் அருகிலிருக்கும் சேடிமாரை சேர்க்காமலும் தன்னுடைய அந்தரங்கமறிந்த சேடிக்கு மிதைச்சொல்லாமல் அந்த கெந்தர்வருக்கு ஏதும் ஆபத்துவராமல் எக்காலம் தன் நாயகன் வருவானோவென்று எண்ணமிட்டு பிறருக்குச் சொல்லாமல் மவுனமாயிருந்தாள். இப்படியிருக்குஞ் சமயத்தில் பகவான் கிருபாகடாக்ஷத்தால் அம்மாது கெர்பத்தில் பிண்ட மூர்த்தியாகயிருக்க தாசிமாதர் இந்த கர்பச்சின்னத்தை பார்த்துவிட்டு பயமடைந்து வேந்தன்தேவி இதைக் கண்டாள் நம்மை ஏது செய்வாளோ இதை நாம் சொல்லாமலிருக்கலாகாதென்று பெருமனமிட்டு பவானி தாயாராகிய பட்டத்துதேவி அருகில் சென்று நடுக்கமிட்டு பயமடைந்தவள் போல் அம்மா! நாங்கள் எப்படி சொல்லுவோம் எங்களுக்கு சொல்வதற்கு நாவுவரவில்லையே என்றுச் சொன்னமாத்திரத்தில் அத்தேவி இவர்கள் முகத்தைப் பார்த்து அடி சேடிகளே நீங்கள் எதுக்கும் பயப்படவேண்டாம் உங்கள் மனதில் இருக்கும் எண்ணத்தை வெளியிடுவீரென கேட்க அப்போது சேடிகள் கொஞ்சம் தைர்யஞ் செய்துக்கொண்டு



அம்மா. தங்களுடைய புதல்விக்கு இப்போது சரீரம் பூரித்திருக்கிறது அது எப்படியென்றால் சதாகாலம் நித்திரை செய்கின்றாள் தேகம் பூரிக்கிறது பதார்த்தங்கள் பேரில் ருசி தோற்றுகிறது நேத்திரங்கள் சிறுத்திருக்கிறது ஸ்தனங்கள் பெருக்கிறது முகமானது தாவன்ய மடைந்திருக்கிறது ஆபரணங்கள் தினந்தோறும் பூஷணம் செய்கின்றாள்.

இப்படி அநேகமான குறிகள் அகப்படுகிறது இந்த விபரீதம் ஏதும் தோன்றவில்லை நாங்களும் வெகு ஜாக்கிரதையுடன் காவல் புரிகின்றோம் மனிதர் வருவதற்கும் இடம் கிடையாது இந்த சந்தர்பம் ஸ்ரீ பரந்தாமன் தான் அறியவேண்டும் இதை நீங்கள் மனப்பூர்த்தியாக சோதித்தால் நலமென்றுச் சொல்லி சேடிகள் சென்று விட்டார், பிறகு பட்டத்து தேவிக்கு கோபம் துக்கமதிகரித்து உடனே எழுந்து புதல்வியிடம் வந்து அருகில் அழைத்து முத்தமிட்டு ஓ என் செல்வப்புதல்வியே உன்புருடன் போனதுமுதல் இதுவரைக்கும் துக்கத்தில் மூழ்கி ஏதும் தோன்றாமல் எல்லாம் சந்தோஷத்தை விட்டு உனக்கு அலங்காரஞ்செய்ய மனம் வாராமல் காலங்கழித்தோம் எப்படியானாலும் உனது விசனத்திற்கு பாரமில்லை நீ இருக்கிறவரைகரும் உன்னைப்பார்த்து சந்தோஷப்பட்டு இருக்கிறோமென்றுச் சொல்லி குழந்தையை ஆலிங்கனஞ்செய்து உடனே சமாதானப்படுத்தி அப்பியங்க ஸ்நானம் செய்யவைத்து தானே அலங்காரஞ் செய்து தன் அபிப்பிராயத்தை மகளுக்குச்சொல்லாமல் பரிக்ஷித்து சேடி மாதர்கள் சொன்னது நிக்ஷயமென்று நம்பி துக்கமடைந்து அந்தப்புரஞ்சென்று அன்னபானதியை வெறுத்து கண்ணீர்விட்டு மஞ்சத்தின்மீது சயனித்துக்கொண்டாள்.

இப்படியிருக்குஞ் சமயத்தில் இம்மாது நாயகனுடன் மூன்று தினமாக மொழியாடாமலும் சாதம் தின்னாமலு மிருப்பதை சோமசேகரவேந்தன் தெரிந்து சேடிகளை அழைத்து விசாரிக்க அச்சேடிகள் நடந்ததெல்லாம் விபரமாகச் சொல்லவே இதைக்கேட்டு வேந்தன் மனக்கவலையடைந்து பட்டத்து தேவி அருகில் சென்று ஓ மாதரசே! சூரியனைக்கண்ட தாமரை எப்படி பிரகாசிக்குமோ அதுபோலிருந்த உன் முகமானது இன்றுவதங்கி சோகமடையக் காரணமென்ன அதைச் சொல்லுமென்று அருகில் அமர்ந்து கண்ணீரைத் துடைத்து அடிநாயகி நீ ஏதுக்கும் துயர்படாதே உனக்கு வந்த கஷ்டத்தைத் தீர்க்க யான் இருக்கும்போது என்னுடன் சொல்லாமல் இனியாம்

டன் சொல்லப் போகிறீரென்றுக் கேட்க இதைக்கேட்ட அம்மாது
நாயகனைப் பார்த்து ஓ பிராணவல்லபா! என் ஜென்மாந்திர பலத்தா
லல்லவா உன் கரம்பிடித்து இத்தனை நாள்வரைக்கும் ஏது அபகீர்த்தி
யில்லாமல் இருந்தேன் இப்படியிருந்தும் எந்த வியாதி வந்தபோதி
லும் தீர்த்துக்கொள்ளலாகும் மனோவியாதிக்கு மருந்துக்கிடையாது
அப்படியானப் போதிலும் அதைசொல்வதற்கு பயமடைகிறது ஆனால்
நான் சொன்னாலும் சொல்லாமல் போனாலும் அந்த விஷயத்தைப்
பற்றி அதிக கஷ்டம் சம்பவிக்கும், கண்ணாலே பார்த்தபிறகு மரண
மாகும் பரியந்திரம் சோகமென்னும் வலையில் அகப்பட்டு துயரமிடு
வதை விட மரணமடைந்தால் சுகமென்று நாயகனை கட்டிக்கொண்டுக்
கண்ணீர் விட்டழுதாள்.

இதைக்கண்டு வேந்தன் அம்மாதை சமாதானப்படுத்தி ஓ! மாத
ரசே! லோகத்தில் மனிதராக பிறந்தவுடனே சுகதுக்கமென்னும் இர
ண்டையுமடைவார். ஆகையால், நமக்கு ஏதுவந்தபோதிலும் அனுபவி
த்துதான் தீரவேண்டும். இதென்றைக்கும் விடாது நாம்தான் அனு
பவிக்க வேண்டுமென்றுச்சொல்ல இதைக்கேட்டு பட்டத்துத்தேவி ஓ!
நாயகா நாம் அனேகதினமாக தபமிருந்தும் ஓர் புதல்வியைப் பெற்
றோம் அப்புதல்வியை வெகு ஜாக்கிரதையாக போஷித்துக்கொண்டு
வந்து தகுந்த புருடனை சம்பாதித்து விவாகஞ்செய்ய வேண்டுமென்று
மனமிட்டு மூன்றுவருடமாக அநேகதேசம் திரிந்து அதிகக் கஷ்ட
மடைந்து புருடனைச் சம்பாதித்து பிரசித்தியாக விவாகம் நட
த்தினோம் சோமேஸ்வர சுவாமி சேவையடைவதற்காக போனசமயத்
தில் அவள் நாயகன் ஏதுமாய மானானோ, எங்கு பரந்தானோ, அந்தச்
சங்கதி இதுவரைக்கும் நமக்குத்தெரியாமல் துக்கமடைந்தோம் இப்
போது நமது வம்சத்தில் அபகீர்த்தி ஸ்திரமாக நிற்க காலமாச்சுது.
அந்தச் சங்கதியை தோழிகள் மூலமாய்த்தெரிந்து நான் நேரில்பார்
த்து துக்கமடைந்தேன் இந்த அபகீர்த்தியெல்லாம் கண்ணால்பார்க்க
காலமாச்சுது இதை வெளிச்சொல்லலாகாது புதல்வியை இதைக்
கேளாதப்படி தங்களுடைய மனதில் ஸ்தம்பனஞ் செய்யவேண்டியது
யென பிரபத்துடன்சொல்ல அந்தச்சமயத்தில் பூபாலன் தன்னுடைய
நாயகியை யெடுத்துக் குந்தவைத்துக்கொண்டு ஓ! நாயகி! உனதெண்
ணத்தை விட்டொழியும் விவாக காலந்தன்னில் நமது புதல்வி மாண்
டது நிஷயம். இப்போது நமதெதிரில்லாமல் அவள் பிராணம் போ
காதப்படிக்கி நம்மைவிட்டுப் பிரியும்படியான மாற்கம் தேடுகிறேன் நி
அப்புதல்வியைப் பெற்றவலல்லவென்று மனதைர்யஞ் செய்துக்கொள்



ளும் நான் புத்திரனில்லாப்பாதகன் புத்திரிகெதி இப்படியாச்சுது
எனக்கோ தளர்ந்தக்கால மாகிவிட்டது இச்சமயத்தில் நீ மரணமடை
ந்தால் என்னை போஷிப்பவர் யார்தானிருக்கிறார். ஆகையால், நீ இப்
படிச்செய்வது நலமல்ல ஏதுஞ் சங்கடமில்லாமலும் மனக்கவலை யில்
லாமல் செய்கிறேனெனச்சொல்லி அந்தப்புரம்விட்டு கொலுச்சாவடி
க்குச்சென்று மந்திரிதனையும் புரோஹிதனையும் அந்த ரங்கஸ்தானத்
திற்கு அழைத்துக் கொண்டுபோய்ச் சொல்லத் தொடர்ந்தார்.

ஓ மந்திரி புரோகிதரே! நான் பிராணம் தியாகஞ் செய்துக்கொ
ள்ளவேண்டிய காலம் சம்பவித்தது ஆகையால் ஒரு ரகஸ்யம் உங்களு
டன் சொல்ல மனமிட்டேன் அந்த சங்கதிதனை உங்களுடைய மன
தில் இருக்கவேண்டும் தவிர இதராளுக்கு சொல்லலாகாது யான்
சொல்லும்படியானக் காரியம் எனக்கு பூர்த்திசெய்துக் கொடுக்க
வேண்டியது என்றுச்சொல்ல இதைக்கேட்ட மந்திரியேதும் தோன்
றாமல் பிரமித்து நின்றார். இப்படியிருக்குஞ் சமயத்தில் வேந்தன் அவ
ரைப் பார்த்து ஓ மந்திரி எனது வம்சத்தில் அபகீர்த்தி லபித்தது
என தன் புதல்வி சவிஸ்தாரமெவ்லாம் சொல்லி யான் எனது புதல்
வியை அவளுடைய மாமன் மாமியைப் பார்த்துவரும்படி அனுப்புகி
றேன், அப்போது நீங்கள் அழைத்துக் கொண்டுபோய் நமது நாட்
டிற்கு வெகுதூரமாக யிருக்கப்பட்ட கானகத்தில் விட்டு வரும்படிச்
சொல்ல இதைக்கேட்ட மந்திரி துக்கமடைந்து வேந்தனைப் பார்த்து
ஓ இராஜோத்தமா! ஏதாவதும் கண்ணால் பார்க்காமல் மண்மீதிருந்து
பெண்ணோரஞ் சொல்வது மகா அனர்த்தமாகும் இதற்கு திருஷ்டாந்
தமாக ஒருக்கதைச் சொல்லுகிறேன் அதைக்கேளுமென்று மந்திரி
சொன்னதுபோல் யோகி சொன்னவுடனே சூரியன் அஸ்தமயமாகி
விட்டான். யோகியும் கதைதனை நிறுத்திவிட்டு சமீபத்திலிருக்கும்
(மால்பாத்ரி) அடைந்து அந்த விடத்தில் காலக்கடனை தீர்த்துக்கொ
ண்டு போஜனஞ்செய்து நித்திரை அடையுஞ்சமயத்தில் வேடர் யோகி
யைப் பார்த்து சுவாமி! இந்த க்ஷேத்திரமகிமைதனை அடியேனுக்கு
ச்சொல்லுமையா வென்றுக் கேட்க யோகிச் சொல்லத் தொடர்
ந்தார்.

கேட்டீரா வேடரே! இந்த (மால்யாத்ரி) தன்னை சாதாரணமாக
நீச்சமலையென்றுச் சொல்வார். இந்த ஸ்தலமகிமைதனை சொல்லவே
ண்டுமானால் அதிக நாள்செல்லும் ஆனால் உங்களுக்கு சூக்ஷமமாகச்
சொல்லுகிறேன். இங்கிருக்கப்பட்ட ம்ருத்திகாநதியை கேவலமான

மனிதர் மண்ணுரென்றுச் சொல்லுகிறுர், இங்கிருக்கப்பட்ட மலேமீது லக்ஷ்மி நாரசிங்கசுவாமி வாசஞ்செய்கிறுர். ஓர் காலத்தில் வைகுண்டத்தில் லக்ஷ்மிதேவி சுவாமியைப் பார்த்து லோகத்திலிருக்கும் மனிதருடைய அஞ்ஞானத்தை தீர்க்கவேண்டுமென்று மனமிருக்கிறது என்றுச்சொல்ல பகவான் ஆகட்டுமென்றுச் சொல்லி வாசயோக்கிய ஸ்தலம் வேண்டுமென்று எண்ணமிட்டு ம்ருத்திகா நதியோரத்தில் மலேயுற்பத்திசெய்து அம்மலேதன்னில் நாரசிங்க அவதாரமெடுத்து லக்ஷ்மி தேவியுடன் இருந்தார்.

அந்தச்சமயத்தில் தேவர்களால் பூஜைநிறைவேற்றிக்கொண்டிருந்தார். இப்படியிருக்குஞ் சமயத்தில், அகஸ்திய முனீந்திரன் பகவானைச் சேவையடையக்கோரி அனேகதினமாக தவம்புரிந்து இந்தத் தவத்திற்குமெச்சி பகவான் நாரசிங்க ரூபத்துடன் பிரத்தியக்ஷமாகி உனக்கெதுவேண்டுமென்றுகேட்க. அப்போது ரிஷியானவர் சுவாமி என்னல் நியமிக்கப்பட்ட தமிழ்வேதங்கள் படிகம்போல் பிரகாசிக்க வேண்டுமென்றுச்சொல்ல. அப்போது பகவான் சந்தோஷமடைந்து அப்பா தேவரிஷியே இந்த தாம்பரபரணி கரையோரத்தில் ருத்திரர் அவதரிக்க போகுரார்கள். அப்போது அவர்களால் உனது தமிழ் பாஷை பிரபந்தமாகிய வேதம் துல்யமாகும் அந்தவேதம் பூலோகமெல்லாம் வியாபித்து உன் புகழ் பிரசித்தி யடையுமென்றுச்சொல்லி வரம் தந்துவிட்டார். இதுவுமன்றி முந்தி தேவேந்திரன் தேவியான ஸசிதேவி புத்திரபாக்கிய மில்லாமல் இவ்விடத்திற்கு ப்ருஹஸ்பதியுடன்வந்து வையாசிமாதம் சனிக்கிழமை தினத்தில் பகவானுக்கு உபவாசமிருந்து ஜயந்துயென்னும் புத்திரனைப் பெற்றுள்.

இப்போதுப் வையாசிமாதம் மூன்று சனிவாரம் மாவு ஆராதனை செய்து நாரசிங்க மூர்த்தியை பூஜைசெய்பவருக்கு சகலவித சம்பதைகள் கைக்கூடும் புத்திரரை பெறுவார் இதுவுமல்லாமல் இந்திரவாகினென்னும் வேந்தன் ஐராவதியென்னும் சுந்தரியான தாசியுடன் கூடி சுகித்துக்கொண்டு இராஜ்யத்தை மறந்து தன்னிச்சையாக திரிந்துக்கொண்டிருக்குஞ் சமயத்தில் மறுவேந்தர் இராஜ்யத்தைப் பிடித்துக்கொண்டார், இப்படி சிலதினத்திற்கு அனுபவிப்பதற்கு காசில்லாதப் படியால் தாசிமோகத்தில் உட்பட்டு இப்படியாகி விட்டதென துக்கமடைந்து அவளை விட்டுவிட்டு காசிக்குச்சென்று கோரதபஞ்செய்யுங் காலத்தில் அங்கு சுவாமி தளர்ந்த பிராமண ரூபத்துடன் வந்து நீ மால்யத்திற்குச் சென்று வையாசிமாதம் சதுர்த்தசி சனிவாரத்தில்



(நாரசிங்கஜயந்தி) அப்போது நரசிங்கனை பூஜித்தால் இராஜ்யம்கைக்கூடுமென்றுச்சொல் அவன் அப்படியே வந்து அந்த தினத்தில் உபவாசமிருந்து சுவாமியை சேவையடைய மறுப்படியும் இராஜ்யம் லபித்து சுகமாக யிருந்தான், இதுவுமல்லாமல் (சுஸ்ரவன்) என்கிற வேதியன் சுகிர்தியென்னும் மாதைக்கலியாணம் செய்து தபோநிஷ்டனுக இருந்தான், இப்படியிருக்க சுகீர்த்தி புத்திரவாம்சை யடைந்து கணவனை சுகத்திற்குகோர அவர் வியர்த்த சித்தமடைந்தார். அப்போது சுகீர்த்தி மால்பபர்வத்திற்குச் சென்று நரசிம்ம தீர்த்தத்தில் ஸ்தானஞ்செய்து பகவானைக்கோரி தவம்புரிய பகவான் சுஸ்சரவுபோல் ரூபமெடுத்து அம்மாதுடன் சுகிக்க சந்தானமுண்டாச்சுது அதைப் பார்த்து வேதியன் கோபமடைய பகவான் பிரசன்னமாக வந்து மனக்கவலேதனை தீர்த்து வரந்தந்தார்,

ஆகையால் புத்திரபாக்கியம் வேண்டுபவர்க்கு புத்திரலாபம்கைக்கூடும் இங்கு ஜலமில்லாதப்படியால் பகவான் நெகத்தால் கீர தீர்த்த முண்டாச்சுது அதுமுதற்கொண்டு நாரசிங்க தீர்த்தமென்றுச் சொல்வார் இதுவுமல்லாமல் விசித்திரனென்னும் கெந்தர்வன் கெங்காநதிதன்னில் கோபிலமகாமுனி தேவியான கோமதிஸ்தானம் செய்யும் போது மோகிக்க அப்போது அம்மாது அந்தக்கந்தர்வனை மச்சமாக போகக் கடவாயென்று சாபந்தந்தாள், அப்போது அவன் என்சாபம் நிவாரணம் செய்யவேண்டுமென்று துயர்பட அடா பாதகா உன்னை கருடன் எடுத்துக் கொண்டுப்போய் மால்யாத்திரி நரசிங்க தீர்த்தத்தில் போட்டால் உன் நிஜரூபம் லபிக்குமென்றுச்சொல்ல அதுபோல் கருடன் இந்த மச்சயத்தை எடுத்துக்கொண்டு மால்யகிரி நரசிங்க தீர்த்தத்தில் போட நிஜரூபந்தரித்தான், இதுவுமல்லாமல் இந்திரன் பலசக்கிர வர்த்தியால் இராஜ்யம் கொள்ளையடிக்க ப்ருஹஸ்பதி ஆக்கினைப்படி மால்யாதிக்கு வந்து தீர்த்தம் உற்பத்தி செய்து அதில் தபஞ்செய்ய பகவான் சந்தோஷமடைந்து வாமனயவதாரம் தரித்து பலியை பாதாளத்திலடக்கி இந்திரனுக்கு இராஜ்யம் தந்தார், ஆகையால் இந்திரதீர்த்தத்தில் ஸ்தானம் செய்தவற்கு இஷ்டார்த்தம் கைக்கூடும் பூர்வகாலத்தில் 'வருணன் என்னும் முனி நரசிங்க தீர்த்தம் பூர்வபாகத்தில் ஸ்தானஞ்செய்து தனக்கு புத்திரன் வேண்டுமென்று அதிவருஷமாக தபஞ்செய்ய பகவான் சந்தோஷமடைந்து அவருக்கு புத்திரபாக்கிய மளித்தார்.

அப்போது, வருனனுக்கு ப்ருகுமரிஷி ஜன்மித்து உலகமுழுதும் கியாதியடைந்தான். இந்த வருணதீர்த்தத்தில் ஸ்தானஞ்

செய்தால் நல்ல சுகுணபுத்திரன் ஜனிப்பான். பூர்வகாலத்தில்
கபிலமகாமுனிவன் பாதாளலோகத்தில் தபஞ்செய்யும்போது சகர
புத்திரர் அஸ்வத்தைத் தேடிக்கொண்டுவருக. தபோபங்க மாச்சுதெ
ன்று அவரை கோபக்குறியுடன்பார்க்க நாற்பத்தாயிரம்பேர் மடிந்
தார். அப்போது கபிலமுனிவன் இந்தப்பாவந் தீர்த்துக்கொள்ள
மால்யகிரிக்குவந்து நரசிங்க தீர்த்தத்திற்கு வடமூலையில் நின்று ஸ்தா
னஞ்செய்து தபஞ்செய்தார். அப்போது பகவான் சந்தோஷமடைந்து
சுதர்சனமாகவந்து எதிரில் நின்று பாபத்தை நிவர்த்திச்செய்தார்.
இந்தக் கபிலதீர்த்தத்தில் ஸ்தானஞ்செய்தால் அத்திதோஷங்கள்
தீரும். இந்திரத் தீர்த்தத்தில் மேற்கு அகஸ்தியமுனிவர் அனேகவரு
ஷமாக தபஞ்செய்து பகவானைச் சேவித்தார். இப்போது அகஸ்திய
தீர்த்தத்தில் ஸ்தானஞ் செய்பவர்கட்கு நிஜரூபமாக பகவான் பிரத்தி
யக்ஷ மாகின்றார். இதுமல்லாமல்! சங்கரனென்னும் முனீந்திரன் இந்
த தீர்த்தத்திற்கு மேற்குமூலையில் நின்று கோரதபஞ்செய்ய பகவான்
சந்தோஷமடைந்து நீ கோறியவரம் ஏதென்றுக்கேட்க. அப்போது
பரமபதவாசனை கோறினன். அதுபோல் பகவான் அநுக்கிரகித்தார்.
இப்போதந்தத் தீர்த்தத்திற்கு சங்கரதீர்த்தமென்று பெயருண்டாச்
சுது. இதுவுமல்லாமல் இந்திர தீர்த்தத்தின் மத்தியில் பகவான் இந்
திரனுக்கு பிரத்திபக்ஷமானபடியால் அதற்கு ஜோதி தீர்த்தமென்று
பெயருண்டாச்சுது. அந்தத் தீர்த்தத்தில் ஸ்தானஞ் செப்பவருக்கு
பகவான் ஜோதிஸ்வரூபமாக சேவைதருவார். இதுவுமல்லாமல் லக்ஷ்
மிதேவி பர்வதத்தில் மனக்கவலை தீர்த்துக்கொள்ள ஞாயிற்றுக்கிழமை
தினத்தில் அங்கு ஓர் தீர்த்தகுண்டத்தை உட்பவிக்கச்செய்தாள்.
அதில் ஸ்தானஞ்செய்து கல்மிஷத்தை தீர்த்துக்கொண்டாள். அந்த
லக்ஷ்மி தீர்த்தத்தில் ஸ்தானம் செய்பவருக்கு சகல சம்பதைக் கைக்
கூடும் இதுவுமல்லாமல் சாரதுண்டென்னும் வேதியன் தன்னுடைய
பத்தினி ருதுமதியானப்படியால் சாந்தி செய்துக் கொள்வதற்காய்
போகும் மார்க்கமத்தியில் ஒரு பிரம்ம இராக்ஷசன் வேதியனைப்பார்
த்து சிரிக்க அதைப் பார்த்து நீயேன் சிரிக்கிறாய் என்றுக் கேட்க,
அதற்கு அவன உன்தேவிக்கு தளர்ச்சிவயது வராமலும் உனக்கு
மரணமில்லாமலும் இருக்கும்படியான உபாயம் சொல்கிறேனென்று
அந்த பிரம்மராக்ஷசன் சொன்னதாவது அடா பயித்தியனே நீயும்
உன்தேவி இருவரும் மால்யகிரிக்குச்சென்று சங்கரதீர்த்தத்தில் ஸ்தா
னம் செய்தால் உன் தோஷம் தீருமென்றுச் சொல்ல அதுபோல்
அந்த வேதியன் செய்து சுகமடைந்தான் என்று யோகிச்சொல்ல



வேடர் கேட்டு சந்தோஷமடைந்து யோகியுடன் சகல வித தீர்த்தங்
களில் ஸ்தானஞ்செய்து நரஹரியை சேவித்து அங்கிருந்துப் புரப்பட்
டுப்போகுஞ் சமயத்தில் வேடர்கள் பிரம்மானந்த யோகியைப்பார்த்து
சுவாமி பவாணி விஷயமாக சோமசேகரனுக்கு மந்திரிச்சொல்லத்
தொடர்ந்த கதைதனை சொல்லவேண்டுமென்று கேட்க யோகி சந்தோ
ஷமடைந்து சொல்லத்தொடர்ந்தார்.

# பதினெட்டாம் மஜிலிக்கதை.

## யோசனையில்லாதக்காரியம்

### மந்திரிச்சொல்லும்கதை.

கேளுமப்பா வேடரே! மத்தியமாவதியென்னும் ஒரு பட்டண
மூண்டு அந்தப் பட்டணத்தை சோமசுந்தரனென்னும் வேந்தன் பரி
பாலித்துக்கொண்டு வந்தான் அவ்வேந்தனுக்கு திரிலோகசுந்தரியென்
னும் ரூபசவுந்தர்யமுடைய புதல்வி இருந்தாள், அப்புதல்வி விநோத
மாக காலத்தைக்கழிக்க ஓர் அழகுடையகிளியை வளர்த்துக்கொண்டு
வந்தாள் அந்தக் கிளியானது அனேகபாஷைகள் கற்றிருந்தது, அந்த
க்கிளி இந்த இராஜபுதல்விக்கு விநோதமான கதைகள் சொல்லி அம்
மாதுக்கு பதிவிரதா தர்மத்தை முக்கியமாய் போதித்துக் கொண்டும்
இப்படி தினந்தோறும் சந்தோஷஞ் செய்துக்கொண்டிருக்க அம்மாது
இந்தக்கிளிமீது பிரியம் வைத்து அதற்கு தினமும் பாலுசாதமும்
கோவைப்பழம் வைத்துக்கொண்டு அது வெளியில் போகவேண்டு
மென்று கோருஞ்சமயத்தில் கிளியைவிட அக்கிளி தன் கூட்டத்தாரு
டன்சேர்ந்து சந்தோஷமாக ஆடிப்பாடி வருவதுவழக்கம் இப்படியிரு
க்குஞ்சமயத்தில் ஓர்தினம் அந்தக்கிளியானது தன் கூட்டத்தாருடன்
கூடி நெடுந்தூரஞ்சென்று அந்த இராத்திரி வீடுவந்து சேர்ந்து இராஜ
புதல்வியுடன் சொல்லத்தொடர்ந்தது, அக்கா! என் சிநேகிதரெல்லோ
ரும் நாளையதினம் ஹிமவத்பர்வதத்திற்கு போக எண்ணமிட்டிருக்
கிறார் என்னை வரும்படி பலவத்காரஞ் செய்தார்கள், ஆகையால் நான்
போய் வருவதற்கு உனக்கு சம்மதமா! எனக்கு உத்திரவு தருவாயா
என்றுக்கேட்க இக்கிளியுடைய மிருதுமொழியைக் கேட்டு இராஜபுத
ல்வி சந்தோஷமடைந்து காவலாளிகளால் தான் கொண்டுவந்த பழங்
களைக் கொடுத்து முத்தமிட்டு அம்மா உன்னைப்போலொத்த சிநேகித
ருடன் கலகம் செய்யாமல் விரோதத்தை யடையாமலும் அதிக ஜாக்

கிரதையுடன் இருந்து நாளைசாயந்திரம் வீடு வந்து சேரும் உன்னை
விட்டு அரை நிமிடமாகிலும் பிரிய மனங்கொள்ளேன் இதுவுமல்லா
மல் துர்மார்க்கரான வேடர் உங்களைப்பிடிக்க எண்ணமிட்டுவலைவீசி
யிருப்பார் ஆகையால் ஆகார யபேக்ஷைபடைந்து நீயாகிலும் உனது
நேசராகிலும் அந்த வலைபருகில் செல்லாதீரென்று அநேகவிதமான
புத்திகள்சொல்லி அனுப்பிவைத்தாள்.

அதன்பிறகு அந்தக்கிளியானது தன்னுடைய இனத்துக்கிளிக
ளுடன் கூடி மறுநாட் உதயத்திற்கெல்லாம் புறப்பட்டு ஹிமவத்கிரி
பர்வதம் சேர்ந்தது அந்த மலைச்சாரலில் இருக்கும் வனத்தில் மகா
தபயோகியான ஓர்யோகி யோகப்யாசத்திலிருக்க அவருடைய தப
மகிமையால் அந்தக்கானகம் நந்தவனத்திற்கு சமமாக அநேகவித
புஷ்பத்தாலும் அநேகவித பழவகைகளாலும் நிறைந்து விருக்ஷங்க
ளால் சூழ்ந்திருப்பதால் விநோதகரமாக அக்கானகம் தோன்றப்படி
யால் அந்தக் கிளிகளெல்லாம் அந்த வனத்திலிருக்கும் பழங்களை தின்
பதற்கு அபேக்ஷையடைந்து ஒவ்வொரு விருக்ஷத்தின் கிளைகள் மீது
ஒவ்வொரு பக்ஷியாக அமர்ந்தது அந்த சமயத்தில் திரிலோகசுந்தரி
யுடைய சம்ரக்ஷணை தன்னிலிருந்தக் கிளியானது மற்றக்கிளிகளைப் பார்
த்து ஓ எனது நேசர்களே! இந்த வனத்தில் யோகியிருக்கின்றார்,
அவர் தபோபலத்தால் இங்கு விருக்ஷங்கள் காலத்தில் புஷ்பம் பூர்
த்து பழம்பழுத்து இருக்கிறது அவர் உத்திரவுபெற்று நாம் பழத்தை
தின்றால் போக்கியமாகும் அப்படி செய்யாமல் தின்றால் அவர் கோப
மடைந்து சபித்தால் கெதியென்ன அதிசீக்கிரத்தில் துட்காரியத்தைச்
செய்து துட்பலத்தை அனுபவிப்பதை விட நாம் எல்லோரும் கும்ப
லாகச்சென்று அவர் உத்திரவடைந்து இக்காரியம் செய்ய நலமாயி
ருப்பதாக என்மனம் தோற்றுகிறது அதின்மேல் உங்களுடைய மனம்
எப்படியோ சொல்லுமென்றுக் கேட்க இதற்கு சம்மதிக்காமல் மனம்
வந்ததுப்போல் கூச்சலிட்டு பழத்தைப்புசிக்க பிரவேசிக்கும் சமயத்
தில் இராஜபுதல்வி கிளியானது பயமடைந்து தபயோகி உத்திரவு
யடைய மனங்கொண்டு அவருடைய எதிரில் உட்கார்ந்திருக்க அந்தச்
சமயத்தில் ஏககாலத்தில் ஆயிரங்கிளிகள் கூச்சலிட அதைக்கேட்டு
ஞானபங்க மடைந்தோமென்று கோபம்பிறந்து கண்ணைத்திறந்துப்
பார்க்குஞ் சமயத்தில் இராஜபுதல்வி கிளியானது வந்தனஞ்செய்து
சுவாமீ! நாங்கள்பக்ஷிஜாதி புத்தியில்லாதவர்கள் தங்களுடைய கோப
த்திற்கு எம்மாத்திரம் எங்களுடைய பிழைதனை பெருமனஞ்செய்து



ரக்ஷிக்கவேண்டுமென்று பிரார்திக்க இதைக்கேட்ட அந்தயோகி சந்
தோஷமடைந்து தன் அருகில் இருந்த கோவப்பழத்தை மந்திரித்து
ஓ் கிளியே! உன்னுடைய மிருதுமொழிக்கும் குணத்திற்கும் சந்தோஷ
மடைந்து இந்தப்பழத்தைத் தந்தேன் இதை நீ புசித்தால் உன்னுட
விர்த்தாப்பிய வயதுப்போக்கி எவ்வர்னவயது லபித்து சுகஜீவியாக
இருப்பாயென்றுச் சொல்ல இதைக் கேட்டக்கிளி அந்த தபோதன
ருக்கு வந்தனஞ்செய்து பழத்தை எடுத்துக்கொண்டு தன்னுடைய
கிளிக்கூட்டத்துடன் சேர்ந்து சாயந்திரம் வீட்டிற்கு வந்து கொண்டு
வந்த பழத்தை இராஜபுத்திரி எதிரில் வைத்து அதினுடைய சவிஸ்
தாரத்தைச் சொல்ல அம்மாது ஆச்சர்யமடைந்து அந்தப் பழத்தை
விருதாப்யமடைந்த தன்னுடைய தந்தைக்கு தந்தாள், அவர் ஆலோ
சித்து நாமொருவனே புசித்து கோடிகாலமிருந்தும் இதரமானவர்க
ளாகிய தேவிப்புதல்வி பரிவாரம் முதலானவர் மடிவதுக்கண்டு துக்கப்
படுவது நலமாகுமா என இராஜ்யத்தில் இருப்பவர் பாலதிசையடை
ந்து சிலகாலம் ஜீவித்து சுகமாயிருந்தால் எனக்கு சந்தோஷமென்று
நிச்சயித்து தன்னுடைய மந்திரிதனை அழைத்து இந்தப்பழத்தை என்
னுடைய நந்தவனத்தில் புதைப்பீர் இந்தப்பழம் செடியாகி பூப்பூர்
த்து காய்காய்த்து பழுக்குஞ் சமயத்தில் என்னுடன் சொல்லவேண்டு
மென்று அந்தப் பழத்தை மந்திரிக் கையில் கொடுக்க அந்த மந்திரி
வேந்தன் உத்திரவுப்போலாக புதைத்து நித்தியமும் பால்ஊற்றி வள
ர்த்துக்கொண்டு வந்தார், இப்படியாக வளர்ந்த மரமானது விர்த்தி
யடையுஞ்சமயத்தில் அந்தச்செடியின்கீழ்பாகத்தில் சர்பம் வாசஞ்செய்
துக் கொண்டிருந்தது இப்படியிருக்க அந்தச்செடி தன்னில் பழுத்த
பழம் தன்னையறுத்துக் கொண்டுபோய் வேந்தனுக்கு கொடுக்க இதை
ப்பார்த்து வேந்தன் இந்தப்பழத்தை பரிக்ஷிக்கவேண்டுமென்று மனமி
ட்டு அந்தக் கொலுவிலிருந்த குரங்குக்குக் கொடுக்க அது தின்றமாத்
திரத்தில் மரணமடைந்தது அப்போது வேந்தன் தன் புதல்வியை
அழைத்து அம்மா! உன் கிளிக்கொண்டுவந்த பழம் தின்று குரங்கு
செத்தது என்றுச்சொல்ல இதைக்கேட்டு கோபம் பிறந்து திரிலோக
சுந்தரி ஓடிவந்து கூட்டிலிருந்த கிளியை யோசிக்காமல் அதின்கழுத்
தைப் பிடித்தழுத்திவிட்டாள்.

இதுவுமில்லாமல் அந்தக் கிராமத்தில் ஒரு ஏழைபிராமணன் நா
யகி புத்திரருடன் சுகமாக ஜீவித்துக் கொண்டிருக்க ஒரு சமயத்தில்
இந்த வேதியனுடைய தந்தை மரணமடைய அவன் தேவியான தர்ம

பத்தினி தளர்ச்சி வயதானபடியால் கர்மவிசேஷத்தை மனதில் நாட்டமிட்டு சந்தன புஷ்பாதிகளை வெறுத்து நார்மடியை தரித்து விஷ்ணு நாம சங்கீர்த்தனைகள் ஜபித்துக் கொண்டு மோக்ஷசாதனை மார்க்கம் தேட எத்தனமடைந்தாள்; இப்படியிருக்க இம்மாதுடன் மருமகள் ஒரு தினத்தில் தன் கணவனை தூஷித்து கையாலாகாதவ னென்று நிந்தித்து கணவன் மீது மனம் வெறுத்து அலக்ஷயமாக இருப்பதை தெரிந்து மருமகளை யழைத்து ஓ எனது குலநாயகியாக வந்த மருமகளே! நீயோ மகாபதிவிருதா சிகாமணி இத்தனைநாள் இல்லாத துர்மதி உனக்கிப்போ ஏன் வந்தது, நான் உன் சுகுணத்திற்கு மெச்சி நீ செய்யும் சன்மானத்திற்கு சம்மதமடைந்தேன் எனது வீட்டின் வேலையெல்லாம் உனக்கே காட்டி தந்துவிட்டேன் எனது ஜன்மாந்திர கர்மவசத்தால் எனக்கு லபித்த விருதாப்யஜென்மம் கூடியபடியால் இந்த சமுசாரத்தை வெருத்தேன் தபோநிஷ்டை யடைந்தேன், ஆகையால் நீ இந்த சமுசாரசிந்தைதனை வெருத்தால் உன் புருஷால் புத்திரர்கெதி எப்படியாகும் தாரித்திரயம் ஒருவர் பங்கல்ல அவரவருடைய ஜன்மபலத்தால் லபிக்கும், மாதருக்கு பதிநிந்தனை விட விசேஷமான பாதகமேதுமில்லை பதியை நிந்தித்தவற்கு நல்கெதி கிடையாது, அது வெப்படி யென்றால் நான் சொல்லும் மதியைக் கேளென்று சொல்லத் தொடங்கினாள்.

(சுலோகம்.)

கார்யேஷு தாசி கரணேஷு மந்திரி
ரூபேசலக்ஷ்மி க்ஷமயாதரத்ரி
போஜ்யேஷு மாதா சயநேதுவேஸ்யா
ஷட்கர்மயுக்தா குலதர்மபத்தினி.

என்னும் மொழிபோல் தாசிமாதர் எப்படி ஓர் புருடனை சந்தோஷப்படுத்துகிறாளோ அதுபோல் பதியிடத்தில் மாதர் நடக்கவேண்டும். மந்திரி வேந்தனுக்கு எப்படி நீதிப்போதிக்கிறாளோ அதுபோல் மாதர்கள் புருடனுக்கு ஞானநிதியை போதிக்கவேண்டியது அலங்கார யுக்த மடைந்திருக்க மாதரான நம்மால் செய்யப்பட்டதை குற்றமென்றால் அதை நாம் மன்னித்து ஆதரிக்கவேண்டியது. ஒரு சமயத்தில் வித்யாசமடைந்து அவன்மீது வெறுத்தால் அதை க்ஷமித்து தாயார் புதல்வனுக்கு இருக்கப்பட்ட அந்தரங்கமறிந்து விஸ்வாசத்துடன் போஜனமிட்டு எப்படி போஷிப்பாளோ அதுபோல் பதியைப் போஷிக்கவேண்டியது தாசியெப்படி சுகமிடுவாளோ அதுப



போல் நாயகனுடன் சுகபோகம் அனுபவிக்கப்பட்ட மாதருக்கு தர்மபத்தினி யென்று பெயருண்டாகும் நீ கேவலமாகிய சிறுவயதானப்படியால் உனக்கு சுகதுக்கமென்பது இன்னதென்று தெரியாது லோகத்தில் பதிவிருதமாதருக்கு தெய்வமே கிடையாது தன்பதியே தெய்வமாகும் அநேக விதமான தபம் செய்தபோதிலும் பதிசேவைக்கு சமானம் ஏதுங்கிடையாது சற்கதிபதிதான் சாமம் பதிதான் மோக்ஷம் பதியால் தான்கிட்டும் இதுவுமல்லாமல் பதியானவன் ரூபவந்தனாலும் குருபியானாலும் தனவந்தனாலும் தாரித்திரனாலும் ராக்ஷசகுணவந்தனாலும் குணஹீனனாலும் வித்வாமிசனாலும் குக்ஷியானாலும் பலிஷ்டனாலும் துர்பலனாலும் ரோகியானாலும் ரோகரஹிதனாலும் ஆசாரப் புருடனாலும் அநாசாரப்புருடனானாலும் தாளவனாலும் தயாசூன்யனாலும் பதிமீதில் தர்மார்த்தகாமமோக்ஷத்திற்கு மனதிடமாக எந்த நாயகிபதி சேவை செய்வாளோ அந்த நாயகியுடைய மாங்கல்யம் பூர்ணமாகி வைகுண்டமடைந்து லக்ஷ்மீ தேவியுடன் கூடி சகல பாக்கியம் அனுபவித்தால் நான் எந்த ஜென்மத்தில் பதியை நிந்தை செய்தேனோ இதோ இந்தஜென்மத்தில் அமங்கல்ய ஸ்திரீயாக யிருக்கிறேன் ஆகையால் நீ பதியை தூஷிக்காமல் பதிக்கு ஊழியம் செய்துக்கொண்டிரும் உன்னுடைய ஜென்மாந்திர பூஜாபலத்தால் உனக்கிந்த ஜென்மத்தில் பதியகப்பட்டிருக்கிறார், இந்த ஜென்மாந்திரத்தில் நீ சம்பாதித்த பூஜாபலத்தால் பதிலபித்தார், இப்போது இந்த சோரத்வமாதருடன் சேர்ந்து துற்போதனை கேட்டு இந்த லோகத்தில் அபகீர்த்தியும் பரலோகத்தில் சவுக்கியத்தையும் விட்டு இருக்காதப்படி இப்படி அநேகமான நீதிவசனங்கள் சொல்லி புத்திபோதித்தாள்.

இப்படி போதித்தும் அந்த பெண்மாது சகவாச தோஷத்தால் கெட்ட நடைக்கைதனை கைக்கொண்டு வீட்டிலிருக்கும் மாதருடன் விரோதம் செய்வதும் தன் மனம் வந்ததுப்போல் திரிந்துக்கொண்டிருக்க இதைக்கண்ட அந்தத்தெருவு தன்னிலிருக்கும் அயல் வீட்டின் காரி ஒருத்தி இம்மாதைப்பார்த்து ஓ மாதரசே! உனக்கு சுயபுத்திக் கிடையாது நல்ல நடைக்கை நடக்க புத்தியும் பற்றாது எப்போதும் இடைவிடாமல் கெட்டவருடைய நடக்கைதன்னில் சிநேகிதம் செய்கிறாய் வீட்டின் சமுசாரத்தை வெறுத்து நிற்கிறாய் எந்தமாது சமுசாரத்தை வெறுத்து அதனைசெய்யாமலிருந்தால் அந்தவீடு விருத்தியடையமாட்டாது, நமக்காக புருடர் நானாவிதமான கஷ்டத்தை அனுபவிப்பார், எப்படி திரேகத்தை ஓரடியாகச்செய்து இதாளுடைய கைவே

லைதனை நாம்செய்து நாயகரை போஷிக்கவேண்டியது அப்படிபோஷி
க்கப்பட்டவர் நாம் சந்தோஷ வசனமாடாமல் விரோதம் செய்தால்
பிரயோசனமென்ன வீட்டில் பதார்த்த மில்லாமல்போனால் சமயமறி
ந்துச் சொல்லவேண்டியது அப்படியில்லாமல் சிநேகிதரோடு விநோத
மாக மொழியாடுஞ் சமயத்திலும் பசியெடுத்து போஜனம் செய்யும்
காலத்திலும் சொல்லலாகாது அவர் மனதே நாமே விகல்பம் செய்ய
லாகுமா? உன் நடைத்தைகள் யுக்தமானதல்ல நான் சொல்லும் புத்தி
தனைக் கேட்டால் உனக்கு பதவிகிட்டும் உன்னால் உன் புருஷனுக்கும்
மரியாதைக் கிடைக்கும் இப்போது உன் அல்பபுத்திதனை விட்டொழி
யும் உன் புருஷனுக்கு எதிர்மொழி யாடலாகாது நீயடங்கி நடந்தால்
உனக்கு சுகமுண்டாகும் நீயவரை கேவலமாக்கி அல்பமாகப் பார்க்
கின்றாய் அவர் சொல்வதை தடுக்கின்றாய் உன்மனம் வந்ததுப்போல்
காரியம் செய்கிறாய் அவர் கஷ்டமடைந்து கொண்டுவந்த பொருளைக்
கொள்ளை செய்கிறாய் மானபிமானத்தை யோசிக்காமல் மொழியாடு
கின்றாய் வெட்கமதை ஒழித்து வீடோய் புகுந்துக்கொண்டு கால
மறிந்து சமயல் செய்யாமல் வீட்டிற்கு வந்தவரை ஆதரனை செய்யா
மல் அவர் மனதை வெருக்கும்படி நடத்தியதால் உன்னை வெருத்து
உன்மீது கோபம்சொல்லி உன்னை தண்டிக்க காரணமாச்சுது அவர்மீது
நாம் எப்போதும் தோஷம் நினைக்கலாகாது நீ தான் கெட்ட நடை
த்தை அனுசரிக்கின்றாய் அவர்மீது ஏதும் தோஷம் கிடையாது நிஷ்
காரணமகாபதி நிந்தையடைத்து சற்கதியை போக்கடித்துக் கொள்
ளாதே நீ அவர் மனம்போல் நடந்தால் உன்னை வெறுக்கமாட்டார்
புருடர் இச்சைப்போல் நாம் நடக்கவேண்டியது தவிர அவர் ஒரு
போதும் நமது இச்சையாக நடக்கமாட்டார், நான் சொன்னால் உன
க்கு கோபமுண்டாகும் ஆனாலும் பெரிதல்ல நீ உனது நாயகன் குண
நிசயத்தை தெரியாமல் அயல் வீட்டுக்காரி சம்பதையடைந்தாள் அது
போல் நீயுமிருக்கவேண்டி இதுவது வேண்டுமென்று போராடினாள்
அவர் எங்கிருந்து கொண்டுவந்துக் கொடுப்பார். இப்படிருக்க
நீயேதும் ஆலோசிக்காமல் அடஞ்சாதித்தால் அவர் ஏதுச்செய்கு
வார் நீ கோரியதெல்லாம் கொண்டுவந்துக் கொடுக்க சக்தியுண்டா
குமா! தரித்திர தோஷத்தால் கோபமடைந்து உன்னை அடிப்பான்
அவர்மீது ஏதும் தோஷமில்லையென்றுச் சொல்லி அம்மாது தன்வீட்
டிற்குப் போகிறவரைக்கும் ஒன்றும் பேசாமல் மவுனமாகயிருந்து
பிறகு இத்தனையும் சொன்னாளே அவர்களுக்கு ஏதுத்தெரியும் நல்லக்
காலத்தில் நல்ல சேலைக்கட்டியறிந்தேனே கையில், வளையலிட்டேனே



இப்படிக்கொற்ற நிர்பாக்கியனைப் பிடித்து நிட்பலமாக யிருக்கின்றேன்
சாகிரவரைக்கும் சனிப்பிடித்திருந்தால் சுகப்படுவது எக்காலம் இங்
தப்பாதகன் தரித்திரம் சாகிரவரைக்கும் விடாது என்றுச்சொல்லி
அடஞ்செய்துக் கொண்டிருந்தாள்.

இப்படியிருக்க அந்த வேதியன் தானே சமயல் செய்துக்கொ
ண்டு பாலகருக்கிட்டு தாயுக்கும் வட்டித்து தானும் தின்று தான்செய்
யும்படியான தொழிலுக்குச் சென்றான் கொஞ்சம் பொழுதுபோகவே
அவள்மாமி பச்சாதாபமடைந்து மருமகளை போஜனத்திற்கு எழுப்ப
அவள் எழுந்து மாமியுடைய மாரிலுதைக்க அக்கிழவி மூர்ச்சையாகி
பூமியில் விழுந்தாள். அந்த சமயத்தில் பாலகர் பார்த்து பயமடைந்து
தந்தையருகில் சென்று ஓ தந்தையே! எங்கள்தாயானவள் பாட்டியை
யுதைக்க அம்மாது மரணமடைந்தாள், என்றுச் சொல்ல இதைக்கே
ட்ட வேதியன் அந்தப் பாலகரை எடுத்துக்கொண்டு ஓட்டமாக வீட்
டிற்கு வந்துப்பார்க்க தன் தாயானவள் மூர்ச்சையாக விழுந்திருப்ப
தைப் பார்த்து சைதோபசாரஞ் செய்து அம்மாதின் மூர்ச்சை தெளி
யச்செய்து அம்மாதால் நடந்த சங்கதியெல்லாம் தெரிந்துக்கொண்டு
மனைவினிடத்திற்குச் சென்று அடிசண்டாளி! நீயென் மானம்போக்
கடிக்க எண்ணமிட்டாய் அடிப்பாவி எழுந்து சாதம் தின்று விட்டு
சயனித்துக் கொள்ளடி- என்றுச் சொன்னவுடனே அந்தப் படுப்பாவி
யான மூதேவிமுண்டை கோபத்துடன் எழுந்து அடா சம்பாதிக்க
கையில் தரமில்லாதவனே என்னை சண்டாளியென்று திட்டுவதற்கு நீ
யாரடா நீ கட்டியதாலியை உன் தலைமீதுப்போட்டுக்கொள்ளடா என்
றுச்சொல்லித் தாலியைக்கழட்டி அவன் தலைமீது போட்டுவிட்டு தன்
கையாலே அவன் குடுமைதனைப்பிடித்து மனம் வந்தப்படி செவட்டி
காலாலுதைத்து முதுகின்மீது அறைய இதைப்பார்த்த அவன் தாயும்
பாலகர்களும் கோஷ்டமிட்டழுதார்கள், உடனே அயல் வீட்டுக்காரர்
வந்து இவர்களின்கலகத்தைத்தீர்த்துவிட்டுசிரித்துக்கொண்டு வீட்டிற்
குப் போய்விட்டார், உடனே வேதியன் வெட்கமடைந்து துக்கத்து
டன் தன் தாயாருக்கு வந்தனஞ்செய்து அம்மா! யான் பிறந்தது அப
நிந்தனை உனக்கு கர்மாதிக் கிரயங்கள் செய்வதற்கு பிராப்தியில்லாதப்
பாதகனேனேன் இப்படிக்கொற்ற துர்நடத்தையுடைய மாதைக்கூடி
சமுசாரம் செய்வதை விட கானகம் சென்றால் நலமாயிருக்கிறது எனை
க்கு உத்திரவுதந்தால் யான். தேசாந்திரமடைந்து எங்காகிலும் பிரா
ணம் விடுவேன்.

(சுலோகம்)

விபவானுகதாபர்யா சுகதுக்கசுஹ்ருத்பவான்
சத்யம்சாபரிப்ரஷ்டம் யத்தரித்ரேதுதுர்லபம்.

என்னும் மொழிபோல் தரித்திரவானுக்கு சகல விஷயத்திலும் அனுகூலமில்லாத தேவியும், சுகதுக்கத்தை தீர்க்க சிநேகிதனும் என்றைக்கும் லபிக்காது எனது கஷ்டத்தைச் சொல்லிக்கொண்டால் வெட்கக்கேடு மானம்போன பிறகு இதாளுக்கு முகம் காட்டுவதைவிட மரணமடைந்தால் சுகம் ஆனாலும் எதாகிலும் காலத்திற்கு தக்கபடி லபிக்கும் அதை அனுபவிக்காமல் தீராது ஆகையால் சாகிரவரைக்கும் கானகம் திரிந்தால் நலமாகுமென்றுச் சொல்லியவுடனே இதைக்கேட்ட தாயானவள் பூமியில் விழுந்து மூர்ச்சையடைந்தாள், அப்போ யிப்பிராமணன் பாலகரைப்பார்த்து ஓ பாலகரே நான் உங்களுக்கு பகையாளியாகும் உங்களே அந்த பரந்தாமனே காப்பாற்ற வேண்டுமென்று ஆசீர்வதித்து விட்டு எதும் சொல்லாமல் உடனே எழுந்து தலைதனில் துணிப்போட்டுக் கொண்டு ஓ பரந்தாமாயென்று சொல்லிக்கொண்டு வீட்டைவிட்டு புறப்பட்டுப் போய் விட்டான்.

அந்த தல்லாதக்கிழவி மூர்ச்சைத் தெளிந்தெழுந்து நாலுபுரமும் தேடிப்பார்த்தும் இல்லாமல் போனபடியால் சதிபுருஷன் சண்டையாலே பாலகர்கெட்டாரென்னும் மொழிப்போல்நிக்ஷயமாச்சுது நான் இந்தக் கொடுமைதனைப் பார்த்துக்கொண்டு இருப்பதைவிட மரணமடைந்தால் நலமென்று மனதி லெண்ணமிட்டு பாலகருக் கன்னமிட்டு நித்திரை செய்பவைத்து அந்த இராத்திரிக்காலத்தில் யாருக்குந் தெரியாமல் அந்தநாட்டிலிருக்கும் வேந்தனல் மூந்தி கோவைப்பழத்தை பயிர்ச்செய்த செடியின் பழுத்தபழத்தைத்தின்று சாகலாமென்று மனமிட்டு அச்செடிபருகில்சென்றுக் காவற்க்காரைக்கேட்டு நான்குப்பழம் பெற்றுக்கொண்டு வந்து பக்ஷித்து விட்டு அந்த இராத்திரி நித்திரை செய்தாள். இம்மாது உதயத்தி லெழுந்தவுடனே கிழரூபம்போய் விட்டு எவ்வர்ன ரூபமடைந்து பிரகாசம்போல் வெளியில் வந்தாள். இதைக்கண்ட அயல் வீட்டுக்காரர் ஆச்சரியமடைந்து இந்த சவிஸ்தாரத்தை நாடெங்கும் பரைச்சாட்டினர், இந்த விஷயத்தை வேந்தன் கேட்டு ஆச்சரியமடைந்து மறுபடியும் அந்தப் பழத்தைக் கொண்டு வந்து பரிக்ஷிக்கவேண்டுமென்று மனமிட்டான், இந்த சங்கதியை இத



னால் வேந்தன் புதல்வி தெரிந்து ஆ ஆ நாம் நிஷ்காரணமாக எதும் யோசிக்காமல் கிளியைக் கொன்றோமே என்று துக்கத்தில் மூழ்கி எக்காலத்திலும் கிளியைப்பற்றி சோகமடைந்து அன்னபானாதிகளை வெறுத்து நித்திராதிசுகத்தைப் போக்கி பிராணம் விட்டாள், புதல்வி மடிந்தாலென்று வேந்தனும் தேவியும் இதைதெரிந்து கானகஞ்சென்று மரணமடைந்தார்கள், இராஜ்யத்தில் வேந்தனில்லாமல் இருப்பதால் மறுவேந்தன் அபகரித்துக் கொண்டார்.

இதுபோல் எந்தக் காரியத்திலும் முன்பின் யோசிக்காமல் ஆத்திரப்பட்டால் துக்கத்திற்கு இடமாகுமென்று மந்திரிச்சொல்ல இதைக்கேட்ட சோமசேகரன் கோபமடைந்து மந்திரியே! நான் சொன்னபடிக்கு காரியத்தைச் செய்யாமல் பல மொழியாடுகின்றாய் நீயா எனது உத்திரவுப்படி நடக்கப்பட்டவனென்றுச் சொன்னவுடனே மந்திரி பயமடைந்து நாம் சேவகவேலைச்செய்வது அதுவே மகா நீச்சத்தொழில் அப்படி நீச்சத்தொழில் தன்னிலிருக்கும்போது எஜமான் சொன்னப்படி சிரம் அரக்கவேண்டு மல்லவா என்று யோசித்து வேந்தனைப் பார்த்து ஓ இராஜோத்தமா! தங்களுடைய இஷ்டப்படி செய்வதற்கு காத்துக் கொண்டிருக்கிறேன் என்று விசனத்துடன் சொன்னான்.

அப்போது அந்த பூபாலன் தன்னுடைய புதல்வியாகிய பவானியை அழைத்து அம்மா! உன்னுடைய மாமிமாமன் உன்னை பார்க்க கோரிவந்து இந்நாட்டிற்கு அருகிலிருக்கும் நந்தவனத்தில் இறங்கிருக்கின்றார், அவர் இங்கு வந்து உன்னைப் பார்த்துப்போக வெட்கமடைந்திருக்கிறார், புத்திரசோகத்தில் துக்கமடைந்தவரின் மனதை நோகச் செய்யலாகாது அவர் இஷ்டானுசாரமாக நடந்து அவர் துக்கத்தைத்தீர்க்கவேண்டியதாகையால் நீ அங்குச்சென்று அவருக்குமுக தரிசனந்தந்து, சந்தோஷவார்த்தைகளாடி அங்கு நிற்காமல் சீக்கிரத்தில் வாருமம்மா! உன்னைவிட்டு யான் ஒருநிமிஷமாகிலும் இருக்கமாட்டேன் என்று பிரியவசனமாகச் சொல்ல இதைக்கேட்ட அம்மாது தந்தையுடைய மர்மவசனத்தைத் தெரியாமல் நிக்ஷயமென்று நம்பியிருந்தாள், இப்படியிருக்க வேந்தன் மந்திரியை அழைத்து அப்பா மந்திரி! நேற்றியதினம் உன்னுடன் சொன்னதுப்போல் நடத்தி அங்கு நிற்காமல் சீக்கிரமாக இந்த ராத்திரிக்கு வந்து சேருமென்று சொன்னமொழி மந்திரிக்கேட்டு துக்கமடைந்து வேந்தனுத்திரவு வெறுக்கலாகாதெ்தன சம்மதமென்றுச் சொன்னான். அதன் பிறகு

வேந்தன் புதல்விக்கு ஸ்தானபானங்கள் செய்யவைத்து சுகபோஜன மிட்டு பலகாரம் ஒரு மூட்டைக்கட்டி வேந்தன் தன்மனதில் உனக்கு மெனக்கும் ருணம் தீர்ந்து விட்டதென்று துக்கித்து அந்த பவானி மாமன் மாமியைப்பார்த்து வருக போவதால் ஆபரணங்களை அலங்கரித்து மந்திரியுடன் கூட்டியனுப்பினர், இம்மாதுடன் சேடி ஜனங்களும் பரிவாரமும் கூடச்செல்ல மந்திரி குதிரையேறி நடந்துக்கொண்டிருந்தார், இப்படிப் போகுஞ் சமயத்தில் சூரியன் அஸ்தமயமாகி இருள் சூழ்ந்துக்கொண்டது, அந்த சமயத்தில் பரிவார சேனைகளை பின்னுக் கனுப்பிவிட்டு ஓர் கானகமத்தியில் இறங்கினர், அப்போது அந்த பவானிக்கு நித்திரை வருகிறவரைக்கும் தைரியஞ் சொல்லிக் கொண்டு சமீபத்திலிருந்து இராஜப்புதல்வி நித்திரை போனவுடனே மந்திரிப்புறப்பட்டு பரிவாரத்தை அழைத்துகொண்டு நாட்டிற்கு வந்து சேர்ந்தான்.

இப்படியிருக்க அந்த பவானி சயனித்துக் கொண்டிருந்தவள் நித்திரை தெளிந்துப் பார்க்குஞ் சமயத்தில் தன்னருகிலிருந்த சேடிக் கூட்டத்தைக் காணுதபடியால் மனக்கிலேச மடைந்து அவர்களை அழைத்துப் பார்க்க எவரும் பேசாதிருப்பதை அறிந்து மறுபடியும் மந்திரியை பெயரிட்டழைத்தாள், அவன் பேசாதிருப்பதை தெரிந்து ஓஹோ! நம்முடன் வந்தவரெல்லோரும் அசைந்து நித்திரை செய்கிறார்களென்று தன்மனதில் எண்ணமிட இப்படி ஒரு நிமிஷக்காலம் நிதானிக்கும் சமயத்தில் அங்கு மனிதர் த்வனியில்லாமல் புலிக்கரடி முதலான காட்டின் மிருககோஷ்டம் கேட்டு பயமடைந்து டோாவைவிட்டு வெளியில் வந்து பார்த்தாள், அச்சமயத்தில் ஆகாய மிருண்டுக்கொண்டு இடிமின்னலுடன் மழைப்பொய்வதைப் பார்த்து மனம் பயமடைந்து மறுபடியும் டோாக்குள் சென்று திரைப் போட்டுக்கொண்டு ஆ! ஆ! ஆ! இப்போது இப்படி ஆவதற்குக் காரணமேதோ? அல்லது இது நாம் நித்திரை செய்யுங்காலத்தில் கண்டகினவோ? மனபயமோ! இல்லாமல் நம்மைக் கொண்டுவந்து நிஜமாக விட்டு விட்டுப்போய் விட்டாரோ எனக்கேதும் தெரியவில்லையே காட்டு மிருகங்கள் கோஷ்டமிடுவதைப் பார்த்தால் பயமாகிறது ஐயோ தெய்வமே! நான் எதுச் செய்குவேன் என் பிராணபதி ஆருக்குந் தெரியாமல் இராக்காலத்தில் வந்து என்னுடன் கிரீடாவிநோதங்களைச் செய்துப்போய்க்கொண்டிருக்க தெய்வ கடாக்ஷத்தால் கற்பம் தரித்தது அந்த கெந்தர்வனோ தருக்கு நம்பிக்கை செய்தபடியால் எனது மர்மத்தை என் தாயுக்கும் சொல்



லாமலிருந்தேன் ஆனால் என் தாயார் கற்பசின்னத்தை யறிந்தவள் என்னைக்கேட்டால் ஏது மோசமடையுமோ வென்று மனமிட்டு தன் நாயகனுடன் சொல்லிருப்பாள் அவர் தன் புதல்வி சோரத்வமடைந்து கற்பம் சம்பாதித்து தனக்கு அபகீர்த்தி கொண்டுவந்தாளென்று விசனமடைந்து என்னைக் கொல்லாதப்படிக்கு அழைத்து விசாரிக்காமல் இப்படி துர்மனமிட்டாரென விசனமடைந்து அந்தக்கானகத்திலிருக்கும் வனதேவதைதனை நினைந்து ஓர் கதைச்சொல்ல ஆரம்பித்தாள்.

## பவானி வனதேவதைக்கு திருஷ்டாந்தக் கதைச் சொல்லுவது.

ஜோதிஷ் பண்டிதனென்னும் ஓர் வேதியனுக்கு சந்தானமுண்டாகவே அவர் ஜாதகமெழுதபித்ருகெண்டத்தில்பிறந்த பாலகனென்றறிந்து அந்தப்பாலகனைக் கொன்றுவிட்டால் தன்னுடைய கெண்டம் தீருமென்று மனமிட்டு பத்தினியை மோசஞ்செய்து அவளுக்குந்தெரியாமல் தன் வீட்டிற்கு பின்பாகத்திலிருந்த கிணற்றில் அப்பாலகனைப் போட்டு விட்டான், அதன்பிறகு அம்மாது சிசுவைக் காணுதப்படியால் சோகமடைந்து சிலநாட் வரைக்கும் நித்திரை ஆகாரம் விட்டு விசனமடைந்து மறுபடியும் தனக்குள் தான் சமாதானஞ் செய்துக் கொண்டு அந்தக்கிணற்றில் தண்ணீர் மொள்ளுஞ் சமயத்தில் அந்த சிசுப்பிரேதமானது ஆப்பாண்டத்தி லகப்பட்டு மேலுக்கெடுக்க இதைப்பார்த்து அம்மாது துக்கமடைந்து நிற்குஞ்சமயத்தில் அவளுடைய புருடனாகிய வேதியன் இம்மாதைப் பார்த்து அடி மூர்க்கி! அந்தப் பிண்டமானது தந்தைதனைக் கொல்லும் ஆகையால் நானே கிணற்றில் போட்டு விட்டேன் நீ அதை தீண்டலாகாதெனச் சொல்ல இம்மொழிக்கேட்ட அம்மாது ஐயோ! உங்கள் சாஸ்திரத்தில் நெருப்பு வைக்க மாட்டாரா உனது கெட்டப்புத்தியை பார்க்க சந்தோஷமாச்சுது உன்னைப்போல மூடரை மாலையிட்டுப் பிழைப்பதை விட மரணமடைந்தால் மேலென்று அந்தப் பிண்டத்தைக் கிணற்றில்போட்டு தானும் கிணற்றில் குதித்து மரணமடைந்தாள், அப்போது அந்த மூற்கவேதியன் ஐயோ பாலகனும் மாண்டான் அதுபோனாலும் பெரிதல்ல வேறொருப் பாலகனை பெறலாமென்றால் ஆதாரணமான பத்தினியும் செத்தாள் இனிநான் ஒருவனிருந்து பலமென்ன? என்றுச் சொல்லி கிணற்றில் விழுந்து மரணமடைந்தாள், அதுப்போலாவே புத்திசனமடைந்து என்னைக் கொன்றுவிட்டு தானும் பிராணம் விடுவதுப்

போல் செய்துக்கொண்டார், தாய் தந்தைகள் பாலகரை மோசஞ்செய்தால் நாமென்னச் செய்யலாகும்.

(சுலோகம்.)

மாதாயதி விஷம்தத்யாப்தி தாவிக்ரயதேசுதம்
ராஜாஹரதி ஸர்வஸ்வம்காத த்ரபரிவேதநா.

பெற்ற தாயானவள் குழந்தைக்கு விஷத்தை ஊட்டினாலும் தந்தைப் பாலகரை நம்பிக்கொண்டிருந்தாலும் வேந்தன் பிறர்சொத்தை அபகரித்துக் கொண்டால் இந்த துரவஸ்தைகளை எவருடன் சொல்லிக்கொள்ளத்தகும் அதுபோலாகவே என் ஜென்மத்திலபித்த பாப கருமங்களை யான் ஆருடன் சொல்லிக்கொள்வது.

(சுலோகம்.)

வேணுர்னளிஃ கர்கட இக்ஷுரம்பாவி
நாசகாலே பலமுத்பவந்தி.

இம்மொழிபோல் மூங்கில், தேள், நண்டு, கரும்பு, வாழை, இதுகளுக்கு நசிக்கும் சமயத்தில் கர்பமுண்டாகும் அதுபோலெனக்கிந்த கெர்பம் இக்காலத்தி லுண்டாச்சுது இந்த யிருண்டவேளையில் ஓர் கிணர் அகப்பட்டால் நலமை நமக் ககப்படவே மாட்டாது அப்படி யகப்பட்டாலும் பிராணம் விடுவதற்கு புத்திவருகாதுபிராணம் விடுஞ்சமயத்தில் பயம் சம்பவிக்கும்.

(சுலோகம்.)

அரிர்மித்ரம் விஷம்பத்யம் அதர்மோதர்ம தாம்ப்ரஜேத்
அனுகூலே ஜகந்நாத விபரீதே விபர்யயஃ

சர்வாந்தர்யாமியான பகவான் அனுகூலமானாலும் விரோதிகள் சிநேகிதராவார் விஷமானது வெல்லம்போலிருக்கும் அதர்மத்தில் பிரவேசித்தால் தருமமே மேலாகும் பகவான் அனுகூல மில்லாவிட்டால் சிநேகிதரே விரோதியாவார் சுகபோஜனமே விஷமாகும் தர்மத்தில் பிரவேசித்தால் பாபம் சம்பவிக்கும் ஆகையால் எந்தக்காரியஞ் செய்தபோதிலும் பகவான் அனுகூல மிருக்கவேண்டுமேயன்றி மனிதரால் எதுசெய்யமுடியும் இந்தப் பதமானது எனக்கே சாக்ஷியாக தோன்றுகிறது லோகத்தில் பந்துஜனங்கள் கஷ்டகாலம் வருஞ்சமயத்தில் ஆதரவு செய்யமாட்டார்.



(சுலோகம்.)

நைவமாதாநசபிதா நாஸ்திபந்துசகோதரா
விபத்ஸுசங்கடேப்ராப்தே தைவமேவபராகதிஃ

ஏதாகிலும் ஓர் ஆபத்து சம்பவிக்குஞ் சமயத்தில் தாய் தந்தை அண்ணன் தம்பி பந்துசிநேகிதர் இவர்கள் யாவரும் சகாயப்படமாட்டார்கள். சங்கடகாலத்தில் சகாயமாகும்புருஷன் ஸ்ரீபரமாத்மா தவிர மற்றவர் யாருங்கிடையாது அப்படிக்கொற்ற பரமாத்மா என் விஷயத்தில் விரோதியாக இருக்கின்றான் இனிபிராணத் தியாகஞ் செய்துக்கொண்டால் நலமென்று துக்கமடைந்து மூர்ச்சையாகி பூமியில் விழுந்தாள்.

இதற்குள்ளாக பிராதக்காலமாகி குளிர்ந்த காற்றுவீச அம்மாது மூர்ச்சைவிட்டெழுந்து அய்யோ இனியெனக்கு இன்னம் ஏதுகெதியென்று ஆலோசித்துக் கொண்டிருக்குஞ் சமயத்தில் அங்கு ஓர் செடிமீது அன்னப்பேடைகள் ஆணும் பெண்ணுமாக இரண்டுவந்து அமர்ந்தது அச்சமயத்தில் பெண்பேடை ஆண்பேடையைப் பார்த்து நாயகா! லோகத்தில் பெண் சன்மமானது பாதகம் செய்த ஜென்மம் இங்கு விழுந்துகிடைக்கிற இராஜப்புதல்வி விதிப்பயன் எப்படி அதை எனக்குச் சொல்லுமென்றுகேட்க ஆண்பேடை பார்த்து நாயகி! என அழைத்து அம்மாது சங்கடமெல்லாம் சொல்லி இம்மாது பகவான் கடாக்ஷத்தால் ஆண் புதல்வனை ஈன்றெடுத்து தன் பதியுடன் கூடி போகபாக்கியங்களை அனுபவிப்பாள் ஆனால் இந்த விஷயத்தைப்பற்றி ஒருகதை இருக்கிறது அதைச் சொல்லுகிறேன் கேட்பாயென்று சொல்லத் தொடர்ந்தது.

## (அன்னப்பேடைச் சொல்லும்கதை.)

ஓர் கானகத்தில் பிரமாண்டமாகிய ஆலமரத்தின் கிளைமீது இரண்டு பக்ஷிகள் வாசஞ் செய்துக்கொண்டிருந்தது இப்படிருக்க அதிக பசிக்கொண்ட ஒரு டேகையானது ககனமார்க்கத்தில் டவட்டமிட்டுக்கொண்டிருந்தது இதைப்பார்த்து அந்தபக்ஷி பயமடைந்தது இது வுமல்லாமல் இது உட்காந்திருக்கு மிடத்தைப்பார்த்து ஒருவேடுவன் வில்லம்பு கைப்பூணி வந்து அந்தப் பக்ஷிகளை வதிக்க எத்தனமிட்டு அம்பை குணித்தோணி செய்து குறிப்பார்த்துக் கொண்டிருந்தான். இதைப்பார்த்து பெண்பேடை ஆண் பக்ஷியுடன் மனபீதியடைந்து

நாயகா நாமிப்போதிருக்கிற செடியின் கீழ்பாகத்தில் ஒரு வேடு
வன் அம்பை குணதோணி செய்து நம்மைக்கொல்ல குரிப்பார்த்துக்
கொண்டிருக்கின்றான் நாம் தப்பித்துக்கொண்டு ஓடிப்போகலாமென்
றால் ககனமார்க்கத்தில் டேகையொன்று பசியால் தவித்துக்கொண்
டிருக்கிறது இப்போது நமக்கு மாணம் சொந்தமாக நிற்கின்றது இத
ற்கேது செய்யலாமென்றுக் கேட்டவுடனே ஆண் பக்ஷிபார்த்து நாயகி
பகவான் நம்மைக் கார்க்கவேண்டி யிருந்தால் எல்லா ஆபத்துகளும்
தீர்ந்துவிடும் பகவானுக்கு கருணையில்லாமல் போய்விட்டால்
நமதெண்ணம் கைக்கூடாதென்று தைர்யமொழிக்கூறி உட்கார்ந்துக்
கொண்டிருக்க இந்த வேடுவன் பக்ஷிகள் மீது குறிப்புடன் இருக்க
இவன் பாதத்தருகில் ஓர்சர்பம் இருந்தது அதைத்தெரியாதப்படிக்கு
மிதிக்க அந்தச்சர்பம் இவன் காலைக்கடிக்க அவன் பயமடைந்து
பாணத்தை குரிதப்பிவிடவே அந்தப்பாணமானது ககனமார்க்கத்
தில் வட்டமிட்டுக் கொண்டிருந்த டேகைக்கு பாய்ந்தவுடன் டேகை
மரணமடைந்தது, இந்த வேடனுக்கு சர்பவிஷமானது உச்சிக்கேரியவு
டனே இவனும் மடிந்தான், இதைக்கண்டு அந்த இரண்டு பக்ஷிகளும்
உடனே புறப்பட்டு ஓடிப்போய் விட்டது, இப்படியாக பகவான் ஒன்
றுச்செய்ய யெத்தனமிட்டால் மனிதர் செய்யுங் காரியம் கைக்கூடாது
என்று ஆண் பக்ஷிச்சொன்னவுடனே இம்மொழியை இராஜப்புதல்
விக்கேட்டு பகவான் சங்கல்பத்தை பரீக்ஷிக்க வேண்டுமென்று பெரு
மனமிட்டிருந்தாள்.

அதன்பிறகு இராஜப்புதல்வி தனக்குள்தான் தர்க்கமடைந்து
நான் பிராணத்தை விடுவது நலமல்ல பகவான் கருணை நமது மீது
நிறுத்தி நம்மை காப்பாற்றுவார் என்று மனமிட்டு டோதன்னில்
உட்கார்ந்திருக்குஞ் சமயத்தில் சூரியன் உதயமாகிவிட்டான். இதைக்
கண்டு அம்மாது நான் சர்வலங்காரத்துடன் புறப்பட்டு இந்த விதி
மார்க்கமாக நடந்துப்போனால் ஆர்கிலும் துஷ்டர் என்னைக்கண்டு
மோகமடைந்து பலத்கார இம்சைகள் செய்தால் அந்த இம்சைகள்
பொருக்கமாட்டாமல் அவர் வசமாக வேண்டிவரும் அப்போது என்
பதிவிரதாதர்மம் நஷ்டமடையும் பதிவிரதாசிரோன்மணிகள் நம்மை
தூஷிப்பார்கள் தானஞ்செய்து மோக்ஷத்தை கைவிட்டதுப்போல்
பதிவிரதாதர்மம் விட்டு பரபுருஷர் மோகத்தில் உள்பட்டால் அவன்
நமக்கு எவ்வர்ன வயதிருக்கிறவரைக்கும் அனுபவித்து பிறகு கரும்பு
தனிலிருக்கப்பட்ட சாரத்தை பிழிந்துக்கொண்டு திப்பியை துப்பு
வதுப்போல் நம்மை வெருத்திடுவார்.



ஆகையால் பதிவிரதாதர்மத்தை விட்டவற்கு எப்போதும் சுகங்
கிடையாது என்னுடைய பதிவிரதாதர்மத்தை எப்படியாகிலும் காப்
பாற்றிக்கொள்ளவேண்டியது அதின்மேல்பகவான் கடாக்ஷம் இருப்ப
துபோல் நடக்குமென்று தன் மனதில் எண்ணமிட்டு டேருதன்னில்
இருக்கப்பட்ட வஸ்திரமெடுத்து துண்டு துண்டாகக்கிழித்து அங்கத்
தில் அங்காங்கு சுற்றிக்கொண்டு பலகாரத்தி லிருந்ததொரு சக்கரை
எடுத்து ஜலத்தில் கலந்து அந்த துணிமீது தெளித்துக்கொண்டு
கொஞ்சநேரம் வெளியில் வந்து நிற்க ஈயிகள் கூட்டமாக வந்து அம்
மாது தேகமுழுதும் சூழ்ந்துக் கொண்டது உடனே ஒருக்கொம்
பைப் பிடித்துக்கொண்டுப் படுக்கை பலகார வஸ்துவுகளை மூட்டைக்
கட்டிக்கொண்டு தலைமீதிலிட்டு பெருத்த ரோகிவேஷந்தரித்து ஜனங்
கள் நடக்கும் மார்க்கமாக மெதுவாய் நடந்து ஓர் கிராமம்சேர்ந்தாள்.
அந்த கிராமத்திலிருக்கப்பட்ட குளத்தில் பலகாரத்தைத்தின்று பசி
தீர்த்துக்கொண்டு இராஜவீதியில் இருக்கப்பட்ட ஆலமரத்தின் கீழ்
உட்கார்ந்திருந்தாள்.

அச்சமயத்தில் அம்மார்க்கமாக ஒரு வேதியனும் அவன் தேவி
யும் இரண்டுபேரும் வந்துக்கொண்டிருந்தார்கள். அப்போதந்த வேதி
யன் பத்தினி பவாணியைப் பார்த்து ஓ அம்மணி! நீயார் எங்கிருப்பது
இங்கு வரக்காரணமேது! உனக்குலபித்த வியாதியென்ன! இங்கு
ஒண்டியாகயிருக்கக் காரணமேது! உன் முகத்தைப் பார்த்தால்
இராஜபுத்திரி லக்ஷணம் காட்டுகிறது உன் சவிஸ்தாரத்தை வொளிக்
காமல் சொல்லென்றுக் கேட்க இம்மொழிக்கேட்டு பவாணி அம்மா
தைப்பார்த்து அம்மா! யான் இராஜபுத்திரியல்லநாகவேந்தனென்னும்
விப்புரவன் எனதுகணவன் நாங்களிருவரும் யேகோபித்துவந்துவான
பிரஸ்தாவில் தங்கியிருந்தோம் அச்சமயத்தில் என் கணவன் எங்கோ
சென்றுவிட்டார். இப்போது என் நாயகனைத்தேடிக்கொண்டு இம்மா
ர்க்கமாக வந்தேன் எனக்கு பிராணபாதை ஆறுமாதமாக யிருக்கிறது,
நீங்கள் என்னைப்பார்த்து அசக்கியப்படவேண்டாம் சுகுணமுடைய
வர் பிறருக்கு வியாதியுண்டானால் அதற்கு உபகாரம் செய்வார்கள்
ஆகையால் அம்மா! என்னிடத்தில் ஓர் நகையிருக்கிறது அதை உமக்
குத் தருகின்றேன் அதை வைத்துக்கொண்டு உங்கள் வீட்டிற்கு
என்னை அழைத்துக்கொண்டுப் போய் நாலுதினம் வரைக்கும் காப்
பாற்றுவீரென்றுச் சொல்லி தன்னிடத்திலிருந்த பூஷணத்தில் ஓர்
நகைதனைக் கழட்டித்தருக அதை அந்த வேதிய ஸ்திரீ பெற்றுக்

கொண்டு தன் கணவனிடம் நடந்ததெல்லாம் சொல்ல அவர் அதற்குச் சம்மதித்து இராஜப்புதல்வியை தன் வீட்டிற்கு அழைத்துச் சென்றார்.

இது இப்படிருக்க அங்கு மந்திரி புரோஹிதன் பரிஜனங்கள் கூடி கிராமத்திற்கு வந்து சோமசேகர வேந்தனிடம் புதல்வியை விட்டு வந்த சங்கதிச்சொன்னார், இதைக்கேட்ட வேந்தனும்தேவியும் அன்ன ஆகாரத்தை வெருத்து துக்கமடைந்து ஓர் விடத்தில் சயனித்துக் கொண்டிருந்தார்கள். இப்படியிருக்குஞ்சமயத்தில் அன்று செவ்வாய்க் கிழமை சாயந்திரம் எப்போதும்போல் கந்தர்வமாதர் நாகவேந்தனை யழைத்து வந்து அந்தப்புரம் அருகில் விட்டு விட்டு அவர்கள் கோவிலுக்குச்சென்றார், அந்தச் சமயத்தில் நாகவேந்தன் அந்தப்புரம் பிரவேசித்துப் பார்க்க தன் தேவியைக் காணுதப்படியால் அம்மாதுடைய படுக்கைமீது அமர்ந்து ஆலோசித்துக் கொண்டிருந்தான் பிறகு கொஞ்ச நேரத்திற்கெல்லாம் கந்தர்வமாதர்கள் காரியத்தைத் தீர்த்துக்கொண்டு வந்து நாகவேந்தனை அழைக்க அவ்வேந்தன் முகவாட்டமடைந்து வெளியில் வருக இம்மாதர்கள் அவரைப் பார்த்து நீ இப்படி முகவாட்டத்துடன் வரக்காரணமேதென்றுக்கேட்க அப்போது அவ்வேந்தன் நான் ஏதென்றுச் சொல்லுவேன் என் நாயகியைக் காணுமல் மனவாட்டமடைந்தேன் என்றுச்சொல்ல இதற்குள் அம்மாதரில் ஒருத்தி இவரைப்பார்த்து உனதுதேவி கார்யார்த்தமாகச்சென்றாளோ இல்லாமல்பஹிஷ்டமடைந்திருக்கின்றாளோ தெரியாது ஆகையால் இவர் அம்மாது வருகிறவரைக்கும் இங்கிருக்கட்டுமென்றுச் சொன்வுடனே அவரில் பெரியவளாகிய ஓர்மாது மற்றவரைப் பார்த்து அடி தங்கைமாரே இவருடன் நாம் இத்தனை தினமாக சுகத்தை அனுபவித்தது போதும் இனி அவரிருவருமே சுகமாக இருந்து போகபாக்கியத்தை அனுபவிக்கட்டு மென்றுச்சொல்லி அவரைப்பார்த்து நீ இது முதற்கொண்டு உன்னுடைய நாயகியைச்சேர்ந்து சுகமாகயிருமென்று ஆசீர்வதித்து விட்டு அவர் தெய்வலோகம் போய்விட்டார்கள். அதன் பிறகு நாகவேந்தன் அந்தப்புரமடைந்து தன் நாயகிமாது சயனித்திருக்கும் இடத்தில் சயனித்துக்கொண்டிருந்தார், இப்படியிருக்க அங்கிருந்த சேடிகள் கதவின் சிறு துவாரமாக இவரைப் பார்த்து ஆச்சரியமடைந்து சீக்கிரமாக இராணி யிடத்திற்குச்சென்று அம்மா! தங்களுடைய புதல்வி சயனித்துக்கொண்டிருந்த மஞ்சத்தின் மீது எவனோ ஒருபுருடன் நித்திரை செய்துக் கொண்டிருக்கின்றான் என்றுசொன்னவுடனே அம்மாது சந்தோஷமடைந்து வந்துப்பார்த்து



இந்தவிஷயத்தை வேந்தனுக்குச்சொல்ல அந்தமூர்க்கமதியுடைய வேந்தன் செந்திராயுத மெடுத்துக்கொண்டு மந்திரியுடன்வந்து உட்புரத்தில் சயனித்துக் கொண்டிருந்தவனை சிரம்கொய்ய வேண்டுமென்று கதவைத்திரக்க இதைப்பார்த்து மந்திரி • ஐயோ இந்த மூர்க்கன் முந்தி யோசனையில்லாமல் கார்யம் செய்கிறானென்று அறிந்து அப்போது வேந்தனைப்பார்த்து ஐயா! விசாரிக்காமல் புதல்வியை போக்கடித்துக்கொண்டு துயரமடைந்தீர், இன்னம் கோபம் போகவில்லையா யோசனையில்லாதக் காரியத்திற்கு ஆபதை சம்பவிக்கு மென்பது இன்னம் இதற்கு திருஷ்டாந்தமாக ஒருக்கதைச் சொல்லுகிறேன் அதைக்கேட்டப் பிறகு உனது இஷ்டம்போல் செய்வீரென சொல்லி கதைச்சொல்ல ஆரம்பித்தார்.

## (மந்திரி சோமசேகரவேந்தனுக்கு சொல்லும்கதை.)

ஐயா! இராமவர்ம னென்றொரு வர்த்தகனிருந்தான் அவனருகில் ஒரு சிநேகிதனாகிய துலுக்கன் வந்து ஐயா! எனக்கு ஆயிரவராகன் கடன்வேண்டியது இந்தக் கடனுக்கு பதிலாக என்னுடைய நாயை உன்னிடத்தில் ஈடாகவைக்கிறேன் என்றுக்கேட்க இம்மொழிக்கு அவன் சம்மதிக்கவில்லை பிறகு அந்த சவுக்காரி தம்பியாகிய விஜயவர்மனிடம் சென்றுக்கேட்க அவன் ஆலோசித்து நாம் இந்த நாயை அடவு வைத்துக்கொண்டால் நமக்கு விசேஷலாபம்கிட்டும் இதுவுமல்லாமல் நாம் வெளிப் பிரயாணமடைந்து போனால் நமது வீட்டில் காவலிருக்குமல்லவா என்று சம்மதமடைந்து ஆயிரவிராகன் தந்து அவனை அனுப்பிவிட்டான்.

அதின் பிறகு அந்த நாயானது விஜயவர்மனை எஜமானுகப் பாவித்து அதிக ஜாக்கிரதையுடன் அவன் வீட்டில் காவலிருந்தது, இப்படிருக்க இராமவர்மன் தேவியானவள் சோரத்வமடைந்து இதரபுருடனை அந்தரங்க ஸ்தலத்திற்கு அழைத்துக்கொண்டுப்போய் சுகிப்பதால் இந்தசங்கதி இராமவர்மன் தெரிந்து அவனைப் பிடிக்கவேண்டுமென்று மனமிட்டு தன் தம்பியை சகாயம் கோரினான், இதை தெறிந்து விஜயவர்மன் தன்னுடைய நாயை இராமவர்மன் வீட்டில் காவலாக கட்டிவைத்தான், இப்படிருக்குஞ் சமயத்தில் அந்தசோரத்வமடையும் ஸ்திரீயானவள் தன்புருஷனைக் கொன்று விட்டால் சுகமாக இருக்கலாமென்று திருட்டு மாப்பிள்ளையுடன் சொல்லவே அவனும் இவளுடைய துர்போதனைக்குச் சம்மதமடைந்து செய்யத்துணிவுக் கொண்டான்.

இப்படியிருக்க அந்த இராத்திரிக்காலத்தில் சோரப்புருடன் பயந்து சந்தடிச்செய்யாமல் நிச்சப்தமாக அடிமேலடிவைத்து வாயலுக்கு வருஞ்சமயத்தில் தன் புருடன் வருகின்றானென்று பயமடைந்து கரவாலத்தை யெடுத்து அவன் சிரத்தை வெட்டினாள், உடனே கணவன் மாண்டு விட்டானென்கிற சந்தோஷமேலிட்டு விளக்கேற்றிக்கொண்டு வந்துப் பார்க்குஞ்சமயத்தில் தன்னுடைய சோரப்புருடனாக இருப்பதால் மனக்கவலையடைந்து பின்புரத்தோட்டத்தில் பெரிய பள்ளம் வெட்டி அதில் அந்த சவத்தைப் புதைத்து விட்டுசிந்தாக்கிராந்த மடைந்து சய்யா கிரஹத்தில் சயனித்துக் கொண்டிருந்தாள்.

அதன்பிறகு வீட்டருகில் காவலிருந்த நாயானது இம்மாதினுடைய வியாபாரத்தையும் அவள் செய்த கெட்டநடைக்கையும் பார்த்துக்கொண்டிருந்து மறுநாட் உதயமானவுடனே தன்னுடைய எஜமான் அருகில்சென்று அவன் காலைநக்கி முந்திநடந்தது மறுபடியும் அவனிடம் வந்து காலைமுகர்ந்து முந்திநடக்க அவன் இதைப் பார்த்து என்னமோ விசேஷமிருக்கிறதென்று யோசித்து அந்த நாயின் பின்பற்றிபோக அந்த நாயானது புதைத்து இருக்கப்பட்ட இடத்திற்கு தன் எஜமானை அழைத்துக் கொண்டுவந்து அந்த இடத்தை தனதுக்காலால் தோண்டிக் காட்டியது, இதையறிந்த விஜயவர்மன் தன் தமயனை அழைத்துக் கொண்டுவந்து இருவருமாக அந்த இடத்தைத் தோண்டிப் பார்த்தார்கள். அப்படி பார்க்குஞ்சமயத்தில் சோரப்புருடனுடைய பிரேத மகப்பட்டது, அந்தச்சமயத்தில் இந்த சந்தர்பம் கேட்ட சோரமாது தன்னை எதுச்செய்வாரோ என்கிற பயமடைந்து ஓட்டமாகவோடி சேகுவனைக்கண்டு ஐயா! அண்ணன் தம்பி இருவரும் சேர்ந்து ஒருவனைக் கொன்று புதைக்கிறாரென்றுச் சொல்ல இதைக்கேட்ட சேகுவன் அந்த இடத்திற்கு வந்து பிரேதத்தைப் பார்த்து இந்த மூவரையும் பிடித்து காராகிரஹத்தி லடைத்தான்.

இப்படிருக்க அந்த சமயத்தில் தன் எஜமான் இல்லாதது தெரிந்த நாயானது இரவும் பகலும் ஜாக்கிரதையுடன் அந்த வீட்டைக் காவல் செய்துக் கொண்டிருந்தது. இந்த விஜயவர்மனுக்கு விரோதிகள் எல்லோரும் கும்பலாகக்கூடி இவன் நம்மிடத்தில் அதிக வட்டி சம்பாதித்திருக்கின்றான், இவன் வீட்டில் அதிக திரவியம் சேர்த்திருப்பான் அதையெல்லாம் கொள்ளை கூடிக்கவேண்டுமென்று பெருமனமிட்டு அவன் வீட்டில்புகுந்து எல்லா திரவியத்தையும் அப



கரித்துக்கொண்டு போனார்கள், அப்போது அந்தநாயானது இவரைப்பார்த்து கெட்டியாகக் கூச்சலிட்டு அவரை முந்தி நடக்கவொட்டாமல் காலைப்பிடித்து கடித்தது இதைப்பார்த்து அந்தத் திருடர் நம்மை இந்த நாயானது விடமாட்டாது இது கூச்சலிடும் சப்தம் கேட்டு நகற்காவலர் வந்தால் ஆணிகரம்சம்பவிக்கும் ஆகையால் இந்த தனமெல்லாம் எங்காகிலும் புதைத்து வைத்தால் நலமென்று என்னைமிட்டு சமீபத்திலிருந்த ஓர் பள்ளத்தில் போட்டு மண்ணை மூடிவிட்டு ஓடிப்போய் விட்டார்கள், இதைப்பார்த்த அந்த நாயானது அந்த இடத்தில் குந்திநித்திரை ஆகாரமில்லாமல் மனிதர் வாறுதப்படிக்கும் தன் யெஜமான் எப்போ வருவாரோயென்று பார்த்துக் கொண்டிருந்தது.

அங்கு சேகுவர் வசம் அகப்பட்டவர் விடுதலையாகி வந்து வீட்டைப் பார்க்க குடியில்லாத வீடு எப்படியிருக்குமோ அதுபோலிருப்பதைப் பார்த்து மனக்கவலை யடைந்து தன்தேவியை அழைத்து இது என்னவென்றுக் கேட்க அம்மாது நடந்ததெல்லாம் விபரமாகச் சொல்ல அம்மொழிக் கேட்டவுடன் துக்கமடைந்து மூர்ச்சையாக பூமியில் விழுந்தான், இப்படி விழுந்தவுடனே அத்தேவி சைத்யோபசாரஞ்செய்தெழுப்ப.எழுந்தவுடனே அடிமாதே இங்கிருந்தநாயானது யெங்கு போச்சுதென்றுக் கேட்டான், அம்மாது இதைக்கேட்டு நாயகா நான் எத்தனையோ விசை அந்த நாயை பிடித்துவந்தும் அது ஓடி ஓடி அந்த குட்டையருகில் காவலிருக்கிறது என்றுச்சொல்ல இதைக்கேட்ட விஜயவர்மன் நாயிருக்கும் இடத்திற்குப்போக அந்த நாயானது தன் காலால் மண்ணை சிவ்விக்காட்டியவுடன் விஜயவர்மன் அதுபோலந்த யிடத்தில் தோண்டிப்பார்க்க தன்னுடைய வஸ்துக்களெல்லாம் அகப்படவே சந்தோஷமடைந்து அந்த நாயிக்கி தயிர்சாதம்வைத்து இந்த தினத்துடன் இந்த் நாயை அடுவைவைத்த ரொக்கத்தின் அசலும் வட்டியும் சேர்ந்து விட்டதென்று ஓர் சீட்டெழுதி அதின் கழுத்தில்கட்டி உன்னுடைய எஜமான் வீட்டிற்கு போவெனச் சொல்லி துரத்திவிட்டான். இப்படிச் சொன்னவுடனே அந்த நாயானது அதிக சந்தோஷமடைந்து பழைய எஜமானிடத்திற்குப் போகபுறப்பட்டுப் போய்க்கொண்டிருந்தது.

இப்படியிருக்குஞ் சமயத்தில் துலுக்கன் ரொக்கத்தை எடுத்துக்கொண்டு நாயை மீட்டிக்கொண்டுபோகலாமென்று மனமிட்டு வரும் மார்க்கத்தில் அந்த நாய் யகப்பட்டது. அப்போது துலுக்கன் அந்த

நாயைப்பார்த்து யோசனைசெய்யாமல் ஆ! துஷ்டநாயே! என்னை பொ
ய்யனுக்ச் செய்துவந்துவிட்டாயா! என அதிககோபத்துடன் தன்னு
டைய புஜத்தின் மீது வைத்துக்கொண்டிருந்த தனமூட்டையெடுத்து
அந்தநாயின் தலைமீதுப்போடவே அந்தடிப்பட்ட மாத்திரத்தில் அந்த
நாய் பிராணம் விட்டது இந்த மூடன் தன்னுடைய தனமூட்டை எடுத்
துக்கொள்ளவேண்டி அருகில்போகுஞ்சமயத்தில் அந்த நாயின்கழுத்
தில் கட்டியிருந்த சீட்டுதனைப்படித்து ஐயோ! பகவானே மோசம்
செய்யாமல் எனக்கு லாபம் சம்பாதித்துக் கொண்டுவந்த ஜீவத்தைக்
கொன்றுவிட்டு நானிருந்து எதுபயனென்று தானும் பிராணஹியாகஞ்
செய்துக்கொண்டான், இதுபோலாகவே நீங்கள் ஆலோசிக்காமல்
காரியத்தை செய்துவிட்ட பிறகு யோசிப்பது நலமென்னவென்று மந்
திரிச்சொல்ல இதைக்கேட்டவேந்தன் கத்திதனை பூமியில்போட்டுவிட்
டு அப்பா மந்திரி! நீசென்று ஆரெனவிசாரித்து என்னறுகிலழைத்து
வாவென்று மந்திரிக் குத்திரவுசெய்து அதிக கோபத்துடன் பற்களை
நறநறவென்று கடித்து உக்கிரத்துடனே மந்திரியை எதிர் பார்த்துக்
கொண்டிருந்தான்.

அதின்பிறகு இராஜபுதல்வன் சயனித்துக் கொண்டிருந்த அந்
தப்புரமடைந்து அவன் சமீபத்தில் நின்று முக்காட்டை எடுத்து
முக கமலத்தைப் பார்த்து மெய்மறந்து தட்டியெழுப்பி அவன்
மொழிகளால் இவன் நமது வேந்தனுக்கு மருகனென்று தெரிந்துக்
கொண்டு யோகக்ஷேமங்களை விசாரித்து மெதுவாக இருவரும் வெளி
யில் வந்து வேந்தன் எதிரில் கொண்டுப்போய் விட்டான். அவ்வேந்
தன் இவனைப்பார்த்து அப்பா மந்திரி! இவன் என் மருமகனுன நாக
வேந்தன் அல்லவா என்றுச்சொன்னவுடனே நாகவேந்தன் திடுக்கிட்
டெழுந்து தன் மாமனென்றறிந்து அவர் பாதங்களுக்கு வந்தனஞ்
செய்து சுவாமி! தங்களுடைய கிருபாகடாக்ஷத்தால் நான் காராகிருக
விமுக்தனுகயிருந்து இன்றைக்கு வீடுவந்து சேர்ந்தேன் என்றுச்சொ
ல்ல வேந்தன் உண்மையென்றறிந்து வந்தவனுடைய முகத்தைப் பார்
க்க வெட்கமடைந்து துக்கித்து சமீபத்திலிருந்தசேடிகளை அழைத்து
இந்த சங்கதி எனதுதேவிக்கு சொல்லென்றுச் சொல்லியனுப்ப அந்த
சேடிகள் அதுபோல் சொல்ல அம்மாது சந்தோஷமடைந்து மரும
களைப் பார்த்தவுடன் புதல்வியை பிரிந்தோமே என நேத்திரத்தில்
ஜலஞ்சொரிய துக்கமடையுஞ் சமயத்தில் நாகவேந்தன் ஆ! ஆ! இவர்
கள் நமது மாமியென்று தெரிந்து வந்தனஞ்செய்து அமர்ந்தான்.



அந்தச் சமயத்தில் சோமசேகரன் மருமகனைப் பார்த்து அப்பா
சந்திராங்கா! விவாகமான நாலாந்தினத்தில் மாயமாகப் போனவர்
இத்தனை நாள்வரைக்கும் எங்கிருந்தீர்? எவர் வீட்டிலிருந்தீர்? இந்த
ஆறுமாதம் எவ்விதமாக காலங்கழித்தீர்? உன்னுடைய இருப்பிடஸ்த
லம் எங்களுக்கு அகப்படாமல் போச்சுது இத்தனைநாள் கழிந்து உன்
முகச்சேர்வை யகப்பட்டது இந்த புண்யத்திற்கு சமானமான புண்யம்
கிடையாது உன் சங்கதியெல்லாம் விசிதமாகச் சொல்லவேண்டுமெ
ன்று கேட்க அப்போது நாகவேந்தன் வேந்தனைப்பார்த்து ஐயா!
நாகவள்ளி தினத்தில் தேவி சேவையடைவதற்கு தேவாலயத்திற்குப்
போய் உட்பிரவேசிக்குஞ் சமயத்தில் தேவாலயத்திலிருந்து எழு கெந்
தர்வமாதுகள் வருக அச்சமயத்தில் என்னைக்கண்டு என் நெற்றியில்
திலதமிட்டார் உடனே யான் ஒருக்கிளி ரூபமடைந்தேன் என்னை
எடுத்துக் கொண்டுப் போய் அவரிருப்பிடத்தில் விட்டு மறுபடியும்
நெற்றிக்குத் திலத மிட்டார். உடனே மனித ரூபமடைந்தேன்
அவர் ஏழுப்பேரும் என்னுடன் கிரீடாவினோதம் செய்து போஷித்து
க்கொண்டிருந்தார்கள், இப்போது ஆறுமாதமாக வாரத்துக்கோர்
விசை இராக்காலத்தில் என்னை அழைத்துக்கொண்டுவந்து இங்குவிட்
டுவிட்டு அவர் தேவாலயத்திற்குச்சென்று சேவை செய்துவிட்டுபோகு
ஞ்சமயத்தில் என்னையும் அழைத்துக் கொண்டுப்போய் விடுவார் அவ
ர்கள் நேற்றியதின இராத்திரி இங்குயென்னை விட்டுவிட்டு அவர் தே
வாலயத்திற்குச் சென்று வருஞ்சமயத்தில் என்னை வாவென்றழைந்
தார்கள்.

இதைக்கேட்டு மனவியாகூல மடைந்து எனது நாயகி அகப்ப
டவில்லையென்று யான்சொல்ல இதைக்கேட்டப் பிறகு அவர்கள் ஒன்
றாய் பேசிக்கொண்டு இனிமீது உனது தேவியுடன் சுகமாக இருமெ
ன்று ஆசிர்வதித்துச் சென்றார்களென்றுச் சொல்ல இதைக்கேட்ட
சோமசேகரன் ஐயோ நமது புதல்வி நிர்பாக்கிய மடைந்தவளென்று
எண்ணமிட்டு தன்தேவி முகத்தைப்பார்த்து கண்ணீர்விட்டான், அந்
தேவி ஸ்திரீஜென்ம மானப்படியால் மனந்தாளாமல் புதல்வியை பரிக்
கொடுத்தேனென்று பெருங்கூச்சலிட்டு "புதல்விசென்றால்" என்றுச்
சொன்ன சப்தத்தை நாகவேந்தன்கேட்டு இடிவிழுந்தமரம்போல் பூமி
யில் விழுந்து மூர்ச்சையடைந்தான், இதற்குள் மூர்ச்சைதெளிந்தெழு
ந்து என்தேவி எங்கென்று கேட்க இதற்குள் மந்திரி சமத்காரனைப்
படியால் சோமசேகரனையும் அவன் தேவிதனையும் சும்மாயிருக்கும்

படி கன்னிகைசெய்து நாம் பவானி சங்கதியை நிக்ஷயமாகச்சொன்னால் இவன் பிராணம் விட்டுவிடுவான் என்று எண்ணமிட்டு ஐயா! இராஜபுதல்வனே நீ ஒன்றுக்கும் பயப்படவேண்டாம் உனது தேவியை அம்மாது சிறியதாயார் அழைத்துக் கொண்டுப்போயிருக்கின்றாள் நீ வருஞ்சங்கதி எங்களுக்கு தெரியாதப்படியால் நாங்கள் அனுப்பி இருக்கின்றோம் நான்சென்று அழைத்துக்கொண்டு வருகின்றேன் எனச்சொல்லி காவலரை யழைத்து இந்நாட்டை அலங்கரிக்கும்படி திட்டஞ்செய்து சிலதுபேரை மருமகனுக்கு அப்பியங்கஸ்தானஞ்செய்துவைக்கும்படி உத்திரவுசெய்துவிட்டு தேவிசமேதனாகயிருக்கப்பட்ட சோமசேகரனைப் பார்த்து ஐயா! நான் எத்தனைவிதமாக சொல்லியும் என் மொழிக்கேளாமல் புதல்வியை காட்டிற்கனுப்பி விட்டீர் இந்த சங்கதி அவர் கேட்டால் உடனே பிராணத்தை விட்டு விடுவான், இந்தப் பாபத்திற்கு யார் ஆளாகுவார் நீங்கள் சேவகரை எல்லோரையும் அழைத்து அவரோடு நடந்த சந்தர்பம் சொல்லாமல் இருக்கும்படி திட்டஞ் செய்வீர், அப்படி ஒருசமயம் அவர் கேட்டால் சிறிய தாயார் வீட்டிற்குச் சென்றிருக்கின்றாளென சொல்லும்படி சொல்வீர் யான் அம்மாதை தேடச் சொல்லுகின்றேன் தெய்வ கடாக்ஷத்தால் அம்மாது ஜீவித்திருந்து அகப்பட்டால் என் சமத்காரத்தால் அழைத்துக் கொண்டு வருகின்றேனென்று சொல்லி மந்திரி சோகத்துடன் புரப்பட்டு தேடச்சென்றார், அந்தச் சமயத்தில் காகமானது வலது பக்கமிருந்து இடதுபக்கம் சென்றது, கெருடன்வலது பக்கமிருந்து இடதுபக்கம் போச்சுது மாங்கல்யமாதர் ஜலப்பாண்டத்துடன் எதிரில் வந்தார் நரிகள் சங்கீதம் பாடியது இப்படிநல்ல சகுணங்கள் லபித்தது இதைப்பார்த்து மந்திரி சந்தோஷமடைந்து பிரயாணமடைந்து தான் முதல் பவாணியை விட்டுவந்த கானகம் வந்து தேடிக்கொண்டிருந்தான், இப்படிருக்க மூடமதிதரித்த சோமசேகர வேந்தன் அவன் தேவியும் புதல்வியை நினைந்து சோகமடைந்து மருமகனாகிய நாகவேந்தனுக்கு உபசாரங்கள் செய்துக்கொண்டு மந்திரிவரவை எதிர்ப் பார்த்துக்கொண்டு ஓர் தினத்தை ஓர்யுகமாக காலங்கழித்தார் இதுவுமன்றி அரசுக்குறிய காரியங்களை நாகவேந்தனால் நடத்திக்கொண்டு வந்தார், அவருடைய குணத்திற்கும் புத்திக்கும் யோசனைக்கும் சந்தோஷமடைந்தார், இப்படியிருக்க நாகவேந்தன் தன் நாயகி வாராதிருப்பதைப் பற்றி துயரமடைந்து நித்திரை ஆகாரத்தை விட்டு மந்திரி வாராதிருப்பதை எதிர் பார்த்துக் கொண்டிருந்தான்.



இப்படிச் சொன்னவுடனே சூரியன் மறைந்துவிட்டான் இதைக் கண்டு யோகிக்கதை நிறுத்திவிட்டு சமீபத்திலிருக்கும் வெங்கடாசலமென்றுச் சொல்லப்பட்ட (திருப்பதி) அடைந்து நித்தியக்கடனைத் தீர்த்துக்கொண்டு போஜனஞ் செய்துவிட்டு நித்திரை செய்யுங்காலத்தில் வேடர்கள் யோகியைப் பார்த்து ஐயா இந்த க்ஷேத்திரமகிமை சொல்ல வேண்டுமென்று கேட்க அச்சமயத்தில் யோகிவேடரைப் பார்த்து அப்பா வேடரே நாளையதினம் சொல்லுகிறேன் என்றுச் சொல்லி எல்லோரும் சயனித்தார்கள் உதயமானவுடனே எழுந்து காலக்கடனை தீர்த்துக்கொண்டு பிரம்மானந்தயோகி இந்த க்ஷேத்திர மகிமை சொல்லத்தொடர்ந்தார்.

அப்பா வேடரே கிருதாயுகத்தில் விருஷபாசூரன் நரசிங்கசாமியைக்கோரி தபஞ்செய்யவே அவன் தபத்திற்கு சம்மதித்து எதிரில் வந்து என்ன வேண்டுமென்றுக் கேட்க அவன் யுத்தஞ்செய்யக் கோரினான் அப்படியே ஆகட்டுமென்று அவனை மூன்றுவிசை கேட்க அவன் தனக்கு பரமபதம் வேண்டுமென்றும் தன்னுடைய பெயர் இந்த மலைதன்னில் பிரசித்தியாக வேண்டுமென்று கேட்க அப்படியே ஆகட்டுமென்று அனுக்கிரஹித்தார் கிருதாயுகத்தில் விருஷபாத்திரியென்று பெயருண்டாச்சுது திரேதாயுகத்தில் கேசரியென்னும் குரங்கு பத்தினியான அஞ்சனாதேவி ஆகாசகங்கையிடத்தில் புத்திர பாக்கியமடைய தபஞ்செய்து அனுமந்தனைப்பெற்றாள் அவன்சகலதேவதைகளால் கியாதியடைந்தவனான புதல்வனை பெற்றாளென்று அஞ்சனாதேவி பெயர் பிரசித்தியடையும்படி தேவதைகள் கூறினார்கள்.

ஆகையால் அதுமுதல் அஞ்சனாசலமென்று பெயருண்டாச்சுது துவாபரயுகத்தில் ஆதிசேஷனுக்கும் வாய்வு தேவனுக்கும் கலகமுண்டானப்படியால் வாய்வு தேவனுக்கு கோபமதிகரித்து ஆதிசேஷனை விசிரிப்போடவே மேருபர்வதம் சமீபத்தில் விருஷபாத்திரி மீதில் விழவே அந்தமலையை தூரத்தில் விழும்படியாகவீசினான். அந்த சமயத்தில் அப்பொழுது ஆதிசேஷன் பிகுவாகப்பிடிக்க வாயுபகவான் அந்த பர்வதத்துடன் சுவர்ணமுகரீதீரத்தில் போட அப்போது மேருபர்வதம் வாயுவை பிராதித்து உனக்கு விரோதி சேஷனன்றி என் புத்திரன் விருஷபாத்திரியல்ல மன்னிக்க வேண்டுமென்று கோர அப்படியே விட்டுப்போனான், அதுமுதற்கொண்டு சேஷாத்திரியென்று பிரசித்தி யடைந்து கலியுகத்தில் பாபத்தை தீர்க்கப்பட்ட மலையென்று பிரசித்தியடைந்தப்படியால் வெங்கடாசலமென்றுச் சொல்லப்பட்டது.

இதுவுமல்லாமல் ஹிரண்ணியாக்ஷனை சங்கரித்த வராஹமூர்த்தி இந்தமலை
தன்னில் தேவதை தியானத்தால் நிவசித்திருப்பதால் வராஹியென்று
சொல்லப்பட்டிருக்கிறது இன்னம் முனிவர்கள் சத்வகுணமூர்த்தி எவ
ரென்று தெரிந்துக்கொள்ள பிருகுமுனியை பரிக்ஷிக்கயனுப்ப அந்த
பிருகுமுனி பிரம்மா-பரமசிவனுடைய லோகத்திற்குப்போக அங்கா
ங்கு அவரவர் தேவியுடன் பேசிக்கொண்டிருந்தும் வந்த முனியை
கவனிக்கவில்லை அதன்பிறகு அந்தமுனி விஷ்ணு லோகமடைந்து
லக்ஷ்மி சமேதனாகிய ஹரியையுதைக்க அந்த நாராயணமூர்த்தி எழு
ந்து முனிபாதங்கள் நொந்ததோவென்று மனக்கவலையடைந்துதுயர
மடைந்தார் லக்ஷ்மிதேவி கோபமடைந்து கொல்லாப்புரிக்குப் போய்
விட்டாள், அப்போது சுவாமி! லக்ஷ்மிதேவி கோபத்திற்கு சகிக்கா
மல் தனக்கு வாசயோக்கியமான இடமானது சேஷாசலமென்று யோ
சிக்க அங்கு வால்மீகி வாசஞ்செய்துக் கொண்டிருந்தார்.

இப்படிருக்க பிரம்மா சிவனும் பசுக்கன்றுனார் லக்ஷ்மிதேவி அந்
தப்பசுவை கன்றையும் சோழவேந்தனுக்கு விக்கிரயம் செய்தாள்.
அந்த பசுவானது தினந்தோறும் புற்றிலிருக்கப்பட்ட பகவானுக்கு
பாலைவிட்டுக் கொண்டிருந்தது, இப்படிருக்க வேந்தன் தேவி அந்த
பசுபால் கொடாமல் இருப்பதைப் பார்த்து இடையனை தண்டிக்க
அந்த இடையன் பயமடைந்து அந்தப் பசுப்போகும் வழியாக சென்
றுபார்க்க புற்றுக்குமேல் பாலைப் பிழிய அப்போதந்த இடையனு
க்கு கோபம் பிறந்து கோடாலியெடுத்து அந்தப்பசுவை வெட்டப்
போக அப்போது பகவான் ரக்ஷார்த்தமாக தன் தலைக்கொடுத்தார்,
அப்போது இரத்தம் ஆராகவோட இடையன் அதைப்பார்த்து பய
மடைந்து இறந்தான், அதன் பிறகு அந்தப் பசுவானது வேந்தன்
அருகில் சென்று கண்ணீர்விட்டு நிற்க இதைப்பார்த்து வேந்தன் அந்
தப் பசுவை சமாதானப் படுத்தியும் அது நிற்காமல் வந்துக்கொண்
டிருக்க வேந்தனும் அதின் பின்பற்றி மலைமீதிருந்த புத்திடத்திற்கு
வருக பகவான் சோழவேந்தனைப் பார்த்து அடா நீ பிரம்ம இராக்ஷச
னாக போவாயென்று சாபமிட்டார்.

அப்போது வேந்தன் பகவானைப்பார்த்து சுவாமீ! என்னுடைய
சாபவிமோசனம் என்றைக்கு அனுக்கிரஹிப்பீர் என்றுக்கேட்க பக
வான் கருணித்து ஓ வேந்தனே நீ எனக்கொரு கிரீடம் செய்து சமர்
ப்பித்தால் அதை வெள்ளிக்கிழமை தினந்தோறும் யான் தரித்துக்
கொள்வேன் யான் தரித்துக் கொண்டிருக்கிற வரைக்கும் உனக்கு பிர



ம்மராக்ஷசரூபம் உன்னை விட்டகலும் அப்போது என்னை தியானித்
துக் கொண்டிருந்தால், கலியுகத்தில் உனக்கு பரமபதம் லபிக்குமென்
றுச்சொல்லி இதுவுமன்றி நாராயண வனத்தில் ஆகாசவேந்தனுக்கு
புத்திரரில்லாதப் படியால் புத்திரகாமேஷ்டி யாகஞ்செய்து உழுதுங்
காலத்தில் அந்தக் கழனியில் ஒரு தங்கமயமாகிய பெட்டிதன்னில்
ஒரு சிசுவுயகப்பட்டது அதை வேந்தன் தன்தேவியான தரணிதேவி
கையில் கொடுக்க அம்மாது சந்தோஷமாக பத்மாவதி (அலமேலு
மங்கை) என பெயரிட்டு வளர்த்துகொண்டுவந்தார்கள். இந்த பத்மா
வதி பூர்வீகத்தில் இராவணனுக்கு சாபந்தந்த வேதவதி யென்கிற
மாது இம்மாது விஷ்ணுவுனுடைய தேவி ஆகவேண்டுமென்று தபஞ்
செய்ய இராவணன் மோகித்தப்படியால் ஒருவன் பார்த்த இந்தசடல
த்தை பகவானுக்கு ஆகாதென்று அக்கினி பிரவேசமாகி விட்டாள்
அம்மாதை அக்கினிதேவன் காப்பாற்றிக் கொண்டிருந்தான், பிறகு
சிலநாள் சென்று இராவணன் சீதாபிராட்டியை எடுத்துக்கொண்டு
போக அக்கினிதேவன் எதிர்பட்டு ஓ இராவணா இதுமாயமானசீதை
நிஜமான சீதை என்னிடத்தி லிருக்கிறதென்றுச் சொல்லி ஜானகிதனை
தன்னிடத்தில் இருத்திக்கொண்டு வேதவதியை மாய்கை சீதையாகச்
செய்து இராவணனுக்கு கொடுத்தயனுப்பினான் இராவணனை வதை
த்தபிறகு சீதைதனை அக்கினி பிரவேசமாகும்படி ஸ்ரீராம மூர்த்திச்
சொல்ல அப்பொழுது சீதை இரண்டுப்போக அக்கினிதன்னில் புரப்
பட்டார், அப்போது ஸ்ரீராமன் இதுயென்ன ஆச்சர்யமென்று பார்க்
குஞ் சமயத்தில் அக்கினிதேவன் நடந்த சங்கதியெல்லாம் விசிதமா
கச்சொல்லி வேதவதியை விவாகஞ் செய்துக் கொள்ளுமென்றுச்
சொல்ல ஸ்ரீராமன் இதைக்கேட்டு நான் இந்த ஜென்மத்தில் ஏகபத்
தினி நிறந்தனாக இருக்கின்றேன் கலியுகத்தில் ஆகாசவேந்தனுக்கு
புத்திரியாகப் பிறந்தால் அப்போது விவாகஞ் செய்யலாகுமென்றுச்
சொல்ல அதுப்போலாகவே பத்மாவதி ஆகாசவேந்தனுக்கு பிரந்து
வளர்ந்து எவ்வர்னமடைந்திருக்க ஒருநாள் பத்மாவதி தன் தோழ
ரோடு வனவுல்லாசத்தை பார்க்குஞ்சமயத்தில் பகவான் குதிரையேறி
ஆனைதனை துரத்திக்கொண்டு அங்கு சென்று அம்மாதைமோகித்தார்.
அப்போது பத்மாவதி பகவானென்று அறியாமல் தோழருடன் சொ
ல்லி கல்லால் அடிக்கச்செய்தாள். பிறகு பத்மாவதி ஒண்டியாக இருக்
குஞ் சமயத்தில் நிஜரூபத்தை பகவான்காட்ட அம்மாது மோகமடை
ந்தாள். இப்படி ஒருவர்க்கொருவர் மோகித்து அவரவர் இருப்பிடஞ்
சென்று விவாஹவேதையால் துயரமடைந்தார். இப்படிருக்க தேவகீ

தேவி வகுளமாலிகையென்ற பெயருடன் பிறந்து பகவானுக்கு ஊழியஞ் செய்துக் கொண்டிருந்தாள், அம்மாது புத்திர யபேக்ஷையால் பகவானைப் பார்த்து நீ இப்படியிருக்க காரணமேதென்றுக் கேட்க பகவான் பத்மாவதியை மோகித்தேனென்றுச் சொல்ல அம்மாது இதைக்கேட்டு ஆகாசவேந்தன் அருகில் சென்று பத்மாவதியை பகவானுக்குக் கொடுமென்றுச் சொல்ல வேந்தன் சம்மதமடைந்தான், அதின் பிறகு கொல்லாபுரி தன்னிலிருந்த லக்ஷ்மிதேவியை அழைத்துக்கொண்டு வந்து தேவர்க ளெல்லோரும் கூடி சந்தோஷமாக விவாகஞ் செய்தார்.

இதுவுமல்லாமல் இங்கு பகவான் புஷ்கரணி தீர்த்தம், குமார தீர்த்தம், ஈாததீர்த்தம், கபிலதீர்த்தம், சப்தரிஷிதீர்த்தம், தும்புரர்தீர்த்தம், சக்கிரதீர்த்தம், கிருஷ்ணதீர்த்தம், இந்திரதீர்த்தம், பஞ்சாயுததீர்த்தம், பிரம்மதீர்த்தம், இதுகளுண்டு இன்னம் புஷ்கரணி தீர்த்தத்திற்கு கிழக்கில் மார்க்கண்டேயர் தீர்த்தம், பஸ்சிமமூலையில் வாயுவுதீர்த்தம், அக்கினிமூலையில் அக்கினி தீர்த்தம், வாயுவுமூலையில் வாராஹதீர்த்தம். தெற்குமூலையில் எமதீர்த்தம், வடமூலையில் குபேர தீர்த்தம், நைருதிமூலையில் வசிஷ்டதீர்த்தம், ஈசான்யமூலையில் சாலவ தீர்த்தம், மத்தியில் சாஸ்வதிதீர்த்தம், பிரகாசிக்கிறது இப்படிக்கொற்ற பெருமை பொருந்திய தேசத்தில் வேங்கடேஸ்வர பகவானை சேவையடைந்து அந்தந்த தீர்த்தத்தில் ஸ்தானஞ் செய்தவர் பெரும் பதவியிடைந்து சந்தோஷமாக யிருப்பாரென்றுச் சொல்லி உதயமானவுடனே எல்லோருமெழுந்து சகல தீர்த்தத்தில் ஸ்தானஞ்செய்து பகவானை சேவித்து அங்கிருந்து புறப்பட்டுப் போகவே வேடர் யோகியைப்பார்த்து ஐயா பிறகுக் கதைதனைச் சொல்லுமென்றுக் கேட்க பிரம்மானந்தயோகி சொல்லத்தொடர்ந்தார்.

## பத்தொன்பதாம் மஜிலிக்கதை.

### பதிவிருதாதத்வ பிரதாபம்.

கேட்டீரா வேடரே! அந்த பவாணி பிராமணமாதுடன் புறப்பட்டு தேவபத்திரபுரஞ் சேர்ந்தாள், இப்படியிருக்க அந்நாட்டின் நதியருகில் இருக்கப்பட்ட கரையோரத்தில் குந்திக் கொண்டிருந்தாள். அப்போது அந்த நதியருகில் ஓர் ஏழைபிராமணமாது ஸ்தானஞ்செய்



வதற்கு வருக அம்மாதைக்கண்டு மிருதுமொழியால் சமீபத்திற்கு அழைத்து உட்கார வைத்துக்கொண்டு யோகக்ஷேமத்தை விசாரித்தாள், அந்த ஏழைபிராமணமாது இதைக்கேட்டு அம்மா நானும் என் நாயகன் இருவர் தான் இருப்பதுமென் நாயகனுக்கு இந்தக் கிராமத்தில் புரோஹிதமிருக்கிறது அதனால் ஜீவித்துக் கொண்டிருக்கின்றோம் இதைக்கேட்ட பவாணி அம்மா நான் பரஸ்தலத்தி லிருப்பவள் எனக்கு ரணவியாதி இந்நாட்டில் நல்ல வைத்தியன் இருப்பதாக கேழ்வியடைந்து வந்தேன் சிலதினமிங்கிருந்து ஔஷதம் தின்னவேண்டியது ஆனால் உனக்கு ஓர் நகைத்தருகின்றேன் அதை வைத்துக்கொண்டு எனக்கு பத்தியஞ்செய்து என்னைக் காப்பாற்ற வேண்டுமென்று பரிதபிக்க அந்த ஏழை தன அபேக்ஷையால் சம்மதமடைந்துபவாணியை வீட்டிற்கு அழைத்துக் கொண்டுப்போனாள், அப்போது அந்த இராஜப்புதல்வி தன் கழுத்திலிருக்கப்பட்ட முத்துஹாரத்தைகழட்டி அந்த பிராமணமாதுக் கையில்கொடுக்க அம்மாது இப்பூஷணத்தை பெற்றுக்கொண்டு தன்னுடைய புதல்விக்காகிலும் மேன்மையாக பாதுகார்த்து அதிக விஸ்வாசத்துடன் வளர்த்துக்கொண்டு வந்தாள். இப்படி எட்டுநாள் வரைக்கும் சும்மாயிருந்து ஒன்பதாம் தினத்தில் தன் தேகத்தில் கட்டியிருந்த கந்தைத்துணிகளை அவிழ்த்துப்போட்டு சுத்தமாக ஜலகமாடி அம்மா! உன்னுடைய கைசாதமே எனக்கு அமுர்த்தமாச்சுது யான் இன்று பாக்கியசாலியானேன் என்றுச்சொல்லி வலப்பிரதக்ஷணமாக வந்து நமஸ்கரித்து சந்தோஷப்படுத்தினாள். இதைக்கண்டு அம்மாது இவளுடைய ரூபசவுந்தர்யத்தைப் பார்த்து மோகமடைந்து அம்மா! நீ என்னைப்போலொத்தவளல்ல அந்தப்புரத்திலிருக்கப்பட்ட வேந்தப்புதல்வி போல் தோற்றுகிறது ஆகையால் நீயார்! எங்கிருந்து வந்தவள் எனக்கு உந்தன் சவிஸ்தார மெல்லாம் சொல்லுமென்றுக் கேட்க இம்மொழிக் கேட்டு அம்மாதுடன் துக்கமடைந்து அம்மா! நான் இராஜபுத்திரியாக பிறந்தும் பலனென்ன? அதுயெல்லாம் சொல்வதினால் பயன் கிடையாது என் தாய் தந்தைகள் கெந்தர்வனுக்கு சமமாகிய ஒரு புருஷனுக்கு தந்து விவாகம் செய்து வைத்தார் விசேஷமாய் பகவான் கடாக்ஷத்தால் நிறைவேறியது எனக்கும் கெர்ப்பம் உண்டாச்சுது புகுந்தவீட்டி லிருந்தவனை என்னைப்பெற்ற தாய்தந்தைகள் அழைத்துக்கொண்டுவந்தார். வரும் மார்க்கத்தில் ஆற்றைக்கடந்துவருக சமயம்வந்தது எல்லோரும் படவுதன்னில் அமர்ந்து ஆற்றைக்கடந்து வருஞ்சமயத்தில் தெய்வகடாக்ஷத்தால் படவு முழுகிப்போச்சுது, அப்போது எல்லோரும் ஆற்றி

லே அடித்துக்கொண்டு போய்விட்டார். யான் அதிககஷ்டமடைந்து தெய்வகடாக்ஷத்தால் இக்கரை சேர்ந்து உங்கள் கர்பவாசத்தில் சேர்ந்து சுகமாக யிருக்கின்றேன் ஆபதைக்காலத்தில் ஆதரித்தவரே தாய் தந்தை என்றுச் சாஸ்திரம் சொல்லிருக்கிறது அதெப்படியென்றால்,

(சுலோகம்)

க்ஷத்திரியாணும் ரணேம்ருத்யு ர்யோஷிதாம் ப்ரசவேததா
ம்ருகாணும் வக்ஷீணும் வ்யாதை ப்ராயசஃச்வசிதவ்யதா.

என்னும் மொழிபோல் க்ஷத்திரியருக்கு யுத்தகாலத்திலும் மாதருக்கு பிரசவக்காலத்திலும் காட்டு வயல்களுக்கு வேடராலும் மரணக்குரியுண்டாகும் இப்படியல்லாமல் வேறொரு விதமாக மரணம் சம்பவிப்பது அபூர்வமாகுமென்றுச்சொல்லி கண்ணீர் விட்டழுகவே அந்த பிராமணஸ்திரீயின் மனதுகறைந்து நீராகவோடி அம்மா! நீதுயரப்படவேண்டாம் பூலோக மாதாவாகிய சீதாப்பிராட்டி மண்டலேஸ்வரபதியான ஸ்ரீராமனால் கர்பனியாக இருக்குங்காலத்தில் கானகம்போகக் காலம் நேர்ந்தது அந்த உத்தமமாதை வால்மீகிமுனிவர் தன் இருப்பிடத்தில்வைத் தாதரிக்க கர்பசின்னமில்லாமல் குளிகுளித்துகுசலவனை இன்றெடுக்க அம்முனி சகாயத்தால் லவணனை உண்டுசெய்தார். இந்த இரு ஆண்குழந்தைகளுடன்சுகமாகயிருந்ததுபோலுனக்குஆண் புதல்வனே ஜனித்து உன் மனோவேதையை தீர்ப்பான் என்று சமாதானஞ்செய்துச் சொல்லவே இதைக்கேட்ட பவானி ஓ அம்மணி! என் பாக்கியத்திற்கு உங்கள் வீடே வால்மீகி வீடாகும் சீதாபிராட்டியை வால்மீகிரிஷி போஷித்ததுபோல் நீங்கள் இருவர் என்னைக் கைவிடாமல் ஆதரித்துக்கொண்டு வருகின்றீரென அம்மாதின் இரண்டு கரத்தைப்பிடித்து கண்ணில் வொத்திக்கொண்டு புகழ்ச்சியாகப் பேசவே இதைக்கண்ட அப்பிராமணமாது கனிகரமாக தன் புதல்விப்போல்மனமிட்டு தினம் ஸ்நானபானம் செய்துவைத்து கோரிய பதார்த்தங்களை கொண்டுவந்துக் கொடுத்து ஆதரனை செய்தார்.

இப்படியிருக்குஞ் சமயத்தில் அந்நாட்டிலிருக்கப்பட்ட தாசியானவள் தன் வீட்டில் நடக்கும் தெவஷத்திற்கு புரோஹிதனை அழைத்துக்கொண்டு வரும்படி சேடிகளில் ஒருத்தியை அனுப்ப அந்தசேடி ஓட்டமாக ஓடி வேதியன் வீட்டிற்கு வந்து அவன் தேவியுடன் மொழியாடிக் கொண்டிருந்த பவானியைப் பார்த்து ரூபசவுந்தர்யத்திற்கு ஆனந்தமடைந்து அங்கிருந்து ஓடிச்சென்று அந்த தாசியைக்கண்டு ஓ சுந்தராங்கி நான் புரோஹிதன் வீட்டிற்குச் சென்று



அவனை அழைக்குஞ்சமயத்தில் அந்த வீட்டில் ஒரு சுந்திரமாதைக் கண்டேன் அம்மாதின் அழகை என்னால் சொல்லத்தரமல்ல ஆதிசேடனும் வர்னிக்க நலமல்ல உனக்கு அசக்தியானக்காலம் லபித்து இருப்பதால் எதாகிலும் உபாயஞ்செய்து அம்மாதை அழைத்துக்கொண்டு வந்து உன் வீட்டில் வைத்துக்கொண்டால் உனக்கு சகல சம்பதைகள் கைக்கூடுமென்றுச் சொல்லவே இம்மொழிக்கேட்ட அந்த தாசியானவள் அதிக சந்தோஷமடைந்து உடனே அனேக விதமான புஷ்ப பழங்களை தட்டிலெடுத்துக் கொண்டு வேதியன் வீட்டிற்குச் சென்று பவானி எதிரில் வந்து தான் கொண்டுவந்த பழங்களைவைத்து வந்தனஞ்செய்து அம்மா! உன்னைப்போலொத்த உத்தமரை சேவித்தால் என் ஜன்மம் சாபல்சமாகும் நீ எதுக்கும் ஆலோசிக்கவேண்டியதில்லை நான் தினந்தோரும் உனக்கு வேண்டிய வஸ்துக்களைக்கொண்டு வந்துக்கொடுக்கிறேன் இதுவுமல்லாமல் இந்த விடத்தில் சங்கடமுண்டானால் என் வீட்டிற்கு வந்திரும் உனக்கு ஊழியஞ்செய்வதற்கு இரண்டு சேடிகளைத் தருகின்றேனென சொன்னவுடனே பவானி இவள் நடத்தையையும் சமத்கார மொழிகளைப் பார்த்து இவள் தாசிமாதென்று தன் மனதில் எண்ணிக்கொண்டு இவள் மொழியாடுவதில் மோசக்காரியென்று நிச்சயித்து அம்மா! எனக்கு சேடிகள் தேவையில்லை உங்கள்போலொத்தவர் வீட்டிற்கு வரப்பட்டவள் நானல்லவென்று கண்டிதமாக மொழியாட இதைக்கேட்ட அந்த தாசி ஆ ஆ இவளை நல்லப்படியாக வசப்படுத்த வேண்டியது தவிர மற்றொன்றும் செய்யலாகாது என மனதில் எண்ணமிட்டு தினந்தோரும் இராஜப்புதல்விக்கு புஷ்பபழங்கள் சுகந்த சந்தனம் கொடுத்தனுப்பிக் கொண்டிருந்தாள்.

இப்படிருக்க அந்த பவானி இந்த தாசிமாது கொண்டு வரப்பட்ட வஸ்துவுகளை கண்ணால் பார்க்கிறதுமில்லை தன் நாயகனை நினைந்து துயரமடைந்து இரவும் பகலும் அவர் பாதமே தியானமந்திரமாக யிருந்தாள். இப்படிருக்குஞ் சமயத்தில் அம்மாது தசமாதம் பூர்த்தியானவுடனே பிரசவவேதனை அடையுஞ் சமயம் தாசி கேட்டு இந்த சமயத்தில் இவளுக்குத் தகுந்த உபகாரஞ்செய்து பிறக்குஞ் சிசுவை நாம் அபகரிக்க வேண்டுமென்று பெருமனமிட்டு பிரசவகாலத்திற்கு வேண்டிய சாமான்களைக் கொடுத்து அந்த பிராமணமாதை அழைத்து அம்மா! நீங்கள் அதிக நிறுபேதை யுடையவர் உங்கள் நிமித்தார்த்தமாக அம்மாதுக்கு சகாயஞ்செய்ய எண்ணமிட்டு

வந்தேனென்றுச் சொல்ல அந்த பிராமணமாது அவளுடைய சூது மார்க்கந் தெரியாமல் பவாணியை அவள் சுவாதீனப் படுத்தினாள், இப்படியிருக்க அந்த தாசியானவள் தனக்கு அனுகூலமடைந்த மறுத்வமாதை யழைத்து தன்னுடைய சேடிகளை சகல காரியத்திற்கும் அனுகூலமாகும்படி விட்டு அந்த வேதியன் வீட்டிலிருந்தால் கஷ்டம் வருமென்று யோசித்து வேதியனுக்கு ஓர் வேலையிட்டு அனுப்பிவிட்டாள், பிறகு அவன் தேவியை அழைத்து அசாத்தியமான காரியம் சொல்லி அனுப்பிவிட்டு பவாணியை அரைக்குள் அழைத்துக்கொண்டு வந்து அம்மணி! நீ தலைசன் புத்லவனை பெருவதாலே அந்த சலட்டைகளை நீ கண்ணால் பார்த்தால் உன் புருடனுக்கு சங்கடம் சம்பவிக்குமென்றுச் சொல்லி அம்மாது கண்களை இறுக்கக்கட்டி மறுத்வமாதை அழைத்து அடிமாதே! பாலகன் பிறந்தவுடனே தொப்பின் அறுத்து முரத்திலிட்டு என் கையில் கொடுமென்றுச் சொல்லி காத்துக் கொண்டிருந்தாள். அந்த இராத்திரி முதல் ஜாமத்தில் பவாணி ஆண் குழந்தையைப் பெற்றாள், உடனே மறுத்துவமாது தொப்பிளறுத்து விட்டு முரத்தில்போட்டு அந்தப்பாலகனை தாசிகையில் கொடுத்தாள். அவள் அந்த சிசுவானது ஆண் குழந்தையென தெரிந்து இது நிஷ்பரியோஜனமென்றுச் சொல்லி சேடிகளை அழைத்து அடி சேடிகளே இந்த சிசுவைக் கொண்டுப்போய் கோட்டைமதில் செவரேறி அகற்றிதன்னில் போட்டுவிட்டு வருவீரென உத்திரவு செய்து விட்டு பவாணி நேத்திரத்தில் கட்டியிருக்கும் துணியை அவிழ்த்து விட்டு அம்மா நீ இந்தக்கல்லை பெற்றாய் என்றுச்சொல்ல இதைக்கேட்ட பவாணி நாம் பெற்றது பாலகன் தவிர வேறொன்றுமில்லை என மனதிடம் தெரிந்துக்கொண்டு இந்த தாசி ஏதோ சூதுசெய்திருக்கின்றாள் என துக்கமடைந்து ஐயோ எனக்கு ஆபதைகள் வந்தால் கடலில் அலைகல்போல் சூழ்கின்றது ஆனால் சர்வத்திற்கும் காரண பூதமானவன் அந்த சர்வேசன் அன்றி வேறொன்றும் கிடையாது என மனதைர்யமிட்டு ஓர் கரிதுண்டெடுத்து பாலகன் ஜன்மித்த நாளும் திதியும் நக்ஷத்திரம் செவித்தின் மீது எழுதி வைத்துவிட்டு துக்கத்துடன் பகவானை தியானமடைந்திருந்தாள்.

இங்கு அந்த சேடிகள் சிசுவைக் கொண்டுப்போய் கொல்வதற்கு மனம் வருகாமல் பிரியத்துடன் தொட்டில் கொண்டுவந்து அதில் கொழுந்து மாயிலைகளைப் பரப்பி அதில் பாலகனை வளர்த்தி அந்த தொட்டிலுக்கு கயற்கட்டி மெதுவாக அகற்றியில் விட்டு விட்டார், இப்படிசேடிகள் சிசுவைவிட்டு வந்தவுடனே அந்த ராத்திரியெல்லாம்



ஜகத்ரக்ஷகனான பரந்தாமன் காத்துக்கொண்டிருந்து அந்நாட்டின் வேந்தனாகிய பத்திரவேந்தன் கினவில் சென்று அடா உனக்கு புத்திர பாக்கியம் வேண்டி தினந்தோரும் என்னை ஸ்மரிக்கிறாய் ஆகையால் உனது பக்திக்கு சம்மதித்து உனக்கு புத்திரபாக்கியம் தந்திருக்கிறேன் நீ இப்பட்டணத்து கோட்டை சுற்றிலுமிருக்கும் அகற்றியருகில் சென்று அங்கு இருக்கப்பட்ட சிசுவை இத்தக்ஷணம் எடுத்துக் கொண்டுவந்து உன் தேவியிடம் தருகுவாயென்றுச் சொல்ல இந்தக் கினவுக்கண்டவுடனே வேந்தன் திடுக்கிட்டெழுந்து தீவட்டிகள்போட்டுக்கொண்டு அந்த சிசுவு யிருக்கப்பட்ட இடம் தேடிப்பிடித்து அதிக சந்தோஷத்துடனே அந்த சிசுவை எடுத்துக்கொண்டு வந்து அந்தப்புரத்திற்குச் சென்று நாயகி கையில்கொடுத்து நடந்த சவிஸ்தாரத்தை அம்மாதுக்குச் சொல்ல அதிக சந்தோஷமடைந்து அந்த சிசுவை தன் பக்கத்தில் இடுக்கிக்கொண்டு அந்த சிசுவு இருக்கப்பட்ட அழகைப்பார்த்து மெய்மறந்து நாயகி நாயகனும் சகலோபகாரம் செய்து வந்தார்.

இப்படிருக்க மறுநாள் உதயமானவுடனே வேந்தன் கொலுச்சாவடியடைந்து தன் மந்திரிதனை அழைத்து அப்பா மந்திரி! நமக்கு பகவான் கடாக்ஷத்தால் ஒருப்பாலகன் அகப்பட்டான் அது எந்த ஜாதிமாது பெற்றாளோ? அதை நீ விசாரித்து எனக்குச் சொல்லவேண்டுமென்று உத்திரவு செய்ய இதைக்கேட்ட மந்திரி சம்மதமடைந்து தன்னுட்டில் விருந்தெனபரைசாட்டி அந்நாட்டிலிருக்கும் ஜெனங்களையெல்லாம் வரவழைத்து போஜனமிட்டு போஜனஞ் செய்தப்பிறகு தாம்பூலம் கொடுக்க தான் நின்றுக்கொண்டு தன்னுடன் ஒரு வைத்தியனைநிறுத்தி ஒவ்வொருமாதரையும் பரிசோதித்துவிட அதினால் தோன்றுதப்படியால் பிறகு அந்தநாட்டிலிருக்கும்கொத்தவால்தனை அழைத்து அடா நமதுதேசத்தில் இருக்கப்பட்ட மறுத்துவ மாதரை அழைத்து எட்டு தினத்திற்குமுந்தி எங்கெங்கு மறுத்துவம் பார்த்தீர் அதில் எத்தனை சிசுவு செத்தது மாதர்கள் எத்தனைபேர் பிழைத்தார்? எத்தனை மாதர்கள் செத்து எத்தனை சிசுக்கள் பிழைத்தது இப்படியாக ஒவ்வொருத்தியை வெகுமதியாக ஒருசேலை கொடுத்துக் கொண்டு வருவாயென்று உத்திரவுசெய்ய அதுபோல் கொத்தவால் விசாரித்துக்கொண்டு ஒவ்வொரு மறுத்துவமாதுக்கு சேலைத்தருக இதைக்கண்ட அந்த பவாணிமாதுக்கு மறுத்தவம் பார்த்தவள் ஓடிவந்து ஐயா! யான் நேற்று இராத்திரி சுமார் ஒன்பது மணி

க்கு இந்த கிராமத்திலிருக்கும் புரோஹிதன் வீட்டில் வந்திருக்கப்
பட்ட மாதுக்கு மருத்துவம் பார்த்தேன் அந்த சிசுவை இந்நாட்டிலி
ருக்கும் திரிலோக சுந்தரியென்று பெயர்ப்பூண்ட தாசியானவள் உட
னே என் கையிலிருந்த சிசுவை பெற்றுக்கொண்டாள், அந்த சிசுவை
ஏதுச்செய்தாளோ எனக்குத் தெரியாது என்றுச் சொன்னவுடனே
அந்த தாசியைப் பிடித்து விசாரிக்கவே அம்மாது சொன்னது யாதெ
னில் ஐயா! நான் சேடிகள் வசம் தந்தேன் என்றாள் உடனே சேடி
களை விசாரிக்க அவர்கள் ஐயா! இந்த சிசுவை அகற்றில் போடும்படி
ச்சொன்னாள் நாங்கள் சிசு அத்தி செய்யலாகாதென்று எஜமானி
உத்திரவு வெறுத்து அதை ஓர்தொட்டிலில் படுக்கவைத்து அகற்றின்
கரையோரத்தில் மெதுவாக விட்டு வந்தோம் உனது உத்திரவுப்
போல் செய்தோமென்று பொய்மொழியாடினோம் அதன் பிறகு அந்த
சிசுவு எந்த கெதியாச்சுதோ எங்களுக்கு தெரியாதெனச் சொல்ல
இதைக்கேட்ட மந்திரி உடனே வேதியதம்பதிகளை அழைத்து விசாரி
க்கவே அவர்களால் நடந்த சங்கதியெல்லாம் தெரிந்துக் கொண்டு
அந்த தாசியை சிறைதன்னிலடைத்து சேடிகளையும் மருத்துவமாதை
வேதிய தம்பதிகளை வேந்தனிடம் அழைத்துக் கொண்டுப்போய் கொ
லுவில் நிறுத்தி ஐயா! சந்தேகம் தீர்ந்துவிட்டது எனச்சொல்லி சமீப
த்தில் நின்றுக்கொண்டான் வேந்தன் இவர்கள் வாக்கு மூலம் விசாரி
த்து அந்த தாசிமாதே தப்பிதம் செய்தாளென்று தெரிந்து அந்த
வேதக்குலத்தாராகிய வேதியரை யழைத்து அம்மாது யார்! உங்களி
டம் வந்திருக்கக் காரணமேது என்றுக்கேட்க, இதைக்கேட்ட அந்த
வேதியன் ஐயா இராஜோத்தமா! அம்மாது இராஜப்புதல்வியாம் புகு
ந்த வீட்டிலிருந்து தாய் தந்தைகள் அழைத்துக்கொண்டுப் போகுஞ்
சமயத்தில் குறிக்கில் நதிவருக அந்த ஆற்றைக்கடவதற்கு எல்லோ
ரும் படவேறி நடக்க அச்சமயத்தில் படவு மூழ்கி எல்லோரை
யும் அடித்துக்கொண்டுப் போச்சுதாம் இம்மாது மாத்திரம் பகவான்
கிருபையாலே கரைதங்கினளாம் இப்படிருக்க என்னுடைய பார்யாள்
ஸ்தானஞ்செய்ய ஆற்றுக்குப்போக அப்போ திம்மாதைக்கண்டு அம்
மாது எனக்காரும் திக்கில்லை யான் அனாதி என்னை ரக்ஷிக்கவேண்டு
மென்று பிராதித்தாளாம் அவள் அழைத்துக்கொண்டு வந்து என்னு
டன் சங்கதிச்சொல்ல இதைக்கேட்டு யான் நமக்கு பகவான் ஏது
செய்வானோ தெரியாது நாம் ஒருவருக்குச் சகாயஞ்செய்தால் நம்
மை பகவான் காப்பாற்றுவானென்று பெருமனமிட்டு என் வீட்டில்
வைத்துக்கொண்டு போஷித்துவந்தேன் இந்ததாசியானவள் இம்மாது
பிரசவிக்கும் காலத்தில் சிசுவைக் கொண்டுபோனாள்.



இதையறிந்த அம்மாது பத்தியத்தைக் கைக்கொள்ளாமல் நய
ரமடைந் திருந்தாளென்றுச் சொன்னவுடனே கோபம்பிறந்து பத்திர
வேந்தனுக்கு கண்கள் சிவந்து அந்த தாசியை தலைமொட்டையடித்து
கழுதை மீதிலேற்றி நாடெல்லாம் திருப்பி அந்நாட்டைவிட்டு வோட்டி
விட்டார், மருத்துவமாதுக்கும் பிராமண தம்பதிகளுக்கு வெகுமானங்
கொடுத்து சேடிகள் வசம் சிசுவை தொட்டிலுடன் எடுத்துக்கொண்டு
வேதியன் வீட்டிற்குவந்து பவாணியைக்கண்டு அம்மணி! எனக்கு
பகவான் பிரத்யக்ஷமாக எனது கனவில் வந்துச்சொல்ல அதைக்
கேட்டு நானும் மந்திரியும் புறப்பட்டுப் போய்ப்பார்க்க இந்த சிசுவு
அகப்பட்டது அதைக் கொண்டுவந்து இதுவரைக்கும் காப்பாற்றி
னோம் இப்போதுனது சங்கதிகளெல்லாம் இவர்களால் தெரிந்துக்
கொண்டு வந்தோம் இதோ பாருமம்மா உனதுப்புதல்வன் நீதுக்கப்
படவேண்டாம் பகவான் கடாக்ஷத்தால் எனக்கு கிட்டியும் பெற்ற
தாயானவள் நீ துயரப்பட்டுக் கொண்டிருப்பதைத் தெரிந்து தாயும்
பிள்ளையையும் ஒன்றாகச்சேர்க்கவேண்டுமென்று எண்ணி உன்னருகில்
கொண்டு வந்தோம் நீயார்! என்னக்காரணமாக இங்கு வந்திருக்கின்
றாய்? என்னாலாக வேண்டியக் காரியமிருந்தால் நீ சந்தேகப்படாமல்
சொல்லுவாயானால் யான் சகாயம் செய்கிறேனென்றுச் சொன்ன
வுடனே இதைக்கேட்டு பவாணி ஐயா! இப்போது பகவான் உத்திர
வுப்படி நீரே ரக்ஷிக்கவேண்டுமென்று அந்தப் பாலகனையெடுத்து அவ்
வேந்தன் தேவியிடத்தில் கொடுத்து நான் நீங்கள் பெற்றக்குழந்தை
இந்தப்பாலகன் உங்கள் பேரப்புதல்வன் ஆனால் எனது இரேகம் சவு
க்கியமாகிற வரைக்கும் ஒரு மாதக்காலம் இங்கிருக்கின்றேன். அதன்
பிறகு எனக்கு சகாயமாக நாலுப்பேர் சேடிகளையும் உங்கள் மந்திரி
யும் இந்த வேதிய தம்பதிகளையும் என்னுடன் அனுப்பினால் யான்
எனது நாயகனிடம் சொல்லுவேனென்றுச் சொல்ல, இம்மொழிகே
ட்டு வேந்தன் சந்தோஷமடைந்து அப்படியே யாகட்டுமம்மா உன்னு
டனே நாங்கள் நால்வரும் வந்து நாயகரிடத்தில் விட்டு செலவுபெற்
றுக்கொண்டு வருகின்றோம் அதுவரைக்கும் உனக்கு வேண்டிய உப
சாரஞ் செய்ய பரிஜனங்களைக் கூடி இந்த வேதிய தம்பதிகளுடன்
பாலகனைப் போஷித்து பிரத்யேகமாக அந்தப்புரத்தி லிருமென்றுச்
சொல்ல அதற்கந்தமாது சம்மதமடைந்தவுடனே பல்லக்குக்கொண்டு
வந்து தாயும் பிள்ளையையும் பல்லக்கில் ஏற்றிக்கொண்டு அந்தப்பு
ரமடைந்து அம்மாதுக்கு சகல உபசாரங்கள் செய்துக் கொண்டிரு
ந்தார்.

இப்படியிருக்க அந்த பவானியை தேடிக்கொண்டுவந்த சோம
சேகரன் மந்திரி பத்திரவேந்தன் பட்டணம் வந்து அந்நாட்டிலிருக்
கும் மந்திரி வீட்டிலிறங்கி ஸ்நானபோஜனம் தீர்த்துக்கொண்டு தாம்
பூலம்-கைப்பிடித்து அஜாரத்திலமர்ந்து அந்நாட்டின் மந்திரியுடைய
யோகக்ஷேமங்களை விசாரித்து பிறகு ஐயா! உமது வேந்தனுக்கு எத்
தனை புதல்வரென்று விசாரிக்க இதைக்கேட்ட அந்நாட்டின் மந்திரி
ஐயா! அவருக்கு புத்திரபாக்கியம் கிடையாது இப்போதிந்நாட்டி
ற்கு ஓர் இராஜப்புதல்வி வந்திருக்க அம்மாதின் சிசுவைப்போஷித்
துக்கொண்டு வருகின்றாரென்றுச் சொன்னவுடனே இம்மொழிக்
கேட்ட சோமசேகரன் மந்திரி பவானியை நினைந்துக்கொண்டு கண்
ணில் நீரைவிட்டு ஆ ஹா! பிரஜைகளை கெடுப்பதற்கும் ரக்ஷிப்பதற்கும்
பகவானே காரண பூதமாக யிருக்கின்றானன்றி மனிதரால் ஏதும்
பயனில்லையென்றுச்சொல்லி துக்கமடைந்திருக்க இதைப்பார்த்த பத்
திரவேந்தன் மந்திரி அவரைப்பார்த்து ஐயா! நிர்நிமித்தியமாக இவ்
வளவு சோகமடையக் காரணமேதென்றுக் கேட்க, அப்போது அந்த
மந்திரி பத்திரவேந்தன் மந்திரியைப் பார்த்து ஓ உத்தமபுருஷா என்
மொழியைக் கேட்பீர் எப்படியென்றால் நீர் சொல்லியமாது எந்தனை
ஆதரிக்கப்பட்ட வேந்தன் புதல்வி அம்மாதின் பெயர் பவானி என்
றுச் சொல்வார் நானுமிப்போது அம்மாதை தான் தேடிக்கொண்டு
வந்தேன் நான் அம்மாதைப் பார்க்கவேண்டும் நீர் என் மீதில் கடா
க்ஷம் வைத்து உங்கள் வேந்தனிட மழைத்துச் சென்றால் நானே
ரில் பேசிக்கொள்வேனென்றுச் சொன்னவுடனே இம்மொழியைக்கே
ட்டுபத்திரவேந்தன் மந்திரி இவரை யழைத்துக் கொண்டுபோய் வேந்
தன் முன்னில் விடவே நடந்ததை யெல்லாம் அவர் முன்னில் சொல்
லவே அவ்வேந்தன் இவருக்குத் தைர்யமொழிச் சொல்லி அம்மாது
யிருக்குமிடத்திற்கு அழைத்துக்கொண்டு போய்விடவே அம்மாது
இந்த மந்திரியைப் பார்த்து ஓ துர்மந்திரி! எனக்கு உண்மையைச்
சொல்லாமல் கானகத்தில் ஒண்டியாக என்னை விட்டுப்போக மனமிட்
டீர். அப்படி செய்வதைவிட என் சிரம் கொய்துவிட்டால் உத்தமமல்
லவா எனக்கிப்படிக்கொத்தக் கஷ்டம் அனுகாதிருக்கு மல்லவா
வென்றுச் சொன்னவுடனே மந்திரி சோகமடைந்து அம்மா! நீ என்
மீது கோபஞ்செய்யவேண்டாம் என்னுடைய பழி ஏதுங்கிடையாது
உன் தந்தை உத்திரவின்படி நடத்தினேன் நான் உனது தந்தைக்
கெத்தனை விதமாகச்சொல்லியும் கேளாமல் மூர்க்கமனமடைந்து இரு
ந்தபடியால் அவர் மூடானதிற்கும், இராஜதுரோகத்திற்கும், பாத்



திரனாகாதப்படிக்கு அவர் உத்திரவுக்கு சம்மதமடைந்தேன் நீயே
யோசித்துக்கொள்ளலாம் தவிர உனது விஷயத்தில் யான் பிரவேசித்
தவனல்ல உனக்கந்த சங்கதியைச் சொல்லியிருந்தால் உடனே உன்
சால்வெடித்து நீ மரணமடைந்திருப்பாய் இன்னங்கேளாய் ஸ்ரீராமசே
ந்திரன் துஷ்டநிக்கிரஹ சிஷ்டப்ரிபாலஞ் செய்ய உத்தேசமடைந்து
பூலோகத்தில் தசரதசக்கிரவர்த்தி உதிரத்திற்பிறந்து வளர அவரைவ
னவாச மனுப்பவேண்டுமென்று பெருமனமிட்ட கைகேசிமொழியால்
இராமபிரான் வனவாசம் செய்ததுப்போல் உன்பாபத்திற்கு யானே
பாத்திரனாக யிருந்தேனென்று நிஷ்டுரமாகச்சொல்லி அம்மா! யேக
சுவரூபனான பகவான் தேவியாகவும் பூபுத்திரியாகவும் பிறந்த ஆதி
லக்ஷ்மியான சீதாபிராட்டியும், ஏகசக்கிராதிபதியான துருபதி மகா
வேந்தன் வயிற்றில் பிறந்ததுரோபதிக்கும் வனவாசம் லபித்திருந்தது
இப்படியெல்லா மிருக்க நம்மைப்போல மனிதருக்கு மனவியாகூல
மேன்! அந்த துக்கத்தை விட்டு என்மீது கருணைக்கூரும் நானொரு
நல்லமொழிச் சொல்லுகிறேனென்றுச்சொல்ல இதைக்கேட்டம்மாது
மந்திரியைப்பார்த்து அய்யா! என் நாயகன் சங்கதி ஏதாகிலுந் தெரி
யுமாவென்றுக்கேட்க அப்போது மந்திரி அம்மா! உனக்கந்தமொ
ழிச்சொல்வதற்கு நான் வந்தேன் எப்படியென்றால் உன்னை கான
கத்தில் விட்டுவந்த மறுதினத்தில் உன் நாயகன் வந்து நீ சயனித்
துக்கொண்டிருந்த மஞ்சத்தின்மீது சயனித்துக் கொண்டிருந்தார்
இதை சேடிகள் தெரிந்து தந்தைக்குச்சொல்ல அவர் கடினகோப
மடைந்து செந்திராயுதம் கைப்பிடித்து கொல்வதற்குப் போனார், அவ
ரை நான் தடுத்து மனதை சாந்தப்படுத்தி யான் ருகில்சென்று மஞ்
சத்தின்மீது சயனித்துக்கொண்டிருந்தவரை யெழுப்பி விசாரிக்க உன்
பதியென்று தெரிந்துக்கொண்டு உன் தந்தைக்குச் சொன்னேன்,
இதைக் கேட்டவுடனே அவர் கோபம்விட்டு அவர் க்ஷேமத்தை விசா
ரிக்க உன் கணவனை கெந்தர்வ மாதர்கள் கொண்டுபோனது முதல்
வந்ததுவரையில் நடந்ததெல்லாம் ஒளியாமற்சொல்லி உன்னைக் குறித்
துக்கேட்டார், உன்தாய்தந்தைகள் நிஜத்தைச் சொன்னார்கள்.

அதைக்கேட்டு உன் நாயகன் பிராணத்தைவிடத் துணிந்தார்?
இதற்குள்ளாக நானுன்னை சிறிய தாயார் அழைத்துக்கொண்டுப்
போனதாகச் சொல்லி யான் சென்று அழைத்து வருவதாக பொய்ச்
சொல்லி சமாதானப்படுத்தி உன் தாய்தந்தையை யழைத்து நான்
சொன்னப்படி சொல்லென்று திட்டப்படுத்திவிட்டு தேடி வருகிறதாக

தந்தையிடஞ்சொல்லி புறப்பட்டுவந்தேன் நான் வருஞ்சமயத்தில்
சுபசகுனங்க ளகப்பட தைரியம் பிறந்து வந்தேன் யான் நமது
நாட்டை விட்டுவந்து ஆறுமாதகாலமாச்சுது உன் புருடன் என்ன
கெதியானாரோ தெரியாது.சீக்கிரத்தில் சங்கதி சொல்லியனுப்பிவிட்டு
பிறகு நாம் தாமதமாகப் போகலாமென்றுச் சொன்னவுடனே
இம்மொழியைக்கேட்ட பவானி சந்தோஷமடைந்து மந்திரிமீதிருந்த
கோபத்தைவிட்டு அப்பா மந்திரி சீக்கிரங் கடித மெழுதென்றுச்
சொன்னவுடனே மந்திரி கடிதத்தைக் கைப்பிடித்து சோமசேகரவேந்
தனுக்கு கடிதமெழுத வுத்தேசமிட்டார், எப்படியென்றால் மகாகுணம்
பொருந்திய மார்த்தாண்ட திவ்யகுணாகர சோமசேகர மகாவேந்த
னுக்கு மந்திரி யானெழுதிக்கொண்ட விஞ்ஞாபனம் யாதெனில்
யான் சன்னிதானம் விட்டு வந்தப்பிறகு பவானிதேவி முதலானவர்
களை அழைத்துக்கொண்டு பகவான் கடாக்ஷத்தால் காசியாத்திரை
யடைந்து புண்யதீர்த்த ஸ்தானஞ் செய்துக்கொண்டு இத்தினத்தில்
பத்திரவேந்தன் பட்டணமடைந்தோம் இப்போ யெல்லோரையும்
அழைத்துக்கொண்டு பதினைந்தாந் தினத்தில் நாங்கள் வந்து சேரு
கின்றோம் அதுவரைக்கும் தங்களுடைய மருமகனை வேந்தனுக்கு
இதுபோல் சொல்லவேண்டியதென ஓர் கடிதமெழுதி அம்மாது
வசங்கொடுக்க அதை யம்மாது வாசித்துப்பார்த்து சந்தோஷ
மடைந்து யான் என்கணவன் பாத கமலங்களை தியானிப்பதாகச்
சொல்லி எழுதும்படிச்சொல்ல இதையெல்லாம் பத்திரவேந்தன் பார்
த்து சந்தோஷமடைந்து வேகமாக நடக்கப்பட்ட குதிரையும் ஆளை
யும் வரவழைத்து அந்தக் கடிதத்தைத்தந்து இதைக் கொண்டுபோய்
சோமாவதி புரத்தை பரிபாலிக்கும் சோமசேகர வேந்தனுக்கு தந்து
வரும்படி திட்டஞ் செய்தவுடனே அந்தக்கடிதம் கொண்டு காவலர்
சோமப்புரி நாட்டிற்கு புறப்பட்டு வந்தார்.

இப்படிருக்க சோமசேகரனும் அவன் தேவியும் மந்திரி வராதி
ருப்பதைப்பற்றி துயரமடைந்து புதல்வி சோகத்தில் மூழ்கி இரவும்
பகலும் நித்திரை ஆகாரம்விட்டு துக்கத்தில் வாழ்ந்தார் இதுபோலா
கவே நாகவேந்தன் ஒருதினம் இராத்திரிவேளையில் அந்தப்புரத்
திலிருக்கப்பட்ட ரத்தினகசிதமாகிய மஞ்சத்தின்மீது சயனித்திரு
க்க மன்மதவேதை சகிக்காமல் தன் நாயகியை நினைந்து துயரமடை
ந்து ஐயோ! என் நாயகி என்னை விட்டுப்பிரிந்தெங்கு சென்றுளோ
அவள் தாய்தந்தைகள் நான் இல்லாததைப்பற்றி இனியாருக்காகிலும்
தந்து விவாகஞ் செய்துக்கொடுத் திருக்கின்றரோ அப்படிச்செய்



தால் அவளெப்படி உடன்படுவாள் யான் வாரத்திற் கோர்விசைவந்து
அவளுடையமனதை சந்தோஷப்படுத்திக்கொண்டு வந்தேனே அப்படி
யிருக்க துஷ்டக்காரியம் நடந்திருப்பாளா? மாதர்களெப்போதும் ரூப
முடைய புருடன்மீது மனமிட்டிருப்பாறன்றி இதரமான புருடனை
என் கைப்பற்றிருக்க லாகாது சீ! சீ! மாதர்களை யாராகிலும் நம்பு
வார்களா நம்பினால் மோசம் வந்து லபிக்கும் அப்படில்லாமல்
போனால் சிறியத்தாயார் மனைக்குப்போயிருந்த என் நாயகியை அழை
த்து வருகிறதாக சென்ற மந்திரி ஆறுமாதவரைக்கும் வாராதிருக்கக்
காரணமென்ன? இதை யோசித்துப் பார்க்குமளவில் ஏதோ மோசம்
நடந்திருக்கிறதுபோல் காட்டுகின்றது ஆ! ஆ! இப்போது ஞாபகம்
வந்தது முந்தி அப்போதப்போது நான் வருங்காலத்தில் கந்தர்வ
மாதர் என் நாயகியுடன் இந்த சங்கதி எவருடன் சொல்லாதிருக்கும்
படி சத்தியஞ் செய்துதந்தார்.

இப்படியிருக்க சிலதினத்திற்கு பிந்தி கர்பம் தரித்திருந்தது
அதைதெரிந்தவள் தாய் தந்தைகள் சோரத்வ மடைந்தாளென்
றும் தனக்கு அவமானம் சம்பவித்ததென்றும் எண்ணமிட்டுத் தன்
வீட்டிலிருக்க லாகாதென்று ஆலோசித்து அவளைக் கொன்றி
ருப்பாரு? ஐயோ? எப்படிக்கொத்த சண்டாளராயினும் வயிற்றில்
பிறந்த புதல்வியை கொல்லுவாரு? இல்லாமல் காட்டில் விட என்
நாயகி கானகந்திரிய மனமில்லாமல் பிராணத்தை விட்டிருப்பாரோ
ஆ பிராணசகி! என்னைப்பிரிந்து கஷ்டப்பட்டாயோ பகவான் ரூப
முடைய மாதைத்தந்து மறுபடியும் பிரிய வைத்ததே நமதிருவருக்
கும் லலாடத்திலெழுதிய அந்த பிரம்மதேவன் முட்டாளாயிருக்கவே
ண்டும் பயித்தியம் பிடித்து நானிப்படி துயரமடைய வேண்டியது
யான்முந்தி எவரை இந்தக்கோலம் செய்தேனோ அந்தப் பாபம்
இந்த ஜன்மத்தில் இவ்விதமாக பாதிக்கிறது ஆகையால் சம்பாதைக
ளிருந்தும் நாயகி இல்லாத ஜென்மம் வீணல்லவா எனச்சொல்லி
உடனேயெழுந் திருப்பிலிருக்கும் சந்திராயுதத்தை யெடுத்து தன்
சிரத்தை வெட்டிக்கொள்ள மனமிட்டான் இதற்குள் தன்னுடைய கண்
அடித்துக் கொண்டது அப்போ இதைப்பார்த்து ஆ? ஹா! புருட
ருக்கு நல்லகாலம் வருஞ்சமயத்தில் வலதுக்கண் அடித்துக்கொள்
வது கஷ்டக்காலத்தில் இடதுக்கண் அடித்துக் கொள்வதென்று
பெரியோர் சொல்வதை நாம் கேட்டிருக்கின்றோ மாகையால் நமக்
கிப்போது வலதுக்கண் அடித்துக்கொள்கிறது சீக்கிரத்தில் மந்திரி

என் நாயகியைக்கொண்டு வருவாரென்னமோ! கொஞ்சம் நிதானிக்கலாம் அந்த மந்திரி வந்தப்பிறகு நாயகி வாராமலிருந்தால் நமது பிராணத்தை விடலாமென்று மனதைரியம் செய்துக்கொண்டு தன்னுடைய யோசனை யெல்லாம் வெருத்து விட்டு சயனித்துக் கொண்டான்.

இப்படியிருக்க நாகவர்மவேந்தன் உதயமானவுடனெழுந்து காலக்கடனை தீர்த்துக்கொண்டு கொலுச்சாவடிக்கு வந்து மாமனாகிய சோமசேகர வேந்தனுடனமர்ந்து இராஜாக் காரியத்தைப் பரிசோதிக்குஞ் சமயத்தில் பத்திரவேந்தனால் அனுப்பப்பட்ட காவலர் போஜனம் தீர்த்துக்கொண்டு அஜாரத்திற்கு முந்திவந்து அங்கிருக்கப்பட்டக் காவலரைப்பார்த்து ஐயா! உங்கள் மந்திரியான சூக்ஷ்மபுத்தியென்பவர் இந்நாட்டு வேந்தருக்கு சிலவார்த்தை சொல்லும்படி எங்களை அனுப்பியிருப்பதால் இந்தசங்கதியைவேந்தனுக்குச்சொல்வீரென்று சொல்ல இதைக்கேட்டக் காவலர் சந்தோஷமடைந்து வேந்தனெதிரில்வந்து வந்தனம்புரிந்து ஐயா! நமது மந்திரியிடத்திலிருந்து ஆரோ இரண்டுபேர் காவலர் அஜாரத்திற்கு முந்தி வந்திருக்கின்றார், அவரை விடும்படிச்சொன்னால் விடுகின்றோம் என்றுச்சொன்னவுடன் வேந்தன் பெருமனமிட்டு அடாக்காவலரே அவரை கொடிய சீக்கிரத்தில் அழைத்து வருவீரென்றுச் சொல்ல உடனே காவலர் அவரைவிட்டு விட அவர் வேந்தனெதிரில் வந்து வந்தனம் புரிந்துக்கொண்டு வந்தக்கடிதத்தை வேந்தன்கையில் கொடுக்க வேந்தன் அந்தக்கடிதத்தை மருமகனான நாகவேந்தன் கையில் கொடுக்க அந்தக்கடிதத்தை அவிழ்த்து சபையோரும் மாமனும் அறியும்படிப் படிக்க இம்மொழியைக்கேட்டு எல்லோரும் ஆனந்த பரவசமடைந்தார், பிறகு இந்தக்கடிதம் கொண்டுவந்தக் காவலருக்கு வேண்டிய வெகுமதிகளைக் கொடுத்தனுப்பினார், அச்சமயத்தில் சோமசேகர வேந்தன் இரண்டாவது மந்திரியை யழைத்து அப்பா! மந்திரி நீ கொடிய சீக்கிரத்தில் இந்நாடெல்லாம் அலங்காரஞ் செய்வாயென்றுச் சொல்லி வேந்தன் கொலுச்சாவடியை விட்டு அந்தப்புரமடைந்து தன் நாயகிக்கு நடந்த சங்கதியெல்லாஞ்சொல்ல எல்லோரும் சந்தோஷ சமுத்திரத்தில் மூழ்கி நின்றார்.

இப்படியிருக்க அங்கு பத்திரவேந்தன் சோமசேகரனுடைய மந்திரியான சூக்ஷ்மபுத்திக்கு அப்பியங்க ஸ்நானங்கள் செய்யவைத்து காணுவிநடமாய வஸ்திரங்களைத் தந்து விசித்திரமான ஆபரணங்களை



வெகுமதியாகக் கொடுத்து பிறகு பவாணி மாதுக்கு பட்டு பீதாம்பர நவரத்தின கசிதமான ஆபரணத்தால் அலங்காரஞ்செய்து பிரயாணப்படுத்திவிட்டு தானும் தன் தேவியும் சதுரங்க பலசேனைகளுடன் முந்திநடக்க இப்படி தாம்தாமென்று புறப்பட்டு சில தினத்துக்கெல்லாம் சோமாவதி நகரம் எல்லையடைந்து அங்கு ஓர்நந்தவனங்கண்டு அதிலெல்லோருந் தங்கி அன்று தினத்தில் சூக்ஷ்மபுத்தி மந்திரி ஓர் காவலனை யழைத்து சோமசேகர வேந்தனுக்கு இங்கு வந்திருப்பதாக தெரிவிக்க அந்த சோமசேகர வேந்தனும் அவன் தேவியும் மருமகனும் சதுரங்கபல சேனைகளுடன் எதிர்கொண்டுவந்து பத்திரவேந்த மகாராஜனை சந்தோஷப்படுத்தி தன்னுடைய மந்திரியை யழைத்து அப்பா! எனது புதல்வி எங்கென்றுக் கேட்க அம்மொழிக்கேட்டு மந்திரி இதோ டோலி யிருக்கின்றாளென்றுச்சொல்ல அதைக்கண்டு பத்திரவேந்தன் சோமசேகரன் அவன் மருமகனை அழைத்துக்கொண்டு டோலியருகில் வந்து அவனை விட்டுவிட்டு தாய் தந்தைகளிருவரும் தாங்கள் செய்ததை மனதில் எண்ணமிட்டு வெட்கமடைந்து அம்மா! நாங்கள் பாவிகளாகும் எங்கள் முகத்தை நீ பார்க்கலாகாது கண்ணை மூடிக்கொள்ளும். நாங்களுன்னைக் கண்டவுடனே தனிகாகி விட்டோமென்றுச் சொன்னவுடனே இதைக்கேட்டு பவாணி ஐயா! நான் உமக்கு புதல்வியல்ல நீங்களென்னைக் காட்டில் விட்டு வந்தப்போதே உங்களுக்குமெனக்கும் சம்பந்தம் தீர்ந்துவிட்டது இப்போ இந்த பத்திரவேந்தர் புதல்வியானுகும் என் நாயகர் சந்தர்ப்பத்தால் இங்கு வந்தேனெனச் சொல்லி தன் நாயகனைக்கண்டு அவர் பாதக்கமலங்களுக்கு வந்தனம் புரிந்து வெட்கமடைந்தவள் போல் தூரமாக நின்றாள்.

அச்சமயத்தில் தாயானவள் சமீபஞ்சென்று புதல்வியை ஆலிங்கனஞ் செய்துக்கொண்டு துக்கமடையுஞ் சமயத்தில் இதைப் பார்த்து பவாணி அம்மா! பத்துமாதம் கெர்பத்தில் வைத்திருந்து அதிக கஷ்டத்துடன் என்னைப்பெற்று எனக்கு பத்து வயதாகிறவரைக்கும் மலமூத்திரமெடுத்து காத்து ரக்ஷித்த உன் கெர்பத்தில் எனதபராதத்தை அடக்கிக்கொள்ள இடமில்லாமல் போச்சுதா! என்மீது தோஷமிருந்தாலும் என்னை விசாரிக்காமல் நிஷ்காரணமாகக் கொல்ல பிரயத்தினமடைந்தீர் என் ஜென்மாந்திர கர்மபலத்தால் பெற்ற தாயே எனக்கு பகையாளியாக யிருக்க என் தலையில் பிரம்மனெழுதி இருந்தானென்றுச் சொல்ல இதைக்கேட்ட தாயானவள் தன்னுயிர் விட்டு

துக்கமடையும் சமயத்தில் அருகில்நின்ற சோமசேகர வேந்தன் தன் புதல்வியைப் பார்த்து ஓ புதல்வியே! கேளும் என் மொழியை உன் தாயுடைய யெத்தனம் ஏதுங்கிடையாது, எல்லாம் பகவான் சங்கல்பந் தான் உனக்கு வனவாசஞ்செய்ய லபி யிருப்பதால் எங்களுக் கிப்படிக்கொத்த துர்புத்தி பகவான் கற்பித்தான் முந்தி நளச்சக்கிரவர்த்தியும், ஸ்ரீராம மூர்த்தியும், வனவாசம் மடையவில்லையா அப்படிக்கொற்றவர்களெல்லாம் அனுபவிக்கவில்லையா கேவலமாகிய மனிதரால் ஏது முடியும் நாம் செய்யவேண்டியக் காரியமேதுங் கிடையாதென அநேகவிதமான நீதிகள் போதித்து அம்மாதை சமாதானஞ் செய்து அந்தப்புரத்திற்கு அழைத்துக் கொண்டுபோய் ஸ்நானபோஜனங்கலலங்காரஞ் செய்யவைத்து சந்தோஷமாக போனை முத்தமிட்டுக்கொண்டு புதல்வியை தன் னருகில் அமரவைத்துக்கொண்டு எனது பிரியப் புதல்வியே கானத்தில் உன்னைவிட்டது முதற்கொண்டு இதுவரைக்கும் நடந்த உன் யோகக்ஷேமத்தைச் சொல்லுமென்றுக் கேட்க இம்மொழிகேட் டம்மாது நடந்த சங்கதியெல்லாஞ் சொல்ல இதைக்கேட்டு ஆச்சர்யமடைந்து புதல்வியுடைய புத்தி சாதுர்யத்துக்கு சந்தோஷமடைந்து பிறகு பத்திரவேந்தன் முதலானவர்கள் யோகக்ஷேமத்தை விசாரித்து அந்தப்புரம் விட்டு அவரிருக்கும் கொலுச்சாவடியில் வந்து அவர் புகழ்கொண்டாடி அத்தினத்தை எல்லோரும் கழித்தார். இப்படிருக்க நாகவேந்தன் மாமனைப் பார்த்து ஐயா! என்னுடைய தாய் தந்தைகள் விர்தாப்ய மடைந்தவர் இத்தனை நாளாக யான் அகப்படாமல் போனபடியால் சோகமடைந்திருப்பார் எப்படியென்றால்,

(சுலோகம்.)

பிதுருசோகம்ச ஷண்மாசம் மாதுருசோகம் பவஸ்ஸர:
பார்யாசோகம் புனர்பார்யா புத்திரசோகம் நிரந்தரம்.

தந்தை மரணமடைந்தால் ஆறுமாதம் வரைக்கும் துக்கமிருக்கும் தாயார் மரணமடைந்தால் ஒரு வருஷகாலம் துக்கமிருக்கும் நாயகி மரணமடைந்தால் மற்றொரு மாதை விவாகஞ் செய்கிறவரைக்கும் துக்கம் விடாது பாலகன் மரணமடைந்தால் அந்த துக்கமானது தான் மரணமாகிற வரைக்கும் அந்த துக்கம்விடாதென்று பெரியோர் சொன்னதுபோல் எனது உண்மையை தெரியாமல் என்தாய் தந்தைகள் இதுவரைக்கும் துக்கத்தை அடைந்திருப்பார், ஆகையால் அவரை சந்தோஷப்படுவதற்காய் யான் சீக்கிரம் போகவேண்டு



மென்றுச் சொல்ல இதைக்கேட்ட பவாணி தந்தைதனைப்பார்த்து ஓ தந்தையே! அப்போது விவாக மஹோற்சவத்தில் பங்கமடைந்தார், இப்போதிந்தச் சந்தோஷமொழியை சொல்லியனுப்பி அவரை இங்கு வரவழைத்து புத்திரபிரமைதனைத் தீர்த்தனுப்பினால் நலமென்றுச் சொல்ல அதுபோல் சோமசேகரன் ஓர் கடிதமெடுத்து அதில் அவ்வேந்தனுக்கு மரியாதை வசனமெழுதி ஐயா! தங்களுடைய புதல்வன் நமக்கு தெரியாமல் போனவன் இப்போது வந்து நாயகி நாயகன் புத்திர சமேதனாக எனது வீட்டில் க்ஷேமமாக இருக்கின்றார் தாங்கள் தயைபுரிந்து வந்து சந்தோஷ விவாக மஹோஸ்வங்களைச் செய்து புதல்வனையும், மருமகளையும், பேரனையும் அழைத்துக்கொண்டுபோகலாமென்றுச் சொல்லி கடிதமெழுதியனுப்ப அக்கடிதத்தை அவ்வேந்தன் பார்த்து ஆனந்தமடைந்து முந்திப்போலவே கலியாணசாமான்களை நிமிஷத்தில் சேகரித்துக்கொண்டு புரப்பட்டு சோமாவதி பட்டணமடைந்து புதல்வனைப் பார்த்து ஆனந்த பரிதாபமடைந்து மறுபடியும் அந்த இருவருக்கும் விவாகம் பூர்த்தி செய்தார், அப்போது சோமசேகரன் சம்பந்திகளுக்கு வஸ்திராபரணம் வெகுமானம்தந்தார். அந்தச் சமயத்தில் பவாணி தன்னுடைய மாமன் மாமியை தாய் தந்தைகளையும் பத்திரவேந்தன் அவர் தேவியையும் குந்த வைத்துக்கொண்டு ஐயா! யான் பத்துமாதம் சுமந்து பெற்ற சிசுவானது நிரந்தரமாகப் போய்விட்டது, அந்த சிசுவை ஸ்ரீ ஹரியானவர் இந்த தம்பதிகளுக்குத் தந்தார், ஆகையால் இந்தசிசுவானது அவர்களே அடையவேண்டுமன்றி நமக்கு ஏதும் சொந்தங் கிடையாதென்றுச்சொல்ல அவர்களும் சம்மதமடைந்தார், இப்படிச்சொல்லி பவாணி சிசுவை பத்திரவேந்தன் தேவி மடியில் போட்டு அந்த தம்பதிகளுக்கு வந்தனஞ்செய்து பிறகு தன்னை போஷித்த பிராமணதம்பதிகளுக்கு அதிக தனம் தந்து சந்தோஷப்படுத்தி தன்னுடன் கூடவந்த எல்லோருக்கும் தகுந்த மரியாதைகள் செய்து கௌரவப் படுத்தி அனுப்பினாள்.

பிறகு சோமசேகரன் மறுநாள் ஜெயசேன மகாவேந்தனுக்குங் கூடவந்த பரிஜனங்களுக்கும் விருந்துசெய்து புதல்வியும் மருகனுக்கும் வேண்டிய வெகுமதிகள் சதுரங்கபல சேனைகள் தந்து அதிக சம்பிரத்துடன் அவர் பட்டணத்திற்கனுப்பிவிட்டு சுகமாகயிருந்தார். இப்படிருக்க அந்தபவாணி மாமியார்வீட்டில் சுகமாயிருந்து இரண்டு ஆண்புதல்வரைப்பெற்றாள். இதைத்தெரிந்து ஜெயசேனன் இந்த சந்தர்ப்பத்தை சோமசேகரனுக்கு தெரிவிக்க இதைக்கேட்டு அவ்வேந்

தன் சந்தோஷமடைந்து தேவி சமேதனாகவந்து பேரப்புதல்வரைப் பார்த்து சந்தோஷமடைந்திருக்குஞ் சமயத்தில் ஜெயசேன மகாவேந்தனால் கொடுக்கப்பட்ட வஸ்திரங்களை பெற்றுக்கொண்டு தன்னாட்டிற்குவருஞ் சமயத்தில்பவாணி தாய்தந்தைகளைப்பார்த்து அய்யா! உங்களுக்கு பேரப்புதல்வரால் வம்சாபி விருத்தியடையுமென்று பகவான் அனுக்கிரஹித்தாரென்று நீங்கள் சொல்ல யான் கேட்டிருக்கிறேன் ஆகையால் ஓர் புதல்வனைக் கொண்டுபோயி வளர்த்துக் கொள்வீரென்றுச் சொல்லி தன்னுடைய புதல்வரில் ஒரு புதல்வரைத்தந்து தானொருப் புதல்வனை போஷித்துக் கொண்டு வந்தாரென்றுச் சொன்னவுடனே சூரியன் அஸ்தமயமாகிவிட்டது இதற்குள் சமீபத்திலிருக்கும் திருவள்ளூரென்னும் சொல்லப்பட்டகிம்கிருஹம்,வீக்ஷாரப்ணம், புண்யாவர்த்த க்ஷேத்திரமென்றுச் சொல்லப்பட்ட புண்யஸ்தலமடைந்தார்கள். அப்பொழு தெல்லோரும் அங்குபுசித்து சயனிக்குஞ்சமயத்தில் வேடர் யோகியைப்பார்த்து சுவாமீ! இந்த ஸ்தலமகிமை எங்களுக்குச் சொல்லுமென்றுகேட்க பிரம்மானந்தயோகிச் சொல்லத்தொடர்ந்தார்.

கேட்டீரா வேடரே! முந்திக்காலத்தில் இராக்ஷசர் பூலோகத்திலிருக்கப்பட்ட முனி சிரேஷ்டரை கஷ்டபடச்செய்ய இதைசகிக்காமல் அந்த முனிவர்கள் வைகுண்டமடைந்து நாராயணனுடன் சொல்லிக்கொள்ள அந்த பகவான் இவர்களுக்கு தேருதலைச்சொல்லி யான் வீரரிகவ அவதாரத்தில் அந்தத் துஷ்டரை வதைக்குறேனென்றுச் சொல்லி தனூர்பாணம் கைப்பூண்டு அந்த இராக்ஷதரைதுரத்த அவர் பிரம்மாண்டமாகிய கானகத்தில் வொளிந்திருக்க அவரைக்கண்டு வதைத்துவிட்டு அங்கு வெகுநாளாக தபஞ்செய்துக்கொண்டிருந்த சாலிஹோத்திர முனியருகில்பகவான் ஒரு பிராமணரூபமாகச்சென்று யெனக்கு பசியெடுக்கிறது சாதமிடுமென்றுகேட்க. இதைக்கேட்டந்த ரிஷி அதுபோல் சாதமிட அதைத்தின்று திருப்தியடைந்து வீரராகவயவதாரமெடுத்து நீ கோரியவரம் கேளென்றுச்சொல்ல. இதைக்கேட்டமுனிவன் மோக்ஷத்தைக்கோர அதுபோலவே தந்து பக்தர் பாபத்தைப்போக்க மனமிட்டு அங்கு நின்றார். அதுபிறகு பிரதுயூமனென்னும் வேந்தன் புதல்வரில்லாமல் விசனமடைந் தங்குவந்து பகவானைச்சேவித்து தன் கோரிக்கைதனைப் பூர்த்திசெய்வீரென பிரார்த்திக்க அங்கிருக்கப்பட்ட குளத்தில் ஸ்தானஞ்செய்து புத்திரபாக்கியம் பெற்றார் ஆகையால் பாபங்களை தீர்க்கப்பட்ட அந்தத் தீர்த்தத்திற்கு வீர்தாபநாசினியென்று பெயருண்டாச்சுது.



இதுவுமல்லாமல் கௌசிகனென்றும் வேதியன் பசியால் பாதையடைந்து மொழியாடுவதற்கு சக்தியற்று சைகைசெய்யவே இதைப்பார்த்தொரு நீச்சன் அவனுக்குக் சாதமிட்டு தன்புதல்வியை பணிவிடைசெய்பவிடவே அந்தவேதியன் காமபீடிதனாகி அம்மாதுடன் புணர்ச்சிச்செய்தான் இப்படிக்கொத்தபாமம் விரதாபநாசினியில் விழுந்து பிராணத்தைவிட்டால் பாபந் தீர்ந்துவிடுமென்று அந்தத் தீர்த்தத்தில்விழுந்தவுடனே விஷ்ணுதூதர் பரமபதத்திற்கு கொண்டுபோய்விட்டார்கள். இந்த திவ்வியக்ஷேத்திரத்தில் பகவான் தர்மசேனவேந்தன் புதல்வியான கனகவல்லியுடன் சேர்ந்து பக்தர்களுடைய பாபத்தைப் போக்கடித்துக்கொண் டிருக்கின்றார்கள். சாலிஹோத்ரமகாமுனிக்கு அமாவாசைதினத்தில் மோக்ஷங்கொடுத்தபடியால் இங்கு அந்ததினத்தில் விசேஷமாக இருக்கிறதென்றுச்சொல்ல சந்தோஷமடைந்தார். மறுநா ளெல்லோருமெழுந்து அந்தக் குளத்தில் ஸ்தானஞ்செய்து சுவாமியை சேவித்துக்கொண்டு புறப்பட்டுபோகுஞ் சமயத்தில் வேடர் யோகியைப்பார்த்து அய்யா! நேற்றியதினம் பவாணிக்கதைதனை முடித்தீர் எங்கள் மனம் சந்தோஷமடைந்தது இனிவொருகதைச்சொல்லி எங்களுக்கு நடைசாயும்படி செய்வீரென்றுகேட்க அப்போது யோகி சந்தோஷமடைந்துக் கதைச்சொல்ல ஆரம்பித்தார்.

---

# இருபதாம் மஜிலிக்கதை.

## தெய்வமாயம்.

---

சோபாவதி என்னும் பட்டணத்தை பிரபாவந்தனென்னும் வேந்தன் இராஜ்யபாரம் செய்துக்கொண்டிருந்தான், இப்படியிருக்க அந்த இராஜபத்திற்கெல்லாம் பராக்கிரம சாலியான சார்வபவுமன் என்பவன் ஒரு சமயத்தில் லலாடலிகிதம்போல் அவமானமாகிய ஒரு துஷ்காரியம் அந்தரங்கத்தில் செய்தான். இந்த சந்தர்பம் பார்த்து பராக்கிரம நரேந்திரனுக்கு கோபமுண்டாகி பிரபாவந்தனையும் சோபாவதி குடிஜனங்களையும் சிக்ஷிக்கவேண்டி மனமிட்டு பிரபாவந்தனை தேசாந்திரம் போகும்படி உத்திரவு செய்தான் பிரபாவந்தன் தன் குடிகளுக்கு வரப்பட்ட தொந்திரவு சகிக்காமலும் எதிர் சென்று போராட சமயமல்லவென்று மனமிட்டு தர்மபாலனென்னும் மந்திரிக்கு ஜனக்ஷேமத்தை விசாரித்து தெரிவிக்கும்படிச் சொல்ல சக்கிரவர்த்தி கோபத்திற்கு உட்படாமல் புறப்பட்டுப்போனார்.

இப்படி பிரபாவந்தன் போகுஞ்சமயத்தில் தான் ஜயந்தி பட்டணத்தில் வாசஞ்செய்ய எண்ணமிட அந்நகரத்திலிருப்பவர் க்ஷேமமானப்படியால் தின்பதற்கு சாதமில்லாமல் இருப்பவருடைய சங்கதியை கேழ்விப்பட்டு கொஞ்சம் தான்யத்தை வாங்கி தன்னுடைய படவில் வைத்துக்கொண்டுபுறப்பட்டு ஜெயந்தியடைந்து அங்கோர்பாழும்வீட்டில் துயர்ப்படுவதைக் கேட்டால் அது எப்படியென்றால் தாய் தந்தைகள் பிள்ளைகள் புருடனைப் போக்கடித்து விட்டு தெய்வமே! எனக்கு விர்தாப்பிய திசைதந்தீர் என்று துயரமடைந்து தனக்கும் தன் புதல்வருக்கும் சம்ரக்ஷணை செய்பவ ரில்லையென்று துயரமடையும் புருடரைப் பார்த்து கிராமதேவதை. தன் போஜனத்திற்கு தங்கி இருந்து செவ்வையாய்ப் புசித்து மிகுதியை விட்டுப் போவதுப்போல் இந்தப் பட்டணத்தைக் கண்டு விசனமடைந்து பிரபாவந்தன் தான் கொண்டு வந்த பதார்த்தமெல்லாம் அந்தப்பட்டண வாசிகளுக்கு பங்கிட்டு வைத்தான் அந்த நகராதிபன் இந்த சகாயம் செய்தவன் தெய்வப்பிரப்பென்று எண்ணமிட்டு ஐயா நீர் செய்த உபகாரம் அபாரமானதென்று புகழ்ந்தான். இப்படிருக்க இந்நாட்டில் க்ஷேமமானது தினத்திற்கு தினம் குறைந்துக்கொண்டு வந்தது, அந்தப் பிரபாவந்தன் ஜெயந்தி நகரத்தில் சிலதினமிருந்தான், இப்படிருக்க தனக்கு அதிக பிரியமான மந்திரி ஓர் கடிதமெழுதி இவனுக்கனுப்பினான், அதுயென்னவென்றால் ஸ்ரீமத் இராஜாதிராஜா இராஜ சூடாமணியே மிதமில்லா ஆனந்த கரத்துடன் கிரீடாதிபதியான சோபாவதி நாட்டை பரிபாலிக்கும் பிரபாவந்தபூபாலா உமது திருப்பாதங்களுக்கு வந்தனம் புரிந்து தர்மபாலன் விண்ணப்பத்துட னெழுதியது யாதெனில், தேவா தாங்கள் மறுதேசம்போன சமாசாரங்கேட்டு பராக்கிரமன் தன் கொலுவிலிருக்கும் காவலரை அநேகதேசந்தேடிப்பார்க்கும்படி அனுப்பி எங்கும் அகப்படாமையால் பிறகு ஓர் மனிதனால் நீயிருக்கும் இடந்தெரிந்து உம்மை அங்கு நிற்கவொட்டாமல் துரத்த எத்தனமிட்டதாக எனக்கொரு மனிதர் சொன்னார் ஆகையால் தாங்கள் அத்தேசத்தை விட்டு மறுதேசம் சென்றால் நலமாயிருக்கிறதென்று கடிதமெழுதியனுப்ப இந்தக் கடிதம் பார்த்த பிரபாவந்தன் அந்த நிமிஷத்தில் படவேறி போகுஞ் சமயத்தில் அந்நாட்டிலுள்ளவர் சந்தோஷமடைந்து அவர் கண்டத்தில் புஷ்பமாலைதனை தரித்தார்.

இப்படி வெகுதூரமாக போகப்பட்ட படவானது சுழல்காற்றடித்தந்த படவு கடலில் மூழ்கிவிட்டது. அப்போது பிரபாவந்தன் தவிர மற்றவரெல்லோரும் கடலில் மூழ்கிவிட்டார். இந்த பிரபாவந்தன் தன் அருஷ்டதிசையால் அலைகளடித்து கரையோரம் வொதுக்குஞ் சமயத்தில் அங்கு திரிந்துக்கொண்டிருந்த செம்படவன் பிரபாவந்தனை கரைக்கு எடுத்துவந்து சமதாயப்படுத்தி தன்வீட்டிற்கு அழைத்துக்கொண்டுப் போய் ஆடைகள் தந்து தரிக்கும்படி செய்து போஜனத்திற்கு தகுந்தயிடம் நியமித்தான் ஆ ஆ அந்த ஜெயந்திநகரத்தில் இருக்கப்பட்டவனெனக்கு தெய்வமாகயிருந்தும் அந்த பகவான் இவனையே என்னைக் கார்க்கும்படி அனுப்பிய தூதனாகவே இருக்கவேண்டும் அப்படி யனுப்பிய பகவானுக்கு கோடிவந்தனஞ் செய்கின்றேன் ஆனால் இவர்நாடேதோ இதை விசாரிப்போமென்று மனமிட்டு ஐயா உன் நாடேது உன் பேரென்னவென்றுக் கேட்டவுடனே இம்மொழிக் கேட்ட செம்படவன் பிரபாவந்தனைப்பார்த்து ஐயா இந்நாட்டிற்கு கொங்கனநாடென்று பெயருண்டு யானோ ஜாதியில் செம்படவன் இந்நாட்டை தனசீலனென்னும் வேந்தன் பரிபாலிக்கிறான், அவர் திர்மஸ்தாபனத்திலும் தனதிச்சைப்போல் இராஜ்யபாரம் செய்வதாலும் அநேகமான வேந்தருடன் சிநேகபரனாக யிருப்பதாலும் இதாளுக்கு பயமடைந்து அவர் சொன்னதுபோல் நடக்காமல் தன் காரியம் பூர்த்தியாவதற்கு அநியாயமானாலும் நியாயமென்று ஸ்திரப்படுத்தி தன் பாதமே தான் புகழ்வதுபோல் இராஜ்யபாரம் வகித்தப்படியால் அவனுக்கு தனசீலனென் றுலகத்தி லழைப்பார் இதுவுமல்லாம லின்னம் ஓர் விசேஷமுண்டு அதென்னவென்றால்.

இந்த தனசீலனுக்கு கலாவதியென்கிற ரூபசவுந்தரியான புதல்வி இருக்கின்றாள் ஆனால் நாளையதினத்தில் இந்நாட்டில்வேடிக்கையாகும் அதைப்பார்க்க அநேக வேந்தரும் மல்லுத்த தீரரும் வருவார் இந்த மல்லுத்தருடைய பலாபலத்தை வேந்தனுக்குக் காட்டியபிறகு வேந்தரில்வந்த பலத்காரதீரனை கலாவதி மாலையிடுவாளென்றுச் சொன்னான். இதைக்கேட்ட பிரபாவந்தன் தன்னுடைய செந்திராயுதம் கைசோர்ந்து விட்டதென சொல்லிக்கொண்டு துக்கமடையுஞ் சமையத்தில் அந்த செம்படவன் புதல்வன் மீன் பிடிப்பதற்காய் கடலில் வலைவீசும் சமயத்தில் அந்த வலையில் இந்தச் செந்திராயுதமகப்பட அதைக்கண்டு ஆச்சரியமடைந்து அதைத் தன் தந்தைவசங்கொடுக்க அந்தச் செந்திராயுதத்தைப்பார்த்து இது பிரபாவந்தனுடையதா யிருக்குமென்று மனமிட்டு பிரபாவேந்தனுக்குக்காட்ட அந்த பிரபாவந்தன் அதைத் தன்னுடையதெனச்சொல்லி பெற்றுக்கொண்டு ஆ ஆ! கடலில் முழுகி

விட்டசெந்திராயுதம் மறுபடியும் அகப்பட்டபடியால் நற்சகுணமாச்சுதெனமனமிட்டு அந்தக்கத்தியைப்பார்த்து ஓ செந்திராயுதமே உன்னை மறுபடியும் என் கைப்பற்றியதற்கு சந்தோஷமடைந்தேன் என் பிராணத்திற்கு ஆதாரவாச்சுது நீ என் தாய்தந்தைகள்கையால் கொடுக்கப்பட்டது எப்படியென்றால் பரதன் ஸ்ரீராமமூர்த்தியுடைய பாதக்கொரடை ஸ்ரீராமரென்று பாவித்ததுபோல் என் தாய்தந்தைமீதெவ்வளவு விஸ்வாசமிருக்கிறதோ அதைவிட எண்மணங்கு அதிகமாக உன்மீது வைத்திருக்கின்றேன் இதுவுமன்றி எங்காகிலுஞ்சென்றாலும் அல்லது ஓரிடத்திலிருந்தாலும் உன்னைவிட்டுப் பிரியாமலிருந்தேன் ஆனாலும் சமுத்திரவேந்தன் கோபமடைந்து உன்னையுமென்னையும் பிரியவைத்து துக்கமடையச்செய்தான் இப்போது பகவான் நம்மீது கருணைவைத்து இருவரையும் ஒன்றாகச்செய்தான் இனி என் கஷ்டமெல்லாம் மறந்துவிட்டு சந்தோஷமடைகுவேன் என்றுச்சொன்னான்.

மறுநாள் பிரபாவந்தன் திவ்ய அலங்கிருதம் செய்துக்கொண்டு செந்திராயுதந்தரித்து தன்னுடைய சௌந்தர்யத்தையும்பார்த்து கலாவதி மோகிப்பாளென்றும் மனமிட்டு அநேகவேந்தர் அமர்ந்திருக்கப்பட்டகொலுவிற்குச்சென்று வேந்தனைக்கண்டு உத்திரவுதாருமென்றுச்சொல்ல அதுபோல் உத்திரவு பெற்றுக்கொண்டு தன்னுடைய சமத்காரத்தால் மல்லரைஜெயித்து வீரத்வமடைந்து நின்ற பிரபாவந்தனைப்பார்த்து வேந்தன் ஆச்சரியமடைந்து அங்கிருந்த வேந்தரையும் இவனையும் அழைத்துக்கொண்டுபோய் போஜனமிட்டு கொலுவிலமர்ந்திருக்குஞ் சமயத்தில் தன்னுடையப் புதல்வியை யழைத்து இந்த வேந்தரில் உனக்குக் கோரிய புருடனை மாலை யிடுமென்றுச்சொல்ல அம்மாது அங்கமர்ந்திருப்பவரை ஒவ்வொருவரைப்பார்த்து வெறுத்து பிறகு பிரபாவந்தன் வேந்தனைப் பார்த்து மோகமென்னும்வலை இவனை மூடியவுடனே தன் கையிலிருந்த புஷ்பமாலை அவன் கண்டத்தில் தரித்து நிற்க இதையறிந்த தனசீலன் சந்தோஷமடைந்து மறுநாள் சாஸ்திர வழக்கமாக விவாக மஹோற்சவம் நடத்தினான்.

அது முதற்கொண்டு இந்த இரண்டு தம்பதிகள் இணைப்பிரியாமல் பிரீதியுடன் சுகத்தை அனுபவித்துக் கொண்டு ஓர் வருஷத்தை நிமிஷமாக கழித்துக் கொண்டு சரஸ்வதிப்போல் புத்தியுடையவளாயும் லக்ஷ்மிபோல் பாக்கிய சாலியாகவும் கந்தன் நாயகிபோல் அழகுடையவளாயும் கலாவதி ஒருநிமிஷமாகிலும் விட்டிருப்பது மரணத்துக்கு சமானமென்று சமுத்திரம்போல் கம்பீரமடைந்து மனோஹரமாக சுகி



த்துக் கொண்டு சந்தோஷ சமுத்திரத்தில் மூழ்கினவராய் இருந்தார்.

இப்படி சிலநாள் சென்றபிறகு கொங்கனநகரத்தில் பிரபாவந்தன் கமலாவதியுடன் வாசஞ்செய்துக் கொண்டிருக்குஞ் சமயத்தில் தன் பகையாளியாகிய பராக்கிரம வேந்தன் மடிந்தப் பிறகு தான் வெகுநாளாக இராஜ்யத்துக்கு வாராமலிருப்பதை அறிந்து சோபாவதி குடிஜனங்கள் தர்மபாலனை சிம்மாசனத்திற்கு அமரும்படிச் சொல்ல இதை தெரிந்த தர்மபாலன் வேந்தனுக்கு கடிதமெழுதி அனுப்பினான் அது என்னவென்றால் சுவாமி நமது குடிஜனங்களெல்லாம் இந்த இராஜ்யத்தை எனக்குக்கொடுப்பதாக மொழியாடுகிறார் இதற்குயான் சம்மதிக்கவில்லை ஏனெனில் தாமிருக்கும்போது இராஜ்யபாரஞ்செய்ய ஊழியக்காரனுக்கு தர்மமல்ல பகையாளி மரணமடைந்த பிறகு தாமே இந்நாட்டை பரிபாலிப்பீரென கடிதமெழுதி அனுப்பினான் அதை வாசித்துப் பார்த்து சங்கதியெல்லாம் தனசீலனுக்கு சொல்ல அவர் சந்தோஷமடைந்தார்.

இப்படி சந்தோஷமடைந்தும் தன் வீட்டில் பிரபாவந்தன் இல்லாமல் கலாவதியை அழைத்துக்கொண்டு போவதைக் குறித்து துக்கமடைந்தான் பிரபாவந்தன் தான் போகவேண்டிய சங்கதியை கலாவதிக்குச் சொல்ல அம்மாது பூர்ண கர்பவதியாக இருப்பதை தெரிந்து பிரசவிக்கும் வரைக்கும் தாயார் மனையிலிருக்கும்படிச் சொல்ல இதைக்கேட்டம்மாது நாயகனைப்பார்த்து நாயகா உம்மைவிட்டிருக்க நான் ஏது பாபஞ்செய்தேனென்று கலாவதிச்சொல்லி தான் சோகத்துடன் நித்திரைச்செய்ய அந்தச்சமயத்தில் தான் நாயகனைவிட்டு சன்யாசிரூபந்தரித்து தபத்தை ஆதரித்ததுபோல் கனவுக்கண்டெழுந்து அந்தக்கனவை தன் தந்தையிடஞ்சொல்லி இதைக்கேட்ட தந்தை நமது புதல்வி சோபாவதி நாட்டை சேருவதற்குள்ளாக பிரசவிப்பாளென்று மனமிட்டு அந்த தனசீலன் விதியில்லாதப்படிக்கு இருவரையும் பயனங்கூட்டி யனுப்பினான்.

இப்படி பயனமடைந்து வருஞ்சமயத்தில் சமுத்திரன் பிரபாவந்தனுக்கு சிநேகித மில்லாதப்படிக்கு அவர் சோபாவதி நாட்டைசேருவதற்குள்ளாக என்றுமில்லாத சுழல்காற்றடித்து படவு மூழ்கிபோகும்படி விசர அந்தச்சமயத்தில் எப்போதும் சமுத்தியாத்திரை செய்து அறியாத கலாவதிக்கு சாமுத்திரிகை லோபம் சம்பவித்து கர்பவேதனையடைந்து பிரசவித்து மூர்ச்சை யடைந்தவளாய் விட்டாள், அம்

மாதின் கூடவந்த சேடிகள் இதையறிந்து உடனே பிரபாவந்தன் அருகில் சென்று ஐயா! கலாவதி மரணமடைந்தாளென்றார். இதைக் கேட்டவுடனே பிரபாவந்தனுக்கு உண்டான விசனம் சொல்ல சாத்தியப் படமாட்டாது.

அப்போது பிரபாவந்தன் மெய்மறந்து தன் மனதை தைர்யஞ் செய்துக்கொண்டு ஓ பகவானே! உன்னால் சிருஷ்டிக்கப்பட்டு நாங்கள் அனுபவிப்பதற்கு பிறந்த சுந்தரதரமான பதார்த்தத்தை நாங்கள் பூர்ணமாக அனுபவிப்பதற்கு முந்தி அபகரித்துக் கொண்டுபோய்விட்டீர், ஐயோ உன்னை தூஷிப்பதால் பிரயோஜனங் கிடையாது சிருஷ்டிக்கக் காரணமாகி நீரெங்களை உன்னருகில் அழைத்துக்கொள்வாய் அப்படியிருக்க நாங்கள் அனுபவிக்கும் பதார்த்தம் எதுவானாலென்ன! மனிதர் ஆசைக்கு அளவுக்கிடையாது நாங்கள்பாவிகளாகும் என்று பலவாராக துயரமிட்ட பிரபாவந்தனை சேடிகள் பார்த்து ஓ இராஜகுலோத்தமா! அம்மாதுபோல் பிரகாசிக்கும் இந்தசிசுவை அம்மாது இருந்தால எவ்வளவு சுகமிருக்குமோ அதுக்காகிலும் இரண்டு பங்கதிகமாக சுகத்தைத்தரும் லோகத்தில் நாயகன் நாயகியுடைய நாயகி நாயகனுடைய சோகத்தை புத்திரரைப் பார்த்து மறப்பார் ஆகையால் நீ தைரியமடைந்து இந்த சிசுவைப்பார்த்து காலத்தைக் கழித்துக் கொண்டிருமென்று சேடிகள் சொல்ல அம்மொழிக்கேட்டு பிரபாவந்தன் சிசுவைப்பார்த்து ஐயோ சிசுவே! உலகத்தில் பூர்ண ஆயுசுடன் ஜீவித்திரும் இராஜபுத்திரியாக இருந்தும் நீ பிறந்தக்காலத்தில் சந்தோஷம் நடக்கவில்லை ஆகையால் நீடம்பமில்லாமல் கம்பீரஸ்வரூபத்துடனிரும் ஓ என்னுசைப்புதல்வி நீ பிறந்தவுடனே தாயைப் போக்கடித்தாய் லோகத்தில் நீ அனுபவிக்குஞ் சுகமெல்லாம் உன் தாய் காணுதப்படியாலும் உன் தாயார் மரணமடைந்ததே பெரிய நஷ்டம் சம்பவித்தது என்றுச்சொன்னவுடனே சூரியன் அஸ்தமயமாகிவிட யோகிக்கதை நிறுத்திவிட்டார், அந்தச் சமயத்தில் சமீபத்திலிருக்கும் வேதாசல க்ஷேத்திரஞ் சென்று நித்தியக்கடனை தீர்த்துக்கொண்டு போஜனஞ்செய்து நித்திரை செய்யுஞ்சமயத்தில் வேடர் யோகியைப் பார்த்து ஐயா! இந்த க்ஷேத்திரமகிமைதனை எங்களுக்குச்சொல்லுமென்றுக் கேட்டவுடனே யோகி சந்தோஷமடைந்து அந்த க்ஷேத்திரமகிமையைச் சொல்லத் தொடர்ந்தார்.

அப்பா வேடரே! இந்த வேதாசலத்திற்கு பக்ஷி தீர்த்தமென்று பெயரிருக்கிறது இங்கு ருக்குவேதம், அஜுர்வேதம்! சாமவேதம், அதர்னவேதம், இந்த நான்குவேதமும் மலைபோல் சூழ்ந்திருக்கிறது. இங்கு வசிக்கப்பட்ட பரமேஸ்வரனுக்கு வேதாசலேஸ்வரனென்று பெயருண்டு இவர் தேவியானவள் வேதகிரியைமிதிப்பதில்லையென்று அடிவாரத்தில் திரிபுரசுந்தரியென்று பெயருடன்பிரகாசிக்கிறாள் பூர்வீகத்தில் கஸ்யபாஸ்ரம புதல்வரெட்டுபேர் பகவானைக்கூறி தனக்கு சாஸ்விதகைலாசலோகம் பிராப்தமாகவேண்டுமென்று தபஞ்செய்துக் கொண்டிருக்கபரமசிவன் அவர்பக்திக்குசந்தோஷமடைந்துபூதகணத்துடனே புறப்பட்டு தடயோகிகளெதிரில்வந்து உங்கள்கோரிக்கை வெளியிடுவீரென்றுச் சொல்ல இதைக்கேட்ட கஸ்யப்புதல்வர் சுவாமியுடன் சம்பாஷிக்கும்போது ஏது விசாரணையில்லாமல் (கம்) யென்று உச்சரிக்க இதைக்கேட்ட மகேஸ்வரன்கோபித்து நீங்கள் அன்னபக்ஷி ரூபமாகப்போவதென சாபமிட்டார், அப்போது அவரெட்டுப்பேரும் பகவான் பாதத்தில் விழுந்து சுவாமி எங்கள் சாபம் எப்படி விமோசனமாகுமென்றுச் சொல்ல இதைக்கேட்டு பகவான் மனபூர்த்தியாக நீங்கள் ஒவ்வொரு யுகத்திலும் இருவராக மோக்ஷ மடைவீரென்றுச்சொல்ல சந்தோஷமடைந்தார், அந்தக் காரணத்தால் பிரதியுகத்திலும் இரண்டு பக்ஷிகள்வந்து வேதாசலேஸ்வரனை நித்தியம் சேவையடைந்து பிரசாதம் தின்றுக்கொண்டிருப்பார்.

இதுவுமன்றி இந்த பக்ஷிகள் தினந்தோறும் உதயத்தில் காசியில் ஸ்தானஞ் செய்து விஸ்வேசரனை சேவித்துக்கொண்டு அங்கிருந்து மத்தியானத்திற்கு வேதகிரீசனை சேவையடைந்து பிரசாதம் பெற்றுக் கொண்டு சாயங்காலம் இராமேஸ்வரஞ் சென்று இராமலிங்கேஸ்வரனைச் சேவித்து அந்த இராத்திரிதினமே புறப்பட்டு காசிக்குப்போய் விடும் இதுதான் இங்கிருக்கப்பட்ட சங்குதீர்த்தத்தில் பனிரெண்டு வருடத்திற்கோர் விசை சங்குபிறக்கும் அந்த சங்கானது சிவனுக்கு அபிஷேக பாத்திரமாக உபயோகிப்பார், இந்த ஸ்தலத்திலிருக்கப்பட்ட அதர்வனமலைதனில் சஞ்ஜீவி இருக்கிறது எந்தவித ரோகிகளானாலும் சங்குதீர்த்தத்தில் ஸ்தானஞ்செய்து மலைதனை வலப்பிரதக்ஷணமாகசுற்றிவந்து வேதகிரியென்னும் மூலிகைதனை தின்றால் ரோகம் தீர்ந்து சந்தோஷமடைந்து அந்தியகாலத்தில் பரமசிவன் பாதாரவிந்தம் சேருவாரென்றுச் சொல்லவே வேடர் சந்தோஷமடைந்து மறுநாள் உதயத்திலெழுந்து சங்கு தீர்த்தத்தில் ஸ்தானஞ்செய்து மலைதனை வலப்பிரதக்ஷணமாக சுற்றிவந்து பகவானை சேவையடைந்து போஜனஞ் செய்துவிட்டு புறப்படுஞ் சமயத்தில் யோகியைப் பார்த்து

ஐயா நேற்றியதினம் படவுதன்னிலிருந்த பிரபாவந்தன் முதலானவர் கெதி எப்படியாச்சுதோ அதைச் சொல்லுமையா வென்றுக்கேட்க யோகிச்சொல்லத் தொடர்ந்தார்.

## இருபத்தோராம் மஜிலிக்கதை.

### அருயத.

ஓ வேடரே! சுழற்காற்று அதிகநேரமாக விடாமலிருப்பதை படவுக்காரறிந்து சவமானது படவிலிருக்கிறவரைக்கும் காற்று நிற்காதென்று பெரியோர் வாக்கியம்போல் நம்பி வேந்தன் அருகில்வந்து தைரியமொழிகள் சொல்லி மனதை நிலை நிற்கச் செய்தார் அதற்கு பிரபாவந்தன் படவுக்காரரைப் பார்த்து ஏனப்பா பயப்படுகின்றீர் இந்தச் சுழல்காற்றானது என்மீது அபசாரஞ்செய்ய மனமிட்டது இப்போது வெய்யல் காற்றுமழை இல்லாதக் காலத்தில் இப்படியடிக்கிறது இந்த சிசுவின்முகம் பார்த்தாகிலும் நிற்கலாகாதாவென்று பிரார்த்திக்க ஆனாலும் நான் முறையிடுவது சமுத்திரவேந்தன் காதிற்குக் கேட்கவில்லையோவென்றுச்சொல்ல அப்போதுபடவுக்காரர் இவனைப் பார்த்து ஐயா! காற்று அதிக உக்கிரமாக அடிக்கிறது மலைகள்போல் அலைகள் படவுக்கு நால்பக்கமும் அடிக்கிறது ஆகையால்தங்கள் இராணியை சமுத்திரத்தில் போடுகிறவரைக்கும் நிற்காதுப்போல் தோற்றுகிறது என்றுச்சொல்ல இதைக்கேட்ட பிரபாவந்தன் ஆ! பூர்ணசெந்திரன் இல்லாமல் போனாலும் செந்திரரேகைதனைப் பார்த்து மனிதர் சந்தோஷிப்பதுபோல் என் சிசுவைப்பற்றி அவர்மொழிக்குச் சம்மதித்து இன்னமோர்விசை என்நாயகி முகத்தைப் பார்க்கலாமென்று தன் நாயகி அருகில்வந்து ஐயோ! என்ஜீவரத்தினமான கலாவதியே! இப்படிக்கொத்த மரணம் உனக்கு லபிக்கலாமா உன்ஜீவம் எந்தலோகத்தில் அடைந்தது ஆனாலும் நீ என்வசம் தந்ததிரேகத்தை பூமியில் ஸ்தாபனம் செய்யாமல் இந்த பகையாளியான கிழவன் மொழியால் எறிந்திடவேண்டி வந்தது ஆ ஆ உன்னை இந்தக்கடலில் எறிந்திட்டால் எந்தெந்த ஜந்துக்கள் கஷ்டப்படுத்தினால் அதை சகிக்காமல் வருத்தமடைகுவாயோவென்றுச்சொல்லி முத்தமிட்டுக்கொண்டு சேடியை அழைத்து அடிசேடீ! நீ எனது கைப்பெட்டியைக் கொண்டுவா அத்துடன் ஓர் பெரிய பெட்டியைக் கொண்டுவாவென்றுச் சொன்ன



வுடனே அம்மாது வேகமாகச்சென்று இந்தயிரண்டுப்பெட்டியைக்கொண்டுவந்தவுடனே இதைக்கண்டு பிரபாவந்தன் சோகமடைந்து கலாவதியை இந்த பெரியபெட்டியில்வைத்து அவளுடைய வஸ்திராபரணமெல்லாம் அப்பெட்டிதன்னில்வைத்து அத்துடன் ஓர் கடிதமெடுத்து இந்தப்பெட்டியை யார் பார்க்கிறாரோ அவர் என் பிராணசகியை எடுத்து பூமிதன்னில் பொதிக்கவேண்டியது என்றெழுதி அம்மாதுடன் வைத்துவிட்டு அந்தப்பெட்டியை கெட்டியாக பந்தனஞ்செய்து சமுத்திரத்தில் போட்டுவிட்டான், உடனே சுழற்காற்று நின்று விட்டது, பிறகு பிரபாவந்தன் படவுக்காரரைப் பார்த்து நாம் சோபாவதி நாடு சேருவதற்கு வெகுநாளாகும் ஆகையால் இந்த சிசுவை படவுதன்னில் வைத்திருந்தால் பிழைப்பது கஷ்டமாகும் ஜயந்தி நகரத்தில் எனது நேசன் இருக்கின்றான் அவனிடஞ் சென்று இந்தப்பாலகனை விட்டுப் போகலாமென்றுச் சொல்ல இதைக்கேட்டு அந்தப்படவுக்காரர் ஜயந்திபுரத்திற்கு சமீபத்தில் படவை நிறுத்தினர்.

இது யிப்படியிருக்க அந்தச்சமயத்தில் மானவிக்கிரமனும் வைத்தியசாஸ்திர பண்டிதனொருவனும் ஒரு வியாதியால் சமுத்திர ஸ்நானத்திற்கு இரண்டுபேரும் வருஞ்சமயத்தில் கொஞ்சதூரமாக மிதக்கிக்கொண்டு வரப்பட்ட பெட்டியைப் பார்த்து அந்த சமுத்திரத்திலிருக்கப்பட்ட செம்படவரை அழைத்து அந்தப்பெட்டியைக் கொண்டுவரும்படிச்சொல்ல உடனே செம்படவர் கொண்டுவருக அந்தப்பெட்டியை வேந்தன் திறந்தவுடனே அழகுடைய மாதுசிரோண்மணி இருக்கக்கண்டு செவ்வையாக அந்தப்பெட்டியைப் பரிசோதிக்கவே யதில் ஒருசீட்டு அகப்பட்டது அந்த ரசீதையெடுத்து வாசிக்க அதிலேது எழுதி யிருந்ததென்றால் சோபாவதி நகரத்தை பரிபாலனஞ் செய்யும் பிரபாவந்தனுடைய பட்டத்து தேவியான கலாவதி இம்மாது இதைக்கண்டவர் இந்தப்பிரேதத்தை எடுத்து பூமியில் பொதிக்கவேண்டுமென்று எழுதி யிருப்பதைப்பார்த்து ஆ ஆ இவன் நிர்ப்பாக்யமடைந்தவன் இம்மாதுக்கு செய்யவேண்டிய கர்மங்கள் யேதும் செய்யாமல் விட்டான், என் அக்கடிதம் வாசித்துப்பார்த்து இப்படிக்கொற்ற நாயகியை போக்கடித்துக்கொண்ட அந்த பிரபாவந்தன் ஈனதிசையடைந்தவனென்று பச்சாதாபமடைந்து ஓ பிரபாவந்தனே! இம்மாதின் ஆக்கமானது நீ வெறுமாதை விவாகஞ் செய்துக்கொண்டாலும் உம்மைவிடாது என்மனதில் எண்ணமிட்டுக்கொண்டு அம்மாதின் அருகில் சென்று பார்க்க அம்மாதின் முகத்தில் மரணக்குறி இல்லாமலிரு

ப்பதால் சந்தேகமடைந்து தன் சிநேகிதனுகிய வைத்தியனுக்குக் காட்டினுன் அவர் பரிக்ஷித்து ஐயா! இம்மாதுக்கு ஒருநாள்மூர்ச்சை ரோகம் அடைந்தப்படியால் அவசரப்பட்டு பிராணம் போச்சுதென்று மனமிட்டு சமுத்திரத்தில் 'இம்மாதைத் தள்ளினுர் என்றுச்சொல்லி உடனே அவ்வைத்தியன் ஜலமெடுத்து அம்மாதின் முகத்தில் தெளித்தமாத்திரத்தில் கொஞ்சம் கொஞ்சம் மூர்ச்சை தெளிந்துவர அந்தக்கலாவதி கண் திறந்துப்பார்த்து ஐயோ தெய்வமே! இதென்னநான் எங்கிருந்தவள்? என் நாயகனெங்கே இது ஆருடைய நாடு ஒ பிராண நாயகாவென்று பெருங்கூச்சலிட்டு அழைக்க இந்த ஆச்சரியத்தைப் பார்ப்பதற்காய் பட்டணத்தி லிருப்பவரெல்லாம் கும்புகும்புலாகவந்து பார்த்துக் கொண்டுபோயிருந்தார், அச்சமயத்தில் அம்மாதைதேருதலேச்செய்து லபித்ததொரு ஆபத்தையெல்லாஞ்சொல்லி அந்தக்கடிதத்தைக் காட்டினுர், அப்போது அம்மாது அந்தக்கடிதத்தைப் பார்த்து இதென்னுடைய நாயகனுடைய கையெழுத்தென்று அந்தக்கடிதமெடுத்துக் கண்ணிலொத்திக்கொண்டு ஐயா! நான் படவேரினது மாத்திரம் ஞாபகமிருக்கிறது அங்கு புதல்வியைப் பெற்றதுமுதல்கொண்டு யாதுந் தெரியாது ஆகையால் நான் எனது நாயகனை பார்க்கிறவரைக்கும் இந்த உலகத்தின் மாய்கையென்னும் ஆசைதனைவெறுத்து பகவான்மீது பக்த்திவைராக்கிய மடைந்திருப்பேனெனசொன்னமாத்திரத்தில் அந்தமானவிக்கிரமன் அம்மணி உத்தமகுணமுடையதாயே! உன்மொழிக் கேட்டவுடனே எனக்கு மகா சந்தோஷமடைந்தேன் இப்போது இவ்வுலகத்தி லிருக்கப்பட்ட மாதர்கள் நடத்தைகளை வர்ணிக்க நலமல்ல உந்தனைப்போல் உத்தமமாதர்கள் அகப்படுவது மகா துர்லபமென்றுச் சொல்லி அம்மா! சதாசிவன் தேவியாகிய பார்வதி தேவி ஆலயம் எங்கள்நாட்டில் நர்மதாநதியோரத்தில் இருக்கிறது அங்கு தினந்தோரும் ஸ்தானஞ்செய்து அம்பிகைதனை பூஜைசெய்துக்கொண்டிரும் உனக்குசேவை ஊழியஞ் செய்வதற்கு எனது புதல்வியை அனுப்புகிறேன் மேலும் என் புதல்விக்காகிலும் அதிக மேன்மையுடன் உன்னைப்பார்ப்பேன் என்றுச் சொன்னவுடனே அம்மொழிக்கு கலாவதி சம்மதமடைந்து மானவிக்கிரமன் வீட்டிற்குவந்து சுகமாயிருந்து பிறகு தன்னுடைய மனப்பூஜைபான நாயகனைக் குறித்து பார்வதிதேவி சன்னதியடைந்து ஒ அம்மணி! லோகரக்ஷகி மகிஷமர்த்தனி, மாதங்கி, கபாலி, சூலி, கௌரி. திருநேத்திரதாரி, சச்சிதானந்தச்வரூபி, நிர்மலி, நிஷ்களி, நிரானந்தி, நிரூபி, ஆனந்தபைரவி, அம்பிகையே, உனக்குநான் வந்தனஞ்செய்கின்றேன் என்நாயகனை கோடியசீக்கிரத்தில் என் கண்ணுக்கு தோற்றும்படி செய்யவேண்டியது நீயே தாயுந்தந்தை என தினந்தோரும் தியானமடைந்து சன்னதியே கெதிபாக இருந்துக்கொண்டிருந்தாள்.



இது இப்படியிருக்க அங்கு சமுத்திரத்தின் மீது ஜனித்த சிசுவுக்கு கமலமென்று பெயரிட்டார், தான் க்ஷமகாலத்தில் சகாயஞ்செய்தப்படியால் பதிலுபகாரம் செய்ய மனமிட்ட ஜயந்தி நகரத்தின் வேந்தன் தனக்கு சிநேகிதனுகிய விசாலமதி வீட்டிற்கு பிரபாவந்தன் தாயுமில்லாப் பிள்ளையுடன் வந்தான் அந்த விசாலமதி பிரபாவந்தனைப் பார்த்து அவர் கஷ்டத்தை கேட்க மனமில்லாமல் ஐயா நீர் நாயகியுடன் வந்திருந்தால் என் கண்ணுலே பார்த்து சந்தோஷமடைந்திருப்பேன் என்றுச்சொல்ல அதற்கு பிரபாவந்தன் அவரைப்பார்த்து ஒ நேசனே! விதிப்பயனுகப்பட்டது யாரை விட்டகலும் என்நாயகி சுகத்தை எப்படி மறந்தாலும் மறக்க மனமிடுமோ ஒருக்காலும் விடாது இச்சிசுவைப் பார்க்கப்பார்க்கமென்மனம் அவளை நினைக்கிறது, ஆகையால் இந்தக் கமலமென்னும் சிசுவை உன் வசத்தில் விட்டுப்போகுறேன் இதைரக்ஷித்து இராஜப்புதல்விக் கனுகூலமான வித்யாப்யாசஞ்செய்து பெருமைகொண்டு வருவது உனது பாரமென்றுச் சொல்லி விசாலமதி நாயகியான போகினியைக்கண்டு அம்மா! இந்தச்சிசுவை நீ காப்பாற்றவேண்டியது இது உங்கள் பாலகனன்றி என் புதல்வியல்ல எனக்கு நம்பிக்கைக்கொடுத்து என்னை சந்தோஷமாக அனுப்பவேண்டியது என்றுச்சொல்ல அதற்கு அம்மாது சம்மதமடைந்து ஒ ராஜோத்தமா! எனக்கு ஒருப்புதல்வி இருக்கின்றுள் அவளைவிட இம்மாதை அதிகமாக தாயில்லாப்புதல்வியைக் காப்பாற்றுவேன் "குரங்குகையில் அகப்பட்ட புஷ்பமாலையும் புருடன் கையில் இருக்கப்பட்ட சிசுவும் சுகப்படமாட்டாது, இந்தப்புதல்வியை நீ எப்படி காப்பாற்றுவீர்? இதற்காக நீ துயரப்படவேண்டாமென்றுச்சொல்ல அதன் பிறகு விசாலமதி பிரபாவந்தனைப்பார்த்து நம்பிக்கையாகச் சொல்லி ஒ நேசனே! க்ஷாமக்காலத்துல் நீ இந்நாட்டின் பரிஜனங்களை யெல்லோரையும் காத்தப்படியா லவர் நித்தியமும்முடைய திருசேவை தியானமடைந்திருப்பார் ஆகையால் நான் எத்தனைக்கோடி உமக் குபகாரஞ்செய்தாலும் இதுவொரு உபகாரமாகுமா உனதிஷ்டம்போல் செய்கிறேன் என்றுச் சொன்னவுடனே பிரபாவந்தன் சம்மதமடைந்து தன் சிநேகி குழந்தைதனை சீராட்டிக் காப்பாற்றுவாரென்று சம்மதித்து சிநேகிதன் வீட்டில் விட்டுவிட்டு தன்னுடன்வந்த சேடிமாரை யெல்லோரை

யும் அங்கிருக்கும்படி திட்டஞ்செய்ப் அந்த சேடி இவ்வளவிட்டுப்
பிரிய துக்கமடைய அவள் துக்கத்தை தேருதலைச்செய்து அவளுந்
திரவுப்பெற்று சந்தோஷமாக சோபாவதி நாட்டைச்சேர்ந்து இராஜ்ய
பரிபாலனஞ் செய்துக்கொண்டு தன்நாயகியாகிய கலாவதியையும் தன்
வயிற்றில் ஜனித்த கமலத்தையும் மறந்து சுகமாகயிருந்தான், அந்தக்
கலாவதியும் பதிசேவை காணவேண்டி தேவிபாதாரவிந்தமே கெதி
யென்று யிருந்தாள், தாய்தந்தைகளைவிட்ட கமல விசாலமதி வீட்டில்
வளர்ந்துக்கொண்டிருந்தாள்.

அந்த போகினிகமலத்தை தினமொருமேனியாய் பொழுதொரு
வண்ணமாக வளர்த்துக்கொண்டிருந்தாள், இம்மாதை வித்யாப்பாசத்
தில் விட சர்வசாஸ்திர பரசண்ட பண்டிதரை கெலிக்கப்பட்ட சாமார்
த்திய முடைந்தவளா யிருந்தாள், இப்படிருந்தும் அஹங்காரமென்
பது கிடையாது வீட்டின் வேலையெல்லாம் தானே பார்த்துக்கொண்டு
எல்லோரையும் அதிக மரியாதைகள் செய்துக் கொண்டிருந்தாள்,
பிறந்தவீட்டிற்கும் புகுந்தவீட்டிற்கும் கீர்த்திக்கொண்டு வரப்பட்டவ
ளாயிருந்தாள், இந்தக்கமலமாது தினந்தினம் சூக்ஷ்மபுத்தியுடன் இரு
ப்பதால் இதைக்கண்ட விசாலமதி அதிக சந்தோஷ மடைந்தார்,
அவர் நாயகியாகிய போகினியென்னும் மாதுக்கு மாத்திரம் பொறா
மை உண்டாச்சுது, கமலமும் தன் புதல்வியும் சரிவயதாக இருந்தப்
படியால்கமலமாதின் சூக்ஷ்மபுத்திக்கும் எல்லோரும் சந்தோஷமடைந்
தார் போகினியுடைய புதல்வியைவெறுத்தார். இப்படி தினந்தோறும்
சமுத்திரத்தில் ஜனித்த கமலமாதுடையகீர்த்தியானது சந்திரகிரணம்
போல்பிரகாசிக்கிறது இவளைக்கொன்றுவிட்டு நமதுப்புதல்வியைபெரு
மைபாராட்டவேண்டுமென்று மனமிட்டிருக்க ஒருசமயம் பிரபாவந்தன்
வந்துக்கேட்டால் ஏதோ வியாதிப்பிறந்து மரணமடைந்தா ளென்றுச்
சொல்வோமென யோசித்து அந்தச் சண்டாளி ஓர் கொலைபாளியை
அழைத்து தன் மனஇச்சைதனை சொன்னாள், இதைக்கேட்ட அந்தக்
கொலைபாளி சண்டாளனைப் போதிலும் அம்மாதைக் கொல்வதற்கு
மனம் வாராதப்படியால் பகவானுக்கு பயமடைந்து ஓ அம்மணி! கன
விலும் ஓர் பழியுஞ்செய்யாதவனை நான் எப்படிக் கொல்லுவேன் பர
லோகத்தில் இதற்காக நாம் அனேககஷ்டத்தை அனுபவிக்கவேண்டி
வரும் என்றுச்சொல்ல இதைக்கேட்ட போகினி கோபமடைந்து நீ
ஊழியக்காரனாக இருந்தும் சொல்லப்பட்ட வேலைசெய்யாமல் அதிக
மாகபேசி எனக்கு கோபம் வரும்படி செய்யலாமா என்மொழிப்பிரகா



கலாமா அந்தக் கமலமாதைக் கொன்றுதான் தீரவேண்டுமென்று கர்
ஜித்து அதோபார் கமலமாது துக்கமடைந் திருக்கின்றாள் சீக்கிரமாக
அழைத்துச் செல்லுமென்றுச்சொல்ல அந்தச்சண்டாளன் எஜமானி
யுடைய மொழிக்கு பயமடைந்து அம்மொழிக்கு சம்மதித்து கமல
யிருக்குமிடத்திற்கு போய்க்கொண்டிருக்க போகினியும் அவனுடனே
சென்றுபோனாள், அந்தச்சமயத்தில் கமல தன்சேடி மரணமடைந்த
தைநினைந்து அம்மாசேடி நீ இந்த உலகவாழ்க்கைவிட்டு திவ்யலோக
மடைந்தாய் நான் சமுத்திரத்தில் பிறந்து தாய் தந்தைகளைவிட்டு துக்
கமடைந்து இஹலோகசாகரத்தில் மூழ்கி கஷ்டப் படுகின்றேனென்று
துக்கத்துடனிருக்குஞ் சமயத்தில் கபடமனதுடையபோகினி இம்மா
தைக்கண்டு ஓ கமலா! இதென்ன நீ ஒண்டியாக இருக்கின்றாய் என்
புதல்வியெங்கே? சேடியால் நீ துயரப்படவேண்டாம் அவளுக்கு பதி
லாக நான் இருக்கின்றேன் உன்னுடைய சவுந்தர்ய ரூபமானது நிஷ்
பரயோஜனமான விசனதாப்யத்தி லிருப்பதால் கவலையடைந்தாய் உன்
கையிலிருக்கும் புஷ்பத்தை இப்படி கொடுமென்றுச்சொல்லி அந்தச்
சண்டாளனைப் பார்த்து அடா காவலனே சமுத்திரதீரத்தில் குளிர்ந்த
காற்று வீசுகிறது அங்கு இம்மாதை அழைத்துக் கொண்டுபோய்
கொஞ்சநேரம் திரியவைத்து அழைத்துக்கொண்டு வாவென்
றுச்சொல்ல அம்மொழிக்கேட்ட கமலமாது யோகியைப் பார்த்து
அம்மா! இவன் என்பின்னால் வந்தால் வீட்டில் செய்யும்படியான
வேலைகள் நின்றுவிடுமே எனக்கு சமுத்திரதீரத்திற்குப்போக எனக்கு
அபேக்ஷையில்லை அதற்குபோகினி கோபமடைந்து அம்மா! நாங்கள்
உன் தந்தையிடம் அநேக விதமாக போஷிக்கிறோமென்றுச் சொன்
னோம் இதுவுமன்றி அவர் எப்போவந்து முகத்தைக் காட்டுவாரோ
வென்று காத்துக்கொண்டிரும் ஒருசமயம்பிரபாவந்தன்வரும்போது
நீ இப்படி சோகமடைந்திருந்தால் நாங்கள் உன்னைசெவ்வையாய் வள
ர்க்கவில்லையென்று மனதிலெண்ணிக்கொள்வார் இல்லாமல் ஏதாகி
லும் வித்தியாசமாகச் சொல்வார்.

இதற்கு நாங்கள் ஏன் முன்னிருக்கவேண்டும் ஓ கமலா! கமலாக்ஷி!
என் ஆசைப்புதல்வியே! விசனமென்ற மேகத்திலிருந்து வெளிப்பட்ட
உன்முகம் சந்திரனைப்போல் பிரகாசிக்கச்செய்து எங்களை சந்தோஷ
மிடச்செய்வாய் இன்னங்கேள் மாதர் எவ்வர்னம் பிரயோஜன மில்லை
யென்று இருக்கலாமா அதைக் காப்பாற்றிக்கொள்ள உபாயஞ் செய்ய
வேண்டியது "விசனமென்பதே கிழரூபம் சந்தோஷமே எவ்வர்னம்"

என்பதுபோல் விசனத்தை விட்டுவிட்டு தயைசெய்து போகச்சொல்லி பிரார்த்தித்தாள், அம்மொழிக்குச்சம்மதமடைந்து அம்மாயெனக்கிஷ்டமில்லை போவதற்கு உன்மொழியால் போய்வருகின்றேன் என்றுச் சொல்லிப் புரப்பட்டாள், அப்போது போகினிச் சண்டாளனைப் பார்த்து அடாக்காவலனே!, நான் சொன்னபடி செய்வாய் (அதாவது கமலமாதைக் கொல்வது) என்னும் பயங்கர மொழிச்சொல்லி அனுப்பினள்.

அதன்பிறகு கமலா தான் சாகுவதுதெரியாமல் அந்த சண்டாளனுடன் போகுஞ்சமயத்தில் அடா காவலனே! இதோ பார் சமுத்திரம் அலைகள் எப்படிவந்து விழுகிறது, காற்றுனது வருணதிசையிலிருந்து அடிக்கிறது, நான்ஜனிக்கும்போது வடதிசையிலிருந்துகாற்று அடித்துக் கொண்டிருந்தது என்றுச்சொல்லி அப்போதடித்த சுழற்காற்றையும் தாயார்மரணத்தையும் தந்தையுடையவிசனத்தையும் ஞாபகத்திற்குவந்து அடாகாவல்னே! என்தந்தை சுழற்காற்றுவந்தப்போது படவுக்காருக்கு தைரியஞ்சொல்லி பிறகுயென்னல் என்தாயாரை சமுத்திரத்தில் போட்டுவிட பகவானென்னை இந்தக்கெதிச்செய்தான், ஆனாலும் பகவான் எல்லோரையும் ஒரேநிலையில் இருக்கச்செய்யான் சுகதுக்கத்தை இரண்டையும் ஒன்றைமுந்தி ஒன்றைபிந்தி வருமென்று மொழியாடிக் கொண்டிருக்க அந்தசண்டாளன் கர்ஜித்து சீக்கிரமாக பகவானை தியானஞ் செய்வாயென்றுச் சொல்ல இதைக்கேட்டு அம்மாது பயமடைந்து அடா உன் அபிப்பிராய மேதென்றுக்கேட்க அதற்கு அந்த சண்டாளன் அம்மா! பயமடையாதே பிராணம்போகுஞ் சமயத்தில் எமனுடைய பாதை சகிக்காமல் நாராயணஸ்மரணை செய்வாயென்று பெரியோர் சொல்லுவார் சீக்கிரத்தில் என்வேலை முடிப்பேனென்று வாக்குதந்து வந்திருக்கின்றேன் என்றுச்சொல்ல இம்மொழிக்கேட்டு நம்மைக் கொல்லவேண்டி வந்தானென்று மனதில் எண்ணமிட்டு அதிக சோகமடைந்து ஒரு கெட்டநடக்கை நடக்கவில்லையே எரும்பையாகிலும் மிதித்தவளல்லவே ஏதாகிலும் நான் தெரியாமல் ஒருப்புழுவை மிதித்தப்படியால் மூன்றுதினம் நித்திராகாரத்தைவிட்டு பச்சாதாப மடைந்தேன் இப்படிருக்க நான் அம்மாதுக்கு எந்தவிதமாகிலும் அபகாரஞ் செய்தரியேன் என்று சோகமடைந்திருக்குஞ் சமயத்தில் அந்த சண்டாளன் அம்மாதைபெரிய பாராங்கல்லுமீது பிடித்துத்தள்ளி ஆயுதத்தை ஓரையிலிருந்து எடுத்துக்கொண்டிருந்தான், காளிகாதேவி சம்கனிடமிருந்து தப்பித்துக் கொண்டு



போனதுப்போல் அம்மாற்கத்தில் படவேறி தூரத்திலிருந்து வந்த ஒருவழிப்போக்கன் அம்மாதைப்பார்த்து விடுதலைசெய்து தன் படவுதன்னிலேற்றிகொண்டு மதுராபுர மந்தப்புரத்தில்விட்டு சைரந்திரியாகயிருமென்று சொல்லிப்போய் விட்டான், இப்படிவிட்ட அந்தக்கமலம் மனவியாகூல மடைந்திருந்தும் அந்த மதுராபுரிநகரத்தின் பரிஜனங்களுக்காகிலும் மேன்மைபொருந்திய அழகுடனிருந்தாள், இதுவுமன்றி கமலம் இவர்களுடனிறுக்க அச்சமயத்தில் அவ்வேந்தன் இம்மாதைப்பார்த்து இவளை சயிரந்திரிவேலைக்கு விடுவதுநலமல்ல நாம் விவாகமாடவேண்டுமென்று மனமிட்டு அம்மாதைப்பார்த்து உன்னுடைய தாய்தந்தை யாரென்றுக்கேட்க அம்மொழிக்கேட்டு கமலம் கண்ணீர் தாரைதாரையாக விட்டுக்கொண்டுகின்றுள், வேந்தன் கமலத்தை விவாகஞ்செய்துக் கொள்ளவேண்டுமென்கிற மனமிடவே மன்மதபாணம் மேலிட்டது, என்றுச்சொல்லிக்கொண்டிருக்க சூரியன் மறைந்துவிட்டான், பிறகு சமீபத்திலிருந்த சிதம்பரமடைந்து அங்கு காலக்கடனை தீர்த்துக்கொண்டு போஜனமறிந்து சயனிக்குஞ்சமயத்தில் வேடர் யோகியைப்பார்த்து ஐயா இந்தஸ்தலமகிமை சொல்லுமென்று கேட்டவுடனே யோகிச்சொல்ல ஆரம்பித்தார்.

அப்பா வேடரே! லோகத்திலிருக்கப்பட்ட சிவக்ஷேத்திரங்களில் இது பிரசித்தியடைந்தது இந்தஸ்தலத்தை சிதம்பரமென்றும், வியாக்கிரபுரமென்றும், தில்லைவனமென்றும், புண்டரீகபுரமென்றும், சிச்சபையென்றும், கனகசபையென்றும், நடனசபையென்றும், பெயருண்டு இங்கு ஸ்ரீ சிவகாமிசுந்தரி சமேதமடைந்து சபாநாயகசுவாமி வாசஞ் செய்துக் கொண்டிருக்கின்றார் இந்த சபாநாயகன் தேவர்களுக்கும் தேவிக்கும் மோகமுண்டாகப்படிசெய்ய மனமிட்டு ஆனந்ததாண்டவமாடுஞ்சமயத்தில் சகல தேவர்களும் சப்தரிஷிகளும் இங்குவந்து தாண்டவம்பார்த்து ஆனந்தமடைந்து சிவகங்கைதன்னில் ஸ்தானஞ் செய்து சகல மகிமையடைந்தார், உபமன்யமகாமுனிவர் ஸ்ரீகிருஷ்ணமூர்த்திக்கு இங்குபஞ்சாக்ஷர மந்திரமுபதேசம் செய்தார். மாத்தியந்தி மகாரிஷி இங்குலிங்கப்பிரதிஷ்டம் காவித்து தபஞ்செய்யுங்காலத்தில் அவருடைய தபத்திற்கு பகவான் மகிழ்ந்து பிரத்யக்ஷமடைந்து வேண்டிய வரங்கோருமென்றுக் கேட்க அவர் புலிப்பாதங்களும் இராக்காலத்தில் பிரகாசிக்கும் நேத்திரமும் உண்டாகவேண்டுமென்றுக்கேட்க அதுபோல் வரந்தந்தார், அதுமுதற்கொண்டு அம்முனிக்கு வியாக்கிரமுனியென பெயருண்டாச்சுது, அந்த வியாக்கிரமுனி

வன் வசிஷ்டமகாமுனிவன் புதல்வியை கலியாணஞ்செய்து புதல்வனைப் பெற்றார், அந்தச்சிசுவுக்கு பாலில்லாமல்போகவே பகவான் க்ஷீரசாகரத்தைக் கொண்டுவந்து பாலகனுக்கு திருப்திகரஞ் செய்தார், இதுவுமல்லாமல் தாருகாவனத்தில் மாதர்கள் மகாபதிவிரதை யடைந்திருப்பதால் இவர்புருடர்கள் தபோமகிமையால் கெர்வமடைந்தார், இதைத் தெரிந்து பரமசிவன் அழகு ரூபமடைந்து பிக்ஷாந்திரியாக வருக அச்சமயத்தில் மாயவதாரியாகிய மாயவன் மோகினி ரூபமெடுத்து பின்தொடர்ந்து போகுஞ்சமயத்தில் தாருகாவன மாதர்கள் பிக்ஷாதாரியாக வறப்பட்ட பரமசிவனைப்பார்த்து மோகித்தார், தாருகாவன புருடர் மோகினியைப்பார்த்து மோகித்தார், இப்படி தாருகாவன ஸ்ரீ புருடர்கள் காமிகளாகயிருந்தார், இதுவுமல்லாமல் மாதர்கள் பலத்காரமாக பகவான்மீதுவிழுந்து ஆலிங்கனஞ் செய்வதைப்பார்த்து சிலதபசிகள் அபியாகம் செய்யவே அதிலிருந்து முதலில் வியாக்கிரம் வந்தது அதைப்பிடித்துக்கிழித்து வஸ்திரமாகக் கட்டிக்கொண்டார், அதன்பிறகு பூதங்கள்வர அதையெல்லாம் தன் பரிவாரமாகச்செய்துக்கொண்டார், மறுபடியும் சர்ப்பங்கள்வர அதை ஆபரணமாகச் செய்துக்கொண்டார், பிறகுவந்த இராக்ஷசனை காலின் கீழ்போட்டு மிதித்தார்.

அதன்பிறகு வந்த மந்திரதேவதைகளை பாதுகையாக தரித்துக்கொண்டார், இதைதெரிந்த ரிஷிகள் பகவான் கால்மேல்விழுந்து சரணாகதமடைய இதைப்பார்த்து பகவான் தாண்டவசேவை தந்தாற்க இதைக்கேட்ட ஆதிசேடன் பரமேஸ்வரனை ஆனந்ததாண்டவம் கோர அப்போது பதஞ்சலிரூபத்துடன் கனகசபைக்குவந்துதபஞ்செய்யவே அந்ததபசிக்கு சம்மதமடைந்து தைபூசபௌர்ணமி தினத்தில் ஆனந்ததாண்டவ சேவைதந்தார், அதைப்பார்த்து பதஞ்சலிமகாரிஷி ஆனந்தமடைந்து தியானித்தார், அதுமுதற்கொண்டு பக்தரால் தியானமடைந்தார், இதுவுமல்லாமல் சிங்கவர்மசக்கிரவர்த்தி ரோகமடைந்தவனாகயிருந்து இங்குவந்து சிவகங்கையருகில் தபஞ்செய்ய ஸ்வர்னபத்மினியென்னும் கிணற்றினருகில் வசித்துக்கொண்டிருந்த வியாக்கிரபாதமுனிவனை சேவையடைந்து அவரால் சதுப தேசமடைந்து ரோகத்தை தீர்த்துக்கொண்டு ஹரண்யவர்ம சக்கிரவர்த்தியென்று பெயரடைந்து கௌடதேசத்திற்கு வேந்தனாகயிருந்தான். அந்தியகாலத்தில் கைலாசமடைந்தார், இந்த திவ்யக்ஷேத்திரத்தில் இருக்கப்பட்ட நடனசபாபதியை சிவகாமசுந்தரியை சேவித்தவர்களுக்கும்



சிவகங்கா : குஹ்யதீர்த்தம், வியாக்கிரதீர்த்தம், யௌவனதீர்த்தம், ஆனந்ததீர்த்தம், நாகதீர்த்தம், சிவபிரியாதீர்த்தம், க்ஷீராப்திதீர்த்தம், பிரம்மதீர்த்தம், முதலானதீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்தவர் சகல அயிஸ்வரியமடைந்து அந்தியத்தில் கைலாசமடைவா ரென்றுச்சொல்ல வேடர் சந்தோஷமடைந்து மறுதினத்தில் சில கங்காதீர்த்தத்தில் ஸ்தானஞ்செய்து பகவானை சேவித்து போஜனம் செய்துக்கொண்டு அங்கிருந்து புறப்பட்டுப்போகுஞ் சமயத்தில் ஐயா! நேற்றியதினம் தாங்கள்சொன்ன கதைக்கேட்டு எங்கள் மனம் விசனமடைகிறது அதன்பிறகு என்னமாச்சுதோ அம்மாதுதந்தை எப்படியானுளோ அதை விசிதமாகச் சொல்லுவீரென கோருகின்றோமென்றுச்சொல்ல யோகி சந்தோஷமடைந்து சொல்லத்துணிந்தார்.

# இருபத்திரண்டாம் மஜிலிக்கதை.

## துஷ்டஸ்திரீகெதி.

அப்பா வேடரே! போகியால் அனுப்பப்பட்ட சண்டாளன் வழிய்போக்கனால் பயமடைந்து கமலத்தைக் கொல்லாமல் போனசங்கதியைச்சொல்லாமல் கமலத்தை கொன்றுவந்தபடி போகியுடன்சொன்னான் அப்போது போகினிபிரபாவந்தன் புதல்வி மரணமடைந்தாளென்று பயிரங்கமாக விசனமடைந்து கர்மகாரியங்கள்செய்து பந்துபேருக்கும் அன்னம்வைத்து தானும் சந்தோஷமாக போஜனத்தை வயிறாரதின்றாள், இப்படியிருக்க சிலதினத்திற்குப்பிந்தி இந்தக்காரியம் வெளிவரவே எல்லோரால் அவமானமடைந்து போகிமேரணமடைந்தாள் பிறகு ஒருசமயத்தில் பிரபாவந்தன்குழந்தை ஞாபகமடைந்து தன் பட்டணத்திற்கு அழைத்துவரலாமென்று எண்ணமிட்டு தன்னுடைய மந்திரியுடன் புறப்பட்டுவந்து விசாரிக்க கமலாவதி மரணமடைந்ததைக்கேட்டு சோகமடைந்து தாக்காக்கிராந்தனாகி இந்தநாட்டைப்பார்க்காமல் சோபாவதி நகரஞ்சேர்ந்தான், இப்படி தன்நாடு சேர்ந்தபிறகு ஒரு பதார்த்தத்தையும் கண்ணால்பார்க்காமலும் யாருடன் மொழியாடாமலும் விசனத்துடனிருந்தான்.

இப்படிசோபாவதி பட்டணம்போவதற்கு புறப்பட்டுப்போகும்மார்க்கத்தில் பிரபாவந்தனுடைய மனோஹரமான படவைப்பார்க்கிறதற்கு மதுரைவேந்தன் இஷ்டமடைந்து ஓர் சின்னப்படவேறி அந்தப்படவு

அருகில்வந்துநிற்க பிரபாவந்தனுடைய மந்திரியான தர்மபாலன் அவ
ருக்குத்தகுந்த மரியாதைகள்செய்து அமரும்படிச்சொல்லி ஐயா! இந்
தப்படவுதன்னில் பிரபாவந்தனென்னும் பூபாலனிருக்கின்றார் அவர்
மூன்றுமாதமாக ஒருவருடன் மொழியாடாமல் பிராணத்தை விடுவத
ற்காய் கொஞ்சஞ்சாதம் தின்றுக்கொண்டு எப்போதும் மௌனமா
கவே யிருக்கின்றார், என்றுச்சொல்ல இதைக்கேட்ட அவ்வேந்தன்
விசனமடைந்து பிரபாவந்தனைப் பார்க்கவேண்டுமென்று தர்மபாலனு
டன்சென்று பிரபாவந்தன் எதிரில்நின்று வந்தனஞ்செய்தார், அப்
போது பிரபாவந்தன் பதில்வந்தனஞ் செய்யாமலும் முகத்தை ஏரெடு
த்துப்பார்க்காமலும் இருந்த பிரபாவந்தனைப்பார்த்து மதுராபுரிவேந்
தனுக்கு கமலகியாபகம்வந்து அம்மாதாலை இவரை மொழியாடச்
செய்வாளென்று எண்ணமிட்டு தர்மபாலன் அனுமதியால் அழைத்து
வந்துவிட அம்மாதை படவுதன்னிலிருந்தவர் பார்த்து சந்தோஷ
மடைந்திருக்க அப்போது மதுராபுரிவேந்தன் இம்மாதைப்பார்த்து
ஓ கமலா! இங்கு ஓர்வேந்தன் ரோகியாகயிருந்து மொழியாடாமலி
ருக்கின்றார், நீ அதற்குத்தகுந்த சிகிச்சை செய்வாயென்றுச்சொல்ல
இதைக்கேட்ட அந்தக்கமலா சந்தோஷமடைந்து பிரபாவேந்தன்
அருகில்சென்று சீராக பரிசோதித்துப்பார்க்க ரோகக்குறிகள் இல்
லாமல் துக்கமே மேலிட்டிருப்பதால் அதைத்தெரிந்து அந்த சோக
த்தை தேருதலைச்செய்ய மனமிட்டு, ஓ இராஜபூபாலா! நீர் துக்கத்
தால் தேகத்தை போக்கடித்துக் கொள்ளுகின்றாய் ஆனால் உனக்கா
கிலும் அதிக விசனமடைந்தவ ரில்லையாவென்று தன் தாயுந்தந்தை
பெயர் சொல்லாமல் தனக்குலபித்த கஷ்டத்தையெல்லாஞ் சொல்லி
சுகபதவிவிட்டு ஈனதிசைக்கு வந்ததுவரைக்கும் சொல்ல பிறகு தன்
தந்தையென்று தெரிந்துக்கொண்டு தனக்கு லபித்த விஷயத்தைச்
சொல்ல ஆரம்பித்தாள், அவரிருவரும் துக்கத்தை அனுபவித்தபடி
யால் யோக்கியர் யோக்கியரோடு சேருவதுபோல் தண்ணீர்தண்ணி
யில் கலந்ததுபோல் இந்த சோகத்தைக்கேட்ட பிரபாவந்தன் தலை
யெடுத்து கண்திறக்கச்செய்தான், பிறகு கலாவதியுடைய ரூபமானது
கமலகலாவதியின் கியாபகம் வரும்படிச்செய்தாள், அப்போது வெகு
நாளாக மொழியாடாமலிருந்த பிரபாவந்தன் கமலத்துடன்சொல்ல
ஆரம்பித்தார்.

அம்மா எனதுபத்தினி உன்னைப்போலவே யிருப்பாள், என்புத
ல்வி பகவான்கடாக்ஷத்தால் பிழைத்திருந்தால் உன்னவ்வளவே யிருப்



பாள், உன் முகக்குறியைப்பார்த்தால் ஏதும் சந்தேகங்கிடையாது
ஓ அம்மா! நீ எங்குவசித்திருப்பவள் உன் தாய்தந்தை யார் உனக்கு
லபித்த விசனமாவது யாதென்றுக்கேட்க இம்மொழிக்கேட்ட கமலம்
யூகித்து ஐயா! என்துபெயர் கமலமென்பார் இந்த கமலமானது எங்
கும் கிடையாதப்பெயராகும் சமுத்திரத்தின்மீது ஜனித்தப்படியால்
இந்த சம்பந்தமான பெயருண்டாச்சுது இதைக்கேட்ட பிரபாவந்தன்
சந்தோஷமடைந்து இனியென்கஷ்டம் தீர்ந்துவிட்டதெனவே இதை
யறிந்த கமலம் இவர் தன்தந்தையென்று நிச்சயித்து ஓ இராஜோத்
தமா! சமுத்திரத்தில் படவுபோகுஞ்சமயத்தில் நான் பிறந்தபடியால்
சமுத்திரத்திற்கு கமலாகரமென்று பெயரிருப்பதால் எனக்கும் கமல
மென்று பெயருண்டாச்சுது என்தாயார் ஒருவேந்தன் புதல்வி நான்
பூமியில் விழுந்தமாத்திரத்தில் அம்மாது சிவலோகமடைந்தாள் இந்த
சந்தர்ப்பமெல்லாம் சேடிச்சொல்ல கேட்டிருந்தேன் இதற்குள்பகவான்
அவளைதப்பித்தது என்தாயின் மரணத்தை நினைந்து தந்தைசோகம
டைந்து என்னை ஜபந்திபுரத்தில் இருக்கப்பட்ட விசாலமதியென்னும்
தன் சிநேகிதன் வீட்டில் என்னை வளர்ப்பதற்குவிட அவ்வேந்தன்
தேவி என்னைக்கொல்லும்படி உத்திரவுசெய்தாள், அந்தக்காவலன்
கொல்லுஞ் சமயத்தில் அந்தப்பரம்பொருளாகிய பகவான் மானவ
வேஷமெடுத்துவந்து என்னையாதரித்து இந்நாட்டை பரிபாலிக்கும்
மனோஹரன் அந்தப்புரத்தில் சைரந்திரியாக இருமென்று நியமித்துச்
சென்றார், என்றுச்சொல்ல இதைக்கேட்ட பிரபாவந்தன் அதிகமான
துக்கமடைய ஆரம்பஞ்செய்யவே இதைக்கேட்டு மந்திரி முதலான
வர்களும் தேருதலைச்செய்து தைரியமொழிக் கூரியவுடனே பிரபாவந்
தன் மந்திரியைப்பார்த்து அப்பா! எனது புதிய உடுப்பார்வனையைக்
கொண்டுவருவாய் இந்தக்குழந்தை கமலமாகும் விசாலமதி நாயகி
யான போகினி இம்மாதைக்கொல்வதற்கு யத்தினப்பட்டாள் பக
வான்கடாக்ஷத்தால் பிழைத்திருக்கின்றாள் நீங்கள் இம்மாதின் மொழி
களை கேளென்றுச்சொல்லிவிட்டு மனோஹரன் முன்னில்வந்து வந்தன
மாசரித்து மங்களமாவீரெனச் சொல்லிவிட்டு நிற்குஞ்சமயத்தில் நிரந்
தரமாக நித்திரைசோகம் வர அப்படியே சயனித்துக்கொண்டான்,
அச்சமயத்தில் ஜகத்மாதாவாகிய சங்கரிதேவி மாங்கல்ய ஸ்திரீரூப
மாக கினவில்வந்து ஓ இராஜசேகரா! உனது கஷ்டகாலம் தீர்ந்து
விட்டது யமுனாநதியருகில் இருக்கப்பட்ட தேவிமுன்னில் சாஷ்டாங்
கமாகவிழுந்தீ உனது மனக்குறைதனை சொல்லிக்கொண்டாள் உன
க்கு கைசோர்ந்துவிட்ட பொருள் கிடைக்குமென்றுச்சொல்லி போய்

விட்டாள். உடனே பிரபாவந்தன் நித்திரைவிட்டெழுந்து தான்கண்ட
கனவை நினைவுக்கூட்டிக்கொண்டு கைசோர்ந்து விட்டப்பொருள் கிட்
டுவதுமுண்டா? ஆனாலுந்தேவி உத்திரவுப்போல் நடத்தலாம் அம்
மாது பார்வதி தேவியாகவேதான் இருக்கவேண்டும் அத்தேவிசொன்
னவாக்கு பலிதமாகும் என்றுச்சொல்லி எல்லோரும்புரப்பட உத்தேச
மடைந்தார்.

இந்த மனோஹரன் கமலமாதுமீது மனமுடையவனாக இருப்ப
தும் அந்தக்கமலம் அதுப்போல் மனோஹரன் மீதிருக்கும் வியாபகம்
பிரபாவந்தன் கேட்டு சந்தோஷமடைந்து மனோஹரன் தகுந்த புரு
டனேயானாலும் நாம்முதலில் தேவிமொழியை பூர்த்திசெய்யவேண்டி
யதுயென்று பெருமனமிட்டு எல்லோரையும் படவிலேற்றிக்கொண்டு
சதாசிவன் கிருபாகடாக்ஷத்தால் ஏதும் கஷ்டமில்லாமல் யமுனாநதி
சேர்ந்தார்.

இப்படி பிரபாவந்தன் முதலானவரும் தேவிசன்னதிபோகுஞ்சம
யத்தில் அந்த தேவிமுன்பாகத்தில் கலாவதியைரக்ஷித்த மானவிக்கிர
மன் நின்றயிருந்தான், அந்தவிடத்தில் பார்வதிதேவியை சேவைச்
செய்துக்கொண்டிருந்த கலாவதி அநேகவருடமாக தன்னைப்பற்றி
துயரப்பட்டு சரீரம் மெலிந்தப்படியால் பிரபாவந்தனுடைய குறிக்
கண்டுப்பிடிக்க சாத்தியப்படாமல் போச்சுது அந்தப்பிரபாவந்தன்
தேவி சமீபத்தில்நின்று ஓ பரதேவி! உன்மொழியை என்சிறத்தில் தரி
த்து வந்திருக்கின்றேன் நான் சோபாவதிப்பட்டணம் பரிபாலிக்கப்
பட்ட பிரபாவந்தன் என்தேசத்தை பராக்கிரமன் அபகரித்து என்னை
துரத்த யான் வரும்மார்க்கத்தில் கொங்கணநகரமடைந்தேன் அங்கு
கலாவதியை விவாகஞ்செய்தேன் அந்தக் கலாவதியுடன் சமுத்திர
யாத்திரை செய்யும்போது இந்தக்கமலத்தை ஜனித்தாள் உடனே மர
ணமடைந்தாள், அந்தச்சிசுவை என் சிநேகிதன் நாயகி ரக்ஷித்துக்
கொண்டிருந்து பதிநாலாம் வயதில் கொல்லயெத்தனமிட்டாள் பக
வான் கடாக்ஷத்தால் மதுராபட்டணம் சேர்ந்தாள், யான் அந்தமார்க்
கமாய் வருஞ்சமயத்தில் கமலத்தைக்கண்டு சரித்திரங் கேட்டதுமன்றி
கனவுக்கண்டது முதலானதுஞ்சொல்லி வந்தனஞ்செய்து தேவிமுன்
னில் நின்றான்.

இதையெல்லாங்கேட்ட கலாவதி சந்தோஷத்தை அடக்கவொட்
டாமல் இவரே என்நாயகரான பிரபாவந்தனென்று எல்லோருக்கும்



சொன்னாள், இதைக்கேட்ட பிரபாவந்தன் இதென்ன ஆச்சரியம் இம்
மாது இப்படி சொல்லுகின்றாளென்று கேட்பதற்குள் மானவிக்கிரமன்
ஓ இராஜபூபாலா! இம்மாது உன்தேவியான கலாவதியே என்றுச்
சொல்ல பிரபாவந்தன் மானவிக்கிரமனைப்பார்த்து முந்திநான் இம்மா
தைக் கடலில்தள்ளி இருந்தேன் கடலில்வீழ்ந்தவர் மீன் பாம்புகளு
க்கு இரையாகாமல் பிழைப்பதுண்டாயென்று ஆச்சரியமடையுஞ் சம
யத்தில் மானவிக்கிரமன் பிரபாவந்தனைப்பார்த்து ஐயா யாதொருதின
த்தில் சமுத்திரயோரம் போகுஞ்சமயத்தில் ஒருப்பெட்டி மெதக்கிக்
கொண்டு வருவதைக்கண்டு அதையெடுத்துவந்து ஒடித்துப்பார்க்குஞ்
சமயத்தில் இம்மாதும் பூஷணங்களையும் கடிதமொன்று இருக்கக்கண்
டேன் இம்மாது பிழைத்திருப்பதைத் தெரிந்து வேண்டிய உபசரணைச்
செய்து அம்மாதுக்கிருந்த மூர்ச்சைரோகத்தைத் தீர்த்து தேவிபூஜை
செய்ய நின்றாள் இப்போது உன்னையும் குழந்தையும் பார்க்க பிராப்த
மடைந்தாளென்றுச்சொல்ல இதைக்கேட்டம்மாது ஓ பிராணநாயகா!
உமது திருப்பாதம் என்றுயகப்படுமோயென்று பெருமனமிட்டு தேவி
யைப்பூஜிக்க இச்சமயத்தில் லபித்ததென்றுச்சொல்லி வந்தனஞ்செ
ய்து நிற்கையிலே கமலா தன் தாயாரைப்பார்த்து சந்தோஷத்துடன்
அம்மாது பாதங்களுக்கு வந்தனஞ்செய்ய கலாவதி குழந்தைதனை
யெடுத்து மடிமீதுவைத்து முத்தமிட்டு ஓ எனதாசைப்புதல்வியே!
தாயார் பிழைத்திருந்தும் உனக்கிதுவரையில் இல்லாமலிருந்தப்படி
யால் துக்கமடைந்தாயோ எனச்சொல்லி திருஷ்டிக்கழித்து முத்த
மிட்டாள், பிறகு பிரபாவந்தன் நாயகிபுத்திரியுடன் தேவிக்கு பூஜை
செய்து நமஸ்காரமிட்டு கலாவதி அநுமதியால் கமலத்தை மனோஹர
னுக்குத்தந்து விவாகஞ்செய்துவைத்து சோபாவதிநாட்டிற்குச்சென்று
சுகமாக இராஜ்யபாரஞ் செய்துக்கொண்டிருந்தார்.

இப்படிச்சொல்லவே வேடர்கேட்டு சந்தோஷமடைந்து சிலது
நாள் காவேரிமுதலான திவ்ய ஸ்தலத்தில் ஸ்தானாதி ஜபதங்கள்செ
ய்து அவ்விடம்விட்டு ஜம்புகேஸ்வர சுவாமியும் அகிலாண்டேஸ்
வரனை சேவித்து மகா சந்தோஷமாய் பிரயாணமாகுஞ் சமயத்தில்
வேடர்கள் யோகியைப்பார்த்து ஐயா நேற்றியதினம் கலாவதிகதைக்
கேட்டு அதிக சந்தோஷமடைந்தோம் ஆனால் இன்றுயெங்களுக்கு
இன்னமொரு கதைச்சொல்லி மார்க்கம் நடைசாயும்படி செய்வீரே
ன்றுகேட்கயோகிக்கேட்டு சந்தோஷமடைந்து கதைச்சொல்ல ஆரம்
பித்தார்.

# இருபத்திமூன்றும் மஜிலிக்கதை.

## உத்தமகுணமாதின் லக்ஷணம்.

கேட்டீரா வேடனே! இந்தக்கடல்சூழ்ந்த உலகத்தில் மேன்மை பொருந்திய மங்களகிரியென்னும் பட்டணத்தை மந்திரி பிரதானிகள் புடைசூழ குடிகளிடம் ஆறிலொருக்கடமைவாங்கி சத்தியமென்கிற செங்கோல்பிடித்து இந்நாட்டை செந்திரகேது மகாவேந்தன் கெம்பீரமாக இராஜ்ஜியபாரம் செய்துக்கொண்டுவந்தார், இப்படியிருக்குஞ் சமயத்தில் இவ்வேந்தனுக்கு பானுகேதுயென்னும் புதல்வன் இருந்தான் இவனும் மந்திரி புதல்வனாகிய தீரபாஹுவும் இணைப்பிரியாமல் நேசத்துடனிருந்தார், இவ்விருவரும் பால்யதிசைவிட்டு எவ்வர்னமடையுஞ்சமயத்தில் அவரவர் தாய்தந்தைகள் விவாகஞ்செய்துக்கொள்ளும்படி திட்டஞ்செய்ய இதைக்கேட்ட இராஜகுமாரனும் மந்திரிப்புதல்வனும் ஐயா! நாங்கள் தேசசஞ்சாரம் செய்யாதப்படிக்கு கலியாணத்தை விரும்பமாட்டோ மென்றுச்சொல்லி தாய்தந்தைகளுக்கு சந்தோஷப்படும்படி நீதிகள்சொல்லி அவரால் செலவு பெற்றுக்கொண்டு வேண்டுமான தனத்தையெடுத்துக்கொண்டு தேசாந்திரம் போவதற்காக புறப்பட்டுப் போயிக்கொண்டிருந்தார்.

இப்படியாக இருவரும் குதிரையேறிக்கொண்டு தீரமாகநடந்து மார்க்கம்விட்டு பெரிய எடாரிதன்னில் அகப்பட்டு நாவரண்டு தாகமேலிட்டு எங்குந்தேடியும் ஜலமகப்படாமல் போனதுப்பற்றி பரிதபித்து ஆயாசமடைந்து அவரிருவரும் குதிரைமீது சாய்ந்தார், இந்த குதிரைகள் இதைக்கண்டு எங்குந்தங்காமல் வேகமாகநடந்து கானகமார்க்கமாக நடக்குஞ்சமயத்தில் அங்குவோர் தடாகந்தன்னில் ஜலக்கிரீடை ஆடிக்கொண்டிருந்த மாதர்கள் சிலர் இந்தக்குதிரைமீது நிலைதப்பி விழுந்திருக்கும் புருடரைப்பார்த்து அந்தமாதர்கள்மடக்கி குதிரைகளைப்பிடித்து ஓர்செடிக்குக்கட்டி அந்தக்குதிரைமீது சார்ந்திருக்கிற பானுகேதனையும் தீரபாஹுவையும் இரக்கி பூமியில்படுக்கவைத்து முகத்தில் ஜலத்தைத்தெளித்து முந்தானியால் வீசிக்கொண்டிருக்க அச்சமயத்தில் சோகமென்பது விட்டப்பிறகு இராஜப்புதல்வனெழுந்து இந்தக்கானகத்தில், இப்படி சகாயஞ்செய்த திவ்யரூபமடைந்தவர் மனிதரோயல்லது தேவாதிகளோ ஏதுந்தெரியாதப்படிக்கு அவருடன் நாம் எப்படிமொழியாடத் தகுமெனமனமிட்டு அவரைப்பார்த்து மெய்மறந்தது நின்றார், அந்தமாதர்கள் ஙெகப்புருடரைப் பார்த்து மெய்மறந்து மவுனமாகயிருந்தார்.



இப்படியிருந்தும் ஒருவரோடொருவர் மொழியாடவில்லை இதற்குள் பொழுதுபோகுஞ் சமயமாச்சுது அந்த மாதர்கள்சேடியுடன்கூடி பல்லக்கேறிக்கொண்டு ஏதுஞ்சொல்லாமல் நடந்தார்கள். இதையறி இராஜப்புதல்வனும் மந்திரிப்புதல்வனும் குதிரையேறிக்கொண்டு பல்லக்குப் பின் தொடர்ந்தார்கள்.

இப்படிப் போகுஞ்சமயத்தில் அங்கோர் கோட்டைமதில் சுவரகப்பட்டது, அதில்வோர் திட்டிவாயலகப்பட்டு அவ்வாயல்வழியாக பல்லக்குப் போய்விட்டது. பிறகு, இந்தயிருவரும் போகவே அங்கு காவலாளிகள் தடுத்தார். தடுக்கவே இந்தயிருவரும் மனக்கிலேசமடைந்து இன்னஞ் சிலதூரம் இவாளிருவரும்போகவே அங்கோர் நாடு காணப்பட்டது. அங்குச்சென்று அங்கிருப்பவரைப்பார்த்து இன்னாட்டின் பெயரேதென்றுக்கேட்டார்கள். அதற்கவர்கள் ஐயா! இதை கோசலநாடென்றுச் சொல்வார்கள். இதைக்கேட்டுப் பிறகு, இராஜக்குமாரனும், மந்திரிக்குமாரனும், ஓர் அவ்வை வீட்டிற்குச்சென்று அன்றிராத்திரி போஜனஞ்செய்து நித்திரைசெய்யுங் காலத்தில் இராஜப்புதல்வன் மந்திரிப் புதல்வனைப்பார்த் தப்பா, நாம் இன்னாட்டைநாலுதினத்தில் பார்த்துப்போகலாமென்றால் சரிப்படாது. இது மகா பெரியப்பட்டணம் இதைப்போல் நாமெங்கும் பார்த்ததுங் கிடையாது இப்படி வொருவர்க்கொருவர் மொழியாடிக்கொண்டு நித்திரைசெய்தார். அப்போதந்த மாதர்கள் சேடியிலொருத்தியை அழைத்து அடியம்மா தோழி நீ அதிவேகமாகச்சென்று நேற்றியதினம் நாம் கண்டவரைப்பார்த்து அவருடனெங்கள் வளப்பையெல்லாஞ்சொல்லி பிறகு, அவர்களுடைய வளப்பைக் கேட்டுவந்தால் உனது கீர்த்தியெங்கும் பிரகாசிக்கும் நீ இந்த உபகாரஞ் செய்யவேண்டியதென்றுச் சொல்ல. இதற்குச் சேடி சம்மதித்து அதிவேகமாக நடந்து அந்த இராஜப்புதல்வனும், மந்திரிப்புதல்வனும், தங்கி யிருக்குமிடந் தேடிப்போய் அவரைக்கண்டுச் சொல்லத்தொடர்ந்தாள்.

ஓ! மன்மதாக்கார மனசுந்திராங்கனே! நேற்றியதினம் தாங்களிருவரும் எங்களால் தேருகலையானீர். ஆனால் நான் இப்போதுச் சொல்லும்படியான மொழிக்குச் சரியான மொழிச்சொன்னால் உங்களுக்குத் தர்மம் அதினால் சுகமுண்டு நீங்கள் தெரியாதவருமல்ல. இந்தச் சேடியின்மொழியை ஒரு பெரிதாயென்று மனமிடலாகாது. உங்களிருவருக்கும் ஜெயமுண்டாகும் அதனால் வொளியாமல் சொல்லவேண்டுமென்றுக்கேட்க. இம்மொழிக்கேட்ட இராஜப்புதல்வனும் மந்தி

ரிப்புதல்வனுஞ் சேடிமொழியைக்கேட்டு சந்தோஷமடைந்து. ஓ! சேடி
யே, எங்களைக்கேட்கவந்த மொழி யேதோ அதை வெளியாமல் நீ
சொன்னுல் நாங்களும் அதுபோல்சொல்ல உத்தேசமடைந்திருக்கிரோ
மென்று நம்பிக்கையாகச்சொல்ல இதைக்கேட்டு அந்தச்சேடி அவ
ரைப்பார்த்து ஓ! சுருனபுத்திரா! நானிந்தக் கோசலதேசத்தையாளும்
பூபாலபிரதாபன் புதல்விக்கு நான்பெரியசேடி எனதுபெயர் காந்தா
மணி நானுமெங்கள் வேந்தன்புதல்வியான மதனமோஹினியும் சிலது
இராஜபந்துக்களுஞ் சேடிமாருங்கூடி நேற்றியதினம் வனவுல்லாசத்
தை பார்க்கப்போனபோது நீங்கள் குதிரைமீதுப்படுத்து சிலைத்தவர்ந்
திருக்க இதைக்கண்டு எங்களையனுப்பி சிறமை தீர்க்கும்படிச்சொல்ல
நாங்களதுபோல் செய்தோம் நீங்கள் முகமரியாதப்படியால் உங்களை
ஏதாகிலுங்கேட்டால் மனதில் வித்யாசமென்னுவீரென்று மனமிட்டு
உங்களை ஏதுங் கேட்கவில்லை இப்போது உங்களிருப்பிடமறிந் தென்
னை தூதாகயனுப்பி விசாரித்துவரும்படி திட்டஞ்செய்தாள். ஆகை
யால் நான் வந்தேனென்ருள். இம்மொழிக்கேட்டு இராஜப்புதல்வனும்
மந்திரிப்புதல்வனும் சந்தோஷமடைந்து சேடியுடன் சொல்லத்தொட
ர்ந்தார்கள்.

ஓ! சேடியே, நாங்களிருவரும் மங்களகிரி பரிபாலிக்கும் மகா
னுபாவனுடைய புதல்வன்யான் எங்கள் மந்திரிபுதல்வன்யிவர் எனது
பெயர் பானுகேது இவர்பெயர் தீரபாஹு நாங்களிருவரும் பால்யசி
நேகிதர். இப்படியிருக்க தாய்தந்தைகள் எங்களை விவாகஞ் செய்துக்
கொள்ளும்படிச்சொல்ல இதைக்கேட்டுநாங்கள் தேசசஞ்சாரஞ்செய்து
விட்டுவந்து கலியாணஞ் செய்துக்கொள்வோ மென்றுச்சொல்லி இரு
வரும் புறப்பட்டுவந்தோம். இங்கு உங்களைக்கண்டோம் உங்களால்
எங்கள் பிராணம் நின்றதென்றுச்சொல்ல இதைக்கேட்டுஅந்தத்தோழி
அவர்களிடம் உத்திரவுபெற்றுக்கொண்டு புவனமோகினியிடஞ் சென்
று நடந்தசமாச்சாரத்தைச்சொல்ல இதைக்கேட்ட புவனமோகினிமதன
மோகினியையழைத்து ஓ! மதனமோஹினி! நேற்றியதினம் நாம் கண்
டப் புருடரிருவரும் இராஜமந்திரிப் புதல்வராம் அவருக்கின்னம் கலி
யானமாகவில்லையாம் நாமிதுவரைக்கும் அனேகப்புருடர் படங்களைப்
பார்த்துமனம்வெருத்து கலியாணமில்லாம லிருக்கின்றோம். ஆனலிப்
போது இவரை நாம் பிரத்தியக்ஷமாய் பார்த்தோம். ஆனல் இவரைப்
போல் ரூபசவுந்திரியபுருடர் இன்னமொருவர் எங்குங்கிடையாதென்ப
தற்குசந்தேகங் கிடையாது. ஆகையால் உன் னபிப்பிராயஞ் சொல்லு



மென்றுகேட்க. அந்த மதனமோஹினி புவனமோஹினியைப்பார்த்து
அக்கா! உனக்கெப்படி மனமிருக்கிறதோ அதுபோலெனக்கும் இருக்
கிறது, ஆனல் நமது தாய்தந்தைகளுக் கிந்தமொழிச்சொல்லி அவ
ரனுமதியால் கலியாணம் நியமித்துக்கொள்ள வேண்டுமென்றுச
சொல்ல இதுவுமல்லாமல் அந்த இராஜமந்திரிப் புதல்வர் இனி யாரா
கிலும் முடிவுசெய்திருந்தால் நாம் பலத்காரமாக விவாகஞ் செய்துக்
கொண்டால் சுகங் கிடையாது.

ஆனல் நமது தாய்தந்தைகளுக்குச்சொல்லி முடிவுசெய்வதற்கு
முந்தி நாம் தோழியையனுப்பி அவர் மனதிச்சை தெரிந்துக்கொள்ள
லாமென்றுச்சொல்லி தோழியை அழைத்து அடீ தோழி நீ சென்று
அவரைக்கண்டு விவாகஞ் செய்துக்கொள்ள சம்மதமாவென்றுக்கேட்டு
வரும்படியனுப்ப இதைக்கேட்டு தோழியோடி அவரைக்கண்டு புவன
மோஹினி அபிப்பிராயத்தைச்சொல்ல இதைக்கேட்ட இராஜப்புத்தி
ரப் புதல்வன் சந்தோஷமடைந்து தோழியைப்பார்த்து ஓ! சேடீ, எங்
கள் தாய்தந்தைமார் விவாகஞ் செய்துக்கொள்ளும்படிச்சொல்ல நாங்
கள் வெருத்து தேசசஞ்சாரஞ் செய்யவந்தவிடத்தில் தாய்தந்தைகளு
க்குதெரியாதப்படி சம்மதித்தால் அவர்மனங் கோபமடைவார், அவர்
களுக்கு நாங்கள்சொன்ன மொழிதப்பி நடக்க மாட்டோமென்றுச்
சொல்ல. இதைக்கேட்டு தோழி புவனமோஹினிடம்வந்து நடந்த
தைச்சொல்ல புவனமோஹினி அதிகநேரம் யோசித்து ஆனலும்
பெரிதல்ல நம்முடைய தலையெழுத்துபோல் முடியுமென்று மனமிட்டு
தன் இஷ்டத்தை மதனமோஹினிக்குச்சொல்ல, அந்த மதனமோஹி
னியும் சம்மதமடையதோழியை அழைத்துசொல்லத் தொடர்ந்தாள்.

அடீ! தோழீ, அந்த இராஜமந்திரிப் புதல்வர் கலியாணத்திற்கு
சம்மத மடையாவிட்டாலும் நாங்கள் தரும்படியான இந்த மோதிரத்
தை இராஜப் புதல்வனுக்கும், மந்திரிப் புதல்வனுக்குங் கொடுத்து
அவர்கள் மோதிரத்தைக்கேட்டு வாங்கிக்கொண்டு அவர்கள் தேசாந்
திரஞ்சுற்றி இங்கு வந்தப்போதிலுஞ் சரி. அல்லது அவர் பட்டண
த்திற்கழைத்துக்கொண்டுபோய் விவாகஞ் செய்துகொள்ளலாமென்று
வரும்படிச் சொல்லியனுப்ப தோழி அதுபோல் அவர்களிடம்வந்து
இராஜப்புதல்வனுக்கு இராஜக்குமரி மோதிரந் தந்து மந்திரிப்புதல்
வனுக்கு மந்திரிகுமரி மோதிரந்தந்து புவனமோஹினிச்சொன்ன மொ
ழிகளைச்சொல்ல அவைகளைக்கேட்டுசந்தோஷமடைந்து அதுபோலாக
ட்டுமென்று அவர்களுடைய மோதிரத்தைத் தந்தார். அப்போதந்தத்

தோழி அந்த மோதிரத்தைப்பெற்றுக்கொண்டு புவனமோகினி மதன
மோகினியிடந்தருக அதையவர்பெற்று சந்தோஷத்துடன் கண்ணில்
வொத்திக்கொண்டு முத்தமிட்டு விரலில் தரித்துக்கொண்டார்.

இப்படிருக்க மறுநாள் பானுகேதனும் தீரபாஹுவும் அந்தக்கோ
சலை நாட்டைவிட்டு புறப்பட்டு காசி, காஸ்மீர, நேபாள, சிந்து, காம்
போஜ, மராஷ்ட, முதலானதேசஞ் சுற்றிக்கொண்டு களிங்கதேசம்
வந்துச்சேர்ந்தார். இப்படிருக்க அந்த களிங்கதேசத்தில் அன்யதே
சத்தார் வந்தால் அவர் அன்னாட்டின்வேந்தன் அனுமதியில்லாமல்
இருக்கலாகாதென உத்திரவு யிருப்பதால் அந்த இராஜப் புதல்வனை
யும் மந்திரிப்புதல்வனையும் காவலர் வேந்தன் சமுகத்திற்கு வரும்படி
யழைக்க. இதைக்கேட்ட இவரிருவரும் சரிதான் பிராஜ்பத்திற்குவந்
தபோது அந்தவேந்தன் நீதிப்போல நடக்கவேண்டிய கடமைதா
னென்று மனமிட்டுப் புறப்பட்டுபோகுஞ் சமயத்தில் அந்தப்புரத்தின்
மேடைமீது நின்றுக்கொண்டிருந்த களிங்கவேந்தன் புதல்வி இவர்
களைப்பார்த் திவர்கள் நமக்குத் தகுந்த மணவாளரென்று மனமிட்டு
இவர்கள் வேந்தன் கொலுவிற்குப் போகாதமுந்தி இராஜப்புதல்வியும்
மந்திரிப்புதல்வியும் கொலுச்சாவடிச்சென்று ஓர் பக்கமாக நின்றுக்
கொண்டிருந்தார். இதற்குள் பானுகேதனும் தீரபாஹுவும் அங்கு
வந்தவுடனே களிங்கவேந்தன் வந்தவரைப்பார்த்து தகுந்த மறியா
தைச்செய்து போஜனமிட வியமித்திருக்கச் செய்தார்கள்.

இப்படிருக்க யவ்வேந்தன் புதல்வியும் மந்திரிப்புதல்வியும் அவ
ரவருடைய தாயாரிடஞ்சென்று மனதிச்சைச்சொல்லி இதை நீங்க
ளெங்கள் தந்தைகளுக்குச்சொல்லி கலியாணமுடிவு செய்வீரெனச்
சொல்ல. இதைக்கேட்ட இராஜதேவியும்? மந்திரிதேவியும், அவரவர்
கள் நாயகருக்குச்சொல்லி அவரை கலியாணஞ் செய்துக்கொள்ளும்
படி செய்யவேண்டுமென்றுச்சொல்ல. இதைக்கேட்ட இராஜனும் மந்தி
ரியும் ஆலோசித்து அவர்களுக்குத் தகுந்த புருடனென்று தெரிந்து
அவரையழைத்து அபிப்பிராயத்தைச் சொன்னார். அப்போது பானு
கேதனும் தீரபாஹுவும் ஆ! ஆ! நாம் கோசலதேசத்து இராஜப்புதல்
விக்கு மொழிதந்துவந்து இப்போது வெருப்பது அதர்மமல்லவா
லென யோசித்து எங்களுக்கு விவாகஞ்செய்ய சம்மதமில்லையென்றுச்
சொல்லிவிட்டார். இதைக்கேட்ட மந்திரியும் வேந்தனும்யோசித்து
நீங்கள் விவாகஞ் செய்துக்கொள்ளாமல்போனால் சிறைதனி லிருப்பீ
ரென பயப்படுத்தினர். அம்மொழியைக்கேட் டேதும் பயமில்லாமல்



குதிரையேறிப் புறப்படுஞ்சமயத்தில் வேந்தன் காவலரை கண்சைகை
செய்யவே காவலர்வோடி அவர்களைப்பிடிக்க யெத்தனப்பட்டார்.
அந்தச்சமயத்தில் தீரபாஹுவுதனைப் பிடிக்க காவலனைத் திமிரிக்
கொண்டு வோடிப்போய்விட்டான் பானுகேதன் மாத்திரங் காவலர்க்
கையி லகப்பட்டு சிறைதன்னில் யடைப்பட்டார். தீரபாஹு தப்பித்
துக்கொண்டு போனபோதிலும் தன்மனமெல்லாம் பானுகேதன்மீ
திருந்தது இப்படிருந்தும் ஏதேதுபாயஞ் செய்தும் பலிதமில்லாம
லிருந்தது. இப்படிருக்க சரிதான் இதற்கு நாம் தகுந்த யுக்திசெய்ய
வேண்டுமென்று மனமிட்டு ஓர் கடிதமெடுத்து லக்ஷ்மிபோல் பிரகாசிக்
கப்பட்ட களிங்கதேசவேந்தன் புதல்வியான கல்பவள்ளிதேவிக்கு
வெளியூரிலிருந்து வந்திருக்கும் தீரபாஹு எழுதியது என்னவென்
றால் நீ எங்கள் வேந்தனை மாலையிடுவது நிஷ்சயமானால் இதைக்கண்ட
வுடனே சிறைதனிலிருக்கும் வேந்தனை அழைத்துக்கொண்டு இங்கு
வரவேண்டுமென்று யெழுதி யனுப்பினான்.

அந்தக்கடிதத்தை கல்பவள்ளிப்பார்த்து தன்னுடைய தோழி
யான மோகனவள்ளிக்குங் காட்ட அம்மாதும் அதை வாசித்துச் சம்
மதமடைந்தாள். இப்படி இருவம் சம்மதித்து ஓர் சுபதினத்தை எண்
ணமிட்டு அந்ததினயிராத்திரிக்கு வருவதாக பானுகேதனுக்கு அறிக்
கைசெய்தார். இதைக்கேட்ட பானுகேதன் மனவியாகூலமடைந்து
இந்தக் கலிங்கதேசத்துவேந்தன் புதல்வியை மாலையிட்டாள் வங்கள
கிரிநாட்டிற்கு அபாயம்வருமென்று யோசித்து இவரை யெப்படியாகி
லும் தப்பித்துபோக வேண்டுமென்று தன் கையிலிருந்த மோதிரத்
தைக்கழட்டி காவலனுக்குத் தந்து தப்பித்துக்கொண்டு தன் தோழனா
கிய தீரபாஹு யிருக்குமிடந்தேடிச்சென்று நடந்ததெல்லாஞ்சொல்ல
இதைக்கேட்டு தோழனான தீரபாஹு ஓ பிராணதோழனே நான்
அந்த வேந்தன்புதல்விக்கு தந்திரமாக கடிதமெழுதினேன் தவிர அவ
ரை யிச்சிப்பதல்ல நமக்கு அவர் சாவகாசம் வேண்டுவதில்லை. ஆ! ஆ!
அந்தக் கலிங்கவேந்தனும் அவன்மந்திரியும் யென்னபுத்தியுடையவர்
இருக்காகிலும் அவர் புதல்விகள் அதிக புத்தியுடையவர். ஆகையா
லேதான் நம்மைக்கண்டு சேதியை விசாரிக்காமல் கலியாணஞ் செய்
துக்கொள்வீரென தீர்மானித்தார்கள்.

இப்படிக்கொத்த புத்தி யீனத்வமடைந்தவரை கலியாணஞ் செய்
துக்கொண்டால் மகாமோச மடையவேண்டியதென்றுச்சொல்லி, அன்
னாட்டைவிட்டு கூர்ஜரதேசம் சென்றார். அதன்பிறகு கல்பவள்ளியும்

மோகனவள்ளியும், அன்றுதினம் இராத்திரிப் புறப்பட்டு சிறைசாலையிடஞ்சென் றங்கிருக்கப்பட்ட காவலலரப்பார்த்து அடா! காவலனே, எங்கள் வேந்தனை விடுமென்றுச்சொல்லி அவனுக் கனேகதனங்கொடுத்தார். அவனதைப் பெற்றுக்கொண்டு இதோ யனுப்புகிறேனென்றுச் சொல்லி உட்புகுந்து மறுபடியும் வெளியில்வந்து அம்மா அவர் நித்திரை செய்யுகின்றார், சற்று நிதானிப்பீர், எழுந்தவுடனே அனுப்புகிறேனென்றுச் சொல்ல, அவ்வர்கள் அதுபோல் அங்கு நின்றார்கள். இதற்குள் நகர்ரோந்துக்காரர் மரற்கமாகவருக அங்கு நின்றுக்கொண்டிருந்தவரை யாரெனக்கேட்க, அவர் வாய்தடுமாறி மொழியாடினார். இதற்குள் ரோந்துக்காரர்கள் ஆ! ஆ! இவர் சோரத்வ நிமித்தியமாக வந்தவளென்றறிந்து இவரைப்பிடித்து கிடங்கிலடைத்து சாவிப்போட்டு மறுநாள் உதயமானவுடனே கச்சேரிக் கழைத்துக்கொண்டுபோய்விடவே அந்தச் சபைதனிலிருந்த நியாயாதிபதிகள் இவரைக்கண்டு பரிதாபமடைந்து அம்மா! நீங்கள் வொண்டியாக சிறைச்சாலைக்கு போகவேண்டியக் காரணமேதென்றுக்கேட்க, இதைக்கேட்ட கல்பவள்ளியும், மோனஹவள்ளியும், அய்யா! நாங்கள் இந்த கிராமதேவதைக்குக் கலியானமாகா முந்தி நாங்கள் இராக்காலத்தில் பொங்கல் வைப்பதாகபால்பத்தில் பிரார்த்திக்கொண்டோம், அதுபோல், இந்த இராத்திரிக்கு போகவே ரோந்துக்காரர்கள் எங்களைப் பிடித்துவந்தாரென்றுச்சொல்லி தப்பித்துக்கொண்டு அவரவர் வீட்டிற்குச் சென்றுவிட்டார் அதன்பிறகு காரியம் பூர்த்தியாகவில்லையென்று பெருந்துபரமடைந்திருந்தார்.

இப்படியிருக்குஞ் சமயத்தில் பானுகேதுதந்த மோதிரத்தை காவலனெடுத்துக் கொண்டுபோய் கடைவீதியில் விற்பனைசெய்யவே இந்த மோதிரத்தைக்கண்டு வர்த்தகர் இந்த மோதிரத்தை வாங்கிக்கொண்டு நமது ராஜகுமாரனுக்குத் தந்தால் நல்ல வெகுமதியளிப்பாரென்று மனமிட்டு அந்தமோதிரம் ஆயிரவராகனுக்கு வாங்கிக்கொண்டு கலிங்கவேந்தப் புதல்வனுக்குத்தருக அதைப் பெற்றுக்கொண்டு அந்த இராஜகுமாரன் தன்தோழனை மந்திரிப் புதல்வனுங்குக்காட்ட அவன் அந்தமோதிரத்தில் எழுதியிருந்த பெயரைவாசித்துப்பார்த்து இந்த மோதிரத்தை அபகரிக்கவேணுமென் றெண்ணமிட்டு அண்ணா! இந்தமோதிரம் நமக்குவேண்டாம்-இதில்மந்திரம் எழுதியிருக்கிறது இது நமதிடமிருந்தால் நாம் நாசமடைகுவோம் என ஒருமொழிச்சொல்லி வர்த்தகனிடம் அந்த மோதிரத்தைத்தந்து அனுப்பிவிட்டு வேந்தப்புதல்வனை தந்திரமாக வீட்டிற்கனுப்பிவிட்டு பிறகுசற்றுநேரம்



பொருத்து அந்தமோதிரத்தை விலைதந்து வாக்கிக்கொண்டு அந்ததினமுதல் கோசலதேசத்தின் மாதுமீது மோகமுண்டாகி எப்போதகப்படுமோ என மனமிட்டிருந்தான்.

இப்படியிருக்க கல்பவள்ளியும் மோஹனவள்ளியும் சோகமடைந்து நாம் கோரியகணவன் போனபிறகு இந்வுடலை இனிவொருவருக்கு சுவாதீனம் செய்யலாகாதென மனமிட்டு அந்த இரண்டு மாதர்களும் சன்யாசிவேஷந்தரித்து இரவும்பகலும் பானுகேதனையும் தீரபாஹுவையும் மனதில் நினைந்து சோகமாயிருந்தார்கள்.

அதன்பிறகு-களிங்கவேந்தன் மந்திரிபுதல்வனாகிய (புஜங்கன்) அந்தமோதிரத்தை கையிலணைந்து கொஞ்சம் திரவியத்தையுமெடுத்துக்கொண்டு கோசலநகரத்திற்குப் போகுஞ்சமயத்தில் பெருங்கானகம் அகப்படவே அங்குநித்திரை செய்துவிட்டுப் போகலாமென்று மனமிட சயனித்தான், அந்தசமயத்தில் பதினரடி வேங்கையொன்று வந்து இவனையும் இவன்கொண்டுவந்த திரவ்யத்தை யாவையுந்தின்றுவிட்டது, இதையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த ஒருவேடன் தன் கை அம்பாலதை அடித்துக்கொன்றுவிட்டு அதின் வயிற்றிலிருந்த பொருளையெல்லாங் கொண்டுபோய் நால்வர் பாகித்துக்கொண்டார், அதில்மோதிரம் பங்குவந்தவன் அந்தமோதிரத்தை எடுத்துக்கொண்டுபோய் கடைவீதியில் விற்பனைசெய்தான், அந்த வர்த்தகர் இந்த மோதிரத்தைப்பார்த்து இது வேந்தன்புதல்விதென்று தெரிந்து, அந்த மோதிரங் கொண்டுவந்த வேடனை அழைத்துக் கொண்டுப்போய்க் கோசலநகரவேந்த னெதிரில் விட்டார், இந்தமோதிரத்தை அவ்வேந்தன் பார்த்து தன்புதல்வியான புவனமோஹினியை யழைத்து இந்த மோதிரத்தை எங்கு போட்டுவிட்டாய் அல்லது ஆர்கையில் கொடுத்தாயென்றுக்கேட்க அந்த மொழியைக்கேட்ட புவனமோஹினிதந்தையுடன் நடந்த சந்தர்ப்பத்தையெல்லாஞ் சொல்ல, இதைக்கேட்டவேந்தன் ஆலோசித்து நமதுப்புதல்வி தகுந்த நாயகனைதான் கலியாணஞ் செய்ய எண்ணமிட்டாள், ஆனால் இந்த மோதிரமடைந்தமனிதன் இறந்தானென்றுச் சொன்னான். உடனே புவனமோஹினி மரணமடைவாள் அப்படிச் சொல்லாமல் போனாலும் பழி சம்பவிக்குமென்று மனதில் நினைந்து தன் புதல்வியுடன் நடந்த சந்தர்ப்பமெல்லாம் சொல்லிவிட்டான். இதைக் கேட்டவுடனே புவனமோஹினி பூமியில்விழுந்து மூர்ச்சையடைந்து சற்றுநேரத்திற்கெல்லாம் மூர்ச்சைதெளிந்தெழுந்து இனி இந்த உடலானது பூமிமீதிருக்க தகாதென எண்ணமிட்டு

பிராணத்தியாகம் செய்துக்கொள்ள எத்தனப்பட்டாள். இதைக்கண்டு
மதனமோஹினி அக்கா! நீ எல்லாந் தெரிந்தவள் இப்படிக்கொற்றக்
காரியஞ்செய்ய நீதியல்ல நீயப்படி பிராணத்தியாகஞ் செய்துக்கொண்
டால் நானும் எனது பிராணத்தை போக்கவேண்டியதுதான். இதை
யறிந்த நமது தாய்தந்தைகள் பிராணத்தை விடுவார்கள் அதன்பிறகு
இந்த யிராஜ்யம் பிரர் கைப்பொருளாகி நிற்கும், ஆகையால் நீ இப்ப
டிச் செய்யத்தகாதென போதித்து நிற்குஞ் சமயத்தில் இந்தமொழிக்
கேட்ட புவனமோஹினி யோசித்து அம்மா தோழியே நீ சொன்னது
சரிதான் ஆனல் யான் கல்யானத்தை வெருத்து சன்யாசிதத்வம்
மடைகுவேனென்றுச் சொல்ல.

இதைக்கேட்ட மதனமோகினியும் யானும் உந்தனைப்போலவே
சன்யாசிதத்வம் அடைகிறேனென்று இருவரும் சன்யாசிதத்வமடை
ந்து அந்ததேசத்தை விட்டு காசிக்குச்சென்று அங்கு இருக்கப்பட்ட
ஓர் மடத்தில்சென்று பகவானைநோக்கி இந்த ஜென்மத்தில் நாங்கள்
கோரிய நாயகன் லபிக்காவிட்டாலும் மறுஜென்மத்திலாகிலும் கிடை
க்கவேண்டுமென்று தியானமடைந்திருந்தார், இதுயிப்படியிருக்க கல்
பவள்ளியும் மோகனவள்ளியும் காசிதன்னில் இவறிருக்கும் மடத்தி
ற்குவந்து இவர்களும் புவனமோஹினியும் மதனமோஹினிபோல்
தபஞ்செய்துக் கொண்டிருந்தார், இப்படிருந்தும் புவனமோஹினி
மதனமோஹினி கல்பவள்ளி மோகனவள்ளியுடன் ஏதும்மொழியா
டாமலிருப்பதால் இவர்கள் அபிப்பிராயம் இதராளுக்கு தெரியாமலி
ருந்தது, இப்படியிருக்குஞ் சமயத்தில் கூர்ஜரதேசத்திலிருந்து பானு
கேதனும் தீரபாஹுவும் யோசனையடைந்து நமக்குள் ஒருவரிடம்
மோதிரமில்லாமல் போனபோதிலும் நம்மை பார்த்திருப்பதால். அவர்
சம்மதிப்பாரென்று மனமிட்டு பிரயாணமடைந்து போகுஞ்சமயத்தில்
அந்த மார்க்கந்தன்னில் காசிக்ஷேத்திரம் கண்டார், இந்தக்ஷேத்திரம்
கண்டவுடனேசந்தோஷமடைந்து அப்பாநேயனே நாம் இங்குசென்று
இங்கிருக்கப்பட்ட மகானுபாவர்களுடைய ஆசிர்வாதம் பெற்றுபோக
லாமென்றுச் சொன்னவுடனே தீரபாஹுவும் சம்மதமடைந்து அந்த
காசி க்ஷேத்திரத்தி லிருக்கப்பட்ட மடங்களுக்குச்சென்று மகாத்மாக்
களுடைய ஆசிர்வாதத்தைப் பெற்றும் இன்னம் புவனமோகினி, மதன
மோகினி, கல்பவள்ளி, மோஹனவள்ளி, இவர்களிருக்கும் மடமானது
புருடர் போகலாகாதென்று அங்கிருக்கப்பட்ட காவலர்சொல்ல சரி
தானென்று திரும்பிவருஞ் சமயத்தில் அந்த மடத்திற்கு முதன்மை
யான மஹந்துவாகிய ஞானனந்தசுவாமி அந்தச்சமயம் கங்காஸ்நா



னஞ்செய்துவிட்டு வருஞ்சமயத்தில் இவரிருவரைப்பார்த்து ஆ ஆ சத்
புத்திரென்றுச் சொல்லப்பட்ட இந்தவுத்தமர் நமது மடத்திற்கும்
வந்தும் பிரசாதம் கைக்கொள்ளாமல் போகுராரென்று எண்ணமிட்டு
அவரை தன்னுடன் அழைத்துக்கொண்டுவந்து தன் பூஜாமந்திரத்தில்
அமரச்செய்து தான் ஜபதபாதிகளை தீர்த்துக்கொண்டு கண்விழுத்துப்
பார்த்து மங்களகிரி வேந்தப் புதல்வர்களே அப்பா! நீங்கள்சுகமாயிரு
ந்துக்கடைவீரென ஆசிர்வதித்து நீங்கள் கோரிப்போகப்பட்ட பொரு
ளானது இந்தஸ்தலத்தி லிருக்கிறதென்றுச்சொல்ல இராஜமந்திரி புத
ல்வர் ஞானனந்தசுவாமிக்கு வந்தனஞ்செய்து சுவாமி! நாங்கள்கோரி
யப்பொருள் இங்கிருக்கக் காரணமேதென்றுச்சொல்ல அந்த யோகீந்
திரன் அவர்களைப்பார்த்து நான்திரிக்காலஞானதிருஷ்டியடைந்தவன்
எனக்குத் தெரியாதவிஷயம் ஏதுங்கிடையாது இனி சிலநாளில்
நிக்ஷபம் தெரியுமென்றுச்சொல்லி நீங்கள் இன்னம் ஓர் மாதக்கால
மிந்த காசியிலிருந்து வாசஞ்செய்வீரென்றுச் சொல்லிவிட்டு கலிங்க
வேந்தனுக்கும், கோசலவேந்தனுக்கும், மங்களகிரி வேந்தனுக்கும்,
அவரவர் பந்துமித்திராதிகளுடன் இங்குவரும்படி ஞானனந்தசுவாமி
கடிதமெழுதி அனுப்பிவிட்டார்.

அந்தக்கடிதம் வந்தவுடனே மூவரும்பார்த்து சந்தோஷமடை
ந்து அவரவர் பந்துமித்திராதிகளுடன் புறப்பட்டு காசிக்ஷேத்திரம்
வந்தவுடனே ஞானனந்தசுவாமி இந்த நால்வர் மாதருடைய அபிப்
பிராயத்தைச் சொல்லி அந்த காசிக்ஷேத்திரத்தில் விவாகமஹோற்ச
வம் நடத்தி புவனமோகினியையும் கல்பவள்ளியை பானுவுக்கும்
மதனமோகினி மோஹனவள்ளியை தீரபாஹுவுக்கும் மாங்கல்யதா
ரனஞ்செய்துவிட்டு அவரவர் தேசத்திற்கு போகும்படி திட்டஞ்செய்
தவுடனே கலிங்கவேந்தனும், கோசலவேந்தனும், அவரவர் தேசத்
திற்குச்சென்றார், தீரபாஹுவும், பானுகேதனும், மங்களகிரிக்குச்
சென்று சுகமாயிருந்தாரென்றுச் சொன்னவுடனே சூரியன் அஸ்தமய
மாகிவிட யோகிக்கதை நிறுத்திவிடவே சமீபத்திலிருந்த இராமேஸ்
வரஞ்சென்று நித்தியக்கடனை தீர்த்துக்கொண்டு போஜனஞ்செய்து
சயனிக்குஞ்சமயத்தில் வேடர் ஐயா! இந்த க்ஷேத்திரமகிமை சொல்
லென்றுக் கேட்டவுடனே யோகிச்சொல்லத் தொடர்ந்தார்.

கேட்டீரோ வேடரே! இந்த இராமேஸ்வரக்ஷேத்திரம் அதிக பிரசி
த்தியடைந்த புண்யக்ஷேத்திரம் இங்கு ஸ்ரீராமமூர்த்தி லங்கைக்கு
போகும்போது சேதுக்கரை கட்டினர், இந்த சேதுவில் ஸ்நானஞ்

செய்தால் சகல பாவங்கள் தீர்ந்து முக்தியடைவா ரென்றுச்சொல்ல உடனே எல்லோரும் நித்திரைசெய்து மறுநாட் உதயமெழுந்து நித்தியக்கடனை தீர்த்துக்கொண்டு சக்கிரதீர்த்தம், பேதாளதீர்த்தம், பாபவிநாசினி சீதாசரோவரம், மங்களதீர்த்தம், அமுர்தவாசி, பிரம்மகுண்டம், அனுமத்குண்டம், அகஸ்தியதீர்த்தம், இராமதீர்த்தம், லக்ஷ்மணதீர்த்தம், ஜடாதீர்த்தம், லக்ஷ்மிதீர்த்தம், அக்கினிதீர்த்தம், சிவதீர்த்தம், சங்கதீர்த்தம், யமுனாதீர்த்தம், கங்காதீர்த்தம், கயாதீர்த்தம், கோடிதீர்த்தம், சாத்தியாமுர்ததீர்த்தம், மானசதீர்த்தம், தனுஷ்கோடிதீர்த்தமென்னும் புண்யதீர்த்தங்களிற் ஸ்தானஞ்செய்துவிட்டு இராமலிங்கத்தைச் சேவித்து புரப்படும்போது வேடர் இவரைப்பார்த்து ஐயா! இனியேதாகிலும் கதைச்சொல்லி எங்கள் மனதை சந்துஷ்டியடையும்படி செய்யுமையாவென்றுக் கேட்டவுடனே யோகிச்சொல்லத் தொடர்ந்தார்.

---

# இருபத்துநான்காம் மஜிலிக்கதை.

## பூர்வஜென்ம சுகிருதபலன்.

---

கேட்டீரா வேடரே! இந்த பூலோகத்திலிருக்கப்பட்ட பட்டணங்களுக்காகிலும் மிகுந்த அழகுபொருந்திய ஜெயப்புரமென்றொரு பட்டணமுண்டு அந்த இராஜ்யத்தைப் பரிபாலனஞ் செய்யப்பட்ட சத்தியசீலனென்றொரு வேந்தன் நீதித்தவராமல் ஆரிலொருக் கடமை பகுதிப்பெற்று குடிகளை தாய் தந்தைப்போல் காத்துக்கொண்டு அந்நாட்டைப் பரிபாலனஞ் செய்துக்கொண்டுவந்தார், அவ்வேந்தனுக்கு வெகுநாளாக புத்திரபாக்கிய மில்லாமற் போனப்போதிலும் பெண்புதல்வி பிறந்திருப்பதால் அப்பெண்ணை புத்திரனைப்போல் பார்த்து சந்தோஷமடைந்து ஏதும் மனவியாகூல மில்லாமலிருந்தார், ஆனால் அவ்வேந்தன்தேவியான கமலாவதிக்கு மாத்திரம் புதல்வன் பிறக்க வேண்டுமென்று தன்னைப்போலொத்த வேந்தர் புதல்வியை மாலையிட்டு சந்தோஷமாய் இராஜ்யபாரஞ்செய்ய பார்க்கலாமென்று மனமிருந்தப்படியால் அம்மாது கெங்காதேவியை மனதில் தினந்தோறும் பிரார்த்தித்துக்கொண்டிருந்தாள் இப்படியிருக்க ஓர் தினத்தில் கெங்காநதிக்குச் செல்லும்போது அங்கு ஓர்புதரினருகில் குழந்தையழுவதைக் கேட்டு தன்சமீபத்திலிருந்த சேடிகளையழைத்து அந்தத்வனியேதெ



ன்று தெரிந்து வரும்படி சொல்லியனுப்ப அவர் சென்றுப்பார்க்க மணல்மீது வாழையிலைபோட்டு அதின்மீது ஓர் ஆண் குழந்தையை வளர்த்திருப்பதை பார்த்து இதாமனிதரில்லாதபடியால் அந்த சிசுவை எடுத்துக்கொண்டு வந்து வேந்தன் தேவியிடம் தந்துவிட்டார் அம்மாது அந்தசிசுவைப்பார்த்து இந்தப்பாலகனை கெங்காதேவி நமக்கு தந்தாள், எனசந்தோஷித்து கெங்காதேவிக்கு பூஜைசம்பிரமாக செய்துவிட்டு தன் வீட்டிற்குச்சென்று நடந்ததெல்லாம் நாயகனுடன் சொல்ல இதைக்கேட்ட வேந்தன் சந்தோஷித்து பிறகு அந்தப்பாலகனை தினமொருமேனி பொழுதொருவண்ணமாக வளர்த்து வருஞ் சமயத்தில் அப்பாலகனுக்கு குணசுந்திரனென்று நாமதேயமிட்டு வளர்க்க ஐந்து வயதானவுடனே பாடசாலையில் விட சகல சாஸ்திரபண்டிதனாக பெயரெடுத்தான், இப்படியிருக்க சத்தியசீலவேந்தன் புதல்விக்கு எவ்வர்னமடையும் சமையமடைந்தப்படியால் கலியாணஞ்செய்ய மனமிட்டார், அத்துடனே குணசுந்திரனுக்கு உபனயஞ்செய்யவேண்டுமென்று யோசித்து அநேகதேசவேந்தரை வரும்படி சொல்லியனுப்ப அதுபோல் சகலதேசத்து வேந்தரும் வந்துவிட்டார்கள். அந்தச் சமயத்தில் வித்யாவதி அங்குசபையில் வந்திருந்த வேந்தப்புதல்வரில் சவுந்தர்யமுடைய வித்தையென்னும் வீட்டையடைந்த நேபாளதேசத்தை பரிபாலனஞ்செய்யும் விக்கிரமபாலனை கோரி மாலையிட்டாள்.

உடனே குணசுந்திரனுக்கும் உபனயனம் முடிந்து விட்டது இந்தக்காரியமானவுடனே வித்யாவதி தன்னுடைய மாமியார் வீட்டிற்கு சீதனத்துடன் சென்றாள் (குணசுந்திரனும்) மந்திரிப்புதல்வனை (விமலனுடன்) சேர்ந்து தன்னிஷ்டப்பிரகாரம் திரிந்துக்கொண்டிருந்தான். இப்படி சிலநாட் சென்றப்பிறகு குணசுந்திரனுக்கு எவ்வர்னபக்குவமடைந்தப்படியால் வேந்தன் இதைதெரிந்து அவனுக்கு கலியாணஞ் செய்யவேண்டுமென்று மனமிட்டு அநேக வேந்தருக்கு கடிதமெழுதி என் புதல்வனுக்கு பெண்கொடுக்க இஷ்டமுள்ளவர் உடனெதெரிவிக்கவேண்டுமென்று எழுதியனுப்ப அதைப்பார்த்தவேந்தர்கள்பெண்ணை கொடுப்பதற்கிஷ்டமில்லாமல் இருந்துவிட்டார்கள்.

இந்த சங்கதியெல்லாம் வேந்தன்கேட்டு துக்கமடைந்தான் கமலாவதியும் அதிக சோகமடைந்தாள், இப்படியிருக்க வேந்தனும் அவன் தேவியும் தன் புதல்வனுக்கு இதாவேந்தர் புதல்வியை கொடுப்பதில்லையென்று சொன்னதுக்கத்தால் இரேகம் நலிந்து மானஸ்திபுடனிருந்தான், இதை கேழ்விப்பட்ட வித்யாவதி தாய் தந்தைகளிடம்.

வந்து அவர்களை தேருதலைசெய்து ஐயா நான் வேந்தப்புதல்வியானது
நிச்சயமானல் குணசுந்திரனுக்கு பெண்தரும்படியான உபாயம் தேடு
கிறேன் என்றுச்சொல்லி ஆனல் லோகத்தில் யாராகிலும் குலகோத்
திரம் விசாரிக்காமல் பெண் கொடுப்பாரா இந்த குணசுந்திரன் எந்த
வம்சத்தில் பிறந்தவனே யாருக்குந்தெரியும் ஒருசமயத்தில் இவன்தாழ்
ந்தஜாதியில் பிறந்தவனென்று தெரிந்தால் மறுபடியும் அவர் குடும்ப
த்துடன் கெட்டுப்போக வேண்டியதல்லவா ஆனபடியால் இந்த
யோசனையால் பெண்ணை கொடுக்கவில்லை தவிர வேறொன்றுமில்லை
என தேருதலைச்செய்து சமாதானப்படுத்தி நீங்கள் சோகத்தை விட்டு
விடுவீரென்றுச் சொல்லி மந்திரியையழைத்து வேண்டிய தனந்தந்து
குணசுந்திரன்போல் படமெழுதி தேசாதேசத்திற்கனுப்ப காஸ்மீரதே
சத்து வேந்தன்புதல்வி இப்படத்தைக்கண்டு இவனேயெனக்கு தகுந்த
மணவாளனென்று தந்தைக்குச்சொல்ல தந்தை இதைக்கேட்டு வந்த
மந்திரியுடன் சொல்ல சம்மதித்து சுபதினமறிந்து விவாகமஹோற்ச
வம் நடத்தினர்.

இப்படி சிலதினம் சென்றபிறகு மோஹினிமாதுடைய நாயகனா
கிய குணசுந்திரனும் தேசசஞ்சாரம் செய்யவேண்டுமென்று மனமிட்டு
மந்திரிப்புதல்வனாகிய விமலனுடன் புறப்பட்டு அநேகமாகிய காடுமலை
வனம் வனாந்திரங்கள் கடந்து நடக்குஞ்சமயத்தில் குணசுந்திரனுக்கு
தாகமதிகரித்து நாவறண்டு சோகமடைய இதைப்பார்த்த மந்திரிப்
புதல்வன் ஜலங்கொண்டு வருவதற்கு சென்றான் அவன் எங்குசென்
றுப் பார்த்தாலும் ஜலமகப்படவில்லை அவன் திரிந்தப்படியால் அவ
னுக்கும் தாகமதிகரித்து ஆயாசமடைந்து ஒரு செடியின்கீழ் படுத்து
நித்திரை செய்துவிட்டான், இராஜப்புதல்வன் ஓரிடத்திலும் மந்திரிப்
புதல்வன் ஓரிடத்திலும் இப்படி ஒருவரைப்பாராமல் ஒருவர் படுத்திரு
ந்தார்கள், அந்தக் கானகத்தில் கட்டைவெட்டவந்த குறவன் இந்த
வேந்தப்புதல்வன் தாகத்தால் ஆயாசமடைந்திருப்பதைத்தெரிந்து ஜல
மிருக்குமிடமறிந்து அங்குசென்று ஜலங்கொண்டுவந்து முகத்தில்
தெளித்து வாயில்கொஞ்சம் ஜலமிடவே மூர்ச்சை தெளிந்தெழுந்
தான், அப்போது குணசுந்திரன் அந்தக்குறவனைப்பார்த்து ஐயோ!
இவன் நீச்சஜாதிப்புருடன் இவனென்வாயில் ஜலம் கொட்டினன்,
ஆனாலும் இவன்நமது பிராணத்தை ரக்ஷித்தான் ஆனல் இவ்ஜலம்
நாம்குடிக்கலாச்சுது இதுபோ ஆச்சரியமாக யிருக்கிறது இந்தகார
ணம் பெரியவர்களால் கேட்டுத்தெரியவேண்டுமென்று மனமிட்டு மறு
படியும் அந்தக்குறவனைப்பார்த்து ஐயா? என்னுடன்வந்த மந்திரிப்புத



ல்வன் ஜலங்கொண்டுவருவதாகப்போனவன் இதுவரைக்கும்வரவில்லை
என்றுச்சொல்ல அந்தக்குறவனும் இராஜப்புதல்வனும் அக்காடெங்
கும் தேடியும் அகப்படவில்லாமற் போனபடியால் மூர்ச்சையடைந்
தான் உடனே அந்தக்குறவன் இந்த வேந்தனையெடுத்து தோள்மேல்
போட்டுக்கொண்டு தன் குடிசைக்குசென்று அங்கு படுக்கவைத்து
சைத்யோபசாரம் செய்துவிட வேந்தன் எழுந்தமாத்திரத்தில் மாவுந்
தேனும் முதலானதும்தந்து ஆதரித்தார் மறுநாட்புறப்பட்டு அநேக
நகரமெல்லாம் தேடியும் சதாவிமலனை நினைந்து சோகமடைந்து காசி
தேசஞ்சென்றான்.

இங்குகானகத்தில் ஜலத்திற்காக போனவிமலன் செடிக்கீழ் மூர்
ச்சையாக விழுந்திருப்பதை அந்தக்கானகத்தில் தர்பை நிமித்தமாக
வேதியனொருவன் அங்குவர இந்த மந்திரிப்புதல்வனைப் பார்த்து இவ
ன் நாவரண்டு கிடைக்கிறான் என்றுதெரிந்து உடனே ஜலங்கொண்டு
வந்துகொடுக்க அவன் ஆயாசந்தீர்ந்து எழுந்தவுடனே சூரியன்மறை
ந்தான் இவன் இராஜப்புதல்வனை தேடப்புறப்பட்டான், இதைதெரிந்த
அந்த வேதியன் அப்பா! இதுவோ கானகம் இனி இங்கிருந்தால்
மிருகபயம் சம்பவிக்கும் என்றுச்சொல்ல இதைக்கேட்ட மந்திரிப்புத
ல்வன் பயமடைந்து அந்த வேதியனுடன் சென்று அருகிலிருந்த சாம்
பல்ய நகரமடைந்து அங்கிருந்து உதயமானவுடனெழுந்து கானகஞ்
சென்று இராஜப்புதல்வனைப் பார்க்க எங்குமகப்படவில்லை இதனால்
சோகமடைந்து அந்த தினத்தில்அந்த சாம்பல்ய தேசத்திலிருந்து
அந்த தேசவர்த்தமானம் விசாரிக்கலாமென ஓர் சத்திரத்திலிருந்து
அங்குவரப்பட்ட பலதேசத்தாரை பார்த்து இந்தநாட்டின் விந்தை
யேதென்று கேட்க அதிலொருவன் சொல்லத்தொடர்ந்தான், ஐயா
ஜெயபுரத்தில் வேந்தனும் அவன்தேவியும் மந்திரியும் மந்திரிதேவி
யும் அவரவர் புத்திரர் வெகுகாலமாக தேசசஞ்சாரம் செய்யப்போன
வர் மறுபடியும் வராதப்படியால் விசனமடைந்து அந்த நால்வரும்
மரணமடைந்தார்கள், அதின்பிறகு அந்நாட்டு வேந்தனாகிய சத்தியசீ
லன்புதல்வியான வித்யாவதி தன்நாயகனுடன்சொல்லி அந்த இராஜ்ய
த்தைப் பிறருக்கு தாரவார்க்காமல் தன் மந்திரிப்புதல்வனை அந்த தேச
த்தை பரிபாலிக்கும்படி நியமித்தார், அந்த மந்திரிப்புதல்வன் துஷ்ட
னைப்படியிரீ சத்தியசீலன் மருமகளாகிய காஸ்மீரவேந்தன் புதல்வி
யான குணசுந்திரன் நாயகியான அந்த மோகினியை மோகிக்கபம்
பாத சம்மதிக்காதபடியால் சிறைச்சாலைதன்னில் யிருத்தினன்; இப்

படி விபரீதம் நடப்பது எந்ததேசத்திலும் கண்டதும் கிடையாது, கேட்டதுமில்லை என்றுச்சொன்னார், இம்மொழிக்கேட்டவுடனே விமலன் கோபமடைந்து இனி தாமதம் செய்தால் பங்கமடையுமென யோசித்து அதிவேகமாகப் புறப்பட்டு காஸ்மீரதேசத்திற்கு வந்து அவ்வேந்தனுக்கு நடந்ததெல்லாம் சொல்லி சேனையுடன் புறப்பட்டு ஜெயபுரத்திற்குச்சென்று அங்கு சிறைதனிலிருக்கும் மோஹினியை மீட்டி பிறந்தயிடத்திற்கு அனுப்பிவிட்டு நேபாளதேசத்தின் மந்திரிப்புதல்வன்செய்த துஷ்டதனத்திற்கு அவன் வலதுகையையும் காதையும் கண்டித்து நேபாளதேசத்திற்கனுப்பி அவன் துஷ்டதனத்தையெல்லாம் விக்கிரமபாலனுக்கு அறிக்கை செய்து ஜெயப்புரத்தை தானே சந்தோஷமாக ஆண்டுக்கொண்டு வந்தான், இப்படியிருக்குஞ் சமயத்தில் காவலரையனுப்பி சகல தேசத்திலும் தேடும்படி திட்டஞ் செய்தான், இதற்குள்ளாக சூரியன் அஸ்தமிக்கவே பிரம்மானந்தயோகிக்கதை நிறுத்திவிட்டு சமீபத்திலிருந்த அனந்தசயனத்தில் நித்தியகாரியத்தை தீர்த்துக்கொண்டு போஜனஞ்செய்து சயனித்து உதயமானவுடனே யெழுந்து காலக்கடனை தீர்த்துக்கொண்டு அனந்தபத்மநாபசுவாமியினுடைய சேவையடைந்து அந்தவிடம் விட்டுப்புறப்படுஞ்சமயத்தில் வேடர்யோகியைப்பார்த்து சுவாமி நேற்றுச்சொன்ன கதைதன்னில் பின்சங்கதி தெரியச்சொல்ல வேண்டுமென்றுக் கேட்க யோகி சந்தோஷமடைந்துச் சொல்லத்தொடர்ந்தார்.

# இருபத்தைந்தாம் மஜிலிக்கதை.

## பூர்வஜன்மப்பலிதம்.

கேட்டீரா வேடரே! ஜெயப்புரத்து மந்திரிப்புதல்வனை விமலன் சத்திய தர்மசீலனாக இராஜ்யத்தை ஆண்டுவந்தான் இப்படியிருக்க இம்மந்திரிப்புதல்வனால் அனுப்பப்பட்ட காவலர் அநேகதேசந்திரிந்து கடைசிதன்னில் காசியுடன்சேர்ந்த சாரநாதஸ்தலத்தில் இருக்கப்பட்ட ஒரு மண்டபத்திற்கு வந்து சேர்ந்தார், அவர் ஒருவர்க்கொருவர் போனதேசமெல்லாந் திரிந்துவந்த சங்கதியெல்லாம் பேசிக்கொண்டிருந்தார்கள், அப்போது அவ்விடத்திற்கு குறத்திக்கு சகாயமா[illegible] அடுப்பை எரியவைத்துக்கொண்டிருக்க அந்தச்சமயத்தில் காவலர்சொன்



ன் சந்தர்யங்கேட்டு இது நம்மைதானென்று தெரிந்துக்கொண்டு ஆ ஆ இனிநாம் வேந்தனாகப்போகிறதில்லை எனக்கு அந்தயோகம் யான் தேசசஞ்சாரம் செய்யவந்தபோதே என்னை விட்டுப்போயிற்று என துக்கமடைந்து படித்தவனாகையால் துக்கத்தைவிட்டு தைர்யஞ்செய்துக்கொண்டு என்தலைதன்னில் அன்று பிரம்மதேவன் எதுயெழுதினானோ! அதுபோல் நடக்கிறது அதுவுமென் கர்மவசந்தான், இப்போது துக்கமடைவதால் எதிருக்கிறது பகவான் கருணையால் அறிந்திடலாகும் நான் யாருக்குப்பிறந்ததும் எனக்குத் தெரியவில்லை நான் சிலதினத்திற்கு வேந்தன்புத்திரனென்று பெயரடைந்தேன் இப்போது குறவனாகயிருப்பது மாத்திரந்தெரிகிறது முந்திநடந்தகாரியம் நானே ப்படிதெரிந்திடலாகும் இந்திரியபலத்தால் எனக்கிப்படிக்கொற்ற துற்புத்திஉண்டாகி குறத்திவலையிலகப்பட்டு குறவனாகினேன், நான் குறத்தியுடனிருக்கும் வார்த்தை என் மனிதர்கேட்டால் ஏதுச்சொல்வார் ஆனாலும் என்நாயகிமாத்திரம் துக்கமடைவாள் மற்றவர்களுக்கு அவ்வளவு சோகங்கிடையாது என்னை வளர்த்தவருக்கும் துக்கமிருக்கும் என இப்படியாக எண்ணமிட்டுக்கொண்டு கண்ணில் ஜலங்கொட்ட அச்சமயத்தில் இதைப்பார்த்த அந்தக்குறத்தியின் திருட்டுமாப்பிள்ளையான குணசுந்திரனைப்பார்த்து கணவா! நீயேன் கண்ணீர் விடுகின்றாய் அடுப்பண்டை யிருப்பதால் அழுகின்றாயா புகைச்சல் கம்மியதால் அழுகின்றாயா சமயல்செய்யச்சொன்னதால் அழுகின்றாயா உன் ஆண்தன்மைக்கி இந்தவேலைபோதாதா எங்கள்மனிதர் உரிபோடவும், வலைபின்னவும், சிக்கம்போடவும், கற்றிருக்கின்றார் எங்கள் மனிதர்போல் உனக்கேதும் தெரியாது என்றுச்சொல்ல இதைக்கேட்ட குணசுந்திரன் தன்மனதில் ஓ ஹோ! இவளேதோ பினத்துகின்றாள், இவள் மொழியால் என்மானம் எங்கு வெளிவருகின்றதோவென பயமடைந்து அந்தக்குறத்திக்குத் தெரியும்படிச் சொல்லலுற்றான், அடிமாதே! என்ன சந்தோஷமில்லையென்று நானழுகிறது என்கண்ணில் புகைக்கம்மி தண்ணீர் வந்தது என்றுச்சொல்லி முத்தமிட்டு சந்தோஷப்படுத்தினான்.

இப்படியிருக்குஞ் சமயத்தில் ஜெய்ப்புரத்தின் மந்திரிப்புதல்வன் அனுப்பப்பட்ட காவலரெல்லோரும் விசனமடைந்து வேந்தப்புதல்வன் அகப்படாமலிருப்பதால் துக்கமடைந்து அவரவர்கள்தேசம்போய்ச்சேர்ந்தார்கள், இதையறிந்து விமலன்யோசித்து துக்கசாகரத்தில் மூழ்கி தகுமானஜோதிடர் மந்தரக்காரர் முதலானவர்களை கொண்டு

பார்த்தும் இருக்கப்பட்டயிடம் இவ்விடமென்று தெரியவில்லை இப்படிருக்க விமலன் சதாயீஸ்வர தியானஞ்செய்துக்கொண்டு சிநேகிதனுகியவேந்தப்புதல்வன் தன்னிடம் வந்து சேரவேண்டுமென்று கோரிக்கொண்டிருந்தான், இப்படி பரம்பொருளாகிய சிவப்பெருமானை தியானித்தபடியால் ஒருமகாமுநீந்திரன் விமலன் அருகில்வந்து அந்த விமலன் துக்கசாகரத்தில் மூழ்கியிருப்பதை தானறிந்து அப்பாபுதல்வனே! நீயேன்துக்கமடைந்தக் காரணமேதென்றுக்கேட்க அவன்தன்னுடைய துக்கமெல்லாம் சொல்லிவிட்டான் இதற்குள் சூரியன் அஸ்தமயமடைந்தவுடனே இம்மூவரும் சமீபத்திலிருக்கும் அருணாசல க்ஷேத்திரமடைந்து போஜனஞ்செய்து நித்திரையடைந்து உதயமானவுடனே எழுந்து காலக்கடனை தீர்த்துக்கொண்டு சகல தீர்த்தத்தில் ஸ்தானஞ்செய்துவிட்டு அருணாசலேஸ்வரனை சேவையடைந்து பார்வதிதேவியை வந்தனஞ்செய்துவிட்டு புறப்படுங்காலத்தில் வேடர்கள் யோகியைப்பார்த்து சுவாமி நேற்றியதினம் சொன்னகதை மிச்சத்தை சொல்லுமையாவென்று கேட்க யோகி சந்தோஷமடைந்து கதைச் சொல்ல ஆரம்பித்தார்.

# இருபத்தாரும் மஜிலிக்கதை.

## பூலோகவிந்தை.

கேட்டீரா வேடரே! அதன்பிறகு விமலன் அந்த யோகியுடன் நடந்ததெல்லாம் சவிஸ்தாரமாகச்சொல்லி துக்கமடைய இதைக்கேட்ட யோகிவிமலனைப் பார்த்து. ஓ விமலா! துக்கப்படாதே அந்தகுணசுந்திரன் பூர்வஜன்மத்தில் குறஜாதியில் பிறந்து காட்டில் சஞ்சரித்துக்கொண்டு அநேகமிருக ஹத்திகள் செய்துக்கொண்டிருந்தான், அப்படிருக்குஞ் சமயத்தில் ஒருகிழவனை புலிவாயிலிருந்து விடுதலைச்செய்து ரக்ஷித்தான், அந்த ஆபத்தைக்காலத்தின் உபசாரம் செய்தப்படியால் அவ்ன் குறத்திவயற்றில் பிறந்து அவன் தந்தை கர்பமாயிருக்கும்போதே மரணமடைந்தான், அவன் தாயார் இவனைப்பெற்றுக் கெங்கைக்கரைதனில் ஓர் புதரின் அருகில் வைத்துவிட்டு ஸ்தானஞ்செய்ய கெங்கைதன்னில் இரங்கியமாத்திரத்தில் அவள் கெங்கைதன்னில் வீழ்ந்துசெத்தாள், அந்தச்சிசுவை உந்தன் வேந்தன் [illegible]ண்டுவந்து வளர்த்து கலியாணஞ்செய்தாள், அந்த காஸ்மீரதேசத்து



வேந்தன் புதல்வியும் முந்திஜென்மத்தில் குணசுந்திரனுக்கு தேவியாகயிருந்து இப்படி குறஜாதியாக யிருந்தப்போதிலும் நாயகனைதெய்வமென்று எண்ணமிட்டிருந்தாள் துஷ்டக்காரியமாத்திரம் விசேஷமானப்படியால் மறுபடியும் அந்த வாசனையில் அகப்பட்டு கானகத்தில் ஒரு குறத்தியைச் சேர்ந்திருக்கின்றான், அவனிருக்குமிடம் உனக்குச்சொல்லுகிறேன் அங்குநீசென்று அவனைப்பார்த்தவுடனே அவன் மோகமடைந்தமாது மரணமடைவாள் பிறகு அவனெல்லாவற்றையும் மறந்து மோகினிமீது மையலாகி துக்கித்துக்கொண்டிருப்பான் நீ மெதுவாய் சென்று அவனுக்கு நீதிபோதித்து மறுபடியும் வேந்தனுகச்செய்து மோகினிக்கு பதிபிச்சைதந்தால் மகாபுண்யமுண்டாகும் உனக்கு பகவான் சகாயஞ்செய்வான் ஆனல் சிலக்காலம் கஷ்டமுண்டாகும் மோகினியைச் சேர்ந்தவுடனே அன்முந்தி நடந்ததெல்லாம் மறந்துப்போவான் இது ஆருக்கும் சாதாரணமாய் லோகத்தில் எல்லோருக்குமுண்டான சந்தர்பமேயன்றி வேறல்ல நூத்திக்கொருவர் மாத்திரம் முந்திநடந்ததை எண்ணமிடுவார் மற்றவர் எல்லாவற்றையும் மறந்துப்போவார் அதெப்படியென்றால் துஷ்யந்தன் சகுந்தலையைச்சேர்ந்து மறந்துவிட்டான் இந்தக்கதை உனக்குத்தெரியாதா யான் இன்னமுடைத்துச் சொல்லவேண்டுமா எனச்சொல்லி இந்தச்சங்கதியெல்லாம் உன் பிராணத்துடன் போகவேண்டுந்தவிர வெளிச்சொல்லலாகாதென்றுச்சொல்லி குணசுந்திரன் யிருக்குமிடஞ் சொல்லிவிட்டு யான் இன்னஞ் சிலதினத்தில் உங்களிடம் வருகிறேனென்று சொல்லிப் போய்விட்டார்.

இப்படியிருக்குஞ் சமயத்தில்குணசுந்திரனுடைய மோகநாயகியாகிய குறத்தி ஒருநாள் நாயகனைப்பார்த்து சுவாமி இதோ அருகிலிருக்கப்பட்ட கானகஞ்சென்று ஈசலைப்பிடித்து வருகிறேன் அதைவறுத்து வைத்துக்கொண்டு நாம் நாலைந்துதினம் வரையில் தின்னலாமென்றுச் சொல்லி கானகஞ்சென்றாள், அங்குவோர் பெரும்புலியிருந்து இவளைப்பிடித்து கண்டத்தைக்கடித்து உதிரங்குடித்து மறுநாட் அவளுடைய மாமிசமெல்லாந் தின்றுப்போய்விட்டது, அதின்பிறகு குணசுந்திரன் அந்ததினத்தில் குறத்திவாராதிருப்பதையறிந்து மறுநாட் அம்மலைக்குச் சென்றுப்பார்க்க ஒருபெரும்புலியகப்பட்டது குணசுந்திரன் வில்வித்தைதனில் தேர்ந்தவனகையால் அந்தப்புலியை ஓர்பாணத்தால் கொன்றுவிட்டான், பிறகு சுற்றிலும்பார்க்க அவள் கண்டத்தில் தரித்திருந்த சங்குமணிகளும் கொண்டையிலணிந்திருந்த மயிலிறகும் கையிலிருந்த தந்தவளையலும் புஜத்திலிருந்த நரிநெகமும் புலிநெகமும் இடையில் தரித்திருந்த கந்தைத்துணிகளும் அகப்படவே இதைப்பார்த்து இவள் மரணமடைந்து விட்டாளென்று தெரிந்துக்கொண்டு கொஞ்சநேரம் சோகமடைந்து ஓர்குளத்தினில் ஸ்தானஞ்செய்து மறுபடியும் காசிதேசத்திற்கு வந்து விஸ்வநாதனை சேவையடைந்து யிருக்க தான் அச்சமயத்தில் குறத்தியுடனிருந்த சந்தர்பத்தை மறந்து

விட்டு தன்சிநேகிதனன விமலன் எங்குபோனனோவென்றும் தாய்
தந்தைகளையும் மாமன்மாமியும் அக்காளும் அத்தானும் எப்படியிருக்
கின்றரோவென்று சோகமடைய ஆரம்பித்தான்.

இதற்குள் விமலன் காசிக்குச்சென்று குணசுந்திரனைப்பார்த்தான்
அந்த குணசுந்திரனுக்கு உண்டானசந்தோஷம் சொல்லமுடியாது விம
லனும் வேந்தப்புதல்வன் அகப்பட்டதற்கும் முனிவன்சொன்னமொழி
நிக்ஷேபமென்று மனதிலெண்ணமிட்டு சந்தோஷமடைந்தான், அதன்
பிறகு இருவரும் யோகக்ஷேமங்களை விசாரித்துக்கொள்ளுஞ் சமயத்
தில் மந்திரிப்புதல்வனுல் தாய்தந்தைகள் மரணமடைந்ததையும் நேபா
ள மந்திரிப்புதல்வனை தண்டனைசெய்து தேவியை சிறைமீட்டி பிறந்த
வீட்டிற்கனுப்பினதும் சொல்ல குணசந்திரன்கேட்டு சிந்தைமெலிந்து
குறத்திபுடைய சாவகாசம் கொஞ்சமாகிலும் கியாபகத்திற்குவாராமல்
போச்சுது, அப்புடி வருமாகில் யாருந்தைர்யமாய் மொழியாடமாட்
டார், ஆகையால் குணசுந்திரனுக்கு பகவான் மாய்கையால்அவன்பூர்வ
நடத்தையேதும் ஞாபகத்திற்கு வரவில்லை பிறகுவிமலன் குணசுந்திர
னுடன் காஸ்மீரதேசத்திற்குச்சென்று மோகினியையழைத்து வரப்
போகவே காஸ்மீரவேந்தன் முதலானவர் குணசுந்திரனைமருகனென்று
எண்ணமிட்டார் தவிர பிரியம் நாட்டவில்லை இதற்கு காரணமேதென்
றல் குணசுந்திரனுடையவளப்புயேதும் தெரியாதப்படியாலும் அவன்
தன் பந்துஜனத்துடன் சேர்ந்தவனல்லவென்றும் உண்டானகாரணமே
தவிர வேறொன்றுமில்லை எப்போதானாலும் பெண்கொடுப்பவர்களும்
பெண் வாங்குபவர்களும் சம்பந்தம் கலந்தவராக யிருக்கவேண்டியது
அப்படியில்லாமற்போனல் திரவ்யமிருக்கிறவரைக்கும் அல்லதுகாரிய
முடியாகிறவரைக்கும் பிரியமிருக்கும் தவிர பிறகுயிருக்காது மாதர்கள்
தன்கணவனை தெய்வமென்று எண்ணமிட்டு யிருக்கிறவரைக்கும் புரு
டன்மீது பிரியமிருக்கும் அப்படி குணமில்லாமற்போனல் புருடனல்
உண்டாகும் திரேகசந்தர்பம் தனபூஷணம் விட்டுப்போனல் அம்மாது
புருடனை அருகில் சேர்க்கமாட்டாள் எப்படியென்றல்,

(சுலோகம்.)

மாதாநிந்ததி நாபிநந்ததி பிதா ப்ராம்தாந சம்பாஷதே
ப்ருத்க குப்யதி நானுயச்சதிசுத காந்தாச நாலிங்கதே
அர்தப்ரார்தன சங்கையாநகுருதே ஸ்பா லாபமாத்ரம் சுஹ்ருத்
தஸ்மாதர்தமு பார்ஜய ஸ்ருணுசகே ஹ்யர்தேந ஸர்வேவசாஃ

தாரித்திரன் யென்பவனுக்கு தாயும்தூஷிப்பாள், தந்தைசந்தோ
ஷப்படமாட்டான், அண்ணன்தம்பி மொழியாடமாட்டார், வேலைக்
காரன் மதிக்கமாட்டான் புதல்வன் தன்வழி வரமாட்டான் மாங்கல்
யம் செய்தமாது இடமையால் சிநேகிதன் நின்றுபார்க்கமாட்டான் இப்
படி சொல்லப்பட்ட மொழிபோல எல்லோரும் [illegible]க்கிறகாக அனு



கூலமாக யிருப்பார் தவிர இந்தனமில்லாவிட்டால் அருங்கிட்டநெரு
ங்கமாட்டார் ஆகையால் பந்துக்கூட்டத்தில் பெண்ணை வாங்குவதும்
கொடுப்பதும் பெருந்தன்மையென்று தெரிந்திடவேண்டியது.

காஸ்மீரதேசத்து வேந்தனும் அவன்தேவியும் அதிகமாக குண
சுந்திரனை கௌரவப்படுத்தவில்லை குணசுந்திரனுக்கு தன் தாய்தந்தை
கள் இன்னரென்று தெரியாதப்படியால் தன்னுள்தானே இதுவெனது
பூர்வகர்மமென்று எண்ணிக்கொண்டான், மோகினி தன் நாயகனை
தான் படத்தில் பார்த்து மோகித்தப்படியால் அம்மாது முகங்கோணு
தப்படிக்கு புருடனுக்கு அநேக உபகாரஞ்செய்தாள், அதன்பிறகு
மோகினியை யழைத்துக்கொண்டு குணசுந்திரன் தன்தோழனை விம
லனோடு காஸ்மீரதேசத்து வேந்தன் அனுப்பிய பரிவாரத்தைத் தன்
னுடன் அழைத்துக்கொண்டு ஜெயந்திபுரத்திற்கு வந்துக்கொண்டிரு
ந்தான்.

இவ்விதமாக வருஞ்சமயத்தில் அவ்வழிதன்னில் முந்தி நேபாள
தேசத்து மந்திரிப்புதல்வனை தண்டனைசெய்த விமலன் காலுங்கையும்
கண்டிக்கவேண்டுமென்று நேபாளதேசத்தின் மந்திரி சமயம்பார்த்துக்
கொண்டிருந்தான், அந்தச்சமயத்தில் இவர்வருவதைதெரிந்து கொலை
ப்பாதகரையனுப்ப அவர் அதுப்போல் அக்கானகமார்க்கத்தில் காத்
த்துக்கொண்டிருந்தார், இதற்குள் காஸ்மீரதேசத்திலிருந்து ஜெயந்தி
புரத்திற்கு வருஞ்சமயத்தில் சம்பாயரண்யம் தோன்றியது அங்கு
எல்லோருந்தங்கி போஜனஞ்செய்து மந்திரிப்புதல்வனும் இராஜப்புத
ல்வனும் இருவரும் மஞ்சத்தின்மீது சயனித்திருக்குஞ் சமயத்தில்
கொலைப்பாதகர் வந்து மந்திரிகாலென்று வேந்தன்காலை வெட்டினன்
அவர் திடுக்கிட்டெழுந்து ஓவென கூச்சலிடவே இந்த விமலனையும்
குணசுந்திரனையும் பரிஜனங்கள் பார்த்து ஓ ஓ! காரியங்கெட்டுப்போச்
சுது, இந்தக்காரியம் நம்மாலாச்சுதென்று எண்ணமிட்டு மோகினி
நமதுமீது கோபித்து தன்தந்தையுடன் சொல்லி நம்மைதண்டனை
செய்வாளென்று பயமடைந்து பரிஜனங்களெல்லோரும் கூடி ஆலோ
சித்தார், எப்படியென்றல், இந்த வேந்தப்புதல்வனையும், மந்திரிப்புத
ல்வனையும் எடுத்துக்கொண்டுப்போய் ஓர் நதியில்போட்டுவிட்டு மோ
கினிகேட்டால் அவர் இன்னும் சிலதேசம் பார்த்துவருவதாக உன்னு
டன்சொல்லி நீ சம்மதிக்கும்படிச்செய்ய சொல்லிப் போனரென்று
சொல்லலாமென மனதிடஞ் செய்துக்கொண்டு அதுபோலவே மந்
திரிப்புதல்வனையும் இராஜப்புதல்வனையும் எடுத்துக்கொண்டுப்போய்
ஓர்நதியில் போட்டுவிட்டு வந்தார், இதற்குள் மோகினியெழுந்து நாய
கனைக்கேட்க பரிஜனங்கள் இதைக்கேட்டு அம்மா! அவர் தேசாந்தி
ரம் பார்த்துவருவதற்குப் போய்விட்டார், உன்னுடன் சொன்னல் நீ
தடுக்கப்படுவாயென்று சொல்லாமல் போய்விட்டாரென்றுச் சொன்ன
வுடனே இதைக்கேட்டு மோகினி துக்கமடைந்து நாயகா! என்னை

இப்படியாக கானகத்தில் விட்டுப்போகலாமா! இதுதர்மமா முந்தி ஸ்ரீராமசெந்திரன் தன் நாயகியை காட்டில் விடவேண்டுமென்று எண்ணமிட்டும் தான் போகமனமில்லாமல் தன் தம்பியை அனுப்பினர், இப்போது நீரென்னைவிட்டுப் போய்விட்டீர் இனியெனக்கு பிராந்தயிடத்தில் சுகிக்கிபங்கிட்டாது இத்தனைநாள் நான்பட்டகஷ்டம் நீ கேட்டால் உன்யிரல் வெடித்துபோய்விடும் நானே உன்னை மாலையிட்டதாலல்லவா உனது இஷ்டபிரகாரம் விட்டு வேடிக்கை பார்க்கின்றீர் இது என்னுடைய விதிவசந்தானோ யான் அனுபவிக்கவேண்டிய காரணமே பூர்விகத்தில் யான்செய்த துஷ்கர்மமேதோ என்னை பாதிக்கிறது ஆ ஆ நாயகா எதுசெய்குவேன் தெய்வமே! உனக்கும் நேத்திரமில்லையா என் புத்திபறிந்து யாமொருவரை தூஷித்தறியமாட்டேன் ஏழைகளுக்கு அப்பமிடாமல் திட்டிதரித்தினதும் கிடையாது குழந்தைகளுக்கு பால்கொடுக்கசெடிகளை நேமித்தேனே பசியென்பவருக்கு அன்னமிட்டுக் கொண்டிருந்தேனே சகலகுணத்துடன் இருக்கப்பட்டவள் தினந்தோரும் பகவானை தியானித்துக் கொண்டிருப்பவள் பெரியோரை அவமதிக்காமல் நடந்தது கிடையாது பூலோகத்திலிருக்கும்பெரியோரை தாய்தந்தையாக பாவித்திருந்தவள் சிறியவரை உடன்பிறந்தவர்போல் பாவித்தவள் யாமிமாமனும் பரலோகமடைந்தும் சதா அவரை தியானித்துக் கொண்டிருக்கிறேன் இப்படியெனக்கு இந்தஜென்மத்தில் நாயகனை கானகத்தில் விட்டுப்பிரிந்து ஒண்டியாக இவ்வியகாலம் சேர்ந்தது பகவான்மனதை யார்தெரிவாரென்று மனமிட்டு பூமியில் சாய்ந்தாள்.

இப்படிருக்குஞ் சமயத்தில் அந்தக்கானகத்தில் ஒரு இழவேந்தன் வேட்டைக்குவந்து வேட்டையாடி போகுஞ்சமயத்தில் வழிதன்னில் விழுந்திருந்த அம்மாதைப்பார்த்து கவிகரத்துடன் உபகாரஞ்செய்தெழுப்பி அம்மாதை தன் பல்லக்குதன்னில் ஏற்றிக்கொண்டு தன் வீட்டிற்குச்சென்று தன்நாயகியை ஆதரிக்கும்பொருட்டு இட்டஞ்செய்து நியமிக்க அந்தமோகினிக்கு பிறந்தவீடுபோல் அதிகசந்தோஷமாகயிருந்தாள், இப்படிச்சொல்லவே சூரியன் அஸ்தமயமாகிவிட யோகி கதைநிருத்திவிட்டு சமீபத்திலிருக்கும் காஞ்சிபுரிக்குவந்து நித்தியகுருத்தியங்களை தீர்த்துக்கொண்டு போஜனஞ்செய்து சயனித்து மறுநாள்மூன்று காலக்கடனை தீர்த்துக்கொண்டு திவ்யதீர்த்தத்தில் ஸ்தானஞ்செய்து வரதராஜப் பெருமானையும் ஏகாம்பரீஸ்வரனையும் சேவைபடைந்து புறப்படுஞ்சமயத்தில் வேடர் யோகியைப்பார்த்து சுவாமி நேற்றியதினம் தாங்கள்சொன்னகதைதன்னில் குணசுந்திரனும் விமலனுக்கும் காலைவெட்டி நதிதன்னில்போட்டுவிட்டார் மோகினி ஓர்வேந்தன் வீட்டில் சேர்ந்தாள், அதின்பிறகு அவர்களை எப்படி யோ அதைச் சொல்லென்றுக் கேட்க யோகிச் சொல்லத் தொடங்கினான்.



# இருபத்தேழாம் மஜிலிக்கதை.

## இஷ்டசித்தி.

கேட்டீரோ வேடரே! இராஜப்புதல்வனும் மந்திரிப்புதல்வனையும் ஆற்றில் போட்டமாத்திரத்தில் அங்குஸ்டமாக யிருந்தபடியால் அவர்ஜலத்தில் மூழ்காமலிருந்தார், அவ்விடத்திற்கு திரிகாலஞானியென்னும் முனிவன் விமலனோடு சிலதினத்திற்கு பிறகு வருகிறதாகச் சொன்னமுனீந்திரன் வந்து குணசுந்திரனையும் விமலனையும் பார்த்து சோகமடைந்து முந்தி ஜென்மகர்மத்தைத் தீர்த்துக்கொள்ள சாத்தியப்படாதென்று அவருக்கு தைரியஞ்சொல்லி இப்படியாவதற்கு நேபாளதேசத்து மந்திரியே காரணமென்றுச்சொல்லி பிறகு, அவருக்கு சம்பவித்தக்காரணம் தெரிந்துக்கொண்டு முந்திக் கால்கள் கண்டித்தயிடத்திற்குச்சென்று அங்குவிழுந்திருக்கும் குணசுந்திரனுடைய காலையும் விமலன் காலையும் யெடுத்துக்கொண்டுவந்து முன்னிருந்ததுபோலவே கூட்டி அவுஷதங்கொடுத்து பாதைத் தீர்த்துவிட்டார் அதன்பிறகு, குணசுந்திரனும் விமலனும், அந்த யோகியை அநேகவிதமாக தியானித்தார்.

ஓ மகானுபாவா! நாங்கள் இனியாகிலுமெங்கள் நாட்டை க்ஷேமமாக பரிபாலிக்கும் பாக்கியம் உண்டாகுமாவென்றுக்கேட்க. அந்த யோகீந்திரன் அவரைப்பார்த்து அப்பா! நீங்கள் காம்பில்யதேசத்திற்குபோவீர் அங்கு மோகினி இருக்கின்றாள் இதுவுமன்றி அந்தத் தேசத்து இழவேந்தனுக்கு ஓர் புதல்வி இருக்கின்றாள். அம்மாதை உங்களில் வொருவருக்குக் கொடுப்பதற்கு அவ்வேந்தன் சம்மதமடைவானென்றுச்சொல்லி யோகீந்திரன் போய்விட்டான். பிறகு, குணசுந்திரனும், விமலனும், காம்பில்ய நகரத்திற்குச்சென்று அவ்வேந்தனை சேவையடைந்தார். அவ்வேந்தன் சந்தோஷமடைந்து வந்தக்காரியத்தை விசாரிக்கவே அவர் மோகினி நிமித்தியமாக வந்தோமென்றுச்சொல்ல அந்தப்புரத்திலிருந்த மோகினி தன் நாயகன் கண்டத்துவனியைக் கேட்டபடியால் சீக்கிரமாகவந்து மறைவாக நின்றுப்பார்த்துத் தன் புருடனும் மந்திரிப் புதல்வனையுந்தெரிந்து மகா சந்தோஷமடைந்திருந்தாள், அவ்வேந்தன் வந்தவர்களுக்குத் தகுந்தபடி உபசரித்தான். அதன்பிறகு, மோகினியைக்கண்டு குணசுந்திரன் தனக்கு நேர்ந்த கஷ்டமெல்லாஞ் சொன்னான். மோகினியும் துக்கமடைந்து பகவான் சங்கல்பமென்று மனதில்எண்ணினள். அவ்வேந்தனுக் கிருக்கப்பட்ட புதல்வியை விமலனுக்குக்கொடுத்து மகா சம்பிரமாகக் கலியாணஞ்செய்தான்.

இவ்விதமாக குணசுந்திரனும், விமலனும், அவரவர் நாயகியுடன் கூடி சந்தோஷமாக ஜயந்திபுறத்திற்கு வந்துச்சேர்ந்து, தங்கள் காலை வெட்டிய பாதகனை நேபாளதேசத்து மந்திரியை அழைத்தால் வர மாட்டானென்று தெரிந்து அதற்கேதாகிலும் உபாயஞ்செய்யவேண்டுமென்று மனமிட்டு விமலன் தானொரு வியாபாரிவேஷம் பூண்டுக்கொண்டு நேபாள தேசத்திற்குப்போய், அங்கு வியாபாரஞ்செய்ய அங்கு சமயம்பார்த்து நேபாளமந்திரி வியாபாரஞ்செய்யுஞ் சமயத்தில் அவனுடன் இன்றிராத்திரிக்கு நான் இரங்கியிருக்குமிடத்திற்குவந்தால் அநேக பூஷணங்கள் என்னிடமிருக்கிறது. உனக்குத் தருகிறேனென்றுச்சொல்ல அதற்குச் சம்மதித்து வொண்டிப்பாக விமலன் இருக்குமிடந்தேடி அம்மந்திரிவந்தான். அதற்குள் விமலன் தன்னுடன்வந்திருக்குங் காவலருக்கு முந்திசெய்யுங் காரியத்தைச் சொல்லிருக்க அவர்கள் இதைக்கேட்டு சித்தமாகயிருந்தார்கள். அந்த மந்திரிவந்தவுடனே அவன் கைகால்களைக்கட்டி சிறைவைத்து அந்த இராத்திரிப்பொழுதே பிடித்துக்கொண்டு வந்துவிட்டார். இப்படிவந்தவனை குணசுந்திரனும், மோகினியும், விமலனுடைய புத்தி சாதுர்யத்திற்கு ஆனந்தமடைந்தார். அதன் பிறகு, நேபாளதேசத்து மந்திரியுடைய துர்மார்க்கத்திற்காக அவன் இடதுகாலையும், வலதுகரத்தையும்வெட்டி அனுப்பிவிட்டார். குணசுந்திரனும், விமலனும், அவரவர் நாயகிமாருடன் சந்தோஷமாய் இராஜ்ய மாண்டுக்கொண்டு குடிகளிடம் ஆறிலொருக்கடமைபெற்றுச் சந்தோஷமாயிருந்தார்.

இப்படியாக யோகிச்சொல்லவே சூரியன் அஸ்தமாகிவிட்டான் யோகியும் கதையை நிறுத்திவிட்டு சமீபத்திலிருந்த கால அந்திக்குச் சென்று காலக்கடனைத் தீர்த்துக்கொண்டு போஜனஞ்செய்து சயனித்தார் அந்தச்சமயத்தில் இந்தச் க்ஷேத்திரமகிமையைச் சொல்லென்றுக் கேட்க யோகிச் சொல்லத்தொடர்ந்தார்.

கேட்டீரா வேடரே! இந்தச் க்ஷேத்திரத்திற்கு காலஸ்திரியென்றும் தக்ஷின கைலாசமென்றும் வாயுலிங்க க்ஷேத்திரமென்றும் பெயருண்டு ஸ்ரீகாள அஸ்தியென்பதற்கு காரண மேதென்றால். முந்தி ஓர் வேதியன் பூர்வஜென்ம பாபத்தால் சாலைப்புழுவாக ஜென்மித்து இங்கிருக்கும் வாயுலிங்கத்திற்கு சேவைசெய்ய எண்ணமிட்டு சிவலிங்கத்திற்குமீது தன் நாபிதன்னில் உற்பத்தியாகும் மண்ணால் அநேக விச்சித்திரமாகிய கோபுரங்களை நிர்மித்தான் பரமசிவன் அந்த [illegible] பக்திக்கு சந்தோஷமடைந்து அந்தக் கோபுரத்தையெல்லாம் தகித்

O23:453.25212 N06
தமிழ்நாடு ... காப்பகம் 223908 ... 600 008 நூலகம்